பதினெண் சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய மூலிகை அகராதி

ஆயுர்வேத பாஸ்கரர்

கந்தசாமி முதலியாரவர்களால்

இயற்றியது

இதில் 1000-பதங்கள் நூதனமாக சேர்க்கப்பட்டு
அநேகர் வேண்டுகோளின்படி

தொகையகராதியும்

சேர்க்கப்பட்டிருக்கிறது.

பிரசுரித்தவர்கள் :

B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்

26, வெங்கட்ராம தெரு, கொண்டித்தோப்பு,
சென்னை - 79

போன் : 5211053]   [விலை ரூ. 100-00

பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய

மூலிகை அகராதி

---※---

இதனுள்

ஆயுர்வேத பாஸ்கரர்

கந்தசாமி முதலியாரால்

1000-பதங்கள் நூதனமாக சேர்க்கப்பட்டு

அநேகர் வேண்டுகோளின்படி

தொகையகராதியும்

சேர்க்கப்பட்டிருக்கிறது.

பிரசுரித்தவர்கள் :

B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்

26, வெங்கட்ராம தெரு, கொண்டித்தோப்பு,

சென்னை-79.

உ

கடவுள் துணை

பதினெண் சித்தர்கள்

திருவாய்மலர்ந்தருளிய

வைத்திய

மூலிகை அகராதி

காப்பு விருத்தம்

சீராரும் பூமணிசொற் பலநி கண்டு
  திகழுமறி வயித்தியர்க்கு வுதவியாக
நீரூரி ரதம்பொருளா யொளிகள் வீச
  நிறையுமறி பண்டிதர்கள் நிகழ்த்து மென்ன
பாருலகில் பெரியவக ராதி யாகப்
  பலபேர்கள் பகர்வதற்கு யிந்த நூலை
ஓர்பொருளா மூலிகையின் பதத்தின் பேதம்
  உரைத்திட்டேன் சிற்றறிவால் சேர்த்திட் டேனே.

அ

அகத்தி-ஓர்மரம்
இதன் வகை :
சிற்றகத்தி, செவ்வகத்தி, சாழையகத்தி
அகத்தீசரறுகு - அகஸ்தியேசர் அறுகு
இதன் வகை :
பேரறுகம்புல், சிற்றறுகம் புல்
அகமமரம்-வெள்வேலமரம்
அகம்-ஓர்மரம்
அகரம்-சூதம், ரசம்
அகரு-அகில்
அகல்-வெள்வேலமரம்
அகவு-அமுக்கரு
அகலியம்-ஓர்மரம்
அகளங்கம்-சீதாங்கபாஷாணம்
அகி-இரும்பு
அகிமரால்-வெள்வேலம்
அகில்-அகரு
அகிற்கூட்டு-ஏலம், சந்தனம்
அகுடம்-கடுகுரோகணி
அகும்பை-கவிழ்தும்பை
அகுலி-நறுவிலி
அகுளுதி-வேம்பு
அகைமம்-புல்லுருவி
அகத்தேவி-சோணைப்புல்
அக்கந்தம்-தான்றி
அக்கபிரம்-மாமரம்
அகணி-நார், கடுக்காய் நஞ்சு, சுக்கிலப்புரணி நஞ்சு
அகதி-வேலமரம்
அக்கரம்-அக்கராகாரம்
அதிவிடையம்-குணபலம்
அசோகு-கோபிகம்
அகஸ்தியர் குழம்பு - ஓர் மருந்து; அதிற்சேருஞ் சம்பா

ரம்: பெருங்காயம், கடுகு, இந்துப்பு, ரசம், வெங்காரம், மனோசிலை, அரிதாரம், நேர் வாளம், ஓமம், கருஞ்சீரகம்.

செய்யுள்

பேசிய மருந்து கேளாய் பெருங்காயங் கடுவிந் துப்பு, வீசிய ரசம்வெங் காரம் விட மனோ சிலையு மோமம், ஆசி லா வரிதா ரத்தோ டருங் கருஞ் சீரகந்தான், மாசிலா மருந்தே பார்த்து வகை வகைக் கழஞ்சு வாங்கே.

வாங்கிய கழஞ்சுக் கொப்ப வாளமும் வறுத்துப் பாதி, தாங்கிய பச்சை பாதி சமன் முளை போக்கி நீக்கித், தீங்கி லா மருந்து பத்துந் தீர்க்கமா யரைக்கக் காந்தும், ஓங்கிய மோருஞ் சோறு முண்டுநீ யரைத்துக் கூட்டே.

அகஸ்தியர் குழம்பிற்கு அனுபானம் :

சுரத்துக்குச் சுக்கு; இரும லுக்கு கடுக்காய்ச்சாறு

குளிர் சுரங்களுக்குச் சுக்கு, மிளகு

இரத்த மூலத்துக்கு பசு வின் வெண்ணெய், எருமைப் பால்.

பாண்டு, மகோதரம், பெரு வயிறு, நீராமை சோகைக்கு மிளகுத் தூள், வெள்வெங் காயம்

எல்லச் சன்னிகட்கும் தேன், இஞ்சிச்சாறு

விஷ ஜன்னிக்கு எருக்கில் வேம்பில், கடுகிற்பாதி எடு த்து அரைத்துக் கண்ணிலிட வேண்டியது.

இந்தப்பிரயோகம் அபாய மானதென்று நினைக்கிறேன்; எப்படி யெனில், கூடலூ ரில் ஒருவனுக்கு வைத்தியர் எருக்கம்பாலில் அகஸ்தியர் குழம்பைக் கூட்டிக் கண்களி லிடக் கண்க ளவிந்துபோ யின இது யான் நேரில் கண் டது. ஆகையால், இப்படிப் பட்ட உக்கிரமான மருந்து களைப் பிரயோகம் பண்ணு கிற வைத்தியனுக்கு அதிக விவேக மிருக்க வேண்டும். மற்றைப் பிரயோகங்களிலும் அதிக எச்சரிக்கையும் வேண் டும்.

கண் வீங்கினுல், கற்று ழைச் சோற்றை வடிகட்டிய தயிர், சந்தனம் இவைக ளோடு சேர்த்துக் கட்ட வேண்டும்.

பரு, பிளவாழை, அரை யாப்பு புண்கள், சிலந்தி இவைகட்கு உமிழ்நீரிலிழைத் துப் பூசவேண்டும்.

முலைக்குத்துப் புண்ணுக்கு மேற்படி அனுபானத்தில் தானே கொடுக்கலாம்.

சூசிகாவாதம், சூலை, குட் டம் இவைகட்கு நொச்சிச் சாற்றில் கொடுக்க வேண் டும்.

பலவித குணங்களையுடைய பலவித வாய்வுகளுக் கெல் லாம் நொச்சி, சுக்கு இவை களோடு சேர்த்துக்கொடுக்க வேண்டும்.

கபால வலிக்கு குழம்பூட் டிய திரிப்புகை யூட்டவேண் டும்.

நீர்ச்சிறுப்பு, நீர்க்கல்லடைப்பு, இவைகட்கு தாழை விழுது சேர்க்கவேண்டும்.

கிரந்தி, பறங்கி இவைகட்கு குப்பிச்சாறு சேர்க்க வேண்டும்.

தீராதவாதம்-விஷம் இவைகட்கு குப்பிச்சாறூட்டிய திரிப்புகை யூட்ட வேண்டும்.

குழம்பு ஊட்டித் திரிசெய்ய வேண்டிய விதம் ; குழம்பு அரைத்த அம்மியில் சலவையா யிருக்கிற பழைய வஸ்திரத்தைப்புரட்டி உருட்டித் திரிசெய்தல்.

புகைபிடித்தால் - தலையிடி தலைகாட்டாம லோடும்.

பதினெட்டு ஜன்னிகட்கு நூல் விதியின்படி அனுபானம் ஏதோவெனில் - வெங்காயம், கழற்சிக்கொடி, முசுமுசுக்கை, நொச்சி இவைகளேயாம். இதனுல் நாலாயிரத்து நானூறு வியாதிகளுந் தீரும்; வகையறிந்து அனுபானஞ் செய்ய வேண்டும்.

ஸ்திரீகட்குக் கர்ப்பம் வருவதற்கு அரசங்கொழுந்தை ஆவின்பாலில் விட்டரைத்துக் குழம்பில் ஒரு பணவெடை எடுத்து மாத விடாயின் மூன்றுநாளுங் கொடுக்க வேண்டும். புதல்வருண்டாவார்.

சூதகவாயுவுக்கு நாவற்பட்டை வெள்ளாட்டுப்பால் இவைகளைக் கூட்டிச் சுரசஞ் செய்து அதில் சிரசப்பொடி கூட்டிக் குழம்பில் ஒரு பணவெடை குழைத்து உண்டால் சூதகவாயு தீரும்.

பித்தபிரமியத்துக்கு - நொச்சிச்சாற்றில் சாரணை வேர், மிளகு, சுக்குச் சேர்த்துக் குழம்பில் ஓர் பணவெடை கூட்டிக் கொடுக்க வேண்டும்.

பிற வீச்சுக்கு - உள்ளி, முருங்கைப் பட்டை, புன்கு, எருக்கம் வேர், அரிதாரம், திருகுகள்ளி, இஞ்சிச் சுரசம் இதில் 1-பணவெடை சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

நெஞ்சு வலிக்கு - இலவங்கப் பட்டை, கிராம்பு, அதிமதுரம், தாளிசப்பத்திரி இவைகளை ஆவின் வெண்ணெயில் பணவெடை யிட்டிழைத்துக் கொடுத்தால் நெஞ்சுவலி தீரும்.

நாகப்பாம்பு கடி விஷத்துக்கு - நாவற் கொழுந்து, மிளகு இரண்டு வராகனெடை வெற்றிலைச் சாற்றின் குழம்பில் மூன்று பணவெடை சேர்த்துக் கொடுக்க வேண்டும். நாகப் பாம்பு விஷந் தீரும்.

தேளின் விஷத்துக்கு - எருக்கந்துளிரிலையில் குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுக்க வேண்டும். உமிழ்நீரில் இழைத்துக் கடிவாயில் பூச வேண்டும்.

வழலைக்கடிக்கு - மிளகு, பேய்ப்பீர்க்கு இவைகளை நன்றாய்க் குப்பைமேனியின் சாற்றில் அரைத்துக் குழம்பில் பணவெடை கொடுக்கில் வழலை விஷந் தீரும்.

வீரியன் பாம்பு விஷத்துக்கு - தாளி அவுரியிலை, ஆவின் வெண்ணெயுடன் இரண்டு பண வெடை குழம்பு சேர்த்துக் கொடுத்தால் விஷந் தீரும்.

நீர்க்கட்டுக்கு மிளகுபொரி காரம் இவ் விரண்டையும் நன்ருய்ப் பொரித்துக் கற்கண்டு பொடிசெய்து அவைகளை இரண்டு வராகனெடை ஆவின் நெய்யில் ஒரு பண வெடை குழம்பு இழைத்துக் கொடுக்கப் பிணி தீரும்.

விஷ பாண்டுக்கு வீக்கந் தீர - நொச்சிச் சாறு சுக்கு, திப்பிலி, மிளகு கூட்டிக் குழம்பில் ஒரு பணவெடை சேர்த்துக் கொடுத்தால் வீக்கந் தீரும். இந்தப்படி குழம்பைக் கொடுப்பதில் அதிக பேதியாஞல் மதி மயங்காமல் அடுப்பில் சட்டி வைத்து வசம்பைத் தட்டிப் போட்டு நீர்விட்டுக் காய்ச்சி ஆவின் வெண்ணெய் போட்டு சுருக்கில் கொடுத்தால் தீராப் பேதி யெல்லாந் தீரும்.

அகஸ்தியர் வைத்தியம்	500
மேற்படி	1,200
மேற்படி	200
மேற்படி	205
மேற்படி	300
மேற்படி	150
மேற்படி	16
வாகடம்	40

அக்கரம்-மா, வெள்ளெருக்கு

அக்காத்தான்-தான்றி

அக்காரம் - மா, சருக்கரை, கருப்புக்கட்டி, கரும்பு.

அக்கானன்-வனப்புல்

அக்கி- கண், அக்கினிகரப்பான், அக்கி புறப்பட்டவன்.

அக்கிலு-நெஞ்சில்.

அக்கிர:காரம்-தோஷாரத் திரவியம். இந்த வேர் முக்கியமாய் ஆபிரிகா தேசத்தின் வடபாரிசத்தி லிருந்து கொண்டு வரப்படுகிறதாக யோசிக்கப்படுகின்றது. சுக்குடன் சேர்ந்த இதன் குடிநீர் அத்திசுரம், எலும்புருக்கிக் காய்ச்சல், திமிர்வாதம் இவைகளில் பலன் கொடுக்கும். உறைப்புள்ள குடிநீராக யோசிக்கப்படுகின்றது இவ்வேர் பல் நோயுண்டாஞல் மெல்லப் படுகின்றது.

அக்கினி - கொடுவேலி, செங்கொடுவேலி, மூத்திரம், வெடியுப்பு, நவச்சாரம்.

அக்கினி வகை

கமலாக்கினி
காடாக்கினி
தீபாக்கினி
சாடராக்கினி
சடராக்கினி
தாபாக்கினி
உஷ்ணம்
காங்கை

அக்கினிக்குமரம் - குளிர்மை, மந்தம், முதலாகியநோய் கட்குக் கொடுக்கப்படும் மருந்து.

அக்கினிச்சியம் - கார்த்திகைக்கிழங்கு

அக்கினிக்கபம்-கடல்நுரை

அக்கினிச்சிவன் - குப்பைமேனி

அக்கு-அகில், எட்டி, உகக்கால், சங்கு, பலகரை.

அக்கினி மண்டலம் - அடி வயிறு
அக்கினிமாந்தியம் - அசீரணம், செரியாமை
அக்குல்லி-புட்டு, உக்காரி, சிற்றுண்டி
அக்கொடகம்-கடுக்காய்
அக்கணம் - பொரிகாரம், வெங்காயம்
அக்கதம்-அட்சதை
அக்கதேவி-சோணைப்புல்லு
அக்கம்-உத்திராட்சம், தான்றி, தானியவிலை, கண், கயிறு, பொன்
அக்காரம் - கறுப்புக் கட்டி, சருக்கரை, மாமரம்
அக்கினி-செங்கொடிவேலி
அக்கு - எருத்துத்திமில், எலும்புகள், சங்குமணி, பலகறை
அக்ககோலம் தேற்றுங் கொட்டை
அங்கணன், அங்கவன் - மிர்த பாஷாணம்
அங்கனி-கற்றாழை
அங்கம்-கொன்றை, கோவக பாஷாணம்
அங்கரமாதி - கௌரிபாஷாணம்
அங்கரவல்லி-குறிஞ்சா
அங்கணம்-கடுக்காய்மரம்
அங்காரகம்-பூசும் பரிமளம்
அங்காரவல்லி-சிறுதேக்கு
அங்காரி-வெங்காரம்
அங்குசபாதி- சிறுபுள்ளடி
அங்குசபீசாரி-கொள்ளு
அங்குசரோசனம்-கூகைநீறு
அற்குசம்-வாழை
அங்குசன்-சரகண்ட பாஷாணம்
அங்குசோலி-அறுகு
அங்குணம்-வெங்காரம்
அங்குரம்-பூண்டின்முளை
அங்கோளம், அங்கோள வைரவன் - அழிஞ்சில்
அங்கணம்-சலதாரை, சேறு, பொறிகாரம், மதகு, முற்றம் வெண்காரம்
அங்கராகம்-பூசும்பரிமளம்
அங்கனி-கற்றாழை
அங்காரவல்லி-குறிஞ்சி
அங்கிஷபாதி-சிறுபுள்ளடி
அங்கிஷம்-வம்சம், வாழை
அங்கிளி-கற்றாழை
அங்குசம்-தொட்டிவாழை
அங்குசவி-கொள்
அங்குரித்தல்-முளைத்தல்
அங்கோலம்-அழிஞ்சில்
அசகண்டா - வேளை, தை வேளை
அசட்டி-அசமதாகம்
அசக்கியம்-நாகமணல்,துத்த நாக மணல்
அசமதாகம், அசமோதகம் - ஓமம்
அசமந்தம்-மலையத்தி
அசமருதம்-அத்தி
அசம்-உள்ளி, ஈருள்ளி, மூவருட நெல்,சந்தனம், ஆடு
அசராது-கொன்றை
அசர்-அகிர், பொடுகு
அதும்பை-கௌதும்பை
அசமோதம்-ஓமம்
அசம்-ஆடு, யீரவள்ளி சந்தனம், மூவருடநெல்
அசனம்-போசனம் வேங்கைமரம், வெள்ளுள்ளி
அசனி-அனிச்சமரம்
அசுவகெந்தி-அமுக்கரா
அசுவசட்டிமரம்-நெருஞ்சில்
அசோகவனம்-வாழைவனம்
அசோகம்-வாழை

அச்சுரம்-நெருஞ்சில்
அசுவத்தம்-அரசமரம்
அஞ்சம்-அன்னம்
அஞ்சலி - கும்பிடல், வறட் சுண்டி, வண்டு, பல்லி, வெளவால்
அஞ்சலிகை-வெளவால்
அடகு-இலைக்கறி
அடவி-சோலை
அடுக்குமல்லிகை - ஓர் மல் லிகை
அடைக்காய் - அடைகட்டி, அரை ரண்
அடைக்காய்-பாக்கு
அடைப்பன்-ஓர் வியாதி
அடைப்பக்காரன்-வெற்றிலை கொடுப்போன்
அட்சதை-மங்களவரிசை
அட்டசித்தி-எட்டுசித்தி
அட்டமங்களம்-எட்டுசுபம்
அட்டயோகம் - அரைபொடி
அட்டாங்கயோகம்-எட்டு யோகம்அதாவது: ஆதனம் இயமம், சமாதி, தாரணை, தியானம், நியமம், பிரத்தி யாகாரம், பிராணாயாமம் என்பன
அட்டி-அதிமதுரம், செஞ்சந் தனம்
அட்டியம்-ஜாதிக்காய்
அனுக்கம்-சந்தனம்
அனட்சம்-முட்டைபிறப்பன
அண்டில்-கண்ணில்பற்றும் [பூச்சி
அதகம்-மருந்து
அதில்-களகம், பழம், தோல்
அதிங்கம்-அதிமதுரம்
அதிமதுரம்-ஓர் சரக்கு, வெண்குன்று
அதிமலம்-மாவிலிங்கு
அதிரசம்-ஓர் பானம், ஓர் பலகாரம்
அதிவிடயம்-ஓர் மருந்து
அதோமுகி-கள்ளு, தும்பை
அந்தகோரம்-நெல்லி
அத்தர்-வாசனைப்பண்டம்
அத்தி-ஓர் மரம்
அத்திசோலம்-அழிஞ்சில்
அத்திகன்னி-வெருக்கமரம்
அத்திசம்-நீர்முள்ளி
அத்தி-திப்பிலி யானைத் திப் [பிலி
அத்திரம்-இலந்தை
அத்திரு-அரசு
அத்துகமானி-அரசு
அத்துகம்-ஆமணக்கு
அத்துமம்-அரத்தை
அத்துவாக்கியம்- கருஞ்சீரகம்
அத்தூரம்-மரமஞ்சள்
அங்கம்- இருவாட்சி மல்லிகை
அநரவன-வெந்தோன்றி
அந்தகோளம்-நெல்லி
அந்துவாசம்-கொட்டைப்பா [சி
அந்து-நிலவண்டு
அபயம்-செவ்வியம்
அபின்-ஓர் மருந்து
அப்பம்-சிறுதுண்டி
அப்புராத்துணி-சரகண்ட பாஷாணம்
அமிர்த சஞ்சீவினி-உயிர்தரு மருந்து
அமுக்கரா-ஓர் செடி
அமுதம்-திரிபலை, பால்போச [னம்
அமுதவல்லி-சீந்தில்
அமுதாரி-முனைக்காலி
அமேத்தியம்-மூங்கல்
அப்பணம்-வாழை
அம்பரை-நிமிளை
அம்பர்-ஓர் மருந்து
அம்பு-எலுமிச்சை
அம்புயம்-தாமரை
அம்மான்-பச்சரிசி-சித்திரப் பாலடை, சிதேவியார் செங்கழநீர்

அயக்காந்தம்-ஊசிகாந்தம்
அயம்-இரும்பு
அயிணம்-மான்றோல்
அயிரம்-வெண்சருக்கரை
அயிரை-ஓர்மீன்
அயிர்-சருக்கரை
அயில்-கோரை
அரக்காம்பல்-செவ்வாம்பல்
அரத்தம்-இரத்தம், சிவப்பு, செங்கடம்பு-செங்கழுநீர், செங்குவளை, செம்பஞ்சு, செம்பரத்தம், செம்பரந்து, செம்மெழுகு, செம்மை பவளம், பொன்
அரத்தனம்-இரத்தினம்
அரமுறி-ஓர் செடி
அரப்பொடி, இரும்புத்தூள்
அரம்பை-வாழை
அரவம்-குங்குமமரம்
அரிசலம-எலுமிச்சை, கொன்றைமரம்
அரிசம்-மிளகு
அரிசனம்-மஞ்சள்
அரிசா-பெருங்குழா
அரிட்டம்-வெண்காயம்
அரிதாலம்-அரிதாரம்
அரிது-பச்சை
அரித்திரம்-கந்தம், மஞ்சள்
அருசியரத்தம்-பூனைக்காலி
அருப்பலம-அனிச்சைமரம்
அருளகம்-வெள்ளெருக்கு
அருளாகி-குடசப்பாலை
அருளவம்-பெருமரம்
அருளாபு-சாரணை
அருளுபதி-வேம்பு
அரேசகணடு - கருணைக்கிழங்கு
அரேசிதம்-வாழை
அரேணுகம்-கடுக்காய் வேர், வால்மிளகு
அலஅயன-ஓர்பான்
அடககி-கிளை

அலங்கலை-துளசி
அலத்தம-செம்பஞ்சு
அலர்-மலர்ந்தபூ
அலாபு-சுரை
அலுவீசும்-வில்வம்
அலோகி-பசளை
அல்லல்-இஞ்சி
அல்லி-அகவிதழ், ஆம்பல், காயாமரம்
அகத்திப்பூ-ஓர் பூ, அனலாலும் கையினாலும் உண்டாகின்ற பித்தமும் வெப்பும் போம்
அகத்தியிலை-ஓர் இலை, மருந்திதல் போம்
கிரந்தி- சாதம் செரிப்பு, பித்தசாந்தி, வாயுவும் உண்டாம்.

அகத்திவேர் - ஓர் வேர், ஆண் பெண் குறியெறிவு, சாகம், மெய்யெரிவு மேகமும போம்.

அகில்மரம்-ஓர்மரம், இதன் புகையால் சோகமுஞ் சுரங்களும், தேகத்தளர்ச்சியும், வாந்தியும் போம்.

அக்கரகாரம்-சுரம், தாகம், தோஷம், வாதமும் போம். வாயிலடக்க ஜலமுண்டாம்.

அக்காரப்பட்டை - தலைநோய், நாவரட்சி, ஜன்னி பாதசுரமும், வாயுவும்போம.

அசோகப்பூ-ஓர்விதப் பூ சோகம்போம, வாசனையுண்டாம்.

அஞ்சனக்கல்- கண்ணில் தீட்ட ஜலதோஷம், சுரங்கள், ஜன்னி தோஷமும் போம்.

அடவிநீர்-காட்டுநீர், இளைப்பும், உடல் கனைப்பும் ஜல

தோஷமும், சுரமும், தலைபாரமும், வயிற்றிலனலும் உண்டாம்.

அடுக்கிளநீர்- செவ்விளநீர், ஐயம்போம் இரவிலுண்டால் வயிற்றுக் கிருமிசாம், சுகமும் உண்டாம்.

அட்டமூலம் - ஆடாதோடை, கஞ்சாங்கோரை, கோரை, சீந்தல்,துளசி, பர்ப்படகம், பேய்ப்புடல், விஷ்ணுகரந்தை இவைகளால் மேசகையும் பலவிதமான வாயுக்களும் போம்.

அட்டுப்பு- 25 லவணத்திலொன்று, அரோசிகம், சர்த்தி, நீங்காச்சூலை, பித்தமும் போம.

அண்டங் காக்கைக் கறி-காக்கை மாமிசம், காமாலை, சோகை, பாணடு, பித்த வெட்டை, பெரும்பாடும் போம்.

அதளக்காய்-பீர்க்கங்காய் பித்தம, மந்தம் வாயுவும் உண்டாம்.

அதி குளிர்ச்சிக் குளத்து நீர்-ஆழ்ந்த ஜலம்,தளர்ச்சி, நளிர்வாத கபம், வாந்தி, விக்கலும் உண்டாம்

அதியோட்டம்- விரைவாய் ஓடுதல், வாயு உண்டாம்

அதிக சுடுகையன்னம் - கொதிப்புச் சாதம், இரத்தப் பித்தம், சித்தப்பிரமை தாகம், மதரோகம உண்டாம்

அதிமதுரம்- எலும்புருக்கு, கண்ணோய், குத்துருமல, சர்த்திசூடு, தாகம், தாதுநஷ்டம, பித்தமூர்ச்சை,விக்கலும் போம்.

அதிரசம்-பணியாரம்,ஐயம் பித்தம் வாயுவுமுண்டாம.

அதிவிடையம் - கிராணி, கோழை பேதி, வாந்தி, வெப்பும் போம்.

அத்திக்கள்ளு- மேகம், அதுமயக்கம், சூடு,மேகமும் போம்.

அத்திக்காய் -அனல், சரீர வெப்பம்,சூலை, புண், மலைக் கட்டு, மேகம், வாதமும் போம்.

அத்திப்பட்டை- இரத்தக் கடுப்பு, சீதக்கடுந்பு, நாறு கிற விரணம், பெரும்பாடு மேகமும் போம்.

அத்திப்பழம்-இரத்தகாசம் நீர்க்கடுப்பு, மேகம் போம். காமம் தேகக் குளிர்ச்சியும் உண்டாகும்.

அத்திபால்- அதி உஷ்ணம், இரத்தக் கிரிச்சுரம், சூலை, நீரிழிவு, பிததமும் போம,

அத்திப்பிஞ்சு - ஆசனக் கடுப்பு, மூலக்கிராணி, மூல ரத்தம் போம்.

அந்தரத்தாமரை - ஆகாயத் தாமரை, அழுகிரந்தி, கரப்பான், குட்டம், புழுஆருமிரணங்கள் போம.

அபயன்- அங்கத்திலுள்ள நோயெல்லாம் போம்.

அபினி- அஸ்தி நோய், குனமம், செவிநோய், பல்வலி, பீனிசம்,பேதி, மந்தம், வாதமும போம், இரத்த சுத்தி பலமுண்டாம்.

அப்பளக்காரம்- சவுக்காரம், ஐயம்,குடல்வாதம்,குன்

மம், சூலை, வயிற்றுப்பிசம், வாதமும்போம்.

அப்பியங்க ஸ்நானம் - தலைநோய் போம். மயிர் வளர்ச்சி, தொனி, தலைக்கும், முழந்தாளுக்கும் பலம தாதுமுணடாம்.

அப்பிரகம்-அண்டவாதம், ஊரல், எல்லாப் பிரமியங்களும், கண்ணோய், நீரிழிவு, தநதவாதம், பிததம் மகோதரம், மேகம், வெப்பும்போம்

அப்புவின் குணம்- காசம், குன்மம், சொறி, தேகவனல மேகமுமபோம். பல்லிறுகல், வீரியமுமுண்டாம்.

அப்பைக்கிழங்கு- அஸ்தி, சூடு, அழற்றுங்கணம, இரததகணம, கணச்சூடு, சுழிகணம, மஹாகணம், வற றியுலர்ந்த கணமபோம்.

அபிரதக் கடுக்காய்க்2-ல் ஒன்று சிலேட்டுமமும மற்ற மேக வியாதிகளும்போம.

அழுக்கிருககிழங்கு - அதப்பு, ஆயாசதோஷம, கயம, கரப்பான, கைகறுபபு, சூலை சொறி, பாண்டு, வாயுவெப பும் போம. அனல், மேக முணடாம்.

அமுதவல்லிக்காய் - கிரிச்சரம, பைததிய தாகமும் போம், தாது, மேனியொளியு முணடாம.

அமபர் -குளகுளத்த புண் பொரி கரப்பானும போம். ஆணமை, தேக பளபளப்பு, பலமுமுணடாம்.

அமமான் பச்சரிசி-காந்தல் தினவு, மலக்கட்டு, மேகத தடிப்பு, விரணமபோம்.

அயச்செந்தூரப்பத்தியம்- அபினி, எள்ளு, கடுகு, கத திரிக்காய், கஞ்சா, கள்ளு புகையிலை, புளிப்பு, பூசினிக காய், பெண் போகமுங் கொள்ளப் பத்தியத் தாழ் வுண்டாம்

அயச்செந்தூரம் - ஐயம், காமாலை, சோகை, பாண்டு போம் தீபனம் பலமு முண் டாம.

அயம்-இரும்பு, அக்கினி மந்தம், அரோசி, உடல் பாரிப்பு, காமாலை, கிராணி குனமம், சோகை, தாது நஷ்டம, பித்த பாண்டு, வாய்வு, வெண் குஷ்டமும போம். பசி பேதியுமுண்டாம

அயிரைமீன்-ஓர்மீன் அரு சியும தேகப்பிணியும போம். சாரமும, தலைமயிர் வளர்த் தியுமுண்டாம.

அரக்காமபல் - சிலேற்றுமம் போம.

அரககு அஸ்திசுரம்,ஐயம் இரைப்பு, எனபுருகக் குஷ் டம, குனமம, ஜன்னி, பக்க நோய், புண், விஷமும் போம.

அரசமரத்தின் சமூலம்- இரணம, சுககிலநோய, தா கம, முததோஷம, வெப்பும போம. தாதுவிருததி, புத்தியு முணடாம.

அரதலைத-கபம், கரப்பான், சீதம, சுவாசகாசம், பல நோய், பித்தசுரம, மூலம், சோகை, வாத சுரோணித நோயும போம.

அரிசிச்சாராயம்-சனி,வாத சிலேததுமமும் உணடாம.

அரிசிப்பிட்டு-மாவுப்பிட்டு, இரத்தசுத்தி, தேக பலமும் உண்டாம்.

அரிதாரம்-தாளகம் எட்டு வித குன்மம், கபவாதம், கபநோய், காசமும்போம்.

அருநெல்லிக்காய்- சின்ன நெல்லிக்காய், இருமல், கொதிப்பு, தாகம், துயர், துன்பம் பித்தமும்போம, குளிர்ச்சியு முண்டாகும.

அருநெல்லிவேர் - அதன் வேர், அருசி ஓயாத வாந்தி, சுரம, பித்த ஜன்னிபாதமும போம.

அருவிநீர்- சுனை நீர், இரதத பித்தமும் மேகமும போம்,சிலேதனுமம், பலமும உண்டாம.

அருள்மரம்- சீத ரதகம், சுரம, சோபம, பித்தம, வாதமும போம.

அரேணுகம - சேட்டுமம, தாகம் மேகத்தினவுமபோம்.

அரைக்கூறு காய்நதநீர்- விதவிதபழநீர் வாதபித்தம போம.

அரைப்பு வகை-4 சீக்காய், பச்சைப்பயறு, பொன்னுங்காய் இவைகள எண்ணெய்களுக்காகும. இலுப்பைக்கட்டி சோறியாளர்களுக்காகும. காரையிலை பசு நெய், பன்றி நெய மற்றும நெய்களுககாகும. சீயக்காய் நதூள் விரண மேகாகளுககாகும.

அரோகணி கடுக்காய் சனனிபாதம், சீதமுமபோம், அலாி-நடுக்கம் போம்.

அவரிப்பூ-ஓர் பூ, அருகி, இரத்தம், புண், குஷ்டம், சொறி சிரங்கு, தாதுநஷ்டம், நாவிலசசரம, வெப்பும் உண்டாம்.

அல்லிப்பூ- அழல்-தாகம், நீரிழிவு, மேகம், புண்ணும் போம்.

அவரைக்காய் - அரோசகம்,மருந்தின் பலமும்போம். ஐயம், சூலைபாரிப்பு, பேதி, வாய்வு மந்தமும உண்டாம்.

அவரைப்பிஞ்சு - இரவிற் சமைத்துப் புசிப்போர்க்கு, கண்படலத்தோர்கரு, திரித்தோஷதத்தோர்ககு மருந்துண்போர்க்கும் சுகமுண்டாம்.

அவரையிலை - இரணம், கிரணி, தலைவலி, விஷமும் போம. தீபனமாம.

அவல-நெல்லில் வுற்பத்தி, ஆண்மையுண்டாம.

அவுரியிலை - நீலவுற்பத்தி, காமாலை,கீல்வாதம, ஜன்னி, 18-சீதம, நஞ்சு, 18-மாந்தம, விஷக்கடி, வெப்பும் போம். நீல மருந்துண்டாம.

அவுரிவேர்-குனமம, சுரம, நஞ்சு, 18-மூர்ச்சை, பலநோய், வெட்டையும் போம.

அழிஞ்சலயரம-ஐயம, குஷ்டம, வாயுவிஷமும போம். பித்தமுண்டாம.

அழிஞ்சில விதது - விஷமுமபோம. ஜக யோக மறைப்பு மைம உணடாகும.

அழுக்கு வஸ்திரம-துப்புத் துணி அழுகு, அறிவுமபோம. குளிர், அணவு, தூக்கம் நோயுணடாம.

அளுங்கு மாமிசம்-இரத்த மூலம், கிராணிமூலம், சீழ் மூலம், நீராம்பல், முளைமூல மும் போம். அதிக பல முண்டாம்.

அளுங்கோடு - விழிமாந்தம் போம்.

அறுகம்புல் - இரத்த பித்தம், ஈளை, ஐயம், கண்ணோய், கண்புகை, தலைநோய், பித்தம், வாதமும் போம், அறிவுண்டாகும்.

அறுகம்புற் கிழங்கு-தேக வழலும் முத்தோஷமும் போம. நல்ல மேனியுண்டாம்.

அறுகீரை - அரைக்கீரை, கபநோய் காய்ச்சல், குளிர் ஜன்னி முதலிய பல பிணியாளர்க்குப் பத்தியஞ்செய்ய மருந்து பலிதமும் காமமும் உண்டாம்.

அறுசுவைமிகுதி - துவர்ப்பும் புளிப்புமிஞ்சுங் கறியால் வாதமுண்டாம். உவர்ப்பும் கைப்பு மிஞ்சுங் கறியால் பித்தமுண்டாம். கார்ப்பும் இனிப்பு மிஞ்சுங் கறியால் சிலேத்துமமுண்டாம்.

அற்ப சூடனனம் - தேக பலமுண்டாம்.

அனிச்சை-சொறிகள் போம்.

அன்னபின்னம- அன்னத்திற்கு எட்டு பங்கு பலம் அவல், அவலுக்கு எட்டு பங்கு பலம் முப்பழம் பால், முப்பழம் பாலுக்கெட்டுபங்கு பலம் ஊன், ஊனிற்கு எட்டு பங்கு பலம் உப்பு.

அன்னபேதி - ஓர் பாஷாணம், ஆமைக்கட்டி, சூலை, நீர்மகோதரம், மந்தம், மூளை விரணம் போம். அன்னத்திற் போட ஜலமுண்டாம்.

அன்னமழகியநசி - தேக வனலும் பலவித நோயும் போம். ஆரோக்கியமுண்டாம்.

அன்றிற்பட்சி மாமிசம் - இரத்தமூலம், தேகச்சூடும் போம். பலமுண்டாம்.

ஆகாத கடுக்காய் - இரட்டைக்காயுடையது, உடைந்திருந்தது, ஜலத்தில் வெந்தது, சுக்கான்கல் நிலத்திற் கிடந்தது. சேற்றில் விழுந்திருந்தது. நெருப்பிற் சுட்டது, முரடா யிருந்ததுஞ் சேர்க்க மருந்து கெட்டுப் போம்.

ஆகாத பசுக்களின்பால்- அலைந்து திரிந்தது, சுடுகாட்டெலும்பு தின்னது, நோய் கொண்டது, மலமருந்தினது, வெண்புள்ளியுடையது இவ்வைந்து பசுக்களின் பாலருந்த கபநோயும், திரிதோஷமும் வயது குறைவுமுண்டாம.

ஆகாயக்கரிகாய் - அழல், அழல்கரப்பான் பித்தம் மருந்தின்வேகம வாந்தியும்போம் அதிபோகமும் ஐயமும் உண்டாம.

ஆகாயம்-உலகும், மணமும் பலவித முண்டாம்.

ஆடாதோடையிலை-ஐயம், ஜன்னி, 13-வாதம் முதல் பலவித சுரங்களும் போம்.

ஆடாதோடைவேர்-கழுத்துவலி, காசம், சுவாசம், பித்தம, மந்தமும்போம.

ஆடுதீண்டாப்பாளை - கரப்பான், கருங்குஷ்டம், குஷ்டம் சிலந்தி வயிற்றின் கிருமிவாதம் 80-விஷமும்போம் தாது உண்டாம்.

ஆடை யெடுத்த தயிர் - ஐயம், இளைப்பு, திரிச்சாரம், வாயுகிராணி மேகமும்போம்.

ஆடையெடுத்தபால்- அசீரணம், வாதம் பித்தமும் போம். அக்கினிமந்தம் ஐயமும் உண்டாம்.

ஆண்துடரி- தாகம்,நீர்க்கடுப்பு, நீரிழிவும் போம். பெண் வசியமுண்டாம்

ஆதளைவித்து - இருமல் ஈளை கட்டியின் வீக்கம், கிராணி,இணை எலிகடி விஷமும் போம்.

ஆதொண்டை- கபம் மண்டைக் குடைச்சல்- வாதக் கடுப்பு, வாத பீநசமும் போம்.

ஆத்தி- மேக வேக்காடும் போம்.

ஆபரணம்-சோபம், துக்கம்,நோய்போம், வசியமுமகளிப்பு முண்டாம்

ஆமணக்கு நெய்-ஐம்பொறிச் சூடெரிவு, குடலேற்றம் குன்மமும வாய்வும் போம். அனல்தேக கணம், பேதி விந்துமுண்டாம்.

ஆமைக் கறி - அருசி, அனல, இரத்தபேதி, உள் மூல,ம கிராணி, சூதிகா மேகம், பித்தம், மலபேதியும் போம். அழகு, பசி, தாதுவும் உண்டாம.

அல்லிபயிஞ்சி- பூவிழாத பிஞ்சு, பூந்தாது.

அவகேசி-காயா தமரம்
அவபத்தியம் - இச்சாபத்தியம்

அவனர- ஓர் கொடி, கொள்ளு, அவரை, குதிரை முதலாயின.

அவுரி- ஒரு செடி,அழு
அழுகண்ணி-ஓர் பூடு
அரவைத்தல்-புடமிடுதல்
அரைக்கீரை-ஓர் கீரை
அருபருத்தம்-வாழை
அனயகம்-இருவாட்சி, மல்லிகை
அனுட்டானம்-சோம்பு
அன்னசுத்தி-நெய்
அன்னத்தாழை ஓர் தாழை
அகதஸ்காரன்- வைத்தியன்
அகளங்கம் - சீதாங்கபாஷாணம்
அசிசை-பட்டுப்பருத்தி
அகூடகந்தம்- பெருங்காயம்
அக்கிராந்தம்-சேம்பு
அக்கினிசாலம்-ஓர் பூடு
அக்கினி சேகரம்-மஞ்சள்
அக்கினிதிராவகம்- ஒருசெடி
அக்கினிமுகம்- சேங்கொட்டைநீர்
அக்கோடம்-கடுக்காய்
அங்கணன்-மாருத பாஷாணம்
அங்காரிகை-கரும்பு
அங்குசன்-சரகண்ட பாஷாணம்
அங்குஷ்டம்-பாண்டு வியாதி
அசாரம்-ஆமணக்கு
அசிகை-அவுரி
அசிபத்திரம்-கரும்பு
அசுவமியம்-குதிரைபாஷாணம்
அசுவம்-குதிரை பாஷாணம்
அஞ்சற்குழச்சி-குங்கும பாஷாணம்

அஞ்சனக்கல்-கருநிமிளை
அஞ்சனபாஷாணம்-விளைவு பாஷாணம் 32-ல்ஒன்று.
அடுசிலைக்காரம்-செந்நாயுரு
அட்டசுபம் - எண்வகை மங்கலம், அவை இணைக் கயல், கண்ணாடி, சாமரம், கொடி, தோட்டி, நிறை குடம் முரசு, விளக்கு.
அட்டதனம் - அழகு, குணம், ஆயுள், குலம், சம் பத்து, வித்தை, விவேகம், தனம்,
அட்டதாது-எட்டுலோகம் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்தநாகம்.
அட்டதான பரிட்சை - வைத்தியன் குறியறியெட்டு, நாடி, முகம், மலம், அமுரி, கண், நா, சரீரம, தொனி.
அட்டபோகம் - எட்டு அணிகலம், ஆடை, தாம் பூலம், பரிமளம், சங்கீதம், பூவமளி, பெண், போசனம்.
அட்டவருக்கம - அவை யாவன : நற்சீரகம், கருஞ்சீர கம், அசமோதம், மிளகு, திப்பிலி, சுக்கு, இந்துப்பு, பெருங்காயம.
அதங்கம்-ஈயம்.
அதலமூலி - ஆடுதின்னாப் பாளை
அதிகந்தம் - வாசனைப்புல், கெந்தகம், சண்பகப்பூ.
அல்சூப்பை - பொற்றலைக் கையாந்தக்கரை
அதிச்சுத்திரம்-காளான்
அதிவாசனம் - வாசனுபி ஷேகம்.
அதிவெள்ளைச் செந்தூரம் பரங்கி பாஷாணம்
அத்திரிசாரம், இரும்பு
அத்திலை-செருப்படை
அந்தகன்-சவக்காரம்
அனையம்-இலாமிச்சு
அவரோகம்-விழுது
அவிகம்-ரத்தினம்
அவித்தியசம்-சூதம்
அவுபல பாஷாணம்-விளை யும் பாஷாணம்
அழுத்தியன்-பெருங்காயம்
அழற்பால்-எருக்கு
அறுகால்-வண்டு
அற்கம்-வெண்டுளசி
அறக்கெந்தகம் செந்தாமரை
அறப்பகேசு-வசம்பு
அறப்பதுமம்-செந்தாமரை
அற்பயத்திரம்-ஓர் துளசி
அனலகாவி-சூரியகாந்திக் [கல்
அனல்வென்றி-தங்கம்
அனிலாமயம்-வாதநோய்
அனூபகம்-இஞ்சி
அனனபேதி-ஓர் மருந்து
அன்னபேதி-ஓர் பூடு
அதிதாரம்-பழுப்பு
அருஞ்சில் - அவகோலம், செம்மரம், சேமரம்.
அகிற்கூட்டு-5- சந்தனம், கர்ப்பூரம், உரிகாசு, தேன், ஏலம்.
அதிமதுரம்-அதிவகம்
ஆகாக்களங்கு - மிருகாஞ் சிங்கு, அஃது முப்பத் திரண்டு பாஷாணத்தி லொன்று.
ஆகாசத்தாமரை அந்தரத் தாமரை
ஆகாயகெருடன் - சீந்தில்
ஆகுபாஷாணம் - வெள்ளை பாஷாணம்.

ஆசியம்-கருஞ்சீரகம்
ஆசு-முப்பத்திரண்டு பாஷாணத்திலொன்று
ஆச்சியம்-நெய்
ஆஞ்சில்-ஓர்விதபூடு
ஆடகத்தி-குங்குமபாஷாணம்
ஆடகம்-துவரை
ஆடகி-துவரை
ஆடகூடம்-செம்புமலை
ஆடுதின்னாப்பாளை ஓர்கொடி
ஆட்டுக்கல் - அமுதபாஷாணத்திலொன்று
ஆணித்தங்கம் - உயர்ந்த பொன்
ஆணிமுத்து-வயிரமுத்து
ஆதலை-மாதலை, ஆமணக்கு
ஆதிகம்-சிறுகுறிஞ்சா
ஆதிக்கல் - பேதும அன்னபேதி
ஆதொண்டை-காற்றேடி
ஆத்தா-அணிநூறு
ஆத்தி-ஒரு மரம்
ஆத்திரதும்-இஞ்சி
ஆத்துமம்பத்தர் பூனைக்காலி
ஆத்தலரி-சுடலைப்பூஞ்செடி
ஆமணக்கு-ஒரு செடி
ஆமலகம்-நெல்லிமரம், பளிங்கு
ஆமல்-மூங்கில்
ஆடா-காட்டுப்பசு
ஆமாத்தியன் - வைத்தியன்
ஆமிளம்-புளியமரம்
ஆம்பல்-மூங்கில்கொடி
ஆத்துபாசி-ஓர்பூண்டு, மூழி
ஆப்பிரம்-காளான், மாமரம்
ஆர்கது-திப்பிலி
ஆக்ரிகுலதல-கொன்றை
ஆலசியம்-சோம்பு
ஆலாலும்-வெளவால்
ஆவம்-குங்குமமரம்
ஆவாரம-நிலவாகை
ஆவிபத்திரம்-புகையிலை
அசறு-இரணச் செதில்கள், சொறிசிறு, பூச்சி, புழு
அசலம்-கற்பாஷாணம
அசனபன்னி-சிற்றகத்தி
அசனம் - சோறு, வெள்ளுள்ளி, வேங்கைமரம்
அசனி-அனிச்சை
அசன்றிகா -வேளை, தைவேளை
அசானிமூலி - உத்தமதாளி, வேலிப்பருத்தி
அசிபதிரம்-கரும்பு
அசிதாம்புருகம்-நீலோற்பலம்
அசீரணம்-பசியின்மை
அசுகுனி-காதிற்படரும் ஓர் நோய்
அசின்ன -வெள்வெங்காயம்
அசுபதமபவாதம்- ஓர்நோய்
அசுபம்-அமுக்கிரு
அசுவகெந்தி-அமுக்கிரு
அசுவசட்டிரம்-நெருஞ்சில்
அசுவத்தம, அச்சுவத்தம்-அரசு
அசுவபரி-அலரி, அசுவா பரி
அசுவம் - குதிரைப் பல்லுப் பாஷாணம்
அசுவாமணக்கு-சிறுபூளை
அசையு-அமுக்கிரு
அசோகம், அசோகு - மருந்து,வாழை,வரிலோத்திரம்
அசோணம், அசோண்டி-சவரி, சவரிலோத்திரம், குறட்டை.
அச்சகம்-நீர்முள்ளி
அச்சத்தி-கத்திரி
அச்சபரம்-நாணற்புல்
அச்சமம்-முசுறுப்புல், அளத்துப்புல்

அச்சம்- அகத்தி, கோதரப் புல், ஈசுரப்புல் காய்ச்சல் பாஷாணம்.

அச்சாணிமூலி- வேலிப் பருத்தி.

அச்சித்தினை-தினை, ஓர்புல்

அச்சிநறுவிலி- நறுவிலி

இந்தமரத்தின் பட்டையி லிருந்துரித்த நாரால் மைசூர் தேசத்திலே கயிறு திரிக்கப் படுகிறது.

அச்சுரம்-நெருஞ்சில்

அச்சுவத்தம்- அரசமரம்

அக்ஷம்-ருத்திராக்ஷம்

அஷ்டம்-எட்டு

அஷ்டகுன்மம்

சூலகுன்மம், வாதகுன்மம் பித்தகுன்மம், சிலேத்துமம் குன்மம், எரிகுன்மம், சத்தி குன்மம், வன்னிகுன்மம், சனிகுன்மம்.

அஷ்டதான பரீக்ஷை

நாடி, முகம், மலம், மூத்தி ரம், நேத்திரம், நாக்கு, சரீ ரம், தொனி.

அஷ்டமாந்தம்

செரியாமாந்தம், போர் மாந்தம, மலடிமாந்தம், பெரு மாந்தம, வாதமாந்தம, சூழ் மாந்தம, வதமாந்தம, கண மாந்தம.

அஷ்டமூலம

சுக்கு, அரத்தை- சிற்றரத் தை, பேரரத்தை, செவ்வி யம்-மிளகு, சித்திரமூலம், கண்டுபாரங்கி- சிறுதேக்கு, கோரைக்கிழங்கு, நன்னா வேர், காஞ்சொறிவேர்.

அஷ்டலோக பற்பம்

பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம், தரா, வங்கம், துத்த நாகம்.

அஷ்ட வர்க்கம்

சீரகம், கருஞ்சீரம், சுக்கு, மிளகு, திப்புலி, இந்துப்பு, பெருங்காயம், ஓமம், அசம தாகம்.

அஷ்டாதச குணம்

யாக்கைக்குறு பதினெண் குற்றம்: பசி, நீர்வேட்டல்-தாகம், பயம், வெகுளி-கோ பம், உவகை- சந்தோஷம், வேண்டல்-விருப்பம், நினை ப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன் பம, அதிசயம், வியர்த்தல்-வேர்த்தல், கேதம்-துன்பம கையறவி-செயலின்மை

அஷ்டாதச மூலம

கொடிவேலி, எருக்கு நொச்சி, முருங்கை, மாவி லிங்கம, சங்கங்குப்பி, தழு தாழை,தமிழம், பாதிரி, வில வம, கண்டங்கத்திரி, கறி முள்ளி, சிற்றாமல்லி, பேரா மல்லி, வேர்கொம்பு, கரந் தை, தூதுவேளை, நன்னாரி.

அஸ்திசாரபேதி - அதிசார பேதி.

அஸ்திசுரம் - எலும்புருக்கிச் சுரம

அஞசற குளச்சி - குங்கும பாஷாணம.

அஞசலி - வறட்சுண்டி, ஆடுதின்னாப்பாளை, வெண்டு கொலலி.

அஞ்சனக்கல் - நீலாஞ்சனக் கல்
அஞ்சன பாஷாணம் - ஓர் வகைப் பாஷாணம் நீலாஞ்சன பாஷாணம், கல்லீயம்.
அஞ்சனி-காயா, நாணற்புல்
அஞ்சுவர்ணத்தோன்- துத்த நாகம்.
அஞ்செவி-வறட்சுண்டி
அடங்கம்-கடுகுரோகணி
அடங்காவாரிதி - மூத்திரம் கடலுப்பு.
அடகு-இலைக்கறி
அடப்பன்-கடப்பமரம்
அடவிச்சொல்-கோரோசனை
அடாசனி-புளியாரை, ஆரை
அடித்திகம்-அழுக்கரு, அக்கரு.
அடிப்பட்ட காந்தி-தீமுறுகற் பாஷாணம்.
அடிப்பிணை - வக்கமணல், வங்கம்.
அடிம்பு-சிவந்தை
அடுக்கான கன்னி-பதளப் புற்றுப் பாஷாணம்.
அடுக்கு முள்ளி-முள்ளி, ஓர் பூண்டு
இடை-இலை.
அடைவிகச்சேலம்- கஸ்தூரி மஞ்சள்.
அட்சரப்புல்-பீனசப்புல்
அட்டகசம்-ஆடாதொடை
அட்டகம்-வசம்பு, அயமலாதி
அட்டதிசம்-எருக்கு
அட்டாலைமரம்-ஓர் மரம்
அட்டி-செஞ்சந்தனம், அதிமதுரம், எட்டி, இலுப்பை சந்தனம்.
அட்டகம்-சாதிக்காய்
அட்டமதுரம்-அதிமதுரம்
அட்டிமை-சீரகம்
அட்டினம்-சீரகம்
அட்டை-ஓர் ஜெந்து மரவட்டை, செவ்வட்டை, நீரட்டை.
அணிச்சை-நாகமல்லிகை
அணிஞ்சில் - கொடுவேலி, சிற்றுமுட்டி, நொச்சி, முள்ளி.
அணிநுணா, மன்னிலா ஆத்தா-ஆத்தா
அணிமுலை-பூசணி
அணுக்கம்-சந்தனம்
அண்டகம்-குப்பைமேனி
அண்டசம்-முட்டையில் பிறப்பன.
அவையாவன முதலை, ஓணான், அரணை-பறவை, உடும்பு, பல்லி-கெவுளி, நண்டு, மீன், ஆமை, சிப்பி-சங்கு, தவளை, பாம்பு.
அண்டம்-முட்டை, பீஜம்
அண்டயோனி - அண்டசம்
அண்டிகம்-செந்நாய், நா
அண்ணம்-மேல்வாய்
அண்ணைக்கு-உண்ணைக்கு
அண்டவாதம், அண்டவாயு-விரைவாதம், அந்திரவாயு, வலி
அண்ணெரிஞ்சான் பூண்டு- அன்றெரிந்தான் பூண்டு
அதகம்-பெருமருந்து
அதம், அதவு- அத்திமரம் பள்ளம்.
அதம்பம்-கற்பறிபாஷாணம்
அதழ்-பூவிதழ்
அதளை-நிலப்பீர்க்கு, புளையதளை
அதள்-கோல்
அதாசலம் - காட்டுமல்லிகை
அதிகநாரி-கொடிவேலி

அதிகப்-குருகத்திமரம்
அதிகல்-காட்டுமல்லிகை
அதிகற்றுதி - அதிகநாரி, கொடிவேலி.
அதிகும்பை-கையாந்தகரை பொற்றுது.
அதிகோவம் - அதிகோலம், அழிஞ்சில்,
அதிங்கம்-அதிமதுரம்
அதிசயம்-அதிரேசம்
அதிசனசி-கொடிவேலி
அதிசாரணம்-மாவிலங்கு
அதிசாரம்-சுரத்தோடு கூடிய ஓர்வகைபேதி.

அதிசாரம்-4 : வாதாதிசாரம், பித்தாதிசாரம், சிலேத்மாதிசாரம், திரிதோஷாதிசாரம்.

அதிசாரத் திரவியங்கள்

வெட்பாலையரிசி, அதிவிடயம், வட்டத்திருப்பி, வறட்சுண்டி, சுக்கு, கீழ்க்காய் நெல்லி, இலவம்பிசின், ஓமம், கஞ்சா, மாவரை, திப்பிலி, சிறுகாஞ்சொறி, இறுபூலா-வறட்பூலா, நீர்ப்பூலா சாதிக்காய், நீர்முள்ளிவிரை, முத்தக்காசு, குங்கிலியம், காட்டாத்திப்பூ, கிராம்பு, கருங்காலிப்பிசின், ஆவிரை, புளியம்வேர், வாழை, மாதுளம்பிஞ்சு, வெள்ளிலோத்திரம், கருவேல், தேன், புளியங்கொட்டைத் தோல், தென்னம்பாலை.

அதிசௌபரம்-தேமா
அதிச்சத்திரசம், அதிச்சத்திரம்-காளான்.
அதிட்டச்சொல்லி - இந்திரபாஷாணம்.
அதிட்டம்-மிளகு
அதிசசிலேட்டுமம்- சிலேஷ்மம்
அதிதாரம்-இலந்தை
அதிபசமி கொன்றை
அதிபதிச் சங்கம்-அதிபறிச்சம், வாலுழுவை.
அதிபதி-சண்பகம்
அதிபரிச்சம் - வாலுழுவையரிசி
அதிபதுங்கி-கொடிவேலி
அதிமதுரம் - ஓர் மருந்து, குன்றிவேர்.

இந்தச் சரக்கு வங்காள தேசத்தில் விளைகின்றது. இது பசோராக் தேசத்திலிருந்து வரப்பட்ட சரக்காயிருக்கின்றது. இது முக்கியமாய் இருமல், ஈளை, மேகவியாதி இவைகட்குக் கஷாய மூலமாய்க் கொடுக்கப்பட்டு வருகிறது. இது சுகபேதி மருந்தாகவும் உபயோகப்படுத்தப்படும்.

அதிமதுரப் பட்டை - அதன் பட்டை
அதிமலம்-மாவிலங்கு
அதிமத்சம்-குருக்கத்தி
அதிமிருத்தியாதி மாத்திரை, கோரோசன மாத்திரை
அதியமாம்-முயற்புல், அறுகல் புல்.
அதிரசம்-அரசம்
அதிராகம்-கந்தகம்
அதிரரம்பை - பொற்றலைத் தகரை
அதிலஓடாகம்-அடிலஓடாகம்

இந்தச் செடியின் இலைகளும், வேரும் சாறுபிழந்து மந்தார காசம், கப வியாதி, இவைகட்கு மிகவும் உபயோகமென்று மலையாளக் கரை துறை தேசத்தில் வழங்குகிறார்கள்.

அதிவிடம்-அதிவிடையம்
அதிவிடையம்-அத்தம் அவிருகம்.

இந்தவேர் ஓரங்குல நீளமாயும் வெண்மையான நிறமுடையதாயும் மிகுந்த கசப்பானதாயுமிருக்கும். இதை நாட்பட்ட வயிற்று நோய்களுக்குச் சூரணமாகவும், குடிநீராகவும் உபயோகிக்கலாம்.

அதிவெள்ளைச் செந்தூரம் - சவ்வீரம்.
அத்தகம்-கருஞ்சீரகம், ஆமணக்கு
அத்தம்-அதிவிடையம், குக்கில்
அத்தமானம்-ஆமணக்கு
அத்தரசிதம்-மடல்துத்தம்
அத்தன்-கடுக்கா, வெள்ளீயம்
அத்தி- அத்திமரம், அதவு, திப்பிலி, வெருகு.

இதன் வகை

ஊமலத்தி, மலையத்தி, சீமையத்தி, நீரத்தி, கொடியத்தி, கல்லத்தி, பேயத்தி

அத்திப்பட்டை மூத்திரத்தோடு உதிரங் கலந்து விழுகிற வியாதிக்கும் பெரும்பாட்டுக்கும் கஷாயமாகவாவது இலேகியத்தில் சேர்த்தாவது கொடுக்கப்பட்டு வருகிறது. இதைச் சூரணஞ் செய்து நல்லெண்ணெயிற் கலந்து பிளவை முதலாகியவைகளுக்குப் பற்றுப்போடப்படுகிறது.

அத்திகோலம் - அழிஞ்சில்
அத்திசம்-நீர்முள்ளி
அத்திக்கனி-வெருகு, கரசிலங்கண்ணி.
அத்திபுரசாதனி-அவுரி
அத்தித்திப்பிலி-யானைத் திப்
அத்திரகம்-கடுக்காப்பூ[ப்பிலி
அத்திரு } அரசு
அத்திரா } அரசு
அத்துமரனி } அரசு
அத்துகம்-ஆமணக்கு
அத்துமம்-அரத்தை
அத்துலாச்சி-கருஞ்சீரகம்.
அத்துவர்க்காயம்-சீரகம், கருஞ்சீரகம்.
அத்தூரம்-மரமஞ்சள்
அநங்கம்-இருவாட்சி, மல்லிகை.
அனந்தம்-கோளக பாஷாணம்
அநந்தன்-சோர பாஷாணம்
அநர்வன்-பஞ்சபட்சி பாஷாணம், வெந்தோன்றி.
அநுகம்-செந்தனம்
அநுக்கம்-சந்தனமரம், பாம்பு
அநோக்கம்-மரம், மரப்பொது
அந்தகம்-ஆமணக்கு
அந்தகம்-கஸ்தூரி, சாவு
அந்தகன்-சவுக்காரம், புல்லூரி
அந்தரங்கத்தியானி - ஆமை
அந்தரச்சித்து-கற்பாஷாண
அகராது-கொன்றை [ம்
அசர்-அகிர், பொடுகு
அடியுப்பு-கல்லுப்பு
அகாரவப்பு-கல்லுப்பு
அதிசாரம்-கல்லுப்பு
அண்டம்-மூளை
அகண்டம்-மூளை
அண்டசவ்வு-முடிமாமிசம்
அடியீரல்-மண்ணீரல்
அங்கிஷப்பிச்சு-அங்கப்பிச்சு

அளப்பம்-அங்கப்பிச்சு
அரவமணிக்கல்- மணிக்குடல்
அலரி-நகம்
அதிசாரம்-சத்திசாரம்
அரிதாரம்-மாயன்விந்து
அலங்கிதன்-அரிதாரம்
அதமசம்-வெண்காரம்
அரிகாரம்-சீனக்காரம்
அலரஞ்சங்காரம்- வெடிகாரம்
அலங்காரம்-வெடிகாரம்
அபரதன்- வெடியுப்பு
அனந்தன்-வெடியுப்பு
அரியுப்பு-கரியுப்பு
அங்கி-சாதிலிங்கம்
அசமதாகம்-ஓமம்
அரலை-கோழை
அடவியல்திருடி - சதுரக்கள்ளி
அருக்கன்-எருக்கு
அயிர்-சர்க்கரை
அரிசி-ஏலரிசை
அள்-காது
அனலிமுகம்-சூரியபுடம்
அக்ரா-அக்ராகாரம்
அஞ்சனவேர்-அவுரிவேர்
அசுவம்-அமுக்கரா
அம்மையார்கூந்தல்-முதியார் கூந்தல்
அங்கு-நெருப்பு
அகடு-வயிறு
அரம்பைப்பூ-வாழைப்பூ
அக்ரம்-அட்சரம்
அன்னவம்-சமுத்திரம்
அரும்பு-மொக்கு பூ முதலாயின
அரக்கி-பாஷாணம்
அக்காடிதம் - கௌரி பாஷாணம்
அந்தம்-கெந்தியுரி பாஷாணம்
அத்தம்-பச்சைக்கற்பூரம்
அவுரிபச்சை-பச்சைக்கற்பூரம்
அதிலோகம்-இரசக்கற்பூரம்

அசுநாதி-இரசம்
அத்தி-வாலைரசம்
அமுர்தவிந்து - வாலைரசம்
அண்டரசம்-சுத்தரசம்
அஷ்டதிசைரசம் -சுத்தரசம்
அநாதி-விந்து
அரவு-விந்து
அளவு-தடி, தண்டு
அருத்தம்-பொன்
அருளம்-பொன்
அத்தம்-பொன்
அரி-பொன்
அன்னம்-தங்கம்
அசுபதி-தங்கம்
அங்கி-கவசம்
அயச்சட்டி-இருப்புப் பாண்டம்
அமுரி-மூத்திரம்
அரிதாரம்-தாளகம்
அயம்-இரும்பு
அந்நீர்-பழந்தண்ணீர்
அகுவைக்கட்டி-அரையாப்புத்கட்டி
அண்டம்-தலை
அரப்பொடி- இருப்புப்பொடி
அப்பைக்கோவ்வை மூலம்-சறகோவைக்கிழங்கு
அரத்தை-சிற்றரத்தை, பேரரத்தை
அண்டத்தயிலம்-கோழிமுட்டை
அக்குமணி-பலகரைமணி
அட்சதை-மஞ்சளரிசி
அரி-அரிசி, கடுக்கா
அந்திமல்லி-பத்திராட்சி
அந்திரத் தாமரை - ஆகாசத்தாமரை
அகக்காழ்-ஆண் மரம்
அகத்தி-ஓர் மரம்
அகம்-தானியம்
அகலியம்-மரம்பொது
அகனி-தாழி

அகளம்-தாழி
அகில்-ஓர் மரம், பஞ்சை விரையின்றென்று.
அகில்கூட்டு-ஏலம், கற்பூரம் காசிக் கட்டி, சந்தனம், தேன்.
அகுடம்-கடுகுரோகிணி
அந்தரவாய - அண்டவாதம்
அந்தகோரம்-நெல்லி
அந்தகோலம்-நெல்லி
அந்தணநாபி - விஷத்தைப் போக்கு மருந்து.
அந்தரவல்லி - கருடன் கிழங்கு.
அந்தரவசனம்-கொடிப்பாசி
அந்தன்-கடுக்காய்
அந்திமலர்ந்தான்-அந்திப்பூ
அந்தி-தில்லைமரம்
அந்திப்பூ - அந்திமந்தாரை, அந்திமல்லிகை.

இந்தச்செடி இந்த தேசத்தில் உற்பத்தி யாவதல்ல, மகமதிய வைத்தியர் இதைச் சுகபேதி மருந்தென்கிறார்கள். ஆனால் ஐரோப்பிய வைத்தியர்கள் இதை மருந்து வகையில் சேர்ப்பதில்லை.

அந்திரக் கண்மணி நீலக்கல்
அந்திரக் கொடிச்சீ - கெந்தகம்.
அந்திரவசனம் கொட்டைப் பாக்கு.
அதேச்சாலம்-தேற்று
அந்தோ-நெல்லி [ம்
அபங்கம்-கோளகபாஷாண
அபந்தலம்-செங்கத்தாரி
அபரஞ்சி-பொன்
அபலம்-திமிங்கலம்
அபரமார்க்கம் - வெண்ணுயுருவி, நாயுருவி.
அபானம்-மூலாதாரம், பாயு
அபானம்-கடுக்காய் [ரு
அபினி-ஓர் மருந்து

அபினியானது, அத்திசுரம், எலும்புருக்கிக் காய்ச்சல் இவைகளுக்குக் கெடுதியென்று சுதேச வைத்தியர் நினைக்கிறார்கள். ஆகிலும் நித்திரை வரச் செய்வதற்கும், குளிர்சுரத்தில் குளிர்வாராமல்தடுப்பதற்கும், குறைப்பதற்கும், சில வயிற்றுநோயைச் சாந்தமாக்குவதற்கும் உபயோகப் படுத்துகிறார்கள் வாதம் சந்துவாதம் இவைகளில் அபினியைச் சாராயத்தில் சாம்பிராணியோடாவது சுக்குடனாவது இழைத்துப் பூசச் சொல்லி விதிக்கிறார்கள்.

இதைத் தகுதியாகப் பிரயோகித்தால் மிகுந்த உபயோக ஔஷதமா யிருக்கிறது. இது சுக்கிருமல், கண்வலி, பல்வலி, காதுவலி, வீக்கம், வாதம் இவைகட்கு மிகவும் உபயோகமுள்ள மருந்தாய் இங்கிலீஷ் வாகடத்தில் சொல்லப்படுகிறது.

அபினியென்பது கசகசா செடியி லிருக்கிற முதிர்ந்த காயைக் கிள்ள, அதிலிருந்து வருகிற பாலாக விருக்கிறது. இதில் நான்கு விதங்களுண்டு. முதலாவது துருக்கி அல்லது ஸ்மிர்னா தேசத்திலிருந்து வரப்பட்டது. முதல் தரமாகவிருக்கின்றது, இரண்டாவது, ஈஸ்ட்டிண்டியா அல்லது வங்காள தேசத்திலிருந்துவரப்பட்டது. மூன்று

வது எகிப்து தேசத்திலிருந்து வரப்பட்டது. நான்காவது ஐரோப்பா தேசத்திலிருந்து வரப்பட்டது அதன் முக்கிய காரியம் சொற்ப அளவாய்க் கொண்டால் இலாகிரி உண்டாகின்றது. நாடி பலமாயுயர்ந்து பலதரம் வந்து நடக்கும். முகம் சிவந்து காட்டும், கண் துலக்கமாய்க் காணும், மனதில் சந்தோஷமான எண்ணங்கள் நிறையும். இரண்டாவதான காரியம் எப்படியெனில், உறக்கம் இரத்தமோடு நரம்பு அல்லது தாது நடக்காமல் அமுந்தி போதல், பசியின்மை மலபந்தம், மனச்சோர்வு இவைகளெல்லாம உண்டாகும். அதிக அளவாகக் கொண்டால் இலாகிரி அதிகமாதல் புலப்பிரமை, மயக்கம, கைகால், கண்டச்சதைகள் வலித்தல் ஆகிய இந்தக் குணங்களெல்லாம் உண்டாகும்.

அபிநாசசன்ன-சன்னி
அபையன்-கடுக்காய்
அம்பட்டர்-வட்டத்திருப்பி
அப்பம்-புட்டுத்திருப்பி, வட்டத் திருப்பி.
அப்பாகம்-வாலுளுவை
அப்பிரியதரு-ஓதியமரம்

அப்பிரகம்-ஓர் வகை லோகக் கல். இதனை பூவிந்து நாதம், மனோன்மணி நாதம். மகாவிந்து, அம்பரம், மகாப்பிரகாச்சத்தி, மேகசம, அம்பரை நாதர் என்பர். இது ஏழு வகைப்படும.

அவையாவன:
ஓமாப்பிரகம், பொன்னப்பிரகம் இரதாப்பிரகம், வெள்ளியப்பிரகம்- வெள்ளையப்பிரகப், தேனப்பிரகம், கிருஷ்ணப்பிரகம் - கிருட்டிணப்பிரகம், கெந்தகாப்பிரகம்.

இவைகளெல்லாம் 120-வித லோகங்களில் சேர்ந்தவைகள்.

இதன்விதம்:
அப்பிரகத்தகடு - அப்பிரக நவநீதம்.
அப்பிரக பாஷாடணம்-இரச பிறிதி.

இரசமாதா:
அப்பிரகச்செந்தூரம்-மேக வியாதி மேகநீர் இந்த வியாதிகட்கும், சில வயிற்றுக் கழிச்சலுக்கும், இரத்தக் கழிச்சலுக்கும், காமாலை நோய் காசநோய், நெஞ்சடைப்பு, நெஞ்சுடை வாதம் இந்த வியாதிகட்கும் உபயோகப்படுத்தப்படும்.
அப்பிரகம்-புளிமா
அப்பு-பாதிரிமரம்
அப்புளண்டம்-தகரை
அப்பை-அப்பைக்கோவை

இநத கிழங்கு கடையிலகப்படும். ஒருவிரல் பருமனுயும், நரைத்தவெளிறு நிறமுடையதாயு மிருக்கும். யாதொரு முக்கியமான வாசனையிராது, கொஞ்சம் இனிப்பாயிருக்கும், சாறுள்ளதாயுமிருக்கும் இதை மூலவியாதிகளுக்கு இலேகியத்தில் சேர்த்து உள்ளுக்குக் கொடுக்கிறார்கள் சுவாசகாச வியாதி

யில் இளக்கிற அல்லது மிருதுவாயிருக்கிற மருந்தாகச் சூரணஞ் செய்து கொடுக்கப்படுகிறதுமுண்டு.
அப்பை-கொப்பை, கொன்றை
அமண்டலம்-ஆமணக்கு
அமந்தலம்-செங்கத்தாரி
அமந்திமரம்-ஓர்மரம்
அமர சயம்-இறைக்குடல்
அமரம்-ஒருவிதக்கண்ணோய்
அமரசிலைக் கெந்தகம்-ஓர் பாஷாணம்
அமரிதம்-கடுக்காய்
அமரியம்-குருந்து
அமலகம்- நெல்லி - நெல்லிக்காய்.
அமலம்-மரமஞ்சள்
அமலர்-நெல்லிமுள்ளி
அமலை-கடுக்காய்
அமளை-கடுகுரோகணி
அமானி-புளியாரை
அமிரம்-மிளகு
அமிர்தம்-மூர்ச்சை தீர்த்து உயிர் தருமருந்து
இதன்விதம்-பால், சர்க்கரை, வாழைப்பழம், தேன், தேங்காய்.
அமுக்கிரு- அசுவகெந்தி
இதன்வேர் அல்லது கிழங்கு, குளிர்மையான குணமுடைய இலக்குகிற சலபேதியுண்டாக்குகிற மருந்தென்று சும்தச வைத்தியர் அபிப்பிராயம்.
அமுசம்-சிறுசெருப்படை
அமுதம்-கடுக்காய், சீந்தில், நெல்லி.
அமுதசாரணி அமுதசுரு-வெள்வேல்
அமுதபுட்பம் - சிறுகுறிஞ்சா
அமுதங்கம் - கள்ளி, சதுரக்கள்ளி
அமுததகரம்-மஞ்சிட்டி
அமுதம்-கடுக்காய், சீந்தில், நெல்லிப்பால், நீர் மருந்து, தயிர், திரிகடுகு அதாவது சுக்கு, மிளகு, திப்பிலி, திரிபலை அதாவது கடுக்காய், தான்றிக்காய் நெல்லிக்காய்.
அமுதசர்க்கரை- சீந்திற் சத்து, சீந்திற் சருக்கரை.
அமுதவல்லி-சீந்திற்கொடி
அமுதாரி-பூனைக்காலி
அமுத்தம்-வச நாபி
அமெந்துக்கொட்டை-வாதுமைக்கொட்டை
அமைநீக்கி-கற்றுழை
அமேந்தியநாறுமரம்-ஓர் பூண்டு, ஓர் மரம்
அமை-மூங்கில், நாணல்
அமையம்-இலாமிச்சை
அன்பகம்-சோம்பு
அன்பகன்-சீர்பந்த பாஷாணம்
அம்படம் - புழுக்கொல்லி, ஆடுதின்றுப்பாளை.
அம்படலம்-வெள்ளி ஈயம்
அம்படன்கத்தி-ஓர் மீன்
அம்பணம் வாழை, ஆமை நீர்
அம்பலத்தி- தான்றிக்காய்
அம்பலவிருக்கம்- தில்லைமரம்
அம்பரை-நிமிளை
அம்பரைநாதம்- அப்பிரகம்
அம்பர்-ஓர் மரப்பிசின்
இது தக்கன தேசத்தில் நேர்த்தியானதாக அகப்படும். திருவாங்கூரிலேயும் அகப்படும். அஸ்ஸாம், சீனு, ஜப்பான் முதலிட விடங்களி

லிருந்து இந்தியாவுக்கு விஸ்தாரங் கொண்டு வரப்படுகிறது. இதனால் திராவகம் எண்ணெய் செய்யப்பட்டு வாதம், இருமல் இப்படிப் பட்ட வியாதிகளுக்கு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

அம்பு-துளிர் எலுமிச்சை, மூங்கில், ஆடுதின்னாப்பாளை, சரகண்ட பாஷாணம்.
அம்புயம்-தாமரை, நீர்
அம்புசன்மம்-தாமரை
அம்புசாதம்-தாமரை
அம்புதம்- நீர், கோரைக் கிழங்கு
அம்புபிரசாதனம்- தேற்றாங் கொட்டை
அம்புவாகினி- எலுமிச்சை, பாதிரி.
அம்பை-வெட்டிவேர்
அம்போசம், அம்போருகம்- தாமரை
அம்மட்டி- கொட்டிக்கிழங்கு
அம்மான்பச்சரிசி - சித்திரப் பாலாடை

இதன் வகை

பெரியம்மான்பச்சரிசி, சிற்றம்மான் பச்சரிசி சிவப்பம்மான் பச்சரிசி, வெள்ளையம்மான் பச்சரிசி, வயலம்மான் பச்சரிசி

அம்மை- கடுக்காய், ஓர் வியாதி

அம்மையார் கூந்தல் - மெல்லியார் கூந்தல், கொடியார் கூந்தல், எலிச்செவி.

அயம்-சிறுகுறிஞ்சா. வசம்பு
அயக்காந்த செநதூரம் - ஓர் செந்தூரம்

அயசிலவேதை - கோளக பாஷாணம்.
அயசீகம்-அயம்
அயம்-உருக்கு, எஃகு
அயசுபடில்-வெள்ளீயமணல்
அயச்செந்தூரம்- உலோகச் செந்தூரம்
அயதி-திருநாமப்பாலை
அயத்தி-இரும்புத் தொட்டி பாஷாணம்
அயபானி ஓர் செடி

இந்தச்செடிமுதலில் ஐயல் ஆப் பிரான்சிலிருந்து கொண்டு வரப்பட்டது. சுதேச வைத்தியர்கள் இதை நன்றுயறிவார்கள் அதன் பரிமளத்தினாலும் அதன் வெளிப்பார்வையினாலும் இது மிகவும் விலைபெற்ற மருந்தென்று மதிக்கப்படுகிறது இதன் இலையினாலாகிய குடிநீர் மிகவும் விருப்பமுள்ளக் குடிநீராக யோசிக்கப்படுகின்றது. இதை புதிதாய்க் கொண்டுவந்து இடித்துக் கட்டினால் கெட்ட புண்களெல்லாம ஆறிப்போகும்.

அயமணல்-அயமலை
அயமரம-அலரி
அயமி-வெண்கடுகு

அயம்-இரும்பு, அயமரம், அலரி,சிறு பூலா, ஆதி, செந்தூரம்

அயவாரி-வசம்பு
அயலி-சிற்றரத்தை
அயிரம்-ஊமத்தை
அயிஞ்சி-நிலப்பனை
அயிரம்-கண்டசருக்கரை
அயிரியம்-நெட்டிச்செடி
அயிலிடம்-சிற்றரத்தை

அயில்-கோரை
அய்யலி-சிறுகடுகு
அரச்சம்.-திருநாமப் பாலே, எருக்கு, கொம்பரக்கு,
அரக்காம்பல்-செவ்வாம்பல்
அரசன் விரோதி-கோமை, பூவரசு.
அரசன்-கார்முகிற் பாஷாணம், துருசு, பானகெந்தகம்.
அரசானம்- அரசு, அரத்தை, தும்பராஷ்டம்.
அரச-அரசவரம்
இதன் வகை :
கொடியரசு-பூவரசு
அரசின்விதை, குளிர்ச்சியுண்டாகுகிறநோய் - பேதிக்கிற மருந்தென்று இலேகியத்திலும், சூரணத்திலும் சேர்க்கப்படுகிறது.
அரணியரசாசனே- காட்டிஞ்சி
அரணியர்-காட்டுகரணை
அரத்தம்-அரக்கு, செங்குவளை, செம்பரத்தம், பவளம், கடம்பு.
அரத்தை-அரத்தை
இதன்வகை:
சிற்றரத்தை, பேரரத்தை, தும்பராஷ்டகம்
அரத்தோற்பலம்- செங்கழுநீர்
அரமாரவம்-நாயுருவி
அரமியம்-பிரமப்பூண்டு
அரபி-கடுக்காய்
அரப்பொடி-அயவெள்ளை
அரம்பை-வாழை
அரலே-மரல்
அரவிந்தம்-தாமரை
அரளி-பீநாறி, நாறுமரம் பெருமரம்.
அரன்-மஞ்சள்
அரா-பாம்பு
அரி-கொடுவேலி, மூங்கில்
அரிசரி-அத்திக்கொழுந்து
அரிசி-ஓர் தானியம்
இது சுரத்திற்கும் மூத்திரம் குறைந்து மஞ்சள் நிறமாயிருக்கும் சுரத்திற்கும் இதனோடு இருமல் உண்டாயிருந்தாலதற்குக் கஷாயமாகவும், தீப்பட்ட புண்களுக்கும், எல்லா விப்புருதிகளுக்கும், பருக்களுக்கும சீழ்கொள்ளுகிற காயங்களுக்கும், வலியும் சூடுமுள்ள பருத்தமூலமுளைக்கும், போல்டிசாகவும் உபயோகப்படும்.
அரிதாரம்- அரித்திராபம்
இதன்வகை: பொன்னரிதாரம், தாளகம், கட்டியரிதாரம், சரட்டரிதாரம், தகட்டரிதாரம், மடலரிதாரம், வைப்பரிதாரம், மனத்தீ.
அரிதாரம் சீனதேசத்திலிருந்தும், பிரம்மாதி தேசத்திலிருந்தும், சுமத்திரா தேசத்திலிருந்தும் வரப்பட்ட சரக்கா யிருக்கிறது. இது முறைக் காய்ச்சலில் கந்தமூலங்களோடு சேர்த்துத் தமிழ் வைத்தியர்களால் சொற்ப அளவாய்க் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால் அகீம்கள் உள்ளுக்குக் கொடுக்கிறதில்லை இது பாஷாண வகையிற் சேர்ந்தது.
கொடுவேலி-மூங்கில்
அரிசம்-மிளகு
அரிசயம்-கொன்றை எலுமிச்சை.
அரிசனம்-மஞ்சள்

அரிசா-பெருங்குமிள்
அரிசு-மிளகு
அரிசந்தனம்-சந்தனம்
அரிடம்-கடுகு ரோகிணி, வேம்பு
அரிட்டம்- வெள்வெங்காயம், கள், முட்டை, மோர்.
அரிணை-கள்
அரிசகி-கடுக்காய் மரம்
அரிதளம்-பொன்னரிதாரம்
அரிதின்வயசி- திருநாமப்பாலை
அரித்திரம்-மஞ்சள்
அரிமஞ்சரி குப்பைமேனி
அரிமல்-மாவிலங்கு
அரிமைதா-வெள்வேல்
அரியசம்-கொன்றை
அரியசாரணை-மாவிலங்கு
அரியல்-கள்
அரில்-மூங்கில்
அரீடல்-கடுகுரோகணி, கடுகு
அருகசனி-பேரேலம்
அருசஞ்சி-சீந்தில்
அருசணி-பிரண்டை
அருகி-கள்
அருகியரத்தம்-பூனைக்காலி
அருக்கம்-எருக்கு
அருக்கன்-சுக்கு
அருசாவிரா- பெருங்குமிழ்
அருச்சுனம்-எருக்கு, மருது
அருட்டம்-கடுகுரோகணி, மிளகு, வேம்பு.
அருட்சோதி-கௌரி பாஷாணம்
அருணம் எலுமிச்சை
அருதா-சதாப்பிலை
அருத்திமரம்-மரமஞ்சள்
அறுத்துறுமம்-வெள்வேல்
அருப்பம்-தொட்டி
அருப்பலம்-அனிச்சமரம்
அரும்பி-குங்கும பாஷாணம்
அருளகம்-வெள்ளெருக்கு
அருளரசி-குடசப்பாலை, வெட்பாலை.
அருளவம், அருளுவம் - பெருமரம்.
அருளாதி-குடசப்பாலை
அருளாப்பு-சாரணை
அருளுறுதி-வேம்பு
அரேசகண்டு- கருணைகிழங்கு
அரேசிகம்-வாழை
அரேணுகம்-வால்மிளகு, சேவந்தி, கடுக்காய்வேர்.
அரையாப்பு-ஓர் நோய்
அரோருட்டுமா- ஓர் கிழங்கின் மா

ஆரோருட்மா என்ற செடி அமெரிக்கா தேசத்தில் கறிகாய்த் தோட்டங்களில் பயிரிடப்படுகிறது. அதன் கிழங்கில் இதற்கடியில் சொல்லி வருகிற பிரகாரம் பாலெடுக்கப்படுகிறது.

ஒரு வருஷத்திற்கு மேற்பட்ட கிழங்கைத் தோண்டியெடுத்துத் தண்ணீரில் நன்றாய்க் கழுவி, பின்பு அதை ஒரு ஆழமாகிய மர உரலில் கூழாய் இடித்து ஒரு பெரிய மரத்தொட்டியில் சுத்தஜலம் விட்டு அதிற் பெய்து அதை எல்லாம் நன்றாய்க் கையால் பிசைந்து கோதுகளை எல்லாம் பிழிந்தெடுத்து விட்டுப் பால் பதமா யிருக்கிற நீரை கயிறினால் செய்யப்பட்ட சல்லடை மூலமாயாவது ஒரு உறப்பு வஸ்திரத்தினாலாவது வடித்துவிட்டுக் கொஞ்சம் பொழுது வைத்திருந்து மேலே தெளிகிற ஜலத்தை வடித்துவிட்டால் பாத்திரத்தின் அடியில் வெளுப்பாக

பாளம் அல்லது வண்டல் படிந்திருக்கும். அதில் மறு படியும் சுத்தமான ஜலம் விட்டு கலக்கித் தெளிய வைத்து மேல் ஜலத்தை இறுத்துவிட வேண்டியது. கடைசியில் அடியிற் படிந்த பாளத்தை யெடுத்து ஒரு துப்பட்டின்மீது பரப்பி வெளியில் காயவைத் தெடித்துப் பத்திரப் படுத்திக் கொள்ள வேண்டும்.

அரோரூட் மாவானது சொற்ப அளவாலும் மற்றதைவிட அதிகமான ஆகாரமா யிருக்கின்றது. இதன் மாவை ஜலத்துடன் காய்ச்சினால் சாகோ அரிசி முதலாகியவைகளின் பாகைவிட மிகவும் சிரேஷ்டமான மனதுக்கிஷ்டமுள்ள தெளிவான பாகு ஆகின்றது. இந்தப் பாகு குழந்தைகளுக்கும், பலவீனப்பட்டவர்களுக்கும் போஷிக்கத்தக்க பத்தியச் சாப்பாடாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அரோரூட்டுமா பாகு-இதற்கடியில் வருவதுபோல் செய்யப்படுகிறது

அரோரூட்டு மாவில் ஒரு டிசரட்டுக்கரண்டி அளவு மாவெடுத்து அவ்வளவு குளிர்ந்த ஜலத்தில் சேர்த்திழைத்துப் பின்பு அதில் கொதிக்கிற அரைபாயிண்டு புட்டி ஜலத்தில் விட்டு, விரைவாக விடாமல் கலக்கிக்கொண்டு சில நிமிஷம் வரை காயவிட்டு ஒரு தெளிந்த பாகாகிறவரையில் வைத்திருந்து அந்தச் சமயத்தில் பலயீனப்பட்ட நோயாளியா யிருந்தால், கொஞ்சம் சக்கரையும், ஷேரி உவயினும் விடவேண்டும்: குழந்தையானால் இலவங்கப்பட்டை எஸ்ஸன்சில் ஒரு துளி அல்லது இரண்டு துளிவிட்டு சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

குழந்தைகளுக்கு உப்பிசமுண்டா யிருந்தால் எஸ்ஸென்ஸ் ஆப் காமேசீட்ஸ் என்கிற சீப்கத் திராவகத்தில் இரண்டு அல்லது மூன்று துளி சேர்க்கவேண்டும். வயது வந்தவரா யிருந்தால் கொஞ்சம் போர்ட் ஒயின் அல்லது பிராந்தி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வேப்பலகு

அலகு-மகிழ்

அலகுசோதி-அருகு

அலகை-பேய்க்கும்மட்டி

அலக்கைச்சுரம்-கீழ்க்காய் [நெல்லி

அலங்கை-துளசி

அலத்தம்-செம்பருத்தி

அலத்தகம்-செம்பஞ்சு

அலந்தல்-செங்கத்தாரி

அலரி-கோதுமை, அயமரம்

இதன் வகை :

செவ்வலரி, குங்குமவலரி, வெள்ளலரி, ஆற்றலரி, ஈழத்தலரி, நீசலரி.

அலரி வேரானது விஷமுடையது. உள்ளுக்குக் கொண்டால் மரண முண்டாக்கும்.

அலர்-மஞ்சள் நீர்

அலாபதம்-இலாமிச்சு

அலாபு-சுரை
அலாரிதா-அலரி
அலி-நறுவிலி
அலியன்-கடுக்காய்
அலுவீகம்-வில்வம்
அலோசி-பசளை
அலோமி-பொற்றலைக் கையாந்தகரை
அல்நார், அன்னார்-கல்நார், கன்னார்.
அல்லம்-இஞ்சி
அல்லாரி-அல்லு, காயா, சயம், நெய்தல்.
அல்லி-காயா, ஆகாசவல்லி

இதன் வகை:

வெள்ளல்லி-வெள்ளாம்பல்
செவ்வல்லி-செவ்வாம்பல்
சிற்றல்லி-சிற்றும்பல்.
அல்லிகம்-பேய்க்கொம்
அல்லியம்-கொட்டி [மட்டி
அல்லூரம்-வில்வம்
அவகதவாய்-கீழ்காய், கீழா நெல்லி.
அத்தம்-நாய்வேளை
அவந்திக்கண்ணி-மெருகன் கிழங்கு
அவயம்-இலாமிச்சை
அவரை-கொள்ளு, துவரை, முதிரை முதலாயின.

இதன் வகை:

அவரைக்காய், அவரைக் கொடி, காட்டவரை, காட்டு மொச்சை, கொத்தவரை, சீனியவரை, கோழியவரை, செவ்வவரை, தீவாந்தர அவரை, நகரவரை, பேயவரை. பேரவரை, முறுக்கவரை, வாளவரை, வெள்ளவரை.

அவலி-பூனைக்காலி [பை
அவாகேசவுப்பு-பெருந்தும்
அவாபுளிப்பு-பிரமி
அவிரி-அவரி, அவுரி, நீலி, நீல அவுரி.

இதன் வேர் விஷயங்களை முறிக்கத்தக்க சக்தியுடையதென யெண்ணப் படுகின்றது. கஷாயமாகக்காய்ச்சிக் கொடுக்கப்படும். மலையாள தேசத்தில் கல்லடைப்பு வியாதிகட்கு இதன் வேர் கஷாயம் கொடுக்கப்படுகின்றது.

அவிருகம்-அதிவிடயம்
அவிசுப்பம்-தொடரி
அழகர்-வெள்ளெருக்கு
அழகவேதம்-அதிவிடயம்
அழத்தியம்-சோமனாதி பெருங்காயம்.
அழல்-கொடிவேலி, கள்ளி, எருக்கழல், எருக்கு.
அழல்விரை-நேர்வாளம்
அழற்பால்-எருக்கு
அழிஞ்சில்-ஓர் மரம், கிராணித் திரவியம்
அளத்துப்பச்சை-மருக் கொழுந்து, சக்களத்தி.
அளத்துப்புல்-முயிற்றுப்புல்
அளப்புக்கு-முடக்கற்றான்
அளவன்-சோரபாஷாணம்
அளி-கள், மது, காய்
அளேசிவப்பு-அளோ வெப்பம், அதிவிடயம்.
அளேருகம்-தூதுளை [பாலை
அறக்கப்பிளப்பி-திருநாமப்
அறணை-காட்டுக்கருணை
அருமை-கவிழ்த்தும்பை
அறிப்பலம்-திப்பிலி
அறுகு-அறுகம்புல்

இதன் வகை:

உப்பறுகு, கூந்தலறுகு, சிற்றறுகு, பேரறுகு, புல்

லறுகு, பானையறுகு, வெள்ளறுகு.

அறுகுக்காஷாயம் மிகவும் விருப்பமான உருசியுள்ள குளிர்ச்சி யுண்டாக்குகிற உணவான குடிநீராக இருக்கின்றது.

அறுபதம்-கையாந்தகரை
அற்கம்-வெண்டுளசி
அற்பகெந்தம் - செந்தாமரை
அற்பமாரிசம்-சிறுகீரை
அற்பருத்தம்-வாழை
அனகம்-புல்லுருவி
அனங்கம்-இருவாட்சி, மல்லிகை.
அனந்தம் - அறுகு குப்பைமேனி, சிறுகாஞ்சொறி, பெருநன்னாரி.
அனந்தரம்-வேலிப்பருத்தி
அனந்தர்-பருத்தி
அனரவன்-வெந்தோன்றி
அனசிப்பூ - ஓர் பூ

இது வித்திருக்கிற சவ்வையுடைய ஒருவித அதிசய பூவாக உதிக்கின்றது. இதன் உருசியும் வாசனையும சீமைசோம்புக்குச் சரியா யிருக்கும். இந்த சரக்குச் சீனதேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. இதைச்சீரண மருந்தென்றும் வாயுவைத் தணிக்கும் மருந்தென்றும் தமிழ் வைத்தியர் அபிப்பிராயஞ் செய்கிறார்கள் மகமதியர் நற்போசனங்களில் உருசிப்படுத்தச் சேர்க்கிறார்கள். சில சமயங்களில் இதைச் சேர்த்து ஒருமிகுந்த வாசனை யெண்ணெய் செய்கிறார்கள். இது ஜப்பான் தேசத்தில் வளருகின்ற ஒரு ஸ்கிம்மி யென்கிற மரத்தின் பூவா யிருக்கின்றது.

அனரியதித்தம் நிலவேம்பு
அனிச்சம்-அருப்பலம்
அனிச்சை-நாகமல்லி
அனீசு-நட்சத்திரசீரகம்
அனுகம்-செஞ்சந்தனம்
அனுக்கம்-சந்தனம்
அனுமாசாக்கா- பொன்னாங்காணி
அன்பகர்-சமுத்திர சோகி
அன்னபம்-ஆல்
அன்றெரிந்தான்பூடு - சிறுபுள்ளடி, அண்ணெரிஞ்சான் பூண்டைப் பார்க்க.
அன்னபேதி - ஓர் மருந்து

இந்தப் பெயரால் கடைகளில் இரண்டு மாதிரிச் சரக்குகள் விற்கப் படுகின்றன. ஒளஷதத்திற்கு பிரயோகிக்கப்பட்ட அன்னபேதியானது பிரகாசமான பச்சை நிற முள்ளதாய் பளிங்குக் கல்போலிருக்கின்றது. இது பாண்டு குளிர் சுரம், முறைக் காய்ச்சல், வயிற்று வீக்கம், சுரக்கட்டி, நீர்க்கோவைமுதலியவியாதிகட்கு உபயோகமான மருந்தென்று ஒரு இங்கிலீஷ் வைத்தியர் சொல்லுகிறார்.

இது தேகமும் கண்ணின் உள்ளிமைகளும் நாக்கு உள்ளங்கைகளும் இரத்த மற்று வெளுத்திருக்கும். பாண்டுக்கும், பலயீனத்திற்கும் உபஸ்தலத்தில் நின்று மிகுதியாய் வெள்ளை யொழுகும் ஸ்திரீகட்கும், சூதகம் நின்று கஷ்டப்படுகிறவர்,

களுக்கும், குழந்தைகளின் தேகமும், கண்ணின் உள்ளிமையும் இரத்தமற்று வெளுத்து பலவீனமா யிருக்கிறதற்கும், குளிர்சுரம் அல்லது முறைக்காய்ச்சலுக்கும், நெடுநாளாய் குளிர்சுரமிருந்து வாசியானபின் வயிற்றின் இடது பக்கத்தில் ஒரு வீக்கம்போல் காணுகிறதற்கும், நீர்க்கோவையுண்டாய் நாவும கண்ணிமை யுட்புறங்களும் வெளுத்து வியாதிக்காரன் பலனற்றிருந்தாலதற்கும், முதவலி தினந்தோறும் அல்லது இரண்டாம் நாள்தோறும் பதிவாய் ஒரு குறித்த சமயத்தில் வருகிறதற்கும் முறைப்படி இன்னஞ் சில மருநதுகளோடு சேர்த்து ஔஷதமாக கொடுக்கபபட்டு வருகின்றது.

அன்ஞசி-பரங்கித்தாழை
அக்காரப்பட்டை - மாமரப் பட்டை.
அஞ்சனக்கல் - சுருமாக்கல்
அடவிநீர் - காட்டிலிருக்கும் நீர்.
அந்தரத்தாமரை - ஆகாயத் தாமரை.
அமுதவல்லிக்காய் - சீந்திற் காய்
அரக்காம்பல் - செவ்வல்லி
அருள்மரம்-முதிர்ந்தமாதுளை மரம்.
அரேணுகம்-கடுக்காய் வேர்
அளுங்கு-நளுங்கு
அறுகீரை-அறைக்கீரை

ஆ

ஆ-ஆச்சா
ஆகம்-சுரை
ஆகரி-திப்பிலி
ஆகாச கருடன்-கொல்லன் கோவை, சீந்தில், பேயந்தி
ஆகாசத்தாமரை - ஓர்நீர்ப் பூண்டு, கொட்டைப்பாசி
ஆகாசவல்லி- ஓர் பூண்டு
ஆகாசி-சீந்தில்
ஆகாடம்-வெண்ணாயுருவி
ஆகாயமஞ்சி சிறுசடாமஞ்சி
ஆகிரந்தம், ஆகிரந்தனம்-பங்கு
ஆகேறு-கொன்றை
ஆக்கொத்துமம் - கொன்றை
ஆக்கொல்லி-தில்லைமரம்
ஆசியபத்திரம்-தாமரை
ஆசியம்-கருஞ்சீரகம்
ஆகினி-ஓர்மரம், ஈரப்பலா
ஆசுணம்-அசோகு, அரசு
ஆசூரம்-இஞ்சி
ஆசூரம்-வெள்வெங்காயம்
ஆச்சமரம்-மூகைப்புல்
ஆச்சா-ஆச்சாமரம்
ஆச்சவரி-அரசு
ஆஞ்சி-ஏலம்
ஆஞ்சில்-இசங்கு
ஆடகத்தி - குங்கும பாஷாணம்
ஆடம்-ஆமணக்கு
ஆடகம், ஆடகி - துவரை
ஆடலை - பூவிளா, பூவில்லா மரம்
ஆடாதோடை-ஓர் மருந்துச் செடி.

இதை அகீம்கள் முக்கியமாய் கெண்டை வாங்கல் வலி, நரம்புத்தடிப்பு, கரசரணவாதம், கொரண்டல் வாதம் இவைகளுக்கு உபு

யோகப் படுத்துகிறார்கள் ஈழைகாசம், மந்தாரகாசம் க்ஷயவியாதி இவைகளுக்கும் உக்ரமாய் வருகிற நளிர் சுரம் வாராமல் தடுக்கவும் காஷயமாகவும், இலேகியமாகவும் செய்துகொடுக்கிறார்கள். அது கொஞ்சம் கசப்பாயிருக்கும்.

ஆடுதின்னாப்பாளை - ஓர் மருந்துப்பூடு,புழுக்கொல்லி

இதன் உலர்நத இலையின் குடிநீர் வயிற்றிலிருக்கிற பூச்சிகள் விழக் கொடுக்கப்படுகிறது. இதன் பச்சையிலை கொண்டுவந் தரைத்து ஆமணக் கெண்ணெயில் குழைப்பி கரப்பான் புண்களுக்கு மேற்பூச்சாகப் பூசினால் புண்கள் ஆறிப்போகும்.

ஆடையொட்டி-ஓர் பூடு

ஆட்டாங்கள்ளி-திருகுகள்ளி

ஆட்டாங்கோரை-ஓர் கோரை

ஆட்டிக்கால்-அடம்பு

ஆட்டுக்கொழுப்பு-ஓர் கொழுப்பு.

ஆட்டுக்கொழுப்பு மேற்பூச்சுக்காக உபயோகப்படுகிறது. இது சங்கமரப்பழம், சாதிக்காய், வால் மிளகு இவற்றோடு சேர்த்து இரத்த சயம, இரத்தரோகம், ஈழை காசம், சயரோகம், கோழை நோய் இவைகளுக்கு உள்ளுக்குக்கொடுக்கப்படுகிறது

ஆட்டுசம்-ஆடாதோடை

ஆட்டுப்பால்-ஓர் பால்

சுதேச வைத்தியர்கள் இந்தப் பாலை மிகவும் பலமுள்ள சஞ்சீவி மருந்துபோல் யோசிக்கிறார்கள். சயரோகங்களிலும் மூர்க்கமான இருமலிலும் இதை மிகுந்த நம்பிக்கையோடு புகழ்ந்து பேசுகிறார்கள். இந்த வெள்ளாட்டுப்பால் பித்த சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் கொடுக்கப்படுகிறது. சரீரம் பலயீனமா யிருக்கும்போதும், வயிறு கழிச்சலுக்கும், பசியின்மைக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஆகணம்-சுரை

ஆணாப்பிறந்தோன் - கழுக்காணி, ஆவாரை.

ஆணிப்பூ, ஆணிப்பூடு-ஓர் நோய், கண் வியாதி.

ஆணிவேர்-உச்சிவேர்

ஆணிச்செருக்கம் -இலவண பாஷாணம்.

ஆண்டலை-பூவில்லாமரம்

ஆண்டை-தேட்கொடுக்கி

ஆண்மரம்-அழிஞ்சில்

ஆதம்-கூந்தற்பனை

ஆதம்பேதி -செப்புநெருஞ்சில்

ஆதளை-ஆமணக்கு

ஆதி-காய்ச்சற் பாஷாணம், மிருத பாஷாணம்.

ஆதிகம்-சிறுகுறிஞ்சா

ஆதிகடுஞ்சாரி-நவாச்சாரம

ஆதிகல்நாதம்- அன்னபேதி

ஆதிகுடி-சவுக்காரம்

ஆதிக்குரு-பூவழலை

ஆதித்தன் -ஆதுக்குரு

ஆதித்தன் கூர்மை - இலவண பாஷாணம்.

ஆதித்தன்வெள்ளை - ஆதித்தன் கூர்மை.

ஆதிபரம்-சாதிக்காய்

ஆதிமகாகுரு-துரிசு [ணல்

ஆதிமகாநாதம்-லோகம

ஆதியாமம்-மூவலைகப்புல்

ஆதிரௌத்திரன்-சவ்வீரம
ஆதிவிந்து-கார்முகில் பாஷாணம்
ஆதிவராகன்-சோரா பாஷாணம்,
ஆதிவிராட்டியன்-சோர பாஷாணம், சூதபாஷாணம்.
ஆதொண்டை-சாத்தொட்டி
ஆத்தா-ஓர்மரம், மணிலா, ஆத்தா, சீதா, ராமசீதா.
ஆத்தி-திருவாத்தி
ஆத்திக்கனி-வெருகு
ஆத்திரதம்-இஞ்சி
ஆத்திஷ்டி-நீர்முள்ளி
ஆத்துமபத்தர்-பூனைக்காலி
ஆத்துமம்-அரத்தை
ஆநகம்-தேவதாரு
ஆநந்தவல்லி-கோழித் தலை கெந்தகம் [ணம்
ஆநந்தவாதி-கௌரி பாஷா
ஆந்தை-புருமுட்டி, பேரா
ஆப்பு-எட்டி [முட்டி
ஆப்புளண்டம்- கையாந்த கரை

ஆமகணம் - குழந்தைகட்குச்சீதம் விழுகிற ஓர் நோய், கணத்தைப் பார்க்க.

ஆமடி-காஞ்சிமம்
ஆமணக்கு-ஓர் செடி

இதன் வகை :

செவ்வாமணக்கு, சூரியகாந்த ஆமணக்கு, மலையாமணக்கு, கடலாமணக்கு, காட்டாமணக்கு, ஏரிக்கரை காட்டாமணக்கு, எலியாமணக்கு, புல்லாமணக்கு. பறங்கியாமணக்கு, மணியாமணக்கு, பேராமணக்கு, படுக்கையாமணக்கு, அறுபதாங்கொட்டை, சிற்றுமணக்கு.

சிற்றுமணக்கெண்ணெய் நல்ல பேதி மருந்தென்று சுதேச வைத்தியர் சரியாய் மதிக்கிறார்கள். முக்கியமாய் நீர்க்கட்டு மலக் கட்டுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். பிறந்த குழந்தைகட்கு கொஞ்ச அளவாய்ச் சில வாரங்கள் வரைக்கும் நித்தியம் கொடுத்து வருகிறார்கள். தோலுக்கடுத்த நோய்களுக்கு மேல் பூச்சாகப் பூசுகிறார்கள்.

இந்தச் செடியின் வேர்பட்டை பலமான பேதி மருந்தாயிருக்கிறது. இதை மிளகாய் புகையிலை இவைகளோடு சேர்த்தரைத்து ஒரு எலுமிச்சங்காய்ப் பிரமாணம் குதிரைக்குக் கொடுத்தால் அதற்குண்டா யிருக்கும் வயிற்றுவலியைத் தீர்க்கும் உசிதமான மருந்தா யிருக்கின்றது.

சிற்றுமணக்கெண்ணெய் செய்கிற முறை: அரைசேர் கொட்டை எடுத்து ஒரு இராத்திரி முழுமையும் தண்ணீரில் ஊறப்போட்டு மறுநாள் காலையில் நீரை வடித்துவிட்டு மறுபடியும் புதுச்சலம் விட்டு அடுப்பேற்றி இரண்டு மணி நேரம் வேக வைத்து பின்பு முன்போலவே சலத்தை வடித்து விட்டுக் கொட்டைகளை யெடுத்து ஒரு பாயிற் போட்டு மூன்று நாள் வெயிலில் காயவைத்து கடைசியில் அவைகளை உரலிலிடித்து அதற்குப் பத்தத் தணையான சலம்விட்டு அடும்பேற்றி கொதிக்க வைத்து

விடாமல் கலக்கிக் கொண்டிருந்து எண்ணெய் மேலே தேறினபோது சாக்கிரதையாய் வடித்து ஆறியபின் புட்டியிலடைக்கவேண்டும். கொதிக்க வைக்கிற சலத்தோடு இளநீர் சலம் சேர்ந்தால் எண்ணெய் வெண்மையாயிருக்கும்.

வேறொரு முறை

முதல் இங்கிலாந்து தேசத்தில் பயிரிடப்பட்டது இப்போது லண்டன் பட்டணத்திற்கடுத்த அநேக தோட்டங்களில் பயிரிடப்படுகிறது, இதன் விதைகளிலிருந்து எடுக்கப்பட்ட எண்ணெய் காஸ்டர் ஆயிலென்றுசொல்லப்படுகின்றது. இந்த எண்ணெய் அமெரிக்கா தேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. அவ்விடத்திலிது செய்கிற விதமாவது.

எண்ணெய் வகை: விளக்கெண்ணெய், நல்லெண்ணெய், இலுப்பெண்ணெய், கடுகெண்ணெய், தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய், வெள்ளரி விதையெண்ணெய், வாதுமையெண்ணெய், சிற்ருமணக்கெண்ணெய், கிராம்பெண்ணெய், பேய்க் கொமட்டி விதை யெண்ணெய், மீனெண்ணெய், குருக்கத்தி விதையெண்ணெய், கயாபுதியெண்ணெய் சிறுகனலெண்ணெய், சாதியத்திரியெண்ணெய், சாதிக்கா யெண்ணெய், புன்னை யெண்ணெய், புனகெண்ணெய், நேர்வாள யெண்ணெய், சிலாயெண்ணெய், குசும்பாப்பூ யெண்ணெய், மரயெண்ணெய், மண்ணெண்ணெய், பிரமதண்டுவிதையெண்ணெய், காட்டுக்குருந்து யெண்ணெய், கற்பூரத் தயிலம், செந்துருக்கம்விதை யெண்ணெய்.

ஏ

ஏகம்-திப்பிலி

ஏக்வாசம்-ஆல்

ஏகாரவல்லி-பலா, பாகல்

ஏகாலி-சவுக்காரம

ஏகம்-வெண்கலம்

ஏசிவாடகம்- அதிமதுரம்

ஏமாத்தி-பொற்றெட்டிப் பாஷாணம்

ஏமமணல்-பொன்மணல்

ஏமம்-மயக்கம், பயித்தியம், விபூதி

ஏமபத்திரம்-மலையத்தி

ஏமபுட்பம்-பொன்முல்லை

ஏமபேதி-கற்கடக பாஷாண
ஏமல்-முகிரை [ம்
ஏமவதி-கடுக்காய்
ஏமாப்தரம்-அப்பிரகம்
ஏரண்டம்-ஆமணக்கு
ஏர்த்தை-பிடாரிக்காம்பு
ஏலம்-ஏலமரம், இசங்கு, சடாமாஞ்சில், முத்திரை.

ஏலரிசி-மலையாளக் கரைத் துறைத் தேசத்திலிருந்து அதிகமாய் வருகிறது. சூடுள்ள சுகந்த மனரம்மித வஸ்துவாயிருக்கிறது.

ஏலா-ஏலம், பேரேலம்
ஏலி-கள்
ஏது-சங்கஞ்செடி
ஏவாங்கம், ஏவாவகனம்-அசமதாகம்
ஏனகோடு- வெதுப்படக்கி, பன்றிக்கொம்பு.
ஏனம்-தினை
ஏரிநீர்-துவர்ப்பு, வாதம், விரணமும் உண்டாம்
ஏரிமீன்- மேகம் உண்டாம்.

ஏலம்-அதிசாரம், அண்டவாதம், ஈளை, வழலை கட்டி, காசம், கிரிச்சரம், சிலந்தி, சுரம், சோபம், பிணி, பித்தம், வாந்தி, விஷம், தாகம, விந்துநட்டம், வெக்கை போம்.

ஐ

ஐசிலம்-சிறுநாகம
ஐங்கூட்டு நெய்-ஐந்துவித எண்ணை
ஐயம்-ஜன்னிசுரம், பின்னிசிவு, வாய்வும் போம்.

ஐவிரலி-கரப்பான், வீக்கமும் போம். காமம, கொர்ப்பம், பலம், விந்துகட்டு முண்டாம்.

ஐவிரலிவிரை-இலிங்கங் கட்டும்
ஐந்தார்-பனை
ஐந்துப்பு-பஞ்சலவணம்

அவையாவன : கறியுப்பு, கல்லுப்பு, வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு
ஐபஞ்சு- நிலப்பனங்கிழங்கு
ஐயம்-சிலேத்துமம்
ஐயவி-கடுகு
ஐயிதழ்-துத்தி
ஐவணி-மருதோன்றி
ஐவிரல்-ஐவேலி
ஐவேலி-ஐவிரற்கோவை

ஒ

ஒடி கிழங்கு-கரப்பான், நமைச் சொரியுமுண்டாம்.

ஒட்டறை- அசீரம், அற்புதப்புண், இரத்தமூலம், கண்நோய், குட்டம, குன்மம் சிறுபாடு, நஞ்சு, சீதசுரம் பேதியும் போம.

ஒட்டுக்காந்தம- இருமல், ஈளை, கிரந்தி, சுவாசகாசம், சூலை, மந்தாரகாசம், மூலரோகம், வரட்சி காசமும் போம்.

ஒட்டைத்தயிர்-தாகம் கிருமியும் போம். சிறுகரப்பான், தீபனம தேகபுஷ்டி முண்டாம.

ஒட்டைநெய்-மாந்தம், விந்து முண்டாம.

ஒட்டைப்பால்- கரப்பான், காசம், காதிரைச்சல், சுவாசம், புத்திமந்தமும், மந்தம், வாதசூலையு முண்டாம்.

ஒட்டைமரம்- அதிசாரம், கடுப்பு, முருக்குவலி, மூலக்கிராணியும் போம.

ஒட்டைமூத்திரம் - உதாவர்த்தம், குஷ்டம், குன்மம், ஐந்நி சூலையும் போம்; அனலுண்டாம். [போம்

ஒட்டைமோர்-அனல்வாதம்

ஒட்டை வெண்ணெய் நீரிழிவும் பித்தமும் போம்; மந்தம் வாதமு முண்டாம்.

ஒதிமரவேர் - அதிசாரம், இரத்தப்போக்கு, கடுப்பு, கிராணி, சீதளம், சோபம், தாகம், புரை, புண்ணும் போம்.

ஒயில்லண்டி - சரீர நோய் பித்தம் வாதமும் போம்.

ஒக்கலை-அம்பர்

ஒக்கம்-அசமதாகம்

ஒசிதம்-கற்ருழை

ஒஞ்சி-ஸ்தனம்

ஒடுவங்காய்-ஓர் மரக்காய்

இது சிறிய கொட்டையாயிருக்கின்றது. இது பலமான நஞ்சுள்ள மருந்துகளிலொன்ருயிருக்கிறதென்று வைத்தியர் யோசிக்கிருர்கள். ஒரு வராகனெடைப் பொடி ஒரு மனிதனைக் கொல்லுமென்றும ஆலோசிக்கிருர்கள். இந்தச் செடியின் இலைகளும் வேரும் நஞ்சாகவே யிருக்கின்றது. இதன் இலைகளை எந்தப் பிராணிகளுந் தொடுகிறதில்லை. இதனிலைகளைக் கடுக்காயுடன் சேர்த்துக் கெட்ட புண்களுக்கிட நல்ல பரிகரிப்பா யிருக்கின்றது.

ஒட்டத்தி-ஒத்துத்தி

ஒட்டு-புல்லூரி

ஒட்டுச்செடி-ஒட்டொட்டி

ஒட்டுப்புல்-ஓர் புல்

ஒதியமரம்-உதியமரம்

ஒதியம்பட்டை-ஓர் மரப்பட்டை

ஒதியம்பட்டை ஆர்க்கப்பொடி செய்து வேப்பெண்ணெயிற் கலந்து புண்களுக்குப் பூசப்படுகிறது. இதைப் பழைய புண்களுக்கு நல்ல மருந்தென்று வைத்தியர் மிகவும் மதிக்கிருர்கள்.

ஒதியம்-ஒதி

ஒமை-மாமரம்

ஒய்யெனல்-மந்தக்குறிப்பு

ஒலி-கொடுவேலி

ஒட்டைநீர்-அதிசாரம்உஷ்ணம் வெட்டையும் போம். கபம், தோல்பலம், மிடருகம்மல், வாதமும் உண்டாம்.

ஓ

ஓஞெய்-பிறவலிநோய் போம்.

ஓமம்-மோகம், அதிசாரபேதி, ஆமம், இரைச்சல், இருமல், கடுப்பு, காசம், சீதம், சுரம்,செரியாமாந்தம், பக்கநோய், பொருமல், மூலமூலமும் போம்.

ஓரிதழ்தாமரை-சீதம்,மேகமும் போம். தாதுவும் மேனியழகு முண்டாம்.

ஓரிலைத்தாமரை - அழல் அஸ்திமேகம், கிரிச்சரமும் போம். மோரில் அரைத்துக் குடித்தால் ஸ்திரீகளுக்குப் பாலுண்டாம். [டாம்

ஓலைப்பாய்-உஷ்ணசீதமுண்

ஓலைவாளைக்கருவாடு - பித்தம் வாதமும் போம். பசி தீபன முண்டாம்.

ஓலைவாளைமீன் - பலவித நோய்களுண்டாம்.

ஓலைவிசிறி-தாகம், மூர்ச்சை போம், பித்தமுண்டாம்
ஓங்கல்-மூங்கில், மலை
ஓங்கலுறவன் - காந்தபாஷாணம்
ஓசை-வாழை
ஓடதி-ஒருக்காற் காய்த்துப் படுஞ் செடி
ஓடம்-செங்கருங்காலி
ஓடன்-ஆகை
ஓடிய ஓடம் - கிளிஞ்சில்
ஓடை-கிலுகிலுப்பை
ஓதம்-அண்டவாதம்
ஓதிமம்-புளியமரம்
ஓத்தி-ஓந்தி
ஓந்தி-ஓணான்
ஓணான்-அசமதாகம்
ஓமான்-ஓணான்
ஓமை-மாமரம்
ஓரம்-சத்திச்சாரம்
ஓரிதழ்த்தாமரை, ஓரிலைத்தாமரை-ஓர் மருந்துப் பூண்டு இந்தச் சிறிய பூண்டின் இலையுந்தண்டும் பலத்தை இளக்குகின்ற குணமுடையனவாக இருக்கின்றன. இதுகள் கஷாயத்திலும் இலேகியத்திலு முபயோகப்படுகின்றன. குளிர்ச்சி யுண்டாக்கப் பேடும் பற்றுகளில் இவை நல்லெண்ணெயோடு சேர்த்துப் போடப்படுகின்றன.
ஓர்பலம்-கோங்கு

ஔ

ஔஷதம் - மருந்து, லங்கணம் பரமாவுடதம்.

க

கக்கரிக்காய்-இரத்த பித்தம் பித்த மூலச்சூடு போம்.
கங்கை நதிநீர்-சயம், காந்தல், மந்தம், மேகம், வாயு, வெப்பம் போம்.
கசகசா அதிசாரம், கிராணி, கிருமி, சிரநீர், நமைச்சல் போம். அழகு, காந்தி, நித்திரை, விந்துமுண்டாம்.
கச்சக்கருவாடு-சீதம், சுரம்; தினவு, வாதமும் போம். பித்தம், பசியுமுண்டாம்.
கஞ்சாங்கோரை - இருமல், மாந்தக் கழிச்சல், ஈளை, கணம், மாந்தசுரம், குளிர், மூலத்தனவு, மேகமும் போம்.
கஞ்சா-ஐயம், கரப்பான், பேதி, மூலகிராணி, வாதமும் போம் பசியுமுண்டாம்.
கமதம்-கணத்தக்காளி
ககமாரம்-மணத்தக்காளி, சரகண்ட பாஷாணம்.
கஃசு-காற்பலம்
ககவசுகம்-ஆல்
ககனம்-ஓர் கிழங்கு
ககுபம்-மருது மருதபரம்
கக்கரி-ஓர் காய்
கக்கரிகம்-சுக்கரி
கக்குவான்-ஓர் நோய்
கங்கம்-கோளக பாஷாணம்
கங்கன் - பிறவிச்சீர்பந்த பாஷாணம்
கங்காளன்-துருசு
கங்கு-கருந்தினை
கங்கை, கங்கைக்குணன் - நவாச்சாரம்.
கங்கையோன்-துருசு
கசகசா-ஓர் பூண்டு
கசகம்-வெள்ளரி
கசகரீகம்-வெள்ளரி
கச-கன்னிவெருகு
கசக்கார்-தேமா

சங்கு-ஈந்து
கசமாட-ஊமத்தை
கசம்-தாமரை
கவசம்-கடுகு
கசற்பம்-மஞ்சள்
கசேருகம்-தமரத்தை
கச்சகர்-கொள்ளு
கசங்கம்-பீநாறி
கச்சதுஷன்-தவளை
கச்சபம்-ஆமை
கச்சம்-மீன், காய்ச்சற் பாஷாணம்.
கச்சம்-வாழைக்கச்சல்
கச்சன்-ஆமை
கச்சாலம்-காய்ச்சற் பாஷா
கச்சி-சின்னி, சீந்தில் [ணம்
கச்சூரம்-கழச்சி,சிறுகுறட்டை, கழற்சிக்கொடி, பேரீந்து. [டம்
கச்சோணி-வாசனைப் பண்
கச்சோளம்-மாஞ்சில், ஏலத்தோல்
கஷாயம் - குடிநீர், பஞ்சமூல கஷாயம்.

அதாவது: சுக்கு, தும்பராஷ்டிரம், செவ்வியம், சித்திரமூலம், கண்டுபரங்கி முதலியன.

கஸ்தூரி, கத்தூரி - ஓர் மருந்து

அதன் வகை: காட்டுக் கஸ்தூரி, பொட்டகத்துக் கஸ்தூரி, போசன கஸ்தூரி, நாரத்தைக்கஞ்சம்.

கஞ்சா-தாவரை, துளசி. வெண்கலம்,கற்கடக பாஷாணம்.
கஞ்சா-ஓர் செடி

அதன் வகை: பூக்கஞ்சா, கடைக்கஞ்சா.

கஞ்சாங்கோரை-ஓர் மருந்துப்பூடு

இதன் வகை: காட்டுக் கஞ்சாங்கோரை, கறுங்கஞ்சாங்கோரை.

கஞ்சாங்கோரை என்கிற பூண்டின் இலை ருசியும் மணமுமுடையதா யிருக்கின்றது. அதன் சாறு குழந்தைகளின் தடிமல் சலதோஷம் இவைகட்கு விதிக்கப்படுகிறது. தேயிலை கிடையாவிடில் அதற்குப் பதில் இதைச் சில ஐரோப்பியர்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.

கஞ்சும்-சிலந்தி, முருங்கை
சப்பம்-சடப்பமரம், வாலுளுவை
கடம்பல்-குமிழ்
கடம்பு-கடம்பு

அதன் வகை: நீர்க்கடம்பு, வெண்கடம்பு, நிலக்கடம்பு, கருங்குருவை, செங்கடம்பு, இது கொளம்பு தேசத்திலிருந்து வருகிறது. நாற்காலி, பேழை முதலாகியவைசெய்கிறதற்கு மிகவும் நேர்த்தியானது.

கடலஞ்சிதம்-தருப்பைப்புல்
கடலடக்கி - பேய் முசுண்
கடலாடி-நாய்க்குருமி,[டை நாயுருவி.
கடலாமணக்கு-காட்டாமணக்கு, கடலெள்ளு
கடல்தேங்காய்-ஓர் வகைப் பெருந்தேங்காய்

கடல்தேங்காய் மால்தீவிலிருந்தும்,செக்கஸ் தீவிலிருந்தும் இந்தியாவுக்குச் சாதாரணமாய்க் கொண்டு வரப்படுகின்றது, அது ஒருபக்கம் புறவளைவுள்ளது. அல்லது புறங் கவிந்ததாகவும மற்ற

பக்கம் தட்டையாகவு மிருக்கிறது. அதனிரண்டு முடியும் நீண்டுமிருக்கின்றன. ஓடு கறுப்பு நிறமாயிருக்கின்றது தேங்காயைப்போலே உள்ளே பருப்பு மிருக்கின்றது.

இதை மூலப்பாலில் சேர்த்து அத்திசுரம், கிருஷ்ண சுரம், எலும்புருக்கி சுரம், கிரந்திநோய், இலிங்கப்புற்று, சொரிகரப்பான் இவைகளுக்குக் கொடுக்கிறார்கள்.

கடல்நுரை-இதை வெள்ளியையும் மற்ற லோகங்களையும் சுத்தமாக்கி மெருகு செய்ய இந்தியா ஜனங்கள் உபயோகப்படுத்துகிறார்கள்.

கடல்விராஞ்சி-ஓர் செடி

கடவு-தனக்கு

கடவுள்தாரம்- தேவதாரமென்னும் ஓர் மரம்

கடவை-தனக்கு, கடவு

கடற்குருமி-கல்லுப்பு

கடற்கொஞ்சி- கொஞ்சியை பார்க்க

கடற்கொடி-தும்பை

கடற்கொழுப்பை- எழுத்தாணிப்பூண்டு

கடற்பட்சி-கிளிஞ்சில்

கடற்பன்றி-ஓர் மீன்

கடற்பாசி-ஓர் பாசி அல்லது காளான்

கடற்பாம்பு-ஓர் பாம்பு

கடற்றீ-கடல்நுரை

கடற்பாலை-சமுத்திரசோகி

கற்றாழை-கொந்தாழை

கடாரை, கடாநாரத்தை,

கடாரைபழம்-ஓர் நாரத்தை

கடிகண்டு-பூனைக்காலி

கடிகை-அரையாப்பு

கடிச்சைவாய்- துடைச்சான், காஞ்சொறி.

கடிச்சகாச்செடி- காஞ்சொறிச்செடி

கடிதம்-பிசன்

கடிப்பகை-கடுகு, வேம்பு

கடிப்பை-சிறு கடுகு

கடியது-சிற்றரத்தை

கடியிரத்தம்-மூக்கிரட்டை

கடிரோமம்- கோரைக்கிழங்கு

கடிலா-மூக்கிரட்டை

கடு-கடுக்காய், முள்ளி, கடு மரம், கசப்பு, துவர்த்தல், நஞ்சுமுள், முதலை

கடுகம்-கடுகுரோகணி, திரிகடுகு, திப்பிலி, சுக்கு, மிளகு, கார்ப்பு, கடுகியகாந்தி, இரசத பாஷாணம்

கடுகு-கடுகு, குன்றி, எண்ணெய், கடுகு

கடுகு-ஓர் பூண்டு

சிறுகடுகு-நாய்கடுகு, மலைக்கடுகு, வெண்கடுகு

கடுகை சுதேச வைத்தியர் இருதயத்துக்குப் பலமுண்டாக்குகிற கார்ப்புள்ள உறைப்பான மருந்தாக யோசிக்கிறார்கள். சந்துவாதம், கீழ்வாதம், அசதிவாதம் அல்லது பாரிசவாயு இவைகட்கு உள்ளுக்குக் கொடுக்கப்பட்டுவருகின்றது. கடுகுபோல்டீசு சன்னிக்கும், அகோர தலைநோய்க்கும் உள்ளங் கால்களிலும், கால்களின் கெண்டைசதையிலும் வைத்துக் கட்டப்படுகிறது. வாந்தி, பேதி, குன்மம்,வாயு குடல் வலிகளுக்கும், சுரமில்லாதிருக்கில் வயிற்றின் பேரிலும், திமிர் வாதமாகில் முதுகெலும்பின் மேலும் வைத்துக் கட்டப்

படுகிறது. காலம் பதினைந்து நிமிஷமேயாம். அதனோடு கொஞ்சம் முருங்கைப்பட்டை சேர்த்தால் அதிக கார மூண்டாம்.
கடுகெண்ணெய்- ஓரெண்ணெய்
கடுகுரோகணி- ஓர் மருந்து
கடுகுரோகணியெனு மருந்தை குதிரை வைத்தியர் குதிரைகளுக்குப் பேதி மருந்தாக வழங்குகிறார்கள், அநேகளும், தமிழ் வைத்தியரும் இதை ஞானவைத்திய , வெறிப்பைபத்தியம் இந்த வியாதியுண்டான பேர்கட்கு காரப்புள்ள பித்தத்தை அகற்றும் பேதிமருந்தாகவும் உபயோகப்படுத்துகிறார்கள். கடையிலிருக்கிற வேர் சிரியாவிலிருந்தும், அராபி தேசத்திலிருந்து செங்கடல் மார்க்கமாய் இந்தியாவுக்குக் கொண்டு வரப்படுகின்றது. அரபிக்காரரும் பாரிசுக்காரரும் இதை வாந்தி மருந்தாக யோசிக்கிறார்கள்.
கடுக்காய்கடு- கடுக்காய்ப்பூ
கடுக்காய் தானிக்காயை விடத் துவர்ப்புடையது. இதனோடு சரியாய் மாசிக்காய்க் கட்டைக்காயும் நன்றாயிழைத்துக் கரப்பான் முதலாகிய புண்களுக்கு வைத்தியர் போடுகிறார்கள்.
கடுப்பு-கடுக்காய்வேர்
கடிக்காய்தலைவன்-ஓர் பாம்பு
சிறுகடுக்காய்-வரிகடுக்காய்
கடுக்கை-கொன்றை, மருது
கடுங்கார-நீர்முட்டை [ணம்
கடுங்கூர்மை-கடுத்திலாவணம்
கந்தகவுப்பு, சிந்துலவணம், இலவணம், கடுங்கூர்மை லவணம்,அமரியுப்பு
கடுசரம்-கடுகுரோகிணி
கடுசாரம்-காசிச்சாரம்
கடுசித்தாழை-பரங்கித்தாழை
கடுஞ்சாரி-நவாக்ஷாரம் [ழை
கடுந்தணற்பூமி உழமண்
கடுடம்-மருக்காரை
கடுதீத்தா-வெண்கடுகு
கடுநிம்பம்-நிலவேம்பு
கடுநதி-நாயுருவி
கடுப்பு-கடுநோய், குற்று நீர்க்கடுப்பு, மூலக் கடுப்பு, வயிற்றுக்கடுப்பு, வாதக் கடுப்பு.
கல்லுப்பு - ஏழங்காய்ச்சலுப்பு
கருநாபி-கல்லுப்பு [பு
கருவுப்பு-கல்லுப்பு
கலவமால்-மூடிமாமிசம்
கவசப்பூடு-அங்கம்பிச்சு
கண்ணுடி-நகம்
கவடிதகாரம்-படிகாரம்
கணிமாசம்-இந்துப்பு
கரியுப்பு-பிர்மவுப்பு
கணியுப்பு-கரியுப்பு
கருவியுப்பு-பூரணுதியுப்பு
கருவாதியுப்பு-பூரணுதியுப்பு
கதம்பையுப்பு-சத்தியுப்பு
கத்தபம்-கழுதை
கனகம்-பொன்
கன்னியன்னம்-கற்றாழஞ்சோறு
கல்வி-ஆமை [சோறு
கமடத்தோடு-ஆமையோடு
கட்டத்தி-வீழி
கந்தம்-வெண்காயம்
கமலம் பிரமை- சொலிக்கும் ஸ்நானம்
கரியமணி-கருஞ்சீரகம்
கண்டம்-கண்டங்கத்திரி
கள்ளி-கொடிக்கள்ளி

கமடம்-ஆமை
கஸ்தூரிநிசி-கஸ்தூரிமஞ்சள்
கருவாப்பட்டை- இலவங்கப்
கழலை-கழலைக்கட்டி [பட்டை
கம்பந்திராய்-திராயத்தி
கடம்-சரீரம்
கர்ப்பூரம்- பச்சைக்கற்பூரம்
கண்டம்-துண்டம், அண்டம்
கண்டு-கரும்பின் கட்டி
கரபாதம்-கையுங்காலும்
கண்டம்-கழுத்து
கருந்துழாய்-கருந்துளசி
கமலவன்-பிரமதேவன்
கருவாளி-இரசம்
கழிவிந்து-விந்து
கனனம்-தங்கம்
கருங்குன்றி-கருப்புக் குண்டு மணி
கதிரவனுன்-ஆதிவாரம்
கற்பகாலம்-கோடியுகம்
கரிமேதை-கருப்பெருமை
கடிகை-நாழிகை
கரிசாலை-கரிசலாங்கண்ணி
கரந்தை-சிவகரந்தை
கருவாப்பட்டை- சன்ன லவங்கப்பட்டை
கருந்தேசி-கருங்கழுதை
கண்விழுந்தானைசட்டி -கண் விட்ட சட்டி
கந்தை-கொட்டைக்கரந்தை
கருப்புக்கட்டி- பனைவெல்லம், கற்கண்டு
களிம்பு-பிளாஸ்திரி
கத்தபம்-கழுதை
கற்சிலை-உருப்பட்ட கல்
கரும்பான்சார்-கையாந்தகரை [ல்
கருததோல்- ஆண்மான்தோ
கணசிரட்டை- கண்கொட்டாங்கச்சி
கருங்குருவை-கருப்பரிசி

கதலி-வாழைப்பழம்
கர்க்கடசிங்கி-கடுக்காய்பூ
கருவாப்பட்டை- லவங்கப் பட்டை
களை-அழகு
கடுப்பு-ஊமத்தை
கடுப்பை-வெண்கடுகு
கடுப்படக்கி - வெதுப்படக்கி, எருமுட்டைப் பீநாரி.
கடுமரம-காஞ்சிரை
கடுமலை-காரீயம்
கடுமுன்-கண்டங்கத்திரி
கடும்பச்சை-நாகப்பச்சை
கடும்பத்தியம்- கண்டிப்பான பத்தியம்
கடும்பலம்- இஞ்சி,கருணைக் கிழங்கு
கடும்பை-வெண்கடுகு
கடுவங்கம்-இஞ்சி
கடுவன்-மாவிலங்கு
கடுவிதித்தம் - கடுகுரோகணி
கடேரிடம்-மரமஞ்சள்
கடைச்சி-ரெட்டி
கடைசித் தாழை-பரங்கித் தாழை.
கட்டாஞ்சி-ஓர் மரம்
கட்கம்-சங்கபாஷாணம்
கட்செவி-பாம்பு
கட்டாரி எழுத்தாணிப் பூண்
கடுக்கொடு-ஓர் பூண்டு [டு
கட்ட-ஓர் புள்
கருப்புக்கட்டி-சருக்கரை
கட்டை-விறகு,பிரேதம்
கட்பலம்-தான்றி
கணக்காய்ச்சல்-ஓர் நோய்
கணப்பூண்டு-ஓர் மருந்துப் பூண்டு.
கணமூலம்- அதன்மூலம்
கண்மூலம்-சுக்கி,திப்பிலி
கணம்-திப்பிலி, ஓர் நோய்
கணவம்-அரசமரம

கணவீரம்-அலரி
கணி-வேங்கைமரம்
கணிகை-முல்லை
கணை-கரும்பு
கண்-மூங்கில்
கண்டகம்-நீர்முள்ளி
கண்டகசங்கம்-ஓர் செடி
கண்டங்காலி- கண்டங்கத்தி [ரி
கண்டதிப்பிலி-வங்காள திப்பிலி.
கண்டம்-கள்ளி, துன்றி, வேர், சாதிலிங்கம், கண்ட சருக்கரை
கண்டலம்-முள்ளி
கண்டல்-கண்டல், தாழை, நீர்முள்ளி, முள்ளி
பேய்க்கண்டல்-ஓர் மரம்
கண்டர்-துரிசி
கண்டாவுடம்-கண்டூரம்
கண்டி-சிறுகீரை
கண்டூரவம்-சதுரக்கள்ளி
கண்டு-கண்டங்கத்திரி
கண்டுகம்-மஞ்சிட்டி
கண்டுபாரங்கி-சிறுதேக்கு
கண்டூதி-காய்ஞ் சொறி, தினவு.
கண்டூரம்-பூனைக்காலி, கண்டாவுடதம்
கண்ணு-திப்பிலி
கண்ணுட்டி-உருக்காட்டி
கண்ணுடி வேலை-மைசூர் தேசத்திலும், மத்தூர் சென்னைப்பட்டணம், முதுகொடை என்ற இடங்களிலும், தஞ்சைநகரம் தொண்டைமான் சீமையில் வல்லாத்தூரிலும், ஒருவிதத் தாழ்ந்த கண்ணுடி வேலைகள் செய்யப்படுகின்றன. சிறிய குப்பிகள், வளையல்கள், அதில் ஒரு பங்கு வெண்கல்லும், ஆறு பங்கு சுத்தப்படுத்திய உவர் மண் காரத்தை அதிகமாகக் கூட்டிக் கருங்கல் லென்கிற இரும்புக் களிம்புநீற்ற செம்பு சேர்க்கவேண்டும். மஞ்சள் நிறமாக வேண்டுமானுல் ஈயம், தகரம், துத்தநாகம் சேர்க்கப்படுகிறது
மைசூரில் செய்யப்படுகிற வளையல்களைப் பார்க்கிலும் தொண்டமான் தேசத்தில் செய்யப்படுகிற வளையல் மிகவும் சிறந்தது. உவர் மண்ணோடு கொழுந்து மணல் சேர்க்கப்படுகிறது.
இந்தப் பிரதேசத்தில் தங்கசாலையில் அஸ்ஸே மாஸ்டராயிருந்த ரைடர்துரை என்பவரால் சாராயப் புட்டிகள் செய்யப்பட்டன. சைதாபுரம் தியாகராய முதலியா ரென்பவரும் செய்வித்தார்.
கண்ணிக்கொடி-ஓர் பூண்டு
கண்ணிகம்-மணத்தக்காளி
கண்ணீர் நடுக்குறை- மூக்கிரட்டை
கண்ணுக்கரசன்-துருசி
கண்ணுக்கினியான்-கையாந்தகரை, பொன்னுங்காணி
கதம்பம்-கடம்பு, கடப்பம், வெண்கடம்பு
கசம்பாரி-தேற்று
கதம்பு-கடம்பு
கதலம்-வாழை
கதலி-தேற்றுமரம், வாழை
கதலிச்சி-கற்பூரம்
கதலிப்பூ- பச்சைக்கற்பூரம், வாழைப்பூ [கு
கதலிக்கிழங்கு-வாழைக்கிழங்
காட்டுக்கதலி- காட்டுவாழை
கதிக்கை-கருக்குவாளி

கத்தரிநாயகம்-ஆனைச்சீர
கத்தரி-ஓர் செடி [கம்
அதன் வகை: ஆகாசகத்திரி, கண்டங்கத்திரி, காரத்கத்திரி, கொத்துக்கத்திரி.
கத்திருயம் - ஆடுதின்னுப்பாளை
கத்திகை - கருக்குவாளி சிறுகொடி
கத்திநுணு-நிலவேம்பு
கத்துருபம் - குதிரைப்பற் பாஷாணம்
கத்தூரி-கஸ்தூரி
கந்தகம்-அவல் பாஷாணம்
அதன் வகை : கந்தகரசாயனம், கந்தகவுப்பு, கோழித்தலை, கந்தகம், சிவப்பான கந்தகம், சுரைக் கந்தகம் நெல்லிக்காய் கந்தகம், துல்லியமான கந்தகம், சற்று நீலநிறமான கந்தகம், பாண கந்தகம், பாண மருந்துக்காகும் கந்தகம்.

கடைகளி லிருக்குங் கந்தகம் சுத்தமற்றதாம். அதில் குறைந்த பங்கு பாஷாணஞ் சேர்ந்திருக்குமாதலால் அது உள்ளுக்குக் கொடுக்கத்தக்கதல்ல. சிரங்குக்கும் தோல் மேல் வரும் வியாதிகட்கும் மிகுதியா யுபயோகப்படுகின்றது. நாட்பட்ட கால் கை வாதங்களுக்குத் தேங்காய் எண்ணெய்யோடு சேர்த்து மேற்பூச்சுக்குதவுகின்றது.

கந்தகத்திராவகம் ஐரோப்பியர்களைப்போலவே சுதேச வைத்தியரும் கத்தகத் திராவக மிறக்குகிறார்கள்: கந்தகத்தைக் கொஞ்சம் பொட்டிலுப்புடன் சேர்த்துப் பலமான மண் பானையில் அடுப்பேற்றித் திராவகம் இறக்குகிறார்கள்.

இதில் நீர்விளாவிக் கண்டமாலைக்குரிய வியாதிகளுக்கு ஊறுகைக் கொடுக்கப்படுகின்றது. வயிற்றுக்கடுப்பு, மூலக்கடுப்பு, வயிற்றுளைவு இவைகட்கு இலவங்கக் கஷாயத்தோடு சேர்த்துக் கொடுக்கப்படுகின்றது.

சுதேச வைத்தியர் கந்தகத்தை கருஞ்சீரகத் தூளுடன் நல்லெண்ணையிலிழைத்துச் சிரங்குக்கு மேற்பூச்சாகப் பூசுகின்றார்கள் குஷ்டவியாதிக்கு கிரந்திக்கு சூலைக்குக் கொடுக்கப்படுகிறது.

கந்தகம் இந்தியா தேசத்தில் விஸ்தாரம் அகப்படுகிறதில்லை. இந்தியாவின் மேற்புறத்தில் உதயபூர் ஜில்லாவில் அகப்படும். ஆனாலது கச்சுபாரி தேசத்திலிருந்து வருகின்ற சரக்கு மட்டமாயிருக்கும், திருவாங்கூரிலும் கனராவிலும் அகப்படுமென்று கேள்வி. கந்தகம் இந்தியாவுக்கு மஸ்காத்திலிருந்தும் சுமுத்திராவிலிருந்தும் பாந்தாதிலிருந்தும் விஸ்தாரங் கொணடுவரப்படுகிறது. பைகோ தேசத்தில் சாதாரணமாய் கிடைக்கும். பிலிபயின் தீவுகளிலுமுண்டு.
கந்தகட்பலம்-தான்றி
கந்தாட்கம்-தமரத்தை
கந்தசுக்கிலம் - அதிவிடயம்
கந்தநாகுலி-செவியம், மிளகு
கந்தநாலியம் - அரத்தை
கந்தபூசியம்-நாய்வேளை

கந்தகம்-கருணைக்கிழங்கு, கழுத்தடி
கந்தகபாஷாணம்- வசம்பு
திரிகந்தமாவது : கிராம்பு, நாவற்பூ, சண்பகப்பூ, சந்தனம், செஞ் சந்தனம், அகில்.
கந்தரகாட்டம் - வெள்ளைப் பாஷாணம்
கந்தரசு-சாம்பிராணி
கந்தரம்-புனல்முருங்கை, கற்கடக பாஷாணம், தீமுறுகற் பாஷாணம்
கந்தருவா-ஆமணக்கு
கந்தன்-சூதபாஷாணம்,சீர்ப் பந்த பாஷாணம்
கந்தாரி-நெல்லி
கந்தி-கமுகு, கந்தகம், கந்தக பாஷாணம்
கந்திருவாருணி - பேய்த்தும்மட்டி
கந்துகன்-தான்றி
கந்தேறு-கோடகசாலை
கந்தை-கரணை
கந்தோதம்-தாமரை
கபம்பம்-வாலுளுவை
கபநாசம்-கண்டங்கத்திரி
கபாடக்கட்டி-வசம்பு
கபாலம்- மண்டையோடு, கபாலக் கரப்பான்
கபாலசாந்தி-ஆவிரை
கபாலன்-சீர்ப்பந்த பாஷாணம்
கபிதம்-கருஞ்சீரகம்
கபித்தம்-விளாமரம்
கபீதனம்-வாகை
கசோதம்-புருமுட்டி
கமரதம-மணத்தக்காளி
கமலம்-தாமரை
கமலி-குங்கும பாஷாணம்
கமல்-குடசப்பாலை, வெட்பாலை
கமி-மிளகு

கமுகு-பாக்குமரம், கூந்தற் கமுகு
கம்பம் - தாலம்பப் பாஷாணம், வெள்ளைப்பாஷாணம், காலாங்க பாஷாணம், கற்பரி பாஷாணம்.
கம்பளி, கம்பிளி-கம்பளிப் பழம்
கம்பளிகொண்டான் - முசுக்குட்டை
கம்பளிப்பூச்சி-முசுக்குட்டை
கம்பி-வெடியுப்பு, கம்பியுப்பு
கம்பீர்-ஓர் சரக்கு
இது மலாய் தேசத்திலிருந்து அரிதாய்க் கொண்டு வரப்படுகிறது. இது கத்தைக்காம் பொப்பந்தமாய் வெற்றிலையோடு பாக்குப் போல் போட்டு மெல்லப்படுகின்றது. இதுஒரு பூண்டின் இலையிலிருந்து சுத்தப்படுகின்றது. இதுமிகவும் துவர்ப்புள்ளது.
கம்பு-ஓர் தானியம்
செந்தினை, கம்பங்கோரை, கம்பம்புல், கம்பந்தாளி, கம்பந்திராய்
இந்தத் தானியம் சோளத்தைவிடக் குறைந்த சூடுள்ளதாய் எண்ணப்படுகிறது. ஆபிரிகா தேசத்தின் சில பாகத்தில் இதைப் புழுங்க வைத்துப் பீர்,சாராயஞ்செய்யப்படுகிறது.சீமையில் வாற்கோதுமையால் செய்யப்படுகிறது.
கம்மை-சிறுகீரை
கயபேரிகம்-அகில்
கபத்தம்-துளசி
கயிமவாதி-வசம்பு
கயிரவம்-வெள்ளாம்பல்

கரகம்-தாதுமாதுளை
கரசம்-புலிதொடக்கி
கரஞ்சகம்-புன்கு
கரணைப்பலா-வெருகு
கரதாளம்-பனை
கரந்தை-ஓர் பூண்டு.

இதன் வகை: குத்துக்கரந்தை, கொட்டைக் கரந்தை, சிறுகொட்டைக் கரந்தை, சிவகரந்தை, சுணைக்கரந்தை, சுரைக்கரந்தை, சூரியக்கரந்தை, நறுங்கரந்தை, விட்டுணுகரந்தை.

கரப்பான்- ஓர் புண்

இதன் வகை: அக்கினிக் கரப்பான், உமிக்கரப்பான், ஊதுகரப்பான், கண்டகரப்பான், கொள்ளிகரப்பான், செங்கரப்பான், மண்டைக் கரப்பான், கபாலக்கரப்பான், மண்டைக்கரப்பான் பூச்சி.

கரப்பான்பூண்டு-ஓர் பூண்டு
கரமஞ்சரி-நாயுருவி
கரம்-நஞ்சு
கரம்பை-சிறுகளா
கரவீரம்-அலரி
கரளம்-நஞ்சு-எட்டிமரம்
கராடம்-மருக்காரை
கராமம்-வெண் கடம்பு
கரி-கட்டைக்கரி

இதனோடு அரிசிமாவுஞ் சேர்த்துப் பேஸ்டுசாக வைத்துக் கட்டினால் அதிக நாற்றமுள்ள காயப் புண்களுக்கு மிகவும் உபயோகமாயிருக்கும்.

கரிகன்னி-வெருகு
கரிக்கண்டு கையாந்தகரை-கரிசலாங்கண்ணி.
கரிக்கை-கையாந்தகரை
கரிக்கோலம்-அழிஞ்சில்

கடப்பம்வித்து- கடிவிஷம் மண்டைநீர், மந்தம் வாதமும் போம்.

கடமானிறைச்சி- உடல் வலுத்துப் பருத்தலும், குடல் வாதமும் உண்டாம்.

கடலழிஞ்சில்-உந்தி விரணம், கபநீர், சீதம், சுரம், தொந்தநீர், பித்தநீர், பேதி, மேகம், வாதநீரும் போம்.

கடலிறஞ்சி-கறி கரப்பான் சிரங்கு, சொறி, நரை, பழை, மேகம், பலவித நோய்களும் போம்.

கடலை-கனல், குடல்வலி, தாகம், தியக்கம், மருந்து முறிவு, பலக்கொட்டல், வயிறூதல், வாய்வுமுண்டாம்.

கடல் நண்டு- உதிரக்கழிச்சல், கரப்பான், குன்மவலி. சொறி வாதமுமுண்டாம்.

கடார நாரத்தங்காய்- அரோசகம், பித்தம், வாய் நீரூறலும் போம். பத்தியத்திற்காம்.

கடுகு-ஈளை, கடுப்பு, கபம், காசம், கிராணி, குன்மம், சீதம், நரசிச்சூர், பித்தம் மந்தம், மயக்கம், மூடம், முத்தோஷம், விளைவுநோய், வாதம், வாய்வு நீரூறலும்போம். சுகப்பிரசவமுண்டாம்.

கடுகு நெய்வித்து எண்ணெய்-இரத்த பித்தம், கபம், குஷ்டம், மூட்டுச்சூலை மூலம், வயிற்று நோய், வாதம், விரணமும் போம்.

கடுகுரோகணி மலக்கோமா, ஆமம், ஐயம், கரப்பான், சுரம், திரிதோஷம், புண் மலக்கட்டு, மாந்தம், வயிற்று

நோய்,வாய்வும்போம். பேதி யுண்டாம்.

கடுகோதனம்-ஐயமும்,வாதமும் போம்.

கடுக்காய் - திரேகற்பம், அதிதூல நோய், ஆண்குறி நோய், ஆனைக்கால், இடிபட்டபுண்,கண்ணோய், நாக்குநோய், வாதசுரோணிதம், விஷநோவும் போம்.

கடுக்காய்ப்பிஞ்சு - ஆசனக்கடுப்பு, சீதக்கடுப்பு, மலச்சிக்கல் கடுப்பு, முக்கலும் போம்.

கட்டமுது- கெட்டவிரத்தம், மேகமும் போம்.

கண்டமாலை-சூலை, சுவாசகாசமும் உண்டாம்.

கனப்பூண்டிலை - கபசுரம், பித்தகணம், வாதகணமும் போம். மேகக்கட்டிக் கரைவுண்டாம்.

கண்டங்கத்திரி - அனல், ஜந்தி, க்ஷயம், சுரம், சுவாசகாசம், தோஷம், மந்தம், வாய்வும்போம்.

கண்டங்கத்திரி சமூலம் - உடற்கனப்பு, க்ஷயம், சுவாசம், நீர்ப்பீனசமும் போம்.

கண்டங்கத்திரிக்காய்- ஆமம், ஐயம், மலக்கட்டும் போம, தீபனமுண்டாம்

கண்டங்கத்திரிப்பழம்- க்ஷயம், காசம், சீதம், சுவாசம், சொறி, தினவு, பல்லரணையும் போம, தீபனமுண்டாம்.

கண்டில் வெண்ணெய் குங்கிலியவெண்ணை - இருமல், தொண்டை நீர்க்கட்டு, நீர்க்கடுப்பு, மூலத்துள் நீர் குத்தலும் போம். தேககாந்தி யுண்டாம்.

கண்டுபாரங்கி- அகநோய் அழலை உள்நீர், கடுப்பு, கபம், சீதசுரம்,சுரம், சுவாசகாசம், தொண்டைநோய், நீர்க்கோவை, பித்தம், பீனசம், வாதம், வெளிநீர், வெறியும் போம்.

கத்தரிக்காய்- கபம், பித்தமும் போம், கிரந்தி, சிரங்கு, தினவுமுண்டாம்.

கத்திரிப்பழம்-கபம், சுவாசம், வாதமும் போம். அழல், கரப்பான், கஷ்டம், தாதுநஷ்டம், பித்தம், பெருங்கிரந்தியுமுண்டாம். கத்தரிப் பிஞ்சு முத்தோஷமும்போம்.

கத்தூரி- கருவு, கபம், ஜன்னி, தலைவலி ருட்சையும் போம், காந்தி, சுகம், பலம், மாதர் நாதவிருத்தி, வசியமும் உண்டாம்.

கஸ்தூரிமஞ்சள்-கரப்பான் கிருமிபுண், மந்தாக்கினி போம். அறிவும், சுக்கில விருத்தியுமுண்டாம்.

கத்திரிக்காய் உதிர-வாய்வு, ஐயம், பித்தமும்போம். உரிசை யுண்டாம்.

கந்தியுப்பு - குடல்வாதம் போம். உடற்கரையும் உட்டினமு முண்டாம்.

கம்பஞ்சாதம் - உடற்பாரிப்பு, உதிரவற்றல், காசம், சிரங்கு, சுவாசம், நிறமாறலுமுண்டாம்.

கம்பரிசி-உடற் கொதிப்பு போம். சொறி, சிரங்கு, பலமும் உண்டாம்.

கம்பளம்- அசீரணம், கிராணி, சீழ்சூலை, பெரும்பாடு பேதியும் போம். குளிர் பனிகாலத்தில் சூடுண்டாம்.

கரியநிறமாதர் முலைப்பால்- முத்தோஷமும், கண் வியாதியும் போம்.

கரியபோளம் - கால்சூலை, பக்கநோய்,மார்புவலி, மேகக்கட்டி, வயிற்றுவலி, வாதபித்தம்,வீக்கமும் போம்.

கடுங்கடுக்காய்-கபம், பழைய மலம், வாதபித்தமும் போம்.

கரிசலாங்கண்ணி - கையாந்தகரை, கரிசனம், பொற்றலைக் கையாந்தகரை.

கரிச்சான் பூண்டு- கையாந்தகரை கரிசலாங்கண்ணி

கரிதிப்பிலி- ஆனைத்திப்பிலி.

கரிப்பான்-கையாந்தகரை, கரிசலாங்கண்ணி.

கரியபோளம்-ஓர் சரக்கு

இது சுதேச வைத்தியர்களால் சாதாரணமாய்ப் பேதி மருந்தாக வழங்கப்படுகிறது. கண்ணோவில் கண்ணைச் சுற்றிலும் பற்று போடப்படுகிறது. பிரசவமான பின்பு பெண்மக்களுக்கு வயிற்றில் யாதொரு பிணியுண்டாயிருக்கில் இதை நெருப்பில் வாட்டிக் கொடுக்கின்றார்கள். இது இந்த சுதேசத்திலும் செய்யப்படுகிறதுண்டு. ஆபிரிக்கா தேசத்தில் இருந்தும் வருகிறதுமுண்டு. பார்தோஸ், ஐமாயிரக் தேசத்திலிருந்து வருகிறதை விட ஆபிரிக்கா தேசத்திலிருந்து வருகிற சரக்கு மட்டமல்ல, இந்த சரக்கு மார் என்கிற செடியிலிருந்து உண்டாகின்றது. தமிழில் மலைக்கற்றாழை யென்றும், சமஸ்கிருதத்தில் சாருணி யென்றும் பெயர். இது அதுதப்பி சூதகம் வருகிற ஸ்திரீகளுக்கும் இந்த மருந்து நன்றாய் உபயோகப்படும். ஆனால், கர்ப்ப ஸ்தீரிகளுக்கும் சூதகம் நன்றாய்க் காணுகிற ஸ்திரீகளுக்கும் கொடுக்கக் கூடாது. இரத்தம் போக்குகின்ற தலைநோவுக்கு உபயோகப்படும்,

ஒளஷதத்துக்கு எடுக்கப்பட்ட கரியபோளம் புதிதாயும் சுத்தமாயும் காரமான வாசனையுள்ளதாயும் உடைத்தால் துப்புரவாயுமிருக்க வேண்டும்.

மேற்சொன்ன ஒளஷதம் கொடுக்கிறவிதம் எப்படி யெனில்: கரிபோளமும், மிளகு வற்றலும் வகைக்கு 20-கிறெயின், வெண்காரம் 30-கிறெயின் இவை மூன்றுந் தனித்தனியே நன்றாய்ப் பொடித்துக் கொஞ்சந் தேன் வார்த்து பக்குவமாய் அரைத்து ஒன்றாய் சேர்த்து 8-சம மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு ஒரு தரத்துக்கு இரண்டு மாத்திரை வீதம் காலையும் மத்தியானமும் சாயந்திரமும் கொடுக்க வேண்டும். இன்னும் ஒரு விதமெப்படி யென்றால் கரியபோளம், காயம வகைக்கு 30கிறெயின் இவ்விரண்டையுந் தேன்சேர்த்து நன்றாய் இடித்து2- மாத்திரைகளாக்கி

காலையுஞ் சாயந்திரமும் ஒரு மாத்திரை வீதம் கொடுக்க வேண்டும். இந்த மாத்திரைகள் சூதக வாய்வுள்ள ஸ்திரீகளுக்கும் உதிரம் நன்ருய்க்காணமல் மலம் மந்தப்பட்டு வருத்தப்படுகிற ஸ்திரீகளுக்கும் குணத்தைக் கொடுக்கிறதுமன்றி, மாதவிடாயும் நாள்பட்ட மூலவியாதியைச்சேர்ந்த இரத்தப் போக்கும் நின்ற ஏதுவாலுண்டாகிற தலைநோவுக்குங் கூட உபயோகமாயிருக்கும். கரியபோளம் என்கிற ஔஷதம் மூலவியாதியால் கஷ்டப்படுகிறவர்களுக்குக் கொடுத்தால் அவ்வியாதி அதிகப்படுவதற் கேதுவா யிருப்பதால் அவர்களுக்குக் கொடுக்கக் கூடாது.

கரியமால்-காய்ச்சற் பாஷாணம்

கரிசலாங்கண்ணி- கரிசலாங்கண்ணி

கரீரம்-அகத்தி, கருவேல்

கருங்கல்-ஓர் கல்

இந்தியாவில் இந்தக் கல் சாதாரண கல் மலைகளிலுண்டு அதில் எவ்வளவு மாவயிரக்கல் அப்பிரக முதலாகியவைகளின் சேர்மானப் பிரகாரம் வலுமையும் மதிப்புடையதா யிருக்கும். சில கருத்து மெருகுடையனவாகவு மிருக்கும். முக்கியமாய் இவைகளால் கோயில்கள் கட்டுவிக்கப்படுகின்றன. கருங்கல்லில் சலவைக் கல்லுமுண்டு.

கருங்காலி-கருங்காலி, எட்டி

கருங்காலி-கருங்குவளை

கருங்கதலை-நீலோற்பலம்

கருங்குசம்-வெண்கலம்

கருங்கோடி-ஓர் செடி

கருங்கோட்டி-கொட்டி

கருங்கோல்-இரும்பு

கருஞ்சனம்-முருங்கை

கருஞ்சிலை-கருங்கல்

கருஞ்சூரை-செங்கத்தாரி

கருடக்கொடி-குறிஞ்சா, பெருமருந்து.

கருடக்கொவ்வை - கருத்தொண்டை - காக்கணம் கொள்ளை.

கருணை- ஓர் கிழங்கு

கருகந்து-நத்தை

கருநெய்தல்-கருங்குவளை

கருந்தாது-இரும்பு

கருந்தோளி-அவுரி

கருமஞ்சரி-நாயுருவி

கருமணி-கண்மணி

கருமயிர்-கரடி

கருமுகில்-கார்முகில் பாஷாணம்

கருமுகை-இருவாட்சி, சண்பகம்

கரும்புரம்-பனை

கரும்பொன்-இரும்பு

கரும்பொன் செந்தூரம் - அயச்செந்தூரம்

கருவாப்பட்டை - லவங்கப்பட்டை

இது கொளம்புத் தேசத்திலிருந்து வருகிறது. திருநெல்வேலி ஜில்லாவிலிருந்தும் வருகின்றது. இது பசி தீபனமுண்டாக்குகிற சுகச்சூடுள்ள மருந்தாக இருக்கின்றன.

கருவிளம்-காக்கணம், வில்வம், ஓர் மரம்.

கருவிளா-வில்வம், ஓர் மரம்

கருவிளைக் காக்கணம்- ஓர் பூண்டு.

கருவேலமரம். ஓர் மரம்

இந்த மரம் வண்டிகள் சக்கரங்கள் முதலாகியது செய்ய மிகவும் விலைபெற்ற தாயிருக்கின்றது.

கருவேலம்பட்டை சீரண மருந்தாக உபயோகிக்கப் படுகிறது. அதி தளர்ச்சி, சோர்வு, சோகம் இப்படிப் பட்ட சமயங்களில் கஷாயம் செய்து கொடுக்கப்படுகின்றது. முக்கியமாய் பாம்பு கடித்து விஷமேறி இரத்தங் கக்கி வாந்தியாகி பலவீனப் பட்டிருக்கிற சமயங்களிலும் கொடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டையை ஆர்க்கப் பொடி செய்து நல்லெண்ணெயில் கலந்து பிளவை விப்புருதி, கன்னவிப்புருதி முதலாகிய புண்கள் மேல் பூசப்படுவதற்கு நல்ல மருந்தாயிருக்கின்றது கருவேலம் பிசின் இந்தியாவில அராபிக் என்னும் பிசினுக்கு பதிலாக உபயோகப்படுத்தப் படுகின்றது.

கருமை-வரகுவைக்கோல்

கரைக்கல்லோலம்-கடற்பாசி

கரிச்சூரம்- கழற்சி, கழற் கொடி, பேரீந்து,

கர்ப்பூரம், கருப்பூரம், கற்பூரம்-ஓர் மருந்து

கற்பூரத்தைச் சுதேச வைத்தியர் மிகவும் உபயோகப்படுத்துகிறார்கள். ஐரோப்பியர்களைப்போலவே சுதேச வைத்தியரும் கற்பூரத்தைச் சந்துவாதம, நரம்பு சுளுக்கு முதலாகியவைகளுக்கு மேற பற்று போடுகிறார்கள். தளிர் சுரத்தில் குளிரையடக்க அதற்குச் சக்தி யுண்டென்றும் கிருஷ்ண தோஷத்திற்கு மிகவும் உபயோகப் படுத்துகிறார்கள்.

ஔஷதத்திற்குத் தகுந்த சூடான வெள்ளை நிறமான சிறுகட்டிகளாயும் காரமான வாசனையுள்ளதாயு மிருக்க வேண்டும். அது பலவித வியாதிகளுக்கு உபயோகப் படும்.

அதிகப்பட்ட எல்லாச் சுரங்களுக்கும், வைசூரிக்கும் வியாதிக்காரன் மிகவும் பலயீனமாய் பைத்தியப் புலம்பலும் தாழ்ந்த முணுமுணுத்தலும் நித்திரை யில்லாமலுமிருக்கிறபோது 8-கிறெயின் சூடன் அதற்குச் சமனெடைக் கஸ்தூரியாவது, காயமாவது சேர்த்து மூன்றுமணி நேரத்திற்கு ஒருதரம் கொடுக்கவேண்டும். இப்படிக் கொடுக்குமளவில் பாதங்களிலாவது நெஞ்சின் இடது பக்கமாகிய இருதயதானத்திலாவது கடுகு போல்டீசை வைத்துக் கட்டவேண்டும். மேற்சொன்ன வியாதிகளுடன் நாக்குச் சிவப்பாயும் வயிற்றின் மேல் தொடும் போது அதிக நோவாயும் வயிறுறுக் கிழச்சலாயும் இவ்வித குறிகளுண்டா யிருக்குமாகில் மேற்படி மருந்தை கொடுக்கக் கூடாது முன கூறிய மருந்தின் பிரமாணங்கள் பிராயமானவர்களுக்கே தகுந்தது. வைசூரி கண்டு மறைந்துவிட்டால உ-3-

கிறெயின் சூடன் ஆறுமணி நேரத்திற்கு ஒருதரங் கொடுக்கில் வைசூரி நன்ருய் வெளிப்படும். இதைக் கொடுத்தபின் தலைநோயுண்டாளுல் உடனே மருந்தை நிறுத்திவிடவும் வியாதிக்காரனுக்கு முன்சொன்னதுபோலதிக பலவீனமுண்டாகில் அதை திருப்பிக் கொடுக்கவேண்டும். சூடன் என்னப்பட்டது மிகுந்த பத்திரத்துடனே கொடுக்கவேண்டிய ஔஷதங்களில் ஒன்ருய் இருக்கிறது.

இந்திரியம் தன்ளுல் வெளிப்படும் வியாதிக்கு 4 கிறெயின் சூடனும் அரை கிறெயின் அபினும் சேர்த்துத் தினந்தோறும் இராத்திரி படுக்கும்போது கொடுக்கவும். மேகவெள்ளை யுண்டானவர்களுடைய லிங்கம் நிமிர்ச்சியா யிருக்கிறதற்கும் இந்த ஔஷதம் மிகுந்த குணத்தைக் கொடுக்கும் ஆனல் இதற்கு அபினைக் கிறெயின் வரையும் அதிகப் படுத்திக் கொள்ளவேண்டும். இதுவுந் தவிர சூடன் தயிலத்தை லிங்கத்தின் அடிப்பக்கம் புண் வாயளவும் தடவவேண்டும், ஸ்திரீகள் உபஞ்சத் தரிப்பிஞல் அதிகமாய் வருத்தப்படுவதை நிறுத்தும் பொருட்டு 5-6 கிறெயின் சூடனை மாத்திரையாகவுருட்டி நாள் ஒன்றுக்கு இரண்டு மூன்று தரங் கொடுக்க வேண்டும். மேற் சொன்ன வியாதியை யுடையவர்களது குடற்களை பேதிக்குக் கொடுத்து நன்ருய் சுத்தி பண்ணிக் கொள்ள வேண்டும். கருக்குழியைச் சார்ந்த சில நோய்களுக்கெல்லாம் அறை கிறெயின் சூடனை உள்ளுக்குக் கொடுத்து இடுப்பில் சூடன் தைலத்தை நன்ருய்த் தேய்க்க வேண்டும். பிரசவ சமயத்தில் உண்டாகுஞ் ஜன்னி இழுப்புக்கு 5-கிறெயின் சூடனும் 8-கிகிறயின் கஸ்தூரியும் தேனிலரைத்து ஒரு மாத்திரையாக உருட்டிக் கொடுத்து ஒருமணி நேரஞ் சென்ற பின்னும் சந்நியிருக்குமாகில் இந்தப்படி மறுபடியும் ஒரு மாத்திரை செய்து கொடுக்கவேண்டும். அதன்பின் நேர்வாள மாத்திரை யொன்ருவது ஆமணக்கெண்ணெயாவது கொடுக்கவேண்டும். கஸ்தூரி கிடையாவிட்டால் காயத்தைச் சேர்த்துக் கொள்ளலாம்.

சுவாசகாசத்துக்கு 4-கிறெயின் சூடனை 3-கிறெயின காயத்திலாவது 2-கிறெயின் கஸ்தூரியிலாவது சேர்த்து 2-3 மணி நேரத்திற்கு ஒரு தரங் கொடுக்கவேணும். இந்தப்படி ஐந்து ஆறு தரங் கொடுத்தபின் நன்ருய்க் குணங் காணுவிட்டால் கொடுக்கக் கூடாது. அதன்றியும் சுடுநீரில் சீலையை நனைத்து மார்பில் ஒற்றடங் கொடுக்க வேண்டும்.

சூடனில் அரை அவுன்ஸ்

தேங்காய் எண்ணெய்விட்டு நன்றுயரைத்துச் சற்று வெதுப்பிக்கொண்டு குழந்தைகளின் மார்பிலுந் தொண்டையிலும் இரவில் படுக்கின்ற சமயத்தில் நன்றுய்த் தடவினுல் சுவாசமுட்டுடன் கூடிவருகின்ற இருமல் ஈளையைச் சாந்தப்படுத்தும்.

சூடன் அரை அவுன்சு 2 அவுன்ஸ் தேங்காய் எண்ணெயிற் கலக்கித் தடவினுல் வாதமூட்டு வீக்கம, கழுத்து முதலிய வுறுப்புக்ளிலிருக்கும் விசை நரம்புகளின் வீக்கங்கள், நசிவுகள், சுளுக்குகள், முக்கியமாய் சூதக சமயத்திலும் கெர்ப்பந் தரிக்கிற சமயத்திலு மூண்டாகிற இடுப்பு வலிகள் முதலானவைகளெல்லாம் தீரும். இவ்வியாதிகளுக்கெல்லாம் காலையும் மாலையும் பத்து அல்லது பதினைந்து நிமிட நேரம வரை மேற்படி தயிலத்தை முற்றும் நன்றுய்த் தேய்க்க வேண்டியதா யிருக்கின்றது

நெடுநாளாயிருக்கிற வாதத்திற்கு மேற்சொன்ன தயிலம் தடவுகிறதுமன்றி 5-கிரெயின் சூடனும் 1-கிரெயின் அபினுங்கூட்டி இரவில் படுக்கைச் சமயத்திலுள்ளுக்குக் கொடுத்துப் பின்பு தினந்தோறுங் கொடுக்க வேண்டும். இப்படிக் கொடுத்ததினுலே வேர்வை மிகுதியுண்டாகும். அப்போது சுக்குக் குடிநீர் கொடுத்துத் தேகத்தைக்கட்டி சீலையால் பொருந்திருக்கில் வேர்வையை அதிகப்படுத்தி வியாதி குணப்படும்.

வியாதிக்காரன் அதிக நோயினுல் ஒரு பக்கமாகவே கிடந்து அந்தப் பக்கத்தில் புண்கள் வந்தால் அவனைத் தினந்தோறும் படுக்கைமாற்றி தேகமதிக நோயுண்டாமல் அவ்விடத்தைத் தேய்க்கக்கூடுமானுல்சூடன் தயிலத்தைச் சற்று நேரம் நன்றுய் தேய்க்கவேண்டும்.

பல்வலிக்கு 1-கிரெயின் சூடனும், 1-கிரெயின் அபினுஞ் சேர்ந்து இடித்துப் பல்லினிடையில் வைத்தால் வலி நீங்கும். இதை வைத்திருக்கும்போது வாயிலுண்டாகிற உமிழ்நீரை விழுங்காமல் உடனுக்குடன் துப்பிவிட வேண்டும்.

கார்வலிம்மரம்-ஓர் மரம்
கலயபலாதாலம-பாஷாணம்
கலப்பி-கொத்துபசலை
கலப்பைக்கிழங்கு-கார்த்திகைக் கிழங்கு
கலிகம்-வன்னி
கலிகை நாகமல்லிகை
கலிங்கம்-மிளகு, வெட்பாலை
கலிகம்- அழகும புத்தியுமுண்டு

கருங்கல்வீடு- சூரிய சந்திரக் கிரணமில்லாமையால் உதராக்கினி, அழகு, வீரியமும் போம். சிலேட்டும பிததம் மனத்துன்ப முண்டாம.

கருங்காக்கட்டான் வேர்-கபக்கூட்டம், குருமி, மலக்கட்டு, மாந்தம், வாதமும் போம்.

கருங்காஞ்சொறி வேர் - அரோசகம், கபருட்சை,குத்திருமல், நீரேற்றமும் போம்.

கருங்கால்நாறை - மதம், வாதமுமுண்டாம்.

கருங்காலிவேர்-க்ஷய ரோகம், குட்டம், குன்மம், திமிர், நீரிழிவு, பெருவயிறு புழுவும் போம்.

கருங்காலிப்பட்டை-ஈளை, காசம, மூலவியாதி, மேகநீரும் போம், பல்லிறுகல், சோகமும் உண்டாம்.

கருங்காலிப்பிசின் - கரப்பான், நீரிழிவு, பெரும்பாடு போம். தாதுவிர்த்தியுண்டாம்.

கருங்காலிவேர் - உதிரப்போக்கு, குட்டம், புழு, மதுமேகமும போம். கசப்பாயிருக்கும்.

கருங்குன்றிமணி-கரப்பான், வாதமும் போம்.

கருங்குங்கிலியம்-குத்தல், மேகவாய்வு வலி, சூலை-18 வாதம், வாய்வுபோம. பித்தமுண்டாம்.

கருங்குருவிக்கறி-ஊதுகாமாலை, கபம், கரப்பான். சொறி, வாத காமாலையும் போம்.

கருங்குரங்கு - கரப்பான், சிலேத்துமம், பெருங்கிரந்தி புண்ணுமுண்டாம்.

கருங்கோழிக்கறி-கடி, கிரந்தி, கிருமி, குட்டம், சூலைப்புண், வலி, வாதக்குட்டம் போம். தேக பலமுண்டாம்.

கருஞ் சித்திரமூலம்-அரையாப்புக்கட்டி,இரத்தக்கட்டி கிரந்தி, சீழ்மூலம், சூலையும் போம்.

கருஞ்சிவதைவேர் - எலிவிஷம். காணுக்கடி, பித்த குன்மம் போம். பேதியுண்டாம்.

கருஞ்சீரகம்-கண்ணோய், கரப்பான்,காய்ச்சல், கிருமி, சிராய் பீநிசம், தலைநோய், புண்ணும் போம்.

கருஞ் செம்பையிலை - கபரோகம், கரப்பான், ஜன்னி, துடைவாழை, பிளவை, பீநசங்கள், புண், புரை,மேகம், விப்புருதி,விரணம,வெடித்த புண்களும் போம்.

கருஞ்செம்பைப்பூ-ஐயம், சலதோஷம், தலைக்குத்தல், பீநசம், வாதமும் போம்.

கருணைக்கிழங்கு - இரத்தமூலம் போம்;உடல் பருமன், கண்ணொளிவு, கிரந்தி, கோழைக்கட்டு, சூலை, தேகபலம், மந்தம் உண்டாம்.

கருணைத்தண்டுக் குழம்பு, கபம்,தாதுவிர்த்தி,முளைமூலம்போம்; சீரண தீபனமுண்டாம்; பத்தியத்திற்காகும்.

கருநாபி 18-வித ஜன்னிகள், சுரங்கள்,பீலிகம்,புழுக்கள், புண் வல்லக்கட்டியும் போம்.

கருநாரை-சூடுபோம. பலம், மந்தவாதம் மூலமுமுண்டாம்.

கருநெல்லி- 13 - ஜன்னி, வாதம, மயக்கம், தேகக் கருநிறமும் போம்.

கருநொச்சி - கரப்பான், தலைவலி, மண்டைக்குடைச்சல், வாதக் கடுப்பும் போம்.

கருந்தாளி - சிலேத்துமம் போம்.

கருந்துளசி-இருமல் கிருமி, சலதோஷம், ஜன்னி, சுவாசம், மார்புச்சளி, ருட்சை விஷமும் போம்.

கருந்துத்தி- சூடு, பித்த மேகம், பித்த வாய்வும் போம்.

கருமாரிபூ-சோபம், க்ஷயம் மாந்தம், வாதமும் போம் தாதுவுண்டாம்.

கரும்பாரை- நீர்சோகை, நீர்க்கடுப்பு, தாகம், பித்தம். சுரம், பெரும்பாடு வாந்தியும் போம்; அழகு புத்தியுமுண்டாம்.

கரும்புரசம் - கபநோயுண்டாம்.

கருவங்கம் - கண்ணோய், கிரந்தி, சூதவிரணம், குன்மம். சிலேட்டுமம், சீழ்க்கட்டு, சுரம், சூலை, தாவர விஷம், நீர்க்கட்டு, பிளவை மேகம், வாதம், விஷங்கள், விரணம், மோகம், கபம், கிருமி, சுரம், வாய்விரணமும் போம். கருங்கிரந்தி, செங்கிரந்தி போம்.

கருவிளநீர்-கபம், கரப்பான், கிருமிப் புண்ணும் போம்; காந்தி மனம் பூரிப்புண்டாம்.

கருஊமத்தை-அரிப்பு, குட்டம, சுரம், வியர்ப்பும்போம்; ரசக்கட்டு, மயக்கம், விந்து கட்டுமுண்டாம்.

கருவேப்பிலை- அருசிசுரம், பித்தம், வயிற்றுலைச்சலும் போம்.

கருவேம்பு- விருத்தர்கள் பாலராவார்கள்.

கருவேல்பட்டை- சுரம், சூசுவேக்காடு நாவின்புண். பித்தமும் போம். பல்லிருகல் உண்டாம்.

கருவேலதா- இரத்தம் ஊதுகரப்பான், கடுப்புபேதி மாந்தம் வாதமும் போம்.

கருவெளவால்மீன் - சிறுசிரங்கு, செங்கரப்பான், நீரிழிவு, போகம், முலைப்பால், மேகமும் உண்டாம.

கர்க்கடகச்சிங்கு -இரத்தக் கடுப்பு, இரத்த பித்தம், இரைச்சல், ஈளை, கபம், காசம், காலிலுண்டாகிறமேகம், கிராணி, கொதிப்பு, முக்கல், விரணம், வெப்பும் போம்.

கர்ப்பூரம்- எரிசுரம், கிருமி, ஜன்னி, க்ஷயதோஷம், சீதள வாதம், மந்தம். செவிநோய், தீப்பட்டபுண், பித்தம், மந்தம், முகநோய், வலிப்பு. வாந்தி, வாயுலேபனமும் போம்; தீபனமுண்டாம்.

கர்ப்பூரவள்ளி- இருமல், க்ஷயம், கண்ணோய், கபம், காசம், சுரம், புறதீர்க்கோவை, வைசூரி, வாதமும் போம். பகலில் நக்ஷத்திரங் காணும்.

கலப்புநெய்- பித்தம், பித்த வெட்கையும் போம்; சுக்கிலம், பசி, பலமுமுண்டாம்.

கலவக்கீரை- அரோசி, ஐயம்,குடல் வாதம், திரிதோஷம், பித்தம், மலக்கட்டு, முக்கல்ரோகம், வாதமும் போம். அபான வாய்வு

சுத்தி, அன்ன மேற்றுக் கொள்ளலுமுண்டாம். பத்தியத்திற்குமாகும்.

கலியாணப்பூசணிக்காய் - அஸ்திசுரம், உட்காய்ச்சல், நீரருகல், நீர்க்கட்டு, பித்தசுரம், மருந்திடுதல், மேகவரட்சியும் போம்; வாய்வுமுண்டாம்.

எலுமிச்சங்காய்- பல்லின் பலமும், விந்தின் டலமும் போம். லைவை யுண்டாம்.

கலைமான்கொம்பு- அஸ்தி மேகம், தாகம், திரிதோஷம் நேத்திர நோய், பேய் மார்பு நோய், வெப்பமும் போம்.

கலைமானிறைச்சி- அழலை அனல், பதம், பித்தவாதம், மேகப்பிடிப்பு, வெட்டையும் போம்.

கல்கோவை - கரப்பான், பீநசம், விஷம், வீக்கம், வெந்து விரிந்த புண்ணும் போம்.

கல்தாமரை- அயந்தாம்பரமும் குஷ்டவியாதி யதிகமும் தேகபலமும், வீரிய விருத்தியுண்டாம்.

கல்துளசி- சிலேட்டுமகாசம், தாபசுரம், நரம்பி லெழுப்பும் கட்டி விஷமும் போம்.

கல்நார்-எறிவு, கடுப்பு, காசம், குடல்வாதம், சத்தி, சீழ் மேகம், தாகம், நீரடைப்பு, மந்தம், பல்நோய், வாதம், விந்து நஷ்டமும் போம்.

கல்பாசி-சரீரவேகம் போம்.

கல்பவன்னி-கபசித்தியுண்டாம்.

கல்மதம்- கண்டத்தின் பிணிகள், கிரிச்சரம், கல்லடைப்பு பிரமியம், சதையடைப்பு, நீரடைப்பு மேகமும் போம்; விந்து முண்டாம்.

கல்லத்தி-திடமுண்டாம்

கல்லுண்டைச்சம்பா- புஜபல பராக்கிரம முண்டாம்.

கல்லுப்பு அரோசி, அஷ்ட குன்மம், ஐயம், சர்த்தி, சூலை, தாகம், பித்தம், வாதமும் போம்; பேதியுண்டாம்.

கல்லுருவிப் பூண்டு - உதிரக்கட்டு புண், மேகம், விஷமும் போம்; சட்டுக்கரையும இருப்புசுத்தியு முண்டாம்.

கல்வங்களின் குணம்-கறுப்புக் கல்லிலரைத்த மருந்து உடற் கின்பம் உண்டாம். சிவந்த கல்லிலரைத்த மருந்து தோஷம் போம்; மஞ்சக் கல்லிலரைத்த மருந்து மருந்தின் பலம்போம்.

கவலைக் கிழங்கு- கண்டமாலை, கிரந்தி, சீதம், சுரம், தினவு,மந்தம், மூலமும் உண்டாம்.

கவிழ்தும்பை-இரத்தக் கடுப்பு மூலமும் போம்.

கவுதாரிக்கறி - பிக்கியமலம் சிலேட்டுமம், பித்தமந்தம், வாதமும்போம்; தாதுவிர்த்தி பலமுமுண்டாம்.

கழற்சிக்காய்- அண்டவாதம், குன்மம், பக்கச்சூலையும் போம்.

கழற்சியிலை- அழற்சி, அனல், குன்மம், சூலை, விரைவாதம், வெட்டையும் போம்.

கழுதைக்குளம்பு- குதிரை வலி போம்.

கழுதைசாணிப்பால்- இருமல், ஈளை, கிரந்தி, சுவாசகாசம், சூலையும் போம்.

கழுதைத்தும்பை- அரையாப்புக்கட்டி, உதிரம் சீதக்கடும்பு, வாயுவும் போம்.

கழுதைப்பால்-ஐயம், கரப்பான், கருங்கிரந்தி, சிரங்கு சித்தப்பிரமை, சீழ் மேகம், சொறி, கழுதளை, நரம்பிலுண்டாகுங் கட்டி பித்தம், புண், வாதம், விரணமும் போம; தித்திப்பாகவிருக்கும்.

கழுதைமூத்திரம்- அபஸ்மாரம், இருப்பு, கருங்கிரந்தி, காரம், கிருமி, குண்டம், பிள்ளைப்பிணி, மேகம், வீரிய நஷ்டம், வெடியச்சரம், வெப்பும் போம்,

கழுநீர்ப்பூ- அரோசகம் எள்ளழல் கபமும் போம்; குளிர்ச்சியுண்டாம்.

களகரத்தி-குஷ்டம்போம்

களாக்கொட்டி-அண்டவாதம், கெர்ப்பசூலை, புண்கள் வாதம், வீக்கமும் போம்

களர்நிலநீர்- அஸ்திசூடு, அரோசிகசுரம், குருதிரோகம், சர்த்திதாகம், விக்கலும் போம். ஒழியாத மேகம் குடல் வெகுளல் புணர்ச்சி, புளகிதம் உண்டாம்.

காக்காய்-அரோசகம், இரத்த பித்தம், காதுவிடாய், தாகம், பித்தம், வாந்தியும் போம், பசியுண்டாம் வப்பழவ பித்தம், மேகமும் போம். களாசீதம், வாதமும் உண்டாம்.

களாப்பூ-கண்ணிற்படரும் உதிரப்படலம், கரும்படலம், சதைப்படலம், வெண்படலமும் போம்.

களாவேர்-அக்கினிமந்தம், ஐயம், தாகம் பித்தம், பிரசவ அழுக்குச்சிக்கல், வியர்வை விஷமும் போம்.

களிப்பாக்கு - அரோசகம், பித்தம்போம்; தொண்டையிற் கோழைக்கட்டல், பேதியுண்டாம்.

களிப்பிரட்டைக்கீரை- ஐயம், கரப்பான், சிலந்திக் கடி, பித்தமும்போம், போகமுண்டாம்.

கள்ளிப்பட்டை-நரம்பு சிலந்தி, மார்பில் தங்கிய வாதம், வாதஜந்நியும் போம்.

கள்ளிப்பால்- கிருமி, குஷ்டம், சொறி, சிரங்கு, நமையும் போம்.பேதியுண்டாம்,

கள்ளிமுலையான் -பித்தவாதம் போம்;பசி புளிப்பு முண்டாம்.

கறிப்பாலை-அனல், சுரம், பித்தம் மருந்து மலம் மேகம் வெட்டையும் போம். போகமுண்டாம்.

கறிமுள்ளி-இருமல், இரைப்பு, ஈளை, கபச்சுரம், சுவாசம் போம்.

கறியுப்பு-பொருமல், மந்தம், வாயுபோம். அக்கினி புஷ்டி ஐயம் தீபனம் நீரிறங்கலு முண்டாம்.

கறுத்தநீர்- இருமல், ஈளை, கரப்பான், காந்தல், சுரம், தாகம், தோஷம், நளிர் நெஞ்சுக்கட்டு, நெஞ்செரிவு

வாந்தி, வெப்பும் போம், அனலுண்டாம்.

கறுத்தாட்டுத் தயிர் - இரத்த பித்தம், சிலேத்துமம், சுவாசகாசம், சோகை, தாது பாண்டு, பித்தம் வாதமுமுண்டாம்.

கறுப்பரிசி-கடிகள் போம்

கறுப்பறுகு-காசம்போம்

கறுப்புக் கடலை - காயசித்தியுண்டாம்.

கறுப்புக்சம்பளி - மகத்தான வாதங்கள் போம்

கறுப்பு மணத்தக்காளி-அழல், குரல்கம்மல், வாய்வு போம். பிள்ளைகளுக்காகும்.

கறுப்புவஸ்திரம்-அக்கினி மந்தம், காசம், பித்தவிஷம், வெப்பும்போம்.

கற்கண்டு -இருமல், உஷ்ணம், சபம், பல்லரணை, வாந்திபோம், விந்துவுண்டாம்.

கற்காந்தம் - காமாலை, கிராணி, சுரம், நீரிழிவு, பாண்டு, மாந்தம், மூலம் மேகமும் போம்.

கற்சுன்னம் -அழுபுண்ணு, களங்கு ஜன்னி, சிரநோய், நீர்ப்புண் நமை, நீர்ச்சுருக்கு நீர்பேதி, நெய்ச்சிக்குபோம்

கற்சுனை நீர் -தாகம்போம் உட்டிணமுண்டாம்.

கற்றலைமீன்-கரப்பான்போம் இருமலுண்டாம்.

கற்ருழை-அரிப்பு, உன்மத்தம், எரிச்சல், கபம், கிரிச்சுரம், குஷ்டம், குன்மம், சூலை, பெண்குறி நோய், மூலம், மேகமும்போம்.

காகொளி-சலமேறல் நீரேற்றமும் போம்.

காக்கை நோய் - காமாலை போம்.

காசினிவிதை-அருசி, சயித்தியம் போம்.

கலிதி-திப்பிலி

கலித்துருமம்-தான்றி

கலிமாரகம்-கிலுகிலுப்பை

கலிமாலகம்-அகில்

கலினி-திப்பிலி

கலினை-கொள்ளு, மிளகு

கல்லீரம்-முருக்கு

கலேயம்-மஞ்சள்

கலை-சாஸ்திரம்

அதன் வகை: இரசவாதம்-தாதுவாதம்

கல்மலம்-கல்மதம்

கல்முரசு-கப்பிட்டி, மரம்

கல்லகாரம்-பணவெல்லாம், செங்குவளை, நீர்க்குளரி.

கல்லடி மூலம்- கற்கடக பாஷாணம்

கல்லாரம்-செங்குவளை, நீர்க்குளரி

கல்லியம்-கல்

கல்லின்காரம்-கல்நார்

கல்லீயம்-நீலாஞ்சனம்

கல்லுலகம்-பெருவாகை

கல்லுக்கலைத்தான் - பொன்னாங்கண்ணி

கல்லுருவி - ஓர் பூண்டு

கல்லுளி-பேய்களா [சை

கல்லுணி- புல்லூரி, குறுவிச்

கல்லை நீராக்கி-மாமிசபேதி

கல்லொட்டி-அரத்தை

கல்வீரியம்-அன்னபேதி

கல்வேகம்-கல்வீரியம்

கல்லவேதி-சகஸ்திரபேதி

கவரிறு-தணக்கு

கவரெழுசங்கம் - முட்சங்கம்

கவர்-வாழை [செடி

கவலை-நோய், செந்தினை, ஓர்

கவனி-கந்தக பாஷாணம்
கவாச்சி-வெள்ளை காக்கண[ம்]
கவி-பூனைக்காலி
கவிகுருந்தம்-கந்தகபாஷாணம்
கவித்தம்-கடுகுரோகணி
கவியங்கம்-வெட்பாலை
கவிரம்-அலரி
கவிரோமம்-பூனைக்காலி
கவிர்-முறுக்கு, முள்முருக்கு
கவுடதம்-வெட்பாலை
கவை-அகில்
கவ்வை-கள்
கழங்கு-கழற்சி, கழற்கொடி
கழலாபு-பீர்க்கு
கழல்-கழற்சி
கழற்கொடி-கழற்சிக்கொடி

கழற்சிக்காயைதமிழ்வைத்தியர் குளிர் சுரத்திற்கு மிகவும் உபயோகப்படுத்துகிறார்கள். சுரம் நின்றபின் னிருக்கிற பலயீனத்திற்கும் கழற்சி வேரின் பட்டை உபயோகப்படுகின்றது.

இது மிகுதியாய்த் தமிழ் வைத்தியரால் குளிர் சுரத்திற்கு நேரமொன்றுக்கு 10-கிறெயின் வீதந் தினம் மூன்றுநேரங் கொடுக்கப்படுகின்றது. இதனுடன் நல்ல மிளகும் காயமுஞ் சேர்த்துக் கொடுக்கிறதாயிருக்கும். மேற்கூறிய சுரத்திற்கும் சுரம் நின்ற பின்னிருக்கிற பலயீனத்திற்குங் கழற்சி வேரின்தோல் 10-கிறெயின் வீதம் ஒரு வேளைக்கு கொடுத்தால காயிலு மதிக குணமாயிருக்கும்.

கழற்சிபதம் - அதிவிடையம்
கழற்பதி-பெருங்குமிழ்
கழாய்-கழுகு
கழாய்வனம்-சிறுகீரை
கழிச்சல்- வயிற்றுக்கழிச்சல்
கழுசி-சீந்தில்

கழுதைப்பால் பைத்தியம் மதிமாருட்டம் பித்தம் இந்த வியாதிகட்குச் சுதேச வைத்தியர்கள் கொடுக்கிறார்கள். வெண்குட்டம், குட்டம், குழந்தைகட்கு வருகிற கரப்பான் இவை தீர நாளொன்றுக்கு ஓரளவாக இரண்டு வேளையுங் கொடுக்கப்படுகிறது.

கழுநீர்-குவளை
செங்கழுநீர்-செங்குவளை
கழுமுன்-மாதளை
கழை-கரும்பு, மூங்கில்
களா-களா
களசுவேதம்-அதிவிடயம்
களஞ்சி-சூதபாஷாணம்
களந்தூன்றி-தான்றிக்காய்
களவு-களாச்செடி
களா-ஓர் செடி

அதாவது: சிறுகளா, பெருங்களா, சொத்தைக்களா,

களாவகம்-சிறுகீரை
களி-கள்
களிகம்-வாலுளுவை
கள்-மது

கள்ளுப் போல்டிஸ் செய்வதற்கு வேண்டிய மட்டும் அரிசிமாவை அதற்குப் போதுமானதாய் உடனிறக்கின கள்ளைவிட்டுக் கலக்கிக் கொஞ்சமாய்த் தீயெரித்துக் கிண்டிப் பொங்கத் துவங்கினவுடன் இறக்கி ஒரு சீலையில் தடவி வைத்துக் கட்டவும். இது பிளவைகளிலும் வேறு புண்களிலும் நின்று

ஆணிச்சீழ் அல்லது அசடைப் போக்குவதற்கு உபயோக முள்ளதாயிருக்கிறது. இவற்றை போக்கின பின்பு புண்களில் ஆறும்படியான குறிகள் காணும் பொழுது மாவுபோல்டீசாவது மெழுகு பிளாஸ்திரியாவது இடலாம்.

கள்ளச்சி - பூவனலை, பூநீறு

கள்ளாம்பல் - வெள்ளாம்பல்

கள்ளி-ஓர் செடி

அதாவது : ஆட்டங்கள்ளி திருகுகள்ளி, இலைக்கள்ளி

கள்ளிக்காக்கை-செம்புகம்

கள்ளிப்பட்டை - ஓர் பட்டை. இது தோலுக்குவர்னம் போடுஞ் சேர்மானத்தி லொன்று யிருக்கின்றது.

கள்ளிமடையான், கள்ளி முலையான்-ஓர் கள்ளி.

கள்ளு-கள்

கறி-மிளகு

கறியாமணக்கு - பறங்கியாமணக்கு

கறியுப்பு-பிரமவுப்பு

காகநிமிளை-மீனம்பர்

கறை - இரத்தம்

கற்பம்-பலவகைகூடிய மருந்து

கற்கான சீரகம்-கருஞ்சீரகம்

கற்சூரம்-கர்ச்சூரம், கழற்சி, பேரீந்து

கற்பகக்கரம் -கோழித்தலைக் கந்தகம்.

கற்பு-முல்லை

கற்பூரம் - கற்ப்பூரம், பொன்னாங்காணி

கற்பூரவள்ளி-ஓர் பூண்டு

இந்தக் கற்பூரவள்ளியின் சாற்றில் கற்கண்டுத் தூள் சேர்த்துத் தொண்டைக் கம்மலுக்குச் சுதேச வைத்தியர் கொடுக்கிறார்கள். மேலுமிதன் சாற்றை மற்றுஞ் சில பூண்டுகளின் சாற்றோடு நல்லெண்ணெயிற் கலந்து குளிர்ச்சிக்காகத் தலையில் தேய்க்கச் செய்கிறார்கள்.

கற்றாமரை-ஓர் தாமரை

கற்றாழைச்சோற்றை தண்ணீரில் நன்றாயலம்பிக் கொஞ்சங் கற்கண்டு சேர்த்துக் குளிரப் பண்ணுகிற வெம்மையாற்று மருந்தாகக் கொடுக்கப்படுகிறது. அந்தப்படி யலம்பிய சோறுடன் பொரித்த படிகாரஞ் சேர்த்துச் சலவைத்துண்டு வஸ்திரத்தில் பொட்டணங் கட்டியொற்றுதல், கண்ணோய் கட்டுங்கவும் பிரயோஜனமான பரிகாரமென்று சுதேச வைத்தியர் யோசிக்கின்றார்கள்.

களகமிளகு-வால்மிளகு

கனகாரியம்-ஊமத்தை

கனங்காய்-ஓர் மரம்

கனசாரம்-கற்பூரம்

கனத்தி-வைப்பரிதாரம்

கனம்-கோரைக்கிழங்கு

கனலி-கொடுவேலி

கனல்பேதி-சகஸ்திரபேதி

கனவுமூலி-விஷமூங்கில்

கனற்கூர்மை-வளையலுப்பு

கனற்சிலை - மந்தாரச்சிலை

கனி-பழம

கனேபலம்-ஆலங்கட்டி

கன்மதம்-கல்மதம்

கன்மலி-ஏலம்

கன்றுபுக்காள்-ஓர் பூண்டு

கன்னக்கிரந்தி-கன்னப்புற்று

கன்னல்-சருக்கரை, கரும்பு

கன்னவகம்-சிறுகீரை

கன்னச்சூலை, கன்னப்பிளவை, கன்னப்புற்று- ஓர் நோய்.
கன்னி- கற்றாழை, காக்கணம், காவிளை.
கன்னிகம்-மணத்தக்காளி
கன்னிகாரம்-கோங்கு
கன்னிற-இசங்கு
கன்னுறுகம்-சிறுகீரைக்கா

கா

காகதுண்டம்-அகில்
காகதேரி-மணத்தக்காளி
காகத்துரத்தி- ஆதொண்டை, காத்தொட்டி
காகநாசி-பாற்சோற்றி
காகநிமிளை-கருநிமிளை
காக பாஷாணம் - ஓர்வித வைப்பு பாஷாணம்,
காகாம்-கீரி
காகரி-திப்பிலி
காகித்தம்-குறிஞ்சா
காகுராசி-புடோல்
காகோடி-எட்டி
காகோடகி-வாலுளுவை
காகோதரம்-பாம்பு [கை
காகோலம்- அண்டங்காக்
காகோளி-அசோகு, கொடியரசு, தேள்கொடுக்கி.
காக்கணம்-ஓர் கொடி
அதாவது: கருங்காக்கணம், வெள்ளைக் காக்கணம், குத்துப்பாலடை. [வை
காக்கம்-குறட்டை, கொவ்
காக்காய் கொல்லிவிதை- ஓர் விதை.
இது மயக்க முண்டாக்குகின்ற காய். தென்னாட்டுக் காட்டிலும், திருவாங்கூர் தேசத்திலும் விஸ்தாரமாய் விளைகிறது. தீராத நாட்பட்ட புண்களுக்கும் புழு மேய்ச்சல், படர்தாமரை, தேமல் செங்கிரந்தி இவைகளுக்கு மேல்பூச்சாக உபயோகப் படுத்தப்படுகிறது. இதை ஆர்க்கப் பொடி செய்து கொஞ்சங் காயவைத்த சிற்றாமணக் கெண்ணெயில் கலந்து பூசுகிறார்கள்.
காக்காய்ச்சோளம்-ஓர் சோளம்.
காக்காய்ப்பாலை-ஓர் பாலை
காக்காய்மூக்கு-கருமுகில் பாஷாணம்
காக்காய்ப்பூ-ஓர் பூண்டு
இதன் இலையின் சாற்றில் சருக்கரை சேர்த்து மேக வெள்ளைக்குக் கொடுக்கிறார்கள்.
காக்குறட்டை-கறுத்த காக்கணம்.
காக்காய்வலி-ஓர் நோய்
காங்கையன்- வைப்பு, நீலப் பாஷாணம்,
காசம்- கற்பாஷாணம், ஓர் நோய்.
அதாவது: சுவாச காசம், மந்தாரகாசம், ரத்தகாசம், நீலகாசம், சிலேத்மகாசம், பித்தகாசம், மந்தகாசம், வாதகாசம், பாலகாசம, விரணகாசம், கர்ப்பகாசம், கோழைக்காசம்.
காசறை-கஸ்தூரி மிருகம், மணி, மயிர்ச்சாந்து.
காசா-காயா, நாணல்
காசாம்புவண்ணன்- துரிசி, கச்சாலம், காய்ச்சற் பாஷாணம்.
காசி-சீரகம்,ஓர் வகைத்தாது
காராயி-அடியிரல் [வுப்பு

காந்து வு-மண்ணீரல்
காடிசம்-வெண்காரம்
காரம்-சீனக்காரம்
காலிதம்-படிகாரம்
காரகம்-இந்துப்பு
காளவாயன்-கழுதை
காக்கைமல்லி-நுணா
காளி-மணித்தக்காளி
காந்தி-விட்டுணுகரந்தை
காட்டகத்தி-வீழி
காரி-கண்டங்கத்திரி
காரம்-வெண்காரம்
காய்-சாதிக்காய்
காணி-பொன்னுங்காணி
காவட்டை-மாந்தப்புல்
காநவிரை-கண்டங்கத்திரி வித்து
கார்த்திகைக் கிழங்கு- வெந்தோன்றி.
காமர்-அழகு
காய்-மிளகு
காசி-காசிதுப்பி
காரம்-முப்புச்சுண்ணம்
காரம்-செயநீர், வெண்காரம்
கார்த்திகைக் கிழங்கு- கலப்பைக் கிழங்கு
காஞ்சனம்-பொன்
காஞ்சினி-மஞ்சள்
காமப்பால்-முலைப்பால்
காயவள்ளிக்கிழங்கு- வெற்றிலைவள்ளி.
காசிரோர்த்தம- ஆடுதின்னாப்பாளை, வறட்சுண்டி,
காசு-கோழை, காசுக்கட்டி மருந்துக்கு எடுக்கப்பட்ட காசுக்கட்டி துப்புரவாயும், கருநிறமாயும் எளிதாயுடையத்தக்கதுமா யிருக்கவேண்டும்.

வயிற்றுப்போக்குக்கு சுரங் கூடி யில்லாவிட்டால் 10-முதல் 5-கிரேயின்வரை காசுக்கட்டியை பொடித்து தேனிலாவது வெல்லத்திலாவது கலந்து 8 அல்லது 10-கிறெயின் கறுவாப்பட்டைத் தூளுடன் சேர்த்துப் பிராயமானவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இதுவுந் தவிர 6-திராம் காசுக்கட்டிப்பொடியும் 1-திராம் சதைத்த கறுவாப்பட்டையும், அரைப்படிக் கொதிக்கிற சலத்தில் இட்டு வைக்கவும். இரண்டு மணி நேரங்கழித்து ஆறின பின் வடிகட்டித் தினம் மூன்று வேளையாக ஒன்றரை அல்லது 2-அவுன்ஸ் வீதம் கொடுக்க வேண்டும்: படுக்கைச் சமயத்தில் ஒரு அபின் மாத்திரையுங் கொடுக்கலாம். குழந்தைகளின் வயிற்றுப் போக்குக்கு 8-அல்லது 4-கிரெயின் காசுக் கட்டியை நுணுக்கி அதற்குச் சமனுகக் கறுவாப்பட்டைத் தூளுஞ் சேர்த்துக் கொடுத்தால் குணப்படும்.

இரச ஔஷதஞ் சாப்பிட்டதினுல் உண்டாகிற உமிழ் நீர்ச் சுரப்புக்கும், ஈறில் உண்டாகும் புண்களுக்கும், ஒரு துண்டு காசுக்கட்டியை வாயிலிட்டு வைத்துக்கொள்ள வேண்டும். இப்படி தினம் இரண்டு மூன்றுதரஞ் செய்யலாம். தொண்டை நோவுக்கும் நல்லதாயிருக்கும். மிகுந்த நாற்றமான பழுப்புடனே யிருக்கிற பழையபுண்களுக்கு 1-திராம் காசுக்கட்டியை 1-அவுன்ஸ்

மெழுகு பிளாஸ்திரியில் சேர்த்து இடவேண்டும். இதுவுமின்றி 6-கிராம் காசுக்கட்டியை அரைப்புட்டிக் கொதிக்கிற சலத்திலிட்டு ஆறினபின் வடிகட்டிப் புண்களைக் காலையிலும் சாயந்திரமுங் கழுவினாலும் குணமுண்டாகும். மூலைக்காம்பில் வரும் ரணங்களுக்கும் நன்று. மூலைக்காம்பில் ரணமிருக்கும் ஸ்திரீ பிரசவிக்கிறதற்கு இரண்டு மாதத்துக்கு முன் மூலைக் காம்புகளிலும் மேற்படி தண்ணீரைத் தொட்டு வைத்தால் குழந்தை பால் குடிக்கிற சமயமாகும் போது ரணம் உண்டாகாது பல் குழிந்தும் அதற்குள் சதை வளர்ந்து மிருக்கிற தலைவலிக்கு ஒரு துண்டு காசுக்கட்டியை வாயிலிட்டு ஒதுக்கிக் கொண்டாலும் சுகத்தைக் கொடுக்கும்.

காசை-காயா. நாணல்

காச்சுரை-புளிச்சக்கீரை

காஞ்சனம்-புன்கமரம்

காஞ்சளி-மஞ்சள்

காஞ்சா-கஞ்சா

இதிலிருந்து பங்கி மாஜினம் செய்யப்படுகின்றன. இதன் இலைகள் அல்லது சடை புகையிலையோடு சேர்த்துப் புகை பிடிக்கப்படுகின்றதனால் அதிக இலாகிரி யுண்டாயிருக்கும்.

இது வயிற்றுளைவு நோய்க்குச் சிலவேளை உபயோகப்படுகிறது. இதனோடு மஞ்சள், வெங்காயம், காய்ந்த நல்லெண்ணெயில் சேர்த்து வீங்கி நோயுள்ள மூலவியாதிக்கு உபயோகப்படுத்தலாம்.

காஞ்சி-ஓர் மரம்

காஞ்சிகா-எட்டி

காஞ்சிரம்-காஞ்சிரை, எட்டி

காஞ்சினி-மஞ்சிட்டி

காஞ்சொறி-காஞ்சொன்றி

காடி-ஓர் மருந்து

அதாவது: காடிக்கூழ், காடிச்சோறு, சரக்காடி, கஞ்சிகள், ஊறுகாய்

காடியைச் சுதேசிகள் மேல் பூச்சு வற்றப் பண்ணுகிற பற்று மருந்தில் சேர்க்கிறார்கள். அதில் நல்லெண்ணெய் சேர்த்துக் குளிர்ச்சிக்குச் சிரசில் தேய்த்துக் கொள்ளப்படுகிறது முக்கியமாய் உக்கிரமான தலை நோய்க்குத் தேய்த்துக் கொள்ளப்படுகிறது. காடி வழக்கமாய் பனங்கள்ளு, தென்னங்கள்ளு இவைகளிற் செய்யப்படுகிறது.

காடிக்காரம் - நெருப்புக்கல்

காடு-ஆரணியம்

காட்டிற் உற்பத்தியாவது: காட்டகத்தி, காட்டவரை காட்டாத்தி, காட்டாமணக்கு, காட்டுக் கஞ்சாங்கோரை. காட்டுக்கதலி, காட்டுக் கருணை, காட்டுக்காய்ச்சுரை, காட்டுக்காய், காட்டுவள்ளி, காட்டுக்காணவாழை, காட்டுக் கிராம்பு, காட்டுக்கீரை, காட்டுக்குருந்து, காட்டெலுமிச்சை, காட்டுக் கூந்தல், காட்டுக் கொஞ்சி, காட்டுக் கொள்ளு, காட்டுக்கோரை, காட்டுக்கோழி, காட்டுச்சீரக

வள்ளி, காட்டுத்தகரை, காட்டுத்தினை, காட்டுத்துத்தி, காட்டுத்துவரை, காட்டுத் துளசி, காட்டு நாரத்தை, காட்டுநெல்லி, காட்டுப்பசு, காட்டுப்பருத்தி, காட்டுப் பன்றி, காட்டுப்பாகல், காட்டுப்பிள்ளை, காட்டுப் புளிச்சை, காட்டுப் புளிச்சைமரம். காட்டுப்புரு, காட்டு மந்தாரை, காட்டுமசம், காட்டுமரி, காட்டுமல்லிகை, காட்டுமனுஷன், காட்டுமா, காட்டு மாவிரை, சாரப்பருப்பு.

காட்டுமிருகம், காட்டு மூருக்கு, காட்டுமுருங்கை, காட்டுமூன்னை, காட்டுமொச்சை, காட்டுவாகை, காட்டெருமுட்டை, காட்டெருமை, காட்டெருமைப்பால், கூகைநீர், எருக்கம்பால், கள்ளிப்பால், அங்குசரோசனம்.

காட்டெள்ளு-காட்டேரி

காடைப்புடம்-சிறுபுடம்

காட்டகத்தி-வீழி

காட்டணம்-பெருங்குமிழ்

காட்டத்தி-பேயத்தி

காட்டிலம்-வாழை

காட்டுக்கடலை-ஓர் செடி

இதனிலையையும் உயர்ந்த மிளகையும், இடித்துத்தூளாக்கிச் சருக்கரையிற் கலந்து இருமல் வியாதிக்கு மலையாள தேசத்தார் உபயோகிக்கிறார்கள்.

காட்டுக்குருந்து- காட்டெலுமிச்சை.

காட்டுச் சீரகவள்ளி- காயவள்ளி.

காட்டு நாரத்தை- பெருங்குறந்து.

காட்டு முருங்கை-மாவிலங்கு

காட்டுமாந்தாரை- காட்டாத்தி

காட்டு வெள்ளரி-பேய்க்கொமட்டி

காட்டெருமைக்கள்ளி- எருக்கு, சதுரக்கள்ளி.

காணம்-கொள்ளு

காண்டகம்- நோய், நிலவேம்பு, சரகண்ட பாஷாணம்.

காண்டம்-சீந்தில், நிலவேம்பு,

காண்டாமிருக ரத்தம்- ஓர் மருந்து.

இதை சுதேச வைத்தியர் தும்மல் உவான் என்கிற வஸ்துவைக் காண்டாமிருக இரத்தமென்று பிசகாயெண்ணிக் கொள்ளுகிறார்கள். தமிழ் வைத்தியரும் அகீம்களும் அதை கயப்புவஸ்துவென்று யோசிக்கிறார்கள். உண்மையான காண்டாமிருக இரத்தமல்ல. ஆனால், இரண்டிற்கும் பேதம் பிரிக்கக் கூடாமையாயிருக்கிறது. இவ்விடத்தில் காண்டாமிருக இரத்தமென்று கடைகளில் விற்கப்படுகிறது. காஸ்கோ பாரண்கோ என்கிற இடங்களிலிருந்து வரப்பட்டது மாத்திரம் நேர்த்தியானதென்று சிலர் யோசிக்கிறார்கள் சோகம், தியக்கம், சோர்வு, மூர்ச்சை இவைகட்கு இது சாராயத்திலிழைத்துச் சிரசிலும் கன்னப்பொறிகளிலும் பற்றுப் போடப்படுகின்றது.

காண்டிபம்-சரகண்ட பாஷாணம்

காதவம்-ஆலமரம்

காதம்-கள்
காதாங்கி-பாற்சோற்றி
காதி-மிருதபாஷாணம்
காந்தம்-ஓர் கல்
அரக்கு காந்தம், உருளைக் காந்தம், ஊசிக்காந்தம், கற் காந்தம், காந்தக்கல், காந் தத்தின் சத்துரு காந்தபா ஷாணம், காந்தமணி, காந்த மண், செம்மண், சந்திரகாந் தம், சூரியகாந்தம், பலகைக் காந்தம்.
காந்தாள்- கார்த்திகைப்பூ, வெண்காந்தள், சவுக்காரம்.
காந்தாளிகம் - சின்னிமரம்
காந்தி- காவிக்கல், உஷ் ணம், சிலாசத்து.
காந்தியதிகமேனி -காவிக்கல்
காந்தியோனி-சிலாமதம்
காந்துகம்-வெண்காந்தள்
காமப்பூ-மதனகாமப்பூ
காமம்-இந்திரியம், காமப்பூ, காமமரம், பனை.
காமரகி-நெருஞ்சில்
காமரம்-அகில்
காமரி-புளிநரளை
காமரீசம்-புல்லூரி
காமனை-சிறுகிழங்கு
காமன்-திப்பிலி, வண்டு
காம்பிரம்-முருக்கு
காம்பு-பூசணி, மூங்கில்
காம்போதி-குரைவாலி
காம்போசி-குன்றி
காயசித்தியுப்பு- அமரியுப்பு
காயசித்தியாஞேன்- சூதபா ஷாணம்
காயசித்திச்சுண்ணம்- கற் பூர சிலாசத்து
காயத்திரி-கருங்காலி
காயத்தியிருத்தி-பூவழலை [தி
காயத்தையுருக்கி- அஸ்திபே

காயம்-பெருங்காயம், மிளகு, வெங்காயம்
இது இந்தியாவில் ஏறக் குறைய எல்லாக் கடைகளி லும் நற்சரக்காய்க் கிடைக் கும். ஔஷதத்துக் கிசைந் தது, ஈரமாயும் வெள்ளுள்ளி வாசனை யுடையதாயு மிருக்க வேண்டும். அதை மாத்தி ரை செய்தாவது ஜலபாகத்தி லாவது உள்ளுக்குக் கொடுக் கலாம். ஜலபாகம் எப் படியெனில்: 5-திராம் காயத் தை அரைப்புட்டி சலத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் முழு தும் நன்ருய் உரைத்துக் கலக்கி அது ஒருவிதக் கட் டிப் பால்மாதிரி பக்குவம் வந்தவுடன் வடிகட்டி வைத் துக்கொண்டு அரையவுன்ஸ் முதல் ஒரு அவுன்ஸ் வரை யும் பிராயமானவர்களுக்குக் கொடுக்கவேண்டும்.
சூதகவாயு, மூர்ச்சை, நெடு நாளான இருமல், சுவாச காசம், வாயு, கடினமான விக்கல், குன்மவலி இவை களுக்கெல்லாம் மேற்சொ ன்ன காயச் சலத்தில் ஒன்று அல்லது இரண்டு மணிநே ரத்திற் கொருதரம் ½-அவு ன்ஸ் முதல் ஒரு அவுன்ஸ் வரை தனித்தாவது, 2- அவ ன்ஸ் சுக்குக் குடிநீரிலாவது உள்ளுக்குக் கொடுக்கலாம். வலி மிகவும் கடினமா யிரு க்குமாகில், அறை கிறெயின் அபினைக் கூடச்சேர்த்துக் கொள்ளவேண்டும் மேற் கூறிய மருத்தின் அளவுகள் பிராயமானவர்கட்கேயாம்.

குழந்தைகளின் வாய்வுக்குங் குன்மவலிக்கும் மேற்சொன்ன காயச்சலத்தில் 1-தேக்கரண்டி அல்லது 2-திரா மெடுத்து கொஞ்சம் கருவாப்பட்டை தாளிலாவது ஓமக்குடி நீரிலாவது கொடுக்க வேண்டும். தேகம்வெளுத்து பலவீனமான குழந்தைகளுக்குச் சன்னி யிழுப்புண்டாகில் மேற்படி மருந்தை 1-திராம் வீதம் ஒன்றிரண்டு மணி நேரத்துக்கொருதரம் கொடுத்தால் சாந்தப்படுத்தும்.

குழந்தைகளுக்கு நெடுநாளாக யிருக்கும் இருமலுடன் சுரமிருந்துமாறி பலவீனமுடைஇருமலுமாத்திர மிருக்கினும் இது பிரயோசனப்படும் 1-அல்லது 2-கிறையின் காயத்தைக் கொஞ்சம் சலத்தில் பால்நிறம் வரும் வரையும் அரைத்துக் கலக்கி வடிகட்டி 2-மணி நேரத்திற்கு ஒருதரம் இரண்டு வயதான குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். அதிக வயதுள்ள குழந்தைகளுக்கு காயத்தின் இடையைக் கிரமமாய் அதிகப்படுத்திக் கொள்ள வேண்டியது.

சுரமில்லாம லிருக்கிற பழகின கக்கிருமலுக்கு முன் சொன்ன மருந்தில் 1-தேக்கரண்டி வீதம் தினம் நாலு ஐந்துதரம் கொடுக்கவேண்டும்.

காயத்திரி-திரிகாயம்.

அதாவது: பெருங்காயம், மிளகு, வெங்காயம்.

காய்-கனி

அதன் வகை: காய்வெள்ளிகாய்வேளை, இரும்புக்காய்வேளை, முட்காய்வேளை.

காய்ச்சல்-சுரம்.

இதன் வகை: அகோரக் காய்ச்சல், அச்சரக் காய்ச்சல், அஸ்திக்காய்ச்சல், உட்காய்ச்சல், கணக் காய்ச்சல், காமக் காய்ச்சல், குளிர்க் காய்ச்சல், சிலேஷ்மக் காய்ச்சல், சுரக் காய்ச்சல், தோஷக்காய்ச்சல், நாவறட்சிக் காய்ச்சல், பித்தக்காய்ச்சல், பெருவாரிக்காய்ச்சல், மந்தக் காய்ச்சல், மாறல் காய்ச்சல், முறைக் காய்ச்சல், வறைக் காய்ச்சல், வாதக் காய்ச்சல், விஷக்காய்ச்சல், விடாக்காய்ச்சல், விடுங்காய்ச்சல், வைசூரிக் காய்ச்சல், தாபக் காய்ச்சல், தொத்துக் காய்ச்சல், கடுங்காய்ச்சல், இடைக் காய்ச்சல், ஒட்டுக் காய்ச்சல், இராக்காய்ச்சல், மூன்றுமுறைக் காய்ச்சல், நாலாமுறைக் காய்ச்சல், தினகாய்ச்சல், சீதசுரம், அரோசிக சுரம், தண்டுசுரம், சிறைச்சாலைசுரம், சலதோஷசுரம், வேர்வைச்சுரம், இரவு பயங்கரமான சொப்பனத்திலுண்டாகுஞ் சுரம், அம்மைவார்க்கிறதினு லுண்டாகுஞ் சுரம், காமாலைசுரம், எலும்புருக்கிக் காய்ச்சல், அழலைசுரம், மூலைவாதக்காய்ச்சல், பால்பெயர்ச்சிக்காய்ச்சல் பிள்ளைபெற்றக் காய்ச்சல்.

காய்ச்சுக்கட்டி - காசுக்கட்டி

காய்ச்சுக்குப்பி-ஓர்சீசா

காய்ச்சுண்டி-காய்ச்சுகட்டி
காய்ச்சுப்பு-சவட்டுப்பு
காய்ச்சுலவணம் - காய்ச்சிச் சாரம், வளையலுப்பு
காய்ச்சுரை- புளிச்சக்கீரை, காட்டுக்காய்ச்சுரை.
காய்ச்சுறுக்கு - புளிச்சகீரை
காய்ஞ்சோறி-ஓர் பூண்டு
இதன் வகை : எருமைக் காய்ஞ்சோறி, கறுப்புச் காய்ஞ்சோறி, சிறு காய்ஞ் சோறி, பூனைக்காய்ஞ்சோறி
காய்த்தானியம்-முசுகுட்டை
காரணசத்தி-எவக்ஷாரம்
காரணன்-பிரதபாஷாணம்
காரம்-காரியம், மரவயிரம்
காரவல்லி-பாதல்
காரன்-சோரபாஷாணம்
காரி-ஆவிரை
காரிக்கூள்-ஓர் காளான்
காரிகை-கொடுவேலி
காரியக்கடிசு-கற்பாஷாணம்
காரிரத்தம-ஆடுதின்னாப்பாளை
காரீயம்-ஈயம்
காருச்சிவல்-கடற்பாசி
காருடம்-மருக்காரை கறிப்புடோல்.
காருராசி-கறிப்புடோல்
காருன்னி - ஆடுதின்னாப்பாளை
காரை-ஓர் செடி
இதன் வகை : குத்துககாரை, பெருங்காரை, மதுக் காரை, மருக்காரை பூங் காரை.
கார்-கார்நெல்
கார்கோனி- தேள்கொடுக்கி
கார்கோளி-கோரைப்புல்
கார்கோழி - கருங்கொள்ளு, கருஞ்சீரகம்
கார்ப்பசம்-பருத்தி
கார்போகரிசி-ஓர் பூண்டு
கார்ப்பான் - கையாந்தகரை
காலகம்-சேங்கொட்டை
காலன்-காந்தபாஷாணம்
காலாயுதம்-சேவல்
காலி-காலியாந்துவரை
காட்டு முருக்கு-புன்முருங்கை
காலேயம்-கள், அகில், மோர், கஸ்தூரி, மஞ்சள்
காவகர்-சேங்கொட்டை
காவட்டம்புல்-மாந்தப்புல்
காவற்கலி-வாழை
காவன்-சிலந்திப்பூச்சி
காவா-காட்டுமல்லிகை
காவாளை-காட்டுமல்லிகை காய்வேளை
காவி-கருங்குவளை, கருங் காலி, அவுரி, மருந்துருண் டை, கறுப்பாச்சாயம்
காவிருளை-காய்வேளை, கொழிஞ்சில், வீரம், அலரி.
காளகம்-மருக்காரை
காளம்-அவுரி, எட்டி
காளி-கக்கரி, எட்டிமரம்
காளிகம்-மணத்தக்காளி
காளிந்தம்-ஏலம்
காளிந்தி-வாகைமரம்
காளினி-கத்தரி
காறடி-மருக்காரை
காலல்-காறக்கொட்டி
காறைக்கொட்டி - ஓர் மருந்துப் பூண்டு
காற்பாசம்-பருஞ்செடி
கானகம்-கருஞ்சீரகம்
கானகத்தூமம் - கற்பாஷாணம்
கானகத்தேறு-மஞ்சள்
கானமௌவல் - காட்டுமல்லிகை
கானவிருக்கம்-பாத்திரி
கானனுசாரி-நன்னாரி

கானலிந்திரன்- கொடுவேலி
காணுவேளை-ஓர் பூண்டு
கானிலம்-கொடுவேலி
கான்மரம்-ஆலமரம்
கான்மா-பன்னி

காடிநீர்-புளித்தசலம், அசீரணம், சிலபிணிகள், பித்தம், பேதி மயக்கமும்போம்; அவிழ்த முறிவும்உண்டாம்;

காடைக்கண்ணி சாதம் - ஐயம்,வாதமும்போம்;எரிவு, பித்தம் உண்டாம்.

காடைக்கறி-சோகை, பலவித நோயும்போம். பத்தியத்திற்கு ஆகும்.

காடைச்சம்பா-அனல், மேகமும் போம் பலமுண்டாம்

காடைச்சாறு - கண்பிணிகள், கண்புண், பித்தவாதமும் போம். உடல் பருமன் உண்டாம்.

காட்டாத்திப்பூ - உதிரக்கடுப்பு, உதிரக்கழிச்சல், பேதி, மேகமும் போம்.

காட்டாத்தி மரம்- அதிசாரம், காசம், மந்தம், விஷமும்போம். அதிமோகமுண்டாம்.

காட்டாமணக்கம் பால்- இரணம், கட்டி, குன்மம், வெள்ளை யொழுகலும்போம்

காட்டாமணக்கிலை-உலர்த்தல், உள்ளமூலம், ஒட்டு மேகம், கட்டி, கரப்பான், குன்மம், சிரங்கு தலைநோய், புலிகம், வாதம், விரணம், வெடிகிரந்தி, வெட்டையும் போம், விந்துமுண்டாம்.

காட்டுக்கருணை - சுரதோஷம், முளைமூலம், மேகமும் போம், கரப்பான், தீபனமுண்டாம்.

காட்டுக்கோழிகறி- அதிக பலமுண்டாம்
குட்டங்களும் போம்.

காட்டுச்சீரகம் - கருஞ்சீரகம்,குன்மவாதம், கைகறுப்பு பித்தம், மேகமும் போம், தேகக்குளிர்ச்சி உண்டாம்.

காட்டுத் துளசி - இரைப்பு போம்.

காட்டுப்பழுபாகல்-காசம், பித்தம் வாதமும்போம், பசி போசன விருப்பமு முண்டாம்.

காட்டுப்பன்றி - குடல்வாதம், சூதநெகிழ்ச்சி,ரோகம், சருகீல் ரோகம், வாதமும் போம். கிரந்திசீதம், விஷக்கடியுமுண்டாம்.

காட்டுப்பிராயன்பால் - பல் நோய் போம்.

காட்டு மல்லிகைவேர்-பேசரம், தாகம், நாவறட்சி,மந்தம்,பேதியும்போம்.

காட்டுமாங்காய் - தாபம் போம்.

காட்டு முருங்கை மூலம்- ஐயம், கொடிய விஷம், ஜன்னி, பிரவீச்சும் போம். உட்டினம், கண்குளிர்ச்சி, கசப்பு முண்டாம்.

காட்டுவள்ளி- உடலூதல் சீயக்குளுமை, பலமுமுண்டாம்.

காட்டேலம் - அதிசாரம், அருசி சிலேட்டுமம், தீராத வாந்தி, பித்தமும் போம்.

காண்டாமிருகக் கொம்பு- தாகம், தோஷம், வெள்ளை

விழலும் போம். தேகமிறுக லுண்டாம்.

கொதாட்டிக்காய்- வாதம் போம்.

காந்தம்- இரும்புக்கு சத்துரு, கண்ணோய், காமலமேகம், குன்மம், சீதம், சோபை, திரிதோஷம், நீராமை, பாண்டு, பிராயம், பெருவயிறு, வெட்டையும் போம். ஆயிசு பலம் பசியுமுண்டாம்.

காந்தசிந்தூரம் - அதிசார சுரம்,கபம், காசம், காமாலை சுவாசம், பாண்டு, வயிறு ளைச்சல், வாந்தியும் போம்.

காந்தசிந்தூர பத்தியம்- அகத்திக்கீரை, உப்பு, எள்ளு, கடுகு, கத்திரிக்காய், கொத்தவரைக்காய், கொள்ளு, பாவக்காய், புளி, மாங்காய் ஆகாது.

காய்க்கஞ்சி யன்னம்- சுடுகை கஞ்சி, பித்தவெப்பும் போம். சிலேட்டுமம், தேககாந்தி, பருத்ததேகமு முண்டாம்.

காய்ச்சும் பாலுக்கு நீரளவைக்கூறல்-பசு, வெள்ளாடு இவைகளின் பாலுக்கு எட்டிலொரு பங்கு சலமும், எருமை, செம்மரி இவைகளின் பாலுக்குச் சரிபங்கு சலமும் விட்டுக் காய்ச்ச வேண்டும். சுக்கும் சிறுகாஞ்சொரிவேரும் போட்டு சுவற காய்ச்சிய பால் வெள்ளாட்டுப்பாலிற் கொடுக்கவும்.

காய்ந்தாறிய நீரில் ஸ்நானம் செய்ய சந்நி தேகநோயும் போம். பசி, பலம், கண் துலக்கமும் உண்டாம்.

காய்ந்தாறியவிளநீர்-கபம், காசம், தாகசுரம், பித்தமும் போம.

காய்ந்தாறிய வெந்நீர்- அதிசாரம், ஐயம், உழலை உவர்ச்சி, கண்ணோய், குன்மம், திரிதோஷம், சர்த்தி, சுரம், சூலை, செவிநோய், பித்தம், மயக்கம், மூச்சை, மேகம், வாதகோபம், விக்கல், விஷமும் போம்.

காய் வள்ளிக்கிழங்கு - அக்கினி வெப்புபோம். சிரங்கு புண், வாதமுண்டாம்.

காராமணிப்பயறு-வாய்வு, பல பல ரோகமும் மூலமுமுண்டாம்.

காராமணியிலை- கழிச்சல், மூலம், வாய்வுமுண்டாம்.

காராம்பசும்பால்- ஐயம், இரத்தபித்தம், கண்ணோய், க்ஷயரோகம், பால்களுடைய தோஷம் போம்.

காராம்பசுநெய்-சிரசு, நெற்றி, புருவம், விழிநோய்களும் போம். கண்ணுக்கொளி, தேகவழகு, பொன்னிற முண்டாம்.

காரீயம்-கருவங்கம்

காரெள்ளு - திலர்தத்திற்காகும்.

காரைப்பழம்- அதிசாரம், இரத்தக்கடுப்பு, சீதக்கடுப்பு போம்

காரையிலை - இரத்தக் கடுப்பு போம். புளி சேர்த்து சமைத்து சாப்பிடவும்.

காரரிசி-கரப்பான், தேகத் தாளிப்பு, பலம் மந்தம் வாய்வு முண்டாம்.

கார்காலம்- ஊதல், காந்தி, தாகம், நித்திரை போம். பலம், வாதம், வியர்வை, வியத்தியும் உண்டாம்.

கார்காலமணப் பூச்சு- அகிற்கூட்டு, கற்பூரம், கஸ்தூரி, சந்தனம் இவைகளால் இருமல், இழுப்பு, இளைப்பு, உட்சுரம், காசம், தாகம், தேகவியர்ப்பு, வாய்வும், போம். காந்தி,கீர்த்தி, திறம், நேத்திரத் துலக்கம், வீரியமும் உண்டாம்.

கார்போகரிசி - கரப்பான், சருவநஞ்சு, நமைச்சல், சொறி சிரங்குடன் வாதகபமும்போம், பித்தமுண்டாம்.

காலபேத விரோசனம்- அரைத்த மருந்து, எண்ணெய், கியாழம் என்னும் இம் மூன்றிலொன்று கோடை காலத்தில் பேதிக்குக் கொடுக்கத்தக்க மருந்தாம். பனிக் காலத்திலாவது மழைக்காலத்திலாவது மேற்படி மருந்தை கொடுத்தால் அம் மருந்துகளின் குணங்கள் கெட்டுவிடும். மேற்சொல்லிய மூன்று காலங்களிலும் உப்பாவது நேர்வாளமாவது பலவிதக் கள்ளிப்பாலாவது இரசமாவது சேர்ந்த மருந்தைக்கொடுத்தால் கிரமமாக பேதியாகும்.

காலைக்கறிக்கான பயறு- உழுந்து, எள்ளு, கடுகு, காயம், காராமணி, சிறுபயறு, சுக்கு, தட்டைப்பயறு, துவரை, தோல்போக்கின கடலை, மிளகு, மொச்சைக் கொட்டை இவையாகும்.

காலைக்குளியல்-பல் நோய் போம், பசி உண்டாம்.

காலையில் சிலம்பு மல்யுத்தஞ் செய்தல்- கொட்டடி, தாலிம்கானுவித்தை, கபவாதம், சூலைவலியும் போம். பசி, பலம், மலமிறங்கல் மெய்யிறுகலும் உண்டாம்.

காலையில் பச்சைப்பாலுண்ணல்- ஆண்குறியெரிச்சல், இரத்த பித்தம், க்ஷயம், காலெரிச்சல், கையெரிச்சல், பாண்டு, மெய் யெரிச்சலும் போம். விந்து புஷ்டியுண்டாம் பிள்ளைகளுக்குமாம்.

காலைவிழிப்பு-பித்தம்போம் வாத பித்த ஐயஞ் சமன்; நரம்புத்துவார நீர்த்தெளிவு, புத்தித்தெளிவு முண்டாம்.

காலை வெய்யல் காயல் உண்டாகாத பிணியெல்லாமுண்டாகும்.

கால்கூறுகாய்ந்தநீர் - பித்தம் போம்.

காவட்டம்புல்- மணக்கத்தம்புல், கணமாந்தம், தாகசுரம், பேதியும் போம்.

காவிக்கல்-அக்கி, அரோசகம் பித்தம், மருந்தின்வேகம் மும்மலக்குத்து மேகச்சூடு, வாந்தியும்போம், தேககாந்தி யுண்டாம்.

காவிரிநதிநீர்- இளைப்பு உதிரக்கட்டி, காசம், சுவாசம் சோகை, தொண்டைக் கட்டு, நீரேற்றம், பொருமல், வாய்வரலும் போம்.

காளான்சம்பா-வாயுபோம் ஆரோக்கியம், கல்லைப்போன்ற பலமுமுண்டாம்.

காருக்கருணை - இரத்த மூலம், கபம், கணைல், மந்தம், முளைமூலம், வாதமும் போம்; தீபன முண்டாம்.

காறுகருணை- மூலநோய் போம். கரப்பான், காணாக் கிரந்தி, கோழை, சிரங்கு, சோறி, தினவு, மந்தமுமுண்டாம்.

காணுங்கோழிக்கறி- இருமல், கரப்பான் மற்று மநேக நோயுண்டாம். பத்தியத்திற் காகும்.

காணுமுருங்கை- அதிக வாதம் கண்குளிர்ச்சி யுண்டாம்.

காணுய்வாழை- அனல் இரத்த பேதி, குழிப்புண், பெரும்பாடு,முலைக்கண் புண்ணும் போம். ஐயம் போக முண்டாம்.

கி

கிகிணி-கஞ்சரீடம், காக்கணஞ் செடி.
கிச்சிலி-நாரத்தை
கிச்சிலிக்கிழங்கு- இங்குறுப் பல்லி, ஓர் மூலம்
கிஷ்ணம்-கறுப்பு

கிஷ்ணசிங்கு- வாததோஷம், கொல்லுந் தன்மையுள்ள ஓர் நோய்.

கிஷ்ணபாணம்-எட்டி
கிஷ்ணபேடம் - கடுகுரோகணி
கிஷ்ணவாணம்- உலோக மணல்
கிஷ்ணவல்லி-நன்னாரி
கிஞ்சபன்னி-நாயுருவி
கிஞ்சம்-புளிமா
கிஞ்சி-வேம்பு
கிஞ்சுகம்- முண்முருக்கு, முருக்கு, பலாசு
கிடை- கிடைச்சி சடை, சடைச்சி, கிடை.
கிட்டக்கல்-குமிட்டக்கல்
கிட்டம்-இரும்புக்கிட்டம்
கிட்டி-சின்னி
கிட்டிக்கிழங்கு-சின்னிக் கிழங்கு
கிட்டிரம்-நெருஞ்சில்
கிட்டினன்-திப்பிலி
கிணிதி-கிலுகிலுப்பைச் செடி
கிண்ணிற்கற்பூரம்- இரசகற்பூரம்

கிச்சிலிக்கிழங்கிலை-கிரந்தி, புழுவும்போம். வாசனை யுண்டாம்.

கிச்சிலிக்கிழங்கு- கபம், தலைவலி, புண், விஷமும் போம். வாசனை யுண்டாம்.

கிட்டம்- உதிரக் கட்டி, உதிரதோஷம் சயரோகம், சலக்கூர்மம், சோகை, நரை, திரை, நீராம்பல், பாண்டு. மகோதரம், வாதம், விஷபாகம், வெப்பும் போம்.

கிட்டிக்கிழங்கு-கபம், மேகம் போம். தீபனம், பித்தம் சமனுண்டாம்.

கிணற்றுநீர்-ஊளை, சேத்தும வாதம் போம். அழகு உட்டின சீதம் சமன், சூடு, தேக வலுமை, பசி, பலம், மெய்க் காந்தலு முண்டாம்.

கிணற்றுப்புநீர், சீதம்,வாத சிலேத்துமமும் போம். கிரிச்சிரம், மலம், மூத்திரக்கடுப்பு மேனி கருகல் வெட்டையும் போம்.

கிணற்றுமீன் கறி-குஷ்டம், பீனிசம், பித்தம், வாதகுன்மமும் உண்டாம்.

கிரந்திநாயகம்- உஷ்ணம் கரப்பான், கருங்கிரந்தி, சீதம் செங்கரந்தி, புண், பூதமருள், விஷம், விழிநோயும் போம்.

கிருட்டிபக்ஷிக்கறி- ஆலாலபக்ஷிக்கறி, இரத்தக் கழிச்சல், வாந்தியும்போம்; கடுப்புபித்தவாத முண்டாம்.

கிருமிசத்துரு- சிலேத்துமம் காசம், புழுக்கள், வாதக்கட்டும் போம்.

கிழங்கான்மீன் - பழமலம் பிணியனைத்தும் போம்; உடல் வளரல், பசியுண்டாம் பத்தியத்திற்காகும்.

கிளிஞ்சி சுண்ணம்- சிப்பி சுண்ணம், கால்வெடிப்பு குட்டமும்போம்; காரமுண்டாம்.

கிளியூரல்பட்டை- சுரம், கணல் வெப்பமும் போம்; தொனி வாசமு முண்டாம்.

கிளுவைவேர் - விரணங்கள் போம்.

கிளுவைப்பக்ஷிக்கறி - சிரங்கு, பித்தம், புண்ணும் போம்; முலைப்பாலில் போகமு முண்டாம்.

கித்துள்-கூந்தற்கமுகு

கிந்திகம்-திப்பிலிமூலம்

கிரசேமிரம்- பச்சைக்கற்பூரம்

கிரஞ்சனம்-முருங்கை

கிரந்தி-ஓர் நோய்

அதன் வகை: அழிகிரந்தி, கணுக்கிரந்தி, கருங்கிரந்தி.

கிரந்தி-ஏலத்தோல், நெல்லிப் பருப்பு,

கிரந்திகம்-திப்பிலிமூலம்

கிரந்திநாயகம்- சிலந்திநாயகம்

கிரந்திமூலம் - திப்பிலிமூலம்

கிரமுகம்-கமுகு

கிராகதி-நிமவேம்பு

கிராம்பு-ஆமை

கிராணி-ஓர் கழிச்சல்

கிராணிக் கழிச்சல்- ஆறு கிராணியைப் பார்க்கவேண்டியது.

கிராணித்திரவியங்கள்-18 அவையாவன: பொடுதலை, நாய்வேளை, சிறுகுறிஞ்சா வேர், புளியாரை, வசம்பு, திரிசாரம், கரியவேம்பு, அழிஞ்சல், பெருங்காயம், இருசாரணை, பஞ்சலோகம், மிளகு பாவட்டை, நற்சீரகம், முட்காய்வேளை, அகிற்பட்டை, காவட்டம் புல், ஐந்துப்பு.

கிராம்பு-ஓர் சம்பாரம்.

இதன் வகை: காட்டுக் கிராம்பு, நீர்க்கிராம்பு, கிராம்பு 8-திராம் சதைத்து அரைப்படி கொதிக்கிற தண்ணீரிவிட்டு ஆறினபின் இறுத்து 1-அல்லது 2-அவுன்சு விதம் ஒரு வேளைக்குப் பிராயமானவர்களுக்குக் கொடுக்கில் அஜீரணம், வயிற்று நோவு, வாயுகுன்மம், ஆயாசம், அக்கினி மந்தம் இவைகள் எல்லாந் தீரும்; இது வாந்தியை நிறுத்தவும் உபயோகப் படும்.

கிரிகன்னி - வெள்ளைக்காக்கணம்.

கரீச்சரிடம-சாதிக்காய்

கிரிமல்லிகை-மலை மல்லிகை, வெட்பாலை.

கிரீச்சரீட்டம்-சாதிக்காய்

கிரிராத்துவேர்-நிலவேம்பு

இது ஒரு நேர்த்தியான பலன் கொடுக்கும் ஔஷத

மாயிருக்கிறது. இதை கீழ்ச் சொல்லி யிருக்கிற பிரகாரம் அதிக பலனுடனே கொடுக் கலாம். கிரியாத்துக் குச்சைச் சதைத்து 1-அவுன்சு அரை புட்டி கொதிக்கிற தண்ணீரி லிட்டு இரண்டு மணி நேரம் வைத்துப் பின்பு வடிகட்ட வேண்டும். இதில் ஒரு வேளைக்கு 2-அல்லது 3-அவுன்சு வீதம் தினம் மூன் றுதரங் கொடுக்க வேண் டும். இதனுடன் கிராம்பு கறு வாப்பட்டை ஏலம் வகைக்கு 1-திராம் சதைத்துக் கொண் டால் சாரம் அதிகமாகும். எல்லாப் பலவீனங்களுக்கும் முககியமாய் சுரமுண்டான பின்னிருக்கும் பலவீனத்துக் கும் அசீரணத்திற்கும், அக் கினி மந்தத்துக்கும் நன்று. மேற்சொன்ன அவுஷதம் குளிர் சுரத்துக்கும், முறைக் காய்ச்சலுக்கும் கொடுக்க லாம்.

கிரீடம்-வேலிப்பருத்தி

கிரீட்டி-பிரண்டை

கிருட்டி-பிரண்டை

கிருட்டிணசீராம்-கருஞ்சீரக

கிருட்டிணபாணம்-எட்டி [ம்

கிருட்டிணபேணம்- கடுகு ரோகணி

கிருட்டிணமூலி-துளசி

கிருட்டிணவல்லி-நன்னாரி

கிருட்டிணி-காக்கணம்

கிருதம்-நெய், செம் முருங் கை, கண்டாதி கிருதம், பொன்னாங்கணிக் கிருதம், வல்லாரைக் கிருதம்.

கிருமி-புழு

கிருமிநாசம் - குரோசானி ஓமம், புங்கம்பாளை, பேய்ப் பீர்க்கு, பலாசம்விரை.

கிருமிக்குன்றம் - வாலுளு வையரிசி.

கிருமிசத்துரு-பூவரசம்விரை

கிருமிச்சுரம்-ஓர் சுரம்

கிருமிச்சொறி-ஓர் சொறி

கிருமி மலடு-ஓர் மலடு, ஆறுமலடு பார்க்க

கிருமியோகம்-ஓர் மருந்து

கிரேந்தி- கச்சோலம், ஏலத் தோல்.

கிலுங்கி-கிலுகிலுப்பை

கிலுகிலுப்பை-ஓர் செடி

அதன்வகை: வெள்ளைக் கிலுகிலுப்பை, வட்டக் கிலு கிலுப்பை.

கிழவி-முருங்கை

கிளவரி - தண்ணீர் விட் டான் கிழங்கு

கிளிமூக்கிலை -கற்றாழை

கிளை-மூங்கில்

கிறுசன்-குங்குமப்பூ,மஞ்சள்

கிறுதுவேதன்-பீர்க்கு

கிறுத்துவம்-அகில்

கிணை-விளா, புடம் போடு தற்குச் சரக்குமேலிடும் கவ சம்

கீ

கீரி யிறைச்சி - கீறிப்பிள் ளைக்கறி, சிறங்கு,சில்விஷம், சொறி, நீரிழிவு, பல்லரணை யும் போம்; கெம்பீரம், வீரியமு முண்டாம்.

கீரைத்தண்டு - அனல், இரத்தக்கடுப்பு, நீர்க்கடுப்பு, வெள்ளையும் சில நோயும் போம்; சீதளம் வாய்வு முண் டாம்.

கீழாநெல்லி - இரத்தப் போக்கு, காமாலை, சப்தத் தாதுக்களின் சுரம், சீதம், பித்தம், பூதப்பேய், மதுமேகம், விரணம், விஷம், விழிநோய்களும் போம்.
கீசகம்-மூங்கில்
கீடமாரி-சிறுபுள்ளடி
கீதவம்-ஊமத்தை
கீரிப்பூண்டு-ஓர் பூண்டு, கீரிமரம்
கீரை-ஓர் பச்சிலை
அதன் வகை: அரைக் கீரை, கலவங் கீரை, குப்பைக்கீரை, கும்மட்டிக்கீரை. கோழிக் கீரை, கொடிப் பசலை, சிறுகீரை, துடுப்புக் கீரை, பிண்ணாக்குக் கீரை. புளிச்சக் கீரை, மான்கீரை, முடிக்கீரை, முளைக்கீரை, முள்ளிக்கீரை, விழுதிக்கீரை, வெள்ளிக்கீரை, கீரைத் தண்டு.
கீலகவெட்டை -மிருகாங்கை
கீலாலம்-நீர், இரத்தம், காடி.
கீழாநெல்லி - கீழ்க்காய் நெல்லி.

கு

குகு-குகுதன் என்னும் நாடி
குகுலா-கடுகுரோகணி தேனி
குகைக்காமன்-கல்நார்
குகைமனோத்ததீ - சுவர்ண பேதி
குக்கிலம்-அதிவிடயம்
குக்கில்-குங்கிலியம்
குக்கிற்சூரணம்-குக்கில்
குக்குடச்சூட்டு - கோழித் தலை, கெந்தகம்
குக்குரம்-கோடகசாலை
குக்குலு-குங்கிலியம்
குங்கிலிகம் - குங்கிலியம், வாலுளுவை.
குங்கிலியம்-குக்கில்
அதன் வகை: கருங் குங்கிலியம், வெள்ளைக் குங்கிலியம்.
குங்குமம்-குங்கும மரம், செஞ்சாந்து.
குங்கும பாஷாணம் - அஞ்சற்குளச்சி.
குங்குமவர்ணி-அரிதாரம் மஞ்சடகடல்.
குங்குலு-குங்கிலியம்
குசந்தனம்-செஞ்சந்தனம்
குசம்-தருப்பைப்புல்
குசும்பா-செந்திருக்கம்பூ
குங்கசயம்-தாமரைப்பூ
குசை-தருப்பைப்புல்
குச்சத்தின்பாதி- சிறுபுள்ளடி
குச்சம்-குன்றி, நாணல், பற்பாடகம்.
குஞ்சம் - குன்றிக்கொடி, புளிநறளை, சீதாங்க பாஷாணம், குறுணியிலெட்டிலொரு பங்கு.
குஞ்சரம்-கருங்குவளை
குஞ்சராசனம்-அரசு
குஞ்சுரம் -குன்றி
குடகாம்-வேலிப்பருத்தி, உத்தாமணி.
குடக்கினி-கருங்காலி
குடசப்பாலை-வெட்பாலை, கறிப்பாலை.
குடகம்-மலைமல்லிகை வெட்பாலை
குடப்பம்-இலுப்பை
குடமணம்-கருஞ்சீரகம்
குடமல்லிகை-மல்லிகை
குடம்-சருக்கரை
குடல்-குடர்
அதன் வகை: இரைக் குடல், கற்குடல், சிறுகுடல்,

தீனிக்குடல், பெருங்குடல்
மணிக்குடல், மலக்குடல்.
குடலைப்பற்றியவை: குடல்
திருகுகிறது, குடலேற்றம்,
குடலைப்பிடுங்குகிறது, குடல்
கொழுத்தது, குடல் வாதம்
குடற்கொழுப்பு, குடற்சவ்வு.
குடவளப்பம்-இலுப்பை
குடவன்-கோட்டம்
குடான்-செம்முள்ளி
குடிநீர்-கஷாயம்
குடியொட்டிப்பூண்டு-குருக் [கு
குடிலம்-குராமரம்
குடிமரம்-காரை
குடைவேல் - சந்தனவேலா மரம்
குடைக்கிழங்கு- சிற்றரத்தை
குடோரி-வங்கமணல், வெங்காரம், வெள்ளைப் பாஷாணம்.
குட்டம்-கோஷ்டம், குஷ்டம்
குட்டநாசனம்- வெண்கடுகு
குட்டிப்பிடுங்கி-சிற்றரத்தை கோஷ்டம்
குட்டினம்-கருஞ்சீரகம்
குணகண்டி-சிவதை
குணபலம்- அதிவிடையம்
குணலி-சீந்தில்
குணுக்கு-வெள்ளி
குண்டலி-இசங்கு, சீந்தில்
குண்டானிக்கொடி-ஓர் கொடி
குண்டுரோசனை - குண்டோசனை
குண்டைச்சம்பா - பொறிக் குரும்பை
குதபம்-தருப்பைப்புல்
குதம்-வெங்காயம், தருப்பை
குதானன்-தாளி
குதிரை-ஊர்க்குரு
குதிரைகொல்லி- ஓர் பூண்டு
குதிரைப்பயிரி-ஓர் பூண்டு
குதிரைப்பற்பாஷாணம்-ஓர் பாஷாணம்
குதிரைப்புடுக்கன் -ஓர் மரம்
குதிரைவாலி-ஓர் பூண்டு [ல்
குதிரைவாலைச்சாமை-ஓர்பு
குதிரைவாலிப்புல்-ஓர் புல்
குதம்பகர்-கும்பை
குதை-பாசி
குத்தாசம்-பெருங்காயம்
குத்தாலம்-காட்டாத்தி
குத்தாலா-கடுகுரோகிணி
குத்திரம், குத்து-சணல்
குத்துக்கரந்தை, குத்துக்காரை, குத்துக்கோரை, குத்துத்திராய், குத்துப்பகன்றை, தலைக்குத்து, மூலைக்குத்து, குத்துக்காயம்.
குந்தம்-நாய், கற்பாஷாணம், தாலம்பப்பாஷாணம்.
குருந்து-கண்ணோய்
குந்தி-கள்
குந்துரு-குந்துருக்கம்
குபசுபா-எட்டி
குபோகம்-சின்னிமரம்
குபையம்-சிறுபுள்ளடி
கும்பிக்குட் சமைந்தகன்னி-பஞ்சபட்சிபாஷாணம்
குப்பிச்சாரம்-காசிச்சாரம்
குப்பிலவணம்-வளையலுப்பு
குப்பைமேனி-ஓர் பூண்டு
குமஞ்சான்-தூபவர்க்கம்
அதாவது: ஆண் குமஞ்சான்-குங்கிலியம், பெண் குமஞ்சான்-சாம்பிராணி
குமட்டு- அருக்களிம்பு, உவ [ட்டு
குமட்டு-மாவிலங்கு
குமரி-கற்றுழை
குமிகை-வெள்ளெருள்ளு
குமிதம்-தேக்கமரம்
குமிதிகயு-தேக்கு

குமிழ்-குமிள்-நாணல்
அதாவது: செங்குமிழ் நிலக்குமிழ், பெருங்குமிழ்,
குமுதம்-ஆம்பல்
அதன் வகை : வெள் ளல்லி, செவ்வாம்பல், செவ் வல்லி.
குமுந்தகம்-கற்பாஷாணம்
குமுலி-துளசி
கும்பகம்-தொட்டி, சாலா ங்க பாஷாணம்.
கும்பஞ்சான்-சிவதை
கும்பம்- கும்பவரகம், சிவ தை, பவண்டுறுகம், தாலம் பம்.
கும்பளம்-பூசதி
குயக்காலம்-நிலக்கடம்பு
குயத்தினலகை -நிலவாகை
குயபீசகம்-எட்டி
குயா-கோங்கு
குயின்மொழி-அதிமதுரம்
குய்யபீசகம்-எட்டி [ணம்
குரகதம்-குதிரைப் பற்பாஷா
குரக்கன்-கேழ்வரகு
குரங்கம்-எட்டி
குரங்கு-மொசுமொசுக்கை
குண்டம்-பச்சைப்பூ வுள்ள மருதோன்றி
குரமடம்-பெருங்காயம்
குரம்-தருப்பைப்புல் - பாகல்
குரல்திணை-பாதிரிமரம்
குரவகம்-செம்பூவுள்ள மருதோன்றி, வாடாக்குறி ஞ்சி
குறவம்-கோட்டம், பேரீந்து
குரவரம்-குறிஞ்சா
குரவு-குராமரம்
குரா-ஓர் செடி
குராகானி-ஓர் பூண்டு
குரு-துருசு, அம்மை
குருகு-குருக்கத்தி
குருசம்-வெந்தோன்றி
குருதி-உதிரம்,மூளை
குருதி-நெய்
குருந்து-குருந்தக்கல், காட்டுக்குருந்து, காட்டெலு மிச்சை, பெருங்குருந்து, காட்டுநாரத்தை.
குருமுறை - சவுக்காரம், கோடாசுளி.
குருவி-குன்றுமணி
குருவிச்சி-பல்லூரி
குருவித்தம்- குன்றி, சாதி லிங்கம்,கோரைக்கிழங்கு
குருவுக்காதி பச்சைக் கற் பூரம், வேத சிந்தூரத்தில் பிரதான சரக்கு வேதைச் சிந்தூரம்
குருவேர்-ஓர் பூண்டு
குருளை-ஆமை
குலகாமம்-பேய்ப்புடோல்
குலகாயம்-நிலக்கடம்பு
குலசுவேதன்- சவரிலோத்தி [ரம்
குலத்தம்-கொள்ளு
குலப்பம்-செம்புமணல்
குலம்பா-பேய்ச்சுரை
குலவுகாசம்-நாணல் [னம்
குலவுரி-சந்தனம்,செஞ்சந்த
குலாங்கிலி- காவட்டம்புல்
குலரதனி-கடுகுரோகினி[கம்
குலிகம்- இலுப்பை, இங்குலி
குலிசம்- இலுப்பை மரம், வன்னிமரம், கற்பரி பாஷா ணம்.
குலிமல்-நாகபாஷாணம்
குலத்தம்-கொள்ளு
குலுமமூலம்-இஞ்சி
குலைக்கல்-கோரோசனம்
குலோமி-வெள்ளறுகு
குல்லரி-இலந்தை
குல்லை-கஞ்சா, துளசி, வெட் [சி
குலவலி-இலந்தை

குவடு-சங்கபாஷாணம்
குவட்டிற்புளிதம்-சங்க பாஷாணம். [கல்
குமட்டினியம்-நீலாஞ்சனக்
குவட்டுக்கூர்மை -தொட்டிப் பாஷாணம்.
குவட்டுநுண்முலைச்சி - சுவர்
குவம்-ஆம்பல் [னபேதி
குவரிகுண்டல்-வாலுளுவை
குவலம்-குவளை, நெய்தல்
குவலை-கஞ்சா, துளசி
குவளை-கருங்குவளை, உற்பலம், செங்குவளை
குவாகம்-கழுகு
குழம்பு-ஓர் மருந்து

இதன் வகை: அகஸ்தியர் குழம்பு, தோஷாமிர்த குழம்பு, லிங்கக் குழம்பு கருங்குழம்பு, சண்டமாருதக குழம்பு, பரிமளக் குழம்பு.

குருத்தாமரை-ஆகாசத் தாமரை, கொட்டைப்பாசி
குழிமிட்டான்-நத்தைச்சூரி
குழை-நெய்தல்
குளவி-மலைப்பச்சை
குளரி-நீர்க்குளரி
குறஞ்சனம்-வெங்காரம்
குறஞ்சி-செம்முள்ளி
குறத்தி-நிலப்பனை
குறவன்-இரதம்
குறி-அடையாளம், குணம் தோற்றம், இலட்சணம்.

1-நாடிக்குறி

பெருவிரல் முதல் மூன்று விரல்களுக்குள்ளாக நெல்லு மணிப் பரிமாணமான நாடி நடக்கும். அது சர்வாங்கமுங் கூடியிருக்கும் கரமூலத்திலும், பாத மூலத்திலும், நாடி பதிந்திருக்கு மாகையால், ஸ்திரீகளுக்கு இடது பக்கமும, புருஷருக்கு வலது பக்கமும் பார்க்க வேண்டும்.

வாதபித்த நாடிகள் முதல் விரலின் கீழ்நடக்கும். சிலேத்துமநாடி நடுவிரலின் கீழ் நடக்கும்; அப்படிக்கில்லாமல் தாண்டி நடந்தால் ஆச்சரியநாடி யென்றறிக.

வாதநாடி வக்கிர கதியாய் நடக்குந் தவளையைப் போலவும், பாம்பைப் போலவும், சிறுபிள்ளை, தொட்டிலைப்போலவும் அட்டையைப் போலவும் நடக்கும்.

பித்தநாடி சலபதாதுவாக விருக்கும். இறகு விரித்த மயில்போல அன்னப்பட்சி போலக் குதிரையைப்போல நடக்கும்.

சிலேத்துமநாடி ஸ்திரகதியாய்க் கோழியைப் போல நடக்கும்.

பித்த சிலேத்தும நாடிக்குறி முதலில் பாம்புபோல் நடந்து உடனே அட்டையைப் போல நடக்கும்.

அசீரணநாடிக்குறி யானை நடையைப்போல நடக்கும்.

தீபன நாடிக்குறி நித்திரை போகிற காகத்தைப் போல நடக்கும.

ஸ்திரி சங்கநாடியும் இந்தப்படியே நடககும்.

அன்னத்தைப்போல் நடந்தால் மலபந்தநாடி யென்றறிக.

சன்னிபாத நாடிக்குறி விறகுசுமை மத்தியில் மூஞ்சூறு ஓடுவது போலவும, குடிலமாயும், சிதிலமாயும்,

மந்தமாயும், சூட்சுமமாயு நடக்கும.

2-பரிசக்குறி

வாதரோகிக்குத் தேகம் கொஞ்சம் உஷ்ணமா யிருக்கும பித்தரோகிக்குக் கொஞ்சம் குளிர்ந்திருக்கும். சிலேத்தும ரோகிக்கு நானாவிதமா யிருக்கும்.

3-சுரூபக்குறி

வாதரோகிக்குச் சரீரங் கறுத்திருக்கும். பித்தரோகிக்குத் தேகம் மஞ்சள் நிறமாயாவது, சிவப்பாயாவதிருக்கும சிலேத்தும ரோகிக்குத் தேகம் வெளுத்தநிறமாயிருக்கும் தொந்தரோகிக்குதேகம் மி சு ரு வருணமாயிருக்கும். சன்னிரோகிக்கு விவருணமா யிருக்கும.

4-சப்தக்குறி

வாதரோகிக்கு வார்த்தை மெதுவாயிருக்கும, பித்தரோகிக்கு வார்த்தை உரத்தத் தொனியோடிருக்கும சிலேத்தும ரோகிக்கு வார்த்தை ஈனசுரமாயிருக்கும். தொந்த ரோகிக்கு வார்த்தை வெகுவிதமாயிருக்கும்.

5-நேத்திரக்குறி

வாதரோகிக்கு கண்கள் கறுத்திருக்கும். கொஞ்சம் நோயுண்டாயிருக்கும். கண்ணில் நீர் பாயும. பித்தரோகிகக்கு கண்கள் மஞ்சள் நிறமாயாவது சிவந்த நிறமாயாவதிருக்கும். சிலேத்தும ரோகிக்குக் கண்கள் பீளை கட்டி வெளுத்திருக்கும். சன்னிபாதத்துக்கு கண்கள் சிவந்தாவது மஞ்சள் நிறமாயாவதிருக்கும் காமாலை ரோகிக்குக் கண்கள் மஞ்சள் நிறமாயிருக்கும்.

6-மூத்திரக்குறி

வாதரோகிக்கு மூத்திரம் வெளுத்திருக்கும். பித்தரோகிக்கு மூத்திரம் சிவந்திருக்கும். சிலேத்தும ரோகிக்கு மூத்திரம் நுரைத்திருக்கும். தொந்த ரோகிக்கு மூத்திரம் மிசிரமாயிருக்கும். காமாலை ரோகிக்கு மூத்திரம் மஞ்சள் நிறமாயிருக்கும்.

7-நாக்குக்குறி

வாதரோகிக்கு நாக்கு வெடித்து முள்ளுண்டாய் மஞ்சள் நிறமாயிருக்கும். பித்தரோகிக்கு கறுத்தாவது சிவந்தாவதிருக்கும. ஐயரோகிக்கு நாக்கில் தினவுண்டாய் வெளுத்திருக்கும். சன்னிபாதரோகிககு நாவில் முள்ளுண்டாய் திரவமில்லாதிருக்கும். தொந்த ரோகிக்கு நாக்கு மிசிரமாயிருக்கும்.

8-மலக்குறி

வாதரோகிக்கு மலம் கருத்திருக்கும். பித்த ரோகிக்கு மலம் மஞ்சள் நிறமாயாவது சிவந்த நிறமாயாவது இருக்கும். சிலேத்ம ரோகிக்கு நுரைகட்டி வெளுத்திருக்கும், தொந்தரோகிககு மிசிர வர்ணமா யிருக்கும்.

ஆகிகசுரக்குறி

சுரமுண்டாய் குளிர் வருதல், சரீரம் புளகித்தல், தாக

முண்டாதல், சந்தாபப்படுதல், கண்கள் நோதல், தலை நோதல், உடம்பு நோதல், வயிறு நோதல், பக்கங்கள் நோதல், அபத்தியத்தில் வாஞ்சையுண்டாதல், நித்திரையதிகரித்தல், கால், முகம், வயிறு வீக்கமுண்டாயிருத்தல், சரீரம் வெளுத்தல், நகங்களிலும் கண்களிலும் இரத்தமில்லாதிருத்தல், வயிறுகழிதல், அசதியாயிருத்தல் உள்ளங்கால், உள்ளங்கை எரிவந்தமா யிருத்தல் இவையென்றறிக.

ஆகிகசுரங்களின் பெயர்கள்

ஏகாகிகசுரம், தவியாகிக சுரம், பஞ்சாகிகசுரம், அர்த்தராத்திரி சுரம், பக்ஷ சுரம், மாறல் சுரம், வாத பயித்திய சிலேத்தும சுரங்கள்.

ரத்தசுரம், மாம்ஸகதசுரம் சருமகத சுரம், அஸ்திகத சுரம், இவ்விதமான நான்கு வித சுரங்களின் நிதானத்தைச் சொல்வோம்.

சருமகதசுரக்குறி

சூட்சுமமாய் சுர முண்டா யிருத்தல், தாகமுண்டா யிருத்தல், நாடி மந்தகதியா யிருத்தல், சூட்சுமமாய்த் தலைநோதல், சரீரம் குளிர்ந்திருத்தல், குடிலசுரம் சந்தத மிருத்தல், சரீரம் இளைத்திருத்தல், சரீரம்வெளுத்தல் இவையென்றறிக.

அஸ்திகதசுரக்குறி

உள்ளே தாக முண்டா யிருத்தல், சரீரம் குளிர்ந்திருத்தல், குடிலநாடி நடந்து கொண்டிருத்தல், சந்தத சுரமுண்டா யிருத்தல், சரீரம் க்ஷீணித்துப் போதல், சரீரம் வெளுத்தல் இவையென்றறிக.

ரத்தகத சுரக்குறி

தீவிர சுரமுண்டா யிருத்தல், தாகமுண்டாயிருத்தல், வேர்வையுண்டாதல், ஆயாசமுண்டாயிருத்தல், தத்பிரமை யுண்டாதல், சரீர நோயுண்டாதல், மூர்ச்சை யுண்டாதல் இவையென்றறிக.

சன்னிபாத சுரக்குறி

கழுத்திலும், நெற்றியிலும், மார்பிலும், வேர்வை யுண்டாதல், தவித்தல், பிரமை யுண்டாதல், சந்தாபப்படுதல், சரீரநோயுண்டாதல், தலைநோயுண்டா யிருத்தல், சர்வாங்கமு மவிதாகமா யிருத்தல், கண்கள் சிவந்து காணல், மூர்ச்சை யுண்டா யிருத்தல், பராந்தி யுண்டா யிருத்தல், கனவு காணல், வயிற்றுச் சூலை யுண்டா யிருத்தல், ஈனத்வனியா யிருத்தல், இவையென்றறிக

வாதசுரக்குறி

முகமும் உதடும் கறுத்துக் காணல், சரீரமெல்லாந் தடித்து நோதல், மெய்நடுக்கல் உடம்பு திமிரெடுக்கல், தேகம் பாரித்திருக்கல், மலபந்தமா யிருத்தல், குளிர்ந்து மயிர்க்குச் செறிதலுமாயிருத்தல், தலைநோயுண்டாயிருத்தல் இவையென்றறிக.

பித்தசுரக்குறி

நித்திரை மெத்தக்காணல், மல மூத்திரஞ் சிவந்திருத்தல், வயிறு கழிதல், வாந்தியுண்டாதல், வாய்பினற்றல், வாதாடுதல், மூர்ச்சை, தாகம், எழுந்திருந்து ஓடல், விக்கல், தவித்திடல், சந்தாபப்படுதல் இவையென்றறிக

சேத்துமசுரக்குறி

நாக்கு முகமுங் கறுத்துக் காணல், மார்பு நோதல், இரைப்பிருமல், உரிசையிலலாதல், மூச்சுவிடப்போகாமல் மயங்குதல், விக்கல், தாகம், மிடருநோய் இவையென்றறிக.

குலச்சவ்வு-முடிமாமிசம்
குழிதந்தம்-நகம்
குருசாரம்-சிவசாரம்
குரேட்டை-விளா
குதிரைப்பல்லன்- வெள்ளைப் பூண்டு.
குருக்கிநாதம்-சங்கிலை
குஜம்பால்-முலைப்பால்
குசம்-தண்ணீர்
குறட்டை-காக்கணன்
குரை-கஞ்சாங்கோரை [று
குலரிச்சோறு- கற்றுழைச்சோ
குக்குடம்-கோழிப்புடம்
குப்பை சதகுப்பை [யம்
குக்குல்-மைசாட்சி, குங்கிலி
குரும்பை-தென்னம்பிஞ்சு
குருரசம்-சித்தரசம்
குருக்குவிரை - பிரமதண்டு
குடவன்-பித்தளை [விரை
குகை-மூசை
குப்பிவிட்டி-அரக்குப்பட்டி
குடோரி-மாத்திரை
குலாமல்லி-முட்செவ்வந்தி
குடோரிக்குடோறிப் பாஷா
குலிசன்-வைரவன் [ணம்
குதிரைமஸ்தி-குதிரை யெலும்பு
குளிகை-மாத்திரை
குருநாள்-வியாழம்
கும்பசம்-கலசம்
குமரி-சோற்றுக்கற்றாழை
குப்பி-சீசா, புட்டி
குளவிந்தம்-மஞ்சள்

குக்கில்-உதடுநோய், கடி. கட்டி, காதுநோய், குனகம், சூலை, நரம்புக்கட்டி, நாநோய், மேகப்புண், வாதவித்திரமுமபோம்.

குங்கிலியம்-குக்கில், எலும்புருக்கிப்புண், சீழ், நீர்பெருக்கல், சூலை, பெரும்பாடு, மேகப் புண்ணும் போம்.

குங்குமச் செவ்வந்தி- கோழை போம்.

குங்குமப்பயறு- பசிபோம். மந்தம், தாகம், வாதசேட்டுமம், வாய்வும் உண்டாம்.

குங்குமப்பூ - அண்டவாதம், அயர்ச்சி, கண்ணிலுண்டாகும்பூ, கபம், கால்வலி, சூலை, தாகம், மேகசலம், விந்துநஷ்டம், சர்த்தி, சலதோஷம், சுரம், செவிநோய், பித்தம், மதுமேகம், மேகநீர், ஸ்திரீகெர்ப்பஉதிரதோஷமும் போம்.

குடசப்பாலைமரம் - வெட்பாலை, கரப்பான், நீரிழிவு மேகம், வாதம், விரணமும் போம்; பேதி கட்டுண்டாம்.

குடியோட்டிப் பூண்டு- குடிக்குச்சனி, இருமல், கடிகள், சரப்பான், சில்விஷம், பல்நோய், புண், பொடி

சிரங்கு, மேகவாய்வு, மேகமும் போம்.

குண்டகச்சி யிளநீர்- அரோகி, தாகம், பழமலமும் போம் தீபனமுண்டாம்.

குண்டற்சம்பா - எல்லாத் தாகமும் போம். கரப்பான், மந்தநோயும் உண்டாம்.

குதிரைக் குளம்படியிலை- நிலக்கடம்பு, நடைவாயு, ஜன்னி, தினவும் போம்.

குதிரைப்பால் - அழகு, வீரிய விருத்தியுமுண்டாம்.

குதிரைமூத்திரம் - கபம் கால் வீக்கம், கிருமி, படர் தடிப்பு, வாதமும் போம், சூடுண்டாம்.

குதிரையேற்றம் - அசுவ சாரி, குளிர்போம். இருமல், சூடு, தீபனம், உடலிறுகல், குடலிறங்கல் இலட்சுமி கடாட்சமுமுண்டாம்.

குதிரைவாடிப் பூண்டு- இடுப்புவலி, ஈளை, கடுப்பு, கண்மயக்கம், கழிச்சல், காசம், சுரதாகம், சொறிபடுவன், பருமாந்தம். மேகம், வாதகபமும், நடுக்கலுமுண்டாம்.

குந்திரிக்கம்-சுவாசகாசம், சிரங்கு, தலைவலி, துர்க்கந்தம், குஷ்டம், படர்தாமரை, பலவிரணம்,பீனிசம், மேகக்கட்டி, விஷக்கடியும் போம்.

குப்பைமேனியிலை - பூனைவணங்கி, உதிரமூலம் கபம், குன்மம், சர்வவிஷம், சுவாசம், சூலை, தினவு, திப்புண், பல்நோய், பீனிசம் மூலம், வாதமும் போம், உப்புக் கட்டுண்டாம்.

குமட்டிக்காய்-காந்தி, காதும் போம். கபம், பல்விழுதல் வாதமுமுண்டாம்.

குமட்டிக்கீரை - ஆத்துதும்மட்டி, அக்கினி சீதம், நளிர் சுரம் போம். உஷ்ணவாயு, பாதமும் உண்டாம்.

குயில்கறி - குன்மவலி, சொறி,பித்தம்,மேகம், வாதமும்போம் போகமுண்டாம். பத்தியத்திற்காகும்.

குருக்கத்திப்பூ-சிரரோகம், தாகம், சிலேட்டுமம், பல் விஷம் பித்தம் விரணமும் போம். கைப்பும் மதுரமாகவுமிருக்கும்.

குருந்து-போதை போம்.

குருவிச்சுப்பூண்டு - குஷ்டம், சீதரத்தம், மேககரப்பான், விஷமாந்தமும்போம்.

குரோசாணிஓமம்-உள்கடுப்பு, கபம், கரப்பான், புண், பேதி,வாதம், வீரியநஷ்டம், வெகு மூத்திரமும் போம், மயக்கமுண்டாம்.

குழம்பின் குணம் -வாயு போம். அதிக காரமுள்ள குழம்புக்கு முத்தோஷம் போம்.

குருபரங்கிக்காய் -பூசனிக்காய், ஐயம், குளிர்ச்சி, மாந்தம்,வாதக்குடைச்சல், வாதசூலையுண்டாம்.

குழிமீட்டான்-தண்ணிமிட்டான், உள்சூடு, கனமாந்தம், குழவிதோஷமும்போம் ஸ்திரீகளுக்கு பாலுண்டாம்.

குழந்தைவன்னி - காசம், மந்தாக்கினி, மேகமும்போம் துர்ப்பலம் பீனிசமும் உண்டாம்.

குளத்துநீர்-குளிர்ச்சி வாதமும் உண்டாம்.

குளத்துமீன்-கபம் மந்தம், மேகமும் உண்டாம்.

குளபாலைமரம்- அதிசாரம் அனல் கரப்பான், சுவாசகாசம், பக்கசூலை வியர்வையும் போம்.

குளிர்ந்தநீர் - திமிர், மந்த வாய்வு, விக்கல், விஷமும் உண்டாம் சுரம் சந்நிபாத தோஷத்திற்கும் ஆகாது.

குறவைமீன் - இருமல், குடல்வலியும் போம். அருசி மலக்கட்டு முண்டாம்.

குறுஞ்சான் கடை - பல நோய்களும் போம். பல முண்டாம்.

குறுஞ்சிநிலம்-ஐயம், கபம் கண்ணெரிவு, சூலையெரிவு, அரோசிகம், பித்தம், சுரம், வயிற்றின்வாயு, ஆமைக்கட்டியும் உண்டாம்.

குறும்பாட்டிறைச்சி-குடல் வாதம் சூலையும் போம்; சொறி, சிரங்கு வாய்வுமுண்டாம்.

குறும்பாட்டுத்தயிர் - முத்தோஷ முண்டாம்.

குறும்பாட்டு வெண்ணெய்-வியாதிகளுக்காகாது.

குன்றிமணிச்சம்பா -அநேக வியாதியும் வாய்வும் போம். இந்திரியபுஷ்டி பலமும் உண்டாம்.

குன்றிவித்து- ஐயம், காமாலை, தாபசோபம், நிறமழுங்கல், நேத்திர நோய் பித்தம்,வியர்வை, வெப்பும் போம்.

வாதபித்த சுரக்குறி

அங்கமெல்லாம் அசதியாதல், நாக்குக்கறுத்துக் காணல், பிரலாபித்தல், நித்திரையாதல், மலபந்தமாயிருத்தல், மலம் வெளுத்தல், வாய்கைத்தல், வடிவு குன்றல், நினைந்து மறத்தல், சியங்கிடுதல், மயங்கிடுதல் இவை யென்றறிக.

தொந்த சுரக்குறி

சடமெல்லாம் நோதல், சுவாசங்காணல், இருமல், வெளுத்த நாக்கு, மயிர்க்குச்சிடுதல்,மிடறுநோதல், தாபமிக வுண்டாதல், தயங்கிச் சஞ்சலித்தல்,வாய்பிதற்றல், தேகம் வழுவழுத்திடல், வேர்வை மிக வுண்டாதல். வாய்கைத்தல், நித்திரைமிசல், மார்நோதல், தலைவலி பிடரிவலித்தல், நாக்கு வழுவழுத்தல், நாக்கு மூக்கு நலமழிதல் இவையென்றறிக.

அசீரணக் குறி

இளைப்பு, விக்கல், வயிற்று மந்தம், மார்பு, தொடை குரல்நோதல், புளியேப்பம், வாந்தி,தாகம்,மூச்சு, வயிறு நொந்து பொருமிக் கொள்ளல், உடம்பெங்கும் திமிராதல் இவையென்றறிக.

அபிகாத சுரக்குறி

அதிக நடையாலும், குதிரை யானையேறி நடத்துவதாலும், சுமை யெடுத்தலாலும அதிகமாய் வேலை செய்ததாலும், பனியில் சஞ்சரித்ததாலும் திமிர், தாகம்,

இளைப்பு, கைகால் தளர்ச்சி உடம்பெல்லா நோதல், மாருத வேர்வை யுண்டாதல், பிரமிக்குதல், குளிர்ந்த போசனத்தில் ஆசையுண்டாகல் இவையென் றறிக.

சன்னிபாதங்கள் பதின்மூன்று

அதாவது: சந்திகசன்னி, அந்தகச் சன்னி, ருக்தாக சன்னி, சித்தவிப்ரமசன்னி, சீதாங்க சன்னி, தாந்தரிக சன்னி, கண்டகுப்த சன்னி கர்நிகசன்னி, புக்னநேத்திர சன்னி ரக்தோஷ்டி சன்னி, பிரலாபசன்னி, ஜிக்வக சன்னி, அபின்னயாச சன்னி.

சந்திக சன்னிக்குறி

தேகம் எப்போதும் போல விருத்தல், சூலைகாணம் சரீரம் பளபளப்பா யிருத்தல், உடம்பு நோதல், தாகம், இருமல், தியக்கமுண்டாதல் இவையென்றறிக.

அந்தக சன்னிக்குறி

தாகங்காணல், பிரமை யுண்டாதல், தாபமுண்டாதல், தலையசைத்தல், கனவு காணல், வாந்தியுண்டாதல், விக்கல்காணல், சுரமுண்டாதல் இவையென்றறிக.

ருக்தாக சன்னிக்குறி

கனவுகாணல், தாபமுண்டாதல், நெஞ்சுநோதல், கிறுகிறுப் புண்டாதல், தண்ணீர்த் தாகமுண்டா யிருத்தல், உதடு உலர்தல், இருமலுண்டாதல், தேகமெல்லாங் குத்தலுண்டாதல், கூச்ச விடுதல், வேர்வைகாணல், கழுத்து நெற்றி வேர்வை காணல் இவை யென்றறிக.

சித்தவிப்ரம சன்னிக்குறி

உடம்பெல்லாம் நொந்து நோயுண்டாதல் வாதமொடு பித்தமிஞ்சுதல், சித்தப்பிரமை யுண்டாதல், கிட்ட விருப்பவர்களை மருண்டு பார்க்குதல், புருவநெரிக்குதல், பாடுதல் ஆடுதல், வாய்பிதற்றல் இவையென்றறிக.

சீதாங்க சன்னிக்குறி

சரீரமெல்லாங் குளிர்ந்திருத்தல் இருமலாதல், இரைப்புண்டாதல், விக்கலுண்டாதல், தேக நோயுண்டாதல், வாந்தி யுண்டாதல், தாபமுண்டாதல், மூர்ச்சை யுண்டாதல், அதிசார பேதி யுண்டாதல் சரீரம் நடுங்குதல் இவையென் றறிக.

தாந்திரிக சன்னிக்குறி

பிரலாபித்தல், விக்கலுண்டாதல், நாக்கு மிகவுங் கறுத்து முள்ளுண்டாயிருத்தல், தாபமுண்டாயிருத்தல், அதிசார பேதியுண்டாயிருத்தல், சுவாச முண்டாதல், தினவெடுத்தல், கண்பெருத்தல், கண்ணீர் பாய்தல், சுரமுண்டாதல் இவை யென்றறிக.

கண்டகுப்த சன்னிக்குறி

பிரமையுண்டாதல், தாபமாதல், தலைசுழற்றல், தனுப்போல் கழுத்து நரம்பு இசிவுகாணல், புலம்பல்,

பயப்படுதல், எழுந்திருத்தல் மூச்சையுண்டாதல், சரீர நோதல், இரும்ப லுண்டா தல், விக்கலுண்டாதல் ஈனத்தொனி யுண்டா யிருத் தல், தலைநோயுண்டாதல் இவையென்றறிக.

கர்ணிக சன்னிக்குறி

கனவுகாணல், நாவெடித் தல், விக்க லுண்டாதல் இருமலாதல், நடுக்க லுண் டாயிருத்தல், காதின் கீழ் வீக்கமுண்டா யிருத்தல், காது கேளாதிருத்தல், அடிக் கடி யெழுந்திருத்தல் இவை யென்றறிக.

புக்னநேத்திர சன்னிக்குறி

கண்பெருத்தல் தண்ணீர் பாய்தல், பார்வை காணு திருத்தல், கனவுகாணல், பிர மித்தல், நடுக்க லுண்டாதல் இவையென்றறிக.

ரக்தோஷ்டி சன்னிக்குறி

நாக்கு நடுவடித்தல், உத டு வெடித்து இரத்தங்கா ணல், தீவிர சுர முண்டா தல், உதடு உலர்தல், அசதி யாதல், மூர்ச்சை யுண்டா தல், அதிசார முண்டாதல், கனவு காணல், இருமலுண் டாதல், தலை திருப்பலுண் டாதல், நடுக்குதல், நாக்குக் கறுத்து முள்ளுண்டாயிருத் தல் இவையென்றறிக.

பிரலாப சன்னிக்குறி

சரீரம் நடுக்கலுண்டாதல், கனவுகாணல், தாகமுண்டா யிருத்தல், சரீரநோயுண்டா தல், இருமலுண்டா யிருத் தல் விக்கலுண்டா யிருத் தல், அடிக்கடி யெழுந்திருத் தல் மிகவுஞ் சுரமுண்டா யிருத்தல் இவையென்றறிக.

ஜிக்வக சன்னிக்குறி

சுவாசமுண்டா யிருத்தல், தாப முண்டா யிருத்தல், இருமலுண்டா யிருத்தல், நாக்குக் கறுத்து முள்ளுண் டாயிருத்தல், வாய் திறவா மல் மூடியிருத்தல், காது கேளாதிருத்தல், சாத்தியம் கடினமாக்காணல் இவை யென்றறிக.

அபின்னியாச சன்னிக்குறி

வாதபித்த சிலேத்மங்கூடி யிருத்தல், சுரமடித்தல், சுவாசமுண்டாயிருத்தல் முகம் பளபளப்பாயிருத்தல், நாக்குக் கறுத்துக்காணல், அதிக நித்திரை யுண்டாதல், சரீரமெங்கும் நோயுண்டா தல், தாபமுண்டாதல், அசதி யுண்டாதல், தண்ணீர் தாக முண்டாயிருத்தல், வேர்வை யுண்டாதல் இவை யென் றறிக.

சாத்திய சன்னிகள்

சந்திகசன்னி, தாந்திரிக சன்னி, பிரலாபசன்னி, சித்த விப்பிரம சன்னி, சிகவகசன் னி, கர்ணிகசன்னி இவ்வாறும் சாத்திய மென்றறிக.

அசாத்திய சன்னிகள்

ருக்தாகசன்னி. அந்தக சன்னி. புக்னநேத்திரசன்னி, கண்டகுப்தசன்னி, ரக்தோ ஷ்டிசன்னி, சீதாங்கசன்னி,

அபின்னியாச சன்னி இவ்வேழும் அசாத்திய மென்றறிக.

சன்னிபாதத்தின் தினப் பிரமாணம்

சந்திக சன்னிக்கு ஏழுநாள், அகந்த சன்னிக்குப் பத்துநாள், ருக்தாகசன்னிக்கு இருபதுநாள். சித்தவிப்பிரம சன்னிக்கு, இருபத்தொருநாள், சீதாங்க சன்னிக்கு பதினைந்துநாள், தாந்திரிக சன்னிக்கு இருபத்தைந்துநாள், அல்லது ஏழுநாள், கண்டகுப்த சன்னிக்குப் பதின்மூன்று நாள், கர்ணிக சன்னிக்கு மூன்று மாதங்கள், புக்ண நேத்திர சன்னிக்கு எட்டுநாள், ரக்தோஷ்டி சன்னிக்குப் பத்துநாள், பிரலாபசன்னிக்குப் பதினாலுநாள், சிக்வசன்னிக்குப் பதினாறுநாள், அபின்னியாச சன்னிக்குப் பதினைந்துநாள்.

தோஷங்கள் ஏழு

அபத்தியதோஷம ஸ்திரீ சங்கம தோஷம், விஷத்தோஷம், சீதளதோஷம், ரதத சிகவகதோஷம, பீதசிக்வக தோஷம், கிருஷ்ண சிக்வக தோஷம

அபத்திய தோஷக்குறி

அயர்வுண்டாதல், மூர்ச்சை யுண்டாதல், பிரமை யுண்டாதல், தாக முண்டாதல், கனவுகாணல், மார்நோதல் இவையென்றறிக.

ஸ்திரீ சங்கமதோஷக்குறி

சரீர நோயுண்டாதல், நடுக்கலுண்டாதல், மாறெரிவந்த முண்டாதல், கனவு காணல், அடிக்கடி யெழுந்திருத்தல் பிரமை யுண்டாதல், கால்கைகள் குளிர்ந்திருத்தல், இவை யென்றறிக.

விஷத் தோஷக்குறி

சுரமுண்டாதல், தாபமுண்டாதல், நாடுகுடிலமாயிருத்தல், அந்தர்தாஹ முண்டாயிருத்தல், வேர்வை யுண்டாதல், மூர்ச்சை யுண்டாதல் இவையென்றறிக.

விஷம் சீதள தோஷக்குறி

ஒரு தினத்துக்குள் இரண்டு மூன்று நாலுதரம குளிர்கண்டு சுரமுண்டாதல், தாகமுண்டாதல், மோகமுண்டாதல், தலைநோயுண்டாதல், நாவில், முள்ளுண்டாயிருத்தல் இவை யென்றறிக.

ரத்தஜிக்வக தோஷக்குறி

நாக்குச் சிவந்து காணல், முள்ளுண்டாயிருத்தல், சுரமுண்டாயிருத்தல, தாகமுண்டாயிருத்தல இவையென்றறிக.

பீதஜிக்வக தோஷக்குறி

நாக்கு மஞ்சள் நிறமாயப் பிளந்து சுரமில்லாம லிருத்தல், முள்ளுண்டா யிருதல், சுரமுண்டா யிருத்தல, பிரேமையுண்டா யிருதல், வேர்வை யுண்டாதல், மூர்ச்சையுண்டாதல், இருமலுண்

டாதல், ஈனத்தொனி யுண்டாதல் இவையென்றறிக.

கிருஷ்ணஜிக்வக தோஷக்குறி

நாக்கு கடினமாய் கறுத்து முள்ளுண்டாயிருத்தல், அடிக்கடி யெழுந்தருத்தல், பிரமையுண்டாதல், உளறல், சுவாசமுண்டாதல், தினவெடுக்கல், வேர்வை யுண்டாதல், தாகமுண்டாயிருத்தல் இவையென்றறிக.

இவைகளுக்குத் தினப்பிரமாணம் பதினைந்து நாள் அல்லது எழுநாளென்றறிக.

அதிசார நிதானம்

மநததத்தினாலும், உஷ்ணத்தினாலும், உபபாலும், சயிததய திரவியங்களினாலும், போஜனத்தினாலும், அழுகிறதினாலும் தாகுறதுனாலும், விரேசனததினாலும் அதிசாரங்களுணடாம.

வாதாதிசாரக்குறி

மலம் நுரைகட்டி கறுப்பாய் ஆகுறது, மதப்புளிப்பு கீழ் நோதல், சரீரநோதல், வயிறு அப்பொதுககபபொது உபபுதல, சற்று நேரததிற குளளாக வாருதல, மகாரு சம் மலம கட்டியா யிருத்தல், நாற்றமா யிருத்தல் ஆவை யென்றறிக.

பித்தாதிசாரக்குறி

மலம் சிவந்திருத்தல், மஞ்சள் நிறமாயிருத்தல், ஒரு தரம் மஞ்சள் நிறமாயும் ஒருதரம் சீதம் விழுதலும், விகாரமுண்டாகுதல், வயிறு பிடுங்கல், தாகம் அதிகமாதல், வேர்வை யுண்டாதல், மூர்ச்சையுண்டாதல், பிரமை யுண்டாதல், உதடுலர்தல், இவையென்றறிக.

சிலேத்துமாதிசாரக்குறி

சீதம் விழுதல், நுரை வெளுத்த மலம், இருமல், சுவாச முண்டாதல், காது கேளாதிருத்தல், குன்மமாய் வயிறுநோதல் இவை யென்றறிக.

சுராதிசாரக்குறி

சுரமுண்டாதல், தாபமுண்டாதல், மார்நோதல், அரோசிக முண்டாதல், அதிசார முண்டாதல், சீதக்கட்டுவிழுதல், ரத்தபேதியாதல் இவை யென்றறிக.

தோஷாதிசாரக்குறி

அந்தர்தாக முண்டாதல், சரீரங்குளிர்ந்திருத்தல், கால் கைகள் குளிர்ந்திருத்தல், பிரமையுண்டாதல், வாந்தி யுண்டாதல், விக்கலுண்டாதல், இருமல் உண்டாதல், சுவாசமுண்டாதல், அதிசார முண்டாதல், நடுக்கலுண்டாதம், ஆயாசமுண்டாதல், உப்பசமுண்டாதல், நித்திரையில்லா திருத்தல், வேர்வையுண்டாதல், சீதம் விழுதல், இரத்தங் காணுதல், வயிறுநோயுண்டாயிருத்தல் இவையென்றறிக.

அதிசார அதிசயக்குறி

மலம் விலக்கெண்ணெய் நிறமாக வருதல், மாமிசம்

போலயிருத்தல், தேன் போலிருத்தல், பலவீனமாயிருத்தல் மலம் துர்க்கந்தமாயிருத்தல், மலம் மிசிரவர்ணமாயிருத்தல், கறுப்பாயிருத்தல், நாறுவைருணமாயிருத்தல் இவையென்றறிக.

அதிசார சாத்தியக்குறி

கருங்குவளையைப் போல கண்கள் காந்தியுண்டாயிருத்தல், முகம் சந்திர பிம்பம் போல காந்தியுண்டாயிருத்தல், நாடி யதாஸ்தானத்தில் சமதாதுடை யிருத்தல், குயில் தொனியா யிருத்தல், தும்பலுண்டாதல், பசியுண்டாதல், தலையில் திணவுண்டாயிருத்தல், அன்னத்தின் மீது வாஞ்சையுண்டாயிருத்தல், பல்லுகள் மல்லிகை மலர்போலிருத்தல், நாக்கு மெதுவாக விருந்து திரவமுண்டாயிருத்தல், இவை சாத்தியமென்றறிந்து சிகிச்சை செய்யவேண்டும்.

அசாத்தியரோக நிதானம்

சுரந்தீக்ஷணமாயிருத்தல், சரீரங் குளிர்ந்திருத்தல், சுரங்குடிலமாயிருத்தல் கண் ரெப்பையில் ரத்தமில்லாதிருத்தல், கையிலும் உள்ளங் கையிலும், ரத்தமில்லாதிருத்தல், கண்களில் தேஜசில்லாதிருத்தல், காதில் சமுத்திர இரைச்சலாயிருத்தல், வேர்வையில்லாதிருத்தல், அல்லது உலராத வேர்வையா யிருத்தல், முகத்தில் காந்தியில்லாதிருத்தல், கண் ...ருத்தல் அல்லது சூக்ஷமாக யிருத்தல், தொப்புள், மார்பு, மூக்கு, கால் கைகள் குளிர்ந்திருத்தல், ஊர்த்த சுவாசமுண்டா யிருத்தல், விக்கலுண்டாயிருத்தல், தலை நடுங்குதல், வேதனை யுண்டாயிருத்தல், கண்டத்தில் சிலேத்துமங் கட்டுதல், பரிமள மறியாதிருத்தல், மலம் வெளுப்பாயிருத்தல், நாடி சூட்சுமமாயிருத்தல், முதல் பித்தநாடி நடந்து உடனே சிலேத்துமநாடி நடந்தால் இவ்விதக்குறியுள்ள ரோகங்கள் அசாத்தியமென்றறிக.

புசித்தபேர்கட்கும் ஸ்நானஞ் செய்த பேர்கட்கும், நித்திரை செய்த பேர்கட்கும் உபவாச மிகுந்தபேர்கட்கும் வழிநடந்த பேர்கட்கும், கோபமாயிருந்த பேர்கட்கும், பூதம் பிடித்த பேர்கட்கும், அழுதவர்கட்கும், ஸ்திரீ சங்கமஞ் செய்தபேர்கட்கும், கள்ளுண்டபேர்கட்கும், மதிப்பிரமையா யிருப்போர்க்கும், கஞ்சா தின்ற பேர்கட்கும், யோகாப்பியாசஞ் செய்த பேர்கட்கும், கோழி, முயல், தவளை முதலான மாமிசம் புசித்தவர்கட்கும், பயித்தியம் பிடித்தபேர்கட்கும் வெய்யல் காய்ந்த பேர்கட்கும நாடி கிரமமாக நடக்காது.

மரணக் குறிகள்

கண்ணும் பல்லும் கருத்துக்காட்டல், வாயால் மூச்சு விடல், கண் பஞ்சடைதல்

மூச்சு வாங்கல். அடிக்கடி எழுந்திருத்தல், படுத்தல், இரண்டு கண்களும் அலர விழித்தல், வழி பார்த்தல், சேத்துமங் கட்டல், மருந்து சாதம் விழுங்கக் கூடாமல் தொண்டையில் வருத்தப் படல் முகம் ஊசிபோல் நீள மாய்க் காணல், உடம்பெல் லாம் நரம்புகள் தோணல், கண்ணில் இருள் மூடல், நா வரண்டு போதல், பிதற்று தல்.

இங்கிலீஷ் வைத்திய அகரா தியிலிருந்து மொழி பெயர்த்தது.

சீவ தத்துவங்களின் கெடுதி குறிகள்

பேச்சற்றுப் போதல், பேத மாய்ப் பேசுதல், மயக்கம் அல்லது மதி தடுமாற்றம், ஞாபகத் தவறு, பொய்க் காட்சி, ஸ்திரமில்லாத பத்தி, மட்டு மிஞ்சின திடா ரிக்கம் மனோ கற்பனையான வெறியாட்டு, மதோன் மத்தம் சுரணை யில்லாமை, நினைவுசஞ்சலித்தல், உலைவு எண்ணம், மட்டுக்கு மிஞ் சின ஆண்மை, மனோ சல னம், விறைப்பு, திமிர்ப்பு, இயல்புக்கு விரோதமான பரிசவறிவு இல்லாமை, உரு சியில்லாமை, சுபாவத்துக்கு விரோதமான வாசனை, வாச னை கெடுதி பார்வைகெடுதி, பார்வையில்லாமை, பார்வை யீனம், கிட்டப் பார்வை கேள்விக்கெடுதி, கேளாமை தப்பான கேள்வி, சுபாவத் துக்கு விரோதமாய்த் தசை நரம்பு இயக்கம், குரல் கனப்பு, தப்பான உச்சரிப்பு, நித்திரை யில்லாமை, சுபா வத்துக்கு விரோதமான நித் திரை.

உயிர் நிலையான தத்துவங் களின் சீர்கேடு

படபடப்பா யோடுகிற நாடி, மந்தநடை நாடி, உறுதிநாடி, பதவீனமுள்ள நாடி, உரப்பான நாடி. மெது வான நாடி, மெலிவுநாடி, சிறுமைநாடி, வலியுறுத்தாக நடக்கும் நாடி. ஒடுங்கின நாடி, முறை சேடான நாடி, மாறிமாறி நடக்கிற நாடி, தெரிப்பு நாடி, நாடியில் லாமை, இருமல், மூச்சு விடப் பிரயாசை, பெருமூச் செறிதல்.

சுபாவ தத்துவக் கெடுதிகளின் குறிகள்

பசியின்மை, ஆருப்பசி, இரைக்குடல்நலி, பசிகெடுதி தாரம் கோபமின்மை, விழுங் கலில் வருத்தம், மலச்சிக்கல், மலத்தளர்ச்சி சுபாவத்துக்கு விரோதமான வயிற்றுக்கழிச் சல், அதிக வெயர்வை, சளி, கக்கல், அதிக வாய்ச்சுரப்பு, சுபாவத்துக்கு விரோதமான மூத்திரம்.

ஆண்பால் பெண்பாலுக் கடுத்த தத்துவ கெடுதி களின் குறிகள்

ஆரோக்கியமான இந்திரி யம், சுபாவத்துக்கு விரோத மாய் இந்திரியம் விழுதல், இந்திரியம் விழுதலில்தடை, ஆண்குறி நிமிர்ச்சியாக

சக்தியில்லாமை சுபாவத்துக்கு விரோதமாய் கோசம் நிமிர்ச்சியாதல், பலட்சம், மெலிவு, சுபாவத்துக்கு விரோதமாய் சிறுநீர் விடுதல், தூரம் போதல் நின்றிருத்தல், சூதகநோய்.

தோற்றகுணபேதம்

முகம் வெளுவெளுப்பாயிருத்தல், இயல்புக்கு விரோதமாய் சிவப்புநிறங்காட்டல், நீலநிறங் காணல், மஞ்சள் நிறங் காணல், வீக்கம், அழுத்தினல் சத்த முண்டாதல், சலனம், தத்தளிப்பு, எலும்பும் உரோமமுஞ் சுடுகிறது, பல் கூசுகிறது, தட்டும்போது சத்தமுண்டாதல், உரைத்த இரத்தம், இரத்தத்தில் அதிக நிணநீர், இரத்தம் கருமைநிறமா யிருத்தல், மஞ்சள் நிண நீருண்டாயிருத்தல், கண்மணிவீக்கம், பொருமல், கண்மணி சுருங்கிக்கானல், சரீரங் குன்றுதல், நைதல், ஒரு பாகங் குன்றுதல், சரீரம் அதிக பருமனாயிருத்தல், ஒருபாகம் அதிக பருமனாயிருத்தல்.

இளைப்புள்ள உணர்ச்சிகள்

நோய், தவக்கம், சோகம், குளிர்மை, சரீரத்தின் பல பாகங்களிலும் ஊருகிறது போலுண்டாகிற உணர்ச்சி அல்லது திடுக்கிடுதல், காங்கை, கிறுகிறுப்பு.

குறிஞ்சா-ஓர் பூண்டு

இதன் வகை சிறுகுறிஞ்சா, பெருகுறிஞ்சா.

இந்தியாவின் தென்தேசத்தாரால் குறிஞ்சாவென்றும், வடநாட்டாரால் அந்தமுள் என்றும் பெயர் வழங்குகிற இந்த மூலிகையின் வேரும் இலையும் வாந்தி செய்யும் குணத்தை யுடையதா யிருக்கின்றது. உலர்ந்த இலைதூள் 20 முதல் 30கிரெயின் வரை. கொடுத்தால் வாந்தி யுண்டாகும். இதன்கூட சுடுதண்ணீர் மிகுதியாய்க் குடித்தால் நன்றாய் வாந்தியாகிறதற்கு உதவியா யிருக்கும். இரத்தக்கடுப்பு, வயிற்றுப்போக்கு இதுகள் சுரத்துடனே ஆரம்பித்திருக்கினும் மேற்படி மருந்தில் 3-அல்லது 5-கிறெயின் எடுத்து அதனுடன் 80கிறெயின் விளாம்பிசினும் அரை கிறெயின் அபினும் சேர்த்து சலத்தில் கலக்கிக் கொடுத்து, இப்படி தினம் மூன்றுதரம் கொடுக்கவும். சலதோஷத்துக்கும் நெடு நாளா யிருக்கப்பட்ட இருமலுக்கும் குறிஞ்சாவை விளாம்பிசினுடன் கொடுக்கில் குணமாகும். அன்றியும், கக்கிருமல் ஆரம்பித்தவுடன் கொஞ்சங் கொஞ்சமாகவும் கொடுக்கலாம்.

குறிஞ்சி-ஈந்து, செம்முள்ளி, மருதோன்றி.

குறிஞ்சிக்குறியவிருட்சங்கள்

வேங்கை, குறிஞ்சி, சந்தனம், தேக்கு, அகில், அசோகு, காந்தள்.

குறிஞ்சியுணவு - மூங்கிலரிசி, ஐவகைநெல், துவரை, கிழங்கு, தினை, தேன்

குறிஞ்சில்-கோடகபாஷணம்
குறுகுத்தாறு-சிறுகாளி
குறுக்கு-குறுக்குநோய்
குறுக்கம்-சவுரிபாஷாணம்
குறுங்குடியாள்-காளகம்
குறுந்துழாய்-சிறுதுளசி [ய்
குறுந்தேங்காய்-சிறுதேங்கா
குறுந்தொட்டி-சிறுகாய்ஞ்
சொறி
குறுமணல்-இரசமணல்
குறுமுனி-அகத்தியன்
குறும்பி-காதழுக்கு
குறும்பூழ்-காடை
குறுலோவு-உடல்உசிவு
குறேட்டை-காக்கணம்,
பூச்சிவிளாத்தி.
குறலுறு-குங்கிலியம்
கும்பகம்-நாணல்
குனட்டம்-அதிவிடையம்
குஞசகம்-குன்றி
குன்மம்-ஓர்நோய்

குன்மக்கட்டி- குன்மசூலை, அஷ்டகுன்மத்தைப் பார்க்க.

குன்றத்துச்சித்தி - காலம்பப் பாஷாணம்.

குன்றி-ஓர் மருந்து செடி, குன்றிமணி- மஞ்சுசிலை.

இதன் வித்து சிவப்பு நிறமும் ஒரு பக்கத்தில் கறுத்த பொட்டும் உடையதா யிருக்கிற இந்தப் படர் செடியின் வேர் அதிமதுரத்தின் ருசியையும் மாதுரியையும் உடையதா யிருக்கின்றதால் நாட்டு அதிமதுர மென்றும் பெயரைப் பெற்றது. அது மருந்துக் கடுத்த குணமுடையதா யிருக்கின்றது. குழந்தைகளின் இருமலுக்குப் புதிய மதுரமான வேரில் 2-அவுன்ஸெடுத்துச் சதைத்து அரைப்புட்டி சலத்தில் அரைமணி நேரம்வரை லோக வைத்து வடிகட்டி இதில் 8-அவுன்ஸ் கற்கண்டாவது தேனாவது சேர்த்து மறுபடியும் அடுப்பில் வைத்து கட்டிப் பாகுப்பருவமாகிற வரையுங் காய்ச்சவும். இதில் தேக்கரண்டி வீதம் சுரங் கூடியிருந்தாலும் இல்லாவிட்டாலும் தினம் மூன்று வேளை இருமல் வருகின்ற வேளைகளில் கொடுக்கவும். உடன் பறித்த இலையின் சாற்றை சிறு குழந்தைகளின் வாயினுள் வெள்ளை நிறமான புண்களுக்குத் தொட்டு இட்டால் குணமாகும்.

கூ

கூச்சாரம்-சிவசாரம்
கூந்தல்-முதியார்கூந்தல்
கூவிளநீர்-வில்வவேர்
கூமத்தோடு-ஆமையோடு
கூகைநீர் - காட்டெருமைப் பால், கிழங்கு தண்ணீர்.
கூகை கோட்டான்.
கூழ்ப்பாண்டக்காய்- சாம்பற் பூசனிக்காய்.
கூகைநீறு- கூகைக்கிழங்கின் மாவு, கூசாகம், கமுகு.

கூகைநீறு-அங்குச ரோசனம், கூவக்கிழங்கு, அரோருட்மா.

கூகைநீறில் செய்யும் குழம்பு போன்ற கஞ்சி அனேக வியாதிகளில் நோயாளிக்கு தேகத்தில் பலமுண்டாவதற்கு உபயோகமா யிருக்கின்றது; அதைச் செய்யும் விதமெப்படியெனில்; துப்

புரவும் நுண்மையும் வெண்மையுமான கூகைநீறு 1-மேசைக் கரண்டி அல்லது அரை அவுன்சில் கொஞ்சம் சலத்தை விட்டு நன்றாய் பிசைந்துகொண்டு அதின் பின் கால்புட்டி கொதிக்கிற சலத்தைக் கிரமமாய் கொஞ்சங் கொஞ்சம் விட்டு முழுவதும் நன்றாய்க் கலக்கி இரண்டு மூன்று மினிட்டு நேரம் அடுப்பில் வைத்து மறுபடியும் கலக்கி பின்பு இறக்கி வைத்து அதில் கொஞ்சம் பஞ்சதாரையும் வாசனை கொடுக்கும்படியாய் கொஞ்சம் சாதிக்காய் அல்லது கருவாயின் தூளும் சேர்க்கவும் சலத்துக்குப் பதில் பசுவின் பாலில் செய்பவை பலனை மிகுதியாய்க் கொடுக்கும். ஆனாலிது நன்றாய் சீரணமாகாவிட்டால் தண்ணீரே நலம். மேற்காட்டிய பிரமாணம் பிராயமானவர்கள் தினம் இரண்டு மூன்று தரம் சாப்பிடலாம். அதைத் தேவையான பொழுதெல்லாம் உடனுக்குடன் செய்துக் கொள்ளவேணும்.

கூச்சிரம்-கடம்பு

கூஷ்பாண்டம் - கலியாண பூசனி

கூடம்- கோளகபாஷாணம்

கூடம்பில்-கரை [என்

கூடாரம்-பெருங்காயம்

கூதளம்- கூதாளி, தூதுளை வெள்ளரி

கூதளம்-கூதாளி

கூதிர்-பனிக்காற்று, ஐப்பசி, கார்த்திகையின் பருவம்

கூத்தன்-குதம்பை, மூக்கொற்றிப்பூண்டு, குதம்பை.

கூந்தல்-கமுகோலை, பனையோலை, காட்டுக்கூந்தல், கூந்தலறுகு.

கூந்தற்பனை-கமுகு

கூந்தற்பாசி-ஓர் நீர்ப்பூண்டு நிலக்கூந்தல், ஓர் பூண்டு

கூந்தற்பூசம்-கூந்தற்கமுகு

கூமரை-கோங்கு

கூம்பல்-குமிழ்

கூரணம்-கோடகசாலை

கூரம்-பாகல், கோடகசாலை

கூர்-காரம்

கூர்சேவு-வெண்கடுகு

கூர்ச்சேகம்-தேங்கு

கூர்மன்-ரோமன், புளகித்திமைக்கு வாயு.

கூர்மைக்கரிவாள் - சவுக்காரம்

கூலம-காராமணி, பாகல் [ம்

கூவிரம், கூவிளம், கூவிளை-வில்வம்.

இந்தப் பழம் இங்கிலீஷ் வைத்தியரால் மிச்சமாய்ப் பிரயோகப்பட்டு வருகிறது. தீராத வயிற்றுப் போக்கு இரத்தக்கடுப்பு முதலியவைகளுக்கு சுரமின்றி வியாதிக்காரன் பலவீனமாக யிருக்கும்போது கொடுக்கில் மிகுந்த பலனுடையதாயிருக்கும் அதைக் கொடுக்கும் முறையாவது பழுத்த பழத்தினுள்ளிருக்கும் பிசினில் 2-அவுன்ஸ் எடுத்து 3-4-அவுன்ஸ் சலத்தில் கலக்கிப் பஞ்சதாரை கூட்டி தினமிரண்டு மூன்றுதரங் கொடுக்கவும். வயிற்றுக் கழிச்சலும் மலபந்த

மும் மாறிமாறி யுண்டாகிற தற்கு மேற்சொன்ன ஔஷதந் தினந்தோறும் காலையில் கொடுத்தால் மலத்தைக் கிரமப்படுத்தும், குழந்தைகளுக்குண்டாகும் தீராத கழிச்சல், கடுப்பு முதலானவையும் மேற்படி மருந்தில் பாதி கொடுக்கில் நீங்கும்.

கூவிளம்பாதிரி-ஓர் பத்திரி

திருமந்திரம்

பச்சிளங் கூவிளம் பத்தியுண்டிடில், நிச்சயஞ்சொன்னேன் நெருப்புங்குளிர்ந்திடும், அச்சமுமுலையழகாந் திருமேனி, வச்சிரம் போலவே வந்திடும் விந்துமே.

கூவிளை-வில்வம்
கூறும்-எள்ளு
கூழமணி-கூழ்முன்னை
கூழ்-நறுவிலி
கூழ்முன்னை-ஓர் கீரை
கூழ்வரகு-கேழ்வரகு
கூறல்-நாகபாஷாணம்
கூறு-எள்ளு
கூனம-ஆமை
கூனன்முதுகு-ஆமையோடு

கூமைக்கிழங்கு - இருமல், ஈளை, காசம், மலபபுழுபோம, மேனி உண்டாம.

கூகைநீறு-இருமல், கிருமி வீழ்தல், நரயபலுண்டாகுங் கட்டி, பிரமியம், மாதர்குய்ய ரோகம், மார்புநோய்போம். வீரியமுண்டாம்.

கூத்தங் குதம்பை-குத்துவாதம், ஜன்னி, சுரோணித வாய்வும்போய் பித்தமுண்டாம்.

கூழைக்கடாக்குறி-சூலை, நாட்பட்ட நீரிழிவு போம், கரப்பான் புண்ணு முண்டாம்.

கெ

கெசராசி-பூலா
கெசாசைநா-கையாந்தகரை
கெசசன்னி-வெருகு
கெசகாமுட்டி-எட்டி
கெச்சம்-முல்லை
கெண்டைவியாதி-ஓர்நோய்
கெந்தகம்-நாய்வேளை
கெந்தனம-கோடகசாலை
கெந்திகம்-பாம்புகொல்லி
கெந்திபரம் - ஆடுதின்னாப் பாளை
கெந்திவாருணி - பேய்த்தும மட்டி
கெவரி-வெள்ளைக்காக்கணம்
கெவுரா-துளசி
கெவ்வியம்-நாவேளை

கெண்டி வெந்நீர் - வாய்விளு லுண்டாகும் கால் கை முதலான குடைச்சல்களும் போம்.

கெண்டைமீன்கறி-அநேகம் நோய், அரோசி, வயிற்று வலி, வாயுமுண்டாம்.

கெந்ததாளி-அச்சரம், கரப்பான், தொண்டைப் புண், மூலச்சூடு போம்.

கெந்தமாஞ்சள்-நீரைக்கட்டும்.

கெந்திப்பு - உஷ்ணம், உடல் கரைதல், குடல் வாய்வு, மந்தமும்போம்.

கெளிற்றுமீன்-கபம், கரப்பான், சுக்கிலம், புண்ணுமுண்டாம்.

கே

கேக்கிப்பூ-எரிவு காந்தல், நீரடைப்பு மங்கு சொறி தேமல் மேகவூரல் வாதம் வாயும்போம். தேகவொளி, புளகம் பெண் வசியமுண்டாம்.
கேழ்வரகு-பித்த வாயுண்டாம்.
கேழ்வரகுகளி-அதிக பலம், வாதமுண்டாம்.
கேழ்வரகுகூழ்- பித்தம், பெருவயிறு, வாதமும்போம்.
கேளியிளநீர்- அனல் சுரப்பான் தாகம் மந்தம் மேகம் வயிற்றுப் புழுவும் போம்.
கேசதம்-கையாந்தகரை
கேசமுட்டி-வேம்பு
கேசரம்-மகிழமரம்
கேசரிகம்-நாயுருவி
கேசரீகம்-நாயுருவி
கேசியா-தாழை
கேசினி-சிங்கங்குப்பி
கேடகம்-புருமுட்டி
கேதகை-தாழை
கேந்தகம்-கோடகசாலை
கேந்துமுரியம்-நாய்வேளை
கேப்பை-கேழ்வரகு
கேமாக்கி-வெள்ளைக்காக்க[ணம்
கேலிகம்-அசோகு
கேவலதிரவியம்-மிளகு
கேவலி-வள்ளிக்கொடி
கேவு-வெண்கடுகு
கேனி-தெங்கு

கை

கையாந்தகரை - காமாலை, கைகால் எரிவு, குட்டம் குரல் கம்மல் சிலேட்டுமம், கபம், சோபை நீரிழிவு, தாகம், பல் நோய், பாண்டு, பித்தமும் போம்.

கைவரச்சம்பா- அதிக பலம், சுக்கிலமும் உண்டாம்.
கைச்சற்ருேடை- புளிநாரத்[தை
கைச்சி-கமுகு
கைதை-தாழை
கைத்தகோடரம்-எட்டி
கைத்தா- காட்டாமணக்கு
கைப்பு-ஆடுதின்னுப்பாளை
கைபரியம்-இரும்பு
கையாந்தகரை-ஓர் பூண்டு இதன் வகை : கொடிக் கையாந்தகரை, பொற்றிலைக் கையாந்தகரை.
கையரவம்- வெள்ளாம்பல், குமுதம்.
கைவிதை-வெந்தயச்செடி

கொ

கொக்கு-மாமரம்
கொக்குமாந்தாரை- காட்டாத்தி
கொக்கேறு- ஓர் பூண்டு, தெட்டி.
கொங்கம்-கோளக பாஷாண
கொங்கரி-ஏலரிசி [ம்
கொங்காரி-குங்குமமரம்
கொங்கு-கருஞ்சுமை, தேன் சருக்கரை.
கொச்சி- சவரிலோத்திரம், மிளகாய்ச்செடி
கொச்சிமஞ்சள்-மஞ்சள்
கொச்சிக்குழந்தை- வைப்பரி[தாரம்
கொஞ்சி-ஓர் செடி
இதன் வகை: காட்டுக் கொஞ்சி-கடற்கொஞ்சி.
கொடாலகல்- வெந்தோன்றி
கொடிக்கழல்-கழற்சி
கொடிக்கால்- வெற்றிலைக் கொடி
கொடிச்சி- காவட்டம்புல், கொடிவேலி

கொடி நெட்டி-நீர்ச்சுண்டி

கொக்குக்கறி- வயிற்றுக் கிருமி போம், அரோசகம், கரப்பான், புண் மேகமும், உண்டாம், மருந்துண்ணும் போது இதன் கவிச்சாகாது

கொசுமெழுகு-எந்திரம், வசியங்களுக்காகும்.

கொசு வுள்ளான்கறி - தினவு மேகமும் போம், பசி போகமும் உண்டாம்.

கொள்ளிப்பால்-கரடி, கரப்பான், கிரந்தி, நாவைப்பற்றிய நோய், விஷப் பாகமும் போம். பித்தமும் உண்டாம்.

கொடிமாதளை-சர்த்தி வெப்பும் போம்.

கொடி முத்திரிப்பழம்- அருசி, இரத்தபுத்தம், இளைப்பு, உள்மாந்தம், கயம், சுரம், சுவாசம், சோமநோய், தாகம், தாபரவிஷம், பித்தம் மதமூர்ச்சை, மூத்திர நோய், மேகம், வயிறு மந்தம், வெப்பும் போம். தேகக்குளிர்ச்சி, கண்ணொளிவு, தாது புஷ்டியும் உண்டாம்.

கொடியாட் டிறைச்சி - இடுப்புவலி குத்தல், இருமல், வாதம், வெட்டையும் போம். கறி சமைத்து அதிகாலையில் சாப்பிடவும்.

கொடி எலுமிச்சங்காய் - அரோசகம், அனல், கருச்சல் மயக்கம், வாந்தியும் போம்.

கொடிவசலைக்கீரை-அனல் தாகமும் போம். உரிசை கபம் போம். கம்மல் இளகலும் உண்டாகும்

கொடிவழுதலங்காய்- வாதம் போம். பித்தம் உண்டாம்.

கொடிவேலிவேர் - அரையாப்புக்கட்டி, இரத்தக்கட்டி, கட்டி, கிரந்தி, மூலம், சுரங்கள், சூலை, நீரேற்றம், பெருவயிறு, வாயுக்கள், விரணம் வீக்கமும் போம்.

கொடுக்காய்ப்புளி - பித்தவழுக்கு, ஊரல் போம்.

கொடுவாய்மீன்- உஷ்ண மந்தம் உண்டாம்.

கொட்டிக்கிழங்கு- அக்கடுப்பு, அழல், தேமல் மேகமும் போம். குளிர்ச்சி உண்டாம்.

கொட்டிக்காய்- கால் கையெரிவு மேகம் 2 ம்-ம் போம்.

கொட்டைக்கரந்தை - கரப்பான், கெர்ப்பப்புழு, சொறி, சிரங்கு, மேக வெட்டையும் போம். மல மிரங்கலுண்டாம்.

கொட்டைப்பாக்கு- கோழை சுரம், மலம், மூலக்கிருமியும் போம். சோபை உண்டாம. மருந்துண்ட வாய்க்காகும்.

கொட்டைப்பாசி - ஐயம், கக்குவான், கரப்பான், கிரந்தி, சுரம், தேமல், மேகம், வாதமும் போம். தீபனம் உண்டாம்.

கொட்டைமுந்திரிப்பழம் - அழல்தாகமும் போம். கரப்பான், சிரங்கு, நெஞ்சு கரகரப்பு, புண்ணும் உண்டாம்.

கொதி வெந்நீர் அதிசாரம், சோபம் தாகமும், பித்தம், பித்த மூர்ச்சை வாந்தி வியர்வையும் போம்.

கொத்தவரைக்காய்- சீதம், வாதக் குடைச்சல் வாதமும்

போம். பித்தம் உண்டாம், மருந்தை பாழாக்கும், பத்தியத்திற்காகாது.

கொத்தான் கொடி- இளைப்பு, உட்கிரிச்சம், பித்தம், பிரமேகமும் போம், மிகுகுளிர்ச்சியுண்டாம்.

கொத்துமல்லிக்கீரை- அரோசம் எல்லாவித பித்த சுரமும் போம். யோகமுண்டாம்.

கொத்துமல்லிவிரை- காய்ச்சல், குளிர், சர்த்தி, சிலேட்டுமம், தாகம், தாதுநஷ்டம், பித்தம், மந்தம், வாந்தி, விகாரம், விக்கல், விரணம், வெப்பும் போம்.

கொப்பிரண்டை - அதிசாரம், பேதியும் போம்.

கொம்பசையும் பசும்பால்- பித்தம் போம், சுபம் வாதம் விந்துவும் உண்டாம்.

கொம்பரக்கு- இரத்தப் பிரமியம், சுரம், நாட்சென்ற சுரம், பித்த வெட்டை வாதமும் போம்.

கொடிமுந்திரிகைப்பழம் - ஓர் பழம்.

கொடியபீசம்- சீதாங்கபாஷாணம்

கொடியத்தி-நீரத்தி

கொடியரசு-அவரை

கொடியவீரன் - கொடாசொரி பாஷாணம்

கொடியோன்-கற்றாழை

கொடிவேலி- ஓர் செடி. கொடிவேலி என்னுஞ் சித்திரமூலம்.

தேகத்தி லெங்காகிலும் கொப்புளிக்கப் பண்ணுவதற்கு ஆவசியமா யிருந்து இதற்கு வேறே ஒன்றுங் கிடையாவிட்டால் கீழ்ச் சொல்லியதைப் பிரயோகிக்க வேண்டியது. சிவந்த கொடுவேலி வேரைப் பறித்தவுடன் அதன் தோலியை உரித்துக் கொஞ்சங் கஞ்சித் தண்ணீர் விட்டுக் கட்டியா யரைத்து ஒரு துண்டுத் துணியில் தடவிக்கொண்டு கொப்புள முண்டாக்க வேண்டிய இடத்தில் வைத்துக் கட்ட வேண்டும். 5-நிமிஷ நேரஞ் சென்றபொழுது எரியும் வலியு முண்டாக்கி, அது அரைமணி அதிகரித் திருக்கும். இதன்பின் அதை எடுத்துவிட்டால் எரிவும் வலியும் தணிந்து அப்புறம் 12-அல்லது 18-மணி நேரத்தில் பெரிய கொப்புள முண்டாகும். இதிலுண்டாயிருக்கிற சலத்தைக் குத்தி எடுத்துவிட்டு ஒரு வாழையிலைத் துண்டை வைத்துக் கட்ட வேண்டும். புண் சுருக்காய் ஆறிப்போகும் இப்படிக் கொத்த கொப்புள முண்டாக்கும் ஔஷதங்களை கோரமான இருமலுக்கு நெஞ்சிலும், தலைவலிக்கும் மற்ற நோய்களுக்கும் கழுத்தின் பிடரியிலும் வைத்துக் கட்டினால் நன்று.

கொடுப்பை - பொன்னாங்காணி

கொடுவிஷம்- வெள்ளைப் பாஷாணம், தேள்கொடுக்கி, ஓர் பூண்டு

கொட்டாவி விட்டிறுக்கு- நாயுருவி.

கொட்டி-ஓர் நீர்ப்பூண்டு
இதன் வகை: கருங்கொட்டி-சின்னி, காரற்கொட்டி-ஓர் பூண்டு.
கொட்டிக்கிழங்கு-ஓர் கிழங்கு
தண்ணிற்கொட்டி - ஓர் பூண்டு.
கொட்டை-கொட்டைக் கரந்தை
கொட்டைக் கரந்தை- ஓர் பூண்டு
கொட்டை முந்திரிகை, கொட்டையிலந்தை, கொப்பறைத் தேங்காய், கொட்டைப்பாக்கு.
கொட்டை முந்திரிகையை வைத்தியர் சூரணித்து வயிற்றிலுண்டாகும் பூச்சிகளைத் தள்ளுகிற மருந்தாகவும் மூல வியாதிகளுக்கு இதன் பட்டையை நன்று யரைத்துத் தயிர்த் தண்ணீரிற் கலக்கி உண்ணு மருந்தாகவும் உபயோகிக்கிருர்கள்.
கொட்டை முத்து- ஆமணக்கு முத்து
கொட்டை முந்திரிகை-சிகிடிமா.
கொட்டையிலந்தை-ஓர் மரம்
கொண்ட-எட்டி
கொண்ணி- நஞ்சறுப்பான்
கொண்டம்-குறிஞ்சா
கொண்டேசன்-சுக்கு
கொண்சாணிக்கிழங்கு- நஞ்சறுப்பான் கிழங்கு.
கொண்டமுசிறு-மந்தி
கொத்துமல்லி-ஓர் பூண்டு
கொத்துமல்லி இந்தியாவில் விஸ்தாரம் விளைகின்றது. சீரண மருந்தாகவும் சாந்தமாகவும் உரைப்புள்ள வஸ்துவாகவு மிருக்கின்றது.
கொத்துக்கத்திரி- கொத்துப் பசளை, கொத்துப் புடோல், மஞ்சட் கொத்து மயிர்க்கொத்து.
கொத்தான்- ஓர் பூண்டு
கொத்தவரக்காய்- சமுத்திராப் பழம்.
கொம்பரக்கு-ஓர் அரக்கு
இதைப் பிசினென்று சொல்வது பிசகு. இது கொழும்பு தேசத்தில் விஸ்தாரம் விளைகின்றது. சையாம் பைகோ தேசத்திலிருந்து வியாபாரம் நடப்பதுண்டு. ஆனல் வங்காளத்துச் சரக்குகள் மட்டந்தான்.
நாட்பட்ட தீராத வயிற்று வலியில் தேகம் மெலிவுற்ற போதும் வைத்தியர் உபயோகப் படுத்துகிருர்கள். நாட்பட்ட சுரத்திஞல் தேகம் மெலிந்திருக்கும்போது நல்லெண்ணெயிற் சேர்த்துக் காய்ச்சித் தலைமுழுகப்படுகிறது. மைசூர் தேசத்தில் இது ஜாலாவென்னு மரத்திலுண்டாகிறது.
கொம்மட்டி- நீர்மெலாம்பழம்
கொம்மை-துச்சம்
கொம்மட்டிமாதளை- ஓர் நாரத்தை, சீதளை.
அதன் வகை: சர்க்கரை கொம்மட்டி-கஸ்தூரி முலாம் பழம், சிறுகொம்மட்டி- துமுட்டி, பேய்க்கொம்மட்டி.
கொம்மை-கொம்மட்டி
கொய்ய-கொய்யா மரம்
கொய்யாப்பழம்-ஒரு பழம்

கொராசாணி ஓமம் - குராசாணி ஓமம்.

இதுசிறிய தட்டைவிரைகளாக விருக்கின்றது. மனத்துயரமாயிருக்கிற பைத்திய நோயில் மனதை ஆற்றுதல் செய்ய நித்திரை யுண்டாக்க, மலங்கழிக்கக் கொடுக்கப்படுகிறமருந்தா யிருக்கின்றது. இது துருக்கித் தேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறது. இலாகிரி மருந்து சம்பாரத்திற் சேர்க்கப்படுகிறது.

கொரிக்கம்-எழுத்தாணிப் பூ
கொருடன்-கொவவை [ண்டு

கொல்லன் பகை- அஞ்சன பாஷாணம்

கொல்லன் கோவைக்கிழங்கு-ஒரு ஆகாய கருடன் கிழங்கு.

கொல்லன்கோவை காக்கணம்.

இது கசப்புள்ளதாகவுமிருப்பதன்றி மேலே வெண்மை நிறமாகவு மிருக்கும். சீரகத்தோடு சேர்த்து மேற்பூச்சாக உபயோகப்படுத்தப்படுகிறது. இதனோடு வெங்காயமும் ஆமணக்கெண்ணெயும் கூட்டி நாள்பட்ட கீல்வாதங்களுக்குத் தைலமாக உபயோகப்படுத்தப்படுகிறது. வயிற்றிலுண்டாகும் பூச்சிகளைத் தள்ளுகிற மருந்தாகவுமிருக்கின்றது. இதை ஆகாயத்திற் கட்டி வைத்தால் துளிர்த்துக்கொடி படரும். அதனால் ஆகாச கருடன் கிழங்கென்றும் சொல்லப்படுகிறது.

கொல்லம்பாகல்-ஓர் பாகல்
கொல்லைப்பல்லி-ஓர் பூண்டு
கொவிந்தம்-செம்முள்ளி
கொவிளமரம்-ஓர் மரம்

மலையாளத்தில் இதன் பட்டைவேர் இலைகளின் கஷாயம் துயரங் கொண்டிருப்பது போலச் சோர்வாயிருக்கிற வியாதி இருதயம் அடித்துக் கொண்டிருக்கிற வியாதிகட்கு மிகவுஞ்சிறந்த மருந்தாயிருக்கின்றது.

இதன் இலைக் கஷாயம் இரைப்பிருமல்,மந்தாரகாசம் இவைகட் குபயோகப்படுகின்றது.கொஞ்சம் பழுக்காதிருக்கிற காய் கழிச்சல், இரத்தக்கழிச்சல் இவைகட் குபயோகப்படுகிறது.

கொச்சிலித்துப்புல்லு - ஒரு
கொவ்வை-கோவை [புல்லு
கொழிஞ்சி-நாரத்தை

கொழிஞ்சிவேர்-நோயாளிகளுக்குக் குடிநீர் செய்து கொடுக்கப்படுகிறது. பசியுண்டாக்கும்.

கொழிப்பூண்டு - குப்பைமே
கொழுங்கிரி-மல்லிகை [னி
கொழுஞ்சி - கொழுமிச்சை,
கொள்ளுக்காய்வேளை
கொழுந்து - மருக்கொழுந்து
கொழுமரம்-செம்மரம்.
கொழுமிச்சை-நாரத்தை
கொழுமப்புவேர்-ஓர் வேர்

இது ஆப்ரிக்கா கண்டம் மாசாம்பிக்குத் தேசத்தில் விளைகின்றது.

கொள்-ஓர் தானியம்

இதன்வகை: கருங்கொள், காட்டுக்கொள், கார்கொள், கொள்ளாட்டு.

கொள்ளி-எருமைநாக்கி
கொள்ளியம் - உமிரி, புன்கு
கொள்ளுக்காய்வேளை- காய் வேளை
கொறட்டை-ஓர் செடி

இதன் காயைச்சூரணித்து காந்திய தேங்காயெண்ணெயிற் கலந்து காதிலுண்டாகிற கெட்ட புண் வாசியாக உபயோகப்படுத்தப்படும். மூக்கில் காணுகிற இரத்தத்துக்கும் உபயோகப்படுத்தப் படுகிறது.

கொறிசலை - நிலவேம்பு
கொறுக்கச்சி- நாணல்
கொறுக்கா - ஈழப்புளி, கொறுக்காப்புளி
கொறுக்காய்பரம்-ஒரு மரம்
கொறுக்கை - நாணல்
கொற்றவன் -முடக்கொற்றான்
கொன்றை-ஒரு மரம்

இதன் வகை : சரக்கொன்றை,சிறுகொன்றை,புலிநகக் கொன்றை, பெருங்கொன்றை, வடக்கொன்றை, மந்தாரக்கொன்றை, மயிர்க் கொன்றை, செம்மயிர்க்கொன்றை, பொன்மயிர்க்கொன்றை, முட்கொன்றை.

கொன்றைக்காய் மேன்மையான விரோசன மருந்தாக உபயோகப்படுகிறது. இலேகியமாகச் செய்யப்பட்டு வழக்கமான மலபந்த வியாதிக்குக் கொடுக்கப்படுகின்றது. வயிற்றுவலி, வாயு இவைகட்குக் கஷாயமாகச் செய்து கொடுக்கப்படுகிறது

கொம்புத்தேன் - ஐயம், அருசி, உன்மாந்தை, பித்த வாதம்போம்.

கொம்புபாகற்காய்-மருந்துகளின் குணம்போம். சரப்பான் பித்தம் வலி வாதமும் உண்டாம். பத்தியத்திற்காகாது.

கொம்மட்டிமாதளம்பழம்-ஐயம், அருசி கபம், சிலேர்ப்பனம் பித்தமும்போம்.பாடும்படியான குரலோசை யுண்டாம்.

கொய்யாப்பழம்-அரோசி, சரப்பான், தலைமயக்கம், திரிதோஷம், மந்தம், பொருமல், பேகம், மலம், வாந்தியுமுண்டாம்

கொல்லன் குதம்பை-அஸ்திசுரம், கிராணி, பாண்டு, மாதர் கெர்ப்பத்தின் சீழ், வாயுவும்போம். பசி உண்டாம்.

கொல்லன்கோவை சமூலம்-அக்கி, ஊதை, கண்டமாலை,கரப்பான், குடல்வலி, குஷ்டம், சூலை, திரிதோஷம் பாண்டு, மாவிஷம், மெய்யெரிவு, வெப்பும்போம்.

கொல்லன்கோவைக் கிழங்கு-அக்கி, அரிப்பு, குடல் நோய், கண்டமாலை, குட்டம், சூலை, கிரந்தி,பாண்டு, வாதம், விஷம், வெப்பு, முத்தோஷமும்போம்.

கொளுஞ்சி நாரத்தங்காய்-ஐயம், காசம், சீதம், தாகம், வாய்வு போம்.

கொளுஞ்சி -மேகம்போம் காமக்கோஷ்டி, துளிர், சன்னிதோஷம், சீதம், வாத சேட்டும் முண்டாம்.

கொள்ளிக்கருவாடு-அழகு போம். கொள்ளிசுட்ட புண்

போலக் கரப்பான், சிரங்கு, புண்ணுமுண்டாம்.

கொள்ளி-காய்ச்சல்,குளிர், வாதம், நீரேற்றமும்போம். குடல் வாதம், குன்மமும், பித்தம், மருந்து நாசமும் உண்டாம்.

கொள்ளுக்கஞ்சி -தீபனம் போம். பல் விந்துமுண்டாம்.

கொள்ளுக்காய் வேளை-ஆசீரணம், மந்தம், விசுளி பேதியும்போம். பசி உண்டாம்.

கொள்ளுச்சாறு - கண்ணோய், கிராணி, குன்மம், ஜலதோஷம், சுரம், சுவாச காசம், பித்தம், வாதமும் போம். வற்றியவுடல்,தூலிப்பும் வெப்புமுண்டாம்.

கோ

கோடகசாலை-அனல், கிரந்தி, குட்டம், கொப்பளம், பித்தவாயு, புண், மதமேகம் வயிற்றுப்புழு, வாய்விரணம் மேகமும்போம்.

கோடைச்சம்பா - திரிதோஷம், வாய்வு தேகத்திலுள்ள வியாதியெல்லாமபோம்.

எலிவிஷம், சுரதோஷம், தாபம், தொண்டை நோய், நடுக்கம், பாம்பு விஷம், பித்தம், மூல முளை விருஷ விஷம், வெட்டை, கழுதது தலை, நாவு, வாய், வயிறு இவைகள தப்பும்போம.

கோட்டான்கறி - நோய்களெல்லாம் தலைக்காட்டாமல் போம். அதிகபசி,காட்டானை மதம்போன்ற காமமும் உண்டாம். பத்தியத்திற்காகும்.

கோதாவரி நதிநீர்-கோபம், சிரங்கு, சொறி, நளிர்சுரம், முத்தோஷமும்போம்.

கோதுமைக்கஞ்சி - ஐந்நி, சுரம் நீரேற்றமும் போம். உடல் பலம் உண்டாம்.

கோதுமையடை - ஐயம் போம், தீபனம், பலம்,போக முண்டாம்.

கோதுமையரிசி-பிரமேகம், வாய்வும்போம். தாதுபலம் பித்தமுண்டாம்.

கோமேதகம்-அக்கினி மந்தம், குளிர், பித்தம், வாத கோபம, விகாரம், போகம், குளிர்ச்சி, தீபனமு முண்டாம்.

கோரைக்கிழங்கு - அதிசாரம், அனல் இரத்தபித்தம், ஐயம, குதிவாதம், பித்தம், வாதசுரம, வாந்தி மற்றுமுள்ள பிணிகளும போம்.

கோரைச்சம்பா - அழல், தினவு, பித்தம, மேகமும் போம். குளிர்ச்சி சுகமுண்டாம்.

கோரைப்பாய்-மந்தம், சூட்டையும் போம. தேகக் குளிர்ச்சி நல்ல நித்திரை யுண்டாம்.

கோரையுள்ளான் கறி-தோஷமபோம். பத்தியத்திற்காகும.

கோரோசனை - உள் விரணம, உள்மாந்தம, கபம, கனல வேகம, குழந்தை நோய்கள், நீரிழிவு சூரிமேக சுரமும் போம.

கோவைக்காய்-அரோசகம் அழலை, கபம், கரப்பானும் போம்.

கோவைக்கிழங்கு - கபம், குஷ்டம், சுவாசம், சூலை, நாளின்நோய், பித்தம், மதுமேகம் முத்தோஷமும் போம். காரம் குளிர்ச்சியுமுண்டாம்.

கோவையிலை - காசம், சிரங்கு, நீர்க்கட்டு, புண்வாய், வெப்பம்போம். கண் குளிர்ச்சியுண்டாம்.

கோழிக்கறி - கடுப்பு, சிலேட்டுமம், மந்தம் மருந்தின் பலம், மூலம், வாய்வும் போம் அதிக சூடு, கிரந்தி தேகமிளைத்தல், பித்தம் யோகமும் உண்டாம்.

கோழிக்கீரை - கரப்பான், கிருமி, சொறியும் உண்டாம்

கோழிமுட்டை - கபம் தோஷம், புண்ணும்போம். கரப்பான், தாது, பித்தம். வாதமும் உண்டாம்.

கோழியவரையிலை - குடல் வாதம், குன்மம், வயிற்றிலுண்டாகுய ஆமைக்கட்டியும்போம்.

கோ - இலந்தை

கோகண்டம் - நெருஞ்சில்

கோகநகம் - தாமரை

கோகந்தம் - கந்தகபாஷாணம், தாமரை

கோகயம் - தாமரை

கோகருணை - பெருங்குரும்பை

கோகலி - கடம்பு

கோகனம் - கையாந்தக்கரை, செந்தாமரை, நிலக்கடம்பு, நிலவேம்பு கரியசாலை.

கோகிலம் - சிறுகுறிஞ்சா

கோகிலவாசம் - மரமாம்

கோகிலபட்சம் - நீர்முள்ளி, கொம்மட்டி மாதுளை

கோகிலோற்சவம் - மாமரம்

கோகுத்தம் - மல்லிகை

கோங்கம் - நெல்லி

கோங்கிலவு - கோங்கு

கோங்கு - ஓர் மரம்

கோசம் - சாதிக்காய்

கோசமம் - பீர்க்கு

கோசரம் - மகிழ்

கோசன் - சீர்பந்தபாஷாணம்

கோசாங்கம் - நாணம்

கோசாரி - பீர்க்கு

கோஷம் - மாமரம்

கோஷ்டம் - ஓர் பூண்டு இதன் வகை : வெண்கோஷ்டம், செங்கோஷ்டம்.

கோடம் - செங்கருங்காலி

கோடகசாலை - ஓர் பூண்டு

கோடங்கிழங்கி - கோடை

கோடதரம் - சுக்கு

கோடரம் - எட்டி

கோடல் - வெண்காந்தல்

கோடற்கிழங்கு - கோடை [கு

கோடாகங்கு - கோரைக்கிழங்

கோடாசூரி - கோடகசாலை

கோடாசொரி - ஓர் பாஷாணம்

கோடாசொரி பாஷாணம் - கொடியமன்னன்

கோடிரவம் - சதுரக்கள்ளி

கோடிலம் - கோஷ்டம்

கோடை செங்காந்தள், வெண்காந்தள்.

கோடைக்கிழங்கு - குட்டியிடுக்கி, சிற்றரத்தை.

கோடைக்குவாடான் - ஆவிரை

கோட்டம் - கோஷ்டம், குரா இதன குடிநீர் விருப்பமான வாசனையும் கூடுள்ள

தாயு மிருக்கும். முடிச்சுள்ள இதன்வேர் மற்ற சரக்குக ளோடு சேர்த்துச் சீரண மருந்தாகக் கொடுக்கப்படு கிறது.

அஸ்திசுரம் எலும்புருக்கிக் காய்ச்சலுக்கு மிகவுஞ் சிறந்த மருந்தாக யோசிக்கப் படுகிறது. இது பாரீசு தேசத் திலிருந்தும், சுமத்திரா தேசத்திலிருந்து வரப்பட்ட சரக்கா யிருக்கின்றது, அர பித் தேசத்தார் இதை பசி யுண்டாக்குகிற சீரண மருந் தாக யோசிக்கிறார்கள்.

கோட்டாரி-கல்லாரை

கோணுக்கிணுக்கி-சிற்றரத் [தை

கோணி-அத்தி

கோண்டம்-குறிஞ்சா, நெருஞ்சி

கோண்டை-இலந்தைமரம்

கோதம்-சீதாங்கபாஷாணம்

கோத்தரிகை-கொடிமுந்திரி

கோத்திரம்-நெட்டி [கை

கோத்திரம்-வரகு [கை

கோத்திரிகை-கொடிமுந்திரி

கோதளங்காய்-குறுந்தேங் காய்

கோந்தனை-பேய்க்கொம் மட்டி

கோபகுண்டம்-எட்டி

கோபங்கம்-சரகண்டபாஷா ணம்

கோபம்-தம்பலப்பூச்சி, துத்த பாஷாணம்

கோபி-கருநொச்சி

கோபிதாரம்-குராமரம் [பை

கோபுரத்தும்பை-அடுத்தும்

கோபுரந்தாங்கி-ஓர் பூண்டு

கோமரம்-சதுரக்கள்ளி

கோரக்கர்மூலி-கஞ்சா

கோரங்கம்-நெல்லி

கோரங்கி-சிற்றேலம்

கோரணி-ஓர் நோய்

கோரண்டம் - பெருங் குறிஞ்சி, பச்சைப்பூவுள்ள மருதோன்றி.

கோரவாரம்-சந்தனம்

கோரான்செடி - கோரான் குச்சு, கோன்சுளுந்து.

கோரை-ஓர் புல்

இதன் வகை: ஆட்டாங் கோரை, கோரைக்கிழங்கு, சிற்ருட்டாங்கோரை, ஈருள் ளிக்கோரை, ஓமக்கோரை, கச்சற்கோரை, கஞ்சாங் கோரை, கல்லாங்கோரை, களாப்பூக்கோரை, கன்னிக் கோரை, காட்டுக்கோரை, கிளைக்கோரை, குத்துக்கோ ரை, குளம்படிக்கோரை, கொட்டிக்கோரை.

கோரைக்கிழங்கு- முத்தக் காசு, பாளமூலம், பாதாள மூலி.

கோரையின் வகை: கோ ரைப்புல், சம்பங்கோரை, சம் புக்கோரை, கீப்பங்கோரை, சீரகக்கோரை, கன்னிக் கோரை, சருக்கங்கோரை, ஈருன்னிக்கோரை, சுணைக் கோரை, தண்டாமரைக் கோரை, தந்தக்கோரை, தாட்கோரை, திரட்கோரை, நெட்டிக்கோரை, நெறிக் கோரை, பசுங்கோரை, பனை க்கோரை, பாய்க்கோரை, பிரப்பங்கோரை, புறக்கோ ரை, பூங்கோரை, பெட்டிக் கோரை, மட்டைக்கோரை, மயிர்க்கோரை, முடிக்கோ ரை, முதலைக்கோரை, மூக்

கொற்றிக்கோரை, வரிக் கோரை, வாட்கோரை.

கோனுள்ள இதன் திரட்சியுள்ள வேரின்கஷாயம் சுரத்துக்குக் கொடுக்கப்படுகிறது. மெதுவாய் வெயர்வை யுண்டாக்குகிற மருந்தாகவும் சில பேதி மருந்தாகவும் யோசிக்கப்படுகின்றது. நீராம்பல் பாண்டு, அதைப்பு, வீக்கம் இந்த வியாதிகட்கு மிகச் சிறந்த மருந்தென்றும் யோசிக்கப்படுகிறது.

கோலகம்-திப்பிலி

கோலம்-பீர்க்கு இலந்தைக் கனி, பன்றி.

கோலமாலம் - மலையாமணக்கு

கோலவேர்-நிலப்பனை

கோலா-திப்பிலி

கோலி-இலந்தை, திப்பிலி

கோல்-இலந்தை

கோவணி-ஆத்தி

கோவம்-பொன்

கோவிதாரம்-காட்டாத்தி

கோவை-ஓர் கொடி

இதன்வகை: அப்பக்கோவை, கற்கோவை, கொல்லங்கோவை, கோவைச்செடி, கோவைப்பழம், மணற்கோவை.

கோழி -பன்றிக் கிழங்கு வெருகு, கோழிக்கால், கொடியரசு.

கோழிக் குஞ்சின் சாறு: இதை எந்தக் காரணத்தினாலாவது பலவீனத்தில் வருத்தப்படும் நோயாளிக்குப் பலன் கொடுக்க உபயோகமானதாயிருக்கின்றது. அதைக் கீழ்ச் சொல்லிய பிரகாரம சரியாய்ச் செய்ய வேண்டும். ஒரு முதிர்ந்த பெட்டைக் கோழியாவது, கிழச்சாவலாவது கொண்டு வந்து அதின் இறகுகளையும், உள்ளிருக்கும் குடல் முதலியவைகளையும் நீக்கிய பின்பு அதை ஒரு கடுக்காயின் பரிமாணம் துண்டுகள் செய்து அதில் அரைப்புட்டிக் குளிர்ந்த சலத்தை விட்டு ஒருமணி நேரம் வரையும் வைத்திருந்தப்புறத்தில் 8-அல்லது 10-வெண்டைக்காய்களைச் சிறு துண்டுகளாக அரிந்து கூடப் போட்டுச் சிறு தீயிட்டு அரைப் புட்டியாக வற்றினவுடன் வடிகட்டி அதில் பிணியாளிக்கு உருசி கொடுக்கத்தக்கதாய் உப்பும் சேர்த்து ஆறவைதது நன்றாய்வெந்த சாதத்தில்விட்டுச் சாப்பிடச் செய்யவேண்டும். இதைத் தினந்தோறும் புதிதாய்ச் செய்து கொள்ள வேண்டும். குழந்தைகளுக்குப் பாதி வளர்ச்சியான கோழி யேற்றதாயிருக்கும்.

கோழிக்கொடி-கோழியவரை

கோழிக்கொண்டை - சாவற்கூட்டுப்பண்ணை.

கோழிப்புடம்- குக்குடபுடம்

கோழியவரை-ஓர் பூண்டு

கோழைவிந்து-துளசி

கோளம்-திப்பிலி, மிளகு, மண்டலிப்பாம்பு.

கோளி-அத்தி, ஆல், கொமுஞ்சி

கோளேசம்-குங்குமப்பூ

கோல்-காவட்டம்புல்

கோற்கொடி-இலந்தை, கரை

கௌ

கௌ-கொள்ளு
கௌசிகம்-குங்கிலியம்
கௌதமை-ஓர் கொடி
கௌதமை-கோரோசனம்
கௌந்தி-அரேணுகம், வால் மிளகு
கௌரி-கடுகு, புளிநரளை
கௌரிகேசணி-வெள்ளைக் காக்கணம்.
கௌரியம்-கருவேம்பு

ச

சசசரி-பொன்னிறங் கலந்த கரும்பூவுள்ள மருதோன்றி.
சகசம்-சிறுகுறிஞ்சா
சகடம்-தமரத்தை
சகத்திரவீரியம்-அறுகு
சகநாயகன்-காந்தம்
சகரிகம்-நாயுருவி
சகா-பாம்புகொல்லி
சகாடி-பீர்க்கு
சகாதேவி-சீதேவி
சசியம்-நிலப்பனை, மஞ்சள், [மா
சகுடம்-சோம்பு
சகுடை-சிற்றகத்தி
சகுட்டம்-கிழங்கு
சகுட்டம்-ஆடுதின்னாப்பாளை
சகுண்டிகை-கமுகு
சகுலாடகம்-வெள்ளறுகு
சகுலாதி-கடுகுரோகிணி
சகுனம்-கிழங்கு, பேராத்தை, செம்பொத்து
சகோரம்-செம்பரத்தை
சக்கரபதி-தகரை
சக்கரம்-மடக்கு, மலைமல்லி [கை
சக்கரை-சர்க்கரை
சக்காரம்-தேமா
சக்கிரகாரம்-புலிதொடக்கி
சக்கிரபுட்பி-குப்பைமேனி
சக்கிரம்-அத்தி, தகரை
சக்கிரவாதபம்-செம்புளிச்சை
சக்கிராங்கி-கடுகுரோகணி
சக்குபு-ஈரிசாலை
சங்கங்குப்பி-சங்கு பீச்சு விளாத்தி, பீநாறிச் சங்கு
சங்கங்குப்பி-ஓர் செடி

இதன் வேரின் இலையின் சாறுகசப்பாக இருக்கின்றது, கண்டமாலை மேகவியாதி இவைகட்குத் தனிச் சாறாக வாவது, ஆமணக்கெண்ணெயோடு சேர்த்தாவது கொடுக்கப்படுகிறது.

சங்கஞ்செடி-சங்கு, சங்கி
சங்கபாஷாணம்-ஓர் பாஷாணம் [ம்
சங்கத்திராவகம்-ஓர் திராவக
சங்கபுநகி-கடுகுரோகணி
சங்கம்-சங்குநெற்றியெலும்பு, கணைக்கால், நெற்றி புணர்ச்சங்கு பாஷாணம், தாலம்பபாஷாணம்.
சங்காரி-குதிரைவாலி
சங்கினி-பூச்சுவிளர்த்தி
சங்கிலை-ஓர் செடி

இந்த இலையின் சாறு கசப்பாக விருக்கின்றது இது இருமல், சயம், இரைப்பிருமல் இந்த வியாதிகளுக்குக் கொடுக்கப்படுகிறது. மற்ற மருந்துகளோடு சேர்த்து இலேகியம் செய்யப்படுகிறதுமுண்டு. இதன்வேரின் சூரணமும் அப்படிப்பட்ட வியாதிகளுக்கு உபயோகிக்கப்படுகிறது.

சங்கு-இசங்கு, கடுகுரோகிணி

சங்கு தெற்கு மேற்குக் கரைத் துறைகளில் விஸ்தா

ரம் அகப்படுகின்றது. இக ளைச் சுதேசிகள் மோதிரங் கள், மணிகள் ஆபரணங் கள் செய்துக்கொள்ளுகிருர் கள்.
சங்குநிதி-கிலுகிலுப்பை
சங்குப்புட்பம்-ஞாழல்
சங்குச்செடி-இசங்குச்செடி
சசல்-சசல்
சசம்பாரி-ஆமணக்கு
சசாயம்-சிறுநன்னாரி
சசி-கற்பூரம்
சகியம்-மாமரம், ஆச்சா, கஞ் சா, நிலப்பனை, இந்துப்பு
சகூபம்-அசோகு
சச்சபம்-தாமரை
சச்சு-நீர்ச்சுண்டி
சஞ்சீவிகரணி- புளியமரம், மூர்ச்சை தீர்த்து உயிர்தரும் மருந்து, புளி.
சஞ்சீவன்-மா
சஞ்சீவினி-மூர்ச்சை தீர்த் துயிர்தரு மருந்து.
சஞ்சு-ஆமணக்கு
சடக்கோதன்-வசம்பு
சடம்-உடல்
சடப்பால்-மலைப்பால்
சடாதரம்-அரிநெல்லி
சடாதாரி-கொடியார் கூந்தல்
சடாமாஞ்சி- ஓர்மருந்துப்புல்
இந்தச் செடியின் உலர்ந்த வேரை எண்ணெயிற் கல ந்து வாசனை குளிர்ச்சி தரு கிற வைகளுக்காகச் சிரசில் தேய்த்துக் கொள்ளப்படும். உதிரத்தைப் பரிசுத்தமாக்கு கிற மருந்தாக உள்ளுக்குங் கொள்ளப்படுகிறது, வயிற்று வியாதிகளுக்கும் உபயோக மாகும்.
சடிதிவு-கச்சோலம்
சடிலம்-சடாமாஞ்சில்
சடினம்-வசம், சடை, வேர்
சடை-நெட்டிவேர்
சடைக்கஞ்சா-ஓர் கஞ்சா
சடைக்கந்தம்-வசம்பு
சடைஞ்சி-புளியாரை, நெ ட்டி, பாசி, நிமிளை.
சடைச்சிவேர்-ஓர் வேர்
சடைமுடி-திருக்கொன்றை
சட்டகம்-உடல், வடிவு
சட்டாம்-வில்வம்
சட்பம் -மயிர்
சட்டி-தாமரை
சட்டை-தைவேளை
சட்பம்- அறுகு, இளம்புல்
சணம்-சணல்
சணுவு-கையாந்தகரை
சண்டம்- பேடு, கொடுமை ம சண்டப்பை.
சண்டன்-புளி
சண்பகம்-செண்பகம்
சதகம்-தான்றி
சதகுப்பி-சதகுப்பை
குழந்தைகள் வயிற்றுவலி, வாயு, குன்மம் முதலிய வியாதியால் உண்டாகும் உபத்திரவத்திற்கு 3-கிராம் சதகுப்பையின் விரையை சதைத்து அரைப்புட்டி கொ திக்கிற தண்ணீரிலிட்டு வைத்து இரண்டு மூன்று மணி நேரம் கழிந்தபின் ஆறினவுடன் வடிகட்டி ஒரு தரத்துக்கு 2-கிராம் முதல் அரை அவுன்ஸ்வரை கொஞ் சம் சர்க்கரையும் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.
இந்த கஷாயம் சீரண மருந்தாகவும் ஸ்திரீகட்குப் பிரசவமானவுடனே பலன்

கொடுக்கிற மருந்தாகவும் யோசிக்கப்படுகிறது.
இது இந்தியா தேசத்தில் விஸ்தாரம் விளைகிறது.
சததளம், சதபதுமம்- தாமரை.
சதபத்திரி-தாமரை, புழுக்கொல்லி. ஆடுதின்னாப்பாளை
சதபுட்பம்-சதகுப்பை
சதவீரியம்-வெள்ளெருகு
சதவீரு-மல்லிகை
சதாடடம்-எருக்கு
சதாபலம்-எலுமிச்சை
சதாப்பு-ஓர் பூண்டு
குழந்தைகட்குச் சலதோஷங் கண்டிருக்கும் போது புகையூட்டுதற்கு இதனிலை உபயோகப் படுகின்றது. திமிர்வாதம், சோர்வாதமிதற்கு முதற்பருவத்தில் இதன் பச்சையிலைச் சாற்றில் சாராயங் கலந்து மேற்பூச்சாகப் பூசப்படுகிறது. அசீரணம், பசியின்மை, குன்மம் இவைகட்கு இதை நிழலில் உலர்த்திச் சில சுகந்த பட்டை மூலங்களோடு சேர்த்துச் சூரணஞ்செய்து கொடுக்கப்படுகிறது. இதனோடு கற்பூரமும் பனைவெல்லமும் கலந்து உண்டால் கருப்பிண்டத்துக்குக் கெடுதியுண்டாகும்
சதாமூர்க்கம்-பாம்பு கொல்லி
சதாமூலம், சதாவேரி- தண்ணீர்விட்டான்.
சதிரம்-சக்கரி
சதீலம்-மூங்கில்
சதீனகம், சதீனம்-பயறு
சதுரம், முச்சதுரம்- சதுரக்கள்ளி.

இது பலனுள்ள பேதி மருந்தாயிருக்கிறது. இதைக் கொஞ்சம் எண்ணெயில் போட்டுக் காய்ச்சி மூட்டு வாதம், கீல்வாதங்களுக்கு மேற்பூச்சாகப் பூசப்படுகின்றது. பல் நோய்க்கும் உபயோகப் படுத்தப்படுகிறது, மலக்கட்டு மலச்சிக்கல் கண்டபோது உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது.
சதுர்கூலி- ஆவிரை
சதேசரு- இலவங்கப்பட்டை
சதை-பாலை, முன்னை
சதைப்பொருந்தி-ஓர் நீர்ப் பூண்டு
சத்தபருணி- ஏழிலைப்பாலை
சத்தவர்க்கம்: அவை நெல்லிக்காய், வெட்டிவேர், குருவேர், சடாமாஞ்சி, ஏலம், இலவங்கப்பத்திரி, கிராட்சம் என்பன. சத்தி, நீர்முள்ளி, கும்மட்டிக்கொடி. கந்தகம், சவுக்காரம், நிமிளை, சுக்கல், சத்திகுன்மம், சத்திசாரனி, வேம்பு.
சத்திநாதம்- பொன்னிமிளை, ஏமாப்பீகம்.
சத்தியம்-குறிஞ்சா
சத்திரம்- தும்பை, கவிழ்தும்பை
சத்திராட்சி-அரத்தை
சத்துருபாஷாணம் - நிர்விஷம்
சந்தகபுட்பம்-கிராம்பு
சந்தணி-சந்தனம். செஞ்சந்தனம், அகரு.
சந்தம்-சந்தனம்
சந்தகி-துவசி
சந்தனுதி-வேங்கை
சந்தனுதித்தயிலம்-ஓர் தைலம்
சந்தாமப்பம்-எருக்கு

சந்தாகைரணி - அறுகு. பெருமருந்து, முறித்த உறுப் புகளைப் பொருந்து மருந்து,
சந்தி-மூங்கில்
சந்திரகாம்பியம்-வெண்டாமரை
சந்திர திலகம்-சந்தனம் [ரை
சந்திரபீசம்-இந்திரகோபம்
சந்திரம்-பச்சைகற்பூரம்
சந்திரம்-கற்பூரம்
சந்திரலவணம்-இந்துப்பு
சந்திரிகை-பேரேலம்
சந்திரரேகம்-கார்போகரிசி
சந்து-சந்தனம்
சந்துநயத்தான்-தூதுளை
சபம்-மூங்கல்
சபலா-திப்பிலி
சபினம்-வசம்பு
சப்பாத்திச்செடி-ஓர் செடி
இதை எண்ணெயோடு சேர்த்துப் பிரசவ வேதனை போன்ற இடுப்புநோவு, வயிற்றுநோவு இவற்றினோடு கூடிய பெரும்பாடு வியாதிக்கும் கொடுக்கப்படும்.
சப்பாத்திப்பூ-ஓர் பூ
சமங்கை - வறட்சுண்டி, ஆடுதின்னாப்பாளை, தொட்டால்வாடி.
சமனம் - ஆடுதின்னாப்பாளை, புழுக்கொல்லி, வசம்பு
சாமாது-ஊமத்தை
சமாலுகம்-குறிஞ்சா
சமி-தணக்குமரம், வன்னி [மரம்
சமித்து-கஞ்சா
சமித்துபாகம்-கொன்றை
சமிலாகி-திப்பிலி
சமீரணம்-கிடாரை
சமுத்திரசுத்தி-ஆரல் [லை
சமுத்திரசோகி - சமுத்திரபா
சமுத்திரதோயம் - முடக்கற்ருன்.

சமுத்திராந்தம் - சிறுகாஞ்சொறி, பருத்தி, சாதிக்காய்
சமுத்திராப்பழம்-ஓர் காய்
இந்தச் சரக்கு ஓர் பெரிய எலுமிச்சம்பழம் போன்று பெரும்பாலும் நான்கு பிளவை ரேகையுள்ளதாக இருக்கின்றது. அது கசப்பு, உரிசையுள்ளதாகவு மிருக்கின்றது. மூக்கிலுள்ள இரணங்களுக்கு நாசிகாசூரணமாகச் செய்து உபயோகப்படுத்தப் படுகின்றது. இந்தச் சரக்கு கிழக்குத் திசையிலுள்ள தீவாந்தரங்களிலிருந்து கொண்டுவரப்படுகின்றது.
சமுப்பலம்-தைவேளை
சமுள்-சவண்டிலை
சம்பங்கி-செண்பகம்
சம்பரி-நேர்வளம்
சம்பளம்-எலுமிச்சை
சம்பா-சம்பாநெல்
சம்பீரமம்-பரங்கிபாஷாணம்
சம்பீரம்-எலுமிச்சை
சம்பு - சம்பம்புல், எலுமிச்சை, நாவல், நெரிநட்டி, சடைப்பூண்டு, புச்சயனம், ஆல்.
சம்புநாவல்-ஓர் நாவல்
சம்மியாகம்-கொன்றை
சமந்தி-வாதமடக்கி
சமம் - சயரோகம், காசம், காசை, ஆம்பல், ஆம்பற்பூ, சருக்கரை, சர்க்கரை.
சயபித்தம்-ஓர் நோய், சயரோகம், வாதமடக்கி.
சயிக்கர்-அரசு
சயிந்தலவணம்-இந்துப்பு
சயிரோகம் - மேகவர்னப் பூவுள்ள மருதோன்றி, மேகவண்ணக் குறிஞ்சி.

சயிலங்கமாலை-இருவேலி
சயினி-திப்பிலி
சரக்கு- அறுபத்து நான்கு, அவற்றில் தாது ஒன்பது தற் செயலாயுண்டாவன, வைப்பு ஐம்பதைந்து கையால் செய்யப்படுவன.
ஆண் சரக்கு உப்பு, விந்து வெடியுப்பு, கல்லுப்பு முதலியவைகள்.
பெண் சரக்கு புளிச்சுரோணிதம் அதாவது படிகாரம், பழம், புளி முதலாகியவைகளேயாம்
உப்பெல்லாம் ஆண்சரக்கு உப்புவிந்து, புளிப்பெல்லாம் பெண் சரக்கு புளிச்சுரோணிதம், சுரோணிதத்தில் விந்து சேர்ந்து திரண்டு உருவது போலப் புளிப்பான சரக்கில் உப்புச் சரக்குச் சேர்ந்து திரண்டு கட்டிப்போகிறதினால் ஆண் சரக்கு, பெண் சரக்கென்று இவை பேர் பெறறன.

வெடியுப்பு	உப்பு
படிகாரம	புளி
கல்லுப்பு	உப்பு
பழமபுளி	புளி
சூடன	உப்பு
துரிசு	புளி
கடலெநுரை	உப்பு
கறசுணநீர்	புளி
சூதம	உப்பு
கெந்தி	புளி
காந்தம்	உப்பு
காடி	புளி
இரும்பு	உப்பு
எரியாலய எண்ணெய்	புளி
பேது	உப்பு
பொன்னம்பர்	புளி
தொட்டிப்பாஷாணம்	உப்பு
புளியரணை, புளிநரளை	புளி
மாங்கிசபேதி	உப்பு
கல்மதம்	புளி
வீரம்	உப்பு
புளியாரை	புளி
அப்பிரகம்	உப்பு
காய்ச்சுறுக்கு	புளி
கௌரி	உப்பு
புளிமாங்காய்	புளி
வெள்ளைப்பாஷாணம்	உப்பு
பனங்கள்ளு	புளி
வைக்கிராந்தம்	உப்பு
நிமிளை	புளி
தங்கம்	உப்பு
மனோசிலை	புளி
சாரம	உப்பு
வெங்காரம்	புளி
பச்சைக்கற்பூரம்	உப்பு
இந்துப்பு	புளி
வீரம	உப்பு
நாகம்புளி	புளி
கல்லுப்பு	உப்பு
இலிங்கம்	புளி
சிலாசத்து	உப்பு
செம்பு	புளி

ஆடுஞ்சரக்கு அதாவது: உருகியாடி யெழும்பிப் போகுஞ் சரக்கு.
ஆடி நெருப்புக்கு நில்லாமலோடுஞ் சரக்கு
சரக்குச்சுண்ணம்- சவ்வீரம்
சரக்கொன்றை- திருக்கொன்றை
சரசம்-தக்கு
சரச்சிறு-சிறுகுறிஞ்சா
சரணம்-அரசு
சரணம்-நாணல்
சரவணம்-நாணல்
சரவாச்சம்-கறியுப்பு
சரளம்-சிவதை
சராசனம்-அரசு

சரித்திரை-புளி
சரிசம்-அசோகு
சரியம்-சிறுநன்னரி
சருசகம்-கடுகு
சருப்பராசி-நாணல்
சருப்பராச்சியம்- பீச்சுவிளாத்தி
சரோசம்-தாமரை
சரோருகம்-தாமரை
சர்க்கரைவள்ளி-வத்தளைக் கிழங்கு
சர்ப்பராசி - நாணல், சங்கங் குப்பி, பீச்சு விளாத்தி
சர்வசாதகம்-வேங்கை
சலசந்தி-சகஸ்திரபேதி
சலகாங்கம்-தாமரை
சலக்கூர்மை அமரியுப்பு
சலசம்-தாமரை
சலசன்மம்-தாமரை
சலம்புரி-சங்கு
சலருகம-தாமரை
சலவகு-இலவம்பிசின்
சலிப்பிப்பிலி-நீர்த்திப்பிலி
சலினி-திப்பிலி
சலிப்பு-சலதோஷம்
சலோற்சம்-குங்கிலியம்
சல்லகி-ஆத்தி, இலவு,தேட் கொடுக்கி.
சல்லாரி-கடுக்கம்
சல்லியம்-செஞ்சந்தனம்
சவட்டுமண்ணுப்பு-நவச்சாரம்
சவண்டிலைமரம்-ஓர்மரம்
சவரி-குறட்டை
சவரிக்கொடி-கொடியார் கூந்தல்
சவளச்சி-சத்திசாரம்
சவளை-வங்கமணல்
சவற்சலம்-கல்லுப்பு
சவிகம்-விஷ்ணுகரந்தை
சவிசங்கவாதம்-ஓர் நோய்
சவுகந்தி-வசம்பு
சவுசயம்-முருக்கு
சவுண்டகம-திப்பிலி
சவுநாகம்-கையாந்தகரை

சவ்வரிசி-ஓர் செடியிலிருந் தெடுத்துச் செய்யப்படுவது.

இது நோயாளிக்கும் பல க்ஷீய முள்ளவனுக்கும் மிக வும் பலனைக் கொடுக்கிற ஆகாரமா யிருக்கின்றது. அதைக் கீழ்ச்சொல்லி யிருக் கிற பிரகாரம் செய்யவும். அரை அவுன்ஸ் நல்ல சவ் வரிசியை அரைப்புட்டி சலத்தில் கொட்டி வைத்து இரண்டுமணி நேரஞ்சென்ற பின் அடுப்பில் வைத்து கால் மணிநேரம் வரையும் விடா யற் கலக்கி வேக வைக்கவும். அதன்பின் கொஞ்சம் பசு வின்பாலும, பஞ்சதாரையும் அல்லது இன்பமான வாசனை கொடுக்கும்படியாய்க கொஞ் சம் ஜாதுக்காயின் தூளையா வது சேர்த்துக் கொள்ள வேண்டும். அதை எப்பொழு தும் தேவையான போ தெல்லாம் உடனுடன் செய்து கொள்ள வேண்டும்.

இது மகா அழகுள்ள செடி யாயிருக்கிறது. அதன் அகல மான மிருதுவான இருதய வடிவுள்ள இலைகள் அதன் கீழ்ப்புறத் தோற்றம் ஒரு வெள்ளை வெல்வெட்டுச் சமானமானதா யிருக்கும.

இந்தச் சரக்கு முக்கியமாய் மலாகா தீவுகளி லிருந்துக் கொண்டு வரப்படுகிறது. அவ்விடத்தில் இப்பி யென் கிற மரத்திலிருநது விஸ்தார மாய் உண்டாகின்றது. நோ யாளிகளுக்கு இதனுக்களை

விட மகம்மதியர் மிகவும் உபயோகப் படுத்துகிறார்கள். இதன் மதிப்பைச் சுதேசிகளைவிட ஐரோப்பியர் அதிகமாயறிந்திருக்கிறார்கள்.

சவ்வாது-மரவல்லி

சவ்வீரம்-ஓர் சரக்கு

இது வெகு சிறிய அளவாகக் கொடுக்கப்படுகிறது. இது மிகவும் கடினமாக நிச்சயமில்லாத அபாயமான சேசரிப்பாயிருக்கின்றது. இதற்கடியில் வரும் பிரயோகம் பூரண சூஸ்திரத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது.

முதல் 10-வராகனெடைக் கந்தகமும் 80-வராகனெடை இரசமும் அரைப்படி உப்பும் பலமான இரசபஸ்பம் செய்யப்பட வேண்டும் அதன் பின்பு 80-வராகனெடை இந்தஇரசபஸ்பத்தோடு அதே அளவு வறுத்த உப்புச் சேர்க்கவேண்டும். இவைகளோடு மறுபடியும் இதற்கடியில் வருகிற சரக்குகள் சேர்க்கவேண்டும் 40-வராகனெடை வறுத்த துரிசு, 20-வராகனெடை படிகாரம், 20-வராகனெடை பொட்டிலுப்பு 20-வராகனெடைப் பூநீறு 10-வராகனெடை அன்னபேதி, 5-வராகனெடை நவசாரமேயாம். இவற்றையெல்லாம் கல்வத்திலிட்டு நன்ருய்ப் பொடி செய்து ஓர் குப்பியில் பாதியளவா யடைத்து அதற்குச் சீலமண் செய்து ஜாதிலிங்கத்தைப் போல் அடுப்பிலேற்றி முப்பத்தாறு மணி நேரம் சாக்கிரதையாய்த் தீயெரிக்கவேண்டும், அதன் பின்பு குப்பியை உடைத்தால் அதனுடைய வாயில் சவ்வீரக் கட்டி காணப்படும்.

சளகந்தம்-வசம்பு

சறுதாகம்-வேங்கை

சறுவானுபூதி-சிவதை

சற்சுகாதி-பெருமருந்து

சனகந்தம்-வசம்பு

சனகம்-புளியாரை

சனமாலி-இலவு

சன்னமாலி-சதகுப்பை

சனிப்பாகம்-கொன்றை

சனுசம்-மிளகு

சன்னசாலம்-வெண்கடுகு

சன்னராஷ்டகம் - சிற்றரத்தை

சன்னி-சீதநோய், குன்மம்

சன்னிகுன்மம்-அஷ்ட குன்மம் பார்க்க.

சன்னிநாயகம்-தும்பை

சன்னிபாதம்-ஓர் நோய்

அதாவது: சன்னிபாத சுரம், கண்டகுச்சம், சந்திகம், சுகஜன்னி, சூதகஜன்னி, தாந்திரிகம், பக்கினநேத்திகம், ருத்தாகம், சிஂவிகர, பிரலாபம், அந்தகவு, ரத்தஷ்டீவி, சித்தவிப்பிரமம, சீதகாத்திரம், சீதாங்கம், கர்னிகம், அபின்னியாசம் மாந்த ஜன்னி.

சன்னியம்-மரமஞ்சள்

சகல கிழங்குகளின் குணம்: கருணைக் கிழங்குகள் தவிர மற்ற கிழங்குகளெல்லாம் வாதமுண்டாம் சகலாந்து, குளிர்சுரம், பனிக்குளிர், பெரும்பாடும் போம்.

சங்கங்குப்பி இருமல், கபம், கரப்பான், கருங்கிரந்தி, கருங்குஷ்டம், கிரந்தி, தேகத்திலுள்ள பூச்சிகள், சூலை, செவ்வாப்புக்கட்டி, சொறி, சிரங்கு, மேகம், வாதம், விஷம், வெட்டையும் போம். பித்தம் உண்டாம்

சங்குசெடி சமூலம்-ஐயம், கரப்பான், கிரந்தி, குன்மம், சூலை, வாய்வு தாகம், பித்தம, விஷமும் போம்; இரத்தம், கண் துலக்கம், பசியும் உண்டாம்.

சங்கம்பால்- சுர வெப்பு, வீககம், நீர்ச்சுரப்பும் போம்

சங்கம்வேர்- அதப்பு, இருமல், கிரந்தி, கிருமி, சளிசுரம், பித்தவாதம், வாதக்கடுப்பும் போம்.

சங்குச்சாரம்- சேட்டும வாதம் பல ரோகங்களும் போம்.

சங்குநீறு-பாலடைநீறு குன்மம், மேகமும்போம்.

சசி-பாம்பு விஷக்கடி போம்.

சடாமாஞ்சி-இருமல், இரத்த பித்தம், இரைப்பு, உட்டனம், கண்ணோய், குட்டம், சிலந்திவிஷம், பழையசுரம், பேதி, வாய்வும் போம்.

சடைச்சி, விரியன் விஷம் போம்.

சணப்பு-கருப்பங்கள் கரைதலும், பித்தமும் போம். உரைப்பும் கைப்பும் உண்டாம்.

சண்பகப்பூ- அஸ்திசுரம், கண்ணழற்சி, பித்தசுரம், தாதுநஷ்டம், மேகம், வாதம, பித்தமும் போம். உட்டினம், காந்தி, மணம், மனக்களிப்பு முண்டாம்.

சண்பகமரவேர்- கண்தோஷம், சுரம், தீராத உஷ்ணம், பருக்களும் போம், பசியுண்டாம்

சதகுப்பை-கபம், சிரசுநோய், சுரம், குதிக்கால் வாதம், செவிநோய், பீநசம், மூலக்கடுப்பும் போம்.

சதா வுட்காருதல்-வாயுவுண்டாம்.

சதா பாத நடை- அங்கவொளி, பலம், புஷ்டி, வீரிய விர்த்தி போம்; கிழமேனியுண்டாம்.

சதுரக்கள்ளி-கபம், கரப்பான், குன்மம், சீதம், சொறியும் போம். பேதியுண்டாம்.

சதுரக்கள்ளிப்பால் - கடி, கரப்பான், கிருமி, குட்டம், குன்மம், சூலை, புண், மேகம், வாய்வும்போம்; பேதியுண்டாம்.

சதுரப்பிரண்டை- அக்கினிமந்தம், உஷ்ணவாயு, கிராணி, சூலை, பேதியும் போம்.

சத்திக்ஷாரம், இருமல், கிராணி, குன்மம், பீலிகம், மகோதரம், மந்தம், மலசலமும் போம்.

சத்திச்சாட்டரணை-மேகம், விப்புருதியும் போம், நாடியிருகல் விந்துமுண்டாம்.

சந்தனபேதம்- செம்மையுத்தமம், மஞ்சள் மத்திமம், வெண்மை அதமம், என மூன்று பேதமாம்.

சந்தனம் - ஐயம், சுரம், சொறி, தாகம், பித்தம, பிர

மியநோய் மனப்பிரமை, மேகம், வெப்பும்போம். அருள், அழகு, இன்பம், குளிர்ச்சி, நல்லறிவு, பலம், மோகமும் உண்டாம்.

சந்திரகாந்தி - உந்திவலி, தழவெரிச்சல், நீர்க்கடுப்பும் போம்

சமுக்காளம் - பிஜு (ஜு), வாதம், பித்தம், சிலேட்டுமமுஞ் சமனும்.

சமுத்திரசோஷி, விதை- ஐயம், அரோசிகம், உதிர வாய்வு, நீரிழிவு, வாய்வும் போம்.

சமுத்திர நீரை காய்ச்சிக் குடித்தல்- இரத்த குன்மம், உடல்கடுப்பு, உதிரசூலை, ஊணிற்றுவிழல், குஷ்டம், ஐந்நிதோஷம், சந்நி, தோஷம், சோணிதவாதம், நடுக்குவாதம், நாக்கிழுப்பு, பல்லில் இரத்தம்வருதல், பீலிகம்,பெருநோய், மகோதரம், மகோதரக்கட்டி, மலசலபந்தம், வாதகுன்மம், வாதநீராமை, வெப்புப் போம்.

சமுத்திரமட்டப்பாறைமீன்- சிலேத்துயவாதம்போம். பித்தம் உண்டாம்.

சம்பங் கோழிக்கறி - கரப்பான், சொறிசிரங்கு, பலநோய், வரட்சி, வீக்கமும் போம்.

சம்பநாரை-தேகவுலர்ச்சி, பித்தவாதமும் உண்டாம்.

சம்பாரதோசை-பித்தகபம் வாய்வும்போம்; தாதுவுண்டாம்,

சம்பாரயிட்டலி- வாயுபோம், ஐயம், பித்தமுமுண்டாம்.

சம்புநாவல் பழம் - அழல், தாகம் பித்தவெப்பும்போம்.

சரகூருநம் அதி குளிர்ச்சிக் குளத்துநீர்- இருமல், கடிகள், தேகத்தளர்ச்சி, நளிர், பலநோய், மதுமேகம், மலக்கிருமியும் போம்.

சரக்கொன்றைமரம்-ஐயம், அருசி கிருமி, குட்டம்,சூலை, துட்டமலம், வாதமும்போம். பேதி உண்டாம்.

சரிகை வெள்ளிக்கெண்டி- வெந்நீர் காய்ச்சல், குன்மம், தாகம், பித்தம், வெப்பும் போம் உடல்செழிப்பு, பலமுமுண்டாம்.

சருக்கரையின் குணம்- அருசி, கபம், பித்தம்,வாந்தியும் போம். மகிழ்ச்சியுண்டாம் மருந்திற் கனுபானமாம்.

சருக்கரைப் பரங்கிக்காய் பித்தம்போம். பசி, மெய் மயக்கமுண்டாம்.

சருக்கரைப் பொங்கல்-தித்திப்பு சாப்பாடு, அரோசகம், பித்தகோபம் போம்.

சருக்கரை வள்ளிக்கிழங்கு மந்தம், மருந்துமுறிவு, முளை மூலம், வயிற்றெரிச்சல் வயிறு கடுப்பு முண்டாம்.

சருக்கரை வேம்பு-சிலேட்டுமம்போம். காயசித்தி நாத விந்து சுத்தியுண்டாம்.

சலத்தில்வாழுந்தாரா அக்கினி மந்தம், கரப்பான், கிரந்தி, சூலை, வாய்வு முண்டாம்.

சவுக்காரம் அழலை குன்மம் கரப்பான், சீதம், வாய்வும் போம்,பேதியுண்டாம்.

சவுக்காரம்-கெர்ப்பம், பல நோய்மூலம் இரணங்கள், வாய்வும் போம்.

சவுரிப்பழம்- சளபீநசம், தலைவலி குடைச்சலும் போம்.

சவ்வரி-அத்திமேகம், இரத்த மேகம், சீழ்மேகம், மேகமும் போம். சிலேட்டுமம், தாதுவுண்டாம்.

சவ்வர்ச்சலவணம்- சுரம், சூலை, நரப்பு, சிலந்தி, நாள்பட்ட குன்மம், வெப்பும் போம்.

சவ்வாது சுரம், தலைவலி, தேகத்திற் குத்துகிறவாய்வு, மார்புநோய், மூக்கடைப்பும் போம் வசியம் உண்டாம்.

சவ்வீரம்- சண்டமாலை, காமியப்புண், குஷ்டம், குன்மம், சூலை, தொடைவாழை துன்மாங்கிஷம், பொருக்கல் திணங்கள், வாய்வுக்கட்டி விப்புருதியும் போம். [ம்

சற்பாக்ஷி - பாம்புவிஷம்போ

சன்னிக்கூனிக்கறி- நோய்களெல்லாம் போம்; அன்னஞ் சீரணம், சூடு, பசியுமுண்டாம்.

சன்னக்கெண்டை- கபம், சுரம், கரப்பான் புண்ணும் போம். தேகபலமுண்டாம்.

சன்ன லவங்கப்பட்டை- இரத்தக்கடுப்பு உந்திக் கடுப்பு, உள்மூலப் புண்ணும் போம். குளிர்ச்சி உண்டாம்.

சா

சாகாதுண்டம்-அகில்

சாகாமூலி-சீந்தில்

சாகினி-சிறுகீரை, சோம்பு

சாகம்-சிறுகீரை, தேக்கு, தாழை

சாகாங்கம்-குளகு

சாணுக்கீரை- அளிப்புண், கிருமிகள், கோழை, சுழிகணம், பெருவயிறு, மந்தமும் போம்,

சாதிக்காய்-கிராணி, சிரநோய், சுவாசகாசம், தாதுநஷ்டம், பேதியும் போம். பித்தமும் மயலுமுண்டாம்.

சாதிநாரத்தம்பழம்-அருசி, தாகம், வரட்சி, வாய்சப்பும் போம், மேக தேகத்திற்காகும்.

சாதிபத்திரி-கிராணி, சலக்கழிச்சல், தாபசுரமும்போம்; தாதுவிர்த்தி, பித்தமும் உண்டாம்.

சாதிக்காய்-சிரசுகனத்தல் சீதசுரம், சீதபேதி, சீதளம், மூலமுமுண்டாம்

சாதிப்பூ-ஜன்னிவலி, முத்தோஷம், விழிநோய், வெப்பமும்போம், தேககாந்தி வாசமுண்டாம.

சாதிலிங்கம்- கடி, கட்டி, கரப்பான், காசம், கிரந்தி, குஷ்டம், ஜன்னி, சுரம் சூலை, நீராடுதல், புண், பேதி, வாதம், விரணமும் போம்.

சாமைகஞ்சி- முத்தோஷம் போம்.

சாமைச்சாதம்-கபம், கோழை, சோபை, வாதமும் போம், தாதுபித்தமுண்டாம்.

சாமையரிசி-தாகம், சுரம், மேகம், போகமும் போம், மேனியுண்டாம்.

சாம்பிராணி-கண்ணோய், சீதளம், தலைவலி, நீர் பீநசமும்போம், கசப்பாக விருக்கும்.

சாரடையிலை-சோகை, பித்தம், பயித்தியம், வாய்வும் போம். காயசித்தி, சோறு செரித்தல், தீபனமுண்டாம்.

சாரடைக்கிழங்கு - காசநோய், குன்மம், ஜலதோஷம், -சிரங்கு, சீதப், திமிர் வாதம், தேமல், தழும்பு, மேகம், விரைவாதமும் போம்.

சாரப்பருப்பு- நீர்க்கடுப்பு, வெள்ளை யொழுகலும்போம். விந்து கட்டுண்டாம், இரதச் செந்தி சாப்பிட்டவர்களுக்காகும்.

சாலாமிசிரி - விந்துண்டாம்

சாலுவை -குளிர், ஜலதோஷம், தலைவலி, பனி வயிற்றுவலி, வாதமும் போம்.

சாக்கு-பொன் [ணம்

சாங்கம்-சீந்தில், சங்கபாஷா

சாங்குகௌரி-புறநறளை

சாசனம்-வெண்கடுகு

சாசி-திராய்

சாடி-திப்பிலி

சாட்டுவுலம்- அறுகு, நாவல்

சாணங்கி-துளசி

சாணிப்பூரி-பீர்க்கு

சாதம்-எருக்கு

சாதக்குணசலம்-கந்தகம்

சாதகச்சீர்த்தி, சாதகவர்னத்தி-இரத்தபாஷாணம்

சாதகப்புஷ்பம்-கடலுரை

சாதகும்பம்-பொன்

சாதலம்-திராய்

சாதவண்டு-கறிப்புடோல்

சாதவேதா-கொடுவேலி [டு

சாதவேலிக்கிழங்கு ஓர் பூண்டு

சாதாளம்-எருக்கிலை

சாதிக்காய்- சாதிப்பத்திரி, சாதிப்பதங்கம், சாதிலிங்கம்,

சாதி-கள், ஆடாதோடை, சிறு செண்பகம், சீந்தில், தேக்கு பிரம்பு.

சாதிகோசம்- சாதிக்காய்

சாதிபத்திரி-வசுவாசி

சாதிபலம்- சாதிக்காய்

சாதிரம்-விஷ்ணுகரந்தை

சாதிலிங்கம்- இது ஓர் வைப்புச் சரக்காக இருக்கின்றது. இதற்கடியில் வருகிற பிரகாரம் இது செய்யப்படுகிறது பூரண சூஸ்திரத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது.

அதாவது 12 வராகனெடைக் கந்தகமெடுத்து ஓர் மூசையில் வைத்து உருக்கி அதில் எண்பது வராகனெடை இரசம் சேர்க்க வேண்டும் எல்லாம் ஓர் கறுப்புத் தூளாகிறவரையில் கிண்டிக் கொண்டிருக்க வேண்டும். அதில் இன்னும் பனிரண்டு வராகனெடைக் கந்தகமும், நான்கு வராகனெடை வெள்ளீயத் துண்டுகளும் அந்தக் கறுப்புத்தூளோடு சேர்த்து இவ்வெல்லாவற்றோடும் அவ்வளவு பொட்டிலுப்புஞ் சேர்க்கவேண்டும். இவைகளெல்லாம் பாதியளவு வரத்தக்க ஓர் குப்பியிலடைத்து இதற்கு மிகவும் நன்றாய்ச் சீலை மண் செய்து தரையில் ஓர் அடுப்பு வெட்டி அதன் வாயில் ஓர் அகலக் குண்டு சட்டி வைத்து இந்தச் சட்டியில் குப்பியை வைத்து அதன் கழுத்தளவு மணலைக்

கொட்டி மூடி அடுப்பில் தீ மூட்டிப் பனிரண்டு மணி நேரம் எரிக்க வேண்டும். பின்பு குப்பியை வெளியி லெடுத்து சாங்கமும் சீதள மானபின்பு அதை உடைத்துப் பார்த்தால் அதன் கழுத்தில் ஜாதிலிங்கக் கட்டி காணப்படும்.

சாதினி - பீர்க்கு, முசுக்குட்டை
சாது-தயிர்
சாதேவக்குழிநாவல் - சிறு நாவல்
சாத்திரவேரி - தண்ணீர்விட்டான்
சாந்தம்-சந்தனம்
சாந்தவாரி-தண்ணீர்விட்டான்
சாந்தி-ஓமம்
சாந்து-சந்தனம்
சாபத்திரி-ஜாதிப்பத்திரி
சாமந்தி-ஓர் புட்பம்

அதாவது செவப்புச் சாமந்தி, செவ்வந்தி, மஞ்சட் சாமந்தி, வெள்ளைச்சாமந்தி.

சாவம்-அறுகு
சாமர புட்பம்-கமுகுமரம்
சாமரம்-சிவதை
சாமுண்டி - அவுரிநாணல், பொன்னுரை.
சாமுதம் - கடுக்காய், கோரைப் புல்.
சாமை- சாமைப்புல், கற் சேம்பு, பெருநெருஞ்சில்.
சாம்பம் - யானைநெருஞ்சில், பெருநெருஞ்சில்
சாம்பல்-நாவல்
சாம்பவி-பெருநாவல்
சாம்பற்பூசணி - நீற்றுப்பூசணி
சாம்பாட்டு-கறிப்புடோல்
சாம்பிராணி-ஓர் சரக்கு

சாம்பிராணி இரண்டு விதங்களாக இருக்கின்றது. மலாகாசாம்பிராணி நேர்த்தியானதாய் யோசிக்கப்படுகிறது. இவ்விடத்தில் சிறந்ததாக அகப்படுகிற சாம்பிராணி சுமித்திரா சையாம் யவா தேசங்களிலிருந்துக் கொண்டுவரப்படுகிறது. இது சுவாசகாசத்திற்கும் சய ரோகத்திற்கும் மிகவும் உப யோகப்பட்டதாக வைத்தியர்கள் சொல்லுகிருர்கள்.

சாம்பு-சண்பகம், நாவல்பூ
சாயல்-மஞ்சள்
சாய்-திரள்கோரை
சாய்மரம்-சிவதை
சாரகந்தம்-சந்தனம்
சாரங்கம்-குறிஞ்சா, சிறு குறிஞ்சா.
சாயசம்-தாமரை, அவுபல பாஷாணம்.
சாரணத்தி-சாரணை
சாரணம்- கொடியார் கூந்தல்
சாரணை - சத்திச்சாரணை வெள்ளைச் சாரணை

இதன்வேர் கசப்புள்ளதாயும், கொஞ்சம் உவட்டத்தக்கதாகவும் இருக்கின்றது இதை பேதி மருந்தாக யோசிக்கப்படுகிறது இதை சூரணஞ் செய்து இஞ்சி சேர்த்துக் கொடுக்கப்படுகிறது.

சாரப்பருப்பு-காட்டுமாவிரை

இந்தப்பருப்பு சரீரத்திற்கு பலமுண்டாகச் செய்யப்படுகிற லேகியங்களில் சேர்க்கப்படுகின்றது.

சாரம் இரசம், கொட்டை முந்திரிகை, இலுப்பை, பாலடை.

சாரத்தின் சத்துரு - முட்டை

சாரிசம்-கறியுப்பு
சாரிபுத்திதே-எட்டி
சாரியம்-நன்னாரி, எட்டி
சாரியல்-இந்துப்பு
சாருவுப்பு-கல்லுப்பு
சாருபம்-பொன்
சாருரகம்-கல்லுப்பு
சாரோசி-நவாச்சாரம்
சாலகம்-குறிஞ்சா
சாலம்-ஆச்சாமரம்
சாலங்க பாஷாணம் - ஓர் பாஷாணம்
சாலாமிசிரி-ஓர் சரக்கு
இது செங்கடல் வழியாய் லிவிவாண்டு தேசத்திலிருந்து இந்தியாவுக்கு வரும் சரக்கா இருக்கின்றது. இதைச் சுதேச வைத்தியர்கள் தேகத்திற்கு மிகவும் பலன் கொடுக்கின்ற வஸ்துவாய் யோசிக்கின்றார்கள்.
சாளி-நெல்லு, கள்
சாவினி-பீர்க்கு
சாலூரம்-சாதிக்காய்
சாலேயம்-சிந்தூரம், சந்தனம்
சாலேயம்-சிறுதேக்கு
சாவணம்-நாளம், குழாய், நாணல்,
சாவதயிலம்-மா
சாவற்பண்ணை -கோழிக்கொண்ணைகு
சாவரக்கிழங்கு-கருடன்கிழங்கு
சாவன்-சவுக்காரம்
சாளம்-குங்கிலியம்
சாளியாவிரை-ஓர் மருந்து விரை
சாறடை-சாறணை
சாறு-கள்
சாறுதாரி-கையாந்தகரை
சாறுவேளை-சாரணை
சாற்சமந்தம்-மலையாத்தி
சானகி-பொன்னாங்காணி, மூங்கில்.
சானம்-பெருங்காயம், சாதிலிங்கம்,
சானனி-சிறுகீரை
சான்மலம், சான்மலி-இலவமரம்

சி

சிகண்டி- ஆமணக்கு, சிற்றாமணக்கு.
சிகநாதம்-அப்பிரகம்
சிகமதாகிதம்-அரத்தை
சிகப்பு அவரைக்காய் - கறிக்குதவுகிற ஒரு காய்.
சிகப்புசந்தனம்-ஓர் சந்தனம்
இதன் தூளை சில மூலிகைகளுடன் எண்ணெயிற் கலந்து ஸ்நானம் ஆன பின்பு தேகத்தில் பூசப்படுகின்றது.
சிகரப்பாடி-கோட்டம்
சிகரம்-சுக்கு
சிகலி-புல்லூரி
சிகரிநிம்பம்-மலைவேம்பு
சிகரியந்தம்-புல்லூரி
சிகலோகம்-அகில்
சிகரவலம்-பாசி
சிகிடிமா- கொட்டை முந்திரி
சிக்கடி-அவரைகை
சிக்குரு முருங்கை
சிக்குவை-நாக்கு
சிக்கப்பெருமாள்-துளசி
சிங்கமுகி- பொன்னூமத்தை
சிங்கம்-சரகண்டபாஷாணம் ஆடாதோடை
சிங்கி-ஓர் நோய், வல்லாரை, நஞ்சு, சிங்கிப்பாஷாணம், கர்க்கடகச்சிங்கி, கடுக்காய், மிருதார்சிங்கி.

சிங்கிப் பாஷாணம்- ஓர் பாஷாணம்
சிங்கிகம்-கறிமுள்ளு
சிங்கிட்டம், சிங்கிரம்-கொடிப் பாலை.
சிங்கிலிகுன்றி புலிதொடக்கி, இரண்டு,
சிங்கிவேரகம்-சுக்கு

சிங்குகை- நாக்கு, ஐம் பொறியிலொன்று, தசநாடியி லொன்று.
சிசம்-தமரத்தை
சிசிரம்-சந்தனம்
சிசுரம்-கிலுகிலுப்பை
சிகள்-கோடகசாலை
சிஞ்சம்-புளி, மாமரம்
சிஞ்சாரி-புளியமரம்
சிஞ்சுரம்-புளி
சிடம்-சாதிக்காய்
சிதப்பூரம்-பொன்னுங்காணி
சிதமருசம்-வெண்மிளகு
சிதம்- புளியாரை, விஷ்ணு கரந்தை
சிதளி-பொன்னுங்காணி
சிதறி-பாடலமரம்
சிதனம்-கோடகசாலை
சிதாமபுசம், சிதாமபோசம்-வெண்டாமரை
சிதுமலர்-தண்ணீர்விட்டான்
சிதுரம்-நேர்வாளம்
சித்தகி-கடுக்காய் [காலி
சிதேசத்திரம்- வெண் கருங்
சித்தசாதனம்-வெண்கடுகு
சித்தமன்-ஆமணக்கு
சித்தமுகம்-கிலுகிலுப்பை
சித்தம-முருங்கை

சித்தராரூடம்-சர்ப்ப முதல் விஷ ஜெந்துக்களின் செய லும் அவற்றினு லுண்டாகிய நோய்களுக்குக குடோரி முதலிய மருந்துஞ் சொல் லிய நூல்; விஷ சாஸ்திரம்.
சித்தன்-இலவு
சித்தர்த்தம்-வெண்கடுகு

சித்தி- எட்டி, நிலப்பனை, பொன்னுங்காணி, சவுக்கா ரம்.

சிகைக்காய்-தலையிற்பூசும் நெய்கள் போகும். பேதி வாந்தியும் உண்டாம் நசி யத்திற்கு வெகு முக்கியம்.

சிட்டுக்குருவிக்கறி- ஆண் குறிப்புண், கிருமியும் போம். போகத்தில் ஸ்திரீகள் நாணு வார்கள்.

சித்திரநதிநீர் - ஊண் வீக் கம், கரப்பான், குத்தலான மூத்திர தோஷம், குன்மம், சந்நிதோஷம், சூலை திரி தோஷம், தேகக் கடுப்பு, வாதாதிக்காகும்.

சிந்துநதிநீர் - அஸ்திசுரம், தாகம், தேகக்கடுப்பு, மயக் கம், மூத்திர சிக்கல், மேகம், புண், விந்துநஷ்டம், வியர் வை, வெட்டையும் போம்; வாந்தியும் போம.

சிலாசத்து கல்லடைப்பு, சோணிதவாயு, நரம்பிலுண் டாகும் கட்டி, நீரருக்கல், மேகமும் போம்; இந்திரிய நஷ்டமுண்டாம்.

சிலேட்டுமதேகப் பெண் பால் தீராத நோய்களெல் லாம் போம்.

சிவகரந்தை- அரோசகம், இருமல், கரப்பான், தொந்த ரோகம், மந்தம், மாந்தம், வாதம, வாந்தியும் போம்; அழகு, பசி, பரிமளம், விந்து கட்டு முண்டாம்.

சிவதைவேர் - ஏதாவர்த்தம், பித்தம், பிள்ளைகள் கிரகதோஷம், மலம், வாதமும் போம், பேதியுண்டாம்.
சிவநீலி-நரைகள் போம்.

சிவந்த அரிதாரம்- குளிர்சுரம், சூலை, நமை, குஷ்டம், வாதமும் போம்.

சிவந்த அல்லிக்கிழங்கு - பித்தம் மேகம் போம். செம்மைக் களிம்பகற்றி சிந்தூரஞ்செய்ய உதவும்,

சிவந்தநீர்-பித்த காசத்தால் உண்டாகிய சூடு போம், உஷ்ணம், உள்சுரம், காந்தல், தாதுவும் உண்டாம்.

சிவந்த பெண்பால்- ஐந்நி, சுரம், திரிதோஷம், நேத்திரநோய், பித்தகோபம், விஷங்களும் போம்,

சிவந்தக் கடுக்காய்- இருமல், ஈளை, வாயுவினுல் வந்த எல்லா மூலங்களும் போம்

சிவந்தவாலனரிசி-உஷ்ணவாதம் கரப்பான், சூலை, பலநோயும் உண்டாம்.

சிவப்பு மணத்தக்காளி- ஐயம், காங்கையினுலான உள்வேக்காடு, நாற்றப்புண் வாயுவும் போம்.

சிவப்புவஸ்திரம்- அருசி, உஷ்ணம், கபம், குஷ்டம், சுரம், பித்தம், மந்தம், வாந்தியும் உண்டாம்.

சிவனர் கிழங்கு - கடிகள் போம்.

சிவனர்வேம்பு- சர்மகுஷ்டம், சில்விஷம், பழம்புண், பித்தவாயு, பிளவை, புண், பெருநோய், மந்தநோயும் போம்; தேகவழகு உண்டாம்.

சிறுபட்சிக்கறி- கரப்பான், கிரந்தி, தினவுபோம், கபம் போகமுண்டாம்.

சிறியாநங்கை - சூடுகள், மேகசூலையும்போம். அழகு பெண் வசியமும் உண்டாம், வெண்காரம் நீறும்.

சிறுகட்டுக்கொடி- சீதரத்தம்போம். தண்ணீர் கட்டுண்டாம்.

சிறுகாகொளி- தங்கநிறம் உண்டாம்.

சிறுகாஞ்சொறி- கரப்பான், சிலேட்டுமசுவாசம், சிரங்கு, சொறி, தாகம், திரிதோஷத்தால் பிறக்கும் சுரங்கள், வாய்வும் போம்.

சிறுகீரை- கண்புகைச்சல், காசம், கிரிச்சரம் சோபை, நாவிஷம், நேத்திரநோய், பாஷாண விஷங்கள், பித்தம், ரசப் புண்ணும் போம்; அழகுண்டாம்.

சிறுகுறிஞ்சான்கொடி-அச்சரம், அத்திசுரம், கடிவிஷம், கபசுரம், ஐந்நிசுரம், வாதமும் போம். ஸ்திரீகளுக்குத் தீட்டுண்டாம்.

சிறுகுறிஞ்சான் வேர்- இருமல், காசசுவாசம், வாதசுரம், வாதமும், விஷமும் போம்.

சிறுகொன்றைமரம்- உஷ்ணம், உள்மூலம் தலையானலால் உண்டான கண்ணோயும் போம். அழகு பலமும உண்டாம். கசப்பாக விருக்கும்.

சிறுசின்னியிலை- கடிவிஷம், கணக்காய்ச்சல் காணுக்

கடிவிஷம், மாதரிடுமருந்து, மாந்தம், மேகமும்போம்,

சிறுசெருப்படி- கரப்பான், கிரந்தி, குஷ்டம், மேகம், வாய்வும்போம். உதிரசுத்தி, கிழவர்க்கு யௌவன முண்டாம்.

சிறுதும்பி - சோபம் போம்

சிறுதேக்கு - வாதசுரம்போம்

சிறுதேள் கொடுக்கு - எலும்புருக்கி, கரப்பான், சூலை, சொறி, சிரங்கு பித்தவெட்டை, புண், மாந்தை, மேகவெட்டையும் போம்.

சிறுநாகப்பூ-இருமல்,பித்தவாதம்,மேகம்,வாய்வுபோம்.

சிறுநீர்-அபஸ்மாரரோகம், இரத்தமேகம், இருமலிரைப்பு, கணுக்கடி, கிரந்தி, சந்நியாசரோகம், சர்வவிஷம், புண்கள், மேகவிகாரம்,வாதம், விஷசுரம், வீக்கமும்போம், காயசித்திக்கும், நசியத்திற்கும் புண் சுத்தி செய்தற்கும் ஆம்.

சிறுநீலி-தினவுபோம்.

சிறுபஞ்சமூலம் - கண்டங்கத்திரிவேர், சிறுநெருஞ்சில் வேர், சிறுமல்லிகை வேர், பெருமல்லிகை வேர், வழுதுணைவேர் இவைகளால் பல பிணியும் போம்.

சிறுபயறு-அரோசகம் ஐயம் பித்தம் போம வாதம் உண்டாம்.

சிறுபயறுகஞ்சி-பித்தம்போம்

சிறுபீளை - இரத்தகணம், கல்லடைப்பு, குடல்சூலை, திரிதோஷம், நீரடைப்பு, பாண்டு, பெரும்பாடு, மூத்திரக்கிரிச்சரமும் போம்.

சிறுபுலிமாங்கிஷம் - சிலரோகமும்போம்.

- சிறுபுள்ளடி-ஆமைக்கட்டி இரத்தவாந்தி, குழந்தை தோஷம், மந்தம்,மாந்தகணமும் போம், ஸ்திரீகளுக்குப் பாலுண்டாம்.

சிறு பூசனிக்காய்-பித்தம், மேகம்போம். இளமை, தேககாந்தி, மருந்துமுறிவு, வாதசூலை, விந்துநாதமும், உண்டாம்.

சிறுபூளைக்காலி - ஐயம், கபம்,சயநோய், சில்விஷம், மந்தமும்போம், காந்தசெந்தூரம் உண்டாம்.

சிறுவள்ளிக்கிழங்கு - தீபனம்போம், கரப்பான், பித்தம், மந்தம், வாதகணம், வாதகபம், பல்நோய் மூலமும் உண்டாம்.

சிறுவழுதலை காசம்போம்,

சிறுவிடுகொள்ளு - தண்ணீர்க் கட்டுண்டாம்.

சிற்றரத்தை-இருமல், கபம் கரப்பான், சிரரோகம், சீதசுரம், திரிதோஷம், பித்தம், வாதம், வாந்தியும் போம்.

சிற்றாமணக்குநெய்-பிள்ளைகளினழல், மருந்தழல், மூலவழலும் போம், தாயைப் போல் வளர்க்கும்.

சிற்றாமரைப்பூ-இரத்தமூத்திரம், ஓக்காளம், தாகம், மலக்கட்டு மூலவெரிவு, வெப்பும்போம்.

சிற்றாமுட்டிவேர் - அஸ்திசுரம்,அநேகசுரம், பித்தமும் போம். கண்ணுக்கொளிவுண்டாம். தைலத்திற்காகும்.

சிற்றுராலமீன் - தீபனம், மலசல சிக்கலும் போம் கபம், சரப்பான், மந்தம், வாயில் சலமூரலும் உண்டாம்.

சிற்றீச்சங் குருத்து- உதிர வாய்வுபோம் அடிக்கடி வாயில் சலமூரல், சீதமும் உண்டாம்.

சிற்றீச்சம் பழம் - அறிவு போம். அடிக்கடி வாயில் சலமூறல், சிரங்கு, சீதம், பல பிணியும் உண்டாம்.

சிற்றீச்சம் ஓலைப் பாய்- கபங்கள், பித்தம், வாய்வும் போம். உடம்பு கால் காந்தலும் உண்டாம்.

சிற்றேலம்-ஐயம் சலபேதி, சலமூரல், தலைநோய், தாகம், கலவர்த்தவாதம், ருட்சை, வயிற்றுக் கொதிப்பு, வாயினிப்பும் போம்.

சின்னக்கிழங்கு-சீழ், இரத்த மூலம்போம், ஊர்ப் பன்றிக்குண்டாகிற குணமும், சிரங்கு, புண்ணுமுண்டாம்.

சித்திமூலம்- நிலபனங்கிழங்

சித்திரகம்-கொடுவேலி [கு

சித்திரமூலம்- கொடுவேலி, நிலப்பனங்கிழங்கு.

சித்திரமூலி-கொடுவேலி

சித்திரம்-ஆமணக்கு, கொடுவேலி, சிறுகுறிஞ்சா.

சித்திரரேகை-அரசு

சித்திரவாராத்தி- கண்டங்கத் [திரி

சித்திரவிதழ்-துத்தி

சித்துடு-கிலுகிலுப்பை

சித்துருபம்-நேர்வாளம்

சிநேசம்-சாதிக்காய்

சிந்தகம், சிந்தம்-புளி

சிந்து-சிந்துலவணம்

சிந்துசாரம், சிந்துரதம், இந்துப்பு, சிந்துரத்தம், உப்பு

சிந்துகம்-நொச்சி

சிந்தூரம்-புளி, வெட்சி

சிந்துவாரம்-நொச்சி

சிந்தூரம்-சேங்கொட்டை, புளி, வெட்சி.

சிப்பாதிமூலி-தைவேளை

சிமட்டி-பேய்க்கொமட்டி

சிமிள்-பூளை

சிமுட்டி-கீழ்க்காய்நெல்லி

சிம்பதை, சிம்பத்தை-சிறுபுள் [ளடி

சிம்பை-அவரை

சியச்சனி - வேலிப்பருத்தி, உத்தாமணி.

சியத்தினி-தக்காளி

சிபநாகம் - துத்தபாஷாணம்

சியிகுதம்-கடுக்காய்

சிரக்கோழி-குமலாவதொண்டை, வசம்பு

சிரசன் - சீர்பந்தபாஷாணம்

சிரணி-ஓமச்செடி

சிரத்தகாளகம் - மருகாரை

சிரம்-ஆமணக்கு, கமுகு, வாதமடக்கி, கூகைநீறு.

சிரம்பம்-சாலாங்க பாஷாண [ம்

சிரீடம்-குன்றி, வாகை

சிருட்டியாளன் - சவுக்காரம்

சிரேவணம்-காட்டாமணக்கு

சிரோட்டம் - கடுக்காய், தான்றி, நெல்லி.

சிரோணி-காட்டாமணக்கு

சிரோபத்தியம்-கடுக்காய்

சிரோவிருத்தம்-மிளகு

சிவங்கம் - வெள்ளி லோத்திரம், விளாம்பட்டை.

சிலத்தின் பிருதுவி - கற்பூரசிலாசத்து

சிலந்தி-ஓர் மரம், ஓர் புண்

சிலந்தி - நரம்புச் சிலந்தி, முலைச்சிலந்தி.

சிலந்திநாயகம்- கிரந்திநாயக
சிலந்தியரிசி- பூங்கோரை [ம்
சிலர்-இந்துப்பு
சிலவங்கம்-மீனெலும்பு
சிலாசத்து-கற்பூர சிலாசத்து
சிலாந்தி-சீந்தில்
சிலாபேசி- செப்புநெருஞ்சில்
சிலாமனு-மனோசிலை
சிலாமணி- கண்டக்கிக்கல், கண்ட சிந்தி.
சிலியானை-முடக்கற்றான்
சிலேஷ்மம்-ஐயம்
அதிதல சிலேஷ்மம், சிலேஷ்ம காசம், சிலேஷ்மகுன்மம், சிலேஷ்ப சூலை, சிலேஷ்மநாடி, சிலேஷ்மாதிசாரம்.
சிலேடகம்-அக்கரு
சிலேகம்- செம்முருங்கை
சிலை-மனோசிலை,சூதகபாஷாணம்
சிலைச்சோணிதம் சிலைரத்தம்
சிலைத்தாது- சீலாமதபாஷாணம்
சிலைரத்தம்-கல்மதம் [
சில்லம் எட்டி-தேற்று
சில்லி-சிறுகீரை
சில்லை- கிலுகிலுப்பை
சிவகம்-சாதிக்காய், நாய்ச்சீரகம்
சிவச்சி-சாதிக்காய்
சிவதடி-வெள்ளரி
சிவதாரம்-தேவாரம்
சிவதை-ஓர் மருந்துப்பூண்டு
சிவதைவேர் சாரணையை விடப் பலமான பேதி மருந்தாயிருக்கிறது.
சிவத்தம்-செம்முருங்கை
சிவத்தாகி - செம்பருத்தி
சிவந்தவேளை- செம்பரத்தை
சிவந்தி-கொடிப்பாலை
சிவப்பம்மான்பச்சரிசி- அம்மான் பச்சரிசி
சிவப்பாரை, செவ்வவரை-ஓர் பூண்டு
சிவப்பாமணக்கு - செவ்வாமணக்கு
சிவப்புக்கந்தி- கோழித்தலைக் கந்தகம்.
சிவப்புக்கொடிப்பசளை- ஓர் பூண்டு [ளம்
சிவப்புச்சோளம்- செஞ்சோ
சிவப்புப்பசளை-செம்பசளை
சிவப்புமந்தாரை- ஓர் மரம்
சிவமது-சிறுபுள்ளடி
சிவமல்லி- சொக்குமந்தாரை
சிவலோகச்சேவகன்- காந்த
சிவல்-பசன்றை, கவுதாரி [ம்
சிவனார்கிழங்கு-கார்த்திகைக் கிழங்கு
சிவனார்பாகல்- சொவ்வை ஐவேலி
சிவனார்வேம்பு ஓர் செடி
இந்தச் செடியின் இலை பூ கொழுந்து குளிர்ச்சியான இளக்குகிற வியாதி பேதிக்கிற மருந்தாக உபயோகிக்கப்படுகின்றது. குஷ்டம், பிளவை இந்த வியாதிக்குக் கஷாயமாகச் செய்துகொடுக்கப்படுகிறது அக்கி,கரப்பான் அக்கிப்படுவன் இந்த வியாதிகளுக்கு இதன் வேரிலிருந்து இறக்கிய தைலம் உபயோகமாயிருக்கின்றது.
சிவனிப்பால்- கழுதைப்பால்
சிவன்-வைடூரியம்
சிவா-கடுக்காய், கீழ்க்காய், நெல்லி, டங்கம்பாளை, வன்னி, நெல்லி.
சிவாட்சம்- உருத்திராட்சம்
சிவாருசம்-ஆலமரம்
சிவிகரம்-சாதிக்காய்

சிவேதை- சீந்திற்கொடி, பகன்றை, சிவதை.
சிவ்வல்-படர்பாசி
சிறந்தகற்பகம்-நாக பாஷாணம்
சிறுயத்துச்குச்சி - ஓர் மருந்துப் பூ
சிறிட்டம்- வெள்ளிலோத்திரம்
சிறியத்தினி- உத்தாமணி, வேலிப்பருத்தி
சிறியமாத்தி-சிற்றசத்தி
சிறியாநங்கை - ஓர் மருந்துப் பூண்டு.
சிறியின் புட்பம்-வெண்டாமரை
சிறியாவிதம்-அகில்
சிறீபலம்-வில்வம்
சிறு அம்மான் பச்சரிசி-சிற்றம்மான் பச்சரிசி.
சிறுஉமரி-சிற்றுமரி
சிறுசடலாடி-நாயுருவி
சிறுகாஞ்சொறி- ஓர் பூண்டு
சிறுகாஞ்சொறிவேர்

இது வியர்வையுண்டாக்குகிற வியாதியைப் பேதிக்கிற மருந்தாக யோசிக்கப்படுகின்றது. இந்த வகையான மற்ற மருந்துகளோடு சேர்த்துக் கஷாயமாகச் செய்து கொடுக்கப்படுகிறது. இதன் படுநீர் தாபச்சுரத்தில் தாகமாகவும் கொடுக்கப்படுகிறது.

சிறுகாணுவாழை- ஓர் பூண்டு
சிறுகாய், சிறுகாரிடம் - சாதிக்காய்.
சிறுகால்-காவட்டம்புல்
சிறுகிலுகிலுப்பை-ஓர் பூண்டு
சிறுகிழங்கு-ஓர் கிழங்கு

சிறுகீரைவேர்- நீர்க்கடுப்பு, நீர்க்கட்டு இந்த வியாதிகளுக்கு கஷாயஞ் செய்து கொடுக்கப்படுகிறது. இது இளக்குகிற விரேசன மருந்தாகவும் யோசிக்கப்படுகின்றது.

சிறுகுரட்டைவேர்- இந்தச் சிறுகுரட்டை வேரை தூளாயிடித்து வேப்பெண்ணெயிற் கலந்து கெட்ட புண்களுக்குப் பூசினால் நிலைபெற்று பரிகாரமாய்க் காணப்படும். சில சமயத்தில் காதிலுள்ள புண்ணும் ஆறும். மூக்கிலுள்ள இரணத்திற்கும் உபயோகப்படும்.

சிறுகுறிஞ்சி- நேர்வாளம்; புளியாரை
சிறுகுறும்பை-ஓர் தானியம்
சிறுகுறிஞ்சா-குறிஞ்சா

சிறுகுறிஞ்சா வேர் பாம்பு விஷத்தையும் தீர்க்குமென்று யோசிக்கப்படுகின்றது. அது கஷாயமாக உள்ளுக்குக் கொடுக்கப்படுகிறது.

இதன் சூரணம் பாம்பு கடித்த வாயில் பூசப்படவேண்டும். இதன் வேர் இங்கிலீஷ்காரர் இபிகாக்சணுவுக்குச் சரியான குணத்தை யுடையதாக உபயோகிக்கிறார்கள்.

சிறுகொட்டைக்கரந்தை - கரந்தை
சிறுகொம்மட்டி- கொம்மட்டி
சிறுகொன்றை-ஓர் செடி
சிறுசணல் விதை யெண்ணெய்-ஓர் எண்ணெய்
சிறுசெருப்படை-ஓர் பூண்டு

சிறுதாளியிலை - கட்டிகளுக்கு இதன் இலையை உலர்த்திச் சூரணித்து நெய்

யிற் பெய்து காய்ச்சி மேற் பூச்சாகப் பூசப்படுகிறது.
சிறுதுத்தி-ஓர் செடி
சிறுதுருமம்- பொட்டிலுப்பு
சிறுதுளசி-ஓர் பூண்டு
சிறுதேக்கு - இந்த இலை யின் கஷாயம் வியர்வை யுண்டாக்குகிற மருந்தாக விருக்கின்றது.
சிறுதேங்காய் - சமுத்திராப் பழம். [ளி
சிறுத்தக்காளி- மணத்தக்கா
சிறுநறளை-ஓர் பூண்டு
சிறுநன்னாரி- ஓர்பூண்டு
சிறுநாவல்-ஓர் செடி
சிறுநிம்பம்-மலைவேம்பு
சிறுபகன்றை-ஓர் பூண்டு
சிறுபயறு-ஓர் பூண்டு
சிறுபாலாடை-ஓர் பூண்டு
சிறுபாலா-பேய்ப்புடல்
சிறுபாலி-கள்ளி
சிறுபுள்ளடி ஓர்பூண்டு [ளை
சிறுபூளை - ஓர்பூண்டு, உழி
சிறுபூளைவேர் - இது நீர்க் கடுப்பு, நீர்க்கட்டு வியாதி களுக்குக் காயமாகச் செய்து கொள்ளப்படுகின்றது. இது இளக்குகிற மருந்தாகவும் இருக்கின்றது.
சிறுமல்-தண்ணீர் விட்டான் கிழங்கு
சிறுமரோடம்-செங்குங்காலி
சிறுமூலம்- திப்பிலி, சிறு கிழங்கு
சிறுவள்ளி-ஓர் பூண்டு
சிறுவன்-சிறுபுள்ளடி
சிறுவிடு- கண்ணிடுகாணம், கொள்ளு
சிற்பறவுப்பு-சிந்துலவணம்
சிற்றரத்தை - இது பசியை யும் வியர்வையையும் உண் டாக்குகிற மருந்தாக யோசிக் கப்படுகின்றது. இருமல் வியாதிக்குக் குடிநீராகவும் கொடுக்கப்படுகிறது.
சிற்றுமணக்கு - ஓராமணக்கு
சிற்றுமுட்டிவேர் - இதன் குடிநீர் சுரங்களில் தாகத்துக் குக் கொடுக்கப்படுகின்றது
சிற்றி-பசறி
சிற்றிரு-கிலுப்பை
சிற்றிலை - கடுக்காய், நெய்ச் சிட்டி, குன்றி, கடுமரம்.
சிற்றுமரி-ஓர் பூண்டு [கு
சிற்றேரண்டம் - சிற்றுமணக்
சினை - சங்கம்பாளை, வட்டத் திருப்பி.
சினைலிகா-மூக்கிரட்டை
சினைவில்-தும்பை
சினிபம்-வாகை
சினேகதாரு-மாதிக்காய்
சினை-மூங்கில்
சின்னுருகம்-சிந்தில்
சின்னிசின்னி- குன்றி, இல வங்கம்.
சின்னிக்கிழங்கு- சின்னியிலை
சின்னியிலை அசீரணம், வாந்தி பேதி வியாதிகளில் பசியுண்டாக்குகிற மருந்தாக கக் கொடுக்கப்படுகிறது.

சீ

சீ-முறிந்த உதிரம்
சீரம்-தமரத்தை
சீக்காச்சா-நாய்ப்புலவா
சீக்கிரான், சீக்கிரி, சீக்கிரி யான்-உகில்
சீக்குரு-முருங்கை
சீசம்-ஈயம்
சீதம்-அகில், சந்தனம், நறு விலி. [தை
சீதாப்பிரியம் - விஷ்ணுகரந்

சீதவாரம்-உத்தாமணி, மல்லிகை, வேலிப்பருத்தி

சீதளம்-கோடகசாலை, பச்சைக்கற்பூரம், கொடிமாதளை சிற்றகத்தி, குளிர்ச்சி.

சீதளங்காய்-கொடிமாதளை

சீதளி-பொன்னாங்காணி

சீதளை-கொம்மட்டி,மாதளை

சீதாங்கம்-சீதாங்க பாஷ

சீதாரி-செம்புளிச்சை [ணம்

சீதாளம்-கூந்தற்பனை

சீதாளி-ஓர் பனை

சீதாபழம்-ஓர் பழம்

சீதை-பொன்னாங்காணி

சீத்தா-ஆத்தா

சீந்தில்-ஓர் கொடி

சீந்தில்கொடி - காமாலையினால் உடல் மெலிந்திருக்கும்போது வியாதி பேதிக்கிற மருந்தாகக் கொடுக்கப்படுகிறது. இதன் இலையின் கஷாயம் சுரம் நீக்குகிற ஔஷதமாகவும், சந்துவாத வியாதியால் பலமுண்டாக்குகிற மருந்தாகவும் கொடுக்கப்படுகிறது. சீந்திற் சர்க்கரை,சீத்தாப்பழம்-மயக்கம், பித்தகபம், மந்தமும் உண்டாம்.

சீந்தில்-அதிசாரம், இரத்த பித்தம், சுரங்களும் போம், தீபனம் உண்டாம்.

சீந்திற்கிழங்கு - அதிக விஷம், அதிசாரம், ஆம்பல் நோய், இரத்த பித்தம், கணம், சுரம், மாந்தம், மேகவகையும்போம், காயசித்தி, தீபனமும் உண்டாம்.

சீரகச்சம்பாவரிசி - வாதமெல்லாம்போம், பசி யுண்டாம்.

சீரம்-அருசி, இருமல், இரைப்பு, கல்லடைப்பு, கிராணி, குன்மவாய்வு, தொண்டைக்கம்மல், நாசிநோய், பித்தம், பீலிகம், வாயு, வாந்தியும்போம். கண் குளிர்ச்சி காமிறுகலுமுண்டாம்.

சீலைசுட்டசாம்பல்- அஸ்திசுரம் மேகம்போம். இரத்தந் சடை உண்டாம்.

சீனக்காரம்-அழலை, கண்ணோய், குன்மம், குன்மாங்கிஷம், பல்லரணை, யானைக்கால், வாய்வுபோம.

சீனக்கிழங்கு - அனல், கிருமி, குட்டம், சூலை, மேகம்-21, வெட்டையும்போம்,

சீனிச்சருக்கரை - கிருமி, சுரம் வாதம், வாந்தி விக்கலும் போம.

சீப்பங்கோரை-ஓர்கோரை

சீப்பு-சீப்பங்கோரை

சீமுதை- கொடி முந்திரிகை, முந்திரிகை

சீமையத்தி-தேனத்தி

சீமை அகத்தி:

இது படர்தாமரை முதலிய தோலின் மேல் வரும் பற்றுகளுக்கெல்லாம மிகுந்த நன்மையான ஔஷதமா யிருக்கின்றது. அதன் பிரயோகம் என்னவென்னில் உடனே பறித்த இலைகளை அரைத்து அதற்குச் சமனெடை மெழுகு பிளாஸ்திரி அல்லது தேங்காயெண்ணெயில் சேர்த்துத் தினந்தோறும் இரண்டுதரம் அழுத்தித் தேய்க்க வேண்டும்.

சீமைக் காவிக்கல்-

விஷசுரத்தில் சீதளத்தைக்

கண்டிக்கின்றது. விக்கலை யும் தணிக்கும். நாள்பட்ட வயிற்றுக் கழிச்சலுக்குக் கசப்புள்ள மருந்தாய் யோசிக்கப்படுகின்றது.

சீமைசிவதை - ஓர் கொடி இது பேதிமருந்தாக யோசிக் கப்படுகிறது.

சீமைச்சுண்ணாம்பு-ஓர் சுண் ணாம்பு.

சீமைக்காளி--ஓர் செடி

சீமைவெள்ளரி-ஓர் கொடி

சீமை மணத்தக்காளி - ஓர்பூண்டு

சீக்காய்-ஓர் செடி

சீயம் - காட்டெருமைப்பால். எருக்கம்பால்.

சீரகபாடி-கோட்டம்

சீரகம்-ஓர் பூண்டு

இதன் வகை : கருஞ்சீர கம், காட்டுச்சீரகம், செஞ் சீரகம், நட்சத்திர சீரகம், அனிசுநற்சீரகம், நாய்ச் சீர கம்.

சீரகம் அசீரண வியாதி யில் பசி யுண்டாக்குகிற ஜீர ணிப்பு மருந்தாக உபயோ கப்படுத்தப்படுகின்றது.

சீரணி-ஓமச்செடி

சீரகோடம-வீழி, விழுதி

சீரம்-இலமச்சை, காட்டெரு மைப்பால்.

சீரா-பலாசு

சீரிடம்-வாகை

சீரிணபன்னல்-வெப்பு

சீரிவிருட்சம்-புளியமரம்

சீருணி-தாம்பரம்

சீருள்-ஈயம், செம்பு, பஞ்ச லோகம்.

சீரை-மரத்தோல்

சீர்க்கோழி - நரைக்கொள்ளு

சீர்த்துழாய்-துளசி

சீலம்-சீந்தில்

சீவகம் - ஏலத் திருநாமப் பாலை, வேழமை, இலந்தைத் தம்பலம்

சீந்தி-சீந்திற்கொடி பாலை படுமரம், புல்லூரி

சீவந்தில்-சீந்தில்

சீவனுகி-வெற்றிலை

சீவனி- செவ்வள்ளி-பாலை, ஆடுதின்னாப்பாளை, சஞ்சீவி சீவினிநாடி.

சீவந்தி-மந்தாரச்சிலை

சீவனியம்-நீர்

சீவன்-காந்தம்

சீவா-பாலை

சீவி-அழிஞ்சில்

சீவிகா-ஜாதிக்காய்

சீறல்-பெருங்காயம்

சீனமிளகு-வால்மிளகு

சீனக்காரம்-படிகாரம்

சீனிக்கிழங்கு-வத்தாளைக் கிழங்கு

சு

சுகசியபி- பூனைக்காலி

சுகட்டான்-நாணற் புல், முடக்கற்றான்.

சுகதாரு-கடம்பு

சுகத்திரம்-வாகை

சுகந்தமா-கற்பூரமரம்

சுகந்தமூலி-வெட்டிவேர்

சுகந்தம்-அரத்தை, வாழை, ஈரவெங்காயம்

சுகம்பல்-புளிநரளை

சுகாந்தம்-ஈரவெங்காயம்

சுகிதம்-பால்

சுகிர்தம்-நல்லநெய்

சுகமாரதுரவி- இலவி

சுக்கங்காய்-மிதக்கங்காய்

சுக்கான்கீரை-புளிச்சக்கீரை

சுக்கிலபுட்டா-குங்குமம், ஞாழல்.
சுக்கிலம்-பழமுண்ணிப்பாலை, பாலைமரம்.
சுக்குவேர்கொம்பு - உலர்ந்த இஞ்சி.
ஔஷதங்களுக்கு இஞ்சியைப் பார்க்கிலும் சுக்கு நலம். ஆனால், சுக்கு கிடையாதிருக்கில் இஞ்சியை எடுத்துக்கொள்ளலாம். வாயு குன்மம், வாந்தி, குடல்வலி, சுரமின்றி வரும் மற்ற வலிகள் இவைகளுக்கெல்லாம் சிதைத்த சுக்குஅரை அவுன்சில் அரைப்புட்டி கொதிக்கிற தண்ணீரைவிட்டு ஆறுவதற்கு மூன் வடிகட்டி அதில் 2-அவுன்சு வீதம் அரை அல்லது ஒருமணி நேரத்துக்கு ஒருதரம் கொடுக்கவேண்டும். நாட்சென்ற வாதங்களுக்கு மேற்படி சுக்குக் குடிநீரை இரவில் படுக்குமுன்கொடுத்து போர்வை அல்லது கம்பளியால் தேகத்தை மூடி வேர்வை யுண்டாககில் மிகுந்த குணத்தைக் கொடுக்கும்.
தலையிடிக்கும், முகவலிக்கும், சுக்கைக் கொஞ்சந் தண்ணீர் விட்டுக் கட்டியாய் அரைத்துப் போல்ட்டீஸ் செய்து வலியின்மேல் பற்ற வைத்தால் தீரும்.
வாந்திபேதிக்கு ஒரு அவுன்சு சுக்கைச் சிதைத்து 1-புட்டிக் கொதிக்கிற சலத்தில் போட்டுவைத்து வடிகட்டித் தாகிக்கிற பொழுதெல்லாம் குடிக்கலாம்

பல்வலி, திமிர்நாக்கு, மற்றும் வாயினுள் வருகிற வலிகளுக்கெல்லாம் ஒரு துண்டு சுக்கை வாயிலிட்டு மென்று ஒத்துக்கொண்டால் உமிழ்நீர் மிகுதியாய்ப்போய் வலி மாறும்.
சுக்குநாறிப்புல்-மாந்தப்புல்
சுக்குமம்-சிற்றேலம்
சுக்கை-மொசுமொசுக்கை
சுங்கம்-ஆடுதின்னாப்பாளை
சுசிகம்-புளியாரை
சுசிதம்-பால்
சுச்சு-சுண்டி, சுக்கு
சுடர்க்கொடி - ஆர்த்திக் கற்பூரம்
சுடலை-ஈமம், சவுக்காரம்
சுடுதுரத்தம்- சித்திரப்பலாவி
சுடுகாடுமீட்டான்- முடக்கற்றான்
சுணை-சுணைக்கோரை
சுணைவு-பேய்க் கடலை
சுண்டம்-கள்
சுண்டி-தொட்டால்வாடி, சுக்குகள், நீர்சுண்டி.
சுண்டிகை-உண்ணாக்கு
சுண்டியுண்டை-கொஞ்சி, சதுரக்கள்ளி, சீரகம்
சுண்டில்-தொட்டல்வாடி
சுண்டி-தொட்டால்சுருங்கி
சுட்டை-சண்டைச் செடிகள்
சுண்ணவரசி-முல்லை
சுண்ணாம்புத்தண்ணீர்-
புதிதாய் நீற்றின அரைப்படி சுண்ணாம்பில் 6-புட்டித் தண்ணீரைக் கொஞ்சங் கொஞ்சமாய் விட்டுச் சுண்ணாம்பு முழுவதும் அடியில் உறைந்து சலம தெளியுமட்டும் வைத்திருக்க வேண்டும். அவசரமாய் வேண்டி

யிருந்தால் அரைமணி நேரம் வைத்திருந்தால் போதும் அநேக விதங்களில் இந்த ஔஷதம் மிகுதியாய் உபயோகப்படுதலால் எப்பொழுதும் முன்னதாகச் செய்து வைத்திருக்க வேண்டும். இதைக் காற்று ஏறாமல்படிக்கு அடைப்புள்ள குப்பிகளில் விட்டுவைத்திருக்கில் கேடில்லாமல் வெகு நாள் இருக்கும். ஔஷதத்துக்குத் தெளிந்த சலமாத்திரம் எடுக்கப்படும.

குலையெரிவுக்கும் இரைக்குடலிற் புளிக்கும் புளிப்புத் தேபபங் கூடிய அசீரணத்துக்கும், வாந்திக்கும உட்டினத்தாலுண்டாகும் மூத்திரத்துக்கும இந்த சலத்தில் ஒரு வேளைக்கு ஒன்றரை அல்லது உ-அவுன்சு சமனளவு பாலிற் கொடுக்கலாம். இப்படி தினம் மூன்றுதரம் கொடுக்கவேண்டும. சில நாள் கொடுத்தபின் வியாதியை மாற்றிக் குணத்தைக் கொடுக்கும. மேற்சொன்ன வியாதிகளுடன் வரும் வயிற்றுப் போக்குக்கு மற்ற ஔஷதங்கள கொடுப்பதுமன்றி மேறபடி சுண்ணாம்புத் தண்ணீர் ஒரு தேக்கரண்டிவீதம் பொருஞ்சம பாலில தினம இரண்டுதரம் கொடுக்க வேண்டும.

இலிங்கம உபஸ்தம் இவைகளிலுண்டாகும வருத்தமான எரிவுக்குச் சுண்ணாம்புத் தண்ணீரை வெதுப்பித் தினம 3-அல்லது 4-தரம அதைக்கொண்டு நனைக்கில் நீங்கும். உபஸ்தத்தில் நின்று புறப்படும் மேக வெள்ளை முதலானவைகளுக்கு வலியுங்கூட உண்டாயிருக்கில் சுண்ணாம்புத்தண்ணீரை யுட்பீச்சினாலும மற்றெவ்விதமாயாவது உள்ளேற்றினாலும் வியாதி தீரவாசியாகாமற் போனாலும் சாந்தப்படும்.

கண்டமாலைக்கும் முக்கியமாய் விப்புருதிகளும புண்களும் கூடிய கண்டமாலைக்கும் சுண்ணாம்புத் தண்ணீரில் அரை அவுன்சு வீதம் தினம் 3-அல்லது 4-தரம் இப்படி சிலநாள் தொடர்ந்து கொடுக்கில் பயன்படும். நன்னாரி கஷாயத்திற் சேர்த்துக் கொடுக்கின்றது. சில மேக வியாதிக்கு உபயோகப்படும் சலம மிகுதியாய் வடியும கண்டமாலையில் புண்களுக்கும மற்றும் பலமாதிரி புண்களுக்கும மேற்படி சலத்தை விட்டால் குணப்படுத்துகிறதும் தவிர அதிக நீர் வடியப்பட்ட தோலின்மேல வரும் அநேக வியாதிகளுக்கும சுண்ணாம்புத் தண்ணீர் தனித்தாவது சமனளவு சலத்திற் கலக்கியாவது விட்டால சவுக்கியப்படும்.

உப்புத்திராவகம முதலியவைகளை நஞ்சாகக் குடித்திட்டால் சுண்ணாம்புத் தண்ணீரை யதிகமாகப் பாலிற் சேர்த்துக் கொடுத்தால் மற்ற உபபுகளைப்போல் மிகுந்த காரமற்றது ஆயினும கார

மானை மாற்று மருந்தா யிருக்கின்றது. பாஷாணத்தைநஞ்சாகத் தின்றவர்க்குக் கொடுக்கலாம்.

நீரிழிவுக்கு ஒரு வேளைக்கு 2-அவின்சு சுண்ணும்புத் தண்ணீரைப் பாலிற் சேர்த்துத் தினம் இப்படி 3-தரங் கொடுத்தால் அதிகமாய்ப் போகிற மூத்திரத்தைக்குறைக்கும் இராத்திரி படுக்கை சமயத்தில் அரை கிறெயின் அபினும் கொடுக்கலாம்.

தீப்பட்ட புண்களுக்கும் சுண்ணும்புத் தண்ணீரும் நல்லெண்ணெயும் சமனளவு எடுத்து இரண்டையும் ஒன்ருகச் சேரும்படி நன்ருய்க் கலக்கி இதில் சீலையை நனைத்து இரணங்களில் இட்டு அடிக்கடி நனைக்கிறதுந் தவிர சீலையையும் மாற்றி மாற்றி இடவேண்டும். இப்படி செய்வது நல்ல பிரயோகமாயிருக்கிறது.

சுதம்-நெருஞ்சில்

சுதர்ச்சி, சுதூர்ச்சி - சதுரக்கள்ளி

சுத்துரு-கண்டங்கத்திரி

சுபுட்பமெராம்பு-பவளமரம்

சுப்பிரமதுவா-கூகைநீறு

சுமங்கை-ஆடுதின்னுப் பாளை, வறட் சுண்டி.

சுபலி-கள்

சும்புள்-கடம்பு

சும்மை-ஆவிரை

சுயிரகம்-குசப்புல், தருப்பைப்புல்

சுயோகி, சுலோகி-கள்

சுரகாமலிகம்-செருந்தி

சுரசம்-அரத்தை, சறுகிழங்கு, பாதரசம்

சுரசா-துளசி

சுரஞ்சனம்-கமுகு

சுரதாக்கு-அரத்தை

சுரபி-சுதளகொடுக்கி, பிரமி, சாதிக்காய், துளசி, மல்லிகை.

சுரபிபத்திரை-சம்புநாவல்

சுரபி-இலவம்பிசின்

சுரபுன்னை- சுரபுன்னகம்-ஓர் மரம்

சுமதி-சிலந்தி

சுரமலிகம்-செருந்தி

சுரம்-ஓர்நோய், உப்பு

சுராதுருமம்-தேவதாரம்

சுரம்-இலவம்பிசின்

சுரளிகை, பாலை-பாலைமரம்

சுரா, சுரை-கள்

சுராகரம்-தென்னை

சுருட்டி-மயிர்ச்சிகைப்பூடு

சுரைக்கந்தகம்-ஓர்கந்தகம்

சுவரொட்டி-ஓர்-பூண்டு

சுவர்ச்சாதி-சத்திச்சாரம்

சுவலை-அரசமரம்

சுதன்னியீதி-செப்புமல்லிகை.

சுவாசம்-எட்டி, புருமுட்டி, பேரமுட்டி, பேராமுட்டி, விஷமுட்டி, சுவட்டுமண்.

சுவாதுண்டம்-நெருஞ்சில்

சுவாதுகந்தி-துளசி

சுவிகை-கள், கச்சேலம்

சுவேதகம்-சவரிலோத்திரம்

சுவேதகாண்டம்-நெருஞ்சில்

சுவேதகாண்டம்-சீந்தில, வஞ்சிக்கொடி

சுவேதகுசமம்- வெள்ளெருகு

சுவேதசாரம்-நாணற்புல்

சுவேதமூலம்-சாரணை

சுவேதமூலி-தொட்டால்வாடி

சுவேதம்- நாணல், மாவிலிங்கு, ரஞ்சிமரம், வெள்ளிநேர்வை.
சுழாரை-பொன்னுவிரை
சுளி-முருங்கை
சுளுந்து-சோரகன்
சுள்ளி- அனிச்சை, ஆச்சா, குழல், குங்குமமரம், மயிர்ச்சென்றை, மாமரம்,
சுள்ளிடுவான்-மிளகாய்
சுறணம்-கரணை
சுறை-சொற்றுன்
சுரோணிதம்-அனிச்சை
சுனக்குடம்-சதுரக்கள்ளி
சுனைவு-பேய்க்கடலை
சுனனச்சி- சத்திச்சந்திரம்

கூ

கூக்குமதண்டுலம்-திப்பிலி
கூக்குமபத்திரம்-கொத்தமல்லி, சீரகம், செங்கரப்பு, கடுகு.
கூக்குமம்-சீந்தில்
கூக்குமிம் - சிலந்திப் பூச்சிக்கூடு
கூக்குளி-வெற்றிலை
கூங்குமம்-வேலிப்பருத்தி
கூசகம்-தருப்பைப்புல்
கூடம் -ஆர்க்திகற்பூரம்
கூடிச்சி-எலச்சாரம்
கூடினர்-கோங்குமரம்
கூதகம்-மா

கூதகபாஷாணம்-இரசத்திலுண்டாகிற பாஷாணம், அது வைப்பு.

கூதகமாமரம் - பாதரசம், இதம், புளிமா, பவளமல்லிகை, மன்மதன் கணை.
கூது-ஓரிதழ்த்தாமரை
கூதத்தைப் பொன்னுக்கி - நாகபாஷாணம்.
கூதநோக்கல் - நீலாஞ்சனக்கல்
கூத்திரபுட்பம்-பருத்தி
கூத்துமம்-சிலந்திநாயகம்
கூப்பியம்-பாம்பு கொல்லி
கூரணம்-கரணைக்கிழங்கு
கூரம்-கடலை
கூரம்-பிரம்பு
கூரன்-கௌரிபாஷாணம்
கூரி - எருக்கு, நத்தைச்சூரி, புளிச்சக்கீரை.
கூரியன - செவந்தி, செவ்வெருக்கு.
கூருமம் - தருப்பைப்புல், குசைப்புல், மாந்தப்புல்.
கூரை- கூரைப்பழம், தூதுவளை.
கூர்-மிளகு, வால்மிளகு, ஓர் நோய்.
கூலி-சதுரக்கள்ளி
கூலினி-வெற்றிலை
கூலை-ஓர் நோய்

அவை: அட்சசூலை, ஆமசூலை, உட்கத்திசூலை, உட்காரசூலை, கர்ப்பசூலை கற்சூலை, கன்னசூலை, கிருமிசூலை, சுரசூலை, தூரசூலை நிரம்பசூலை, பக்கசூலை, மூத்திரசூலை, மேகசூலை.
கூழ்-கடலை
கூழ்தாழை-தாமரை

செ

செகரிகம்- நாயுருவி
செகனவாதம்-ஓர் நோய்
செக்கவுரி-கற்சூரை
செக்குக்கீரை-செக்கிலைக்கறி
செங்கருங்காலி-சிறுமாரோடம்
செங்கலம்-செந்தாமரை
செங்கழுநீர்-செங்குவளை
செங்கலை - குதிரைப்பற்பாஷாணம்.

செங்காந்தள்-ஓர் பூண்டு
செங்கிரந்தி- ஓர் நோய்
செங்கீரை-ஓர் கீரை
செங்குமுதம்-செவ்வாம்பல்
செங்குவளை-செங்கழுநீர்
செங்கொடி வேலி-ஓர்பூண்டு
செங்கோடு-செருந்தி
செத்தசை- செந்துளசி, வெட்சி
செஞ்சம்பா- செம்பாளை நெல்
செந்தருப்பை- நச்சுப்புல்
செந்தம் - எழுத்தாணிப் பூண்டு
செந்தாமரை-ஓர் புஷ்பம்
செந்தாழை-ஓர் தாழை
செந்திரு-தாளகம்
செந்திலை-சம்பு
செந்து-பெருங்காயம், சடாமாஞ்சில்.
செந்துத்தி-ஓர் செடி
செந்துர்பை-ஓர் பூண்டு
செந்தூர்த்தாதி- கெந்தகம்
செந்தொட்டி - சிறுகாய்ஞ்சொறி, சிவப்பு தொட்டி.
செந்தோன்றி- கார்த்திகைப் பூ
செந்நாடிக்கா - மூக்கிரட்டை
செப்பபுல்-நாணற்புல்
செப்பிடில்-சடாமாஞ்சில்
செப்பிலை-தும்பை
செம்பசளை-சிவப்புப்பசளை.
செம்பண்ணை - காவற் பண்ணை
செம்பரத்தை-ஓர் செடி
செம்பிச்சி-செந்தொட்டி
செம்பில்வேலை-சோர பாஷாணம்
செமபின்பச்சை-நாகப்பச்சை
செம்புக்குள்வேதை- சற்பறி பாஷாணம்
செம்புளிச்சை- செம்பணத்தி
செம்மணத்தி-செம்புளிச்சை
செம்பை-சிற்றகத்தி
செம்மட்டி-மரமஞ்சள்
செம்மரம்-அழிஞ்சில்
செம்மலை-ஆவிரை
செம்மீன் வயிரம்-மீனம்பர்
செம்முருங்கைமரம் - ஓர் முருங்கை மரம்
செம்முள்ளி-ஓர் பூண்டு
செயசேதி-உப்பு
செயநீர்கருத்தன்- நற்சாரம்
செயபாரம்-மரமஞ்சள்
செயபீதம்-கௌரி பாஷாணம்
செயலை-அசோகு
செருக்கம்-மாதளை
செருந்தி-செருந்தி, மணத்தக்காளி, வாட்கோரை.
செருப்படி, சிறுசெருப்படி - ஓர் பூண்டு
செலதம்-கோரைக்கிழங்கு
செலமலம்-கடற்பாசி
செவியம்-இலாமச்சை
செலு-நறுவிலி
செவந்தம்- ஓர் முருங்கை மரம்
செகத்த-எருக்கு, ஓர் பூண்டு
செதந்தி- ஓர் பூண்டு
செவப்பம்மான்பச்சரிசி - ஓர் பூண்டு
செவப்பாமணக்கு- செவ்வாமணக்கு
செவப்புக்கந்தி-ஓர் வைப்புப் பாஷாணம்

செங்களா- சுகம், தேகம், பொன்னிறம், புகழ், புத்தியுமுண்டாம்.

செங்கத்தாரி-பூத கரப்பான், வெடிசூலையும் போம்.

செங்கரும்பு-சிவப்புக் கரும்பு, கபம், தாகம், காபித்தமெல்லாம் போம்.

செங்கழுநீர்க் கிழங்கு- காசம், ஸ்திரீகளால் வந்தவழல்

திரிதோஷம், பித்தம், மேக மும் போம். கண் குளிர்ச்சி உண்டாம்.

செங்கழுநீர்ப் பூவணிதல்- திரிதோஷங்கள். பலவித மேகம், வீக்கம், வெட்டை யும் போம், சுகம் போகமு முண்டாம்.

செங்கற்றுழை - சிவப்புக் கற்றுழை, தேகக் குளிர்ச்சி யுண்டாம். இரும்பு பொன் னும்.

செங்கால்நாரை-பலம், வாத முண்டாம்.

செங்கீரிப்பிள்ளை- தீபனம் பலம் விந்துவுமுண்டாம்.

செங்கீரைத்தண்டு- சிவப் புக்கீரை, ஸ்திரீ பெரும்பாடு, பித்தவெப்பும் போம்.

செங்குருவையரிசி- கரப் பான், சிரங்கு, சொறி, மந் தம், வாய்வுமுண்டாம்.

செங்குள நீர்- சிவந்தமண் சலம் உஷ்ணம், தாகம், புத் தியும் போம். மேகம், குழ ற்சி, திமிர், புண்ணு முண் டாம்.

செங்குன்றி - சிவப்புக் குண்டுமணிகரப்பான், வாத மும் போம்.

செஞ்சம்பாவரிசி- தீபனம் நல்லமேனியும் போம்.

செஞ்சோளம்- சிவப்புச் சோளம், கரப்பான், சிறு சிர ங்கு, புண்மந்தமு முண்டாம்.

செண்பகப்பூ- அஸ்திசுரம், அனல், வாதபித்தம், மேக மும் போம். கண் குளிர்ச்சி, தாது போகமுமுண்டாம்.

செந்தராயிலை- அரோசகம் தோஷம் நீர்த்தாரையைப் பற்றிய கொடியசூடும், வா யுக் குத்தலும் போம். தீபன முண்டாம்.

செந்தாழம் பழம்-சிகப்புத் தாழைப்பழம், தாகம், தலை வலி, பித்தம், மேகவெட்டை, வாந்தியும் போம், மேனியுண் டாம்.

செந்தாழம்பூ-கபம், காசம், சலதோஷம், தலைநோய், வாதமும் போம்.

செந்திருக் கெண்ணை- அசீ ரணம் அநேக வாதகுட்டம், தந்தவாய்வு, மந்தம், முக ஜன்னியும் போம் சரீர காந்தி தாது புஷ்டியு முண் டாம்.

செந்துளசி - சிவந்ததுளசி, எல்லா தோஷங்களும், கடி விஷம், கபமும் போம்.

செந்தொட்டிவேர் - கபம், கரப்பான், கீழ்வலி, சுரம், சுவாசம், தாகம், வாய்வும் போம். மாதர் சூதகமுண் டாம்.

செந்நாயுருவி- சிவந்த நா யுருவி, காமாலை, சூதகம் சோகைபாண்டும் போகார மும், கைப்புமாகவிருக்கும்.

செப்புநெஞ்சில்- சிறுநெருஞ் சில், அணல், கண்டமாலை, கிரந்தி, குஷ்டம், சிறு நீருஷ் ணம், சுக்கிலமேகம், திரி தோஷம், வெப்பம் போம்; குளிர்ச்சியுண்டாம்.

செம்பசளை- சிவப்புப்பசளை அரோசகம், சர்த்தி, நீர்க் கடுப்பு, நீரடைப்பு போம்.

செம்பரத்தம்பூ- செம்பருத் திப்பூ, இரத்தப் பித்தம், இரத்தவெள்ளை, பிரமியம்

பெரும்பாடு, வெட்டையும் போம்.

செம்பருத்தி-பித்தம், மேக வழலும் போம்.

செம்பருத்திப்பூ- அழலை, இரத்தபித்தம், தாகம் பேதி, வயிற்றுக்கடுப்பு விந்துவை நீற்றும் மேகம விஷேசி வெட்டையும் போம். செம் புக்கலம், தாம்பரக்கலம், இர தததோஷம் போம். தேகவா ரோக்கியம் விழி யொளியும் உண்டாம்.

செம்பையிலை-கட்டி ஐந்நி, தினவு, துடைவாழை, நீரேற் றம, பிளவை, பீநசங்கள், புண்புரை, மேகம், வாதகபம், விப்புருதி, விரணம், வீக்கம், வெடித்தபுண், புரைகளும் போம.

செமமறி ஆட்டிறைச்சி - எப்பிணியும் செங்கரப்பானும் உண்டாம்.

செம்மறிதயிர் - இரத்தக்கடு ப்பு, கரப்பான், சொறி, வாய் வும உண்டாம்.

செமமறி நெய்- அமமம், கண்ணோய், கரப்பான், சொறி, சிரங்கு, தினவு, பித் தம், வாதமும உண்டாம.

செம்மறி பால் - சிலேட்டு மம, பிததம், மேல்மூச்சு, வயிறு விமமல் வாய்வும் உண்டாம். பத்தியத்திற் கா காது.

செம்மறி வெண்ணெய்- ஐயம், கரப்பான், பித்தம் வாதமும மூண்டாம்; உருசி யாக விருக்கும்.

செம்முள்ளி- சிவந்தமுள்ளி ஐயம், சிலேட்டுமம, கபம், சிறுவாதசுரதோஷம், மாநத கணமும் போம், தொண் டைத்தெளிவு உண்டாகும்.

செம்மைநிறப் பசும்பால்- வாதம் போம்.

செருக்கு வாகு- மூலம் போம். கரப்பான், குரல் கம் மல், சித்தந் தெளியாமை, பயித்தியம், பித்தமும் உண் டாம்.

செருப்படி-இசிவு, சிலேர்ப் பனம, சூலை, மந்தம், மேகம், வ ா த ம, வாதகுன்மமும் போம்.

செவ்வகத்தியிலை - சிலேட் டுமம், தாளகவெள்ளை, நவ நீத பஸ்பம், பல சிந்தூரம் உண்டாம.

செவ்வந்திப்பூ- தலை சுற்றல், மயக்கமும போம். அனல் கண்ணுக்கொளி தலைமயிர் வளாச்சி, மணமும் உண் டாம்.

செவ்வல்லிக்கொடி- கரப் பான், குடல்வாதம், குறை நோய், பறுவன், மிகுநத குஷ்டம் மூலமும் போம.

செவ்வல்லிப்பூ- இரத்த பித்தம, கணணோய், நீரிழிவு, பல்நோய் புண் மேகப்பிணி யும போம்.

செவ்வா மணக்கிலை- குன் மம் தேகவலி, மாந்தம், வாத மும் போம

செவ்வியம்- மிளகின வேர் அருசி, இருமல், ஈளை, கண் ணோய், குரலகம்மல், ஐந்நி, சூலை தாபரவிஷமம், திமிர் பித்தமூலம் சுரமும்போம.

செவ்விளநீர - ஆயாசம், சயம, தாகம, பித்தம், வழி

நடையிலிளைத்தலும் போம்.
செவப்புக்காய்வேளை- ஓர் பூண்டு
செவப்புக்கொடிபசளை- ஓர் பூண்டு
செவப்புச்சோளம்- செஞ்சோளம்
செவப்புப்பசளை- செம்பசளை
செவப்புமந்தாரை- செம்மந்தாரை
செவ்வந்தி-ஓர் பூண்டு
அவையாவன: செண்டுச் செவ்வந்தி, அருச்செண்டுச் செவ்வந்தி, துலுக்கச் செவ்வந்தி.
செவிரம்-பாசி
செவ்வம்மான்பச்சரிசி - ஓர் பூண்டு
செவ்வலரி-ஓர் செடி
செவ்வல்நார், செவ்வல்லி - செவ்வாம்பல்
செவ்வளி-ஓர் கிழங்கு
செவ்வாம்பல்-செவ்வல்லி
செவ்வாழை-ஓர் வாழை
செவ்விளம்-மிளகு

சே

சே-அழிஞ்சில், சேங்கோட்டை, சேகரம்மா.
சேகரி-நாயுருவி
சேகலி-வாழை
சேக்கை-சிவப்புப்பசளை
சேசூரணம்- கௌரிபாஷாணம்
சேங்கொட்டை-ஊரல், மேகம், கடிவிஷம், கரப்பான், கட்டி, சயரோகம், கிருமி, கிரந்தி, குஷ்டம், 18-சூலை சொறி, திமிர்மூலம், வாதகுன்மம் போம்
சேச்சை-பாலைமுல்லை
சேதாம்பல்-செவ்வாம்பல்
சேதாரம்-தேமா, வெட்சி
சேந்து- அசோகு
சேபாலம்- சேங்கொட்டை
சேமரம்-அழிஞ்சில்
சேம்பை-சேம்பு
அவை: கல்லடிச்சேம்பு, நீர்ச்சேம்பு
சேயமயம்- கௌரிபாஷாணம்
சேயா-கடுக்காய்
சேயிலம்-இலுப்பை
சேயேபசம-மரமஞ்சள்
சேய்-மூங்கில்
சேரா-கள்
சேராங்கொட்டை- சேரான்கொட்டை
சேரான்கொட்டை-சேங்கொட்டை
சேர்வை-பிளாஸ்திரி
சேலகம்-சந்தனம்
சேலை-அசோகி
சேவகன் - பெய்வெண்காயம்
சேவகன்பூடு - காந்தல், சிறுபுள்ளடு, சிற்றுமுட்டி,
சேவகன்பூண்டு-சிற்றுமுட்டி
சேவாலங்கொட்டை - நர்வாளம்
சேவாலிகம்-கருநொச்சி
சேறு-விளாகள்
சேறுவு-தகரை
சேலகம-மலையிருவேலிகை ச
சேவலம்-ஓர் பாசி

சொ

சொக்கலி-மூக்கிலி
சொடக்கு- கடுகு, கிலுகிலுப்பை
சொண்கி - வேர்க்கொம்பு, உலர்ந்த இஞ்சி.
சொரங்கம்-கச்சோலம்

சொரத்தோரசி-இலவங்கம்
சொலியன்-முடக்கொற்றான்
சொல்-செந்நெல்
சொறி-காஞ்சொறி
சொற்குறி-சூதபாஷாணம்
சொறனம்-கோடாசுளி
சொர்ணசீரகம்-கரும்பு
சொர்ணமாக்கி - பவளபாஷாணம்
சொனகம்-உத்தாமணி, வேலிப்பருத்தி.
சொன்னல்-சோளம், இரும்பு.

சோ

சோகம்-கடுகுரோகிணி
சோகாரி-கடம்பு
சோங்கம்-அகில், இங்குருப் பல்லி, கிச்சிலிக்கிழங்கு.
சோனசம்-உள்ளி, வெள் வெண்காயம்
சோணகம்-பெருவாகை
சோணிதம்-மஞ்சள்
சோதிபூணகம்-தீபகற்பூரம்
சோதிமயம்-வாலுளுவை
சோதிமா-சோதிவிருட்சம்
சோதியம்-வாலுளுவை
சோபம்-கள்
சோபாலிகை-அம்பு
சோமவல்லி-சீந்தில்
சோமவல்லரி-பொன்னாங் காணி
சோமவலுக்கம்-தேக்கு
சோமலுப்பு - இந்துப்பு, பச் சைக் கற்பூரம், நீலபாஷாணம்.
சோமன்-வெள்ளிமணல்
சோமாக்கிசம-தாமரை
சோம்பலம்-சேராங்கொட்டை
சோம்பு-நட்சத்திர சீரகம்

சோரபுட்பம்- பீச்சுவிளாத்தி
சோறி-சிறு செருப்படி, இரத்தம்
சோளம்-சோளம், இசங்கு
சோற்றிலை-கற்றாழை

சௌ

சௌகந்தி-கந்தபாஷாணம்
சௌகந்திகம்-வெள்ளாம்பல்
சௌண்டி-திப்பிலி
சௌந்தகம் - கற்கடகபாஷாணம்
சௌபாஞ்சனம் - முருங்கை மரம்

க்ஷ

க்ஷயம்-ஓர் நோய்

ஞா

ஞாயிறுதிரும்பி - சூரிய காந்தம், பொழுது திரும்பிச் செடி.
ஞாலம்-ஊமத்தை
ஞாழல்-குங்குமமரம், கோங்கு மரம், பொன்னாவிரை, மயிர்க்கொன்றை, சங்கபுஷ்பம்.
ஞாழல்மாது-ஊமத்தை
ஞாழி-வள்ளைக்கொடி
ஞாளி-கள்
ஞாளிகம்-வள்ளைக்கொடி

ஞெ

ஞெகிழி-கொடுவேலி
ஞெண்டுகா-பெருவாகை

ஞே

ஞேயா-பெருமருந்து

ட

டங்கணம்-வெண்காயம்
டங்காரம்-வெடியுப்பு

டோ

டோமூா-இலுப்பை

த

தகட்டுத்தாளகம்-ஓர் பாஷாணம்
தகரம்-ஈயம்
தகரு-புன்முருக்கு
தகரை-ஓர் பூண்டு
அவை: கருந்தகரை, காட்டுத்தகரை, வெண்தகரை, தகரபலாசு.
தகல், தகன்-திராய்
தகிலமா, தகுவிமா - சேங்கொட்டை
தக்காரி-வாதமடக்கி
தக்காளி - நல்ல தக்காளி, பசுவின் தக்காளி, மற்றும் எருமைத்தக்காளி, குடித்தக்காளி, மணத்தக்காளி, மணித்தக்காளி.
தக்கோலம்-வால்மிளகு
தங்கைச்சி-குவளை
தங்கையைக்கொல்லி-சிறியாநங்கை
தட்டம்-பெண்குறி
தட்டான்-கோஷ்டம்
தட்டான்கொட்டைசை-புடோல்
தட்டி-கோட்டம்
தட்டிலம்-சதகுப்பை
தட்டை-மூங்கில்
தணக்கு-நுரை
தணலம்-எருக்கு
தணவம்-அரசமரம்
தண்டு-மூங்கில்
தண்டுலியம-சிறுகீரை
தண்ணீர்விட்டான்-ஓர்செடி
ததபத்திரி-வழை
தந்தக்காரி-வாதமடக்கி
தந்தயத்திரம்-மல்லிகை
தந்தசடம்-எலுமிச்சை விளா.
தந்தயாவனம்-கருங்காலி
தந்தி-நேர்வாளம்
தந்திரகம்-சீந்தில்
தந்துகம்-கடுகு
தந்துசாரம்-கமுகு
தந்துபம்-கடுகு
தந்துவிக்கிரியை-வாழை
தபனன்-கொடுவேலி
தமரகவொலி-தமரோசை, கிலுகிலுப்பை
தமனகம்-மருக்கொழுந்து
தமனி-வன்னிமரம்
தமனியம்-பொன்
தமராக்கவம-பீர்க்கு
தமாலம்-பச்சிலைமரம்
தமிசு-வேங்கை
தமியம-கள்
தம்பலை-நிலவிந்தை
தயிலபீதம்-அத்திப்பிசின்
தரம்-அரக்கு
தரளம-முத்து
தராகதமபம-கடம்பமரம்
தராசு-வெள்ளருக்கு
தராசுக்கொடி-பெரு மருந்து, முல்லை
தரா-கச்சந்திராய்
தருணம்-ஆமணக்கு பெருஞ்சீரகம்.
தருணிகம்-கற்றுழை
தருத்தமணி-மரமஞ்சள்
தருமராஜன்-பாலைமரம்
தருமவிசாரன்-பனை
தருடம்-தாமரைப்புட்பம்
தலத்தாது-நிலப்பனை
தலைசுருளி, தலைசூடுவல்லி-பெருமருந்து
தலைத்தாது-நிலப்பனை
தலைநிம்பம்-சிவனார்வேம்பு
தலைநோய்-ஓர்நோய்
தலைபோடம்-பொடுதலை

தலைவிரிச்சான் - சாரணை. செருப்படி
தவளம்-வெண்மிளகு [பல்
தவளோற்பலம்-வெள்ளாம்
தவனகம்-மருக்கொழுந்து
தவிட்டுச்செடி - மலைச்சொய்
தவுசயம்-முருக்கு [யா
தவுசெலம்-முருங்கை
தழல்-கொடுவேலி
தழை-இலை
தளப்பம், தளப்பமரம்- ஓர் மரம்.
தளம்பத்துமரம்- கூந்தற்பனை
தவளம்-முல்லைக்கொடி
தளவு-முல்லை
தளுதாழை-வாதமடக்கி
தற்பதி-கமுகு
தற்பலம்-வெள்ளாம்பல்
தனவனு-ஆச்சாமரம்
தனவை, தனவையாதம் - சிறு காஞ்சொறி
தனிகம், தனிசா, தனியா- கொத்தமல்லி
தனிவலிப்பெருமாள், தனிவள்-குப்பைமேனி
தனுத்திருமம்-மூங்கில்
தனுவிருக்கம், தனுவிருட்சம்-ஆச்சா
தன்யராசா-பாலைமரம்
தன்மலோசிதம்- செஞ்சந்தனம்
தன்மன்-திப்பிலிமூலம்
தன்வையாதம்- சிறுகாஞ்சொறி
தன்னினி-வேங்கை

தா

தாகமடக்கி-புளியாரை
தாசீ-மருதோன்றி
தாச்சி-சோணைப்புல்
தாடகம்-நீர்முள்ளி வீழி
தாடிமஞ்சள்-சருகுமஞ்சள்
தாடிமம்-தாதுமாதளை சிற்றேலம்.
தாட்சம்-கொடிமுந்திரிகை
தாத்தி-ஆத்தி
தாது-இரசம், இரத்தம் சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல், விக்கல் தாதுமாதளை, பூமாதளை.
தாத்தாரி- நெல்லி, ஆடுதின்னாப்பாளை
தாபமாறி-தான்றி
தாம்பிஞ்சம் -ஆமணக்கு, டச்சிலை மரம்
தாமர்-கொன்றை
தாமரசம்-தாமரை
தாமரை-ஓர் புட்பம்
அவை: ஆகாசத்தாமரை, கற்றாமரை, செந்தாமரை.
தாமரைச்சத்துரு-ஓர் பாஷாணம்
தாமரைமணி - தாமரைக் கொட்டை
தாமரையால்-ஓர் மஞ்சள் பாஷாணம்
தாமலகி- கீழ்க்காய்நெல்லி
தாமளை- புன்னை
தாம்பூரவல்லம்-வாழை
தாம்பூலவல்லி-வெற்றிலை
தாம்பூவி-வெற்றிலைக்கொடி
தாயைக்கொன்றான்- புல்லூரி வாழை
தாரம்-சிற்றரத்தை, தேவதாரம், நாரத்தை.
தாருகதலி-காட்டுவாழை
தாருசம்-செம்புளிச்சை
தாழிணி-நத்தைச்சூரி
தாலபத்திரி-மரமஞ்சள்
தாலபோதம்-ஆவிரை
தாலமூலி-திலப்பனை
தாலம்- கூந்தற்பனை, பனை

தாலம் - பாஷாணம்; ஓர் பாஷாணம்.
தாலி - கீழ்க்காய்நெல்லி
தாலியம் - பாதிரி
தாம்பூலம்- வெற்றிலை அஃது அட்டபோகத்தொன்று.
தாம்பூலத்தில் காய்ச்சுக்கட்டி, சுக்கு, இலவங்கப் இவைகள் சேருதல் - காய்ச்சிக்கட்டிநீரால் பல் பூச்சிகள் சாகும், சுக்கு இலவங்கமும் சேர்த்தால் இன்பமுந் தேக பிணியும் போம்.
தாம்பூலத் தின்னும் கால பேதம் - காலையில் பாக்கை அதிகப்படுத்த மலபாதையுண்டாம்; உச்சியில் சுண்ணத்தை அதிகப்படுத்த பசியுண்டாம்; மாலையில் வெற்றிலையை அதிகப்படுத்த வாயில் மணமுண்டாம்.
தாம்பூலமாகாத வியாதியாளர்-அதிசுரம், இரத்தபித்தம், எரிகுன்மம், க்ஷயம், சுவாசம், நேத்திரரோகம், பாண்டு, மூர்ச்சை, விஷக்கடி இவ் வியாதியாளர்க்கு தாம்பூலமாகாது.
தாம்பூலரசம்-அருசி, உதர தோஷம், சுவாசகாசம், மந்த மெய்வு, பீநசமும் போய் உடற்குக் காந்தியும், கண்ணிற்கு நலமும், புத்திக்கு உணர்வும் உண்டாம்.
தாம்பூலரசம் விழுங்கும் வகை - தாம்பூலம் போட்டவுடன் வாயிற்சுரக்கும் முதல் நீர் நஞ்சாம்; இரண்டாவது நீர் பித்தம்; மூன்றாவது நீர் அமிர்தம்; நான்காவது நீர் மதுரம்; ஐந்தாவது ஆறாவது நீர் பாண்டு, பித்தம், மந்தமும் உண்டாம்.
தாராக்கறி - அரோசகம், கபம், கரப்பான், தாதுடன் மருந்து முறிவு வாந்தியும் உண்டாம்.
தாராமுட்டை - அதிக பலமுண்டாம்.
தாழையிலைச்சாறு-மேகமும், விஷமும்போம்.
தாழம்பால்-தலை சுழற்றல், நீராமை, நீரிழிவு, பாண்டு, பித்தம், வாந்தியும் போம்.
தாளகம்-அழுகண், கடம், கபாலப்புண், குஷ்டம், குளிர் காய்ச்சல், நாக்குப்புண், பறங்கிப்புண், மண்டை நோயும் போம்.
தாளிக்குவளை- இருமல், ஈளையும் போம்.
தாளிசபத்திரி- அஸ்திசுரம் அருசி, கழுத்துப் பிணிகள், காசம், சர்த்தி, சிலேட்டுமம், சுவாசம், நாசிநோய்கள், மந்தம், மேகம், மேலிரைப்பு, வாய்வும் போம்.
தாளிப்பனை- நீரிழிவு போம்.
தான்றிக்காய் - அனல் ஆண்குறிப்புண், இரத்தபித்தம், சிலந்தி விஷம், சீழ் மேகம், சுவாசம், பித்தம், மேகம், வாதம், வாய்வு வெப்பும் போம். தேகவழகு ஒளி உண்டாம்.
தாலுகண்ணி - வெள்ளைகாக்கணம்
தாவணி-கண்டங்கத்திரி
தாழைதாரை-தாழன்செடி
அவை: கற்றாழை, ஆனைக்கற்றாழை, செந்தாழை,

வெண்டாழை, பேய்க் கத்தாழை, தழுதாழை

தழுதாழை இலைச்சாறு கொஞ்சங் கசப்பாயிருக்கிறது. இதை சுதேச வைத்தியர் நோய் பேதிக்கிற மருந்தாக யோசிக்கிருர்கள். அவர்கள் இதை இரணவாதரோகங்களுக்கும், சந்துவாதரோகங்களுக்கும் உபயோகப்படுத்துகிருர்கள்.

தாளகம்-அரிதாரம்

இருதாளம், இலாமிச்சு, காட்டுத்தாளகம், தகட்டரிதாரம்.

தாளி-தாளிப்பனை

அவை: நோனைதாளி, நாகதாளி, பெருந்தாளி.

தாளிசபத்திரி-ஓர் மருந்து

இது ஒரு வாசனையுள்ள பூண்டின் இலைகளாகவும் துளிர்களாகவும் இருக்கின்றது. ரூபார்ப்பினுடைய உருசி உண்டாயிருக்கின்றது. ஆனல் அதின் கசப்பில்லை. இது சீரணமருந்தாகவும் துவர்ப்புடையதாகவும் இருக்கின்றது. வயிற்றுளைவுக்கும், சயரோகத்திற்கும் உபயோகப்படுகின்றது.

தாளினி- சிவதை, நிலவாகை

தாருகண்ணி- வெள்ளைகாக்கணம்.

தானியம்-கொத்தமல்லி

தான்றிமரம்-ஓர் மரம்

தி

திகசம்-அசமதாகம்

திகனு-கொடுவேலி

திகிரி-மூங்கில்

திக்கு-கொடுவேலி

திக்குறு-புன்முறுங்கை

திசைநா-கொடுவேலி

திசைபிலம்-மருக்காரை

திடமை-வெள்ளெருக்கு

திடற்சுண்டி- வறட்சுண்டி

திட்டனம்- இலுப்பை

திட்டி-தினை

திட்டை-வெள்ளெருகு

திண்டகம்-கிலுகிலுப்பை

திண்டி- அரசு, பசலை

திதளம்-மாமரம்

திதனி-தேமல்

தித்தகம்,தித்தம்-மலைவேம்பு, நிலவேம்பு, கசப்பு

தித்தா-பீதரோகணி, வட்டத்திருப்பி.

தித்திகம்-பேய்ப்புடோல்

தித்திசாகம்-மாவிலங்கு

தித்திரம்-அரத்தை

தித்திருச்சி- நாணல்

தித்திரு-நாணல்

தித்திடம்-புளி

திந்திருணி-புளியமரம்

திபதிசம், திபதிச்சம்- வாலுளுவை

திப்பியம்-ஓர் மரம், அசமதாகம்

திப்பிலி-ஓர் பூண்டு

அவை: கண்டதிப்பிலி, யானைத் திப்பிலி, திப்பிலிக்கட்டை, திப்பிலிமூலம், திப்பிலியரிசி.

திப்பிலி மிளகு வகையில் சேர்ந்தது. இந்துஸ்தானி தேசத்தில் அதிகமாய் விளைகின்றது. சிலோன் இராச்சியத்திலிருந்து இவ்விடத்திற்கு வருகின்றது. வைத்தியர் இதன் குடிநீரில் கொஞ்சந் தேன் கலந்து மார்வலி

நோய்களுக்குப் பரிகார மாய்க் கொடுக்கிறார்கள்.
திமிசு-வேங்கை
திமில்-வேங்கை
தியசம்-மரமஞ்சள்
தியந்தி-திராய்மரம்
தியாமம்-இருவேலி, முயற்
தியேசயே-மரமஞ்சள் [புல்
திராமூலம்-முடக்கொற்றான்
திரகம்-கொன்றை
திரகஹுமம்-செம்பிளிர்ச்சை
திரக்கத்தாரு-நிலப்பனை
திரக்கம்-கொன்றை
திரக்கிரணி-பிரண்டை
திரங்கம், திரங்கலம், திரக்கல்-மிளகு
திரணராசன்-நிலப்பனை
திரணபதி-தாழை
திரணி-ஓர் செடி
திரந்திகம்-திப்பிலிமூலம்
திரப்பசம்-கத்தரி
திரம்-தகரை
திரலடி-ஏலம்
திரல்-காட்டாமணக்கு
திரவந்தி-காட்டாமணக்கு
திரளாரம்-நிலப்பனை
திரள்கோரை-கஞ்சாங்கோரை
திராட்சம்-ஓர் பழம், கொடிமுந்திரிகை.
திராமரம்-பவளமல்லிகை
தியாகபந்தி-கம்பந்திரா
திராய்-ஓர் கசப்புக்கீரை [ள்
இதை சுதேச வைத்தியர்கள் மிகவும் மதிக்கிறார்கள் இது ஜீரண மருந்தாகவும் சுகபேதி மருந்தாகவும் மாமிசம் அழுகாமற் பரிகரிக்கும் மருந்தாகவும் யோசிக்கிறார்கள். காது நோய்க்குப் பரிகார மருந்தா யிருக்கிறது. பிரசவித்த ஸ்திரீக்கு அழுக்கு தாராளமாய் விழா விடில் குடிநீராகக் கொடுக்கப்படுகிறது.
திராவடி-ஏலம்
திரிகண்டகம்-நெருஞ்சில்
திரிகாதோசிதம்-தருப்பைப் புல்
திரிசை-கொடிமுந்திரிகை
திரிபுடியலம்-ஆமணக்கு
திரிபுரமெரித்தான்-நொச்சி, மாவிலங்கை.
திரிபுரி-சாறணை
திரிலோசி-விட்டுணுகரந்தை
திருகம்-சாதிக்காய்
திருகுகள்ளி-ஓர்-கள்ளி
இதன்பால் பலமான பேதி மருந்தாகவும் | இளக்குகிற மருந்தாகவும் இருக்கின்றது. வெகு சொற்ப அளவு பனை வெல்லத்தில் வைத்து உட்கொள்ளப்படுகின்றது. தனிப்பாலாய் வைத்தால் கொப்புளங் கொள்ளச் செய்யும் மருந்தாக விருக்கின்றது. ஆனால் விளக்கெண்ணெயோடு சேர்த்தால் திமிர் வாதம் நடுக்கல் வாதம் சோர்வாதம் விறைப்பு நாட்பட்டவாதம் இவைகட்கு உபயோகமுள்ள மத்திப்பு தைலமாகின்றது.
திருசோமம்-வெண்டாமரை
திருடகாண்டம், சிருடக்கிரந்தி, - மூங்கில்.
திருடமூலம், திருடமும்-தேங்காய்
திருடன்-விஷ்ணுகரந்தை
திருடி-கள்ளி
திருணகேது-மூங்கில்
திருணசாரை-வாழை

திருணகுனியம்- தாழை
திருணராசன்-பனை
திருநீற்றுப்பச்சை விதை- ஓர் விதை.

இது மிகவும் வாசனையுள்ள செடியின் விதையாக விருக்கின்றது. குளிர்ச்சியைத் தருகிற சளித்தன்மையுடைய சுபாவமுடையதா யிருக்கிறது. இதன் குடிநீர் மேக வெள்ளை நீர்க்கடுப்பு கல்லடைப்பு வியாதிகளுக்கு நிலை பெற்ற பரிகாரமா யிருக்கின்றது. இலையின் சாறு காது நோய்க்குக் காதில் பிழிந்து விடப்படுகின்றது. சுதேச ஸ்திரீகளுக்கு பிரசவ கேடுகள் நீங்குதற்கு கொடுக்கப் படுகின்றது.

திருமரம்-அரசு
திருமலர்-தாமரை
திருமாலுந்தி-தாமரை
திருமால்கொப்பூழ்- தாமரை
திருமேனியழகி-குப்பைமேனி
திருகட்டி-கள்ளி
திருவாத்தி-ஆத்தி
திருவிளட-சிவதை, திராய்
திரேசந்தி-திராய்
திரேந்தி-திராய்
திரையல்-வெற்றிலை
திலகம்- சிந்தூரம், மஞ்சாடி, மஞ்சிட்டி.
திலபருணி, திலபருணிகை - சந்தனம்.
திலம்-மஞ்சாடி, எள்ளு
திலாச்சாரம் -கடுந்திலவணம்
திலவகம்- வெள்ளிலோத்திரம்
திவாபீகம்- வெண்டாமரை
திவிதிராட்சம்- கொடிமுந்திரிகை

திறிகண்டம்-நெருஞ்சில்
திறிதியம்-செவ்வள்ளி
துறிதேகி-பற்பாடம்
திறிலிங்கம்-தான்றி
திறிபாதி-சிறுபுள்ளடி
திறியம்-செவ்வள்ளி
திறிலேகறி- விஷ்ணுகரந்தை
திறிவாசம்- கக்கரி
திறிவிச்சதா-மூக்கிரட்டை

திப்பிலி - அரோசகம், ஆசனநோய், இருமல், இரைப்பு, ஈளை, ஊதை, கயப்பிணி காதுநோய், குளிர், குன்மம், சகல தோஷம் சந்நியாசம், சிரப்பிணி, சுரம், தொண்டை நோய், நாசிநோய், பாண்டு, பித்தபீலிகம், புழுபொருமல், மகோதரம், மலப்பெருக்கு, முத்தோஷம், மூர்ச்சை பிடக்கம், விழிநோய் போம். தாது விர்த்தி உண்டாம்.

திப்புலிமூலம் - இருமல் குரல்கம்மல், சுரம், சோகம், தாகக்கடுப்பு, பித்தம் மேகமும் போம்.

திப்பிலியரிசி- உப்பிசம், கபம், சிலேட்டுமம், மேகம், வாதசுரமும் போம், தாது விர்த்தி உண்டாம்.

திரிகடுகு- அபஸ்மாரம், அருசி, அற்புதப் புண் ஆகியநோய், இருமல், யீளை, எலும்பைப் பற்றிய நோய்கள், கன்னப்பிணி சந்நியாசம், சர்க்கராற்புதம், பித்தம், தலைநோய், தேள் விஷம், நாக்குநோய், பாண்டு, புழு மூலமும் போம்.

திரிஜாதிகம்- அஸ்திசுரம், அரோசகம், தமலும்போம்,

திரிபலம்- ஆசனப்புண், இரைப்பு, குஷ்டம், குத்திருமல், குன்மம், சர்வவிஷம், நரம்பிலுண்டாகுங் கட்டி, நாசிநோய், பாண்டு, பிரமியப் புண், பிலிகம், புண், மத மூர்ச்சை, வயிற்றுவலி, வெண்குஷ்டம் போம்.

திருவாத்தி- அதிசாரம், சேற்றுமமும் போம்.

திருவிருத்திக் கடுக்காய்- விரணம் போம். பஞ்சவர்ன கொடிபோன்ற, மூன்று வரம்பாக விருக்கும்.

திருகு கள்ளிப்பால்- கரப்பான்கிரந்தி, கிருமி, குட்டம், சீதம், பக்கநோய், வாத முடக்கும் போம்.

திரிக்கைமீன்-சோபம், பித்தமும்போம், தாதுவாதமுண்டாம்.

திருநாமப் பாலை- பித்தம் போம்.

திருநீற்றுப்பச்சை- சிலேட்டுமசர்த்தி, சுற்றத்தால் பிறக்கின்ற ரத்தவாந்தி, சுரம், அருசியும் போம்.

திருவட்டப் பிசினி-நாற்ற நீர் போம.

தில்லைப்பால்- குஷ்டம், ஜன்னு, சூலை, பாரிசவாதம், 18-விஷமும் போம்.

தில்லைவித்து- கபம், குஷ்டம், சிறுவிஷம, திமிர்வாய்வு பெருவிஷமும போம்.

தினப்புணர்ச்சி- அநேக நோய்களுண்டாம்.

தினை அரிசி-ஐயம், சன்னி, சுரம் வாதம் வீக்கமும்போம், பசி பித்தமு முண்டாம்.

திணைக்கஞ்சி- சோமை, தேஷமும் போம்.

திணைசாதம்- சுவாசம்போம். பித்தசோபமுமுண்டாம்.

திணைமா-கபவாதம் போம்.

தீ

தீபதைலி-ஆமணக்கு
தீப்பியம்-அசமதாகம
தீப்பிரகாசி-குங்கிலியம்
தீயபுட்பம்-சண்பகப்பூ
தீயளி-காசா
தீயாக்கீரை- பொன்னுங்கா[ணி
தீர்க்கதாரு-நிலப்பனை
தீர்க்கபாதபம-தென்னை [ன்
தீர்க்கமூலம் - முடக்கொற்ரு
தீர்க்கலோகிதம்- சிலந்தி, தருப்பை
தீர்க்கவிருகம்-பெருமரம் [கை
தீவிதிராட்சம்-கொடி முந்திரி
தீவிளங்குவைரம் - மீனம்பர்

தீகாய்தல்-சீதம், வாதமும போம். இரத்தக் கொதிப்பு, இரத்தபித்தம், உட்டினம் தாகமு முண்டாம்.

தீப்பாலைமரம்- இரத்தம், ஜன்னி, சர்த்தி, சலக்கோவை, சூதகம், நேத்திர நோய், பீநசம், முத்தோஷம் மேக வெட்டை, விஷபாக ரோகமும போம்.

தீப்பிரண்டை - ஐயம், இரைப்பு, சீதக்கட்டு, செரியாமந்தம், வாதம், விக்கலும் போம்.

து

துகிர்த்தாளி - பவளமல்லிகை
துகிலின்பீசம் - பருத்திவிதை
துசகம்- கொம்மட்டிமாதளை, மாதளை.

துசம்-குங்குலியம்
துச்சத்தாரு-ஆமணக்கு
துச்சம்,கொம்மட்டி [ருன்
துடக்கறுப்பான்- துடக்கொற்
துடி-அகில், இசங்கு, ஏலம்
துடிகம்-தும்பை
துடியாஞ்சி, இசங்கு
துடை-அரசு ,விஷமூங்கில்
துட்டரி-கொடரி
துட்பிரதருசணி-சேம்பு
துணவு-தணக்கு
துதியம்-சமரிலோத்திரம்
துத்தம்-நாணற்புல், நாய்ப் பாகல், நீர்முள், பாகல், நான்முகப்புல், கண்மருந்து
அவை: பாற்றுத்தம், மடற்றுத்தம், மயிற்றுத்தம் - துரிசி.
துத்தமனு-முயற்புல்
துத்தி-மீதமம், ஓர் பூண்டு
அவை: எலிச்செவித்தி, ஐயிதல்துத்தி, ஒட்டுத்துத்தி, கண்டுத்துத்தி, காடுதுத்தி, கொடித்துத்தி, சுறுதுத்தி, செடிதுத்தி, நாகமதுத்தி, நிலதுத்தி, நிவதுத்திமணி, ராத்துத்தி, பெருந்துத்தி, இரணத்துத்தி, வயிற்றுத்துத்தி, துத்தியிலை.

இது இளக்குகிற அல்லது மிருதுவாசிக்கிற பற்று, ஒற்று வெய்து காட்டுகை இவைகள் செய்ய வேண்டிய சங்கதிகளில் இதன் இலைக் கஷாயம் ஐரோப்பிய தேசத்தாரால் உபயோகப் படுத்தப்படுன்றது. இதை இடித்துப் பிழிந்த ரசம் மேக வெள்ளைக் குளிர்ச்சி மருந்தாகக்கொடுக்கப்படுகின்றது. இதன் வேர் சுடுநீர் சுரங்களில் கொடுக்கப் படுகின்றது.

துப்பிரசம்- கருஞ்சொண்டி
துப்பு-அரக்கு
துப்பகர்-தும்பை, தும்பமரம், அத்தி.
தும்பகர்-தும்பை
தும்பராஷ்டகம் - பேரரத்தை
தும்பரம்-அத்தி
தும்பாலை-சுரை
தும்பி-கொற்றுன்சுரை
தும்பிகரும்பு-நெருஞ்சில்
தும்பை - தும்பை, வெற்றிலை, ஓர் பூண்டு.
அவை: கறித்தும்பை, கவிழ்த்தும்பை, கழுதைத்தும்பை, பேய்த்தும்பை, தும்மிட்டி, சிறுகும்மிட்டி, பேரீந்து
துரகதமூலம்-நீர்முள்ளி
துரங்கப்பிரியம்- கோதுமை
துரமி-தூதளை, தொடரி
துரா-ரோகம்பனை
துராலபம்- சிறுகாஞ்சொறி
துரிஞ்சல்-உசில்
துரிசி-ஓர் மருந்து

இது. ஔஷதத்துக்குத் தெரிந்தெடுக்கப்பட்ட துரிசு. துப்புரவான இருண்ட நீல நிறமுள்ளதாயும் பருந்துண்டுகளாகவும் இருக்கவேண்டும். அவற்றின் மேல் வெண் பச்சை அல்லது வெண்ணிறமான தூள் பற்றிருக்கில் உள்ளுக்குக் கொடுக்குமுன் நன்றாய் துடைத்துக் கொள்ள வேண்டும். இது அநேக கடைகளில் நற்சரக்காக அகப்படும்.

சுரமின்றி அநேக நாளாயிருக்கப்பட்ட வயிற்றுப் போக்குக்கும் வயிற்றுக் கடுப்

புக்கும் 6-கிறெயின் துரிசு நேர்மையாய்ப் பொடித்து 6-கிறெயின் அபினுடன் நன்ருய்ச் சேர்த்தரைத்து 12-மாத்திரையாகப் பங்கிட்டு நாளொன்றுக்கு மூன்று தரமாக ஒவ்வொரு மாத்திரை வீதங் கொடுக்க வேண்டும். வயிற்றுக் கடுப்புள்ளவர்களுடைய வயிற்றின் மேல் பிளானல் அல்லது சம்பிளியைச் சுற்றிக் கட்டியிருக்க வேண்டும். வெளிறி பெலவீனமாய் நெடுநாளாய்ச் சுகமில்லாமலிருக்குங் குழந்தைகளின் தீராத வயிற்றுக் கழிச்சலுக்கு 1-கிறெயின் துரிசை நன்ருய்ப் பொடித்து 2-சரிபங்கு செய்து இதிலொரு பங்கை 8-கிறெயின் அறுவாயின் தூளுடன் தேன் அல்லது பஞ்சதாரையில் தினம் 3-தரங் கொடுக்கவேண்டும். மேற்சொல்லிய வியாதிகளையுடையவர்கள் பிராயமானவர்களாவது, குழந்தைகளாவது சில நாள் இந்த ஔஷதம் தின்றதில் சவுக்கியமடையாவிட்டால் அதை நிறுத்தி விட வேண்டும். ஏனெனில், அதை நெடுநாள் தொடர்ந்து தின்னுவளவில் வாந்தியும குன்மவாய்வுமுண்டாகும்.

குளிர்சுரங்கள், முறைசுரங்கள் இவைகளுக்கு முன் கொடுத்ததில் சவுக்கியப்படாமலிருக்கில் துரிசைக் கீழ்ச்சொல்லியபடி கொடுக்கலாம். நேர்மையாய்ப் பொடித்த துரிசித்தூள் 4-கிறெயின் அபின் 6-கிறெயின் இவைகளைத் தேன் விட்டு நன்ருயிடித்து 12-மாத்திரையாகப் பங்கிட வேண்டும். இதில் முதலாவது ஒரு வேளைக்கொரு மாத்திரை வீதம் தினம் மூன்றுநேரங் கொடுத்து இதில் பலன் காணுவிட்டால் தினம் நாலைந்து தரமாவது கொடுக்கலாம். மேற்சொன்ன பிரயோகம் பிராயமானவர்களுக்கே கொடுக்கத்தகும் ஆதலால் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது. அதுவும் மற்ற மருந்துகள் கொடுத்துப் பார்த்தபின் தான் கொடுக்கலாம்.

நெடுநாள் பட்ட புண்களில் விளிம்பைச் சுற்றி துரிசை மெதுவாய்த் தடவி வந்தால் சுறுக்காய் வாசியாகும். இனியொரு முறையாவது 3-கிறெயின் துரிசை 1-அவுன்ஸ் தண்ணீரில் கலக்கி தினம் இரண்டு தரம் புண்களில் விட்டுப் பின்பு மூன்று அல்லது 4-நாளைக்கொருதரம் துரிசின் எடையை ஒவ்வொரு கிறெயின் வீதம் வியாதிக்காரரின் உணர்வுபோல் அதிக நோவும சூடு இல்லாமல் சிற்றெரிவும் உட்டணமுமாத்திரம் கொடுக்கும்படியாய் 10-கிறெயின் ஆகுமட்டும் நீரை அதிகரித்துக் கொள்ள வேண்டும் அதிலதிக எரிவுண்டாகுல் துரிசின் காரம் குறைபும்படி சற்றதிகமாய்ச் சலத்தைக் கூட்டிக் கொள்ள

வேண்டும். மேற்படி சலத்தைக் காலையும் சாயந்திரமும் புண்களில் விட்டு இடைவேளைகளில் அரிசிப்போல்ட்டிசைக் கட்ட வேண்டும் துன்மாமிசத்துக்கு அதின் மேல் துரிசை மூன்று அல்லது நாலு தினத்துக்கு ஒரு தரம் தடவவேண்டும். பிராயமானவர்களுக்காவது, குழந்தைகளுக்காவது வாயினுள் வரும் புண்களுக்கு 5-கிறெயின் துரிசை நேர்மையாய்த் தூள்செய்த அரை அவுன்ஸ் தேனிற் கலந்து விரலால் தொட்டு இடவேண்டும். பிள்ளைகளுக்கும் பாலர்களுக்கும் மிகுதியாய் நீர் வடியும் கண்ணோய்களுக்கு 1-கிறெயின் துரிசை 1-அவுன்ஸ் சலத்தில் கலக்கி தினம் மூன்று அல்லது நாலுதரம் கண்ணைக்கழுவினால் குணம் வரும். கடினமான கண்ணோய்களுக்கு 1-அவுன்ஸ் தண்ணீரில் 2 கிறெயின் துரிசைக் கூட்டிக் கொள்ள வேண்டும். படர்தாமரைக்கும் தலைச்சொறிக்கும் துரிசின் தூள் 20 கிறெயின், மாசிக்காய்த்தூள் 1-அவுன்ஸ், மெழுகு பிளாஸ்திரி 1-அவுன்ஸ் இவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்தரைத்து வியாதியுள்ள தலத்தில் நன்றாய் தேய்க்கவும். சொரிசிரங்குக்கு 1-அவுன்ஸ் துரிசை அரை புட்டி தண்ணீரிற் கலக்கி இடவேண்டும்.

அட்டை கடித்தவாயில் நின்று இரத்தம் போகிறதற்கு கொஞ்சம் துரிசை தூள் செய்து கடிவாயில் வைக்க நிற்கும். மூக்கில் நின்று மிகுதியாய் இரத்தம் போகிறதற்கு 4-கிறெயின் துரிசை 1-அவுன்ஸ் தண்ணீரில் சலக்கி மூக்கினுள் விட வேண்டும். ஆனால் இது படிகாரத்துக்குத் தாழ்ச்சியாய் இருக்கின்றது.

அபின், ஊமத்தை எட்டிக்கொட்டை மற்றும் மயக்கத்தக்கவைகளை விழுங்கினவர்களுக்கு 5-கிறெயின் துரிசை அரைபுட்டிச் சுடுதண்ணீரில் சலக்கி அவ்வளவையும் ஒருதாமாய்க் குடிக்க வேண்டும். உடனே அரை மணி நேரத்திற்குள் வாந்தி போகாவிட்டால் பின்னுங் கொடுத்தால் அது வயிற்றிலிருந்து நஞ்சாகவே தீருமாகையால் அதிகமாய்த் தொடர்ந்து கொடுக்கக் கூடாது. இதைக்கொடுத்த பின்பு உடனுடன் வாந்தி நன்றாயாகும்படி மிகுதியாய் சுடுதண்ணீரை அடிக்கடி கொடுக்கவேண்டும். நஞ்சுண்டவர்களுக்குத்தான் உடனே வாந்தியாகிறதற்கு துரிசைக் கொடுப்பது புத்தியானதால் மற்ற வியாதிகளுக்கு அது நலமான வாந்தி ஔஷதமல்ல; இந்த மருந்தைக் கொடுத்தபின் நஞ்சுப் போன்ற இலட்சணங்கள் யாதேனும் உண்டாகில் முட்டையின் வெள்ளைக்கருவு மாற்று மருந்தாயிருக்கின்றது.

துருக்கம்-குந்துருக்கம்
துருத்தூரம்-ஊமத்தை
துருபவருனி- காட்டாமணக்கு
துருமசிரேட்டம்-பனை
துருபவருணி- காட்டாமணக்கு
துருமம்-குங்குமம்
துருமேசுவரம்-பனை
துருமோற்பலம்-கோங்கு
துருவாட்டி-சிற்றேலம்
துருவாதி- காட்டாமணக்கு
துருளக்கம்-குர்திரிக்கம்
துரோணம்-தும்மை
துரோணிகை-ஆவிரை
தூர்த்தூரம்-ஊமத்தை
துவியாசுனம்- செம்முருங்கை
துலோபம-கருஞ்சுண்டி

துவரை-துவரை (மரம்)

துவரைப் பயறு, ஓர் செடி, அவை: கருந்துவரை, காட்டுத்துவரை.

துவர்-பவளம்
துவிர்ச்சிகை - சடுக்காய் பிஞ்சி.
துவர்-பத்து

அதாவது: நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்துளிர்.

துவன்-வட்டத்திருப்பி
துவிகபா, துவிகாபா- வட்டத்திருப்பி
துவிசாயாசின் - செம்முருங்கை
துவிதாத்திமகம் - சாதிக்காய்
துவிபத்துறு- தண்ணீர்விட்டான்.
துவை, துழாய்-துளசி
துழாயவனம்-துளசி
துளசி-ஓர் பூண்டு

அவை: கரியமால் துளசி, கருந்துளசி, கற்பூரத்துளசி, செந்துளசி, காட்டுத்துளசி, சிவதுளசி, சிறு துளசி, நாய்துளசி, நிலத்துளசி, பெருந்துளசி.

துபளம்-துளசி
துளம்பிக்கிரி- ஆனைதொண்டை
துவளம்-துளசி
துளவன்- சோரபாஷாணம்
துளவி-திப்பிலி
துளவு-துளசி
துளை-மூங்கில்
துறட்டிச்செடி- ஓர் பூண்டு
துறட்டி-சிற்றேலம்
துற்பறிகம்- சிறுகாய்ஞ்சொறி
துறுவி-திப்பிலி

துத்திநாகம்-அழலை, கிராணி, பேதி, பயித்தியம், மூலைப்புண், மேகம், வெட்டையும் போம்.

துத்திப்பூ-இருமல், வாயால் விழுகிற ரத்தமும் போம். மெய்க் குளிர்ச்சி, விழுந்தும் உண்டாம்.

துத்தியிலை - சட்டி, புண், புழு, மூலமூலநோய்போம்.

துத்துவிரை- குஷ்டம், கைகாலிற்படர்ந்த கருமேகம், வெப்பும் போம்.

தும்ப க்ஷரம் - இரைப்பு, ஈளை, குன்மநோய், வாதமும் போம்.

தும்பையிலை-கண் புகைச்சல், கபம், கால் கையசதி, குளிர் சீதசன்னி, சுரங்கள், சோம்பல், தலைவலி, தாகம், பாம்பு முதலான விஷங்கள், மாந்தம், மேகம், வாதமும், போம்.

துர்பைப்பூ- கண்ணோய், ஐந்நிபாதம், மேகம் வாதமும் போம்.

துயிலிக்கீரை - அழகு, பல மலம் வெட்டையும் போம், சிறுசிரங்கு சீதமுண்டாம்.

துருசு - ஆண்குறிப்புண், கண்ணோய், சுரம், புண், முத்தோஷம், வாய்நோயும், போம், பேதி வாந்தியு முண்டாம்.

துவரம்பருப்பு - பித்தம், கிராணி, ஜன்னிவாதம், சேட்டுமம், மூலம், சீதம், விஷமும் போம், தாதுபலமு முண்டாம்.

துவரம்பருப்பின்ரசம் - கெட்ட வாதங்கள் போம்.

துவரை - மந்தம், மலம், மெலிந்த தேகம் புஷ்டியும், வாய்வு முண்டாம்.

துளசி - அஸ்திசுரம், அரோசகம், ஐயம், ரணம், சுவாசகாசம், சுரமாந்தம், தாகம், வயிறுளைச்சல், பலபுண்ணும் போம், சாரம் சூடுமுண்டாம்

துளசிவிதை - அருசி, கபமும் போம்.

தூ

தூங்கமுட்டு - கோரைக் கிழங்கு

தூசிகம் - புளியாரை

தூசுப்பு - தண்ணீர் விட்டான்

தூட்டிகம் - தும்பை

தூணீயேகம் - அத்திப்பிசின்

தூதனம் - மூங்கில்

தூதுணை, தூதுளை, தூதளை - தூதுவளை.

இதன்வேர், இலைகள், புட்பங்கள், துளிர்கள் எல்லாந் தமிழ் வைத்தியரால் மருந்தில் உபயோகப்படுத்தப்படுகின்றன. வேரும், இலைகளும் கசப்பாயிருக்கின்றன. சய ரோகங்களுக்குச் செய்யப்படும் லேகியத்தில் கஷாயமாகவாவது, சூரணமாகவாவது சேர்க்கப்படுகிறது.

தூமம் - புளிநரளை

தூமம் - பலகறை

தூம்பு - மூங்கில்

தூரம் - ஊமத்தை

தூரச்சூலை - ஓர் நோய்

தூரேத்தி - கம்மத்திராய்

தூரோணம் - கவிழ்தும்பை

தூர்த்தம் - ஊமத்தை

தூர்மம் - தேள்கொடுக்கி

தூர்வை - அறுகு

தூர்ணு - முகற்புல்

தூலகம் - பருத்தி

தூலம் - இரவு, நீர்முள்ளி, பருத்தி, பஞ்சுகோரை.

தூலினி - இலவு

தூறவம் - நாவல்

தூதுதிராய் - மஞ்சள்

தூறுகுணம - கடம்பு

தூருட்டி - சிற்றேலம்

தூறுதலையன், தூதுதலைவன் - பிராய்

தூறுபுட்பம் - சீந்தில், சிலந்தி

தூதுபுலப்பம் - சீந்தில்

தூர்க்கணங்குழுவிக் கறி - அருசி, ஐயம், மலமும்போம், அழகு பசியும் உண்டாம், பத்தியத்திற்காகும்.

தூதுளங்காய் - அரோசகம், ஐயம், கபம். குடில்வாதம், மலம் வாதபித்தமும் போம்.

தூதுளைப்பத்திரி - காசம், காது மந்தம், காதெழுச்சி, சூலை, தாதுநஷ்டம், தினவு, மதம், மந்தம், முத்தோஷம், மேலுளைப்பும் போம்.

தூதுளம்பழம்- கபக்கட்டு கோவை, திரிதோஷம், நீர்க் கோவை, விஷமும் போம்.

தூதுளம்பூ- அழகு, தாது புஷ்டி, பலமும் உண்டாம், தளர்ந்த தேகத்திற்காகும்.

தூதுளம்வேர்- பல நோய் போம்.

தெ

தெகுட்டிசை, தெருட்டி- தேள்கொடுக்கி.

தெங்கு-தென்னை, ஓர் மரம்,

தெருவித்தேங்காய் - ஓர் பூண்டு

தெறுந்தேங்காய் - சமுத்தி ராப்பழம், தேங்காய்ப்பழம்

தெசலாம்-தேமா

தெசவம்-மா [லை

தெளி-மஞ்சள், பெருங்குருப்

தெந்தி-நேர்வாளம்

தெருவிலழுகு-குப்பைமேனி

தெவம்-மாமரம்

தென்னங்கள்ளு-ஓர் கள்ளு

தென்-தென்னை

வழக்கமாயிருக்கிற மலச் சிக்கு மலபந்த வியாதிக்குச் சுகமான விலைபெற்ற பரிகார மாயிருக்கின்றது.

தென்னமரத்து பஞ்சு - ஓர் பஞ்சு

இது காயங்கள் அட்டைக் கடி முதலாகியவைகளிலிரு ந்து வரப்பட்ட இரத்தத்தை நிற்கச் செய்ய உபயோகப் படுத்துகிறார்கள்.

தென்னி-வாழை

தெங்கின் கற்கண்டு-கபம், திமிர்வாதம், வாய்வும் உண் டாம்.

தெங்கின்குருத்து- உதிர மூலம், சிலேட்டுமம், எலியும் போம்

தெங்கின்பூ- அகக்கொதி ப்பு, அதிர்க்கரநோய், இரத்த பித்தம், பிரமியம், மேகம், விஷமும் போம்.

தெங்கின்மது- கரப்பான், கிராணிசோபை, நாதவிந்து, பாண்டு, பேதி, வாதபித்த முண்டாம்.

தெங்கின் வெல்லம் - உட லூதல், சலை, சரப்பான், காமாலை, சிரங்கு, சோபை, சோகம், திரை, பாண்டு, மதி கெடல், மாந்தம், வாதமும் உண்டாம்.

தெளிந்த தேன்- இருமல், கண்ணோய், காசம் சுரம், சுவாசம், விஷமும் போம் சுரலோசையுண்டாம்

தே

தேகனி-மஞ்சள்

தேகி-புல்லூரி

தேக்கு- தேக்கு, கமுகு

தேங்காய்க்கீரை-ஓர் பூண்டு

தேங்காய்ப்பூநாறி - தேங் காய்ப்பூக்கீரை.

தேங்கிட்டி - தேள்கொடுக்கி

தேசனி-மஞ்சள்

தேசாவரம் - ஓர்கிழங்கு

இது சூடுள்ள கார்ப்புள்ள கணுவுள்ள கிழங்கா யிருக் கின்றது. இதைச் சுதேச வைத்தியர் சுரங்களுக்கும், அசீரண வியாதிக்கும், குன்ம வியாதிக்கும் குடிநீ ராக உபயோகப்படுத்து கிறார்கள்.

தேசி-எலுமிச்சை, எலுமிச்சம் பழம்.
தேவகந்தம்-குங்கிலியம்
தேவகந்தர், தேவகந்துறு சீதேவி.
தேவதரு-மந்தாரம்
தேவதாரம்-தேவதாரு, செம்புளிச்சை.
தேவதாளி-ஓர் பூண்டு
தேவபவனம்-அரசமரம்
தேவமாமரம்- அனிச்சை, குளிராவல்.
தேவர்வசம்-அரசு
தேவலதை- அடுக்குமல்லிகை
தேவதனம்- தாமரை
தேவாபீட்டை-வெற்றிலே
தேவி-சீதேவியார்
தேள் கொடுக்கி-ஓர் பூண்டு இதின் இலைச்சாறு கசப்பாய் இருக்கும். இதைச் சுதேச வைத்தியர் நோயுள்ள பல்லின் ஈறுக்கும், முகப்பருவுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள், கண்ணோய்களுக்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.
தேறு-தேற்றுமரம் துண்டு
தேற்றுங்கொட்டை- ஓர் விதை
தேளி-கடுகுரோகணி [தை
தேங்கு-சிரங்கு போம்.

தேங்காய்நெய்-சிரங்கு,தீப்புண், படர்தாமரை, பல்நோயும் போம்; தலைமயிர் வளர்தலுண்டாம்.

தேங்காய்ப்பால்- அன்னமிரங்குதல், கரப்பான், தாதுவிர்த்தி, பித்தம், வாதமும் உண்டாம்.

தேங்காய்ப் புண்ணாக்கு- கரப்பான், சொறி, சிரங்கு வயிற்றில் புழுவுமுண்டாம்.

தேட்கொடுக்கு - கரப்பான், சில்விஷம், தினவு, நாட்பட்ட புண், புரந்த கணமும் போம்.

தேயு-உள்வலி, கண்டைக்கால் நோய் பல பிணிகளும் போம்.

தேவதாரமரம்- அனல் சிலேட்டுமம், நீரேற்றம், பீநிசம், பழைய சுரமும் போம்.

தேளி-உலர்ந்தது. இருமல், ஈளை, கிராணி, மேக வாய்வு போம்.

தேற்றுங்கொட்டை- அகக்கடுப்பு, உள்புண், கண்ணெரிவு, கிரிச்சரம், தீபனம், வெட்டை, வெள்ளை யோடலும், நீர்த்தெளிதல், மந்தமும் உண்டாம்.

தேற்றுங்கொட்டை- மேல் தோல் அதிக வாந்தியுண்டாம்.

தேற்றும்பழம்-காசம், சுவாசம் முத்தோஷமும்போம்.

தேற்றுனிலே - எல்லாச்சுரமும் எல்லா வீக்கமும்போம்.

தேனிலுண்டாகுங் கற்கண்டு-சுரம், வாதம், விழியிலிருக்கின்ற படலமும் போம். தொனி பசியுமுண்டாகும்.

தேன்குத்தல் - உட்டிணம், கபவாதம், தாகம், மந்தமுமுண்டாம்.

தேன்பாகு- அருசி, சர்த்தி, மற்ற வியாதிகளும் போம்; கோழையுண்டாம்

தை

தை-தைவிளை, தைவேளை, அரச தண்டர், தைலபீதம், அத்திப்பிசின்.

தைலங்களின் பத்தியம்-ஸ்திரீ, செம்மறித்தயிர், நித்திரை, பாகற்காய், பால், புகையிலை, புளி, மீன் இவைகளால் பத்தியத் தாழ்வுண்டாம்.

தைலம் தேய்க்கும் விதி-காதுக்கு 6-துளி நாசிக்கு 4-துளி விட்டு உச்சிக்கும் பாதங்களுக்கும் தேய்த்து ஊறினபின் ஸ்நானஞ் செய்யவும்.

தைலப்புகை-முத்தோஷங்களாற் பிறக்கின்ற நோய்களெல்லாம் போம்.

தைலாதிகளின் குணம்-வாரத்திற்கு இரண்டுமுறை தேய்த்து ஸ்நானஞ் செய்தால் நோய்கள் அணுகாது ஓடிப்போம்.

தொ

தொக்கி-சமுத்திரப்பச்சை
தொங்கின்-சீனமாப்பிலைக
தொடரி-புலிதொடக்கி
தொட்டவிரல் தரித்தான் - பெருங்குறிஞ்சா
தொட்டால்வாடி - தொட்டாற்சுருங்கி.

இந்த பூண்டின் வேர்க் கஷாயம் கலலடைப்பு வியாதிக்கு உபயோகப்படுத்தப்படுகின்றது. சுதேச வைத்தியர் புண்களுக்கும் புண் புரைக்கும் இதன் இலையையும் வேரையும் உபயோகப்படுத்துகிறார்கள். இலையைக கொஞ்சம் அரைத்துப் பாலில் கலந்து கொடுக்கப்படுகிறது.

தொட்டாற்சுருங்கி - ஓர் பூண்டு

தொட்டி-காய்ஞ்சொறி
தொட்டிப்பாஷாணம - ஓர் பாஷாணம்.
தொண்டி-கள்

தொண்டை - ஆதொண்டைச் செடி, கோவைச்செடி, காற்றோட்டி.

தொதி-பப்பரப்புளி
தொலியாகரம்பை - நத்தைச்சூரி
தொவசலுகம-பாவட்டை
தொன்மரம்-ஆலமரம்

தொக்கணத்தின் குணம்-வாயுபோம், உறக்கம் புணர்ச்சியும் உண்டாம்.

தொட்டால்வாடி - ஐந்நி, வெட்டை வெள்ளையும்போம ஸ்திரீ விநோதம் உண்டாம்.

தொட்டிப் பாஷாணம்-கிரந்தி, சுரம, மந்தம, முளைத்தட்டி வாய்வும்போம், வாதவித்தை உண்டாம்.

தொய்யாக்கீரை-சதைவீக்கங்கள், விஷமுள்ள புண்களும போம.

தொழுகணணி - துணிந்த தசை கூடும.

தோ

தோகலி-அம்சாகு
தோகல்-சோளப்புல்
தோக்குளம்-பருத்தி
தோஷம்-ஓர் நோய்
தோடகம்-தாமரை
தோட்டி- செங்கரந்தன்நெல்
தோண்டி-வறட்சுண்டி [வி
தோதிபேலா-பேராமுட்டி
தோரை-குழநெல்
தோலாயா-இலவு
தோலா-ரூபா எடை
தோல்-மூங்கில்

தோளி-அவுரி
தோன்றி-காந்தள்
தோசை-கபம், பித்தம், வாய்வும்போம்.

தோஷம் நீங்காத பாதரசம்- இரசத்திற்கு எட்டு வகை தோஷமுண்டு, அதாவது: கந்தி, காளம், சர்ப்பம், சாஞ்சலம், மந்தம், மலர், வங்கம், வன்னி என்பவைகளாம். இந்த தோஷத்தை நீக்காமல் உண்பவர்கள் அக்கினி, எரிச்சல், குஷ்டம், கொப்பளம், கோது போன்ற தேகநிறம், மரணம், மூர்ச்சை, விந்து நஷ்டமென்கின்ற 8-விரோதங்களுமுண்டாம்.

தோப்பு நெல்லிக்காய் - அரோசகம், உஷ்ணம், சித்தக்கலக்கம், சிலேட்டுமம் பித்தம், பிரமேகம், பீநசம், புண், மலவாதம், வாந்தி, வாயுலேப்பு, விக்கலும்போம்

ந

நகசிறிதம்-குன்றி
நகதிபீசம்-புலித்தொடக்கி
நகநோக்கி-வேலிப்பருத்தி
நகரி-வறட்சுண்டி
நகந்துரோணம்-தும்பை
நகவியாக்கிரம்-புலித்தொடக்கி
நகிர்-தேள்கொடுக்கி
நகுலி-பட்டப்பருத்தி
நகுந்தம்-புன்கு
நகேசிறு-புல்லூரி
நகைநோக்கம்-மஞ்சள்
நகையால்-பகண்டை
நக்காரி-வறட்சுண்டி
நக்கிப்பூ-ஓர் பூண்டு
நக்கிரா-தேள்கொடுக்கி

நங்கை-சிறியாநங்கை, பெரியாநங்கை.
நசாரி-காஞ்சிரை
நசியரி-குப்பைமேனி
நச்சினி-கேழ்வரகு
நச்சரமரம்-எட்டி
நஞ்சறப்பஞ்சான்வேர் - ஓர் கள்ளி

இதன் சிறுவேர் சிலம்பு வாந்தி மருந்தாக விருக்கின்றது. இது சூரணமாகச் செய்து பிரயோகிக்கப்படுகின்றது.

நஞ்சறப்பாஞ்சான் - கொடிப்பாலை

நஞ்சறுப்பான் ஓர் பூண்டு, கொண்டை, சாணிக்கிழங்கு கொடிப்பாலை, நஞ்சி, குன்றுமணி, கொண்டைசாணிக்கிழங்கு

நஞ்சு-விஷம்
நட்சைமரம்-தணக்குமரம்
நட்பத்திரிகை-சோம்பு
நணந்தம்-புன்கு, சணல்
நண்பன்-சணல்
நதீசம்-தாமரை
நத்தை-ஓர் பூண்டு, கடுகு
நத்தைச்சுண்டி-நத்தைச்சூரி
நத்தைச்சூரி-ஓர் பூண்டு
நந்தப்பிலா-எருக்கு
நந்தமாலம்-புன்கமரம்
நந்தம்-புன்கு, வாழை, எருக்கு
நந்தம்-கஸ்தூரி
நந்தாமணி-உத்தாமணி, வேலிப்பருத்தி
நந்திப்பத்திரி-நந்தியாவட்டம்
நந்திப்பூசணி-சாம்பற்பூசணி
நந்தியாவட்டம்-ஓர் பூ

இதன் ரசம், கண்ணோய்க்கு உபயோகப்படுகின்றது.

நந்தியாவர்த்தம்- நந்தியா வட்டம்.
நந்த்விருட்சம்-சின்னிமரம்
நந்தை-கொத்தான் செடி
நமக்காரி-வறட்சுண்டி
நம்புலிமாம்-நாவல்மரம்
நரகனுதி-தேள் கொடுக்கி
நரந்தம்-நாரத்தை
நரந்தம்-கொற்றுன்
நரளி-கடலை
நரிகொன்றை-ஓர் மரம்.
நரிப்பயறு-மின்னி
நரிப்பாகல்-காட்டுப்பாகல்
நரிமருட்டி-கிலுகிலுப்பை
நரிமுருக்கு-ஓர் முருக்கு
நரிமிரட்டி-பேய்மிரட்டிச் செடி
நரியிலந்தை-ஓர் மரம்
நரியுடை-மொசுமொசுக்கை
நரிவாற்புல்-ஓர் புல்
நரிவிளா-நிலவிளா
நரிவெங்காயம்-ஓர் வெண்காயம்
நரைக்கொள்ளு - சீர்க்கோழி

நடுக்கட்டு- கபம், கபால சூலை, வாதபித்தமும் போம். அழகு, நடைபலம், புஷ்டியும் உண்டாம.

நண்டுக்கல்-ஐயம், நீரடைப்பு, நீரருகல் நீரொழுக்கு, பெருவயிறு, மேக வெட்டையும் போம்.

நண்டுக்குழிநீர்- காந்தல், தாகம், தேகஎரிவு, மாருத விக்கல, வாந்தியும போம.

நத்தைக்கறி- மலம்ராகம், மூலமும் போம். தாது விர்த்தி நத்தந் தின்றால் செரியாக் குணமும் உண்டாம்.

நத்தைச்சூரி-கல் போன்ற வீக்கமெல்லாம் கரைந்து போம. வியாதிகளுககுப் பல வித விருத்தமாம்.

நந்தியாவட்டப்பூ - கண் காசம், கருவிழி நோய்கள், படலம், மண்டைக் குத்தலும் போம்.

நமன் கத்துவயம்- தம்பனை யுண்டாம்.

நமிட்டுக்கறி- சமம், கரப்பான், சோகை, வாதமும் போம். எல்லாக் கறிகளுக்கு மேலாகிய உருசியாக விருக்கும்.

நரளைக்கிழங்கு- கரப்பான், புண், மூலம், மேகமும்போம்,

நரளையிலை - ஸ்திரீகள் வயிற்றில் உருளுகிற இரத்த குன்மம் போம்.

நரிக்கொன்றை மரம்- அரிப்பு, பட்டை, கிருமிப்புடை, யானைச்சொறியும் போம்.

நரிப்பயறு-கனம், குளிர்ந்தேரை, தோஷம், பித்த மஞ்சள், மாறல்சுரமும் போம்.

நரிப்பயற்றங்கொடி-ஐயம், கரப்பான், பித்தம், பித்த வெட்டை, மேகவெட்டையும் போம்.

நரிமுக்கு-சயம் போம்.

நரிவெங்காரம்- இரைப்பு, சீதகபம் நஞ்சு, மூல பகாதரமும் போம.

நருமதாநதிநீர் - ஐயம், காமாலை, கைகாலெரிவு, கோழைக்கட்டு சரமதோஷம், நீர்க்கட்டு, பொருமல், வாதம், வாந்தி, விக்கலும் போம்.

நல்லநெருஞ்சில்- அனல், கல்லடைப்பு, கிரிச்சரம், கூன்வாதம், சுரமதாகம், திரிதோஷம், நீர்க்கட்டு, நீர்ச்சுருக்கு, புண், மேக வெட்

டை, வெப்பும் போம். போக முண்டாம்.

நல்லவெல்லம்- பித்த குன்மம் போம். கோழை, மதுமேகம், மலப்புழுவும் உண்டாம்.

நல்லவேளை-ஐயம், சயித்தியம், சிரநோய், சோகை, மார்புநோய், வலி, குடைச்சல் வாதமும் போம். அச்சரம், அனல், பசி, பித்தமும் உண்டாம்.

நல்லவேளைப்பூ- கணமாந்தம், கோழை,மாந்தம், சயம், வாய்வும் போம்.

நவபாஷாணம்- கனத்த நோய்களெல்லாம் போம். சிந்தூரித்துத் தின்றால் கபமிறுதல் உண்டாம்.

நவரை வாழைப் பழம்- கரப்பான், நமைச்சல், மாந்தம், வாதகபமும் உண்டாம்.

நவச்சாரம்- கல்லடைப்பு, குடல், சூலை, குன்மம், தோலின்கவிச்சு நாற்றம், மகோதரம், முத்தோஷம், வாதமும் போம்.

நவரத்தின மணிதல்- நேத்திரரோகம்போம், சரீரகாந்த திடம் பலம் உண்டாம்.

நறுவலிப்பழம் - இரத்த பித்தம், மேகமும் போம்.

நறுவலிவேர்- எலும்புருக்கி, நாப்புண்ணும் போம்.

நற்பரிசி- அரோசி, அனல், கல்லடைப்பு, நீர்க்கடுப்பு, பயித்தியம், வாதம், வாந்தி, வெட்டையும் போம்.

நன்றாய்ச்சமைத்த துவரம் பருப்பு நெய்யோடு சாப்பிட்டால் பிடிக்குப் பிடி சதை உண்டாம்.

நன்றாய் சமையாத அன்னம்-பலம் போம். மலசலசிக்குகளும் மற்றுநாளுமுண்டால் மந்தமும் உண்டாம்.

நன்னாரிவேர்- ஸ்திரீகளாலுண்டாகுஞ் சூடு, உழலை, சலதோஷம், சுரம், தாகம், பித்தம், புண் மதுமேகமும், கற்றாழைச் சோற்றிற் கலந்துண்ண வண்டு கடியும். தேனிலரைத்து வெதுப்பியுண்ண வெறியும் போம்.

நல்ல மிளகு-மிளகு

இது நல்லதாயும் புதிதாயுமிருக்கில் ஔஷதத்துக்குப் பலவிதமாய் உபயோகப் படுத்தப்படும்.

வாந்திபேதிக்கு பங்காளத்தில் அநேக வருஷமாக கீழ்ச் சொல்லியிருக்கிற மாத்திரைகள் நன்றாய் அனுகூலப்பட்டிருக்கின்றன. நல்ல மிளகு, காயம், அபின்வகைக்கு 20-கிறெயின் இவைகளை ஒன்றாய்ச் சேரும்படி இடித்து 12-மாத்திரைகளாகப் பகுத்துருட்டி அரை அல்லது ஒரு மணி நேரத்துக் கொருதரம் ஒரு மாத்திரை வீதம் வியாதி சுகப்படுமட்டும் கொடுக்க வேண்டும். வியாதிக்காரன் தேவையான மட்டும் தண்ணீராவது கஞ்சித்தண்ணீராவது குடிக்கலாம், மேற் சொன்ன மாத்திரை பிராயமானவர்களுக்கும் அதில் பாதி மாத்திரை 7-முதல் 14-வயது வரையுள்ள வாலிப

ருக்கும் நிதானித்துக் கொடுக்க வேண்டும்.

குளிர் சுரம் அல்லது முறைக் காய்ச்சலுக்கு நல்ல மிளகு 40 கிறெயின், காயம் 20கிறெயின் கழற்சிக்காயின் பருப்பு 100-கிறெயின் இவைகளைத் தேன்விட்டு ஒன்ருக யிடித்து 3-மாத்திரை செய்து சுரம் விட்டிருக்கிற பொழுது தினம் இரண்டு அல்லது மூன்று தரம் 2-மாத்திரை வீதம் விழுங்க வேண்டும் பிராயமானவர்களுக்கு இந்தப் பிரமாணமும் குழந்தைகளுக்கு இதில் பாதியும் கொடுக்கவேண்டும். இந்த மாத்திரைகளைக் கொடுக்கு முன் எப்பொழுதும் வயிற்றை ஆமணக் கெண்ணெயாவது கொடுத்துச் சுத்தி பண்ணிக்கொள்ள வேண்டும்.

படர்தாமரைக்கு நல்ல மிளகின் தூள் 2-அவுன்சு, நெய் 4-அவின்சு இவை யிரண்டையும் நன்ரு யரைத்துத் தினந்தோறும் இரண்டு தரம் படர்தாமரையின்மேல் தன்ருய்த் தேய்க்க வேண்டும்.

மேக வெள்ளைக்கு வால் மிளகு கிடையா விட்டால் நல்ல மிளகு தேனிலரைத்து ஒரு தரத்துக்கு 10-கிறெயின் வீதம் தினம் மூன்று வேளை சாப்பிட வேண்டும். இது வால்மிளகினும் குறைந்ததாகையால் அது கிடையாத பொழுதுதான் நல்ல மிளகைக் கொடுக்கலாம்.

நரையல்லி - வெள்ளாம்பல்

நலம்-சுக்கு

நல்லவேளை-ஓர் பூண்டு, தைவேளை

நல்லவமமாள் பச்சரிசி-ஓர் பூண்டு

நவஞ்சம்-அசமதாகம்

நவாச்சாரம்-ஒரு மருந்து

இது கடைகளில் கிடைக்கும் நவாச்சாரம் சுத்தமற்றதா யிருக்கிறதினுல் அதை உள்ளுக்குக் கொடுக்கு முன் கீழ்ச் சொல்லியிருக்கிறபிரகாரம் சுத்தி செய்துக்கொள்ள வேண்டும். 2-இராத்தல் நவாச்சாரத்தைக் கொதிக்கிற தண்ணீரில் சலக்கிச் சூடுடன் வடிகட்டி ஆறின பின் ஒரு தட்டையான பாத்திரத்தில் விட்டு வெயிலில் வைத்து பின்பு காய்ந்து கட்டி உபரிப் போலாகியதை எல்லாம் உடனுடன் பேர்த்தெடுத்துக் குப்பியில் வைத்துக்கொள்ளவேண்டும். இப்படி சுத்தி செய்யப்பட்ட நவாச்சாரம் அனேக பாகங்களுக்கு உதவும்.

ஸ்திரீகள் பால் கொடுக்கும்போது அவரவர்கள் மார்பிலுண்டாகும் விப்புருதிக்கு கடை நவாச்சாரம் 2 திராம் அரைப்புட்டி பன்னீரில் கலக்கி இதில் சீலையை நனைத்து வியாதியின்மே லிட்டுவைத்து சீலையை இரவும் பகலும் அடிக்கடி மாறி மாறி நனைக்க விப்புருதி யுடைந்தபின் மார்பில் கட்டியிருக்கிறதைப் போக்குவதற்

கும் மேற்படி மருந்து உபயோகமா யிருக்கும்.

அதிக நாள்பட்ட இருமல் களுக்கும், கபம் போகாமலும் இருமலுடனேயும் இருக்கும். நெஞ்சு வலிகளுக்கும் அந்த உப்பில் 10-கிறெயின் நாட்டு அதிமதுரத்தில் சேர்த்து மூன்று நான்கு மணி நேரத்துக்கு ஒருதரம் கொடுக்க வேண்டும். மேற்படி கஷாயம் செய்கிற விதம் எப்படியென்றால்: 2-அவுன்சு குன்றி வேரை அரைப்புட்டி தண்ணீரில் 10-நிமிட நேரம் வேக வைக்க வேண்டும் இதில் ஒரு தரத்துக்கு 3-அவுன்சு வீதம் குடிக்கவேண்டும். கக்கிருமலுக்கு ஒரு தரத்துக்கு 1-முதல் 5-கிறெயின் வரை அதற்குச் சமன் கறுவாய்த் தூளைக் கூட்டி குழந்தையின் வயசுபோல் நிதானித்துக் கொடுக்கில் மிகுந்த பலனைத் தரும்.

நுரையீரல் இரைக்குடல் மற்றெந்த உள்ளுருப்பில் நின்றுவது இரத்தம் போனால் 2-திராம் நவாச்சாரம் அரிசிக் கஷாயம் அறைப்புட்டியில் கலக்கி வியாதியின் கடினம் போல் 2-அல்லது 3-மணி நேரத்துக்கு ஒரு தரம் ஒன்றரை அவுன்சு வீதம் கொடுத்து வியாதிக்காரனைக் குளிர்ச்சியாகவும் அமைதியாகவும் படுக்கவைத்திருக்க வேண்டும். முக்கியமாய் குளிர் சுரத்தையாவது மற்றெந்த சுரத்தையாவது தொடர்ந்துவரும் நீர்க்கோவைக்கு நவாசாரத்தை தினம் 3-கிறெயின் வீதம் நன்னாரி வேர் கஷாயம் 2-அவுன்சில் சேர்த்துக் கொடுக்க வேண்டும். கழுத்து முதலான ஸ்தலங்கள் விசை நரம்புகளிலுண்டாகும் கட்டிகளுக்கும் மேற்சொன்ன பிரமாணம் உள்ளுக்குக் கொடுக்கலாம்.

முகத்தில் ஒரு ஸ்தலத்திலாவது அதின் ஒரு பக்கத்திலாவது முக்கியமாய் சீதளத்தினாலும் வாதசப்பந்தத்தினாலுண்டாகும் முக வலிக்கு நவாச்சாரம் பிரயோசனமுள்ளதா யிருக்கிறது. சுத்தி செய்த நவாச்சாரம் 20-கிறெயின் 2-அவுன்சு சுடுநீரிற் கலக்கிக்கொண்டு நாலுமணி நேரத்திற் கொருதரங் கொடுக்க வேண்டும். இப்படி நான்குதரங் கொடுத்தபின் வலி நிற்காவிட்டால் அதைப் பின்னுங் கொடுக்கிறது பலனில்லாததால் நிறுத்திவிட வேண்டும்.

நசிவுகள், கருக்குகள், நாள்பட்ட கட்டிகள், வாதவீக்கங்கள், விசை நரம்பிலுண்டாகும் வீக்கங்கள், மூட்டு வீக்கங்கள், அரையாப்புக் கட்டிகள், பயங்கரமான விப்புருதிகள், பருக்கள் இவைகளுக்கெல்லாம் மேற்படி உப்பைக் கடையில் வாங்கினபடி சுடுதண்ணீரிற் கலக்கி வியாதியின்மேலிட்டு அடிக்கடி நனைத்தால் வலியை நீக்கி வீக்கத்தைக் குறைத்து சவுக்கியப்படுத்தும். தேகத்தின் எந்தப் பக்கத்திலாவது

தோலின்மேல் வலியும் சூடும் சிவப்பு நிறமு முண்டாகில் இரத்தச்சுரப்பென்று பெயர். இதற்கு அரைபுட்டி நவாச்சாரத்தை 1-புட்டி தண்ணீரில் சலக்கியிடில் வலி, சூடு முதலானதைத் தணிக்கும். பன்னீர் கிடைக்குமாகில் சுத்த சலத்தைப் பார்க்கிலும் அதிக உத்தமம்.

நவதி-படுதலை

நவஞ்சம்-அசமதாகம்

நவம்-சாறணை

நவ்வல்-நாவல்

நளத்தம்-சடாமஞ்சி

நளம்-தாமரை

நறவம்-அனிச்சம், குங்குமம், ஞாழல், தேன்

நறகு - குங்குமமரம், தேன், கள், குங்குமம்

நறளை-ஓர் கொடி

அவை: சிறுநறளை, பெருநறளை, புளிநறளை, யானைத்தடிப்பு.

நறிவெங்காய்-ஓர் வெங்காயம்

நறு-கள், தேன்

நமருப்பு-இஞ்சி

நறுவிலி, நறுவுளி-ஓர் மரம்

இந்த மரத்தின் பட்டையால் மைசூர் தேசத்தில் கப்பல் கயிறுகள் செய்யப்படுகிறது.

சிறுநறுவிலி-ஓர் மரம்

நறை-கள்

நற்சீரகம்-கருஞ்சீரகம்

நற்பலம்-வெட்பாலை

நற்பிரியம்-பற்பாடகம்

நற்றுளி-அத்திமரம்

நனந்தம்-புன்கு

நனை-கள்

நனையாவிருட்டி - கொட்டைப்பால்

நன்பன்-சணல்

நன்னாரி- ஓர் மருந்துபூண்டு, நன்னாரி புற்கொடி

நன்னாரிவேர்-ஓர் வேர்

நன்னாரிவேர் - பறித்தவுடன் 4-அவுன்ஸ் எடுத்துச் சதைத்து 1 - புட்டி கொதிக்கிற தண்ணீரிலிட்டு 2-மணி நேரம் மூடிவைத்துப் பின்பு வடிகட்டவும் பிராயமானவர்களுக்கு ஒரு நேரத்துக்கு 3-அவுன்ஸ் வீதம் தினம் 3-நேரங் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு ஒரு நேரத்துக்கு ஒன்றரை அவுன்சு வீதம் கொடுக்கலாம். இதில் பஞ்சதாரையும் பாலுஞ் சேர்த்துச் சூட்டுடன் குடித்தால் சாரம் அதிகப்படுவதுமின்றி இன்பமான உருசியுள்ளதால் அதைக் குழந்தைகள் உடனே குடிக்கும் ஏது காரணத்தாலாவது வரும் பலவீனம் மாறி பெலப்படுவதற்கு இது மிகுந்த உபயோகமாயிருக்கிறதுந் தவிர தேகம் வெளிறி பலக்குறைவாயிருக்குங் குழந்தைகளுக்கும் சுகத்தைக் கொடுக்கும். மேகவியாதிகள் பருக்கள் தொலிவியாதிகள், அசீரணம், பசியின்மை, நெடுநாளாய்ச் சென்ற வாதம் இவைகளுக்கெல்லாம் மிகுந்த பிரயோசனமுள்ள ஔஷதமாயிருக்கின்றதுந் தவிர அது சாதாரணமாய் வழங்கப்பட்ட ஒரு நேர்த்தியான பலன் கொடுக்கிற மருந்தாயிருக்கின்றது.

நா

நாகெந்தி - வஞ்சிக்கொடி, நேர்வாளம்
நாகணம்-நேர்வாளம்
நாகதாளி-ஓர் பூண்டு
நாகதாளிகள்ளி-ஓர் கள்ளி
இது சில வருஷங்களுக்கு முன் 'கெபடியன் நீலம்' என்பவரால் தென் அமெரிக்கா தேசத்திலிருந்துக் கொண்டுவந்து பயிர் செய்வித்ததாக விருக்கின்றது.
நாகதொதி-நேர்வாளம்
நாகதேனி-பெருமருந்து
நாகமல்லி- நாகமல்லிகை அனிச்சம்
நாகமல்லி-ஓர் வேர்
புதுசாய் வெட்டிய இந்த வேரைச் சிதைத்து எலுமிச்சம் பழரசத்தோடு சேர்த்து படர்தாமரைக்கும் தோலைப் பற்றி வந்த சொறி சிரங்குக்கும் பூசினால் வியாதி நீங்கும்படியான மேலான பூச்சு மருந்தாக உபயோகப்படுகின்றது.
நாகம்-ஓர் பஞ்சலோகக் காரீயம்
நாமூல்-புன்னைமரம்
நாகரங்கம்-தென்ரோடை
நாகரம்-சுக்கு
நாகரி-குருக்கத்தி
நாகருடப்பூண்டு - கீரிப்பூண்டு
நாகரு-குருக்கத்தி
நாகரேணு-செவ்வியம்
நாகரை-ஓர் பூண்டு
நாகவல்லி-வெற்றிலை
நாகவள்ளி-ஓர் வெற்றிலைக் கொடி
நாகினி-வஞ்சிக்கொடி, வெற்றிலை.
நாகுலி- அரத்தைகிரி, புரண்டான்பூ
நாகேசுரம்-ஓர் செடி
நாக்குழிஞ்சான்-ஓர் செடி
நாசுகம்-பீர்க்கு
நாடி - அசாத்தியநாடி, சாத்தியநாடி, வாதநாடி, பித்தநாடி, சிலேஷ்மநாடி, தசநாடி.
நாட்டுசவுக்காரம்-ஓர் சவுக்காரம், வைத்தியர் இதை குன்ம வியாதிக்குச் சேர்க்கப்பட்ட மருந்தில் சேர்க்கிறார்கள்.
நாட்டுவாதுமைக்கொட்டை- ஓர் வாதுமைக்கொட்டை.
இது வைத்தியரால் பல வீனமான பேருக்கு இலேசான ஆகாரமா யோசிக்கிறார்கள்.
நாணல்-ஓர் புல்
நாணமுகப்புல்-ஓர் புல்
நாதவத்தம்- பெருநெருஞ்சில்
நாதேரம்-இந்துப்பு, வஞ்சிக் கொடி, சீந்தில்.
நாதேனி-மணித்தக்காளி
நாபி-ஓர் விஷமூலிகை
அவை: வச்சநாபி, பச்சைநாபி, வசம்பு.
நாபியின் ஜாதி விவரம்: 1-பிரமநாபி, 2-அந்தணநாபி, 3-சத்திரியநாபி, 4-அரசநாபி, 5-வைசியநாபி, 6-சூத்திர நாபி.
நாபியின் நிறங்கள்: அந்தணநாபி- வெண்மை, சத்திரியநாபி - செகப்பு, வைசியநாபி-நீலம், சூத்திர நாபி - கறுப்பு.
நாமம்-திருமணதும்பை
நாமவந்தம்-பெருநெருஞ்சில்

நாமவெகுண்டம் - ஒரு பூண்டு

நாகணம்- உகரரோகம், சோகை, தலைகுத்தல், தலை பிடிப்பு, தலைவலி, நீரேற்றம், மலட்டுநோய், விழிநோயும் போம்.

நாகதாளிசெடி- விஷங்கள் செந்து விஷங்கள், வாதமும் போம்.

நாகமல்லி- அதிசாரம், இரத்தமூலம், குஷ்டம், குரல் கம்மல், சுவாசகாசம், சூடு, தேள்விஷம், நீரிழிவு, பிரமியம், புகைச்சல், மதமூர்ச்சை, மேகம், வண்டு விஷம், விந்து நஷ்டமும் போம்.

நாகம- இருமல், ஈளை, கிரந்தி, சுவாசகாசம், சூலை, மந்தாரகாசம், மூலரோகம், வரட்காசங்களும் போம்.

நாட்சென்ற காடித்தெளிவுநீர்-அதிசாரம், அரோசி, கிராணி, நாடி நிமிரல், பித்தமும் போம். வேரணவுடல் தெளிவு உண்டாம்.

நாட்டுக் கருவாழை - திரிதோஷம் போம்.

நாட்டுக் கருவாழைக்கிழங்கு- சுரம் உணடாம்.

நாணல் - துன்மாங்கிஷம் போம்.

நாணற் கரும்பு- அதிதூல நோய், ஈளை, பாண்டு, பித்தம், வயிற்றுளி நோய், வாந்தி, வாய்வும் போம்.

நாயுருவியிலை -கபம், தந்தி மேகம, பேதி, மந்தம், மூல உதிரம, வியர்வும போம்.

நாயுருவிரை-பசி போம்.

நாயுருவி சமூலம் - மாதர் சூதக அழுக்கு போம். வங்க சிந்தூரம் உண்டாம்.

நாயுருவிவேர்- வசிய முண்டாம்.

நாய்கடுகு - உதிரவாதம், குன்மம், சூதகவாய்வு, வாத வலியும், பேய்க்குப் புகையும் போடப் போம், மலக்கட்டு உண்டாம்.

நாய்த்துளசி- அழல், கபம், குத்திருமல், முத்தோஷமும் போம். உடற்குப் பொழிப்பு உண்டாம்.

நாய்ப்பாகல்- பீநசம் போம்; சாதிலிங்க சுத்தி, பாஷாண சுத்தியும் உண்டாம்.

நாய்வேளை - உடற்கடுப்பு, காதிரைச்சல், சூலை, பீநசம் வாதமும போம். மலக்கட்டு உண்டாம்.

நாரத்தங்கச்சல்- அரோசி எரிப்புழு, சீதம், வயிற்றுப் பொருமலும் போம், தாது தீபனமும் உண்டாம்.

நாரத்தங்காய்- குன்மம், வாதம், வலுவுள்ள புழுவும் போம். தீபனம் தேகசுத்தியும் உண்டாம்.

நாரத்தம்பழம்- பித்த குன்மம் போம். தாது தீபனமும் உண்டாம்.

நாருவடி-சந்நி, சளி, நீரேற்றம், வாய்வு போம். தேக சுத்தி உண்டாம்.

நாலைறக்கறி-நீரிழிவுபோம்.

நாறு கரப்பான், புண்மேகம், வாதமும் உண்டாம்.

நாரைப்பசும்பால் - முயல் நோய் போம்.

நாபிலூறும் நீர்-அதிசாரம், மேகமும் போம்; ஐயம சீதம், பலம் ஈந்தம், விநது, வெப்பும் உண்டாம்.
நாவல்-ஓர் மரம்
அவை: குழிநாவல், சிறுநாவல், ஜம்புநாவல், நிழல் நாவல், பெருநாவல்.
நாவல்பட்டை-ஓர் மரப்பட்டை
இந்தப் பட்டையின் கஷாயம் சுதேச வைத்தியர் வயிற்றுக் கழிச்சலுக்கு உபயோகப் படுத்துகிறார்கள். கெட்டப் புண்களை இதனால் சுத்திகரிப்புச் செய்யப்படுகின்றது.
நாவல்பட்டை- காசம், சுவாசம், பாலகர் கிரகதோஷம் பெரும்பாடு, பிறவிமறு, மச்ச பேதங்கள், வாய்நோய் போம்.
நாவல் பழம் - கடுப்பு, கொதிப்பு, தாகம், நீரிழிவு, வாய்வும் போம்; ஐயம், கரப்பான், மாந்தமும் உண்டாம்.
நாவல்பூ-கமல விரணம், நீரிழிவு, மேகமும் போம், மலக்கட்டு உண்டாம.
நாவல்வித்து- கிராணி, நீரிழிவு, மூலச் சூட்டின் கிராணி போம்.
நாவல்வேர்-கரப்பான், சீதரத்தம், சுரம், நீரிழிவு, மேகம், வாதம், விரணமும் போம்.
நாவி-கபம், சூடு, குன்மம், தேள்விஷம், நீரிழிவு, மந்தம், வாதவலியும் போம்; சுத்தி செய்ய வேண்டியது.
நாயகம் - தலைமை, கிரந்தி நாயகப்பூண்டு, சன்னிநாயகப்பூண்டு.

நாய்நஞ்சி-நாயுருவி
நாயிறுதிருப்பி, நாயிறு வணங்கி- பொழுதுவணங்கி
நாயுருவிவேர்-ஓர் வேர்
சில வயிற்றுளைவு வியாதிக்குச் சுதேச வைத்தியர் மருந்தாகக் கொடுக்கிறார்கள்.
நாய்க்குருவி-நாயுருவி
நாய்க்கடுகு-ஓர் பூண்டு
நாய்க்கரந்தை-குன்றி
நாய்ச்சீரகம்-ஓர் பூண்டு
நாய்த்துளசி-ஓர் பூண்டு, கஞ்சாங்கோரை.
நாய்நாக்கு-இலைக்கள்ளி
நாய்ப்பயறு-ஓர் பூண்டு
நாய்ப்பாகல்-ஓர் பூண்டு
நாய்ப்புடுக்கன்-ஒரு வகை மரம
நாய்ப்புடோல்- ஒரு வகைப் பூண்டு
நாய்வேம்பு-ஓர் பூண்டு
நாய்வேளை- ஓர் பூண்டு, நாய்க்கடுகு
நாய்க்கடுகு-ஓர் பூண்டு
நாரங்கம்-நாரத்தை, தோன்றேடை
நாரத்தை, நார்த்தை - ஓர் மரம்
நராம்-நாரத்தை, பாசி
நாராயணம்-அரசமரம்
நாராயணி - தண்ணீர்விட்டான் கிழங்கு
நாரிகேளம்-தென்னை
நாலி-கார்த்திகைப்பூ
நாவிவசநாவி-ஊமத்தை
நாவித்தண்டை-பீநாறி
நாவியம்-கார்த்திகைப்பூ
நாளகம்-இலாமச்சை
நாளிசம்-வள்ளைச்செடி
நாளினி-புளிப்புள்ள மாமரம்

நாறனு-சடைச்சிச்செடி
நார்ஞு-சடைச்சி
நாறி-கற்றுழை
நாற்றம்-வசம்பு, கள்ளி

நி

நிகாவா-பிரமி
நிகும்பம்-நேர்வாளம்
நிக்குரோதம்-காட்டாமணக்கு
நிகாசம்-வெள்ளாம்பல்
நிசாடு-மஞ்சள்
நிசாயிசா-மரமஞ்சள்
நிசாபுட்பம்-செவ்வாம்பல்
நிசி-மஞ்சள்
நிசளம்-நீர்க்கடம்பு
நிச்சுள்-தாளி
நிச்சயம்-வெள்ளைப்பூண்டு
நிட்பவம்-மொச்சைப்பயறு
நிதகம்-நீர்முள்ளி
நிதிந்திகம்-கண்டங்கத்திரி
நிதந்றம்-கண்டங்கத்திரி
நிதலம்-நொச்சி
நிமிளை-பஞ்சலோகத்தொன்று, இரசத நிமிளை, வெள்ளி நிமிளை, செம்பல நிமிளை, கருநிமிளை, கருமா நிமிளை
பொன்னிமிளை-சத்துநாதம்
லோகநிமிளை-துருச்சி
நிம்பமசதம்-முடக்கற்றான்
நிம்பம்-வேம்பு
நியக்குரோதம்-ஆல்
நியாசம்-வேம்பு
நியாதம்-வேம்பு
நிரயமியபுட்பம்-வாழை
நிர்க்குண்டி-நொச்சி
நிலஆவரை-நிலவாவரைக்[கு]
நிலகடம்பு-ஒருவகை பூண்[டு]
நிலகுமிழ்-ஒருவகை செடி
நிலகண்டை-ஒருவகைப் பூண்டு
நிலபிரண்டை-ஒருவகைபூண்[டு]

நிலத்துளசி - ஒரு வகைப் பூண்டு
நிலப்பனை - ஒரு வகைப் பூண்டு
நிலப்பாலை - ஒரு வகைப் பூண்டு
நிலம்-ஒருவகைப்பூண்டு [ளி
நிலம்கள்ளி-பூமி நிலம்பு, தா
நிலவரை-ஆவிரை, நிலப்பாகல்

லைகளில் கிடைக்கும் நிலவாரை மிகவும் தாழ்ந்த ரகக் காயும், பழம், இலை, காம்புகள் முதலிய குப்பைகள் உள்ளதாயும் இருக்கின்றது. இந்தியாவில் முக்கியமாய் திருநெல்வேலி நாட்டில் வளரப்பட்ட இலை அரபி தேசத்திலிருந்து வருகிற சென்னாமக்கி அல்லது வக்காசென்னா என்னும் நிலவாரையிலும் விசேஷம். இலை முழுமையாயும் சுத்தமாயும் முறியத்தக்கதாயும் வெளிறிய பச்சை அல்லது மஞ்சள் நிறமாயும் கடின வாடையுள்ளதாயும் இருக்க வேண்டும். அது பேதிக்கு மிகவும் நல்ல ஔஷதம். கொடுக்க வேண்டிய முறையாவது: நிலவாரை 1-அவுன்ஸ், சுக்கு, கிராம்பு இவைகளை அரைப் புட்டி கொதிக்கிற தண்ணீரில் விட்டு ஒருமணி நேரம் வைத்திருந்து பின்பு வடிகட்டவும்; இதில் ஒரு நேரத்துக்கு 4-அல்லது 5-அவுன்ஸ் வீதம் கொடுக்கில் எல்லா மலபந்தங்களையும் நீக்கும். குழந்தைகளுக்கு மேற்சொன்ன

அளவில் பாதியாவது அதி லும் குறைந்தாவது கொடுக் கவும். இதைப் பார்க்கிலும் குழந்தைகளுக்கு ஆமணக் கெண்ணெய் உத்தமம்.

நிலவிழுது-நிலப்பனை

நிலாவிலா-ஒருவகைச் செடி

நிலவுமாரி- ஒரு வகைப் பூண்டு

நிலவேம்பு- ஒருவகை மருந்துப்பூண்டு. கிரியாத்துவேர் என்பதன்கீழ் பார்க்க.

நிலாவிரை-ஒருவகைப் பூண்டு

நிறைதருதாரு-சீந்தில்

நின்றுசிணுங்கி- சிறியா நங்கை

நித்திய அட்பியங்கனம் - அருசி, ஐயம், சோம்பல், தந்தநோய், முத்தோஷமும் போம். தோல் மினுமினைப்பு, புஷ்டியுமுண்டாம்.

நித்திரை செய்வதின் குணம்- இந்திரிய அசௌக்கி யம், அயர்வு போம். ஆயுள் விர்த்தி, மனமுற்சாக முண் டாம்.

நிமினை வகை 4-க்கும்- ஜன்னி ருட்சைதோஷம், மேகமும்போம். ஞாதுபுத்தி விவேகமுண்டாம்.

நிம்பவித்து-சர்த்தி, பித் தம். விக்கலும்போம், அறிவு குளிர்ச்சியுமுண்டாம்.

நிலா ஆவாரை- ஐயம், கிர ந்தி, குன்மம், சொரி, தேமல், மலக்கட்டு மூல வாய்வு. வெப்பம் போம், பேதியுண் டாம்.

நிலக்கடம்பு- ஆசிரணம், இரணம், கிருமி, ஜன்னி, நேத்திரநோய், பலவிஷம், மண்டையிலுண்டாகும் நீரும் போம்.

நிலக்குமிள்-கண் சோரு தல், கல்லடைப்பு, கொட் டாவி, சீதளம், பேதி, மாந் தம், வாதவலியும் போம். தாது திரேகக் குளிர்ச்சியு முண்டாம், கெர்ப்பம் வெளி யாகும்.

நிலக்குராம்-சர்த்திபோம்

நீ

நீட்டினவிரல் குறித்தான் - கிரந்திநாயகம்

நீக்கம்-தண்ணீர்விட்டான்

நீ ம்-கவண்கடம்பு

நீரடி அல்லது நீரெட்டி முத்து-ஒரு மருந்து வகை விதை.

நீரடைப்பு-ஒருவகை நோய்

நீரத்தி-ஒருவகை மரம்

நீரலறி-ஒருவகை நீர்ப்பூண்டு

நீராரை, நீருளாரை- ஓர் பூண்டு.

[கிழங்கு

நீருதிபாசம்-கடற்பாசி

நீரெரிப்பு-ஓர் நோய்

நீரொட்டி-நீராரை

நீரோகம்-தாமரை

நீர்சலம்-தண்ணீர்

அவை: இளநீர். உமிழ் நீர், நடிநீர். குளிநீர். சிறு நீர், தென்னீர். சீநீர், சுவேத நீர், ஜெயநீர். சுண்ணும்பும் நவாச்சாரமுங் கலந்து பனி யில் வைத்திறக்கிய நீரென்ப தாம்.

தண்ணீர்

இது ஒரு எடை மருந்தல் லா திருக்கினும் எல்லாத் தேசங்களிலும் கிடைக்கப் பட்டதா யிருப்பதால் அதின்

ஔஷதப் பிரயோகங்களில் சிலவற்றைக் காட்டுகின்றோம்.

ஒரு பிராயமான சனிசனுக்கு சன்னியாவது சன்னிவலியாவது தளர்ச்சியாவது அறிவுகேடாவது அசதி சன்னியாவது உண்டாயிருப்பதற்கும், சூரியனுடைய காந்தி கொண்டு மூர்ச்சையடைந்து விழுந்து போவதற்கும் இரண்டு மூன்று அல்லது பெரிய சட்டிகளில் அதிக குளிர்ச்சியான சலத்தைத் தயார்செய்து வைத்துக்கொண்டு வியாதிக்காரனுடைய தலையின் பேலும் தோள்மேலு மிருக்கிற சீலைகளை எடுத்துவிட்டுத் தலையின் மேலுள்ள உரோமத்தைச் சவரம் பண்ணுவது உத்தமமானதால் அப்படி செய்வித்து அவனை உட்காரவைத்து ஒருவன் அவனைப் பிடித்துக் கொள்ள வேண்டும். மற்றொருவன் ஒரு உயர்ந்த நாற்காலி அல்லது திண்ணையின் மேலேறி சட்டிகளி லிருக்கும் குளிர்ந்த சலத்தை நோயாளியின் தலையின்மேலும் முதுகின் மேலும் பெருந் தாரையாய் விடவேண்டும். ஒன்றிரண்டு நிமிடநேரங் கழித்த பின்பு வியாதிக்காரன் பெருமூச்சு விடும்பொழுது தாரையை நிறுத்தி ஈரமில்லாத இடத்தில் மாற்றி அனலில் வெதுப்பிய சீலையால் தேகத்தை துடைத்து கை, தோள், கால் முதலிய பக்கங்களைச் சூடுண்டாகும்படி தேய்க்க வேண்டும். சுவரணைகேடு மிகுதியா யுண்டாயிருக்கில் பாதங்களிலும் கெண்டைச் சதைகளிலும் கடுகு போல்ட்டீசை வைத்துக் கட்டவேண்டும். சவுக்கியமாகிக் கொஞ்ச நேரமான பின்பு மறுபடியும் சன்னிவலி சுவரணை கேடுமாகில் முன் செய்தது போல் தலையிலும் முதுகிலும் சலத்தைவிட வேண்டும். சலம் அவ்வளவையும் ஒருதரமாய் விடாமலும் தலையின் மேல் விசையாய் விடும்படி ஊற்றுமலும் சிறுதாரையாய் தொடர்ந்து விடவேண்டும். வியாதிக்காரனுக்கு உணர்ச்சியுண்டான பின்பு தாரையிடக்கூடாது. ஆனால் இப்படி செய்வது மிகுதியாய் வயது சென்றவர்க்கும் பலட்சயமுள்ளவர்களுக்குந் தக்கதல்ல பிணியாளி பெண்ணையிருந்து அவளுக்கு மேற்படி சன்னிவலி முக்கியமாய்ச் சிரிப்பும் அழுகையும் கூடியிருந்தால் சலத்தைத் தலையின்மேல் முன் சொன்ன பரிகாரம் உயரத்தில் நின்று விடுகிறதைப் பார்க்கிலும் கைநிறையத் தண்ணீரைக் கோரி முகத்திலும் மார்பிலும் உறைப்பா யடிக்கவும். இவ்விதமாய் மூன்று நான்கு நேரஞ்செய்தால் சன்னியை நிறுத்தும், சலத்தை மெல்லெனத் தெளிக்காமல் சற்றே உறைப்பாயடிக்கவும். சன்னிவலியுண்டாயிருக்கிற ஸ்திரீகளுக்குச் சூதகம் இருக்கிற

பொழுது மேற்சொன்னபடி குளிர்ந்த சலத்தைப் பிரயோகிக்கக்கூடாது

சிசுக்களுக்கும் சிறுபிள்ளைகளுக்கும் வருகிற சன்னி வலிக்கு சலப்பிரயோகத்தை வேறுவிதமாய்ச் செய்யலாம். சன்னி ஆரம்பித்தவுடன் ஒரு பரந்த சட்டியாவது தொட்டியாவது நிறை சகிக்கத்தக்கதான சுடுநீரை விட்டு அதில் குழந்தையின் தேக முழுதையும் தாழ்த்தித் தலையை நிமிர்த்திவைத்து அதின் மேல் குளிர்ந்த ஜலத்தில் நனைந்த சீலையை இட்டு வைக்கவேண்டும். தேகம் சுடு தண்ணீரிலிருக்கும் பொழுது தலைமேல் குளிர்ந்த ஜலத்தில் நனைத்த சீலையை வைப்பதினால் சன்னி வலியை நிறுத்தும். ஆனால் உடனே ஒரு பேதிக்கு ஆமணக்கெண்ணெய் கொடுப்பது நலம். குழந்தையை 5 முதல் 10-நிமிட நேரம் வரை சுடு தண்ணீரில் வைத்திருக்க வேண்டும்; அப்போது தலையில் குளிர்ந்த ஜலமுள்ள சீலையை மாத்திரம் சில மணி வரை எடுக்காமல் வைத்திருக்கவேண்டும். இந்தக் கிரியைத் தினந்தோறும் மூன்று நாலுதரம் சன்னி மறுபடியும் வரும் போதெல்லாம் செய்யலாம். பின்பு கால்களில் கடுகு போல்ட்டிசை சிறிதாய்ச் செய்து வைத்து 5-நிமிட நேரஞ் சென்றபின் எடுத்து விடவும்; தாமதியாமல் வயிற்றை நன்ருய்ச் சுத்தி பண்ணுவதும் பெரிய காரியம். குழந்தைகளைச் சுடு தண்ணீரில் குளிப்பிக்கிறது அவர்களுக்கு வரும் வயிற்றுவலியைச் சாந்தி பண்ணுதலுக்கு உபயோகமா யிருக்கும்.

வாந்திபேதிக்கு குளிர்ந்த சலம் மிகுந்த சிரேஷ்டமானதா யிருக்கின்றது. நோயாளி வேறே எந்த ஔஷதம் உட்கொண்டு வருகிலும் குளிர்ந்த சலத்தை தேவையான மட்டும் எப்பொழுதும் குடிக்கக் கொடுக்கலாம். நோயாளிக்குத் தாக மிருக்கும்பொழுது தண்ணீர் அதிகமாய்க் கொடுக்கப்படாதென்று கட்டுப்பாடு செய்கிறது மிகுந்த கெட்ட வழக்கமா யிருக்கிறது. சலம் எவ்வளவு குளிர்ச்சியா யிருக்கிறதோ அவ்வளவு நலம். வியாதிக்காரன் அவன் மனம்போலே தேவையான மட்டும் குடிக்கும்படியாய் அவன் பக்கத்தில் ஒரு சட்டியில் சலம் வைத்திருக்கவேண்டும். இப்படிக் குடிக்கும்படி செய்வது மற்ற மருந்துகளின் தொழில்களுக்கு உதவி செய்வதுமன்றி வாந்தியினுலும் பேதியினுலும் போய்விடுகிற சலத்துக்குப் பதிலாக சரீரத்தில் சேரும்படி செல்லுகின்றது.

பிரசவமான பின்பு மிகுதியான இரத்தப் பாய்ச்சல் உண்டாகில் உடனே அதிக குளிர்ச்சியான சலத்தை வயிறு அடிவயிறு முதலிய தலங்களின்மேல் சற்றே உயர்த்தி விட்டு ஒரு மெல்

லிய சீலைத்துண்டை குளிர்ந்த சலத்தில் நன்றாய் நனைத்து உபஸ்தத்தினுள் செலுத்தி வைக்க வேண்டும். மேற்படி சீலையை அடிக்கடி மாற்றி இடுகிறது மன்றி அதைச் சுருட்டுகிறது வாழைப்பூ போன்ற மாதிரியிலிருக்க வேண்டும். காடி அசராயிருக்குமாகில் அதில் ஒரு பங்கு சலத்தில் ஒரு பங்குஞ் சேர்த்து தனிச் சலத்துக்குப் பதிலாக எடுத்துக் கொள்ளலாம். இவை இரண்டுங் கூடிய மட்டுங் குளிர்ச்சியாயிருக்க வேண்டும்; மேற்சொன்ன இரத்தப் பாய்ச்சல் நின்ற பின்பு சீலையைச் சலத்திலாவது காடி கலந்த சலத்திலாவது நனைத்து அடியையிற்றின்மேல் இடுவது நல்லதாயிருக்கின்றது. பிரசவ சமயங்களில் எப்பொழுதும் இரண்டு மூன்று சட்டிகள் நிறைய குளிர்ந்தசலம் பக்கத்தில் வைத்திருக்க வேண்டும் இப்படிச் செய்யாவிட்டால் கிணறு அல்லது ஆற்றிலிருந்து சலத்தைக் கொண்டுவர அப்போது தாமதிப்பட்டு இரத்தம் ஏற்றமாய்ப் போய் வியாதிக்காரி மாண மடைவதற்கு ஏதுவாம். ஆகிலும் இரத்தம் கிரமமாய் அல்லது சற்று மிகுதியாய் போவதற்கு இவ்விதக் குளிர்ச்சியான பிரயோகங்களைச் செய்யாமலிருக்கும்படி ஞாபகமாயிருக்கவேண்டும்.

பக்கப் பிளவைகளுக்கும் தசையழுகிய புண்களுக்கும் கீழ்ச் சொல்லியிருக்கிறபடி சலத்தை விடுவது மிகுந்த உபயோகமாயிருக்கும். வியாதிக்காரனின் மனம் போல் குளிர்ந்த சலமாவது வெந்நீராவது இரண்டு மூன்று சட்டிகள் நிறைய எடுத்து வைத்துக்கொண்டு அதை ஒரு செம்பிலாவது கெண்டியிலாவது எடுத்துப் புண்ணின் மேல் தொடர்ந்த தாரையாய் விடவேண்டும். இப்படி தினந்தோறும் இரண்டுதரஞ் செய்ய வேண்டும். இதனால் மிகுந்த அசறு எடுக்கப்படுகிறதுமன்றி சில நாளானவுடன் புண் சவுக்கியப்பட ஆரம்பிக்கும். புண் காலிலாவது கையிலாவது இருக்குமாகில் நோயாளி தான் தானே சலத்தை விட்டுக்கொள்ளலாம். முதுகிலாவது கழுத்திலாவது உண்டாயிருக்கில் வேறே மனிதனைக் கொண்டு செய்விக்க வேண்டும். சலத்தைப் புண்ணின் மேல் ஒன்றிரண்டு அடி உயரத்தில் நின்று விட வேண்டும். அசறுமுற்றும் நீங்கி புண் சிவப்பாயும் சவுக்கியமாகிற லட்சண முடையதாயும் காணும் பொழுது சலத்தை நிறுத்தி புண்களில் மெழுகு பிளாஸ்திரியை இட வேண்டும். சலம் விடுகிறது குறைந்தது ஒரு மணி நேரம் வரையும் வேண்டும். இடை நேரங்களில் கள் சேர்ந்த போல்ட்டிசை வைத்துக் கட்டவும்.

மூத்திரம் போகாமல்தடை பட்டிருக்கிறதற்கு சீலையைச் சுடுதண்ணீரில் தோய்த்து வியாதிக்காரன்சகிக்கத்தக்க தான சூட்டுடனே வயிற்றின் மேலும் அடிவயிற்றின் மேலும் இட்டு ஆறிப்போகிற பொழுதெல்லாம வேறே ஒரு சீலையைத் சுடுதண்ணீரில் தோய்த்து இப்படி அடிக்கடி மாறி மாறி இடவேண்டும். இனியொரு பிரயோகம் எப்படியென்றால்: ஒரு தொட்டியாவது பரந்திருக்கப்பட்ட பெருஞ்சட்டியாவது கிடைக்குமாகில் அதில் சுடுதண்ணீரைவிட்டு நோயாளியைப் பத்து அல்லது இருபது நமிஷ நேரம் உட்கார வைததிருக்க வேண்டும். இப்படிச் செய்தால் மூத்திரம உடனே போகும்.

தொனி சூடாய் வரண்டும் வாயுலர்ந்தும், தாகம் அதிகமாயும இவ்விதமான இலட்சணங்களுடன் இருக்கும் சுரங்களுக்கெல்லாம் நோயாளி அரிசிமாவைக் குளிர்ந்த சலத்தில் கலக்கியாவது எலுமிச்சஞ் சாறுவது செழிப்பாயக் குடிக்க வேண்டும். அப்பொழுது நன்றுய்க் குளிர்ந்திருக்கும் சலதத்துல் மதயலை அடிககடி நினைத்து வைததிருகக வேண்டும.

வைசூரி கிச்சிலுப்பை என்னப்பட்ட சிறு வைசூரி முதலிய வெடிக்குஞ் சுரங்களுக்குத் தண்ணீரைத் தேவையான மட்டும குடிக்கக் கொடுக்கிறது மன்றி, வெநநீரிலாவது ஒருபங்கு காடியும் மூன்று பங்கு சலமும கலந்த நீரிலாவது மெல்லிய சீலை அல்லது கடற்காளானை நனைத்து தேகம் முழுவதும் பதமாய்க் கழுவுகின்றது. மிகுந்த சாந்தமும் சவுக்கியமு முள்ளதாயிருக்கின்றது. வியாதிக்காரனுக்கு வெந்நீரை விட குளிர்ந்த சலத்தை எடுததுக் கொள்ள வேண்டும். இவ்விதமாய் தினந்தோறும் 1-அல்லது 2 தரம் தாராளமாய்ச் செய்யலாம்.

தொண்டைப் புண்களுக்கு சுடுதண்ணீரின ஆவியை உள்ளுக்கு சுவாசம வாங்கினுல் அதிக குண முண்டாகும். ஆனுல் சளித் தன்மையுள்ள வெணடைக்காய்களில் 12-அல்லது அதலதிக மெநித்துத் துண்டுகள் செய்து சலத்தல் வேக வைத்து அந்தச் சலத்தில் ஆவியை சுவாசம் வாங்கினுல் பலனதிகரிக்கும். மேற்படி சலத்தை வாய சுருங்கின பாத்திரத்தில் விட்டு அதனுவி தொண்டையினுள் நன்றுய்ச் செல்லும்படி வாயை பாத்திரத்தின வாயின்மேல் அழுத்து வைத்துச் செய்ய வேண்டும்.

சுடுதண்ணீர் ஒற்றிடம் புதிய விப்புருதிகள், பருக்கள், சுருக்கு, குன்மவாய்வு, குடல்வலி, சுவாசகாசம், சுவாசமூட்டுகளுடனிருக்கும கடினமான இருமல் இவ்விதமான அநேக வியாதி

களுக்கு மிகுதியாய் உபயோகத்திலிருக்கின்றன. அதைச் செய்யும் சரியான வித மெப்படியென்றால்: ஒற்றிடமிட வேண்டும் ஸ்தலத்தை மூடத்தக்க அளவுக்கு சற்றே அதிகமும் கனமுமாக விஸ்தாரமாய்ச் சீலைகளை மடித்து நோயாளி சகிக்கத்தக்க சூடுள்ள சலத்தில் நனைத்து சலம் வடியாமலிருக்கும்படி பிழிந்துவிட்டு இடவேண்டிய பக்கத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் 2-அல்லது 3-நிமிட நேரஞ் சென்று சூடு ஆறு முன் வேறே ஒரு சீலையை முன் போல் பக்குவஞ் செய்து வைத்துக்கொண்டு ஆறின சீலையை எடுத்து விட்டு இடைவிடாமல் உடனே அதை இடவேண்டும். இவ்விதமாய்க் கால்மணி அல்லது அரைமணி நேரம்வரை சூடாக மாறி மாறிச் செய்ய வேண்டும். கடினமான தலை நோய்களுக்கும் இந்தச் சூடு தண்ணீர் ஒற்றிடம் மிகுந்த குணத்தைக் கொடுக்கும் பிரசவமான பின் உதிர நீரை நன்றாய்ப் போக்குவதற்கும் அதைப் பலனுடனே பிரயோகிக்கலாம்.

நெடுநாளாயிருக்கும் வாதம் ஒன்றானலும் வாசியாகாத தோல் வியாதிகள் கால் கை மூட்டுகளின் வலி ஆரம்பிக்கிற நீரிழிவும் மகோதரமும் மற்றும் தொனி வரண்டு சரசரப்பா யிருக்கும் வியாதிகளுக்கெல்லாம் சுடு தண்ணீர் ஆவியைப் பிடிக்கில் மிகுந்த பலனுண்டாகும். மேற்படி வியாதிகளோடு கூட சுரமுண்டாயிருந்தால் இந்தப் பிரயோகஞ் செய்கிறது புத்தியல்ல.

சாதாரணமாய்க் கோழிகளையும் கோழிக்குஞ்சுகளையும் மடக்கப்பட்ட கோபுரம் போன்ற மாதிரியில் ஒரு பருத்த கூட்டை தயார் செய்ததின் உச்சத்தில் ஒரு மனிதனுடைய தலை தாராளமாய்ச் செல்லும்படியாய் வட்டத்தில் ஒரு துவாரத்தை உண்டு பண்ணி இந்தக் கூட்டினுள் ஒரு நாற்காலியை யிட்டதின்மேல் வியாதிக்காரன் இருந்து கொண்டு தலையையும் முகத்தையும் கூட்டின்மேல் துவாரத்தில் வெளியே வைத்துக்கொள்ள வேண்டும். பின்பு அந்தக் கூட்டை கனத்த கம்பளிகளால் பொதிந்து அவைகளின் மேல் ஓரங்களை வியாதிக்காரனின் கழுத்தைச் சுற்றி செருகி இவ்விதமாய் ஆவி வெளியே போகாமல் எத்தனஞ் செய்து கொண்டு அப்பால் ஒரு சட்டி கொதிக்கிற சலத்தைக் கூட்டினுள் வியாதிக்காரனின் கால் பக்கத்தில் வைக்கவேணும்.

இப்படிச் செய்வதிலிருக்க வேண்டும் நோக்கங்களிரண்டாகும், எவையெனில்: முதலாவது, வியாதிக்காரன் இருக்கப்பட்ட கூட்டினுள் நின்று ஆவி சற்றும் வெளியில் போகாமல் இருக்

கும்படியாகவும், இரண்டாவது நோயாளி தன்னுடைய தலையைக் கூட்டின் துவாரம் விட்டு நன்ருய் வெளிப்படுத்தி ஆவியை அதிகமாய் சுவாசம் வாங்காமலிருக்கும்படிக்குக் கழுத்தை சுற்றி கம்பளிகளை நன்ருயடைத்துக் சொருகி வைப்பதுமான தா யிருக்கின்றது. மேற் சொன்னபிரகாரம் நோயாளி ஆவியைக் கொண்டபின் உடனே வேர்வையுண்டாக ஆரம்பிக்கும். அப்புறம் ஏறக்குறைய கால்மணி நேரஞ் சென்றபின் வியாதிக்காரன் கூட்டைவிட்டு வெளியில் வந்தவுடனே உலர்ந்த சீலையால் வெயர்வை முழுவதையும் நன்ருய்த் துடைத்துத் தேகத்தில் குளிர்ந்த காற்றுக் கொள்ளாமல் இருக்க வேண்டும்.

நீர்கூட்டை-குளவட்டை

அட்டைகளைத் தகுந்த வியாதிகளுக்குத் தக்க சமயம் பார்த்து முறையாய் விடுகில் அநேக வியாதிகளுக்கு உபயோகமா யிருக்கும். ஆனல், அவைகளை விடுகிறதில் சாக்கிரதை அவசியமானதா யிருக்கிறது.

அவைகளைக் கடிக்கப்பண்ணுவதற்கு இரண்டு மாதிரியுண்டு. முதலாவது ஒவ்வொரு அட்டையாக கையில் பிடித்து வேண்டிய துகையளவும் கடிக்கவிட வேண்டும். இது மிகுந்த சலிப்பும் தாமதமுள்ள விதம், மற்ற நல்லமாதிரி எப்படியென்

ருல், தேவையான அட்டைகளை ஒரு கிளாசு பாத்திரத்திலாவது கோப்பையிலாவது இட்டு கடிக்க வேண்டிய ஸ்தலத்தில் கவிழ்த்துப் பிடித்திருக்க வேண்டும். சற்றுநேரஞ் சென்றபின் அதை நீக்கினல் அட்டைகள் கடித்துக்கொண்டிருக்கிறதைக் காணலாம். கிளாசு பாத்திரமாவது கோப்பையாவது ஆசரில்லா விட்டால் முதற் சொன்னபடி ஒவ்வொரு அட்டையாகக் கையிற் பிடித்துக் கடிக்கவேண்டிய ஸ்தலம் தப்பாமல் விடவேண்டும்.

குழந்தைகளின் வயசுக்குத்தக்க அட்டையில் எண்ணம் நிதானித்துச் சுடுதண்ணீரால் நன்ருய் கழுவித் துடைத்துப் பின்பு விடுகில் உடனே கடிக்கும். இப்படிச் செய்தும் உடனே கடியாவிட்டால் 15-அல்லது 20-நிமிட நேரம் உலர்ந்த அழுக்கில்லாத சீலையில் விட்டு மேலுள்ள இரத்தத்தைப் போக்கின பின்பு விடவும். இதிலும் கடியாவிட்டால் தாலிமேற்பாலைத் தடவியும், அதன்பின்னுங் கடியாவிட்டால் தோலிமேற் கொஞ்சங்கீறி அதில் நின்று வரும் இரத்தத்தைக் கடிக்க வேண்டிய ஸ்தலம் முழுதும் பூசியும் விட்டாற் கடிக்கும். எந்த விதங்களில் கடியாமலிருக்கினும் கடைசிப் பிரயோகத்தால் நிச்சயமாகக் கடிக்கும்.

அட்டைகள் இரத்தங் குடித்து 15-அல்லது 20-நிமிடம் கழிந்தபின் விழாவிட்டாலும் வேண்டியபோது அவைகளை நீக்கிவிட வேண்டுமானாலும் கொஞ்சம் உப்பைத் தூவவாவது செய்தால் உடனே விழும்.

அட்டைகடித்த முறிவில் நின்று இரத்தம்போவது போகாதிருந்தால் சுடுதண்ணீரால் ஒற்றடம் கொடுக்க வேண்டும்.

இரத்தம் மிகுதியாய்ப்போகிறதை நிறுத்தவேண்டுமானால் முறிவின்மேல் விரலாலழுத்தி படிகாரத் தூளையாவது வைக்கவேண்டும்.

அட்டைகள்மூலத்துவாரம் மூக்கின் துவாரம் மற்றேழுத் துவாரத்துனுள்ளாவது ஏறிவிட்டால் உப்புத் தண்ணீராவது காடியாவது உள்ளுக்குச் செலுத்த உடனே விழும்.

முக்கியமாய் கழுத்தில் பொருமிக்காணும் நரம்பின் மேல் அட்டைகள் விடக்கூடாது.

வலியுள்ள கட்டிகளின் மேல் விரலை வைக்கும் பொழுது நாடி யடிக்குமானால் அதின்மேல் அட்டைகளை விடாமல் அவற்றின் சுற்றில் சற்றுதூரம் தள்ளி விட வேண்டும்.

கண்ணிமைகளிலாவது ஸ்திரீகளின் ஸ்தானத்திலாவது ஆண்குறித்தோலியின் மேலாவது பீசத்திற்குமேலாவது அட்டைகளை விடுகிற சில சமயத்தில் எரிவந்தமுண்டாகுமாதலால் அந்த ஸ்தலங்களில் விடக்கூடாது.

குழந்தைகளுக்கு அட்டைகளை விட்டால் பிராயமானவர்களைப் பார்க்கிலும் மிகுதியாய் இரத்தம்போம். ஆனதால் மிகுந்த பத்திரம் வேண்டியிருக்கிறது. எப்பொழுதும் அட்டைகளை தேகத்தில் எவ்விடங்களிற் கூடிய மட்டும் மாமிசம் குறைந்து எலும்பு மேற்பட்டிருக்கிறதோ அந்த ஸ்தலங்களைப் பார்த்துவிடவேண்டும். இப்படிச்செய்கிற ஒரு வேளை இரத்தம் விடாமற் பாயுமாகில் அதை நிறுத்தும் பொருட்டாய் அழுத்திப் பிடிப்பதற்கு இசைவா யிருக்கும். எப்பொழுதும் குழந்தைகளுக்குக் காலையில் விட வேண்டும். சூரியன் அஸ்தமித்த பின்பானால் இராத்திரி எல்லோரும்தூங்கும் சமயத்தில் கடிவாயில் நின்று அதிக இரத்தம் பாய்ந்து குழந்தைகள் மறிக்கிறதற்கு ஏதுவாயிருக்கும்.

அட்டையை விடவேண்டிய பக்கத்தில் சவுக்காரத்தை தெளிக்க அவசியமானதால் கீழ் எழுதியபடி செய்ய வேண்டும்.

6-மாதத்திற்கு கீழ்ப்பட்ட குழந்தைக்கு 1 - அட்டை, 1-வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைக்கு 2 - அட்டை, 2-வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைக்கு 3 - அட்டை

3-வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தைக்கு 4-அட்டை.

தலைநோயுடன் வரும் சுரங்களுக்கு அட்டைகள் மிகுந்த பிரயோசனமா யிருக்கின்றன. வியாதியின் துவக்கத்தில் பிணியாளி வாலிபனாயும் பெலவானாயு மிருப்பானாகில் நெற்றி யொன்றில் 4-அல்லது 6-அட்டை விட வேண்டும். பிடரியின் மேற்புரத்திலும் கடிக்கவிட்டால் அதிக குணம் கொடுக்கும். சுரத்துடனே மார்பிலும் வயிற்றிலும் கடினமான வலிகளுக்கு 8-அல்லது 10-அட்டைகளை உடனே வலியின் மேல் விட வேண்டும்.

மூலமுளையின் ரத்தப்போக்கு நின்ற காரணத்தால் வரும் தலையிடிக்கு மூலத்துவாரத்தினருகே அட்டையைக் கடிக்கப் பண்ணினால் குணப்படும். அட்டைகள் மூலத்துவாரத்தினுள் ஏறிப் போய்விடாமல் எச்சரிக்கையா யிருக்கவேண்டும். சூதகம் சடுதியாய் நின்றக் காரணத்தாலுண்டாகும் தலைநோய்க்கு அட்டைகளை உள்துடையில் விடவேண்டும்.

விப்புருதிகள், பருக்கள், அரையாப்புகள், நசிவுகள், சுளுக்குகள், அடிகள் மற்றும் தோள்மேல் வரும் இரத்தச் சுரப்புகள் இவைகளின் ஆரம்பத்தில் வலியும் சூடும் அதிகமாகும் பொழுது 6-அல்லது 8-அட்டைகள் விட்டுச் சுடுதண்ணீரால் ஒற்றடம் கொடுத்தால் வலி தீர்ந்து வியாதியைப் போக்கும். அரையாப்புகளுக்கு முக்கியமாய் ஆரம்பத்தில் அதிக வேதனையாய் இருக்கிற பொழுது பிரயோசனமாம்.

கக்கிருமல் தொடங்கின பொழுது பிடரியின் மேற்பக்கத்தில் அட்டைவிட்டால் மிகுந்த பலனாயிருக்கும். செய்யவேண்டிய முறையெப்படியெனில் குழந்தைகளின் வயசு ஒன்றுக்கு ஒவ்வொரு அட்டைவீதம் முறையாய்க்கூட்டி 6-வயசுவரை விடலாம். அப்புறம எத்தனை வயசாயிருக்கினும் 6-அட்டையே போதுமானதாயிருக்கிறது.

ஆனதால் இப்படி விட்டு அட்டைகள் விழுந்தபின் ஒரு கடுகுப் போலட்டிஸ் ஆவது ஒரு சின்ன பிஸ்டர் ஆவது செய்து கடிவாயை விட்டுவிட்டு இரண்டுதோள் பட்டைக்கும் நடுவில் வைத்துக் கட்ட வேண்டும். அட்டைகளையும் கடுகுப்போல்ட்டிசையும் மறுபடியும் அவசியம்போல் இட்டுக்கொள்ள வேண்டும்.

அனேகவித கண்ணோய்களுக்கு அதிகசூடும் வலியும் வீக்கமும் சிவப்பும் இருக்கிறபொழுது 4-அல்லது 6-அட்டைகளைக் கடைக் கண்களின் அருகே இருக்கும் பொட்டுகளில் விட்டால் பலன்களைக் கொடுக்கும்.

நீர்க்கடம்பு-ஓர் மரம்
நீர்க்கமல்லி-இல்லி
நீர்க்குஷ்டம்-ஓர் நோய்
நீர்க்குண்டி- வெண்ணொச்சி
நீர்க்குன்றி-ஓர் நீர்ப்பூண்டு கல்லாச்செடி
நீர்க்கும்பி-நீர்முள்ளி
நீர்க்குறிஞ்சா-ஓர் பூண்டு
நீர்க்கோவை-ஓர் நோய்
நீர்ச்சங்கு-ஓர் பூண்டு, சங்கு
நீர்சின்னி-ஓர் பூண்டு
நீர்ச்சுண்டி- கொட்டிநெட்டி
நீர்ச்செப்பை-ஓர் செடி
நீர்நொச்சி-ஓர் செடி

இது தண்ணீர் சமீபத்தில் வளர்கின்றது. இதன் துளிரும் இலையும் கசப்புள்ளதாயும் இலையும் கசப்புள்ளதாயுமிருக்கின்றது. இதை சுதேச வைத்தியர் டலமாய் வற்றப் பண்ணுகிற அல்லது வடிவிக்கிற மருந்தாக யோசிக்கிறார்கள். வாதம் சுளுக்கு வாதப் பிடிப்பு, முடக்கு, விரை வீக்கம் இவைகளுக்குச் சுடுகையால் ஒற்றடம் செய்து கட்டுகை, பத்து இவ்விதமாக உபயோகப்படுத்தப் படுகிறது. இந்த இலைகளை யிடித்து காயத்திற்கு கட்டுவது நல்லதாயும் மாற்று மருந்தாகவும் யோசிக்கப்படுகின்றது. இதன் காய் அல்லது பழம் சிறுயதாகவும் கசப்பாகவும் அழுத்தமாகவும் இருக்கும். அது பலமான மண்டை வியாதிக்கு மருந்தாகவும் மாதவிடாயை அதிகப்படுத்துகிற குணமுடைய மருந்தாகவும் வைத்தியர் யோசிக்கிறார்கள், திமிர்வாதம் அவயவ பெலயீன முதலாகிய வைகளுக்கு சூரணமாயும் கஷாயமாயும் லேகியமாயும் கொடுக்கப்படுகின்றது. வட இந்துஸ்தானியில் இதனிலைகள் சலைநோய் சிரசில் நீரேற்றம் இவைகளை நீக்குதற்குத் தலையணைகளிற் அடைத்து வைக்கப்படுகிறதென்று சர் வில்லியம் ஜோன்சு துரையவர்களால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நீர்ப்பனை-புல்லாமணக்கு
நீர்ப்பாடு-நீரிழிவு
நீர்ப்பிரியம்-நீர்க்கடுப்பு
நீர்ப்பூலா-ஓர் கொடி
நீர்முள்ளி-ஓர் பூண்டு
நீர்மேல்நெருப்பு-கல்லுருவி
நீர்வல்லி, நீர்வள்ளி- வெற்றிலை, தண்ணீர்விட்டான்
நீர்வழுக்கை-ஓர் பூண்டு
நீர்விட்டான்கிழங்கு - தண்ணீர்விட்டான்கிழங்கு
நீர்க்கமலம்-கருங்குவளை
நீலகமலம்-கருங்குவளை
நீலக்காக்காட்டான்- ஓர் பூண்டு
நீலபாஷாணம்- ஓர் பாஷாணம்
நீலபுஷ்பம், நீலபுட்பம்-காஞ்சிகை, விஷ்ணுகரந்தை, எட்டிமரம்.
நீலமருந்து-அவுரி
நீலமார்க்கம்- கையாந்தகரை
நீலம்-கருங்குவளை, பனை

நீலி-அவுரி, மேக வண்ணப் பூவுள்ள மருதோன்றி, கருநொச்சில், நீலியென்னும் அவுரி பக்கசூலை வியாதிக்கு உபயோகப்படுகிறது.

நீலோற்பலம்-கருங்குவளை
நீவாரம்-குழநெல், செந்நினை
நீள்சடையோன்- கொன்றை
நீரடிமுத்து- கிரந்தி, குஷ்டம், சூலை, நமைச்சல், வாதம் 18-ம் போம் அனல் பித்தமும் உண்டாம்.
நீரருந்துங் கிரமம்-அன்னூர் அருந்த செவி மந்தமும், குளிர்ந்தருந்த காசமும், நிதானமாயிருந்து பாத்திரத்தை வாயில் கமத்து அருந்த சுகமும் உண்டாம்.
நீராகாரநீர்-தாகமும், தோஷமும், வரட்சியும் போம், தாது பலமுண்டாம்.
நீராரைக்கீரை- இரத்தப் போக்கு, தீரா பயித்தியம், நீரிழிவும் போம், உரிசியாக விருக்கும்.
நீரொட்டிவிரை-ஊன் வடியுமிரணம், கரப்பான், கிரந்தி சொறிபுத்தும்போம், விரோசனமுண்டாம்.
நீர்க் காக்கைக்கு-சோகை, பாண்டு, பெருவயிறும்போம். கரப்பான், சொறி,புலால்நாற்றமு முண்டாம்
நீர்த்தாராக்கறி- அக்கினி மந்தம், கிரந்தி, சூலை, பித்த வாய்வும், உண்டாம்.
நீர்த்தாளி-குட்டம், சொறி, வரட்சியும் போம்.
நீர்த்திருப்புள்- ஜன்னிபோம்.
நீர்ப்பூலாதணம்- சொறி சிரங்கு, நீரிழிவு, பொருமல், மாந்தமும் போம்.
நீர்முள்ளி-குளிப்பை, நீரேற்றம், நீர்க்கட்டு, பாண்டு, வீக்கமெல்லாம் நீராகப் போம்.
நீர்முள்ளிவித்து- அதிசாரம், இளைப்பு, நீர்வீக்கம், மேகரோகமும்போம், விந்து தாதுவும் உண்டாம்.
நீலகண்ட நிருவிஷம்-ஊரல், கருங்கிரந்தி, ஜன்னி, சூலை, விஷகிரந்தி, விஷங்களும் போம்.
நீலம்-குதிவலி, பாண்டு, பித்தம், மதிமயக்கமும் போம்.
நீலரத்தினம்-காமாலை, குதிவலி, பித்தம், மயக்கம், மருளல் மேகமும் போம்; புத்தி, போக சுகமும் உண்டாம்.
நீலாஞ்சண்டல்- இரத்த பித்த தோஷம், இரசவேகம், கபம், சகல சுரம், ஜன்னிதாகம், நீர்வடிகிற கண்ணோய், வெட்டுப் புண்ணும் போம். அழகு, காந்தி, குளிர்ச்சி உண்டாம்.

நு

நுக்கு-எட்டிமரம்
நுக்குடம்-காஞ்சிரை
நுணவு - தனக்கு, நுணா, அணிநுணா
அவை: நுணவை,தனக்கு, மன்னிலா, ஆத்தா.
நுபம்-எருக்கு
நுரைப்பீர்க்கு-ஓர் பூண்டு
நுவணை-மா.
நுணாயிலை-மந்தம், மேகமும் போம், காந்தி யுண்டாம்.
நுணாக்காய்-மேக நோய்கள் போம்
நுணாமரப்பட்டை - கரப்பான், கிரந்தி, சிலேட்டும சுரம், புண்ணும் போம்.
நுணாவேர்-அக்கினி மந்தம், உஷ்ணமும் போம்.

கெர்ப்பத்தி லழிந்த பிள்ளை வெளியாகும்.

நூ

நூக்கம்-ஓர் மரம்
நூடி-சிற்றேலம்

நெ

நெட்டைப் பேய்துரட்டி-கணமாந்தம். பசாசு, வயிறு கழிச்சலும் போம்.

நெய்மீன்-இசைச்சல், பித்தம், பொருமல், மந்தம், வாதமுண்டாம்.

நெய்ச்சட்டிக்கீரை அழல். சீதசுரம், சூதகெந்தங்களாலான வாய்ப்புண், தாகம். பித்தம், மேகம், வாந்தி, வெட்டையும் போம். அழகு கண்ணொளி, சுக்கிலம், தீபனமும் உண்டாம். நிம்ப எண்ணையை நெய்யாகச் செய்யும்.

நெய்தநிலம் - அண்டவாதம், உஷ்ணம், துளிப்பு வாய்வுண்டாம்.

நெய்தற்கிழங்கு - அக்கி, காந்தல், தோஷம், பித்தம், பயித்தியம், மேகம், வயிற்றுக்கடுப்பு, இரத்தமும் போம் கண் துளிர்ச்சி விந்தும் உண்டாம்.

நெய்த்தோலி மீன் - தீபனம் போம். மந்தம், வயிறு பொருமல், வாதபித்தம், வாயிளைப்புண்டாம்.

நெய்யன்னம் -கிறுகிறுப்பு பித்தமும் போம், கண் குளிர்ச்சி, சீரணம், பலமுமுண்டாம், பத்தியத்திற்காகும்.

நெருஞ்சில்விதை - கல்லடைப்பு, துன்மாங்கிஷமருகல், நீர்க்கட்டும் போம்.

நெல்லிக்காய்கெந்தி - ஒருவித மகோதரம், கண்ணோய், கபம், குன்மவாயு, சுரம், பதினெண்குஷ்டம், பேதி, மந்தம், மேகம், வல்லைக்கட்டி, விஷக்கடியும்போம்.

நெழில்- சொடிக்கொத்தான், படர்கொடி.

நெல்லிவேர் - அரோசி, சுரம், திரிதோஷ ஜன்னி மலக்கட்டும் போம்.

நெல்விமுள்ளி - அனல், ஆண்குறியிற் சிறுகொப்பளம், இரத்தபித்தம் எண்புருக்கி, கண்ணோய், சீதளம், தாகம், தாதுநஷ்டம், நீர் துவாரத்தில் முள்ளருகல், பித்தம், பெரும்பாடு, மேக நீரிழிவு, வாந்தியும் போம், தலைமுழுக்கு, கண் குளிர்ச்சி உண்டாம்.

நெல்லிமுள்ளி வடகம் - அரோகம், சர்த்தி, சீதரத்தம், பித்தம், சயம், மூலக்கடுப்பு, மேகம், மெய்யெரிவும் போம்.

நெற்பொரி-அரோசி, தாகம், மலபேதி, பித்தவாதம், மதமூர்ச்சை, மந்தம், வாந்தியும் போம்.

நெக்குரோகம்-ஆலமரம்
நெச்சி-கடுக்காய்
நெடியோன்-துளசி, மூக்கிரட்டை
நெடும்பர்-ஆடேோதோடை
நெடுவிரல்-நாய்ப்பாகல்
நெடுவேர்-சாயவேர்
நெட்டம்-மிளகு

நெட்டி-சடை
அவை: கொடி நெட்டி நீர்க்கொடிப்பூண்டு.
நெட்டிக்கோரை-ஓர் புல்
நெட்டிப்பூ- நீர்ப்பூண்டு
வயல்நெட்டி-ஓர் பூண்டு
நெட்டில்-மூங்கில்
நெட்டிலிங்கு-அசோகு
நெத்தகர்-ஓர் பூண்டு
நெய்-இரத்தம்
நெய்க்கொட்டை- பூவந்திப் பழம்
நெய்ச்சட்டி - செங்கழுநீர், பவளக் குன்றுமணி.
நெய்ச்சிட்டிக்கிழங்கு- ஓர் கிழங்கு
நெய்தல்-ஆம்பல்
நெய்ப்பீர்க்கு- நுரைப்பீர்க்கு
நெய்ச்சிட்டி- செங்கழுநீர், பவளக்குன்றுமணி, சிற்றிலை
நெரிநெட்டி-சமபப்புல்
நெருஞ்சி- நெருஞ்சில், அசுவசட்டிரம்; அவை: செப்புநெருஞ்சில், பெருநெருஞ்சில், யானை நெருஞ்சில்.
நெர்க்குண்டி-நொச்சி
நெல்-நெல்வயக
நெல்லி-நெல்லிமரம், முள்ளி
அவை: காட்டுநெல்லி, கீழறி நெல்லி, கீழாநெல்லி, கீழ்க்காய் நெல்லி, நில் நெல்லி.
நெல்லிக்காய் கந்தகம்- ஓர் கந்தகம்
நெல்லிமுள்ளி-அமலா
நெற்று-உலர்ந்த பழம்

நே

நேத்திரகாசம், நேத்திர தோஷம், நேத்திரவாயு- ஓர் நோய்
நேபாளம்-நேர்வாளம்
நேமி-மூங்கில்
நேமிசந்தனு-வேங்கை
நேமியம்-திலப்பனை
நேராடம்-நாவல்
நேரேடு-நாவல்
நேர்வாளம்-ஓர் மரம்
நேர்வாளக்கொட்டை - பல நோய், பழமலம், வாதமும் போம்.
நேர்வாளமுத்து-ஓர் விதை இதனால் பேதிக்கிசைந்த மாத்திரைகளைச் செய்யும் விவரம்: கீழ்ச்சொல்லிய நேர் வாள விதையை பாலில் மூன்றுதரம் வேக வைத்து மேல்தோலை முற்றும் நன்று யெடுத்துப் பருப்பி னிடையி லிருக்கும் இழைநீக்கி(இதனை எடுக்காமல் வைத்திருக்கில் அகோரமான வயிற்றுவலி உண்டாகும்)இதில் 60-கிறெ யின் எடுத்து 120-கிறெயின் காசுகட்டித் தூளுடன் தேன் விட்டு நன்றுயரைத்து 2-கிறெயின் எடையில் மாத்தி ரைகளாக பங்கிட்டு உருட்டி வைத்துக் கொள்ள வேண் டும்;பிராயமான மனிதனுக்கு ஒருவேளைக்கு ஒரு மாத்திரை வீதம் கொடுக்கலாம். அது அசதி, சன்னி, சன்னியிழுப்பு கடினமான சுரம் இவை முதலிய வியாதிகளுக்கெல்லாம் குடல்களை நன்றுய் சுத்தி பண்ணுகிறதற்கு இசைந்த பேதி மருந்தா யிருக்கிறது. ஆனால் அதிக வயிற்றுவலி யாவது வாந்தியாவது கன பேதியாவது உண்டாயிருக் கில் எலுமிச்சஞ் சாற்றைக்

கொடுத்து அதன் பின்பும் நிற்காவிட்டால் அரைமணிக்குப் பின்னும் கொடுக்க வேண்டும்.

நேளி-தாமரை.

நை

நைசிகம்-ஓர் மருந்து
நைச்சி-ஓர் பாம்பு
நைதிகை, நைந்திகை-முல்லைக்கொடி
நைபாலி-அடுக்குமல்லிகை

நொ

நொச்சி-ஓர் மரம்
அவை: கருநொச்சி, நீர் நொச்சி, வெண்ணொச்சி.

நோ

நோவு-மஞ்சள்

ப

பகல் கறிவகை-கந்தவருக்கம், கனிவருக்கம், மந்த வருக்கம், வாத வருக்கம், தண்டு வருக்கங்கள், தயிர் மோர் பகலிலருந்த தோஷமில்லை.

பகல் நித்திரையின் குணம் பகல் நித்திரையானது தண்டம், மேட்டாட், சீயன், ஊருத்தம்பம், சருவாங்கம், உக்கிராகிரகம், சுபதி, அனுர்தபம், திருக்குத்தம்பம், சோணிதம், ஆட்டியம், புருவாடோபகம், கிருத்திரசி, ஊர்த்துவம், சம்பூகம், அவயேதம், அவதாளம், விவிர்தாசியம் என்னும் பதினெட்டுவித வாதரோகங்களை விளைவிப்பதற்கு ஒரு பித்தாகும்; ஆகையால் பகல் நித்திரை செய்யக்கூடாது என்பது கருத்து.

பசளைக்கீரை-அரோசி, சர்த்தி நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மேகமும் போம்.

பசி - அழகு, ஆண்மை, ஆவி, இன்பம், கல்வி, குலம் சுசி, மானம், மோகம், வார்த்தையும் போம், கிழத்தனம் உண்டாம்.

பசு முன்னையிலை - மந்தாக்கினி, மயக்கம், வாயு, வாதமும்போம், ஐயம், அருசி, கரப்பான், சோகையும் உண்டாம்.

பசுமுன்னைவேர் - ஏப்பம், வாதமும்போம், போசனப் பிரியமுண்டாம்.

பசுவின்பால் - உட்காய்ச்சல் அனலும் போம், ஐயம் உண்டாம்.

பசுவின்சாணம்-அடிபடும் வீக்கம், உதிரம், கபம், கிருமி சுரம், தாகமும்போம்.

பசுவின்சாணிப்பால்-தேக சுத்தி உண்டாம், அதுதேங்காய்ப் பாலுக்கொக்கும்.

பசுவின் தயிர்-அசீரணம், இருமல், இளைப்பு, தாகம், மெய்யெரிவும் போம், பசியுண்டாம்.

பசுவின்நெய்-அஸ்தி சுட்கம், அழல், உழலை, [illegible], சோகம, குடல பிரட்டல், குன்மம், சர்த்தி, தாகம், பித்தம், பிரமேகம், மூலம், வயிற்றெரிவு, வாயு, விக்கலும் போம்.

பசுவின் நெய் - முழுக்கு, உடலெரிச்சல், உன்மாதம், இரத்தபித்தம், கபம், தாகம்

பேசும்விகாரம், மூர்ச்சையும் போகும். மைந்தர் முதல் மூப்பருவ மாந்தர்க்கும் ஆகும்.

பசுவின்பால்-இளைத்தவர், கிழவர், சூலையர், துர்பலத்தோர், பழஞ்சுரத்தோர், பாலர், புண்ணுளர், மேகத்தோர் சாப்பிட சுகமுண்டாகும்.

பசுவின் மூத்திரம்-உதிரம், கண்ணோய், காமாலை, சகல விஷம், சோபை, தந்த நோய், பல்வீக்கம், விஷப் பாண்டு போம்.

பசுவின்மோர் - அனல், குன்மம், தாகம், திரிதோஷம், பாண்டு, பித்தம், மகோதரம், மந்தம், மருந்தினால் வந்த அதிசாரம் வீக்கமும் போம்.

பசுவின் வெண்ணெய்-கண்ணெரிவு, கண்ணோய், கண்பீளை, மேகங்களெல்லாம் போம். தாது பசியும் உண்டாம்.

பச்சடியின் பேதகுணம்-இனிப்பானபச்சடிக்கு அருசி போம். உப்பு கைத்தான பச்சடிக்கு வாதம் உண்டாம். புளிப்பான பச்சடிக்கு வாதம் உண்டாம். காரமான பச்சடிக்கு பித்தம்போம்.

பச்சரிசி- எரிபித்தம்போம். தேகபலம், மந்தம், வாய்வும் உண்டாம், பத்தியத்திற்காகாது.

பச்சரிசிஅன்னம்- பித்தம், மூத்திரக் கிரிச்சரமும்போம்.

பச்சரிசிக்கஞ்சி- வாதகபம் போம்.

பச்சரிசி பொங்கல்-தாது விர்த்தி உண்டாம்.

பச்சைக்கடுக்காய்- அரோசி, மலமும்போம், தீபனம் உண்டாம்.

பச்சைக்கற்பூரம் - அஷ்ட குன்மம், கபம், சூலை, மேகம் வாதமும் போகும்,

பச்சைக் குங்குமப்பூ-கண் தோஷம், சகலதோஷம், சுர தோஷம், செவித்தோஷம், பித்ததோஷம் போகும்.

பச்சைத்திப்பிலிவேர்-சோபம் தாகம், பித்தம், மேகங்களும் போம், போகம் உண்டாம்.

பச்சைநாவி-அஸ்திவெப்பு, குஷ்டம், குன்மம், ஜன்னி, தாகசுரம், விஷமும் போம்.

பச்சைப்பயறு- பயித்தியம் விஷமும் போம், குளிர்ச்சி வாதமும் உண்டாம்.

பச்சைப்பயிறு பொங்கல்-பித்தம்போம், போகம், வாதமும் உண்டாம்.

பச்சைப்பாக்கு - மலம், வாய்வும் போம்.

பச்சைப்புறுக்கறி - ஐயம், சீதம், பித்தம், வாதமும போம். தாதுபலமும் உண்டாம்.

பச்சை யாற்றுநீர்-இருமல், ஈளை, உதிரக்கடுப்பு, கபம், சுரம், வாய்வும் உண்டாம்.

பச்சையிளநீர்-கபம், கிருமி, சொறி, கபாலதோஷம், பழையசுர மேகமும் போம்.

பச்சைவஸ்திரம் - அழல், ஐயமும் போம். உடல் பூரிப்பு, கண்குளிர்ச்சியும உண்டாம்.

பச்சை விலாமிச்சவேர் - ஈளை, குஷ்டம், சுரவெப்பம், சூலை, தாகம், திரிதோஷம், மந்தமும் போம், தேககாந்தி உண்டாம்.
பகரமரம் - கொக்குமாந்தாரை மரம்.
பகர்-பங்கம்பாளை
பகவிருக்கம்-நிலக்கடம்பு
பகன்றை-கிலுகிலுப்பை, சிவதை,சிநதில்
பக்கசூலை, பக்கவாதம் - ஓர் நோய்
பங்கணி-பங்கம்பாளை
பங்கநாதம்-தாம்பரை
பங்கம்பாலை, பங்கம்பாளை - ஆடுதீண்டாப்பாளை
பங்கயம்-தாமரை
பங்கி-கஞ்சா
பங்கூரம்-மரமஞ்சள்
பங்கேசம், பங்கேருகம் தாமரை
பசமந்திரம்-மரமஞ்சள்
பசளை-வசலைக்கொடி

அவை: கொடிப்பசளை அல்லது வெள்ளைப்பசளை, சிவப்புப்பசளை, துலுக்கப் பசளை அல்லது கோழிக் கீரை, பேய்ப்பசளை அல்லது உலோசி, வறுக்கைப்பசளை.

பசிரு அல்லது பயிரி-பசிரி யிலைக்கறி அவை: குதிரைப் பசிரி, பெரும்பசிரி வெள்ளைப் பசிரி.
பசுங்கொடி-அறுகு
பசுணடி-சீரகம்-
பசுநாபி-பிராய்
பசும்பயறு-பாசிப்பயறு
பசும்பிடிப்புல்-அறுகம்புல்
பசுவிந்தக்காளி-ஓர்பூண்டு
பச்சன்னியம்-மரமஞ்சள்.
பச்சைக்கொம்பு-இஞ்சி
பச்சிலை-பச்சைமரம். அளத்துப்பச்சை-ஓர் பூண்டு.

பஞ்சமூலம- 1-சுக்கு, 2-திப்பிலி, 3-திப்பிலிமூலம 4-செவ்வியம், 5-சித்தரமூலம்.

பஞ்சம்-செருத்தி

பஞ்சவாசம் - 1 - இலவங்கம், 2-ஏலம், 3-கருப்பூரம், 4-சாதிக்காய், 5-தக்கோலம்.

பஞ்சாங்குலம் - ஆமணக்கு
பஞ்சாமிலம-இலநதை
பஞ்சாய்-கோரை
பஞ்சு-பருத்தி
படகம்-விஷ்ணுகரந்தை
படற்பொறி-துத்தி
படமடக்கி-தாழை
படுருக்கி-செந்நாயுருவி
படரை-ஆவிரை
படர்கொடி-பீர்க்கு
படர்தாமரை-ஓர் நோய்
படர்மல்லிகை- பெரும்பீர்க்கு
படவை-செருப்படி
படராமூக்கி-வெண்ணாயுருவி
படிகாரம் அல்லது சீனக்காரம்.

இது கடைகளிலெல்லாம் நற்சரக்காய் பெற்றுக்கொள்ளக்கூடியதாயிருக்கிறது. அது பலவிதமாய் பலனுடன் ஔதஞ் செய்யப்படும்.

கண்ணோவு உண்டான குழந்தைகளுக்குப் படிகாரம 3-கிறெயினும், பிராயமானவர்களுக்கு 6-கிறெயினும் ஒரு அவுன்ஸ் சலத்துல் கலக்கித தினம் 4-5 தரம் கண்களை கழுவவேண்டும். அதில் ஒரு சீலைத்துண்டைத் நனைத்துக கண்களை அடிக்கடி ஒற்றிக்கொள்ளுவது நலம், கண்

இமைகள் அதிகமாய் வீங்கியிருந்தால் கால்மணி நேரம் விசேஷமாய் தலையில் சூடானபாலை விட்டுக்கழுவி இமைகளை மெல்லெனத்திறந்து அதன்பின் மேற்சொன்ன சலத்தைச் சொட்டுச் சொட்டாய் விடவேண்டும். கண்களின் இமைகள் அப்படிப் பின்வலியும் சூடும் நீங்கி சிவப்புமாத்திரம் இருக்கிற சமயத்தில் அரை கிராம் படிகாரத்தை நுண்மையாய்ப் பொடித்து முட்டையின் வெள்ளைக் கருவில் கலந்து அதை இரண்டு துண்டு மெல்லிய பழஞ் சீலையின் இடையில் வைத்துக் கண்ணின்மேல் சிலமணி நேரம் வைத்திருக்கவேண்டும்.

மூக்கில் நின்று மிகுதியாய் இரத்தம்போனால் 120-கிறெயின் படிகாரத்தை 6-அவுன்ஸ் தண்ணீரிற் கலக்கி பீச்சாங் குழலாவது மெல்லிய சீலையை நனைத்தாவது மூக்கினுட் செலுத்தினால் நிற்கும். அட்டைக்குத்தல் காயத்தில் நின்று இரத்தம் பாய்கிறதற்குக் கொஞ்சம் படிகாரம் நுணுக்கிக் கடிவாயிலிட்டு அதின்மேற் சீலைக்குச் சுட்டி வைத்து விரலால் கொஞ்ச நேரம் கெட்டியாயமுத்தி வைத்திருந்தால் இரத்தம் நிற்கும்.

சுரமில்லாமல் மூலத்தில் நின்று மிகுதியாய் இரத்தம் போனால் 120-கிறெயின் படிகாரத்தை 8-அவுன்ஸ் தண்ணீரிற்கலக்கி ஒரு துண்டு சீலையை நனைத்து மூலத்தில் வைத்திருந்தால் சுகப்படும்.

குழந்தைகளின் மலத் துவார வழியாய் குடல் தள்ளினால் 60-கிறெயின் படிகாரத்தை கடுக்காய் கஷாயம் 8-அவுன்சில் சேர்த்துக்கொண்டு தள்ளினகுடலை மறுபடியும் உள்ளுக்குச் செலுத்தி அதின் மேலிந்த கஷாயத்தை நாளொன்றுக்கு 2-3 மணிநேரம் நன்றாய்த் தொட்டுப் போடவேண்டும். இப்படிச் செய்வதினால் மலத் துவாரத்தைச் சுருக்கிக் குடலிறங்குகிறதை நிறுத்தல் செய்யும்.

நுரையீரல்இரைக்குடல்முதலிய இரத்தம் போகிறதற்கு படிகாரம் 8-அல்லது 10-கிறெயின் ஒருதரம் உள்ளுக்குக் கொடுத்து இந்தப்படி தினம் மூன்றுதரங் கொடுக்கவேண்டும். இதனுடன் சுரமாயின் மேற்சொன்ன ஔஷதங் கொடுக்காமலிருக்கிறதுந் தவிர இரண்டொருதரங் கொடுத்தபின் வியாதி அதிகப்பட்டால்பின்பு கொடுக்கக் கூடாது. மேற்படி வியாதிகளுக்கிசைந்த மற்றொரு பிரயோகம் எப்படியென்றால் 12-கிறெயின் படிகாரத்தை அரைப்புட்டிப் பாலிட்டு ஒரு சட்டியில்வார்த்து அடுப்பில் வைத்து 10-நிமிட நேரங் காய்ச்சி உடனே சீலையில் வடிகட்டிக்கொண்டு ஆறின பின்ஒருதரத்துக்கு ஒன்றரை அவுன்ஸ் வீதம் தினம் மூன்றுதரங் கொடுக்கவேண்

டும். இதனுடன் ஒரு கிறெயின் அபினைங் கூட்டிக் கொடுத்தால் மிகுந்த பலனுண்டாகும். ஆனாலப்படி அபினுடன் பிராயமானவர்களுக்கு மாத்திரமே கொடுக்கக்கூடும். பெண்களுக்குச் சுரோணித நீர் அதிகமாயும் இடைவிடாமலும் போகிறதற்கும் மூலமுளையில் நின்று இரத்தம் போகிறதற்கும் மேற்சொன்ன ஔஷதம் பிரயோசனப்படும்.

தொண்டையிற் புண்ணாய் அல்லது சிவப்பாயிருக்கிற தொண்டை நோய்க்குக் கடுக்காய் கஷாயம் அரைப்புட்டியில் 120-கிறெயின் படிகாரத்தைச் சேர்த்துக் கொஞ்சந் தேனுங் கூட்டி தினம் மூன்று நாலுவேளை இந்த ஜலங்கொண்டு வாயலம்பவேண்டும். இரசத்தில் ஔஷதம் சாப்பிட்டதினாலாவது மற்றெந்தக் காரணத்தினாலாவது பல்லீறி லுண்டாகும் இரண முதலிய வியாதிக்குப் படிகாரத்தைதக் கடுக்காய் கஷாயத்தில் கலக்கி வாயைக் கழுவினால் குண முண்டாகும். இதுவுந் தவிர சிறு குழந்தைகளுடைய வாயில் உண்டாகும் வெண்ணிறமான புண்களுக்கு 20-கிறெயின் படிகாரத்தை நுணுக்கி ஒரு அவுன்ஸ் தேனில் சேர்த்து அதை விரலால் தொட்டு வாயினுள் பூசவேண்டும்.

குழந்தைகளுக்குக் கக்கிருமல் உண்டானால் 5-கிறெயின் படிகாரத்தை நுணுக்கித் தேனிற் கலக்கிக் கொண்டு இந்தவிதம் ஒருநாளில் இரண்டு மூன்றுதரம் கொடுக்கவேண்டும். இதிற்குணங் காணாவிட்டால் படிகாரத்தின் எடையை அதிகமாக்கி அதனுடன் கொஞ்சம் காயமுஞ் சேர்த்துக்கொண்டால் மிகுந்த குணத்தைக் கொடுக்கும். [காயத்தைக் குறித்துச் சொல்லியதில் காண்க]

ஆண்குறித் துவாரமன்றி அதனுணித் தோலில் நின்று ஒருவிதமாக மேக வெள்ளைப் போன்ற நீர் வருகிறதற்கு ஒரு அவுன்ஸ் சலத்தில் 30-கிறெயின் படிகாரத்தைக் கலக்கி அத்துலையினுள் விட்டுக்கொள்ளவேண்டும். பெண்களிற் காணும் மேக வெள்ளைக்கும் படிகாரத்தை கடுக்காய்க் கஷாயத்திற் சேர்த்து பீச்சாங்குழலால் செலுத்தி அலம்பவேண்டும். இது சாவகாசப் படாவிட்டால் அதில் ஒரு துண்டு சீலையை நனைத்து உபஸ்தத்தினுள் செலுத்தி வைக்கவேண்டும். இப்படி செய்யுமளவில் உள்ளுக்கும் ஒருவேளைக்கு 10-கிறெயின் படிகாரத்தைத் தேனிலாவது வெல்லத்திலாவது தினம் மூன்றுதரங் கொடுக்கவேண்டும்.

நெடுநாள்பட்ட நாற்றமுள்ள படரும் புண்களுக்கு நுண்மையாய்த் தூள்செய்த படிகாரம் 8-திராம், காசுக்கட்டி 2-திராம், அபின் 1-

திராம். மெழுகு பிளாஸ்திரி 2- அவுன்ஸ் இவைகளில் அபினை முன்னை பிளாஸ்திரி யுடன் நன்றாய்க் கலந்து கொண்டு பின்பு மற்ற மருந்துகளை யெல்லாங் கூட்டி அரைத்து இதை ஒரு துண்டுச் சீலையில் தடவி காலையிலும் சாயந்திரமும் பண்ணி விட வேண்டும். வேதனையையுண்டாக்குமாகில் மேற்படி சேர்வையின் காரத்தை குறைக்கும்படியாய் மெழுகு பிளாஸ்திரியை அதிகரித்துக் கூட்டிக் கொள்ளவேண்டும். இரணங்களில் அதிகமாய் வளருந் துர்மாமிசங்களுக்குப் பொரித்த படிகாரத் தூளில் கொஞ்சந் தூவினால் பலனுண்டாம்.

மூட்டு வீக்கங்களுக்கும், அடி சதைகளுக் கிவையின் சாரணத்தால் உண்டாகிற வீக்கங்களுக்கும் அரைப் புட்டி காடியும அவ்வளவு சாராயமும் ஒன்றாய்க் கலந்து 4- திராம் படிகாரத்தைக் கரைத்ததில் சீலையை நனைத்து மேற்படி வீக்கங்களில் இடவேண்டும்.

வாந்திபேதி வியாதிக்கும் அது ஆரம்பிக்கிறதற்கு முன் காணப்பட்ட வயிற்றுப் போக்குக்கும் படிகாரம் 8- கிறெயின் காசுக்கட்டி 10- கிறெயின் இவற்றை தேனிலரைத்து உடனே கொடுக்க வேண்டும். இப்படி ஒன்று அல்லது இரண்டு மணி நேரத்துக்கு ஒரு தரம் வியாதியின் ஸ்திதிபோல் கொடுக்க வேண்டும். பிராயமானவர்களுக்கு பேதி கடினமாயிருந்தால் மேற்சொன்ன மருந்தில் அபின் 3-கிறெயினைக் கூட்டிக் கொள்ள வேண்டும். குழந்தைகளுக்கிது மிகவும் சாவதானமாகக் கொடுக்க வேண்டுவதால் 1-கிறெயின் அபினியில் 8- அல்லது 10-ல் ஒரு பங்கு கொடுக்கவேண்டும். ஒன்றிரண்டு தரம் கொடுத்த பின்பு மயக்கங் காணில் கொடுக்கக்கூடாது. நெடுநாள் சென்ற வயிற்றுப்போக்குக்கு படிகாரம் 10-கிறெயின் வசம்புப் பொடி 15- கிறெயின் அபின் அரை கிறெயின் இவை மூன்றையுங் கலந்து ஒரு தரத்துக்குக் கொடுக்கவேண்டும். இப்படி நாளொன்றுக்கு மூன்று நான்கு நேரங் கொடுக்கலாம்.

கீழ்ச் சொல்லிய மருந்து தீர நிறுத்தாவிட்டாலும் நீர் அதிகமாய்ப் போகிறதைக் குறைக்கும். ஒரு புட்டிப் பசுவின் பாலைக் கொதிக்க வைத்து அதில் 2-திராம் படிகாரத்தூளை யிட்டு கொஞ்ச நேரங் கலக்கிய பின் இறக்கி வைத்து வடிகட்டி அதை நாளொன்றுக்கு மூன்றுதரம் 1- வேளைக்கு 4-அவுன்ஸ் வீதங் கொடுக்கவேண்டும்.

படிரம்-சந்தனம்

படுவநாயகி - பாற்சோற்றிக் கொடி

படோல்ராசி-பேய்ப்புடல்

படோலிகை-வெள்ளரி

பட்டகம்-புழுக்கொல்லி
பட்டி-ஓர் பூண்டு
பட்டிடை- நந்தியாவட்டம்
பணியாரத்துத்தி-ஓர் செடி
பணியிநாக்கு- தண்ணீர்விட்டான் கிழங்கு
பணை-அரசு, மூங்கில்
பண்டாகி-சேம்பு
பண்டுகம்-செவ்வகத்தி, அசமதாகம்.
பதம்-அறுகு
பதரி-இலந்தை
பதரை-வெந்தோன்றி
பதிகம்-பாசி
பதிச்சம்-வாலுளுவை
பதுசரை- பழமுன்னிப்பாலை
பதுமம்-தாமரை
பதுமார்க்கம்- கவிழ்தும்பை
பத்தரு- மொசுமொசுக்கை
பத்திராசிராயம்- சந்தனம்
பத்தியாகாரி-சிறுகீரை
பத்தியம்-கடுக்காய்
பப்பரப்புளி- பெருக்க மரம், தொதி.
பப்பாளிப்பால்-ஓர் பால்

இந்தப் பால் வயிற்றில் கிருமிகளுக்கு மிகுந்த அனுகூலத்துடனே நுகனமாய்ப் பிரயோகிக்கப் பட்டிருக்கின்றது. பப்பாளிக் காயைக் குத்தி அதில் நின்று வடியும் பாலைச் சேர்த்தெடுத்து பிராயமானவர்களுக்கு 1-மேசைக் கரண்டியளவு அல்லது அரை அவுன்ஸ் பாலைச் சயனளவு தேனில் கலக்கி இதனுடன் 2-அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீர்விட்டு எல்லாம் ஒன்ருய்க் கலக்கிக் கொண்டு ஆறின வுடன் குடித்து 2-மணி நேரஞ் சென்றபின் ஒரு அவுன்சு ஆமணக் கெண்ணெயை அரை அவுன்சு எலுமிச்சஞ் சாற்றுடன் கலந்து குடிக்க வேண்டும். இந்தப்படி 2-நாள் தொடர்ந்து செய்யவேண்டும். மூன்று வயது முதல் ஏழு வயது வரையுள்ள குழந்தைகளுக்கு மேற்படி அளவில் பாதி போதும். மூன்று வயதுக்குக் கீழ் முன் சொன்ன அளவில் மூன்றிலொரு பங்காவது ஒரு தரமாவது கொடுக்கலாம். இந்த பாலைக் கொடுத்த பின் வயிற்றுவலி கண்டால் சருக்கரையும் தண்ணீரும் அல்லது சருக்கரையும் பாலுமாகபூர்த்தியாய்க் கொடுக்கலாம்.

பம்பந்திராய்-திராய்ப் பூண்டு
பம்பிகை-பீர்க்கு
பயசி, பயருதி- திருநாமப் பாலை
பயறு-ஓர் நவதானியம்

அவை: எலிப்பயறு, கறுப்புப் பயறு, சடைப்பயறு, சிறு பயறு, தட்டைப்பயறு, துலுக்கப்பயறு, நரிப்பயறு, நன்னிப்பயறு, பச்சைப்பயறு.

பயிரவி-முடக்கொத்தான்
பயிருகம்-பழம்பாசி
பயிலியம்-குப்பைமேனி
பரத்தை-ஓர் செடி, வெப்பரத்தை, செம்மரத்தை.
பாரகம்-சந்தனம்
பாராய்-பிராய்
பரி-பருத்தி
பரிமணி-கரந்தை
பருத்தவழகை-மல்லிகை
பருத்தி-பருத்திச்சேடி

அவை : உப்பம்பருத்தி, ஐம்பருத்தி, காட்டுப்பருத்தி குப்பைப்பருத்தி, செம்பருத்தி, தாளிப்பருத்தி, நாடன் பருத்தி, பூப்பருத்தி, வேலிப் பருத்தி.
பருவயோனி-கரும்பு
பருவி-தில்லை
பலசேகரம்-தென்னை
பலசாடவம்-மாதளை
பலசிரேட்டம்-மாமரம்
பலச்சரீடம்-குன்றி
பலண்டுறுகம்-ஓர் பாஷாணம்
பலதாது-புளியமரை [ம்
பருபூரகம்-மாதளை
பலப்பிரேதம்-திப்பிலிமூலம்
அவை: 1-கடுக்காய், 2-நெல்லிக்காய், 3-தான்றிக்காய்.
பலமபலம்-சேங்கொட்டை
பலவு-பலாமரம்
பலன்-ஈரவெங்காயம்
பலாசு-பலாமரம், முறுக்கு
பலாசு-முன்முருக்கு, நரிமுருக்கு, முருக்கு
பலாண்டு-ஈரவெங்காயம்
பலாதவம்-பூனைக்காலி
பலாமோதாகம்-மாமரம்
பலினி-கோங்கு,ஞாழல்
பல்லசுருகம்-பாதிரி
பல்லோற்பதி-மாமரம்
பல்லகி-சேங்கொட்டை
பல்லம்-சேமரம்
பல்லவத்தி-அசோகு
பல்லாதகி- சேங்கொட்டை, சேமரம்.
பல்லனர்-சதுரக்கள்ளி
பல்லினர்-குழவி, மலைப்பச்
பல்லிக்-சேங்கொட்டை [சை
பல்லிபபூடு-மலைப்பல்லி
பல்லுயம்-பெருவாகை

பவளம்-ஓர் அரதனம்
செவப்பான பவளம ஐரோப்பிய தேசத்தில் அவுஷதத்தில் உபயோகப்படுத்துகிறார்கள். அது ஜப்பான் தேசத்தில் சாதாரணமாயிருக்கிறது. சுமாத்திரா தீவுக்கு மேற்கு கடற்கரையில் செழுமையாய் வளருகின்றது. தமிழ் வைத்தியர் இதனால் செய்யப்படும் பற்பத்தை நீரிழிவு மூலக்கிராணி இவைகளுக்கு உபயோகப்படுத்துகிறார்கள்.
பவளக்குறிஞ்சி-ஓர் செடி
பவளப்புற்று பாஷாணம்-ஓர் பாஷாணம்
பவளப்பூல அல்லது பூன்-ஓர் செடி
பவளமல்லிகை-ஓர் செடி
பவளவங்காரவச்சி- ஓர் பூண்டு
பவித்திரி-தருப்பை
பழபாசம்-கருஞ்சீரகம்
பழப்பேசி- செப்புநெருஞ்சில்
பழுபாகல்-துவரை
பழுமரம்-ஆலமரம்
பளிற-கருப்பூரம்
பறங்கிக்கொடி- பூசணிக்கொடி
பறங்கிக்கிழங்கு- சீனப்பல.
பறங்கிப்பட்டை- ஓர் மருந்து.
இத்தக் கிழங்கு சீன தேசத்திலிருந்து கொண்டுவரப்படுகின்றது. அவ்விடத்தில் விஸ்தாரமாயுண்டாகின்றது. இதைத் தமிழ் வைத்தியர் நாட்பட்ட மேகவியாதிக்கும், மேகவாய்வுக்கும், கை கால முடக்கத்துக்கும் உபயோகப்படுத்துகிறார்கள்.
பறிவை-நந்தியாவட்டை

பறுணி-கொள்ளு, சீந்தில், பெருங்குமிழ், பெருங்குரும் [பை
பறைசீவி-சிறுநன்னாரி
பற்பம்-தாமரை
பற்றை-செங்காந்தள்
பனசம-பலாமரம், பாற்சொற் [றி
பனசயித்தி-அரசு
பனரை-நெய்க்கோட்டான்
பனிச்சர்-பனிச்சா, காஞ்சாங் [கோரை
பனை-ஓர் மரம்

அவை: அலகுபனை, கூந்தற்பனை, தாளிப்பனை, நிலப்பனை.

பன்றிக்குறுமபு-நிலப்பனை
பன்றிக்கொம்பு-ஓர் கொம்பு

இது பிளாஸ்திரியிலும், தைலங்களிலும் சேர்க்கப்படுகின்றது. பழுப்பங்கல் கொடியின் வேரை உலர்த்திச் சூரணமாக்கி அதினோடு இதைச்சேர்த்து முளைமூலம், இரத்தமூலம், சீழ்மூலம், இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கிறார்கள்.

பன்றிமொத்தை - சிறுகுறட் [டை
பன்னல்-பருத்தி
பன்னி-சணல்

பஞ்சகற்பம் - கடுக்காய்த்தோல், கஸ்தூரிமஞ்சள், நெல்லிப்பருப்பு, மிளகு, வேப்பம்விதது. இவைகள் வகைக்குப் பலம் கால், பசுவின் பால்விட்டு அரைத்துக் கொதிக்க வைத்துச் சிரசில் தேய்த்து வெந்நீரில் ஸ்நானஞ் செய்ய அதிதூல ரோகத்திற்கும் அதிசூட்சரோகத்திற்கும் இடமில்லை. இதுவே பஞ்சகற்பவிதி.

பஞ்சபாஷாணம் - ஆணிப்புற்று, கண்புற்று, காய்ச்சல், குளிர், துன்மாங்கிஷம், மேகமும் போம்.

பஞ்சமுஷ்டி கஞ்சி - இளைப்பு, பித்தகபம், வாய்வும் போம். லங்கணத்திற் காகும்.

பஞ்சமூலம் - கண்டுபரங்கி, சித்திரமூலம், சுக்கு, செவ்வியம், போரத்தை; இவைகளுக்கு அநேக வியாதிகளெல்லாம் போம்.

பஞ்சலோகம் - இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி, இவைகளால் கண்ணோய்களும், பல நோய்களும் போம்.

பஞ்சவில்வம் - ஆத்தி, மா, முட்கிளுவை, முல்லை, வில்வம்: இவைகளால் கபம், காசம், சுவாசம், ஸ்தனக்காம்பிலுண்டாகும் கட்டியும்போம்.

பஞ்சவுப்பு-இந்துப்பு, கல்லுப்பு, கறியுப்பு, வளையலுப்பு வெடியுப்பு; இவைகளுக்கு அற்புதப்புண், கிராணி, குன்மம், சிலேட்டுமசீதக்கடுப்பு, சூலை, திரிதோஷம் நீராமை, நெஞ்சுவலி, பீலிகம், பயித்தியகுன்மம், மந்தம், வாய்வும் போம்.

பஞ்சவலக்கம - அத்தி, அரசு, ஆல், பூவரசு, வேல் இவைகளின் பட்டையால கபம், காசம், சுவாசமும போம்.

பஞ்சமெத்தை - விந்துதாபம், விந்தும் உண்டாம்.

பட்டுவஸ்திரம் - பித்தம், கபம் போம். காந்தி, புத்தி, மகிழ்ச்சி, வியர்வையும் உண்டாம.

பண்ணைக்கீரை-கரப்பான், சிரங்குப்புண். சீதமும்போம். குடலுக்குட் சீதம், மல மிளகலும் உண்டாம்.

பதுமகம்-பாலையாம்

பத்தியமுள்ளவர்கள் பகல் நித்திரை செய்வதின் குணம்-இரத்த பித்தரோகம், நேத்திரநோய்கள், விந்து நீற்றினமும் உண்டாம்.

பத்தி-சாதிபத்திரி, தாளிசாதிபத்திரி, லவங்கபத்திரி இவைகளால் தாகம், மலக்கடுப்பு, வாந்தி விக்கலும் போம்.

பப்பாளிப்பழம் - உடலில் நீரோடல், பித்தமும் உண்டாம்.

பயிற்றங்காய் - அரோசி ஐயம், உதிரவாய்வும் போம். அவிழ்த நாசம், தீபனமும் உண்டாம்.

பரட்டக்கீரை - கபம், கரப்பான், வாதமும் போம். பித்தம் உண்டாம், பத்தியத்திற்காகும்.

பரத்தையர் முலைப்பால் - கிரந்தி,சொறி, புண், கால் நோய்,முத்தோஷம், வாதமுமுண்டாம்.

பருத்தி-பெரும்பாடுபோம்.

பருத்திப்பஞ்சணை -அனல் போம், இரத்தம், சுரம், விந்து, விரகமும் உண்டாம்.

பருத்தியிலையுமொக்கும் பாலில் அரைத்து சாப்பிட்டால் இரத்தபித்தம், இரண வீக்கம், நீரிழிவு, மேகமெல்லாம் போம்.

பருப்புக்கோரை- பித்தமும் போம், இளமையுண்டாம்.

பருப்புப்பொங்கல்- பித்தம் போம், போகம், வாதமுமுண்டாம்.

பலகரை-கண்ணோய்,கபம், கால்சூலை கிராணி, தாகம், மந்தம், விஷசுரமும் போம்.

பல மெழுகுகள்-கொசுமெழுகு வசியம், எந்திரம் இவைகளுக்காகும். நன்மெழுகு புண்ணோய் போம். பொன் மெழுகு மாறல்சுரம் போம்.

பல மிருகப்பல்- விழிநோய்கள் பலதும் போம்.

பலாக்காய்-இளைப்பு இறைப்பு, மந்தம்,வாதம், விந்தும் உண்டாம்.

பலாக்கொட்டை - மலக்கட்டு, மலக்கருகலும் போம்.

பலாப்பழம் - கரப்பான் சிலேட்டுமம், பித்தம்,வாதம், மற்று மநேக வியாதிகளுமுண்டாம்.

பலாப்பிஞ்சு-தாகம், பித்தமும்போம், குன்மம், போகம், மந்தமும் உண்டாம்.

பலாயிலையிற் சாப்பிடல்-குன்மம், மனோஹர நோயும் போம், பித்தம் உண்டாம்.

பல்லக்கேற்றம் - பித்தம் போம். தாது, பசி, வாய்வும் உண்டாம்.

பல்லிப்பூண்டு - தோஷசுரம், பல்வலி, பித்தம், பலவிடம் வாய்வும்போம், தாளகமும், பாஷாணமும் சுத்தியாகும்.

பல் விளக்கத்தகாத வஸ்துக்கள்-கரி, கல், பாளை, மணல், வைக்கோல் இவைகளால் விளக்கினால் சீத்தவி

போய் மூதேவி வந்து சேருவாள்.

பல்விளக்கத்தக்க கொம்புகள் - ஆலுக்கு சரஸ்வதி கடாட்சம் உண்டாகும்; நாயுருவிக்கு வசீகரம் உண்டாகும; பூலாவுக்கு போகம் பொழியும்; வேம்புக்கு பல் துலங்கும்; வேலுக்குப் பல் விறுகும.

பவளக்குன்றிக்கொடி- இரத்த பித்த கபம, கடுவன், கரப்பான், கிரந்தி, சொறி, புண், மறுகரப்பான் மேகமும் போம்.

பவளம்-அதிதாகம், அருசி ஐயம், காசம், காமாலே, சயமராகம, சுரதோஷம், நாவரட்சி, பித்தபாண்டுபுழுவிடம, விந்து நஷ்டமும் போம்.

பவளவறுகு - சுவாசம்போம்

பழங்காடிநீர் - அதிசாரம், அரோசகம், கிராணி, பலபிணி, பித்த மயக்கமும போம. தேககுளிர்ச்சி உண்டாம்.

பழஞ்சோறு - பித்தவாதம் போய, ஒளி,தாது, நித்திரை, மயக்கமும உண்டாம.

பழந்தேன்-மூலம்போம், தேகபலம், வயிற்றெரிவு, வாயுவந்தும உண்டாம.

பழமபாசி - மேகாந்தல், வெள்ளே யொழுகலும் போம.

பழம்புளி - கண்ணோய் கபம, சாத்துசுரம் சூலே, திரிதோஷம, பித்தம், வாதமும போம.

பழையவரிசி, ஐயம், பலநோயும்போம. உடல் குளிர்ச்சி, தீபாக்கினியும் உண்டாம், பத்தியத்திற்காகும்.

பழையவிளநீர் - பலவகை நோயுண்டாம்.

பள்ளநீர்-அக்கினி,மந்தம், கபம், கபாலரோகம், பித்தரோகம் பீநசம், மூலரோகம் வாதமும் உண்டாம்.

பள்ளையாட்டிறைச்சி - தீபனம்போம், அரோசகம்,கபம், தொந்தநோய், மந்தம், வாய்வுமுண்டாம்.

பள்ளையாட்டுத் தயிர்-பித்தம் உண்டாம்.

பள்ளையாட்டுப்பால் - பித்தம் உண்டாம்

பள்ளையாட்டின் நெய்-பலம், பித்தமும் போம்.

பள்ளையாட்டின் வெண்ணெய்- புத்தியீனம் உண்டாம்.

பறங்கிக்காய்-அனலமூற்சி, பித்தமும்போம், ஐயம், பசியும உண்டாம்.

பறங்கியிலே - தாகம், புழு, பித்தம், பேதி வாதமுண்டாம்.

பறங்கிப்பட்டை - கடி, கிரந்தி, குஷ்டம், பகந்தரம், பல்வாதம்,பிளவைபுண், முடம், மூலம், மேகம், வாந்தியும் போம்.

பறங்கிப்பட்டைக்குப் பத்தியம்- இஞ்சி, உப்பு, எண்ணெய், கடுகு,கார்ப்பு, கைத்தல், தோலாசன்னே, பாக்கு, புளி, மஞசள், மடலை, மாமிசங்கள், வாளே, வெளவால் இவைகளாகாது, சுத்தியான கடலுப்பு, வெள்ளாட்டிறைச்சியும் ஆகும்.

பற்பாடகம் - உன்மாதம், சீதவாத சுரம், தாகம், பித்த மும் போம். கண்குளிர்ச்சி உண்டாம்.

பனங்கற்கண்டு- தாகவெப்பம், நீர் சுறுக்கு, மேகவனல், வைசூரி வகையால் வீசுங் கனலும் போம்,

பனங்கிழங்கு- அஸ்தியனல், பல மேகமும் போம். அழகு, குளிர்ச்சியும் உண்டாம்.

பனங்குருத்து- உதிரமூலம், பேதியும் உண்டாம்.

பனங்கோவை- கரப்பான், பீநசம்,விடம்,வீக்கம், வெந்து விரிந்த புண்ணும் போம்.

பனம்பழம் - அழுகிரந்தி, கரப்பான், மலச்சிக்கு மற்றும் பல நோய்களும் உண்டாம்.

பனம்பூ-குங்குமம், நீர்க்கட்டு, பல்நோய், பழஞ்சுரமும் போம்.

பனிகால மணப்பூச்சு- அகில், கச்சோலம், கஸ்தூரி, குங்குமம், சவ்வாது, சாந்து இவைகளைப் பனிநீரிற் குழைத்துப் பூசிடில்-கபம், தாகம், தினவுபித்தமும்போம் அழகு செயம், பலம், பூமாது கடாக்ஷம், முகசந்தோஷம் வீரியமும் உண்டாம்.

பனிநீர் -காலையில் சாப்பிட்டால் அழல், கிராணி, குஷ்டம், சொறி, சிரங்கு, தாபம், நீரிழிவு, முத்தோஷம், வாய்வும் போம்.

பனைநுங்கு-எரிச்சல், தாகம் பித்தவெட்டை, மேகமும் போம், அஸ்தி குளிர்ச்சி, அமுர்தம் உண்டாம்.

பனைமது- தாகம், வெப்பம் போம; உதிரம், பித்தம், விந்தும் உண்டாம். பாஷாணங்கள் சுத்தியாகும்.

பனைவோலைவிசிறி - ஐயம். அருசி, பித்தம், வாதமும் போம்.

பனைவெல்லம் - அருசி, கபம் குஷ்டம், ஜன்னிவாத பித்தமும் போம்.

பன்றிநெய் - ஆசன மூல ரத்தம், நீர்க்கடுப்பு, வாத கடுப்பும் போம்.

பன்றிபுடலங்காய் - இறங்கிய விஷம் ஏறுதல், கரப்பான், காணுக்கடி, சயித்தியம், சிலந்தி, சொறி, சிரங்கும் உண்டாம்.

பன்னீர்-ஐயம், இளைப்பு, ஜன்னிகள், சுகசன்னிவாத பித்தம், வியாதிகளும் போம்; குளிர்ச்சி உண்டாம்.

பந்நீர் - செம்பிற்காய்ந்த வெந்நீர், கண்ணோய், சிலேட்டுமம் பித்தம், சுவாசம், பிரமை, வாய்வு விக்கலும் போம்.

பந்நீர்ப்பூ - அரோசகம், அழல், சாத்தி, தாது நஷ்டம், வரட்சியும் போம்.

பா

பாகல்-பாகல், பலா

அவை : காட்டுப்பாகல், கொம்புப்பாகல், நாய்ப்பாகல் நிலப்பாகல், பழுப்பாகல், மிதிப்பாகல்.

பாகு-பாக்குமரம்

பாங்குமரம-கருஞ்சீரகம்

பாடகம்-வெற்றிலை

பாசம்-சீரகம்

பாசருகம்-அகில்

பாசானபேதி-செப்பு, நெருஞ்சில்

பாசி- கடைச்சி, நீர்ப்பாசி, நெட்டி.

அவை: ஆற்றுப்பாசி, இலைப்பாசி, கடற்பாசி. கற்பாசி, கூந்தற்பாசி, கொடிப்பாசி, நீர்ப் பழம்பாசி, முட்டைப்பாசி, வழுக்குப்பாசி, வேப்பம்பாசி, வேலம்பாசி.

பாசு-மூங்கில்

பாசுவசுரேணி- காட்டாமணக்கு

பாஷாணம்-நச்சுச் சரக்கு

அவை: 1-பிறவிப்பாஷாணம், 2-வைப்பப் பாஷாணம் என இரண்டு வகையாம்.

பிறவிப்பாஷாணம்

1-அஞ்சன பாஷாணம், 2-அப்பிரகபாஷாணம், 3-அவுபலபாஷாணம், 4-இலிங்கபாஷாணம், 5-கந்தப்பாஷாணம், 6-காகாட்டுத்தாளகம், 7-கற்கட பாஷாணம், 8-கற்பறி பாஷாணம், 9-சாற்பாஷாணம், 10 காய்ச்சற்பாஷாணம், 11-காந்தபாஷாணம், 12-கார்முகில், 13-குதிரைப் பல், அசுவம் அல்லது சத்துருபம், 14-கந்தகம், 15-கவுரி பாஷாணம் அல்லது அங்காமாதி, 16-கோளக பாஷாணம் அல்லது அங்கம் 17-சங்க பாஷாணம், 18-சவ்வீரம் அல்லது பாங்கி பாஷாணம் அல்லது அங்குசன், 19-சாலாங்க பாஷாணம், அல்லது கும்பகம், 20-சலாமதம், 21-சீதாங்கபாஷாணம் அல்லது அகளங்கம், 22-சீர்தந்தர் அல்லது சலாலன், 23-சூதகபாஷாணம், 24தகட்டுத் தாளகம், அரிதாரம், 25-தாளம்பம், 26-துத்தபாஷாணம், 27-தொட்டி அல்லது கும்பம், 28-படலண்டுறுக பாஷாணம், 29-மனேசிலை, 30-மிருகம் அல்லது அங்கணன், 31-வெள்ளைப் பாஷாணம்.

வெள்ளைப் பாஷாணமானது மிகவும் பிரயோசனமுஞ் சத்துமுள்ள மருந்தாயிருக்கின்றது. ஆதலால் அதை உள்ளுக்கு கொடுக்கும்போது அதிக பத்தியமும் சாக்கிரதையும் வேண்டியிருக்கின்றது. இந்த ஔஷதம் முக்கியமாய்க் குளிர்சுரத்துக்கும் முறைக்காய்ச்சலுக்கும் நன்ருய்ப் பிரயோசனப்படும். ஒரு கிறெயின் வெள்ளைப் பாஷாணத்தை 10-சரிபங்கு செய்து அதில் ஒரு பங்கை 3-கிறெயின் நல்ல மிளகுத் தூளுடன் கூட்டிப் போதுமான தேன்விட்டு அரைத்து ஒரு மாத்திரையா யுருட்டிப் பிராயன மானவர்களுக்கு உண்டு ஒரு மணி நேரஞ் சென்றபின் கொடுக்கவேண்டும். இந்த மாத்திரையைக் கொடுக்குமுன் ஒரு பேதிக்குக் கொடுப்பது உத்தமம். இந்தப்படி சிலநாள் கொடுத்தபின் கண்ணிற் சிவப்பும் தினவும் இமைகள் பருத்து முறுக்கமுமாய்க் கண்டால் உடனே நிறுத்தி வியாதி நன்ருய்ச் சுகப்படாமற்

போனால் வேறே ஔஷதங் கொடுக்க வேண்டும். இந்தப் பிரயோகம் வைத்தியருடைய நிசானிப்பின்றி சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது. பெருங்கால் வியாதியைச் சார்ந்து வருகிற சுரத்தை நிறுத்தும் பொருட்டாய் இந்த மாத்திரைகளைக் கொடுக்கலாம். இது குஷ்டரோகத்தையுங் கேட்கும். ஆனால் இந்த வியாதிக்குக் கொஞ்சநாள் தொடர்ந்து கொடுத்தலவசியம். மருந்து தின்னும்போது கண் எறியும் இமைகள் முருக்கமுமுண்டானால் ஔஷதத்தை ஏழு நாளைக்கு நிறுத்தி ஒரு பேதிக்கு கொடுத்துப் பின்பு மாத்திரைகளை கொடுக்க வேண்டும். ஒரு சமயம் வாய்வு உபத்திரவமும் வயிற்றுப்போக்கும் வாந்தியுமுண்டாகில் மருந்தை தீர நிறுத்த வேண்டும். பாஷாணப் பிரயோகத்தைப்போல் மற்றொரு மருந்துக்கு இவ்வளவு மிகுந்த பத்தியமும் எச்சரிக்கையும் வேண்டியதில்லை.

வைப்புப் பாஷாணம்

1-அமரசிலைக்கந்தகம், 2-அயத்தொட்டி, 3- இந்திர பாஷாணம், 4- இரசிதம், 5- இரத்த பாஷாணம், 6-இலவண பாஷாணம், 7- எருமைநாத்தொட்டி, 8- கருமுகில், 9-கரசம், 10-குங்குமம், அஞ்சற்குளச்சு அல்லது சுமலி, 11கோடாசொரி, 12 கோழித்தலைக்கெந்தகம், 13 - சவ்வீரம் 14-சாதிலிங்கம், 15-சதம் 16-செப்புத்தொட்டி, 17சோரம், 18- தீமுறுகல், 19-துத்தம், 20-துரிசி, 21-தொட்டி 22-நாகபாஷாணம், 23 நீலம் அல்லது சுயக்குழவி ஈயத்தின்பித்தளை, 24-பஞ்சபட்சி, 25-பவழப்புற்று, 26-பூரம், 27-பொற்றொட்டி, 28-மிருதார்சிங்கி அல்லது சிங்கி, 29-வாண கந்தகம், 30-வெள்ளை, 31- வைப்பரிதாரம்.

பாடலம், பாடலி-பாதிரி
பாடா-பங்கம்பாளை
பாடீகம்-சந்தனம்
பாடை-பருத்தி
பாடைகுலைத்தான்-பாகல்
பாணம்-மழவண்ணக் குறிஞ்சி
பாணன்-காட்டாமணக்கு
பாணி-கள்
பாணியம்-வலம்புரிக்கொடி
பாண்டில் - வாகை, மூங்கில்
பாண்டு - சிறுபூளை, பாண்டு ரோகம்.
பாண்டுலா-கறிப்புடோல்
பாதசத்துவா, பாதரோகணம்-அரசமரம்
பாதாளமூலி - ஆடுதின்னாப்பாளை, கோரைக்கிழங்கு, சிறுநெருஞ்சி, சீந்தில்,
பாதிரம்-மலையாத்தி
பாதிரி-பாதிரி, மூங்கில்
பாதோசம்-தாமரை
பாத்தம்-எருது
பாத்தியம்-புருமூட்டி
பாத்தியல் - தண்ணீர்விட்டான்
பார்ப்பான்பூண்டு -ஓர் பூண்டு
பாமதம்-வாலுளுவை

பாம்புகொல்லி, பாம்பு மொச்சை, பாயசம்
பாற்சோற்றி-ஓர் பூண்டு
பாய்விரி-பசலை
பாரங்கு - சிறுதேக்கு, பாரத் துவரசி, காட்டுப்பருத்தி,
பாராவதம்-கருங்காலி
பாரிகோட்டம், பாரிசம், பாரிசவாயு-ஓர் நோய்
பாரிசாதம்-பவளமல்லிகை, முருக்கு
பாரிபத்திரம்-வேம்பு
பாரியம்-கடுக்காய், முருக்கு
பாருஷியம்-அகில்
பார்க்கவி-சிறுதேக்கு, வெள்ளறுகு.
பார்பதி-பெருநெருஞ்சில்
பார்வதம்-வாலுளுவை, வேம்பு.
பாலகம்-கோட்டம்
பாலடை-சித்திரப்பாலடை, பாலடைச்செடி
பாலதனயம்-கருங்காலி
பாலி-ஆல்,செம்பருத்தி, கள்
பாலிகை-அடம்பு
பாலிறுவி-முறுக்கு
பாலுலகம்-கருப்பூரம்
பாலை-ஓர் கொடி
அலை, கொடிப்பாலை, ஊசிப்பாலை ஓர் வகைச்செடி. ஏழிலைப்பாலை அல்லது ஏழிலைப்பாலை, கறிப்பாலை, குடசப்பாலை, காக்காய்ப்பாலை, ஓர் மரம், குடசப்பாலை, கொடிப்பாலை, திருநாமப்பாலை,நிலைப்பாலை, பூப்பாலை, விழுப்பாலை, வெட்பாலை.
பாலைநலமரம்-குரா, மரா
பாலொடுலை-கொடிப்பாலை
பாவட்டை-ஆடாதோடை
பாவட்டைவேர்- ஓர் மருந்து வேர்.
இது கசப்பாக விருக்கும் பேதி யுண்டாக்குகிற குணமுடையது. மேகத்தினாலுண்டாகும் நரைப்பு கல்லடைப்பு இவைகளுக்கு உபயோகப் படுகின்றது. வீக்கம், அதைப்பு, பாண்டு, நீரேற்றம் இவைகளுக்கு மலபேதி மருந்தாயிருக்கின்றது.
பாற்சோற்றி- பொற்றிக்கீரை
பாற்பீர்க்கு- வெள்ளைப்பீர்க்கு
பாளிதம்-கற்பூரம், பாற்சோறு
பானல்-கருங்குவளை
பானியவல்லி - வலம்புரிக் கொடி
பானைவெடிச்சான் - புளவை கொல்லி
பாகலிலை- கிருமிதோஷம், பாஷாண தோஷமும்போம். இரசமுறிவு பேதியு முண்டாம்.
பாகல்காய்-பாவற்காய்
பாகல்பழம் காசம் கிருமி, குஷ்டம், சுவாசம், திரிதோஷம், மூலம், மேகமும்போம்.
பாசிநீர் - பல் நோய்களுண்டாம்.
பாடலை-கரப்பான், சொறி, புண், மூலம், மேகத்தால் வந்த பிளவையும் போம்.
பாதரசம் - கண்ணோய், கிரந்தி, குஷ்டம், குன்மம், சூலை, புண், வாதவியாதிகள் மற்றுந் தேகத்திலுள்ள வியாதிகளும்போம்.
பாதரசதோஷம் - ஓயாத வியர்வை, தேகவனம், பித்தம், வாய் பிதற்றலு முண்டாம்.

பாதரசபத்தியம் - உட்டினம், உப்பு, கைப்பு, சீதம், நல்லெண்ணெய், படுக்கை, புளிப்பு, மதுபானம், மச்சமுமாகாது.

பி

பிகபெந்து, பிகராகம், பிகவல்லபம்-மாமரம்
பிசவ்வியம்-பருத்தி
பிசமை-செஞ்சந்தனம்
பிசாசுப்பிரியம்-வேம்பு
பிசாசம்-பேய்க்கரும்பு
பிசாச்சி-சடாமாஞ்சில்
பிசிகம்-வேம்பு, நீர்
பிசு-பருத்தி
பிசுதூலம்-பருத்தி
பிசுமந்தம்-வேம்பு
பிசூகம்-வேலிப்பருத்தி
பிச்சம்-இருவேலி, காஞ்சிரை
பிச்சி-சிறுசண்பகம்
பிச்சை-வாழை
பிச்சைக்காய்-ஓர் பழம்
பிஞ்சம்-சத்திக்கொடி
பிடி-ஏலம்
பிட்டகிப்பானை-ஆடுதின்னுப்பாளை
பிட்டிலம்-ஏலம்
பிணர்-கோங்கு
பிண்டபுட்பம்-அசோகு, செவ்வந்தி
பிண்டி-அசோகு,
பிண்டிதம்-மருக்காரை
பிண்டிவாளகம்- குந்துருக்கம்
பிண்ணுக்குக்கீரை, பிண்ணுக்குப்பூண்டு-ஓர் பூண்டு.
பிதிகம்-பெருங்குரும்பை
பித்தசாந்தி-பொன்னுங்காணி
பித்தம்-ஓர் நோய்

அருசிபித்தம், அரோசிகம், இரத்தபித்தம், கரும்பித்தம், சாயபித்தம, வறட்சிபித்தம், பித்தகாங்கை, பித்தகாசம், பித்தகாமாலை, பித்தகாரகம், பித்தகாரதத்தினுலே முகங்குளுகுளுத்திருக்கின்றது, பித்தகிராணி, பித்தகுன்மம், பித்தச்சூடு, பித்தகாரகம், பித்தசூலை, பித்தசோகை, பித்தசோகையினுலே முகம் குளுகுளுத்துருக்கிறது, பித்தத்தின்சூடு, பித்தநாடி, பித்தப் பிளப்பு பித்த மிஞ்சுகிறது, பித்தம் பிடித்தவன், பித்தரோகம.

பித்திகை-சிறுசண்பகம்
பிப்பலம்-அரசு
பிப்பிலி-திப்பிலி
பிப்பிலிசுத்தி - பெருநெருஞ்சில்
பிரகதி-கத்திரி, கண்டங்கத்திரி
பிரசம்-கள், தேன்
பிரசரம்-வேங்கைமரம்
பிரசோதினி-கண்டங்கத்திரி
பிரண்டை-ஓர் செடி

பிரண்டையை உலர்த்திச் சூரணஞ் செய்து அதை தமிழ் வைத்தியர் அசீரணத்தினுல் உண்டாகும் சில வயிற்றுநோய்களுக்கு நோய் சேதிக்கும் மருந்தாக உபயோகப்படுத்துகிருர்கள்.

பிரமதண்டு-குருக்கு
பிரமபத்திரம, பிரமபத்திரி-புகையிலை.
பிரமமூலி-பிரமி
பிரமியம்-ஓர் நோய்
பிரமியப்பூண்டு-ஓர் பூண்டு
பிராசீனம-பங்கம்பாளை
பிராய்-ஓர் மரம்
பிராயம்பட்டை-ஓர் பட்டை
பிரி-வெருகு
பிரியகம்-கடம்பு
பிருகருதி, தரு-கத்திரி

பிருதுவிகை-ஏலம்
பிருந்தம்-துளசி
பிரேயம்-கள்
பிலசம்-கருஞ்சீரகம்
பிலவம்-வாகை
பில்விக்குராயன்-இலாமிச்சை
பில்வியத்தி- பெருநெருஞ்சில்
பிளவை-ஓர் இரணம்

அவை: இறைப்பிளவை, உச்சிப் பிளவை, கன்னப் பிளவை, பனிச்சைப் பிளவை, ராசப்பிளவை, பெரும் பிளவை.

பிளாஸ்திரி-அவை

மெழுகு 2- அவுன்ஸ் எண்ணெ 5-அவுன்ஸ் இவ்விரண்டையு: ஒரு பரந்த சட்டியிலிட்டு சிறு நெருப்பின்மேல் வைத்து நன்ருய்க் கரையு மட்டும் அடிக்கடி விடாமல் கலக்கி பின்பு சட்டியுடனே இறக்கி வைத்துக் கொள்ளவாவது அதைச் சூட்டுடனே வேருெரு பாத்திரத்தில் விட்டு வைத்துக் கொள்ளவாவது செய்யலாம். இதைப் புண்கள் தோலுரிவு தீப்பட்ட புண் முதலியவைகளுக்கெல்லாம் அவைகள் சௌக்கியப்பட ஆரம்பிக்கிற சமயம சீலையில் தடவி இட்டுக்கொள்ளவேண்டும்.

பிறகரீகம்-அகில்
பிறசாதனம்-தேக்கு
பிறசாரிணி-கொடியார் கூந்தல்
பிரத்தியகபன்னி- நாயுருவி
பிறரோகி-வரற்சுண்டி

பிருமுட்டி-பிருமுட்டி சாய வேர்.

பிறியகம் கடம்பு, ஞாழில், வேங்கை.

பிசின்பட்டை- இரத்தத்திலுட சதையிலும் குத்திக் குடைகிற வாய்வும், தேகக் கொதிப்பும் போம.

பிடங்குநாரி- இரணசன்னி காயம், சகல விக்கலும் சுரோணிதக் கட்டும் போம்.

பிடாலவணம் - நீரிழிவும், மந்தமும் போம்; பசியுண்டாம்.

பிடிகிழங்கு - கரப்பான், தினவு, பலம, புணகளுமுண்டாம்.

பிட்டு உதிரக்கட்டு யோம்; உதிரத்தெளிவு, பலம், வாய்வுமுண்டாம.

பிண்ணுக்குக்கீரை - அனல் நீரடைப்பும் போம்; கரப்பான், வாதமுமுண்டாம்.

பித்தளை- இருமல், இரைப்பு, உஷ்ணம், தாபசுரம், பக்கவாய்வு, பித்தகுன்மம், பாண்டு, வாதமுங் போம்; சீதளம், தாது விர்த்தியுமுண்டாம்.

பிரண்டை- அதிசாரம், இரததப்போக்கு; கபம, மாந்தம, முளைமூலம, மூலத் தினவு, மூலரத்தம், வயிற்று வலி, வாய்வு போம; அதிக பசியுண்டாம்.

பிரதமைக கடுக்காய்-பலம போம, சுக்கிலமுண்டாம். மேல்தோலால் சுருங்கி உள் சதை பற்றியிருக்கும.

பிரப்பங்கிழங்கு- சூலைப் பிடிப்பு தந்த வியாதி வாய்வும் போம்.

பிரம்புதண்டுப்பால், -கண் கூசல், கண் சிவத்தல கண்

ணிருக்கல், கண்ணெழுகல், கண் நோகுதலும் போம்.

பிரமிகட்டி-சூலை, பாண்டு, மேக வலி, வாயு விரணம், வீக்கமும்போம். பசி பேதி, மலடிக்கு கெர்ப்பமும் போம்.

பிருதிவி- இரணம், பொறு மலும் போம்; பாண்டு பொன் மற்றப் பண்டகங் ளும் உண்டாம்.

பிருதிவி கடுக்காய்- பயித் தியம் போம். வயது வளர்ச்சி யுண்டாம். மெல்லிய தோ லுள்ளதாக விருக்கும்.

பிளப்புச்சீரகம்-பித்த வாத மும்போம்; அழகுண்டாகும்

பிளவைக் கொல்லிப் பூண்டு-இரணம், உள்மாந் தை, பிளவைக்கட்டி புண் மேகமும் போம்.

பீ

பீக்கருவேல்-ஓர் மரம்
பீக்கிலாத்தி- சதக்குப்பி
பீஞ்சல்-பீச்சுவிளா
பீதகதலி-செவ்வாழை
பீதகம்-இருவேலி
பீதகாரகம்-வேங்கை மரம்
பீதகாவேரம்-மஞ்சள்
பீதசாரம்-சந்தனம், வேங் கை மரம்.
பீதசாகரம்-வேங்கை
பீததாரு- செகபுளிச்சை, புன்னை
பீதபூதம்-கொம்மட்டி, மாத [ளை
பீதம்-மஞ்சள்
பீதபூதி-செம்மல்லிகை
பீதை-மஞ்சள், பொன்னிறப் பூவுள்ள மருதோன்றி
பீநாறிமரம்-பெருமரம்
பீநாற்றமரம்-ஓர் மரம்

28

பீரம்-பீர்க்கு, பூவரசு, வாகை
பீருகா-பீதரோகணி
பீர்-பீர்க்கு
பீர்க்கு-ஓர் கொடி
அவை: நுரைபீர்க்கு, பேய்ப்பீர்க்கு
பீனம்-பாசி

பு

புகள்-அகத்தி
புக்கி-பிராயம்

புடம்-பொன் முதலான சரக்குகளை நெருப்பு, வெய் யல், தானம் முதலானவை களாற் சுத்தம் பண்ணல்.

அவை: காடைப்புடம்-ஓரெருவிற் போடும் புடம், கவுதாரிப்புடம் - மூன்றெரு விற் போடும் புடம், குக்குடப் புடம் - பத்தெருவிற்போடும் புடம், வராகப்புடம்- இருப தெருவிற் போடும் புடம் அல்லது ஐம்பதெருவிற் போடும் புடம், கசப்புடம்-நூறெருவிற் போடும் புடம்.

புடல்-புடோல்
புடவிமூலம் - சிறுதுறட்டை
புடராமுனை- செந்நாயுருவி
புடோல்-புடல்
அவை: கொத்துப்புடல், நாய்ப்புடல், வன்றியபுடல், பேய்ப்புடல்.
புட்கரம்-தாமரைப்பூ
புட்குத்திருப்பி- வட்டத்திருப் [பி
புட்கம்-மூக்கிரட்டை
புட்பபாதகம்-மூங்கில்
புட்பம்-வாழை
புனை-மூங்கில்
புனைமரம்-வெண் கரும்பு
புண்டரீகம்-ஓர் நோய், ஒரு மருந்து, தாமரை.

புண்ணியதிரணம் - வெண்டருப்பை
புண்ணியாக்கம் - குத்துருக்கம்
புத்தாத்திரி-அரிநெல்லி
புந்திதம்-காஞ்சிரை
புத்திரசென்னி-தாளி
புத்திறி-கறிமுள்ளி, கீழ்க்காய்நெல்லி
புத்தின்சாரி-காஞ்சிரை
புத்துவணி-காஞ்சிரை
புத்தேன்-காஞ்சிரை
புரசு- அல்லது புரசைபலாசு
புரிமோகம் - சம்புநாவல், விளாத்தி.
புருடம்-புன்னை
புருண்டி-மல்லிகை
புல்லா-பூலா
புலித்தடுக்கி, புலித்தொடக்கி-கற்றாழை, சிங்கிலி, தொடரி
புலிபம்-பொன்னூவிரை
புலியுகிலி- புலிதொடக்கி
புல்-ஓர் புல், பனை
அவை : அளத்துப் புல், அறுகம்புல், இரத்தக் கோமாரிப்புல், இலைப்புல், உப்பறுகம்புல், ஊர்ப்புல் ஓட்டுப் புல், கச்சற்புல், கடுக்கன் புல், கணைப்புல், கதிர்ப்புல், கமரிப்புல், கமபப்புல், கர்ப்பூரப் புல், கழிப்புல், சழிமுட்டான் புல், காவெட்டம்புல், மாந்தப் புல், குசைப்புல், தருப்பை. பவித்திரி, குஞ்சப்புல், குடைப்புல், கோரைப்புல், கோரைக் கோழிக்காற்புல் சடைப்புல், சிலைப்புல், சுக்கு நாறிப்புல், செப்புல், நாணற் புல், சோணைப்புல், தண்டையம்புல், விசுவாமித்திரப்புல், அச்சுபாணல், பிரப்பங்காய்ப் புல், பிரப்பங்காய்க் கோரை, பீசைப்புல், மத்தங்காய்ப்புல், மருக்குருப்புல், முசுப்புல், முயற்புல், மூங்கற்புல்.
புல்லாந்தி-பூலா
புல்லியம்-புலிநறளை
புல்லூதியம்-பனை
புலிநவிருத்தம் -பெருவாகை
புருபீரு-தண்ணீர்விட்டான்
புழுக்கொல்லி- ஆடுதின்றுப் பாளை
புளிகப்பால்-சிலுவாலுளுவை
புளி-புளியமரம், புளிப்பு
புளிநறளை- புளிமா, புளிமாங்காய், புளிமாங்கனி.
புளிச்சக்காய்மரம்-ஓர் மரம்
புளிச்சக்கீரை-ஓர் பூண்டு
புளிநடலை, புளிமதுரை- புனிநறளை
புளியம்பாசி-ஓர் நீர்ப்பூண்டு
புளியரணை-ஓர் பூண்டு
புள்ளியம்-சிறுகுறிஞ்சா
புறம்பனை, புறவு-முல்லை
புற்கொடி-சுரை
புட்பதி-பனை
புற்பேதி-பூவரசு
புற்றுளி-பனை
புளகாலி-காசா அல்லது காயாபாதிரி.
புன்கு-புனகு, புன்முருங்கை
புன்னுருமம்-சாறணை
புன்னுகம்-கோழிக்கீரை,
புன்னிடா-தகரை [புன்னை

பூ

பூகம்-கமுகு, கூந்தத்பனை
பூகதம்பம்-நிலக்கடம்பு
பூகரபம் - கையாந்தகரை
பூக்கம்-கமுகு
பூங்கருமபு-செங்கரும்பு

பூசுணி-பறங்கிக்காய்
பூடு-பூண்டு
பூட்கரம்-கோட்டம்
பூட்பராசன்-கருஞ்சீரகம்
பூதகரப்பான்-பீநாறி
பூதகேசனி-சடாமாஞ்சில்
பூதகேசரி-வேட்பாலை
பூதகேசி-காஞ்சூரை
பூதத்துணர்-புன்முறுக்கு
பூநாசனம்-சேங்கொட்டை
பூதம்-ஆல்
பூதவச்சம்-பீநாறி
பூதவம்-பீநாறி
பூதவாசம்-தான்றி
பூதவிருக்கம்-பெருவாகை
பூதவிருட்சம்-ஆல்
பூதகேசி-வெண்ணொச்சி
பூதன்-கடுக்காய்
பூதாங்குசம்-பேய்மருட்டி
பூதாத்திரி- கீழ்காய்நெல்லி
பூதிநாய்-வேளை
பூதிகம்-அகில், சாதிக்காய்
பூதிகாஷ்டம் - செம்புளிச்சை
பூதிவாகம்-வில்வம்
பூநிம்பம்- நிலவேம்பு
பூந்தாது-கொங்கு
பூந்தி-புன்கு
பூந்துணர்-புனமுருக்கை
பூபதி-மல்லிகை
பூப்பருத்தி-ஒரு செடி
பூமலேக்கினம் - சங்கங்குப்பி
ஞாழல்
பூமிநாயகன்-நிலவேம்பு
பூயாரி-வேம்பு
பூரகம்-மந்தங்காய்ப்புல்
பூரணி-இலவமரம்
பூரம்-இரசகற்பூரம்
பூரிகா-அகில்
பூருண்டி-வேலிப்பருத்தி
பூலத்தி-மருதமரம்
பூல்-பூலா
பூவந்தம்-நிலாவிரை
பூவந்தி-புன்கு, பொன்னாங்
காய்மரம்
பூலாமரம்-கோளி
பூவிந்து-நாதம், அப்பிரகம்
பூவை-சாகா, காயா
பூமியபலம்-பூசணி
பூழில்-அகில்
பூழ்க்கரம்-கோட்டம்
பூறுகம்-நாக்குப்பூச்சி
பூனை-பூனைு, ஓர் மிருகம்
பூனைக்காஞ்சொறி-சிறுகாஞ்
சொறி
பூனைக்காய்வேளை-பூனைக்
காலி, பூனைக்கீரை
பூனைமடி-ஓர் பூண்டு
பூனைவணங்கி- குப்பைமேனி

பெ

பெங்கு-கள்ளிலோர்பேதம்
பெண்டுகம்-களற்சி
பெண்மரம்-புறவயிரமுள்ள
மரம்
பெண்ணை- பனை, நீர்முள்ளி,
பெண்மரம்
பெதரிகாளம்-காஞ்சிரை
பெத்தல்-பெருங்குரும்பை
பெத்தி-கரிமுள்ளி
பெயர்தனம்-வேங்கை
பெரியநங்கை- ஓர் புண்டு
பெருக்கு-பறப்புளி

பெருங்காயம்-ஓர் மருந்து, கறிப்பெருங்காயம், யானைப் பெருங்காயம்

இதன் பிரயோகம் காயத்தின் கீழ் பார்க்கவும்.

பெருங்காய்ஞ்சொறி -காய்ஞ்
சொறி
பெருங்காரை-ஓர் செடி

பெருங்கிழங்கு - ஈசுரவேர், சீனப்பலா, பரங்கிப்பட்டை,

காக்கணக் கொவ்வை -ஒரு வகைப் பூண்டு
பெருங்குறிஞ்சா- ஓர் பூண்டு
பெருங்கொன்றை-ஓர் பூண்டு
பெருங்சொன்றை-ஓர் மரம்
பெருஞ்சீரகம் - ஒருவகைப் பூண்டு
பெருஞ்செருப்படி-ஓர் பூண்டு
பெருநருவிலி-ஓர் பூண்டு
பெருந்துத்தி-ஓர் பூண்டு
பெருந்துளசி-ஒருவகைப் பூண்டு
பெருந்தாமரை-ஓர் மரம்
பெருமகம் - பீநாரி, பெருங்கள்ளி
பெருமரத்துப்பட்டை - ஓர் மரப்பட்டை

இதன் கஷாயம் அசீரண வியாதிக்குக் கொடுக்கப்படுகின்றது.

பெருமருந்து ஈசுரமூலி
பெருமல்லரி-பெருங்களி
பெருமல்லிகை-பேராமல்லி
பெருமூட்டை-பூநாறி
பெருமுசுட்டை-ஓர் பூண்டு
பெரும்பசறி-ஒருவகைப் பூண்டு
பெரும்பயறு-ஓர் பயறு
பெரும்பாடு-ஓர் வியாதி
பெரும்பிளவை- இராசரணம்
பெரும்பூளை-ஓர் பூண்டு
பெறுவயிறு-ஓர் நோய்
பெருவலி-பெருநோவு
பெருவள்ளிக்கிழங்கு-ஓர் பூண்டு
பெருவாகை-பெருவாதம், வேலிப்பருத்தி.
பெருவாரிக்காய்ச்சல்-ஓர் கொள்ளைநோய்
பெருவியாதி-குஷ்டம்
பெருவிரியன்-ஓர் பாம்பு

பே

பேதி-கழிச்சல்

பேதிகாரி - ஆற்றுத்தும் மட்டி, பேய்க்கொம்மட்டி, பேதியுண்டாகிற மருந்து.

பேதி-இரத்தம், நேர்வாளம்

அவை: அன்னபேதி, மாம்ச பேதி, சொர்னபேதி, அஸ்தி பேதி, அதிசாரபேதி, சாஸ்திரபேதி.

பேதை-கள்
பேயாவிரை-ஆவிரை
பேயூமத்தை-மருளூமத்தை
பேய்க்கரும்பு- ஒருவகை கரும்பு
பேய்க்கொம்மட்டி- ஒருவகை கொம்மட்டி
பேய்க்கொம்மட்டிக்காய் -ஓர் காய்

இது ஒரு கிரந்தத்தில் மூடு சன்னிக்கு முக்கியமான மருந்தாக சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் வைத்தியர் பெலமான பேதி மருந்தாய் உபயோகிக்கிறார்கள்.

பேய்த்தும்மட்டி - பேய்க்கொம்மட்டி, பேய்த்தும்பை, ஒருவகை தும்பை.

பேய்ப்பசலை - ஒருவகைப் பசலை
பேய்ப்பலவன்-மடுவன் கீரை
பேய்ப்பால்- ஒருவகைப்பால்
பேய்ப்பீர்க்கு - ஒருவகைப் பீர்க்கு
பேய்ப்புடல்-புடோல்
பேய்ப்புடல்-கணை, புல், ஒட்டுப் புல்.
பேய்மருட்டி-ஒருவகைப் பூண்டு
பேய்முன்னை- ஒருவகை மரம்

பேரத்தி - கறிமுள்ளி
பேராமணக்கு- ஓர் ஆமணக்கு
பேராமல்லி-ஓர் மல்லி
பேராமுட்டிவேர்-ஓர்வேர்
இதன்கஷாயம்-சுரங்களில் லகுவாய் வியர்வைப் பெருக்கம் உண்டாக்குதற்குக் கொடுக்கப்படும் மருந்தா யிருக்கின்றது.
பேரீகம்-வட்டத்திருப்பி
பேரீந்து-ஒருவகை மரம்

வை

வைந்திளை-கருத்திளை

பொ

பொக்கெனப்பிச்சி - முடக்கொத்தான்
பொக்கணம்-பெருமருந்து
பொங்கர்-இலவு
பொரிப்பூண்டு-ஙரப்பான் பூண்டு, வயற்சுள்ளி.
பொரிமலர்-புன்கு
பொருணி-கள்
பொருகல்-தும்பை
பொரும்பி-சுழலாவாரை
பொற்காசு-கொள்ளு
பொற்றுது - பொற்றலைக் கையாந்தகரை, அதிதும்பை.
பொன்முசுட்டை - பங்கம் பாளை.
பொன்னுங்காணி - ஒருவகை மருந்துபூண்டு, பொன்னுங்காணிக்குப் புளியிட்டுக் கடைந்தால் உண்ணுக்கெல்லாம் தித்திக்கும்.
பொன்னுக் கொட்டை - பூவந்தி
பொன்னும்பவளம் - நெய்க்கொட்டான்.
பொன்னுவிரை - ஒருவகை பூண்டு.

போ

போசிவல்லம்-சந்தனம்
போசம்-அகத்தி
போஸ்தக்காய்-உலர்ந்த கசகசாய்நெற்று.
போகம்-காஞ்சிரை, பசளை
போதி-அரசு
போந்து,போந்தை-பசளை
போம்பல்-நீர்க்கடம்பு
போல்-மூங்கில்
போளம்-நிலக்கடம்பு

ம

மகதி, மகதை-திப்பிலி
மகரகந்தகம்-தேமா
மகரம்பூ-வெந்தயம்
மகரவாழை- காட்டுமல்லிகை
மகருதம்-கொடிவேலி
மகாசகா-வாடாப்பூவுள்ள மருதோன்றி
மகாசுவேதம்-சிறுவாலுளு
மகாதிம்பம்-பெருமரம்
மகாதுருமம்-அரசு
மாநீலம்-கையாந்தகரை
மகாபலம்-கொளிஞ்சி
மகாபூ-பெருஞ்சீரகம்
மகாபேலா-பேராமுட்டி
மகாமேதை-மருளுமத்தை
மகாவல்லி-வில்வம்
மகாவிருக்கம்-சதுரக்கள்ளி
மகாவிருத்தி-வேம்பு
மகிழ்-ஓர் மரம்
மகோதரம்-நீர் நோய்
மகோற்பலம்-தாமரை
மக்கம்-எருக்கு
மங்கல்லியம்-சந்தனம்
மசுக்கரம்-மூங்கில்
மச்சி-பூனைக்காலி

மச்சியக்-கடுகுரோகணி
மச்சியாச்சி - பொன்னாங் காணி
மஞ்சலிக்காரன் - உருத்திர சடை
மஞ்சள்- ஒருவகை பூண்டு
கஸ்தூரிமஞ்சள்- ஓர் பூண்டு
இதன் கஷாயம் நீர்க்கட்டு பிள்ளைப்பேறு, மணிக்குடல் கட்டு முதலாகிய வியாதி களுக்குக் கொடுக்கப் படு கிறது.
மஞ்சட்காமாலை- ஒரு கண் ணோய்
மஞ்சணற்றி- நுணவு, நுணா
மஞ்சரி- நாயுருவி
மஞ்சனை-வேலிப்பருத்தி
மஞ்சா-இலைக்கள்ளி
மஞ்சாடி-ஒருவகை மரம்
மஞ்சாரி-கஞ்சாங்கோரை
மஞ்சிகம்-தாளிக்கொடி
மஞ்சிகை-கையாந்தகரை,
மஞ்சிட்டம்-மஞ்சாடி [தாளி
மஞ்சிட்டி-ஓர் செடி.
மஞ்சிபலை-வாழை
மஞ்சிலிக்காரன் - உருத்திர ச
மஞ்சிறு-கையாந்தகரை [டை
மஞ்சூரம் -கடலை
மடல் - ஈந்து, கமுகு, தா ழை, தெங்கு, பனை, வாழை அலகு
மடலை-அணக்கு
மடிதாழை-நோய்வயிறு
மட்டு-கள்
மணங்கு- இருவாட்சி
மணலி-மருக்கொழுந்து
மணி-அரதனம்
நவரத்தினங்கள்: அவை 1-கோமேதகம், 2- நீலம், 3- பவளம், 4-புஷ்பராகம், 5-மர கதம், 6-முத்து, 7-கெம்பு 8 - வைடூரியம், 9-வயிரம்.
மணிப்புங்கு, மணப்புளகு- நெய்க்கொட்டான்.
மணியாமணக்கு - பறங்கியா மணக்கு
மணிவீசம்-மாதலை
மண்டம்-ஆமணக்கு
மண்டலமட்டி-சிற்றிலுப்பை
மண்டலி-ஒருவகைபாம்பு
அவை : இரத்தமண்டலி, சீதமண்டலி.
மண்டிதம்-சிறுகீரை
மண்ணில் வேந்தன்-அரசு, வெற்றிலை
மண்ணை-வாலுளுவை
மண்தைலம்-ஓர் தைலம்
இது பசோரா நாட்டிலிருந் தும் சூலு தீபங்களிலிருந்தும் ஆவா ராச்சியத்திலிருந்தும் கொண்டு வரப்படுகின்றது.
மண்மலி-மருக்கொழுந்து
மதமடு-வெள்வெண்காயம்
மதமத்தம்பூ-ஊமத்தம்பூ
மதலிங்கம்-அமுக்கிரு கிழங்கு
மதலை-கொன்றைமரம்
மதரபன்னி-வட்டத்திருப்பி
மதனம்-மருக்காரை
மதனாலயம்-தாமரை
மதாலயம்-கொன்றை
மதிபதிச்சம்-வாலுளுவை
மதிவாம்பல்-சீந்தில்
மது-அசோகு, அதிமதுரம்
மதுகம்-காஞ்சிரை
மதுதிருமணம்-கரும்பு
மதுசூதம்-மாமரம்
மதுபருணிகை-அவுரி
மதுபன்னி-சீந்தில் [லிகை
மதுமல்லிகை-அடுக்குமல்லி
மதுரசம்-கொடிமுந்திரிகை, செஞ்சந்தனம்

மதுரவல்லி-சக்கரைவள்ளி
மதுவீசம்-மாதளை
மதூகம்-இலுப்பை
மதூலி-அதகமதுரம், மாமரம்
மத்தம்-ஊமத்தை
மத்தனலிங்கம்-மருக்காரை
மத்தாடி-கருஊமத்தை
மத்தியந்தகம்-மாமரம்
மத்தை-ஊமத்தை
மந்தாரசு-வெள்ளெருக்கு
மந்தாரம்-செம்பரம், முண்முருக்கு
மந்தாரகாசம்-ஓர் வகை நோ[ய்]
மந்தாரை-ஒருவகை மரம்

அவை: அந்திமந்தாரை, காட்டுமந்தாரை, கொக்குமந்தாரை, செவப்பு மந்தாரை, வெள்ளைமந்தாரை.

மந்திரி-திராய்
மம்முட்டி-சிற்றுமுட்டி
மம்மாயி-மாங்கிஷபேதி
மயிலம்-குப்பைமேனி
மயிலியம்-செம்பருத்தி
மயிலெண்ணெய்- ஓரெண்ணெய்

இது கீல்பிடிப்பு, ஓர்வித பாரிச வாயு இவைகளுக்கு மேல் பூசு மருந்தாக வழங்கப்படுகிறது.

மயிலை-இருவாட்சி
மயிலைநந்தி-மருதோன்றி
மயிலி-செங்கத்தாரி
மயில்துத்தம்-துருசு
மயில்முனிவன்-அகத்தி
மயூரகம்-நாயுருவி
மயூரம்-மயிற்கொன்றை
மரமஞ்சள்-ஓர் மஞ்சள்

இது சிரசுக்கு குளிர்ச்சிக்குச் செய்யப்படும் தயிலத்தில் சேர்க்கப்படுகின்றது.

மரள்- மருள், அரலை.
மரவம்-குங்குமம்
மரவுப்பு-ஓர் உப்பு

இது சில மூலிகைகளின் சாம்பலிலிருந்து செய்யப்படுகிறது. இதனோடு சூடுள்ள விதைகளைச் சேர்த்துத் திராவகமிறக்கி ஜலபேதி மருந்தாக வழங்குகிறது.

மரா-வெண்கடம்பு, ஆச்சாமரம், அரசமரம்
மருங்கு-மருக்காரை
மராட்டிமொக்கு-ஓர் மொக்கு

இது கொதியைத் தணிக்கிற சாந்தமாக்குகிற மருந்தாகவும் கொஞ்சம் லாகிரியுள்ளதாகவு மிருக்கின்றது. பேதியைக் கட்ட லேகியத்தில் சேர்க்கப்படுகின்றது. பாலிலும் சேர்த்துக் கொடுக்கப்படுகிறது. ஒரு வேளைக்கு ஒரே மொக்கு போதுமானதாயிருக்கின்றது.

மராமரம்- அரசு, ஆச்சா, வெண் கடம்பு.
மராளம்-மாதளை
மரிசம், மரீசம், மரீசி- மிளகு
மகரம்பூ-உஷ்ணம், தாகமும் போம்.
மகாமேதை-விஷசுரம்போம்.
மகிழம்பூ-அரோசி போம். அனல் விகாரமும் உண்டாம்.

மகிழவித்து-மலம், விஷம், விழி தோஷம், வெப்பும் போம். சீதளம், தாது, தேக வழகுபலமுண்டாம். கலிக்கத்திற்காகும்.

மகிழம்பட்டை- பல்நோய், போம்.

மஞ்சட்கிழங்கு - ஐயம், கடி விஷம், தலைவலி, நீரேற்றம், பித்ததோஷம், பீனிசம், புலால் நாற்றம், மந்தம், மேகம், வலி வாதம், வாந்தி விரணம், விக்கலும்போம் தீபனம், புருஷவசியம், பொன்னிறமுமுண்டாம்.

மஞ்சட்குளியல் - ஐயம், துர்க்கந்தம், முகவருத்தம், வியர்வு போம்.

மஞ்சள்காய்ச்சியநீர் - கபம் கோமம், பழஞ்சுரம், பித்தமும் போம்.

மஞ்சள் சோளம் - பல கரப்பான் உண்டாம்.

மஞ்சள் வஸ்திரம் - காசம், நமைச்சல், நீர்க்கட்டு, மலக்கட்டு, விஷசுரம், வெப்பும் போம்.

மடலரிதாரக்கட்டு - காய்சல், குஷ்டம், நடுக்கலும் போம்.

மடலரிதாரம் - ஆராதபுண், இருமல், ஈளை, கபம், காமகரப்பான், கோழை, மலமும் போம்.

மடலைமீன்கறி - உலரல், கரப்பான், குடல்வாதம், சூலை, மந்தம், மூலைமூலம், வாதமுமுண்டாம்.

மடுமீன் - வாதபித்தம்போம்

மடையான்கறி - ஐயம், கரப்பான், சொறி, சிரங்கு வாதமும் உண்டாம்.

மட்டிப்பால் - அரோசி, தலைவலி, நீரேற்றம், வாதம், வாந்தியும் போம்.

மட்டைநீர் - கிரிச்சரம், நீரிழிவு, பவுத்திரம், புண், வயிற்றுக் கடுப்பும் போம்.

மணக்குழம்பு பூசுதல் - அணுக்கிருமி போம் இன்பம், உதராக்கினி, நாதவிந்து, பலமு முண்டாம்.

மணத்தக்காளிக்காய் - கபம், தணல்வாதமும்போம், மலமிளகல் உண்டாம்.

மணத்தக்காளியிலை - வாய்க்கிரந்தி, வேக்காடும்போம்.

மணத்தக்காளி வற்றல் - இளைப்பும், வாந்தியும்போம். நீர் பேதியுண்டாம். பிணியாளர்க்காகும்.

மணப்பாகு - அருசி, பித்தம், வாதமும்போம், அனலுண்டாம்.

மணலிக்கீரை - கபம், கிருமி, சீதநோய், பயித்தியம், வாதமும்போம்.

மணல் - அதிசாரதாகம், சகலாதாகம், சீதளதாகம், நிலையாத்தாகம், மகாசுரம், மந்ததாகம், மந்த பிரதாபமும் போம்.

மணிச்சம்பாவரிசி - நீரிழிவு போம், சுகம், தேகவளர்ச்சி பசியும் உண்டாம். பத்தியத்திற்காகும்.

மணிப்புருக்கறி - ஐயம், குன்ம ரோகம், வாதக்கட்டும் போம். பத்தியத்திற்காகும்.

மண்டூரம் - அஸ்திசுரம், ஐயம், சுவாசம், சோபை, விஷபாகம், வீக்கமும்போம். இரத்தம் தாதுமுண்டாம்.

மந்தாரைப்பூ - தேகக்கொதிப்பு போம் இராசவசியம் கண்ணுக்குளிர்ச்சி, தேகக் குளிர்ச்சியுமுண்டாம்.

மந்திஷ்டி - இரத்த பித்தம் போம்.

மரியமீன்கறி-ஐயம், கரப்பான், சோபம், வயிற்றுள் வாதம் வாதபித்தமும்போம்.

மயிர்மாணிக்கம் - சயரோகம், மேகம், மேகவெட்டை விரணமும் போம்.

மயிலிறகுச்சாம்பல்-வாந்தி விக்கலும் போம்.

மயில்கறி - இரத்தவாயு சிலேத்துமம், சூலைப்பிடிப்பு, பித்தமும் போம். அனல் பசியுமுண்டாம்.

மயில்நெய்-நரம்பு முடக்கு போம். முகஞ் சிவக்கும்.

மயில்விசிறி - குன்மம், சன்னி, தலைச்சுழலல், பித்தம், வாததோஷம், விக்கல், விஷம், வியர்வையும் போம். அனல் புத்தியும் உண்டாம்.

மரகதம்-சகலதோஷசந்நி, புண் பூதபசாசு, மதுமேகம், விஷமும் போம். தாது தீபனம், பலமும் உண்டாம்.

மரக்காரைப்பழம் - உதிர ஊதல், சுரம், பொருமல் மயக்கம் வயிறூதலும்போம் அறிவு உண்டாம்; கலிக்கத்திற்கும் நசியத்திற்குமாகும்.

மரக்காரை வேர் - இரத்தபித்தம், கரப்பான் சிலேட்டுமம், சீதக்கடுப்பு, திரிதோஷம், மர்ந்தகணம், வாதமும் போம். வாந்தியுண்டாம்.

மரநாயிறைச்சி - கிரந்தி, சுரம், சூலை, வாதம், மேகம், விரைவாதமும் போம்.

மரமஞ்சட் கிழங்கு-அருசி, கணச்சுரம், கணமூலம் சுரம், சுவாசமும் போம்.

மரவள்ளிக்கிழங்கு - அனல் பித்தவாயு, மந்தமும் உண்டாம்.

மரியங்காய் - அரோசகம், சுரம் வாய்க்கசப்பும் போம்.

மருக்கொழுந்து - அனல், கபம், சுரம், கணதோஷம், கைப்பு, சூடும் போம். பசியுண்டாம்.

மருள்கிழங்கு-ஐயம், காது விரணம், தொண்டைக்கட்டு, மகோதரம், மூலங்கள் பல வீக்கமும் போம். பசியுண்டாம்.

மருதநிலம்-வாதம் முதலாகிய முப்பிணிகளும் போம்.

மருதமரம்-கிருமி, குஷ்டம், சுரத்தயக்கம், தாகம், நீரிழிவு பிரமேகம், மயக்கம், வயிற்றுவலி, வரட்சூலையும், போம்.

மருதோன்றி-பருவு, பீனசமும் போம்.

மருதோன்றிப் பூ - உஷ்ணம், ஏவல், கபாலபீநிசம், குஷ்டம், சிரங்கு, சூனியம், தேமல், பெருஞ்சொறி, தேக வெப்பம் போம். உடலுக்கு வேண்டிய பலமும் தீபனமும் உண்டாம்.

மருதோன்றி - வித்துசூனியம், பில்லி, பேய், பூதமும் உண்டாம்.

மருதோன்றி வேர்-இரத்த பித்தம், சோணித தோஷம் போம்

மருவு-ஊஷ்ணம், சுரம், தாகமும்போம். பலம், புஷ்டியும் உண்டாம்.

மருளூமத்தை - சில்விஷங்கள், சீதசுரம், நீரேற்றம், மந்தம், வாயுவும் போம்.

மலர்க்கொன்றை-புழுபோம்.

மலாக்காய் கெந்தகம்- அபானவாயு, எரிவு, கபம், கபலாத்தின் சூடு, காந்தல், நாற்றம், பலம், பித்தம், பிரமை, மேகமும் போம்.

மலாக்காய் சாம்பிராணி- அஸ்திமேகம், இரத்தமேகம், சுக்கிலமேகம் போம். தசைமேகம், தாபம், மேக வாய்வும் போம்.

மலைத்தாங்கிப் பூண்டு- காதுவலி, சிரசு முதலிய விடங்களில் கனத்தல், சுரம், வாதம் 18-ம் போம். வாத சயித்திய மும் போம்.

மலைத்தேன்-ஐயம், அக்கிப்புண், இருமல், ஈளை, உடல்நோய், விக்கல், வெப்பம் போம். சங்கீதம் பாட சாரீரமும் பசியும் உண்டாம். மருந்தனுபானத்திற்காகும்.

மலைப்பாலை மரம் - கருங்கரப்பான், குன்மம், பக்க சூலை, மந்தம், வலி, வாந்தி விக்கலும் போம்.

மலையாத்தி -பேதிக் கட்டுண்டாம்.

மலையிலுப்பை - வாதம்போம்.

மலையேலம் - அரோசகம் உட்டினம் தாகசுரம், திரிதோஷம், நாவரட்சியும் போம்.

மலைவாழைக்காய் - வாதம் உண்டாம்.

மலைவேப்ப மரம் - மலட்டுப் புழு, வயிற்றுவலி, வாய்வும் போம்.

மலைவேப்பம்பிசின் - சலபேதி, வாதகரப்பான், மேகக் கட்டியும்போம். தாது உண்டாம்.

மல்யுத்தஞ் செய்தல் - கபவாதம், சூலை, மலம், வலியும் போம். பசிபலம், மெய்யிறுகலும் உண்டாம்.

மல்லிகை இலை-சவுக்கார எண்ணெய் போம்.

மல்லிகைச் சம்பாவரிசி - கண்ணழல், கரப்பான், மேகமும்போம். தேகபலம் உண்டாம்.

மல்லிகை - தாயின்குன்மம் அரோசகம், உஷ்ணம், பில்லி, சூனியம், மேகம், வெடி கிரந்தியும் போம்.

மல்லிகைப்பூ - அவல், கபம், கண் பிரமை சூனியமும் போம். இலட்சுமி வசியம், சூடு, போகமும் உண்டாம்.

மழைநீர் - அறிவு எவ்வுயிர்க்கும் விந்து, குளிர்ச்சி, சீதம் தெளிவு உண்டாம்.

மலைத்தேன்-இருமல் கபம், கண்ணிலுள்ள பூச்சி, கரப்பான், புண், புரை, புழுவெட்டுப் போம். தீபனம் உண்டாம்.

மலைப்புருக்கறி- கரப்பான், சுக்கிலம், சொறியும் உண்டாம். பத்தியத்திற்காகாது.

மனோசிலை - அஜகல்லி, இரைப்பு, காய்ச்சல் சிலந்தி, நடுக்கலும் போம்.

மரு-மருக்கொழுந்து

மருகு-மகரவாளை

மருச்சகம்- கொம்மட்டி மாதளை

மருதம்-மருது [ளை

மருதாணி - ஓர் செடி இதன் பூ இலை, கொழுந்து

இவைகளிலிருந்து சாரமெடுத்து குஷ்டரோகம், சரீரம் இளைத்துப் போகல் இவைகளுக்கு உள்ளுக்குக் கொடுக்கிறார்கள். மகமதிய சாதி பெண் மக்கள் கை நகங்களுக்கு வருணமிட்டுக் கொள்ளுகிறார்கள்.

மருத்திப்போதி-நாயுருவி

மருத்து-அமுதம், ஔஷதம்

மருபுகா-வாழை

மருப்பு-இஞ்சி

மருவகம்-மருக்காரை

மருவாரி-பாலை

மருளக்கிழங்கு-ஓர் கிழங்கு

இது நாட்பட்ட இருமல், காச வியாதிக்கு லேகியமாகச் செய்து கொடுக்கப்படுகிறது. இந்தப் பூண்டின் கொழுந்தின் சாறு குழந்தைகளுடைய தொண்டையிலிருக்கிற சளியைக் கழிக்க குழந்தைகளுக்குக் கொடுக்கப்படுகிறது.

மருள் - மருட்கிழங்கு, உன்மத்தம், ஒருவகைப் பூண்டு

மருளுமத்தை-ஓர் ஊமத்தை

மரை-தாமரை

மர்க்கடி-பூனைக்காலி

மலயம், மலயசம்-சந்தனம்

மலாசு-சிறுபூளை

மலைகலக்கி - ஒருவகைப் பூண்டு

மலைக்கடுகு - ஒரு வகைக் கடுகு.

மலைச்சக்கரை -வள்ளி, ஒரு வகைப் பூண்டு.

மலைதாங்கி-பங்கம்பாளை

மலைத்தும்பை - ஒருவகைப் பூண்டு

மலைத்துவரை - ஒருவகை தானியம்

மலைப்பச்சை- ஒருவகை மரம்

மலைப்பருத்தி- ஒருவகைசெடி

மலைமல்லிகை - ஒருவகை மரம்

மலைமுள்ளங்கி-ஒரு வகைப்பூ

மலையத்தி-அசமந்தம் [ண்டு

மலையாமணக்கு - ஒருவகை செடி

மலையாரம் மலையிசம் - சந்தனம்.

மலையிருவேலி-ஒரு புல், கைலகம், இலைவேலி

மலையினுச்சி - மாங்கிஷபேதி

மலையின்முனிவன் - மிளகு, அகத்தி

மலையீந்து-ஒரு மரம்

மலைவீரியம்- அன்னபேதி

மலைவேம்பு-ஓர் மரம்

மல்புறு-கார்போகரிசி

மல்லகம்-சிறுவாலுளுவை

மல்லிகம்-மல்லிகை

மல்லிகை ஓர் செடி

அதன் வகை : அந்திமல்லிகை, ஆற்றுமல்லிகை, ஈர்க்குமல்லிகை, ஊசிமல்லிகை, காட்டு மல்லிகை, குடமல்லிகை, கொடிமல்லிகை, சிறுமல்லிகை, நாக மல்லிகை, பவழமல்லிகை, பேராமல்லிகை, மலைமல்லிகை, வாடா மல்லிகை.

மறுக்காரங்காய்- ஒருவகைக் காய்.

இதை வைத்தியர்கள் இடித்து ஒரு வராகனெடை வாந்தி மருந்தாகக் கொடுக்கிறார்கள். இதன் வேர்ப்பட்டைக் குடிநீர் வயிற்று நோய்

களுக்குக் கொடுக்கப்படுகிறது.

மணிலாப்பயறு - வேர்க்கடலைப்பயறு.

மா

மா-ஓர் மரம்

அவை: காட்டுமா, புளிமா, தேமா.

மாகசம்-கையாந்தகரை

மாகதி-திப்பிலி, முல்லைக் கொடி, மிளகுக்கொடி

மாகந்தம்-மாமரம்

மாகுந்தம்-பூனைக்காலி

மாகாளிக்கிழங்கு-மயக்கம்

மாங்காய் - அறிவு, பசியும் போம். ஆருப்புண், கிரந்தி, தாதுநஷ்டம், பல் கூசல், சொல் குளறுதல், வாதமுண்டாம்.

மாங்கிஷங் கலந்து சமைத்த அன்னம் - அதிபலம் தாதுமந்தமும் உண்டாம், கபபித்தஞ் சமம் விரண நோய்க் காகாது.

மாங்கிஷபேதி-அழுகு கபம் சூலை, சோபை, பீலிகைக் கட்டியும் போம்; துன்மாங்கிஷம் கரைதலுண்டாம்.

மாங்கொட்டை - இரத்தக் கடுப்பு, சீதம், மூலக்கொதிப்பும் போம்.

மாசிக்காய்-அச்சரம், கண் நோய், பலமேகம். வெப்பும் போம், தேகபலமுண்டாம்.

மாசிப்பத்திரி-கனல், தேக நோய், வாய்வும் போம். துவர்ப்பு புளிப்பு முண்டாம்.

மாஞ்சிரோகணி- கண் புகை போம்.

மாடப்புருக்கறி - வாதம் போம், தாது, பசியுமுண்டாம், பத்தியத்திற்காகும்.

மாட்டிறைச்சி - பித்தம், பித்தசுரமும் போம், வாத சீதளமுண்டாம்.

மாணிக்கம் - சகல சந்நி, சந்நிதோஷம், சுரம், தாகம், நேத்திர நோய், மேகமும் போம்; பசியுண்டாம்.

மாதுளச்சமூலம் - அதிசாரம், இரத்தமேகம், கிராணிகள், சீதம், ஜலமேகம், தாகம், வாந்தியும்போம், தாதுவுண்டாம்.

மாதுளம்பழம்-கசப்பு, காதடைப்பு, கோழை, சர்த்தி, சந்நியாசம், தாகம், நெஞ்செறிவு, பித்தம், மந்தம, மயக்கம், மலட்டுநோய், வாந்தி, வாய்நீரூறல், விக்கல், வெப்பும் போம். அழகுண்டாம்.

மாதுளம்பிஞ்சு - இரத்தக் கழிச்சல், சலக்கழிச்சல், சீதக்கழிச்சல், மலக்கழிச்லும் போம்.

மாதுளம்பூ-அனல், இரத்த மூலம், கடுப்பு பித்த தோஷம் வாந்தியும்போம், இரத்த புஷ்டி பலமுமுண்டாம்.

மாதுளம்வித்து - சுக்கில தோஷம், மேகக் கடுப்பும் போம், சுக்கிலக் கட்டுண்டாம்.

மாந்தப்புல் - அசீரணம், சுரம் மந்தமும்போம்; பேதிக் கட்டுண்டாம்.

மாமரவேர் - சீதரத்தம், வயிற்றுக் கடுப்பு, வாந்தி, போம்.

மாவிலை - சோபை துயில், நீராம்பல், நீர்க்கட்டு, பாண்டு போம்.

மாம்பழம்-தீபனம் போம், கிரந்தி, தம்பனம், தாதுவிர்த்தி, தினவு, நெஞ்செறிவு, வாதகரப்பான் விழிநோயுமுண்டாம்.

மாம்பிஞ்சு-அரோசி, கபம் பித்தம், மந்தோஷம் வாதம், வாந்தியும் போம்.

மாலை இளநீர்கொள்ளல்-புழுச்சாகும்.

மாலைக்குளியல்- பசிபோம், நேயுண்டாம்.

மாவல்லிக்கிழங்கு -அனல், கபம், பித்தம்போம், தீபாக்கினி வாய்வுமுண்டாம்.

மாவிலிங்கப்பட்டை- கல்லடைப்பு ஜன்னி, வாதமும் போம்.

மாவிலிங்கமரம்-சுரம், தோஷம், வாதம், விஷங்களும் போம்.

மானிறைச்சி- தினவு வாதமும்போம்; கண்புகை, கபநோய், கழல்வாதம் தொந்த நோய் பித்தமுண்டாம்.

மான் செவிக்கள்ளிப்பால்- இரணம், கிரந்தி, சொறி, சொறிகிரந்தி, மலக்கட்டு, வறட்சியும்போம். பேதியுண்டாம்.

மானிறப்பசுவின்பால் - முப்பிணிபோம்.

மாங்கொட்டை- மாம்பழத்தின் கொட்டை.

மாங்கொட்டையின் பருப்பை உலர்த்தி தூள்செய்து 20முதல் 30கிறெயின் வரைக்கும் தேன் அல்லது வெல்லத்தில் சேர்த்து கொடுத்தால் நாகப்பூச்சிகளை வெளியிலாக்க உபயோகப்படும். மூலத்தில் நின்று இரத்தம் போகிறதுக்கும் மாதவிடாய் அதிகமாய்ப் போகிறதற்கும் கொடுக்க நிற்கும்.

மாசிக்காய்-ஓர் காய்

மருந்துக்கு உபயோகமாய் எடுக்கிற மாசிக்காய் உருட்சியும், ஒரு பெரிய ஜாதிக்காயின் பருப்பும், வெளிறினமஞ்சள் நிறமும் அதின் பக்கத்தில் துவாரமும் உடையதாய் இருக்கவேண்டும்.

சுரமில்லாமலாவது நெடுநாளாவதிருக்கப்பட்ட வயிற்றுப் போக்குக்கு ஒரு தரத்துக்கு 15கிறெயின் மாசிக்காயின் பொடியும் ½ கிறெயின் அபினியும், தேனில் சேர்த்துக் கொடுக்கவேண்டும்.

இப்படி தினம் மூன்றுதரம் கொடுக்கலாம்; நெடுநாள் சென்ற வயிற்றுக் கடுப்புக்கு 4 திராம் மாசிக்காயை 1அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரிவிட்டு ஆறினபின் வடிகட்டி 1 அல்லது ஒன்றரை அவுன்சு வீதம் அரை கிறெயின் அபினியுஞ் சேர்த்து தினந்தோறு மிவ்விதம் மூன்று தரங் கொடுக்கவேண்டும்; இந்த அளவுகள் பிராயமானவர்களுக்கே தகுந்தது.

நெடுநாளாயிருக்கப்பட்ட மேக வெள்ளைக்கும், ஸ்திரீகளின் மேக வெள்ளைக்கும் மாசிக்காயின் பொடியை தினம் 2-தரம் வேளைக்கு 20-

கிறெயின் வீதம் கொடுத்தால் நிறுத்தும். மேற்படி மாசிக்காயை நேர்மையாய் நுணுக்கி மூக்கினுள் ஏற்றினால் அதனுள்ளிருந்து இரத்தம் போகிறதைப் பிடிக்கும்.

நோவுள்ள பருத்த மூலமுளைகளில் அதிக சூடும், சிவப்பும் இல்லாதிருந்தால் 1-அவுன்சுமாசிக்காயைநேர்மையாய் நுணுக்கி 8-அவுன்ஸ் நெய்யில்நன்ருய்க் கலக்கித் தினம் இரண்டுதர மிடவேண்டும். மிகுதியாய் இருக்கில் மேற்சொன்ன சேர்வையில் ½ திராம் அபினைக்கூட்டவேண்டும். மலம் போகும் பொழுது மலக்குடல் தள்ளுகிறதற்கும் மேற்படி சேர்வையை தள்ளின குடலை உள்ளாக்கினபின் அதன் மேல் அபினின்றி இடவேண்டும். குழந்தைகளுக்கானல் முன்சொன்ன மாசிக்காய்ச் சேர்வையில் பாதி போதும்.

குளிர்சுரம் முறைக் காய்ச்சல் இவைகளுக்கு கீழ்ச் சொல்வதுபோல் செய்து கொள்ளவேண்டும். முதலாவது, ஆமணக்கெண்ணெயாவது வியாதிக்காரன் பலவானயிருக்கில் நேர்வாளமாத்திரையாவது கொடுத்து வயிறு சுத்தியானபின் 12-கிறெயின் மாசிக்காயின் தூளை குடிநீரில் ஒன்றரை அவுன்சில் சேர்த்து ஒரு மணி நேரத்துக் கொருதரம் முறைக்காய்ச்சல் வருகிற சமயத்துக்குமுன் 4-5 தரம் கொடுக்கவேண்டும். 5-முதல் 12வயசு வரையுமுள்ள குழந்தைகளுக்கு மேற் சொல்லிய அளவிற்பாதி கொடுக்கலாம். இந்த சுரங்களும் ஔஷதத்திஞற் சவுக்கியபடாதிருந்து வியாதிக்காரன் முக்கியமாய் ஈரம் கசியப்பட்ட தாழ்ந்த இடங்களில் அவன் சவுக்கியமுள்ள ஈரமற்ற காற்றிருக்கும் உயர்ந்த பூமியிலாவது கடற்கரையிலாவது மாறியிருந்தால் மிகுந்த நன்மையாம். இப்படிப்பட்ட வியாதிகளில் ஸ்தலமாறியிருக்கிறது அதிக உத்தமம்.

எட்டிக்கொட்டை காக்காய்க் கொல்லிவிரை அபின் இவைகளை நஞ்சாகத் தின்றிடில் உடனே வாந்திக்குக்கொடுத்து ஒரு அவுன்ஸ் மாசிக்காய்த்தூளை 12அவுன்ஸ் கொதிக்கிற தண்ணீரிவிட்டு ஆறினபின் வடிகட்டி அதில் 4-அவின்ஸ் வீதம் 10-அல்லது 15-நிமிடநேரத்துக் கொருதரம் கொடுக்கவேண்டும். வியாதிக்காரன் அபினையாவது ஊமத்தையாவது தின்றபின் தலைமயக்கம் அதிகமா யிருக்கில் அவனை இருக்கச் சம்மதியாமல் அங்குமிங்கும் நடத்திக் கொஞ்சம் காரமான காப்பித் தண்ணீரை கொடுக்கவேண்டும். காப்பித்தண்ணீர் செய்முறை காப்பிக்கொட்டையை வறுத்துப் பொடித்த தூளை ஒரு புட்டி தண்ணீரிலிட்டு 10-நிமிட நேரம் அடுப்பில் வைத்துக் காய்ச்சி ஆறின

வுடன் வடிகட்டிக் கொள்ள வேண்டும்.

மாசிப்பத்திரி-ஓர் பூண்டு

மாசுகம்-பீர்க்கு

மாச்சி-பாம்புகொல்லி

மாஞ்சில்-சடாமாஞ்சில்

மாடப்புருக் கண்ணிறம்- ஓர் பூண்டு, அமுக்கிரு

மாடம்-உழுந்து

மாதம்-காம்பு

மாதளை-ஓர் செடி

கொடி மாதளை, சீதளங் காய், சீதளக்கொடி, எலு மிச்சை.

கொம்மட்டி மாதளை, தாது மாதளை, கொடி மாதளை, பூ மாதளை, வயல் மாதளை, வெள்ளை மாதளை.

மாதளை மரத்தில் இரண்டு பாகங்கள் ஔஷதத்துக்கு உபயோகப்படும். அவை எவை யெனில் வேரின் தொலிசிகம், பழத்தின் மேல் தோலுமாம்.

வயிற்றுக் கழிச்சலுக்கும், பழகின வயிற்றுக்கடுப்புக் கும். மேற்படி பழத்தின் தோல் 2-அவுன்சு முக்கால் புட்டி தண்ணீரில் வேக வைத்து அரைப்புட்டியாக்கி தினம் 3-4-தரம் அரை அவு ன்ஸ் வீதம் கொடுக்கவேண் டும். கொஞ்சம் கொஞ்சம் சதைத்த கிராம்பாவது கறு வாப் பட்டையாவது மேற் படி கஷாயத்திற் சேர்த்துக் கொண்டால் உத்தமம். இந் தக் கஷாயம் முக்கியமாய் இத்தேசத்தாருக்கு உண்டா கும் வயிற்றெரிச்சலுக்கு உப யோகமாயிருக்கும்.

தொண்டை நோய்க்கு முன் சொன்ன தனிக்கஷா யம் அரைப்புட்டியில் 1-திராம் படிகாரமும் சேர்த்து வாயிலிட்டு அலம்பவும். இது உபஸ்தத்தி லுண்டாகும் வடியல்களுக்கு வெளியிலி டும் நல்ல ஔஷதமா யிருக் கின்றது.

நாடாபோலிருக்கும் நாகப் பூச்சுக்கு2-அவுன்சு மாதளை வேரின் தொலிசு 1-புட்டித் தண்ணீரில் வேகவைத்து அரைப்புட்டியாக்கி இதில் 2-அவுன்ஸ் எடுத்து காலை யில் உபவாசமா யிருக்கும் பொழுது கொடுத்து மறுபடி அரைமணி நேரத்திற்கொரு தரங் கொடுக்கவேண்டும். இப்படி நாலுதரங் கொடுத்த பின் பேதிக்கு 1-அவுன்சு ஆமணக்கெண்ணெய் கொ டுக்கவேண்டும். சாதாரண மாய் 12-மணி நேரத்துக் குள் நாகப்பூச்சிகளை வெளி யேபோக்கும். இந்தவகைக்கு இந்த ஔஷதத்தைப் பார்க் கிலும் மிகுந்த பலனுடைய தாய் வேறே ஔஷதங்கள் அரிதாய்க் காணும்.

மாதவி-குருக்கத்தி

மாதி-மா

மாதிபோதி-நெருஞ்சில்

மாதிரி-அதிவிடையம்

மாதுங்கம்-கொம்மட்டி மாதளை

மாதுலம்-ஊமத்தை

மாதுலிங்கம், மாதுடங்கம் - மாதளை

மாதேவி-சீதேவியார்

மாந்தல்புல்-காவட்டம்புல்

மாந்தி-மாமரம்

மாமாத்திரர்-வைத்தியர்
மாமுடி-நெட்டி
மாமுரி-நாயுருவி
மாய்-ஆச்சா
மாரடைப்பு-ஒருவகை நோய்
மாரகம்-கோடகசாலை
மாரி-கள்
மார்க்கா-கையாந்தகரை
மாலதி-சண்பகம், மல்லிகை முல்லை.
மாலம்-குங்குமமரம்
மாலயம்-சந்தனம்
மாலி-கள்
மாலுகம்-வேம்பு
மாலுகானம்-கண்குத்தி பாம்பு
மாலூரகம்-வில்வம்
மால்தொடை, மால்முருகு - துளசி
மாவகம்- இலுப்பை, காஞ்சி
மாவிருக்கம்- சதுரக்கள்ளி
மாவிலந்தம்-விடத்தேர்
மாவிலிங்குப்பட்டை-ஓர் பட்டை

இதன் ரசம் முறைக்காய்ச் சலுக்கும், எலும்புருக்கிக் காய்ச்சலுக்கும், சீரண மருந்தாகவும் கொடுக்கப்படுகிறது கஷாயமாகவும் கொடுக்கப் படுகிறது.

மாவிளம்-வில்வம்
மாழை-புளிமா, மா
மான்குளம்பு-அடம்பு
மான்செவி-இலைக்கள்ளி
மன்மதம்-கத்தூரி

மி

மிகுண்டம்-சாறணை
மிகுதியால்-வில்வம்
மிகுந்தவனம்-தண்ணீர் விட்டான்
மிகுப்பலத்தம் - காத்தொட்டி

மிசிரிப்பருப்பு -நீர்க்கடுப்பு, நீர்ச்சீதமும் போம், விந்து கட்டி உண்டாம். இரதங் கெந்தி சாப்பிட்டவர்களுக் காகும்.

மிருபாகல்காய்- கரப்பான், பித்தம், வாதப்பெருக்கும் உண்டாம். இரச பாஷாணங் களை முறிக்கும்.

மிருக்காய்-அதிக தாகமும் பித்தமும் போம். அழகு உதிரம் விந்தும் உண்டாகும்.

மிருதார்சிங்கு- கரப்பான், சிரங்கு, புண், படையும் போம்.

மிளகரணை - அசீரண வாதம், இருமல், இரைப்பு, ஈளை, உப்பிசம், ஐயம், பித்த சூலை கணமும் போம்.

மிளகு-அரோசி அபஸ்மாரம், கழுத்தின் நோய், காசம் காதுநோய், காமாலை, கிராணி, குய்யரோகம், குன்மம், கோணுகிறவலி சந்நியாசம். சிலேட்டுமம், சீதசுரம், பாண்டு, பித்தம், மந்தம், மாதர்குன்மம் மூலம் மேகம் வாதம் மற்றெல்லா நோயும் போம்.

மிளகாய்-சீழ்மூலம், வாதங்களும்போம். அதி-காரமுண்டாம்.

மிளகு சம்பாவரிசி-பலவித நோயும் வாய்வும் போம், சுகம் தீபனமு முண்டாம்.

மிளகு தக்காளியிலை- அனல், கழல், வாய்வு, சோபை, சோபநோய், பாண்டு, மந்தாக்கினி, முத்தோஷம், மேகச்சொரி, வாந்தி, விக்

கல், வெட்டை, வெப்பு போம்; கைப்பு உண்டாம்.

மிளகோதனம் - கபம், குடலிரைச்சல், பித்தம், வாதமும் போம்; பசியுண்டாம்.

மிசை-சோறு

மிதுக்காய்-ஓர் வெள்ளரிக்காய்

மிரிகபத்திரி-வாற்சுண்டி

மிரியல்-மிளகு

மிருஞ்சி-செம்முருங்கை

மிருகம்-நீர்வள்ளி

மிருதார்சிங்கு - ஒருவகை மருந்து

இது ஓர் கூட்டு வர்க்கமாயிருக்கிறது. சில களிம்பு அல்லது பிளாஸ்திரியில் சேர்க்கப்படுகிறது. காடியில் சேர்த்து முகப்பருவுக்குத் தேய்க்கப்படுகிறது.

மிருதூற்பலம் - நீலோற்பலம்

மிருத்தியுபுட்பம்-கருப்பு

மிருத்துவீசம்-மூங்கில்

மிருநாறி-தாமரை

மிலாங்கலி-செங்காந்தள்

மிலேச்ச கந்தகம் - வெண்காயம்

மிலேச்சாசம்-கோதும்பை

மிளகாய்ச்சக்களத்தி - ஓர் பூண்டு

மிளகு-ஓர் மருந்து, நல்ல மிளகின்கீழ் பார்க்க

மிளகுகரணை-கரண்டை

இதன்பட்டை சீரணிக்கிற மருந்தாகவும் பலன் கொடுக்கிற மருந்தாகவும் யோசிக்கப் படுகின்றது, இதன் குடிநீர் நாளொன்றுக்கு அரைத்தேத் தண்ணீர்சன்ன மளவு கொடுக்கின்றது.

மிளகுதக்காளி-ஓர் தக்காளி

மிறுங்கம்-கையாந்தகரை

மிறுசீரம்- இலாமிச்சம்

மிறுகு-சமுத்திராப்பட்டை

மிதுறுபலா-நெல்லி

மிறுதுபுட்பம்-வாகை

மிறுத்தாலகம்-துவரை

மிறுத்திகம்-கொடிமுந்திரிகை

மின்னி - கருத்தக் காக்கணம், நீர்ப்பயறு.

மீ

மீகை-புலிதொடக்கி

மீக்குவம்-மருதுமரம்

மீதி-கருஞ்சூரை

மீதுந்தி-நெல்லி

மீனஞ்சு-மீனெரிஞ்சான், மீன்கொல்லிப்பூண்டு.

மு

முகரி-தாழை

முகினி-புளி

முக்காவேளை- முட்காய் வேளை

இதன்வேர் அசீரணமான அல்லது குன்மமுள்ள நோய்களுக்குக் கொடுக்கப்படுகிறது. வைத்தியர் இதை இஞ்சியுடன் சேர்த்து கஷாயம் போட்டுக் கொடுக்கிறார்கள்.

முக்குளி-கோழிமுழையான்

முல்லைத்தாழை-நிலப்பனை

முசல்-முயல்

இதன் இரத்தத்தால் பவழபற்பம் செய்யப்படுகின்றன.

முசல்கொம்மட்டி-ஓர் பூண்டு

முசல்வலிப்பு-ஓர் நோய்

முசுக்கட்டை-கம்பளிக் கொண்டான்.

முசுட்டை-ஓர் மருந்து பூண்டு
அவை: பேய் முசுட்டை, பொன் முசுட்டை.
முசுமுசுக்கை-ஓர் பூண்டு
இதன் கொழுந்து சுகபேதிக்குக் கொடுக்கப்படுகிறது. பித்தத்தினால் அதிகமா யுண்டாயிருக்கிற உமிழ்நீர் வடிகைக்கும் பித்தத்திற்கும் குடிநீராகச் செய்து கொடுக்கப் படுகிறது.
முசுவல்-முசுட்டை
முசுறுப்புல்-அளத்துப்புல்
முஷ்டி-முட்டி
முஞ்சி-நாணற்புல்
முடக்கற்றான் - ஓர் மருந்து பூண்டு
இதன்வேர் சுதேச வைத்தியர் பேதி மருந்தாக வழங்குகிறார்கள். இதன் கஷாயத்தில் குடல் சுத்தியாய்ப் பித்தம் போகின்றது. மலையாள தேசத்தில் சயரோகம், சுவாசகாசம் இவைகளுக்கு இதனிலைகள் கொடுக்கப் படுகிறது.
முடங்கல்-தாழைமுள்ளி
முடங்கு-ஓர் நோய்
முடிமேல்முடி-செருந்தி-
முடிமேலழகி-கோடகசாலை
முட்டி-காஞ்சிரை, எட்டிமரம்
அவை: பேருமுட்டி, சிற்றுமுட்டி, தும்மட்டி, பேய்த்தும்மட்டி.
முட்டை-அண்டம்
முண்டகம் - கருக்குவாளி, கள், தாமரை, தாழை, முட்செடி, முள்ளிச்செடி, நீர்முள்ளி.
முதியம்-நாய்வேளை
முதிரை-முதிரை, அவரை' காராமணி, கொள்ளு, துவரை இவை முதலியன.
முத்தகம-கருங்குவளை [கு
முத்தக்காசு - கோரைக்கிழங்
முத்தம்-முத்து, இசங்குஞ்செ
முத்தாபறம்-இசங்கு [டி
முத்திருக்குஞ்செடி - ஓர் பூண்டு
இது பித்தப் போக்குக்காகக் கொடுக்கப்படுகிற மருந்தாக விருக்கிறது. கண்ணோய் வியாதிகளில் இதன் இலையை யிடித்துக் கண்ணைச் சுற்றிலும் பற்றுப் போடப்படுகின்றது.
முத்து-நவரத்தினத்தில் ஒன்று
இதனால் செய்யப்படுகிற பற்பம் கிருஷ்ண தோஷம் இவைகளுக்குக் கொடுக்கப் படுகிறது
முத்துக்கொட்டை - ஆமணக்கு, முத்து
முத்துச்சோளம்-ஓர் சோளம்
முந்திரிகை-முறிஞ்சி
முந்தூள்-மூங்கில்
முப்பூ - அகஸ்தியர் தமிழ் வாகடம்
இதில் பதினெட்டுக் குட்சிரோகங்களையும், அவைகளின் பரிகாரங்களையும் சொல்லியிருக்கின்றது.
முயற்செவிக்கள்ளி-ஓர் கள்ளி
இதன் கஷாயம் மலையாள தேசத்தில் சுரத்திற்குக் கொடுக்கப்படுகிறது. இதன் சாற்றில் சருக்கரை சேர்த்து வயிற்று நோவுக்குக் கொடுக்கப்படுகிறது. தேள் கொட்

டிருல். கொட்டின வாயில் இதனிலையை தேய்க்கப்படு கிறது.

முயற்புல்-ஓர் புல்

முருகு-அகில், தேன்

முருக்கு-முருக்கு, எலுமிச்சை

அவை: சலியாணமுருக்கு முண்முருக்கு, காட்டுமுரு க்கு.

முருங்கை-முருங்கை

அவை: சாட்டுமுருங்கை, கொடி முருங்கை, தவசு முருங்கை.

முருவலி-வய்வாலொட்டி

முல்லை - முல்லை, வனமல்லி

முழல்-கழற்சிக்கொடி [கை

முளரி-தாமரை

முளா -முள்ளங்கி

முளை-மூங்கில்

முள்ளங்கி-ஓர் கிழங்கு

முள்ளங்கத்தரி -காறற்கத்தரி

முள்ளி-கண்டல்

அவை : கறிமுள்ளி, அடுக்குமுள்ளி, ஆற்றிமுள்ளி, கழுதைமுள்ளி, செம்முள்ளி, நீர்முள்ளி, வறமுள்ளி.

முள்ளிலவு-ஓர் மரம்

முள்ளிவேர்- ஓர் மருந்துவேர்

இது நீர்க்கட்டு வியாதிக் குக் கஷாயமாகச் செய்து கொடுக்கப்படுகின்றது.

முள்ளுப்பலா-ஓர் பலா

முடைமுள்-ஓர் மரம்

முறைக்காய்ச்சல் - ஓர்நோய்

முறைமயக்கி-குப்பைமேனி

முற்கம்-பயறு

முனி-அகத்தி

முன்னங்கேயச்செடி - பிடங்குநாறிச்செடி.

முன்னை-ஓர் மரம்

அவை : எருமைமுன்னை, காட்டுமுன்னை, பசுமுன்னை, பேய்முன்னை.

இதன் வேர் சுகத்திலும் இவ்விதமான மற்ற சமயங்களிலும் ஜீரண மருந்தாகவும், பலன் கொடுக்கிற மருந்தாகவும் கஷாயஞ்செய்துக் கொடுக்கப்படுகிறது.

மகிழ்விரியாக் கத்தரிப் பிஞ்சி-அனல்; ஐயம், பித்தம் மலமும் போம்; குரலி ேைசயுண்டாம்.

முக்காற் கூறுகாய்ந்தவெந் நீர்-அனல், ஐயம், குளிர், நடுக்கல் பலவிதநோய், பித்தம், பித்தசுரம், வாதமும் போம்.

முக்குளிப்பான்பட்சி - பல வியாதிகள் உண்டாம்.

முக்குளிக் கீரை - அனல் போம். ஐயம், சீதம், பேதி, போகமும் உண்டாம்.

முக்கூட்டு நெய் - எள்ளு நெய், சிற்றாமணக்கு நெய், பசு நெய் இவைகளால் வாதம், பித்தம், ஐயம் என்கிற நோய்களுங் போம்.

முக்கூட்டு நெய் சேர்க்கும் விதி - வாத தேகிகளுக்குக் கூட்ட வேண்டிய முறை: பசுநெய் ஒரு பங்கு ஆமணக்கு நெய் மூன்று பங்கு, பித்த தேகிகளுக்கு எண் ணெய் ஒரு பங்கு, ஆமண க்கு நெய் இரண்டு பங்கு, பசு நெய் மூன்றுபங்கு சிலேட் டும தேகிகளுக்கு ஆமண க்குநெய் ஒரு பங்கு, பசுநெய் இரண்டு பங்கு, எண்ணெய் மூன்று பங்குமாம்.

முசலிறைச்சி - ஈளை, காசம், சுவாசம், பித்தம், மலக்கட்டு, வாதமும் போம். கடுநடையுண்டாம்.

முசல்காதிலை - கை காலிலுண்டான வீக்கம், பீநசத்திலெழுந்த வீக்கம், விஷங்களும் போம்.

முசுட்டை - ஐயம், கெட்ட நீர், சொறி, சிரங்கு. மலக்கட்டு, வறட்சி வாதமும் போம்,

முசுமுசுக்கை யிலை - இருமல், இரைப்பு, ஈளை, நீர்தோஷம், புகைச்சலும் போம்.

முசுமுசுக்கைவேர் - சளி, பித்தம், புண்விஷம், பெருவிஷம், மந்தம், வயிற்று நோய், வாந்தியும் போம்.

முசுறுமுட்டை - சர்வசுரவேகம், தாகம், பித்தமும்போம்.

முடக்கற்றான் - அண்டவாதம், கரப்பான், குருக்கு வாயு, சூலைப்பிடிப்பு, சொறி சிரங்கு, மலச்சிக்கல், வாய்வு போம்.

முட்காவேலை - அதிசாரம் சுரம், தாபம், மந்தம், வரட்சி போம்.

முட்பலா - ஆண்மையுண்டாம்.

முண்டாசுகவசம் - நடுக்கட்டு முண்டாசுக்கு பித்த வாதம் போம். மெய்க்கவசத்திற்கு காந்தி, புஷ்டியுமுண்டாம். நடுக்கட்டிற்கு பித்தம்போம். உதராக்கினி வீரியமுண்டாம்.

முதிர்பாகு, பழைய வெல்லப்பாகு - முதிர்பாகுக்கு மூத்திரக்கட்டும் வாத முதலாகிய நோயுமுண்டாம். பழைய வெல்லப்பாகுக்கு, அருசி, பித்தம், பேதி, வாய்வும் போம்.

முதலையிறைச்சி - கக்குவான், சீதம், வாய்வும்போம். ஆண்மையுண்டாம்.

முதற்கன்றீன்ற பசும்பால் - புஷ்டியுண்டாம்.

முத்து - அஸ்திசுரம், அருசி கண்ணோய், கபம், சீதளம், சோபை, தைரிய நஷ்டம், தாது நஷ்டம், தூர்ப்பலம், பித்தம், விஷமும் போம். அழகு வீரியமுமுண்டாம்.

முத்துச்சிப்பி - ஐயம், இருமல், ஈளை, க்ஷயம், மேகக்கட்டிபோம்.

முத்துச்சுண்ணம் - அதிசாரம், அரோசிகம், ஐயம், கிருமி, குன்ம நோய், நேத்திரநோய், வாதமும் போம்.

முந்திரிகைத்தேன் - குன்மம், மகோதரம், வயிற்றுவலியும் போம்.

முந்திரிகைமது - திரிதோஷம், வெப்பும்போம். இரத்தம், காமம், விந்தும் உண்டாம்.

முந்திரிப்பருப்பு - இந்திரிய புஷ்டி, இனிப்பு, பித்தவாயு, மந்தமும் உண்டாம்.

முப்பத்திரி - சுரம், தாகம், மலக்கட்டு, வாந்தி, விக்கல் போம்.

முருக்கன்வித்து - கிரந்தி, சீதம், மேகமும் போம்.

முருங்கைக்காய் - ஐயம், வாத முதலிய நோயும் போம். தாது உண்டாம். பத்தியத்திற்காகும்.

முருங்கைப்பட்டை - கபம், சந்நி, சுரம், பேதி, வாயு, வாதகோபம், விஷமும் போம்.

முருங்கைப்பிசின் - நீரிழிவு, வாய்வும் போம், மேனி விந்து தடிப்பு உண்டாம்.

முருங்கைப்பிஞ்சு- அஸ்தி சுரம், அரோசிகம், எலும் புருக்கி, வெப்பம் - விந்து நஷ்டமும் போம், பத்தியத் திற்காகும்.

முருங்கைப்பூ- அருசி, பித் தம், வெப்பும் போம். விந்து புஷ்டி, விழிகுளிர்ச்சியு முண் டாம்.

முருங்கையிலை- கண்ணோய் தலைநோய், மந்தமும், மூர்ச் சை, வெப்பும் போம்.

முருங்கையிலைச்சாறு- உஷ் ணம் போம்

முருங்கையிலையீர்க்கு- நீர்க் கட்டு போம்.

முருங்கைவித்து- மேனி யழகு, விந்து தடிப்பு மிக வுண்டாம்.

முருங்கைவேர்-கபம், சந்நி சுரம், வாத சோபமும் போம்.

முலைப்பால்- கபச்சாரம், கிரிச்சுரம், சந்நி, வாதசுரம், தாப தோஷம், பித்தசுரம், வறட்சியும் போம். கண் ணிற்கும், மருந்தனுபானத் திற்குமாகும்.

முலைப்பால் வெண்ணெய்- கண்ணெரிவு, காலெரிவு, கையெரிவு, நாசிகளுள்ளெ ரிவு போம்.

முல்லை-சோபம் போம்.

முல்லை நிலம்-பித்தம்போம் வாத முதலாகிய வியாதிக ளுண்டாம்.

முல்லைப்பூ- அரோசகம், அழல், மனநோயும்போம்.

முல்லைபேதம் -முத்தோஷம் போம்.

முழுத்துவரை- தாதுமூலக் கடுப்பு, மூலரத்தம், மூல முளை போம்.

முளகாய்பழம்- அரோசி, குன்மம், பொருமல், மாந் தம், வாய்வும் போம்.

முளைக்கீரை-அரோசி, சுர காசம், மேக வெட்டையும் போம். பொருமல், மந்தம், வாய்வு உண்டாம்.

முளைக்கீரைத்தண்டு- தேக மெல்லாம் வாய்வு உண் டாம்.

முள்துளசி- எலிவிஷம், விஷவெட்டுப் புண்ணும் போம்.

முள்முருக்கம்பூ - ஸ்திரீகள் உதிரக்கட்டும் போம்.

முள்முருக்கமரம்- அச்சம், குன்மம், சர்த்தி, சுரம், வாய் வேக்காடு போம். பலமுண் டாம்.

முள்ளங்கிக்கிழங்கு- இரை ப்பு, ஐயம், கடுகடுப்பு, கரப் பான், காசம், குடல்வாதம், குன்மம், சூலை, தலைநோய், பல சித்தி வயிற்றெறிவு வாதமும் போம்.

முள்ளங்கியிலை- குன்மவலி போம். கிருமி, நெஞ்செரிவு, பித்த வாய்வு முண்டாம்.

முள்ளம்பன்றி யிறைச்சி- தேகயிருமலுமுண்டாம்.

முள்ளுக்கத்தரிக்காய்- அனல், ஐயம், சுவாச பித்தம், வாதமும் போம்.

முள்ளுக்கீரை-அனல் நீர் பெருக்சமுண்டாம். தங்க பஸ்பமாம்.

முள்ளெலி - மூலக்கடுப்பு போம்.

முறுக்கு-வாய்வுபோம், பித்தமுமுண்டாம்.

முறுக்கெண்ணெய் - சகல சந்நிவாதக் குஷ்டமும் போம்.

மூ

மூக்கிரட்டை - ஒருவகைப் பூண்டு. இதன்வேரில்செய்த சூரணம் மலத்தை இளக்குகிற மருந்தாயிருக்கின்றது.

மூக்கிலி-ஓர் பூண்டு, சொக்களி

மூக்கில்-வசம்பு

மூங்கி-சிறுபயறு

மூங்கிலரிசி-ஓர் வகையரிசி

மூங்கிலுப்பு-ஓர் உப்பு

விஷமூங்கில்-ஓர் பூண்டு

வேலிமூங்கில்- ஓர் பூண்டு

மூசார்தம்-வெண்டாமரை

மூடனம்-மிளகு

மூடி-கொத்தமல்லி

மூண்டன்-மிளகு

மூதிசகம்-சிவனார்வேம்பு

மூத்திரக்கிருச்சி- ஓர் நீர்வியாதி

மூதை-இசங்கு

மூலகந்தம்-இருவேலி, வெட்டிவேர்.

மூலகம்-முள்ளங்கி

மூலகம்-கிழங்குவேர்

தசமூலம்- அவை: 1-வாகை, 2 முல்லை, 3 பாதிரி, 4 நெருஞ்சில், 5 பேராமுட்டி, 6-சிற்றாமணக்கு, 7 கூவிளை 8 சிறுவழுதுணை, 9 கண்டங்கத்திரி, 10 குமிழ்.

மூலம்-ஓர் நோய்.

அவை: மூலவாயு, மூலாக்கினி, மூலநோய், மூலக்கிராணி, இரத்தமூலம், உள்மூலம், சீழ்மூலம், புறமூலம், தெளிமூலம், வறள்மூலம்.

மூலவல்லி-வெற்றிலை

மூவிலை-நரிப்பயறு

மூறுவர்-பெருங்குரும்பை

மூக்கால்- நீறாருதல், கண்ணோய்கள் போம், ஆணுவம், மயக்கம், மயிர்க்கறுப்புமுண்டாம்.

மூக்கிரட்டை - கோழை, சீதம், தினவு, பீநசம், வாதமும் போம் சாந்தி, பித்தம் பேதியுமுண்டாம்.

மூக்கொத்திக்காய்-சீதளம், பித்தம், வாய்வு முண்டாம்

மூங்கிற் குருத்து - அடிபட்ட இரத்த வீக்கங்கள் போம்.

மூங்கிலரிசி-இரத்த பித்தம், கண்ணோய், சுரமும்போம்.

மூங்கிலிலை - உதிரம்,குடல் கட்டு, குன்மம், சூலை, சூதகக்கட்டு போம்.

மூங்கில்மரம் - சுரம், சுவாசம், சூதகவாய்வு, வாதமும் போம்.

மூங்கிற்பாய்-அனல், நீர்க்கடுப்பு, பித்தமு முண்டாம்.

மூகமல்லிகை - காமாலை, சோகை, மேகம், விஷம், வீக்கமும் போம், வீரிய விர்த்தியுண்டாம்.

மூலிகைப் பிடுங்குமிடம்- கடலோசைக் கேளாதயிடத்

திலும், சித்தர்கள், தேவர்கள், முனிவர்க ளுறைகிற காடுகளிலும் மூலிகைப் பிடுங்குதல் நன்று.

மெ

மெருகன்கிழங்கு- அஸ்தி சுரம், ஐயம், ஈளை. குன்மமும் போம். தேகக் குளிர்ச்சி யுண்டாம்.

மெத்தை-ஓர் பூண்டு

மெல்லிலை-வெற்றிலை

மெழுகு-அதைப்பு, ஐயம், உதடு வெடிப்பு, தாது நஷ்டம், தீப்புண், தேள்விஷம், பக்கவாதம், புண்வாயு, இரணமும் போம்.

மெழுகுபீர்க்கங்காய் - திரிதோஷ பித்தமு முண்டாம், பத்தியத்திற் காகாது.

மே

மேநாதம்-சிறுகீரை

மேகம்-கடுக்காய், ஓர் நோய் அவை: மேககாங்கை, மேக காந்தம், மேககிராணி, மேகச்சூலை, மேகப்படலம், மேகரணம், மேகவாயு, மேக வெட்டை.

மேககாரகக்குறிஞ்சி- ஓர் நோய்

மேகராடி-மயிலடிக் குருந்து

மேகவண்ணக்குறிஞ்சி - ஓர் மரம்

மேடசிங்கி-புழுக்கொல்லி,

மேதை- பொற்றலைக் கையாந்தகரை

மேனா-குப்பைமேனி

மேதை-தோஷம் போம்.

மேல்வீடு-பலவித வெப்பும் போம், அழகுண்டாம்.

மை

மையல்-ஊமத்தை

மைக்கொன்றைப்பூ- மேகமும் போம்.

மைக்கொன்றை மரம்-குடல்வாதம், சூலை, மேகமும் போம்.

மைச்சம்பாவரிசி- அருசி, சாந்தி வாதமும் போம்; வாய்வு உண்டாம்.

மொ

மொச்சைக்காய்- பித்த சேட்டுமம், தசவாய்வு முண்டாம்.

மொச்சக்கொட்டை- ஐயம், பித்தவாய்வு முண்டாம்.

மொந்தன் வாழைக்கச்சல் - கிராணி போம்.

மொந்தன் வாழைக்கனி-உள்வரட்சி, பித்தம், காமாலை போம். சீதம், தாகம், பலவீனம், மந்தம், தாது வலியுமுண்டாம்.

மொந்தன் வாழைக்காய்-வாய்வு போம்.

மொந்தன் வாழைக் கிழங்கு-மேகவெட்டை போம், ஆணை வளர்க்கும்.

மொந்தன் வாழைப்பூ-கபம், கால்கையெரிவு, நீர்க்கடுப்பு, பித்தம், பிரமியம் மூலம், வயிற்றுக் கடுப்பும் போம்; கெம்பீரம், தாதுவு முண்டாம்.

மோ

மோகம்- பாதிரி, முருங்கை, வாழை.

மோசாடம்-சந்தனம்

மோதம்-அசமதாகம்
மோதை-வசம்பு
மோரடம்-பெருங்குறும்பை
மோதகம்-சீமந்தம், வாதம், வெப்பமுண்டாம்.

மோருமன்னமும்- கிராணி, வாத நோய், சலமேறும் வீக்கம், தாகம், பாண்டு, மேக நீர், வீக்கமும் போம். பசியுண்டாம்; இரணக்காரருக் காகாது.

மோரும் பழையதும் எல்லாவித யெரிச்சல், பித்தப் பிணி, பிரமைநோயும் போம், கபம், தூக்கமுமுண்டாம்.

மௌ

மௌவல்-வனமல்லிகை

ய

யங்கூரா-அதிவிடையம்
யவாசம்-சிறுகாஞ்சொறி

யமுனைநதிநீர்- இரைப்பு, இளைப்பு, காசம், சுரம், தாகம், தாதுநஷ்டம், பாண்டு, பித்த வாந்தி, வெட்டை, வெண் குஷ்டம், வெள்ளையும்போம்.

யவாக்ஷாரம், அஷ்டகுன்மம், ஆசனப்புண், இருமல், இரைப்பு, உட்டினவாதம், உதரநோய், ஐயம், கபம், கிராணி, குன்மம், சூலை, சோபை, நீரடைப்பு, பருத்த தேகம், பீலிகம், புழுவிஷம், மந்தம், களம், குய்யம, நா, வாய், இவ்விடத்தின் நோய் களும் போம்.

யா

யாது-கள்
யாமஸ்கிழங்கு- ஒருவகை கிழங்கு
யார்-நத்தைச்சூரி
யார்பதம்-வாலுளுவை
யாலம்-ஆச்சா
யானைச்சீரகம்-கத்தரிநாயகம்

யானைத்தடிச்சல், யானைத் தடிப்பு, யானைப்பிச்சான்- புளிநரளை
யானைத்திப்பிலி-ஓர் வகைப் பூண்டு

யானைநெருஞ்சி - பெரு நெருஞ்சி [யானை நெருஞ்சி யின் கீழ் பார்க்க]
யானையறுகு-பெரிய அறுகு

யானைவணங்கி- தேள்கொடுக்கி

யானைத்திப்பிலி-ஓயா நாசி நீரி. ஓயா சுவாசம், கபம், காய்வான், குரல் கம்மல், சந்நிவாதமும் போம், தீபனம் உண்டாம்.

யானைநெருஞ்சில்- உழலை, உள்ளெரிச்சல், எலும்புருக்கி, கல்லடைப்பு, தாகம், பித்தம், மேகம், வெண்குஷ்டமும் போம். சீதளம் உண்டாம்.

யானைப்பால்-வாதம் போம் அழகு, தாதுபுஷ்டி, பலம், பித்தமும் உண்டாம்.

யானைமூத்திரம்- கருங்கரப்பான், கிருமி, சோபை, பருத்த தேகம், வாயு, விஷமும் போம், அதிக புஷ்டி, அதிக பலமுண்டாம்.

யானையேற்றம்-ஐயம், வாதமும் போம், தாதுவிர்த்தி, பசி பலம், பித்தமும் உண்டாம்.

யு

யுகவத்திரகம்- காட்டாத்தி

யூ

யூதிரம்-முல்லை

யெ

யெவானி-அசமதாகம்

யோ

யோசனவல்லி-வல்லாரை

ர

ரசகர்ப்பூரம்-எரிசூலை, குன்மம், துடைவாழை, வாதசூலை, வாதம், சோணிதமும் போம்.

ரசக்கொளுக்கி- கோபம் தாபசுரம் போம்.

ரசச்செந்தூரம்-ஐயம், குன்மம், சந்துவலி, ஜந்நி, சுரதோஷமும் போம்.

ரசதாளிக்கரும்பு- தாபம், மேகமும் போம்.

ரசதாளிவாழை- வியாதி குணமறிந்து கூட்டிக் கொள்ளலாம்.

ரசாஞ்சனம் -ஆண்குறியிரணம், விழிநோய் புண்ணும் போம்.

ரத்தினம்-சகல ஜந்நி, சுரதோஷம், தாபசோபம், நேத்திர ரோகம், மேகரோகமும் போம்; பலம் உண்டாம்.

ரு

ருத்திரசடை - அருசி, இரத்தவாந்தி, சிரமமும் போம்.

ரோ

ரோமவிருக்ஷம்- உரோமவிருக்ஷம், சகலசித்து உண்டாம்.

ல

லவங்கப்பட்டை - ஆசிய நோய், இருமல்நோய், இரைப்பு, சர்ப்பவிஷம், சர்வ விஷம், சிலந்திபூச்சி விஷம், தாதுநஷ்டம், பேதியும் போம்.

லவங்கப்பத்திரி- அருசி, கைப்பு, சருவாசிய நோய், சீதசுரம், சுவாசகாசம், தாகம் தாதுநஷ்டம், பித்தம், மேகசுரம், மேககட்டி, வாந்தியும் போம்.

லவங்கப்பூ- அதிசாரம் இரத்தக்கடுப்பு, கண்ணுக்குள் படர்கின்றபூ, துடைவாழை, சந்நி சுரம், சுக்கில நஷ்டம், தாள்பிடிப்பு, பித்தம், பேதி, மயக்கம், வாய்வும் போம்; சுகமுண்டாம்.

வ

வக்கண்ணுக்கி- சூலை, சேத்மம், பித்தம், வாதமும் போம்.

வங்கசிந்தூரம் - உதிர விரண நோய், தாகம், நீரிழிவு, மதுமேகம் போம்.

வசந்தகுசுபாகரம்-க்ஷயம், கல்லடைப்பு, காசம், குன்மம், தாகம், நீர்க்கட்டு, புளியேப்பம், விஷப்பாண்டும் போம்.

வசம்பு- அக்கினிமந்தம், இசிவுமாந்தம், சூலை, சந்நி சீதம், புறவீச்சு, புண், பேதி, வாயு, வாதமும் போம்.

வச்சிரக்கல்- எல்லாப்பிணிகளும்போம்; அழகுண்டாம்.

வஞ்சி - இடுப்புக்குறுதி உண்டாம்.

வடிகஞ்சி - பித்தவெட்டை போம்; கண் குளிர்ச்சி, மாந்தமு முண்டாம்

வட்டகிலுகிலுப்பை- இரணம் கண்டமாலை, கிரந்தி, சீதரத்தம், சுகம், சொறி, தாகம், பலசோபை போம்.

வகத்திறம்-வாகை

வகுண்டம்- கவிழ்தும்பை

வகுண்டிகம்- கஞ்சாங்கோரை

வகுண்டி மடை-வாலுளுவை

வகுளம்-மகிழமரம்

வகுள்-சமுத்திரபச்சை

வங்கம்-சத்திரி, ஈயம்

வங்கனம்-சேம்பு

வங்காரவச்சி-வாங்குறுவாளை

வங்காளபச்சை-ஓர் மருந்து

செம்பிலுண்டாகும் வெண்ணிறமான இந்தச் சரக்கு கடைகளில் நல்லதாய்க் காணப்படும். அதை யொரு போதும் உள்ளுக்குக் கொடுக்கக்கூடாது. ஆனால், அதைக் கீழ்ச் சொல்லியபடி, பூசு மருந்தாய்ப் பாலுடனே உபயோகிக்கலாம் ஒரு பங்கு நேர்மையாய் தூள்செய்த வங்காளப் பச்சையை 15-பங்கு நெய் அல்லது வெண்ணெயினுல் நன்ருயரைத்து நெடுநாளாய் ஆருடில் இருக்கும் புண்களுக்குப் பலனுடனே யிடுகிறதுமன்றி மேகத்தைச் சார்ந்த கெட்டதொண்டைப் புண்களுக்கொரு இறகின் நுனியால் தொட்டு இடவேண்டும். மேற்படி புண்களுக்கு நெய் அல்லது வெண்ணெயைப் பார்க்கிலும் தேன் நன்று. ஒன்றிலுந் தீராத படர்தாமரைக்கு நாளொன்றுக்கு இரண்டு தரம் மேற்படி குழம்பை நன்ருய்த் தேய்க்கில் வாசியாகும். இமைகள் மிகுந்த சிவப்பாயும், அவைகளில் சிவப்பு நிறமான புள்ளிகளுள்ளதாயுமிருக்கிற கண்ணேய்களுக்கு இந்த பிளாஸ்திரியை இமைகளில் தினம் இராத்திரி பூசினுல் பலனைக் கொடுக்கும்.

வங்காளப்பச்சையை நஞ்சாகத் தின்றிடுஞ் சமயத்தில் முட்டையின் வெள்ளைக்கருவை மிகுதியாகக் கொடுக்கவேண்டும். இது ஆசரில்லாவிட்டால் பாலில் அரிசிமாவைக் கலக்கி அதிகமாய்க் கொடுக்கவேண்டும்.

வங்கியம்-மூங்கில்

வசகம்-கொடிவேலி

வசத்திற்சோதினி- எலுமிச்சை

வசந்திரு-மாமரம்

வசம்புவாசா-மிளகு

பாளிக்குரிச்சி- சீலக்காரம்

பி

பிசனம்-செஞ்சந்தனம்
பிசின்பட்டை- மயிலாலக்கடி
பிர்மவுப்பு-கரியுப்பு
பிசித்துளிர்-வேப்பந்துளிர்
பிரமண்டை-பேய்மிரட்டி
பிரமை, பிராந்தி-மயக்கம்
பிர்மவிந்து-பாஷாணம்
பிண்டரசம்-சுத்தரசம்
பிண்டயோனி-யோனி
பின்துடா- திகைப்பூண்டு, ஆடையொட்டி. [ங்கு
பிரம்பின்மூலம் - பிரப்பங்கிழங்கு
பிரமராட்சதைமூலம்- பிரமராக்கதன், காசிவேர்.
பிளாஸ்திரி-களிம்பு
பிகி-பெண்குயில்
பிங்கலோகம்-பித்தளை
பிண்டரோபணம்- நாரத்தை
பிண்டிதகம்- மருக்கொழுந்து
பிரகுடி-காட்டுமல்லிகை
பிரமோதனி - மல்லிகைக்கொடி
பிரேதராட்சசி-துளசி
பிள்ளைக்கற்றாழை- ஓர் கற்றாழை

பீ

பீசம்-அக்ஷரம்
பீதசந்தனம்-பொதிகை மலையிலுண்டான செஞ்சந்தனம்.
பீதசம்பகம்-ஓர் வகைச் சண்பகம்
பீத்தாரு, பீதத்தருமம்- தேவதாரமரம்.
பீநதி-மூவிலைப்புன்னை
பீதபீஜம்-வெந்தயம்
பீதமணி-புஷ்பராகம்
பீதலகம், பீதளம், பீதனேகம்-பித்தளை
பீருகம்-ஆந்தை, கரடி
பீவ-அமுக்கரு, பசு, பெண்கிளி
பீசனக்குறட்டை- ஓர் பூடு

பு

புலித்தொடங்கி-புலிபுகாக்கை
புல்லங்கண்டங்கரும்பு-சர்க்கரைக் கட்டிக்கரும்பு
புனலுப்பு-பூரணுதியுப்பு
புனமல்லி-காட்டுமல்லி
புட்டில்-புட்டிவெல்லம்

புலி-துடரி
புள்ளு-சிறுபுள்ளடி
புனல்-சலம்
புறம்-முதுகு
புத்தகம் -மயிலிறகு, படிகாரம்
புவியாடம்-இரசகற்பூரம்
புருஷோத்தமம்- வாலைரசம்
புகர்நாள்-வெள்ளி
புட்கரக்கொடி- தாமரைக் கொடி
புட்பகாசீசம்-அன்னபேதி
புட்பகீடம்-ஓர் வண்டு
புட்பமஞ்சரிகை-நீலோற்பலம்
புஷ்பேந்திரம்- சம்பகமரம்
புணை-மூங்கில்
புதிஞ-ஓர் பூண்டு
புரப்பிரியை- அநாசிச்செடி
பன்னீர்-உதிரம்

பூ

பூகமரம்-கூந்தற்பனை
பூதரவி-சீரக்கொழுப்பு
பூரதிகாரம், பூவாதிகாரம்-சீனக்காரம்
பூரணுதியுப்பு-யாகவுப்பு
பூதவுப்பு, பூரவுப்பு- சத்தியுப்பு
பூரம்-ஆலாத்தப்பூரம்
பூரம்-பச்சைக்கற்பூரம்
பூண்டு-வெள்ளைப்பூண்டு
பூவந்தப்பழம்- மணிப்புங்குப்பழம்
பூதப்பட்டை- பூதகரப்பான் பட்டை
பூமிவிளா-நிலவிளா
பூலா-வரப்பூலா
பூபட்டை - லவங்கப்பட்டை
பூபதிநீர்-கன்னிநீர்
பூப்புடம்-குழிப்புடம்
பூநாகம்-நாகபூச்சி
பூளைமூலி-குப்பைமேனி
பூட்டு-சூட்சம்
பூகேசம்-ஆலமரம், நீர்ப்பாசி
பூக்கஞ்சா, பூங்கஞ்சா - ஓர் கஞ்சா
பூகவேசி-வெண்ணொச்சி
பூதிமாருதம்-வில்வமரம்
பூமிகதம்பம்-நிலக்கடம்பு
பூமிகுருவகம்- வெள்ளெருக்கு
பூமிக்கூர்மை-வெடியுப்பு
பூவரசு-ஒரு மரம்
பூவன்வாழை-ஒரு வாழை
பூவிளம்-கற்பாஷாணம்
பூளை-இலவம்பஞ்சு

பெ

பெதிகாரம்-பொரிகாரம்
பெருகுவேறில்- வேறிதயிரில்
பெருவாயன்-கழுதை
பெருஞ்சீரகம்-சோம்பு
பெருமருந்து-தலைச்சுருளி
பெரியாம்பல்-அல்லி
பெண்குமஞ்சான் - சாம்பிராணி
பெரியம்மான்பச்சரிசி - ஒரு பூண்டு
பெருங்கலையசூ-ஒரு நெல்
பெரும்பாற்சோற்றி- ஒரு பூண்டு
பெருவெள்ளை-ஒரு நெல்

பே

பேரண்டம்-மூளை, தலையோடு
பேராளி-மூளை
பேர்வுப்பு-சத்தியுப்பு
பேய்மிரட்டி-கிலுகிலுப்பை
பெருவள்ளிக்கிழங்கு- ஆள் வள்ளிக்கிழங்கு
பேதக்கிழங்கு- ரேவல்சின்னி
பேய்மிரட்டி - வெதுப்படக்கி

பேரடம்-வெண்ணொச்சி
பேரீந்து, பேரீஞ்சு-ஒரு மரம்

ஐ

பைங்கழை-பசுமையான மூங்கில்

பொ

பொரிகாரம்-படிகாரம்
பொன்னும்புவேர்- ஆவாரை வேர்
பொற்றலை- பொற்றலைக்கை யாந்தகரை
பொருமிநாதம்- இரசகற்பூரம்
பொலிமதம்-தண்டு
பொன்-ஆடகம்
பொடிச்சிலை-மஞ்சட்கல்
பொட்டிலுப்பு- வெடியுப்பு
பொதிப்போதா;- பெருநாரை
பொழுதுவணங்கி-ஒரு பூச் செடி
பொற்றிலைக்கீரை-ஒரு கீரை

போ

போத்திராயுதம்-பன்றி
போடி-சம்பு, நாவல்மரம்

ம

மகாமேதை- மருளுமத்தை
மகாளிக்கிழங்கு-பருணரி
மகாரவுப்பு-கல்லுப்பு
மண்பாச்சி-மண்ணீரல்
மரோபி-மண்ணீரல்
மகாராசமூலி-மண்ணீரல்
மணிக்குடல்-நஞ்சு
மயக்கி-சல்லிக்கொடி
மயிரோசம்,மளிக்காரம்,மண் ணுளிக்காரம்-அரிதாரம்
மதிலவணம்-இந்துப்பு
மணியுப்பு-கறியுப்பு
மதிலாதியுப்பு-சத்தியுப்பு
மதிரவி-வாலைரசம்
மரைப்பூ- தாமரைப்பூ
மதுரம்-அதிமதுரம்
மது-தேன்
மலைவர்க்காலி-வெள்ளாடு
மதிமயக்கி-கொன்றை
மணிக்காளி - மணத்தக்காளி
மத்தங்காய்-ஊமத்தங்காய்
மஞ்ஞையுயிர்க்கு- மயிலிறகு
மலர்த்தொங்கு- தென்னம் பாளையின்பூ
மறம்-பதம்
மயன்பதம்- மெழுகுபதம்
மசீசம்-மீன்
மண்டூரம்-செங்கற்சிட்டம்
மடக்கீதம்- கௌரிபாஷாண
மருவாளி-பச்சைசற்பூரம் [ம்
மருஞ்சாகம்-இரசகற்பூரம்
மங்கை இரசம்
மறையோர்விந்து-வாலைரசம்
மவுனவிந்து-விந்து
மகாரசிங்கா, மலைநாதம்- நாதம்
மன்மதவாளி-தண்டு
மகாமுடி-யோனி
மதி-வெள்ளி, சந்திரன், சோம்பு
மண்டலம்-நாற்பதுநாள்
மதிமயக்கி- திலைகப்பூண்டு
மயில்பீலி-மயிலிறகு
மட்டிப்பால்- சாம்பிராணி
மட்டம்-அளவு
மரத்துவெள்ளை - வெள்ளைக் குங்கிலியம்.
மருதோன்றி-ஐவன்னி
மகரந்தம்-கள், குயில், தேமா மரம், தேனீ, தேன், பூந் தாது.
மகாபித்தம்-வில்வமரம்
மகாகுமபி-பெரும்பூசினி
மகாசகை- வாடாப்பூவுள்ள மருதோன்றி

மகாசம்பு-பெருநாவல்
மகாசாலி-பெரும்பீர்க்கு
மகாசச்யாம்-ஆலமரம்
மகாதேகம்-பாதரசம்
மகாநிம்பம்-பூவரசமரம், பெருவேம்பு
மகாரகூசம்-ஒரு மரம்
மகாரசம்-ஒரு மரம்
மகரவல்லி- வசந்தமல்லிகை
மகுலம்-மகிழ மரம்
மகேந்திரகதலி-ஓர் வாழை
மகோநந்தம்-பனைமரம்
மகோற்பலம்-தாமரை
மங்கிலியம்-சிறுகடலை
மசகி-அத்தி மரம்
மசூரம்-கடலை
மசூரம்-மூட்டுப்பூச்சி
மஞ்சட்செவ்வந்தி-ஓர் செவவந்தி
மஞ்சரீகம்-மிருதுவான மருக்கொழுந்து
மஞ்சிவிக்கான்-ஓர் பூண்டு
மடலரிதாரம்-ஓரரிதாரம்
மடிப்பிளே-வங்கமணல்
மணல்வாரி-ஓர் நெல் [வை
மணற்கோவை- ஓர் கொவ்
மணிகாரம்-வெண்காரம்
மண்டூகபன்னி-அழிஞ்சில்
மதநியை- மல்லிகைக்கொடி
மதமயந்தி, மதமயந்திகை- எலுமிச்சை
மதுத்துருமம்- இலுப்பைமரம் மகிழமரம்
மதுகுக்குடிகை, மதுகுக்குடி - எலுமிச்சை
மதுத்திருமம்- இலுப்பைமரம்
மதுபலம-ஓர்வகைத் தெங்கு
மதுமத்தை-ஒருமத்தை
மதுரசப்பீரம்- இன்னெலுமிச் [சை
மந்ததரம்-சோம்பு
மலக்கனம் - பொன்னம்பர்
மலயோத்பலம்-சந்தனம்
மல்லிகம்-பிரப்பஞ்செடி [லி
மல்லிமாமோதிநி- குண்டுமல்
மல்லிபத்திரம்-ஓர் காளான்
மறுவல், மறுவி- கத்தூரிமிருகம்
மன்மதாலயம்-மாமரம்

மா

மாஞ்சி-மண்ணீரல்
மாயமூலம்-அங்கப்பிச்சு
மாலேவன்னி-சல்லிக்கொடி
மாலபதி-சீரக்கொழுப்பு
மாயன் விந்து-அரிதாரம்
மார்க்கசங்கு-இந்துப்பு
மால்கரந்தை - விட்டுணுக்கரந்தை
மாசி-மாசிக்காய்
மால்-விட்டுணுகரந்தை
மாலெடை-உழுந்தெடை
மாத்து-தங்கம்
மால்தாரம், அரிதாரம், தேதாளகம்
மார்க்கடப்பலி-நாயுருவி
மார்க்கடாகியம்-தாமரை
மாரக்கம்-கையாந்தகரை
மாக்கல்-பலப்பக்கல்
மான்றலே-மிருகசீரிடம்
மாவிப்பட்டை - மாவிலங்கப்பட்டை
மாகட்டகம்-செந்நாயுருவி
மாகத்தி-நெல்லிமரம்
மாகயம்- கௌரிபாஷாணம்
மாகேயம்-பவளம்
மாங்கிஷவாசகன்- கத்தூரி, எலும்பு.
மாணிபந்தம், மாணிமந்தம்- உப்பு,
மாதநமை-லவங்கம்
மாதுலங்கம்-மாதளை
மாதவப்பிரியம்-செம்பூசனி

மாதர்குணச்சலம்- கெந்தகம்
மாதவிகை - வசந்தமல்லிகை கொடி
மாதுரம்-மல்லிகை
மாருண்டம்-பாம்புமுட்டை
மார்சாரகண்டம்-மயில்
மார்ச்சாரி-கஸ்தூரி
மார்த்தண்டம்-எருக்கு,பன்றி
மாலகம்-வேப்பமரம்
மாலதுபத்திரி-சாதிபத்திரி
மாலதுபலம்-சாதிக்காய்
மாலாகண்டம்-நாயுருவி
மாவியம்-புஷ்பம் [டு
மாலைநுழைஞ்சான்-ஓர் பூண்
மால்பாகலட்சுமி - அரிதாரம்
மால்விந்து-அப்பிரகம்

மி

மிலிங்கிதன்-அரிதாரம்
மிரட்டி-பேய்மிரட்டி
மிதுதி-கருக்குருவி
மிருக்காமிளி - வாயுவிளங்கம்
மிருகமதவாசை-கஸ்தூரி மல்லி
மிருகாண்டஜை-கஸ்தூரி
மிருணாலி-தாமரை
மிருதங்கபலம்-பலா
மிருதுபர்வகம்-பிரம்பு
மிருதுபலம்-பேரீந்து
மிருதுரேசளி-இலைக்கள்ளி
மிருதயுபலம்-இலந்தை
மிருத்யுபலை-வாழை
மிருத்தியுபுஷ்பந்தயம் - மூங்கில
மிருத்தியுப்பிரசூதம்-கரும்பு
மிருத்யுநாசகன் - பாதரசம்

மீ

மீசு-மிகுதி
மீன்வெட்டி-சுரு
மீடம்-மூத்திரம்
மீனம்மல்-ஓர் மந்திரம்
மீன்தலைதாளம் - மீனெலும்பு

மு

முடியுப்பு-கல்லுப்பு
முசற்கரு-மூளை
முடியண்டச்சவ்வு - முடிமாமி
முலங்கம்-சல்லிக்கொடி [சம்
முயலுப்பு-வளையலுப்பு
முத்தம்-கோரைக்கிழங்கு
முலையமுது-முலைப்பால்
முத்தம்-சங்கம்
முளை-குழந்தை
முசுறுமுட்டை,முசுறண்டம்- ஓர்வித எறும்பின்முட்டை
முட்டிக்காய் - துமுட்டிக்காய்
முத்தெருக்கன் - நிலக்கடம்பு
முத்தீ-கமலாக்கினி, காடாக்கினி, தீபாக்கினி.
முதற்மரம்-கருசீலை
முத்திருக்கன்செவி - நிலக்கடம்பு
முட்டைநாறி - எருமுட்டை, பீநாறி
முட்டி-பேராமுட்டி
முசுக்கை-முசுமுசுக்கை
முகந்தம்-முருங்கை மரம்
முகஜோதி-எலுமிச்சை
முகந்தகம்-ஈரவெண்காயம்
முகபூஷணய-தாமபூலம
முகிற்குன்மம்-வக்கிராந்தம், பாஷாணம்.
முகுரம்-ஒரு மல்லிகை
முத்தகஞ்சுகம்-தோலுரித்தப் பாமபு
முக்தாகாரம்-முத்துச்சிப்பி
முக்தாபலம்- கற்பூரம், முத்து
முசங்கி-ஒருவகைக் கோவை
முச்சினியக்கடு, முச்சினியம் - சோம்பு

முடிக்கோரை-ஒரு புல்
மூட்கத்திரி-முள்ளங்கத்திரி
முட்கடு-ஒரு கடுகுமரம்
முட்டைப்பாசி-ஒரு நீர்ப் பூண்டு
முட்பாஷா-பன்றிமுள்
முட்புறக்கனி-பலாமரம்
முண்டீரம்-ஒரு மரம்
முண்ஞுயகி-ஒரு செடி
முண்முருக்கு-ஒரு முருக்கு
முதங்கி-வெள்ளகத்தி
முதலைப்பூண்டு-ஒரு பூண்டு
முத்துகற்கம்-ஒரு மருந்து
முத்துடைக்காய்-தேங்காய்
முல்லைநிலப்புள்-காட்டுக் கோழி
முள்ளுநாயகம்-ஒரு கொடி
முழுவஞ்சு-முத்து
முனிசடிலம்-தவனம்
முனித்துருமம்-காரகத்தி
முனிந்துரை- வெந்தயச்செடி
முனிபித்தலம்-தாமிரம்
முனிமூத்திரம்-கல்லுப்பு
முன்வெருடரி-ஒரு செடி
முன்னை-முன்னைமரம்

மூ

மூகைப்புல்-முயற்புல்
மூகூலம்-தந்திரம்
மூக்கணவன்-ஒரு செடி
மூக்கரட்டை-ஒரு செடி
மூலவெளி-மூலை
மூலை-சச்சிதானந்தவெளி
மூலி-மணிக்குடல்
மூலி-சித்திரமூலம்
மூர்த்தம்-உடல்
மூதண்டம்-நாதம்
மூலதடி-தண்டு [மும்
மூலநாயகன்-திருமூலர், கியா
மூதண்டக்கியாழம் - அறுகு வேர் கியாழம்
மூலப்பட்டை-சித்திரமூலம் பட்டை
மூக்கொலியன்-சங்கு
மூங்கா-கீரி
மூன்றிலைமேனி-குப்பை மேனி
மூஞ்சுற்றுமுள்ளன்-ஓர் கிழங்குக் கொடி.
மூதா - தம்பலப்பூச்சி
மூலகதலம்-ஓர் முருங்கை
மூலகபல்லவம்-முருங்கை மரம்
மூலக்காணி- கற்கடகபாஷாணம்.
மூலேரம்-சடை
மூலவல்லி-வெற்றிலை

மெ

மெய்யுதகம்-சிறுநீர்
மெழுகுபாகல்-ஓர் பாகல்

மே

மேற்பலகை-நகம்
மேசம்-வெண்காரம
மேடியுப்பு-வளையலுப்பு
மேனி-குப்பைமேனி
மேடிரைச்சல் - வயிற்றிரைச்சல்
மேதிநவநீதம்-எருமை வெண்ணெய்
மேற்கி-பாஷாணம்
மேகத்தின்வித்து-பூநாகம்
மேச்சை-கருமஞ்சேசிலை
மேடசிங்கி-புழுக்கொல்லி
மேண்டம்-ஆடு
மேதகம் - சலாங்க பாஷாணம
மேதாவினி- நாகணவாய்ப் புள்
மேதிக்கவிணன்-மூர்த்த பாஷாணம்.

மேந்தியம், மேந்தி - வெந்தயம்
மேருமணி-நாயகமணி
மேலாமுதுரம்- கஸ்தூரி, எலும்பு
மேகம் - வக்கிராந்த பாஷாணம்

மை
மைசந்தன், மைச்சமணந்தன்-கச்சற்பாஷாணம்

மொ
மொசுக்கை-மொசுமொசுக்கை
மொட்டு-மொக்கு
மொக்கைச்சோளம்-ஓர் சோளம்

மோ
மோகநிதப்பிச்சி- அங்கப்பிச்சு
மோகவிந்து-தண்டு
மோசகம்-வாழை
மோசகி-கிலுகிலுப்பைச்செடி
மோசனி-இலவமரம்
மோசை-அவுரி, இலவு, வாழை
மோதயர்தி-காட்டு மல்லிகை
மோதிநி-கஸ்தூரி மல்லிகை
மோதிரக்களி-ஓர்செடி
மோரடம்- கரும்புவேர், வேர்

மௌ
மௌனசாரம்-சிவசாரம்
மௌத்திகம், மௌகத்திகம்-முத்து

ய
யமத்தருமம்-இலவமரம்
யமபிரியம்-ஆலமரம்
யவசம், யவசூகம்-வெடியுப்பு
யவபலம்-மூங்கில்
யவம்-ஓர்வகைக் கோதுமை, நெல்

யவநாசலம், யவலாசம்-வெடியுப்பு
யவாநி, யவாநிகை-ஓமம்

யா
யாருந்தின்றமூலி - அங்கபிச்சு
யாடவச்சாரம் -சத்திசாரம்
யாகவுப்பு- பூரணதியுப்பு
யானைபதி-நகம்
யானைக்கால்வணங்கி - நெருஞ்சில்
யானைப்பூச்சான்-ஓர் செடி
யாவசூகம்-வெடியுப்பு
யாவநாலம்-சோளம்
யாவம்-அரங்கு, செம்பஞ்சு

யு
யுருவாதியுப்பு - பூரணதியுப்பு
யுவர்-களர்மண்ணு
யுவமபத்திரிகை-அசோகமரம்

யூ
யூதி-காட்டுமல்லி

யோ
யோத்திரம் - சிவசாரம்
யோனிகாரம்-படிகாரம்
யோகாங்கம், யோகாரங்கம்-கொனுஞ்சிமரம்
யோகசங்கப்பூ-சிறுநாகப்பூ
யோதிகண்டம்-பிரம்பு

ர
ரவி-வெயில், சூரியன்
ரதிபாணம்-தண்டு
ரசபதங்கம்-வாலைரசம்
ரசிதம்-வெள்ளி

ரோ
ரோசினி-கோரோசனை
ரோகணி-கடுகுரோகணி

ல

லவணம்-உப்பு
லவங்கம்-கிராம்பு

லி

லிங்கம்-ஜாதிலிங்கம்

லொ

லொத்திரம்-விளாம்பட்டை

வ

வகாரவுப்பு-கல்லுப்பு
வராளி-மண்ணீரல்
வடங்கன்-வெங்காரம்
வங்கநடம்-வெண்காரம்
வரிகாரம்-பொரிகாரம்
வலகாரம்-வெடிகாரம்
வடகாரம்-வெடிகாரம்
வளையலுப்பு-மதியுப்பு
வஸ்துப்பு-கரியுப்பு
வட்டநரிவிரட்டி-வட்டக்கிலு கிலுப்பை
வலலி-சீந்தில்
வரட்சுண்டு-ஆடுதின்னாப் பாளை
வட்டப்புல்-காவட்டம்புல்
வரிக்குமரியன்னம் - வரிகற்று மூஞ்சோறு
வட்டத்திருப்பி-ஓர் திருப்பி (ஆடுதின்னாப்பாளை)
வழுதலை-கண்டங்கத்திரி
வணணம்-நிறம்
வனமரை-ஓர்தழ்த்தாமரை
வனனி-நெருப்பு
வச்சிரசம்-சுத்தரசம்
வழலைரசம்-சுத்தரசம்
வளவுதடி-தண்டு
வன்னம்-தங்கம்
வஸ்து-மதுபானம்
வழலை-உப்பு
வழிக்குண்டி-கட்டுச்சோறு
வண்டுகொல்லி-செண்பகம்
வக்கிரபுஷ்பம்-முருக்கமரம்
வங்கசெந்தூரம் - ஈயபஸ்பம்
வங்கசேநகம்-வெள்ளகத்தி
வங்கநீறு-ஈயமணல்
வங்காரவாசி-ஓர் கீரை
வங்காளத்திப்பிலி-ஓர் திப்பி [லி
வசநாவி-நஞ்சு
வசந்தகோளி-குயில்
வசரம்-கோழி
வசினி-வன்னிமரம்
வசிரம்-கடலுப்பு
வசுசெந்திகை- நாய்வேளைச் செடி
வச்சிரத்தலைச்சி-கதண்டு
வச்சிரபீசகம் - கொடிப்புன்கு
வச்சிரபுட்பம்-எள்ளு
வச்சையம்-கலைமான்
வட்டகிலுகிலுப்பை- ஓர் கிலு கிலுப்பை [ணி
வத்தூரம் - பொன்னாங்கண்
வநசந்தனம்-அகில், தேவ தாரம்
வநசந்திரிகை-மல்லிகை [ம்
வநசம்பகம்- காட்டுச்சண்பக
வாச்சாகம்-காட்டாடு
வநசிரம்-காட்டுச்சரகம்
வப்பிரம்-ஈயம்
வமநீ-அட்டை,பருத்தி [கல்
வயற்கல்- வெள்ளைச்சுக்கான்
வயற்கோவி-வெண்தேக்கு
வயிற்றுக்கிராந்தம் - குமுத பாஷாணம்
வயோவங்கம்-ஈயம்
வரட்சுண்டி-ஓர் செடி
வறண்டாலு-ஆமணக்கு
வரதாரு-தேக்குமரம்
வராகிவேள்-பன்றிமுள்
வராங்கம்-லவங்கப்பட்டை
வராங்கி-மஞ்சள்

வரகாலவங்கம்-லவங்கம்
வருக்கை-பலா
வருணவிந்து-முத்துச்சிப்பி
வரேணியம், வர்ணம்-குங்குமம்
வர்ணவதி-மஞ்சள்
வர்ணி-பொன்
வலிச்சற்கொடி-ஓர்கொடி
வலிநகம்-தாழை
வலிநம்-தேள்
வல்லுளி-பன்றி
வல்வாலொட்டி, வல்லவலொட்டி-ஓர் முட்செடி
வழலையுப்பு-சவுக்காரவுப்பு
வற்குலிகம் - வலியான்குருவி
வனசிருங்காடம்-யானைநெருஞ்சில்
வனலட்சுமி-வாழை
வனவிலாசினி-ஓர் செடி
வனமலகம்- காட்டுநெல்லி
வனீரம்-காட்டுத்திப்பிலி

வா

வாசவுப்பு-கல்லுப்பு
வாணி-முடிமாமிசம்
வாமரோதயவாஞ்சி - மண்ணீரல்
வாதரவி, வாடபதி சரீரக்கொழுப்பு
வாலைசாரம்-சத்திசாரம்
வாலைரகுபதிகாரம் - சீனக்காரம்
வாத்காரம்-வெடிகாரம்
வாத்க்காரம்-படிகாரம்
வாணி-இந்துப்பு
வாதமையவுப்பு-கரியுப்பு
வாணிமலர் - வெண்தாமரை
வாலி-குதிரைவாலி
வாலு-வாலுளுவையரிசி
வாயசம்-காகம்
வாடி-தொட்டால்வாடி
வாதரக்கி-பாஷாணம்
வானமடை-கெவுரி பாஷாணம்
வாதி- கெந்தியுரி பாஷாணம்
வாலை-இரசம்
வாதம்-இரசம்
வாலைரசகர்-பரப்பிரமவித்து
வாசுகி-விந்து
வாசிலிங்கரு-கண்டு
வாலுரை-அடுப்பு
வாலை - திராகமிறக்கும் குழாயுள்ள பாண்டம்
வாகை-நிலவாகை
வாகுலம்-வகிழங்களி
வாஜிபட்சம்-கடலை
வாட்யாயனி-அதிபலை
வாதவைரி-ஆமணக்கு
வாதரோணவாயசம் - மலைக்காகம்
வாரிபரணி-வள்ளைக்கீரை
வாரியுற்பவம்-தாமரை
வாரிருஹம்-தாமரை
வாலமாலம்-அரிதாரம்
வாலவாயசம், வைடூரியம்
வாலவாயம் - வால்யீகபலம், எலுமிச்சை

வி

விஷப்பூடு-அங்கப்பிச்சு
விஷமணி-மணிக்குடல்
விரிகாரம்-பொரிகாரம்
விலாட்புரகாரம்- சீனக்காரம்
வித்திகம்-இந்துப்பு
விவேகமதிப்பு - வளையலுப்பு
விசிதவெளியுப்பு - வளையலுப்பு
விந்தாகம்-ஜாதிலிங்கம்
விருக்கு-ஜாதிலிங்கம்
விரோசனம்-பேதி
விரைசீரம்-வாசனையானசீரம்
விளா-நிலவிளா
விடையம்-அதிவிடையம்

விபவம்-செல்வம்
விருஞ்சிக்குடி- கெந்திபுரி பாஷாணம்
விந்தம்-பச்சைக்கர்ப்பூரம்
விரஸபச்சை- பச்சைக்கர்ப்பூரம்
விந்து-நாபிரசம்
வியல்-பொன்
விடந்தஞ்சான்- கொல்லைப் பல்லி
விடத்தலை-விடத்தாளி
விங்கதம்-இலந்தை
விகீரணம்-எருக்கிலை
விசபுட்பம், விசப்பிரசூனம் - தாமரை
விசிகிலம்-தவனம், மல்லிகை
விசுவொஞ்சும்-சுக்கு
விட்டுணுபரியம்-துளசி
விபுலரசம்-கரும்பு
வியடம்பகம்-ஆமணக்கு
விலாக்கிரதலம், வியாக்கிர புச்சம்-ஆமணக்கு
விராணி-யானை
விருகத்திரணம்-மூங்கில்
விருட்நாதன், விருட்சபாகன்-அரசு
விருட்சாரம்-அரசமரம்
விருந்தாகம்-சோம்பு
விருந்தை-துளசி
விருபன்-வெள்ளெலி

வீ

வீரவுப்பு-கல்லுப்பு
வீரவுப்பு-பூரணுதியுப்பு
வீழி-விழுதி
வீரம்-தங்கம், சைவீரம்
வீரணம்- இலாமிச்சம்வேர்

வெ

வெள்ளிவேர்- சல்லிக்கொடி
வெண்காரம்-காடிசம்
வெடிகாரம்-சிலைகாரம்
வெடியகீரதி-படிகாரம்
வெண்காவெளி - வெள்ளைப் பூண்டு
வெதுப்படக்கி- எருமுட்டைப் பீநாறி
வெகுநாசமுடையோகி - வசம்பு, வெட்டிவேர் [ட்டி
வெலும்பி-ஒற்றைப்பேய் மிர
வெதுப்படக்கி-பேய்மிரட்டி
வெள்ளுள்ளி - வெள்ளைப் பூண்டு
வெள்ளம்-பிரளயம்
வெரிமருத்து-பாஷாணம்
வெள்ளானை-பாலைரசம்
வெள்ளை-சங்குபாஷாணம்
வெடி-பொட்டிலுப்பு, வெடியுப்பு
வெள்ளைப்பாஷாணம்- சங்கு பாஷாணம்
வெள்ளிக்கரு-உருதுசீலை
வெண்மதி-வெள்ளைச் செம்பு
வெந்தோன்றி - ஆகாச கருடன் கிழங்கு
வெண்காவேளை- வெள்ளை கொள்காய்வேளை
வெளிச்சி-விளாம்பிசின்
வெண்மறி-வெள்ளாடு
வெண்சலசம்-வெண்டாமரை
வெண்டகரை-ஓர் பூண்டு
வெதிர்-மூங்கில்
வெள்வரி-பலகறை
வெள்ளடை- வெள்வெற்றிலை
வெள்ளரசு-ஓரரசு
வெள்ளிறகு மந்தாரை- ஓர் மந்தாரை.

வே

வேலை-வெண்காரம்
வேதியன்-சீனக்காரம்
வேலி-உத்தாமணி

வேலிப்பருத்தி - உத்தாமணி
வேலிப்பத்திரம் - உத்தாமணி யிலை
வேல்விருபாள் - மீதிரைவேர், கஸ்தூரி மஞ்சள்
வேத-இரசம்
வேஷ்டகம்-பிசின்
வேணுகம்-மிளகு
வேணுபலம்-மூங்கிலரிசி
வேதனி-வெந்தயம்-
வேரம்-கருப்பூரம்
வேரடம்-இலந்தைப்பழம்
வேர்க்கொம்பு-இஞ்சி, சுக்கு
வேந்திசமிளகு-வெண் மிளகு

வை

வைகமூலி-அம்மை
வைணவம், வைஷ்ணவம் - மூங்கிலரிசி, வேய்ங்குழல்-
வைராடம்-இந்திரகோபம்
வைலவம்- வில்வம்

வொ

வொருகதுமம்-நீர்மேற் படர் கொடி
வொருட்சநாதம், வொருட்ச பாதம்-ஆலமரம்
வொருட்சாதனம் - அரசமரம்
வொருட்சாதனி -காட்டுப்பா கல்
வொருத்தசங்கம் - கிளிஞ்சல்
வொருத்தபலம்-இலந்தை, மாதளை, மிளகு
வொருத்த மல்லிகை - குட மல்லி

அரும்பொருள்

கடவுள்-குரு
குத்திரம்-பொய்
குணங்கள் - அவ்விவ்வியாதியின் குணங்களே
குதிகள்-விழி, நாசி, நா, மல சலக்குதிகள்
நாடி- வாத பித்த சிலேத்ம வகுப்பால் பிணிகளைக் குறித்தறிதல்,
பரிசனை-பழக்கம் வேக முடையவும் விஷமருந்துத் தள்ளிசெய்யென்பது கருத்து.
ஆயுருவேதம்-வைத்திய சாஸ்திரம்
அந்தணர்-முனிவர்
ஆசிரியன்- குரு, பீடகர், வைத்தியர்
அயனம்- பிறப்பு, விருத்தம், மூப்பு, தூரமிலா, வீட்டுக் குத் தூரமாக.
தண்ணீர்துறையேரு - மாத முழுக்கில்லா, மாதவிடை யாகா.
குருதி-இரத்தம்
தசை-இரத்தம்
கலவி-புணர்ச்சி
சோரி-இரத்தம்
மதர்த்தல்-செழித்தலின் கொழுமை
கிருமி-புழு
புழுகு-புனுகு
நவம்-ஒன்பது
ஏகம்-ஒன்று
தசம்-பத்து
எச்சம்-பிள்ளை
சேய்-பிள்ளை
மிடறு-தொண்டை
அளிதோஷம்-கர்ப்பமழிந்த தோஷம்
அகடு-வயிறு
சொயம்பி-சோம்பு
துரை-இரைச்சல்
அதரம்-கீழுதடு
அழுங்கி-அழுது
கரிய-கருத்த

குழவி-பிள்ளை
குக்கில்-வயிற்றில்
குஞ்சி-குழந்தை
துஞ்சிடும்-தூங்கும்
மணீணை-பேய்
துஞ்சி-சோம்பி
மாந்தி-குடித்து
சீரம்-சீரகம்
நுதல்-நெற்றி
விரோசிக்கும்-பேதியாகும்
பழிச்சல்-துதித்தல்
திண்ணம்-வலி
உதிரம்-வயிறு
திருக்கு-குற்றம்
பளிங்கு-கண்ணாடி
கொடு-கொண்டு
திரிகடுகு-சுக்கு, திப்பிலி, மிளகு
கைப்பு-கசப்பு
செனிக்கும்-உண்டாகும்
சிரமாந்தம்-தலைமாந்தம்
மணி-உத்தாமணி
அப்பு-தண்ணீர்
காரம்-வெண்காரம்
வன்னி-நெருப்பு
நாகம்-பாம்பு
பசுமை-பச்சை
நவநாள்-ஒன்பது நாள்
திரிபொழுது - மூன்றுவேளை
உதரம்-வயிறு
திரிபலை-கடுக்காய், தான்றிக் காய், நெல்லிக்காய்
பானுபுடம்-சூரியபுடம்
பாசி-பழம்பாசி
கோஷம்-ஒலி
மாத்திரை-ஒரு நொடி
அவரை-கோழியவரை
நயனம்-கண்
சூலிக்கணம்-நாப்பக்கணம்
அத்தி-எலும்பு
பதரிடும்-ஓடிவிடும்

மடல்-ஏடு
பழம்-எலுமிச்சம்பழம்
நக்கிப-உன்ப தின்ப
நக்குவ- பருகுவ, நால் வகை யுணவில் சோறு முதலிய உண்டல்; கறி முதலிய மென்று தின்னல்; தேன் முதலிய நக்கல்; சல முதலிய பருகல்.
பஞ்சதிரவியம்-ஏலம், சண் பகப்பூ, சீரகம், கிராம்பு, கோஷ்டம்.
நேராக-சமநிறையாக
கண்டம்-கழுத்து
தசதாது-தசநாடி
குருவாரி-நிறமாம்
ஆட்டுப்பால் - காராட்டுப்பால்
மாவிகை-மாம்பருப்பு
பஞ்சதிரவியம் - மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமம்.
சங்கருத்திராட்சம் - சிவனுக் குரிய ருத்திராக்கம்
நச்சுள்-ஆசையுள்ள
அஞ்செண்ணெய் - எள்ளெண்ணெய், ஆமணக் கெண்ணெய், இலுப்பை யெண்ணெய், புங்கெண் ணெய், வேப்பெண்ணெய்.
வாழை-வாழைப்பூ
பொறி-மெய், வாய், கண், மூக்கு, செவி
ஆஆஆ- இரக்கச்சொல்
ரவி-வெயில்
தனம்-கொங்கை
சடல்-உடல்
சனிக்கும்-உண்டாகும்
தோகையாள்-பெண்
அபானன் - குதத்திற் கீழ் நோக்குகிற தசவாயுவிலொன்று

புக்கிறல்-புகுந்தால்
கனல்-சூடு
சிசு-குழந்தை
உட்டினம்-வெப்பம்
இளவல்-குழந்தை
மூலை-குழந்தை
அறுகு-அறுகம்வேர்

பஞ்சபூதியம்- பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்.

அதன் வகை: மண், சலம், தீ, காற்று, வெளி; கால், வயிறு, மார்பு, கழுத்து, தலை (உச்சி) முதலியன

விருத்தர்-கிழவர்.
கள்ளு- தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள்.
ஆருல்-கெண்டை, சிறு கெண்டைமீன் முதலியன.

பானென்றது-சூரியன்
தெருப்பு-திராவகம்.
கழஞ்சி-நாற்பது குன்றி யெடை
மாகாணி- பதினறிலொருபங்
பிரமன்-அயன் [கு
கோளங்கட்டி - திரட்சியாய் கட்டி

அணைத்தல்-தீயாற்றல்
பக்கம்-வீட்டுக்குத் தூரமாகிற பட்சத்தில்.
விராகனெடை- 32 குண்டு மணி
ஒருகடி-மூவிரற்பிரமாணம்
குப்பி- அரக்கு, சீசா

குறைநோய்- கால்விரல்கள், கை விரல்கள் குறைகிற பதினெட்டு குட்டத் தொன்று.

தமர்காயாச்சிலந்தி - துளையாருச்சிலந்தி.

சாணுமி - சாணுயர முள்ள
மருள்-மயக்கம் [உமி
கருமத்தின் தழை-கறுப்பு ஊமத்துனிலை
அபரி-மேல்
திண்ணம்-பலம்
விடயங்கள்-பெண்யோகம்
ஈயன்-ஏமன்
மாசற்றவாளம்-சுத்தி செய்த நேர்வாளம்.

அர்த்தம்பாதி- ஆசையிலுவமானம், பொன்.

கமுக்கட்டில்-அக்குள்

அரும்பெயர் அநுபந்த அகராதி முற்றிற்று

தொகையகராதி

காப்பு விருத்தம்

அருட்டொகை வகைவகுத் துலகனைத்து
மங்கையி லேந்திய தலையயிற்காத்
திருட்டொகை துடைத்தெழும் பரிதிமைப்போ
லெங்கணும் விளக்கிய வேரொன்பான்
மருட்டொகை விலகெனப் பணிந்தேத்தி
வழக்கொடு புலமையோர் முன்னுரைத்த
பொருட்டொகை வகைப்பட விரித்துணர்த்திப்
புகலுவாந் தொகையக ராதியென்றே.

அ

அகிற்கூட்டு 5—சந்தனம், கற்பூரம், எரிகாசு, தேன், ஏலம்.

அக்கினி 5—இராகம், கோபம், காமம், சடம், தீபனம்.

அங்கம் 4—தேர், கரி, பரி, காலாள், இவை சதுரங்கமெனப்படும்.

அங்கம் 5—திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம், இவை பஞ்சாங்கமெனப்படும்.

அங்கம் 10—மலை, ஆறு, நாடு, ஊர், மாலை, பரி, கரி, முரசு, கொடி, செங்கோல், இவை அரசர்க்குரிய தசாங்கம்.

அங்கயோகம் 8—இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி, இவற்றுள் இமயம் - கொல்லாமை, மெய்ம்மை கூறல், கள்ளாமை, பிறர் பொருளிச்சியாமை இந்திரிய மடக்கல். நியமம்-தவம் தூய்மை தத்துவ நூலோர்த்தல், மனமுவந்திருத்தல், தெய்வம் வழிபடல். ஆதனம் - சுவத்திகம், கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம் சுகம்; அவையாவன: சுவத்திகம்- தொடைக்கு முழங்காற்கு நடுவே இரண்டுள்ளங் காலையுஞ் செலுத்தி யிருமாந் திருத்தல், கோமுகம் சகனப் பக்கத்தி லிருகாற் புறட்டையு மாறவைத் தவ்விருகாற் பெருவிரலைக் கைப்பிடித் திருத்தல். பதுமம்- இருதொடைமேலு மிரண்டுள்ளங் காலையு மாறித் தோன்ற வைத்தல். வீரம் - வலத் தொடையி லிடக்கால் புறட்டைச் சேர்த்து யிருமாப்புற் றிருத்தல். கேசரி - பீசத்தின் கீழ்ச் சீவனிடத்து புறட்டை

வைத்து முழங்கையை முழந்தாளில் வைத்தங்குலி விரித்து நாசியைப் பார்த்து இருத்தல்; பத்திரம்-பீசத்தின்கீழ் சீவனிடத் திருகாற்பரட்டையும் வைத்தவ் விருபாதத்தையு மிருகையா விருகப்பிடித் தசையா திருத்தல்; முத்தம்-இடக்காற் பரட்டாற் சீவனியை யழுத்தி வலக்காற் படப்பரட்டிற் கீழுந்த விருத்தல்; மயூரம்-முழங்கை யிரண்டு முந்திப் புறத்திலழுந்தப் புவியிற் கையூன்றிக் கானீட்டித் தலை நிமிர்ந்திருத்தல், சுகம்-சுகமுந் திடமுமெவ்வா றிருக்கி னெய்துமோ அவ்வா றிருத்தல். பிராணாயாமம்- பிராணவாயுவை இரேசக பூரக கும்பகஞ் செய்தல். பிரத்தியாகாரம்-உபாதியை நீக்கி யுண்ணோக்கல். தாரணை-கண்டம், இதயம் நெற்றி, கபாலம், நாபி இவற்றிலொன்றில் சந்ததம் சிந்தைவைத்தல்; தியானம்-ஐம்புலனடக்கி யோகஞ் செய்தல்; சமாதி-இந்திரிய முதலிய தத்துவசேட்டை கட்டேதுவா யாக்கையினின் றவற்றோடு கூடினு மவற்றில் பற்றின்றி யிருக்கு மானமா வாகிய தன்னைத்தான் காணல்.

அசுவினிதேவர் 2- தத்திரன், நாதத்தியன்.

அரசச்சின்னம் 21—முடி, குடை, கவரி, தோட்டி, முரசு, சக்கரம், யானை, கொடி, மதில், நீர்க்குடம், தோரணம், பூமாலை, சங்கு, கடல், மகரம், ஆமை, இணைக்கயல், சிங்கம், தீபம், இடபம், ஆசனம்.

அரசர் 3—சேரன், சோழன், பாண்டியன்.

அரசர்க்குழு 5-மந்திரியர், புரோகிதர், சேனாபதியர், தூதர், சாரணர்.

அரசுக்குத துணைவர் 8—மந்திரியர், கருமாதிகாரர் சுற்றம், படைகாப்பாளர், நகரமக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர்.

அரசர்க் குறுதுச்சுற்றம் 5—நட்பாளர், அந்தணாளர், படைததொழிலர், மருத்துவக்கலைஞர், நிமித்திகப் புலவர்.

அரசியல் 6—படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண்.

அரசியல் வகை 6—அறநிலையறம், மறநிலையறம், அறநிலைப்பொருள், மறநிலைப் பொருள், அறநிலையின்பம், மறநிலையின்பம, அவையாவன: தத்தம வருணத்திற் பிறழாது நிலைபெறப் பாதுகாத்தல் அறநிலையறம; நிறைமீட்டுப் பகைவென்று செஞ்சோற்றுக் கடன் கழியாதாரைத் தண்டித்துக் குறைவறச் செய்தல் மறநிலையறம; நெறிவழி நின்று தத்த நிலையினால் முயன்று பெறுபொருள் அறநிலைப்பொருள்; பகைஞர் பொருளுந் திறைப் பெருளுஞ் சூதில் வெல்பொருளு மறநிலைப பொருள்; பருவமுங் குலமு மொழுக்கமுங் குணமுமொத்த கனனிகை

ளையை தீவேட்டில் கலத்திருத்த லறநிலையின்பம்; ஏறு தழுவியும் வில்விற்றெடுத்த வமபிருக்கமெய்து மிவ்வாறு மாறுடை நெறியின் மணத்தன் மறநிலையின்பம்

அரண் 4—மலை, காடு, மதில், கடல்.

அலங்காரம் 35—தன்மை, உவமை, உருவகம், தீவகம் பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப்பொருள் வைப்பு, வேற்றுமை, விபாவனை, ஒட்டு, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், லிலேசம், நிரனிறை, ஆர்வ மொழி, சுவை, தம் மேம்பாட்டுரை, பரியாயம், சமாயுதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், ஒப்புமைக்கூடம், விரோதம், புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதரிசனம, புணர்நிலை பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம் பாவிகம்.

அலங்காரம் 100-உவமை, இயைபின்மை, புகழ் பொருளுவமை, எதிர்நிலை, உருவகம், திரிபு, பலபடப்புனைவு, நினைப்பு, மயக்கம், ஐயம், ஒழிப்பு, தற்குறிப்பு, உயர்வு, நவிற்சி, ஒப்புமை, கூட்டம், விளக்கு, பின்வருவிளக்கு, தொடர்முழுவமை, எடுத்துக் காட்டுவமை, காட்சி, வேற்றுமை, உடனிகழ்ச்சி, இன்மை நவிச்சி, சுருங்கச் சொல்லல், கருத்துடையடை, கருத்துடையயடை கொளி, பல பொருட் சொற்றொடர், புனைவிலி புகழ்ச்சி, புனைவுளி விளைவு, பிறிதினவிற்றி, வஞ்சகப்புகழ்ச்சி, வஞ்சப்பழிப்பு, எதிர்மறை முரண் வினைந் தழிவு, பிறிதாராய்ச்சி, காரணவாராய்ச்சி, கூடாமை, தொடர்பின்மை, தகுதியின்மை, தகுதி, வியப்பு, பெருமை, சிறுமை, ஒன்றற்கொன்றுதவி, சிறப்புநிலை, மற்றதற் காக்கல், காரணமாலை, ஒற்றை மணிமாலை, மாலை விளக்கு, மேன்மேலுயர்ச்சி நிரனிறை முறையிற்படர்ச்சி, மாற்றுநிலை ஒழித்துக்காட்டு உறழ்ச்சி, கூட்டம் வினை முதல் விளக்கு, எளிதின் முடிபு, விறல்கோள், தொடர்நிலைச் செய்யுட் பொருட் பேறு, தொடர்நிலை செய்யுட் குறி வேற்றுப் பொருள் வைப்புமலர்ச்சி கற்றோர் நவிற்சி, உயர்த்துணர்வு, பொய்த்தற்குறிப்பு, வளர்ப்பு நிலை, இன்பம், துன்பம், அகமலர்ச்சி, இகழ்ச்சி வேண்டல், இலேசம, குறிநிலை அரதனமாலை, பிறிதின் குணம்பெறல், தொல்லுருப் பெறல் பிறிதின் குணம் பெருமை, தன்குணமிகை, மறைவு, பொதுமை, மறையாமை, சிறப்பு, இறை, நுட்பம் கரவு வெளிப்படுப்பு, வஞ்ச நவிற்சி, குறிப்பு நவிற்சி, வெளிப்படை நவிற்சி, யுத்தி, உலகவழக்கு நவிற்சி, வல்லோர் நவிற்சி, மடங்குதனவிற்சி, தன்மை நவிற்சி, நிகழ்வினவிற்சீ, வீறுகோள், மிகுதிநவிற்சி

பிரிநிலை நவிற்சி, விலக்கு, விதி, ஏது.

அவத்தை 5—சரக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்.

அளவு 4—எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல், தெறித்தலோடைந் தெனவுங் கூறுப.

அளவை 8—காட்சி, அநுமானம், உவமானம், ஆகமம், அருத்தாபத்தி, அபாவம், ஐதீகம், சம்பவம், அவையாவன: கானல் காட்சி, புகையைக்கண்டு நெருப் புண்டெனல் அனுமானம். மறை பசுபோலெனல் உவமானம். பெரியோர் வாய்ச் சொலாகமம், பலுண்ணுன் பருத்திருப்பா னென்புழி யிரவிலெலாளித் துண்பானென வுணர்த லருத்தாபத்தி, முன்னுமில்லை பின்னுமில்லை ஒன்றிறென்றில்லை யொருகாலத்து மில்லையெனல் அபாவம். இம்மரத்திற் பேயுளதென்பது. ஐதிகம் ஆயிரத்தி நூறுண்டெனல் சம்பவம்.

அறத்துருப்பு 8—ஐயப்படாமை, விருப்பின்மை, வெறுப்பின்மை, மயக்கமின்மை, பழியைநீக்கல், அழிந்தோரை நிறுத்தல், அறம் விளக்கல், பேரன்புடைமை.

அறம் 2—இல்லறம், துறவறம்.

அறம் 32—ஆதுலர்க்குச் சாலை, ஓதுவார்க்குணர்வு, அறுசமயத்தார்க்குண்டி, பசுவுக்கு வாயிறை, சிறைச் சோறு, ஐயம், தின்பண்டநல்கல், பறவைச்சோறு, மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், அறவைப் பிணஞ்சுடல், அரவைத் தூரியம், சுண்ணம், நோய், மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணுடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண் போகம், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம்.

அனுபந்தம் 4—விடயம், சம்பந்தம், பிரயோசனம் அதிகாரி.

அன்மய விலக்கணம் 5—விசேடணம், விசேடியம், கருத்தா, கருமம், கிரியை.

ஆ

ஆச்சிரமம் 4 — பிரமசாரி, இல்வாழ்வோன், வானப்பிரஸ்தன், சந்நியாசி; இவருள் பிரமசாரி ஆசிரியனிடத் தோதி விரதங்காத்து விவாகமின்றி யிருப்போன். இல்வாழ்வோன் இல்லறத்தில் வாழாது இல்லாளொடுங்கூடி வாழ்வோன். வானப்பிரத்தனில்லறந் துறந்தில்லாளோ டாயினுந் தனித்தாயினும் வனத்திற்றவஞ் செய்வோன். சந்நியாசி முற்றுந் துறந்தோன்.

ஆதாரம் 6—மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி,

ஆக்கைரு, இவற்றிற்கு முறையே இடம்: குதம் குய்யம், நாபி, இதயம், அடி நா, நெற்றி.

ஆயுதவகை 2—அத்திரம், சத்திரம், இவற்றுட் கைவிடு மாயுதம் அத்திரம். கைவிடா வாயுதஞ் சத்திரம்.

ஆன்மா 2—சீவான்மா, பரமான்மா, அவையாவன; சரீராவச் சின்னவான்மா—சீவான்மா. இதர பதார்த்த மான வச்சின்னவான்மா—பரமான்மா.

இ

இசை 3—மந்தரம், மத்திமம், தாரம்.

இசை 7—குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் இவற்றுண் மிடற்றுற் குரல், நாவிறைற் றுத்தம், அண்ணத்தாற் கைக்கிளை, சிரத்தா லுழை நெற்றியா லிளி, நெஞ்சால் விளரி, மூக்காற்றுரம், இங்ஙனந் தனித்தனி பிறக்கும். இவையே ஏழ்சுரமெனவும் வீணையிலேழ் நரம்பெனவும் படும். இவற்றிற்கு ஓசை யுவமையில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை. சுவை யுவமை பால், தேன்-கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி. வாசனையுவமை மௌவல், முல்லை கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னுரை புன்னை. அக்கரம்-அறு, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ. மாத்திரை நான்கு குரல், நான்கு துத்தம். இரண்டு கைக்கிளை மூன்றுழை, நான்கினி, மூன்றுவிளரி, இரண்டுதாரம், இவற்ருலெழுபாலை பிறக்கும் அவையாவன: குரலே குரலாயிற் செம்பாலை, துத்தமே குரலாயிற் படுமலைப்பாலை, கைக்கிளையே குரலாயிற், செவ்வழிப்பாலை, உழையே குரலாயினரும்பாலை இளியே குரலாயிற் கொடிப்பாலை, விளரியே குரலாயின் விளரிப்பாலை தாரமே குரலாயின் மேற்செம்பாலை. இவற்றுட் செம்பாலைக்குக் கொடிப் பாலை வலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலையும் மேற்நெம்பாலையும் வலிது, அன்றியுந் தாரத்து ளுழையு முழையுட் குரலுங் குரலுளிளியு மினியுட் டுத்தமுந் துத்தத்துள் விளரியும் கைக்கிளையும் பிறப்பது தகுதி, இவற்றிற் கிறைவர் விசுவாமித்திரன் சமதக்கினி, சந்திரன், சூரியன், காசிபன், கௌதமன், ஈசன், இவற்றிற்குயிர் ஈசன்.

இடம், 3—தன்மை, முன்னிலை, படர்க்கை.

இதிகாசம் 2— பாரதம், இராமாயணம்.

இரதம் 9—சிங்காரம், வீரியம், பெருநகை, கருணை, இரௌத்திரம், குற்சை, சாந்தம், அற்புதம், பயம்.

இராகத்தகுதி 4—இடம், செய்யுள், குணம், காலம், இவற்றுளிடம் பற்றிய விராக மைந்திணையிராகம்; செய்யுட் பற்றிய இராகத்துள் வெண்பா இராகம் சங்கராபரணம்

அகவலிராகம் தோடி; கலியிராகம் பந்துவராளி; கலித்துறையிராகம் பைரவி; தாழிசையிராகம் தோடி, விருத்தவிராகம் கலியாணி, காம்போதி, மததியமாவதி பலவும் உலாவிராகம் சௌராட்டிரம். தோடையவிராகம் சௌராட்டிரம் நாட்டை;மங்களராகம் மங்களகௌசிகம், தேவாரத்திராகம் பூபாளம். பிள்ளைக்கவிராகம் கேதாரகௌளம், பரணியிராகம் கண்டாரவம், குணம் பற்றிய இராகத்துள் இரக்கராகம். ஆகரி, கண்டாரவம், நீலாம்பரி, பியாகடை, புன்னாகவராளி. துக்கவிராகம் இரக்கராகங்களன்றி வராளியின் மேலாம்; மகிழ்ச்சியிராகம் காம்போதி, காவேரி, தன்னியாசி: யுத்தவிராகம் நாட்டை, காலம்பற்றிய இராகத்துள் வசந்தகால யிராகம் காம்போதி, அசாவேரி, தன்னியாசி, ஆன்றியு மாலையிராகம் கல்யாணி, காபி கன்னடம், காம்போதி; சாமராகம் ஆகரி; விடியலிராகம்இந்தோளம், இராகமலி தேசாட்சரி, நாட்டை, பூபாளம்; உச்சியிராகம், சாரங்கம், அன்றியும் ஆகரி, இந்தோளம், இராமலி, சாரங்கம், பூபாள நீக்கிநின்ற மற்றவை யெக்காலத்தும் பொதுமையாம்.

இராகம் 32—பைரவி, தேவக்கிரியை, மேகரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி இல்லிதை, தோடி வசந்தம்; இராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம். இவற்றுள் பைரவி புருடயிராகம், பிராமணசாதி, இதன் மனைவிகள் தேவக்கிரியை, மேகவிரிஞ்சி, குறிஞ்சி, அதிதேவதை யீசன். பூபாளயிராகம் புருடராகம், பிராமணசாதி,இதன் மனைவிகள் வேளாவளி, மலகரி, பௌளி, அதிதேவதை திருமால். சீராகம் புருடயிராகம், அரசசாதி இதன் மனைவிகள் இந்தோளம், பல்லதி, சாவேரி, அதிதேவதை சரசுவதி. படமஞ்சரி புருடயிராகம்,அரசசாதி, இதன் மனைவிகள் தேசி, இல்லிதை, தோடி, அதிதேவதை இலக்குமி. வசந்தம், புருடராகம், வைசியசாதி, இதன மனைவிகள் இராமக்கிரியை, வராளி, கைசிகம், அதிதேவதை சூரியன். மாளவி புருடயிராகம் வைசியசாதி, இதன் மனைவிகள் நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை நாரதன். பங்காளம் புருடயிராகம், சூத்திரசாதி, இதன் மனைவிகள் தன்னியாசி, காம்போதி, வௌளி, அதிதேவதை விநாயகன். நாட்டை புருடராகம், சூத்திரசாதி, இதன் மனைவிகள் தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம்,

அதிதேவதை தும்புருவன், இவையன்றிப் பலவகைப் பட்ட வழங்கு மிராகம் பல வுள அவை கூறிற் பெருகும்.

இராசி 12—மேடம், இடபம், மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் இவற்றுள் முன்னாறு உத்தராயனராசி, பின்னாறு தட்சணாயனராசி, அதன்றியும் முதன் மூன்றுங் கடைமூன்றும் ஏறுமிராசி, இடையாறும் இறங்குமிராசி.

இருமை 2—இம்மை, மறுமை.

இலக்கணம் 5—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.

இலிங்கம் 5—பிருதுவி லிங்கங் காஞ்சியில், அப்புலிங்கந் திருவானைக்காவில், தேயு லிங்கம் திருவண்ணாமலையில், வாயுலிங்கஞ் சீகாளத்தியில், ஆகாய இலிங்கஞ் சிதம்பரத்தில். இவையே பஞ்சபூத வடிவங்களான பிரதான பஞ்ச இலிங்கம்.

இழிச்சொல் 4—குறளை, பொய், கடுஞ்சொல், பயனிற் சொல்.

ஈ

ஈச்சுரன் குணம் 8—தன் வயத்தனாதல், தூயவுடம் பினனாதல், இயற்கை யுணர் வினனாதல், முற்று முணர் வினனாதல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பி லின்ப முடைமை; இவை சைவாகமத்துட் கூறப்பட்டன, அன்றியும் வரம்பின்ஞானம், வரம்பில் காட்சி, வரம்பிலின்பம், வரம்பிலாற்றல், நாமமின்மை, கோத்திரமின்மை, ஆயுளின்மை, இடையூறின்மை என்பன ஆருகதராற் கூறப்பட்டன.

ஈச்சுரன் பிரபுத்துவ சார்மர்த்திய குணம் 4—கர்த்தத்துவம், அகர்த்தத்துவம், அன்னிய தாகர்த்தத்துவம், அன்னியதாசுகர்த்தத்துவம்.

ஈச்சுரன் முகம் 5—ஈசானம், தற்புருடம், அகோரம், வாமம், சத்தியோசாதம், இவற்றுள் ஈசானம் அனைத்துமாளுதல் தற்புருடங் காத்தல், அகோர மழித்தல், வாமம விளக்கல், சத்தியோசாதந் தோற்றுவித்தல்.

ஈச்சுரன் முக்கியகுணம் 6—சருவஞ்ஞத்துவம், சருவேச்சுரத்துவம், சருவ நியந்திருத்துவம், சருவாந்திரியாமித்துவம், சருவசத்தத்துவம் அன்றியும் தன்வயத்தனாதல் தூயவுடம்பினனாதல், எல்லா நலமுளனாதல், எங்கும் வியாபகனாதல், எவற்றிற்குங் காரணனாதல்.

உ

உட்பகை 6—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம்

உண்டி 4—உண்ணல், தின்னல், நக்கல், பருகல் அவை யாவன:— சோறு முதலிய

வுண்டல்; கறி முதலிய தின்னல்; தேன் முதலிய நக்கல்; நீர் முதலிய பருகல்.

உபசாரம் 16—தவிசளித்தல், கைகழுநீர்தரல், கால்கழுநீர்தரல், முக்குடு நீர் கொடுக்கல், நீராட்டுதல், ஆடை சாத்துதல், முப்புரிநூல்தரல், தேய்வைபூசல், மலர் சாத்தல், மஞ்சளரிசி தூவல், நறும்புகை காட்டல், விளக்கிடல், கற்பூரமேற்றல், அமுதமேந்தல், அடைக்காய்தரல், மந்திரமலரான் அருச்சித்தல்.

உபநிடதம் 32—சீருத்திரம், பிருகதாரண்யம் சுவேதாசுவதரம், கைவல்லியம், காலாக்கினி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், நாராயணம், அங்கிசம், பரமோங்கிசம், பாற்கரம்; பிரமபிந்து, ஆருணி, அமிர்தபிந்து, பகுவபஞ்சம், பிரமசாலாபம, தேசோபிந்து வாச்சியாயநீயம், போதாயநீயம், ஆசுவலாயநீயம், சாங்கியாயநீயம், வாசீராயநீயம், சௌன்கீயம, சிவசங்கற்பம், சிரவணம், பாராகம், கிம்புரோடியம், மாண்டூகம், முண்டிரம், மௌண்டிரம் முதலியன.

உபாயம் 4—சாமம், தானம், பேதம், தண்டம், அவையாவன: சமாதானத்தோடாயினும், பொருள் கொடுப்பதாயினும், பிறரைப்பிரித்தாயினும், படை கொண்டாயினும் காரியங்கொள்ளல்; இந்நான்குமர சர்க்குரியனவாம்.

உயிர்வேதனை 11—அனல், சீதம், அசனி, புனல், வாதம், ஆயுதம், விடம். மருந்து, பசி, தாகம், பிணி.

உருத்திரர் 11—மாதேவன், அரன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன்.

உரை 4—கருத்துரை, பதவுரை, பொழிப்புரை, அகலவுரை, அவையாவன: செய்யுட் கருத்துரைத்தலே கருத்துரை; சொற்றொறும் பதப்பய னுரைத்தலே பதவுரை; பொருடொகுத் துரைத்தலே பொழிப்புரை; இலக்கணமுமிலக்கியமு மெடுத்துக் காட்டிப் பொருள் விரித்துரைத்தலே யகலவுரை.

உரையிலக்கணம் 5—பதம், பதப்பொருள், உதாரணம், வினு, விடை.

உலகம் 3—பூமி, அந்தரம், சுவர்க்கம், அன்றியும் பூலோகம், பரலோகம், பாதாளலோக மென்பாருமுளர்.

உலகம் 14—மேலுலகேழும் கீழுலகேழும். மேலுலகாவன - பூலோகம், புவலோகம், சிவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்திய லோகம். கீழுலகாவன- அதலம், விதலம, சுதலம், தராதலம், இச்சாதலம, மகாதலம், பாதாளம்.

உலோகம் 5—பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயமிவையே பஞ்சலோகம்,

உலோகம் 7—செம்பொன், வெண்பொன், கரும்பொன், செம்பு, ஈயம், வெண்கலம், தரா.

உவர்ப்பு 6—ஆசியம், இரதி, அரதி, சோகம், பயம், குர்ச்சை. இவை முறையே சிரிப்பு, ஆசை, வெறுப்பு, சோர்வு, அச்சம், அருவருப்பு.

ஊ

ஊறு 8 — வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, திண்மை, நொய்மை, சீர்மை, சர்ச்சரை இவையே தொடப்படும் பொருட் கெண் குணம்.

ஊறுபாடு 4—எறிதல், குத்தல், வெட்டல், எய்தல்.

எ

எச்சம் 2—பெயரெச்சம், வினையெச்சம்.

எச்சம் 8—குறள், கூன், ஊமை, செவிடு, குருடு, முடம், உறுப்பு, மயக்கம் உறுப்பில் பிண்டம். இவை எண்வகை யுடல்குறை.

எழுத்துத்தானம் 5—பாலம், குமரன், அரசன், விருத்தன், மரணம். இவற்றிற்கு முறையே எழுத்துக்களாவன: அஆ, இ ஈ ஐ, உ ஊ ஔ, எஏ, ஒஓ, பாட்டுடைத் தலைவன் பேரெழுத்தை தப் பாலதானமாகக் கொண் டெண்ணப்படும். இவற்றுள் முன்னைய மூன்று நன்மையாகும். பின்னைய விரண்டும் தீமை பயக்கும்.

ஐ

ஐச்சுவரியம் 8—இராசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

ஐம்புல நுகர்ச்சியிலிறப்பன 5—சுவையாலிறப்பது மீன், நாற்றத்தால் வண்டு; பரிசத்தால் யானை; ஓசையால் அசுணம்; ஒளியால் விட்டில்

ஒ

ஒருமை 1—இறையுணர்வு

க

கடல் 7— உவர்நீர், நன்னீர், பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன்.

கடுகம் 3—சுக்கு, திப்பிலி, மிளகு, இவையே திரிகடு கெனப்படும்.

கடைப்படுதானம் 8—ஆர்வம், புகழ், அச்சம், கைம்மாறு, காரணம், கண்ணோட்டம், கடப்பாடு.

கணக்குவகை 4—தொகை, பிரிவு, பெருக்கு, கழிவு.

கணம் 8—நிலம், நீர், மதி, இயமானன், சூரியன், தீ, வாயு, ஆகாயம். இவற்றுள் முன்னர் நான்கு நன்று, பின்னர் நான்குங் கலகம், நிரை நிரை நிரை நீர்க்கணம்; நேர் நிரை நிரை நாக்கணம், நிரை நேர் நேர் மதிக்கணம் நேர் நேர் நேர் உயிர்க்கணம் நேர் நிரை நேர் சூரியகணம்; நிரை நேர்நிரை தீக்கணம்; நேர் நேர் நிரை வாயுக்கணம்; நிரை நிரைநேர் ஆகாயக் கணம்.

கணம் 18—அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர் காந்தருவர். இயக்கர், விஞ்சையர், பூதர். பைசாசர், அந்தரர், முனிவர், உரகர். ஆகாயவாசிகள், போக பூமியர்.

கணிதம் 8—சங்கிலிதம், விபுகலிதம், குணனம், பாகாரம், வர்க்கம், வர்க்கமூலம், கனம், கனமூலம், இவற்றுள் சங்கிலிதம்-கூட்டல், விபுகலிதம்-கழித்தல் குணனம்-பெருக்கல், பாகாரம்-பங்கிடல், வர்க்கம்-சமமாகிய வீரெண்ணின் பெருக்கம். அதாவது: நிலத்தைச் சமமராக நாற்கோணஞ் செய்தல், வர்க்கமூலம் அவ்வர்க்கத் தொகையி னின்றதன் மூலமாகிய வரம்பறிதல் கனம்-சமமாகிய மூவெண்ணின் பெருக்கம் அதாவது குழியைச் சமமாகப் பன்னிரு கோணப்படுத்தல். கனமூலம்- அக்கனத்தொகையினின்றதன் மூலமாகிய வொரு மூலையறிதல்.

கண்டம் 9—கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்னிரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திம கண்டம் இவையே நவகண்டம்.

கதி 4—தேவகதி, மக்கட்கதி, விலங்கின்கதி, நரககதி.

கந்தம் 2—நற்கந்தம், துர்க்கந்தம்.

கரணம் 4—மனம், புத்தி, சித்தம், அகங்காரம்.

கரணம் 11-பவம், பாலவம், கௌலவம், தைதுலை, கரசை, வணசை, பத்திரை, சகுனி, சதுர்ப்பாதம், நாகவம், கிமிஸ்துக்கினம்,

கரும்பூமிக் குரிமை 6—வரைவு, தொழில், வித்தை, வாணிகம், உழவு, சிற்பம்.

கருமேந்திரியம் 5—வாக்கு பாதம், பரணி, பாயுரு, உபத்தம்.

கருமேந்திரியம்—6 பேறு, இளமை, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு.

கலைஞானம் 64—அக்கர விலக்கணம்: இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாத்திரம், சோதிட சாத்திரம், தரும சாத்திரம், யோக சாத்திரம், மந்திர சாத்திரம், சகுன சாத்திரம், சிற்ப சாஸ்திரம், வைத்திய சாத்திரம், உருவசாத்திரம், இதிகாசம், காவியம், அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம், அததிர பரீட்சை, கனகபரீட்சை, இரத பரீட்சை, கசபரீட்சை, அசுவ பரீட்சை, இரத்தின பரீட்சை, பூமிபரீட்சை, சங்கிராம விலக்கணம், மல்யுத்தம், ஆகருடணம், உச்சாடனம், வித்துவேடனம், மதன சாத்திரம், மோகணம, வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீலவாதம், கவுத்துக வாதம், தாதுவாதம், காரு

டம், நட்டம், முட்டி, ஆகாயப் பிரவேசம, ஆகாய கமனம், பரகாயப் பிரவேசம், அதிரிசயம் இந்திர ஜாலம், மகேந்திர ஜாலம், அக்கினித் தம்பம், சலத்தம்பம், வாயுத் தம்பம், திட்டித்தம்பம், வாக் குத்தமபம், சுக்கிலத்தம்பம், கன்னத்தமபம், கட்கத்தம் பம், அவத்தைப் பிரயோகம்.

கவி 4-ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். இவற்றுள், பொருளடி பாவணி முதலிய கொடுத்து மற்ஞெருவன் பாடுக வென்றவுடனே பாடுவோனுசுகவி; பொருட் செல்வும், சொற் செல்வம்; தொடை, தொடை விகற்பஞ் செறிய வுருவக முதலிய வலங்காரத்தோ டின்னே சைத்தா வமுதமுறப் பாடுவோன் மதுரகவி; மாலை மாற்று, சுழிகுளம், ஏகபாதம், சக்கரம், எழுகூற்றிருக்கை, காதைகரப்பு, கரந்துறை, தூசங்கொள், வாவன் ஞாற்று, பாத மயக்கு, பாவின் புணர்ப்பு, கூட சதுக்கம், கோமுத்திரி, ஓரெழுத்தினம், ஒற்றெழுத்துத்தீர்ந்த வொரு பொருட்பாட்டு, சித்திரப்பா, விஞவுத்தரம் சருப்பதோபத் திரம, எழுத்துவருத்தன மிலை முதலிய முறைக்கவி தெரிந்து பாடுவோன் சித்திரக் கவி, மும்மணிக்கோவை, பன்மணிமாலை, மறம், கலி வெண்பா, தசாங்கம், மடலூர்தல், கிரீடை, இயல், இசை, கூத்து, பாசண்டத் துறை இவை முதலிய விரித்துப் பாடுவோன் வித்தாரக் கவி.

கன்னிகை 5—அகலிகை திரௌபதை, சீதை, தாரை, மண்டோதரி.

கா

காதலர் 3—புருடன், தோழன், மகன்.

காலம் 3—இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்,

காலம் 3—பருவத்தைக் காண்க.

கி

கிரகம் 9—ஆதித்தன், சோமன், அங்காரகன், புதன், பிரகஸ்பதி, சுக்கிரன், சனி, இராகு, கேது, இவையே நவக்கிரகங்க ளெனப்படும்.

கு

குணம் 3—சத்துவம், இராசதம, தாமசு, அவையாவன: ஞானம், அருள், தவம், பொறை, வாய்மை, மேன்மை, மோனம், ஐம்பொறி யடக்கலென வெட்டுஞ் சத்துவம், மனவூக்கம், ஞானம், வீரம், தவம், தருமம், தானம், கல்வி, கேள்வியென வெட்டும் இராசதம். பேருண்டி, நெடுந் துயில், சோம்பு, நீதிவழு, ஒழுக்க வழு, வஞ்சம, மறதி, பொய், கோபம், காமம, கொலை இதை தாமசு.

குணம் 8—ஆடு உக்குணம்; அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி, மகடூஉக்குணம்: நாணம், கடம, அச்சம், பயிர்ப்பு.

குரவர் 5—அரசன்; உபாத்தியாயன், தந்தை, தேசிகன், மூத்தோன்.

குற்றம் 3—காமம், வெகுளி, மயக்கம்.

குற்றம் 5—கொட்டாவி, நெட்டை, குறுகுறுப்பு, கூன்கிடை, நட்டுவிழல்.

குற்றம் 7—ஞானவரணீயம், தரிசனவரணீயம், வேதநீயம், மோகநீயம், ஆயுநாமம், கோத்திரம், அந்தராயம்.

கூ

கூத்து வகை 2—தேசிகம், மார்க்கம்.

கே

கேள்வி 4—அறம், பொருள், இன்பம், வீடு; இந் நான்குங் கேட்டல்.

கேள்வி 5—அறம், பொருள், இன்பம், வீடு; இந்நாற் கேள்வியோடிவற்றின் வழி நிற்றல்.

கை

கைத்தொழில் 5—எண்ணல், எழுதல், இலைகிள்ளல், பூத்தொடுத்தல், யாழ் வாசித்தல்.

கோ

கோசம் 5—அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞான மயம், ஆனந்த மயம். அவையாவன: உடல் அன்னமயகோசம்; கருமேந்திரியமும்பிராணனும் பிராணமய கோசம், கருமேந்திரியமும் மனமும் மனோமயகோசம்; ஞானேந்திரியமும் பத்தியும் விஞ்ஞான மயகோசம்; அவித்தை யானந்தமயகோசம்.

கௌ

கௌடம் 5—சுத்த கௌடம், கானசுப்சம், சாரசுவதம், உற்கலம், மைதுலை.

கௌவியம் 5—கோசலம் கோமயம், பால், தயிர்; நெய்.

ச

சக்கிரவர்த்திகள் 6—அரிச்சந்திரன், நளன், முசுகுந்தன், புருகுச்சன். புரூரவன், கார்த்தவீரியன், இவர்கள் மற்றவர்களைப் பணியாது தரணி யாண்டோர்.

சதுரங்கம் —அங்கங்காண்க.

சத்தம் 5— தோற் கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி இவையே சத்தத்துக்கு ஐந்து காரணம்.

சத்தி 3—இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி. இவற்றி னிச்சாசத்தி-உயிர்க் கருணேசம், ஞானசத்தி-கருமங்களை யறிந்தூட்டல், கிரியாசத்தி உலகங்களாக்கல்.

சத்தி 5-சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியா சத்தி. அவை யாவன: உயிர்க்கொளியாக நிற்பது சிற்சத்தி; பிராணன் முதலிய வாயுவாக நிற்பது பராசத்தி; பஞ்ச பூதமாக நிற்பதிச்சாசத்தி; ஐம்பொறி புணர்ச்சியாக நிற்பது ஞானசத்தி; மற்றையு

வினைத்துணையாக நிற்பது கிரியாசத்தி.

சமயம் 6— வைஷ்ணவம், சைவம், சாத்தம், சௌரம், காணபதம், கௌமாரம், இவை வைதிக மத மென்னப் படும்.

சமயம் 6 — கபிலமதம், கணுதமதம், பதஞ்சலிமதம், அக்ஷபாதமதம், வியாசமதம், ஜைமினிய மதம். இவையே வேதாந்த மதமென்னப்படும்.

சமயம் 6 —பௌத்தம், ஜைனம், பைரவம், காளாமுகம், உலோகாயிதம், சூனியவாதம். இவை புறச் சமயமென்பர் வைதிகர்.

சமயம் 6—வைரவம், வாமம், காளாமுகம், மாவிரதம், பாசுபதம், சைவம். அன்றியும் புறச்சமயமாவன 6— உலகாயிதம், புத்தம், சமணம், மீமாஞ்சை, பாஞ்சராத்திரம், பட்டசாரியம் இது சைவர் கொள்கை.

சமயம் 5—இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிற்பீலி, அன்னத்தூவி, இவற்ருற் செய்யப்பட்ட 5-வகை மெத்தை. இவை பஞ்ச சயனம்.

சா

சாதி 4—ஆந்திரம், கன்னடம், திராவிடம், மகாராட்டிரம்

சாத்திரம் 3—சாங்கியம், பாதஞ்சலியம், வேதாந்தம், இவை முறையே கபிலர், பதஞ்சலி,வியாசர் இம் மூவராற் கூறப்பட்டன. இவற்றை யத்தியான்மீக நூலென்ப.

சாத்திரம் 6—வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம், பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை.

சாந்துவகை 4—பீதம், கலவை, வாட்டிகை, புலி.

சி

சித்தர் 9—சத்தியநாதர், சதோகநாதர், ஆதிநாதர், அநாதிநாதர், வகுளிநாதர், மதங்கநாதர், மச்சேந்திர நாதர், கடேந்திர நாதர், கோரக்நாதர்.

சித்தி 8—அணிமா,மகிமா, கரிமா, இலகிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம். அவையாவன ; ஆன்மாபோலா தலணிமா, மகத்துவமாதலே மகிமா, தன்னுடற் கண்டிப்பின்ருய்க் கண்டிப்புள்ளவற்றை யுருவவல்லவனுதல் கரிமா. இலகுத்துவமாதலே யிலகிமா, வேண்டுவன வடைதலே பிராத்தி, நிறையுளனுதலே பிரகாமியம், ஆட்சியுளனுதலே யீசத்துவம், எல்லாந் தன் வசம் ஆக்க வல்லவனுதலே வசித்துவம்.

சிரஞ்சீவியர் 7—அசுவத்தாமன், மாபலி, வியாசன், அனுமான், விபீஷணன், கிருபாச்சாரியன், பரசுராமன்

சிவதத்துவம் 5—சுத்தவித்தை, ஈச்சுரம், சாதாக்கியம், சத்தி, சிவம், அவையாவன: ஞானமேறிக் கிரியை

குறைந்தது சுத்தவித்தை, ஞானங்குன்றிக் கிரியையுயர்ந்த தீச்சுரம், ஞானங்கிரியை யொத்தது சாதாக்கியம், கிரியை நாடல் சித்தி, ஞானமொன்றல் சிவம்.

சிவபூசை யியல்பு 4—சரியை, கிரியை, யோகம், ஞானம்

சிவாகமம் 28—காமிகம், யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம், அஞ்சமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம, சந்திரஞானம், விம்பம், புரோற்கீதம். இலளிதம், சித்தம். சந்தான சருவோத்தமம், பாரமேச்சரம், கிரணம, பேதம், வாதுளம்.

சிற்பத்தொழிற் குறிப்பு 10—கல், உலோகம், செங்கல், மரம், மண், சுதை, வண்ணம், கண்டசருக்கரை, தந்தம், மெழுகு.

சிற்பநூல்32— விச்சுவதருமம், விச்சுவேசம், விச்சுவசாரம், விருத்தம், தா்வட்டம், நளம், மயம், அனுமான், பானு, கற்பாரியம், சிருட்டம், மானசாரம், வத்து வித்தியாபதி, பாராசாரியம், அரிடிகம், சயித்தியம், வாத்துபோதம், வித்தாரம், இந்திரம், வச்சிரம், சவுமம், விச்சுவகாசியம், மகதந்திரம், விசாலம், சித்திரம், காபிலகாலியூபம், நாமசங்கிதை, சாத்திகம், விச்சுவபோதம், ஆதியாரம், வெகுச்சுருதம், மானபோதம்,

சீ

சீவதேகம் 3—தூலம், சூக்குமம், காரணம்.

சீவாவத்தை3—சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி.

சு

சுகிர் 2—சூரியன், சந்திரன்.

சுடர் 3—சூரியன், சந்திரன், அக்கினி.

சுபம் 8-மங்கலத்திற் காண்க.

சுப்பிரமணியர் பிரதானத்தலம் 6—திருப்பரங்குன்றம், திருச்சீலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்சோலை

சுரம் 7—சரிகமபதநி; அன்றியு மேழிசை காண்க.

சுவை 6—கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு.

சூதமம் 5—சனஞ்சூதகம், மரணு சூதகம், சண்டாளநீரிற் தோய்தல், சுராபாணம் பண்ணல், பொய் கூறல்.

சூரியன் 12—தாத்துரு, சக்கரன், அரியமன், மித்திரன், வருணன், அஞ்சுமான், இரணியன், பகவான், திவச்சுவான், பூடன், சவித்துரு, துவட்டன். இப்பெயர் சித்திரைமாத மேடவிராசி முதல் ஒவ்வொரு மாதத் தொவ்வொரு இராசியிற் புகுந்து புகுந்து சூரியனுக்கு முறையே செல்லுமென்பர். இவரே துவாதசாதித்தர்.

சூரியர் சந்திரர் முதலிய வீதி 3—மேடவீதி, இடப வீதி, மிதுனவீதி, அவை இடபம், சிங்கம், மிதுனம், கடகம் நான்கும் மேடவீதி; மீனம், மேடம், கன்னி, துலாம் நான்கும் இடபவீதி. தனுசு, மகரம், கும்பம், விருச்சிகம் நான்கும் மிதுனவீதி.

சே

சேனைத் தொகை 10- பதாதி, சேனைமுகம், குமுதம், கணகம், வாகினி, பிரளயம், சமுத்திரம், சங்கம், அநிகம் அக்குரோணி. அவையாவன: யானை-1 தேர்-1 குதிரை-3 காலாள்-5 இவை கூடியது பதாதி; பதாதி மும்மடி கொண்டது சேனைமுகம்; சேனைமுகம் மும்மடி குமுதம்; குமுதம் மும்மடி கணகம்; கணகம் மும்மடி வாகினி, வாகினி மும்மடி பிரளயம்; பிரளயம் மும்மடி சமுத்திரம்; சமுத்திரம் மும்மடி சங்கம்; சங்கம் மும்மடி அநிகம்; அநிகம் மும்மடி அக்குரோணி.

சை

சைவம் 16—ஊர்த்தசைவம், அநாதிசைவம், ஆதிசைவம், மகாசைவம், போதசைவம், அபேத சைவம், அந்திரசைவம், குணசைவம், நிர்க்குணசைவம், அத்துவாசைவம், யோக சைவம், ஞானசைவம், அணுச்சைவம் கிரியாசைவம், நாற்பாதிசைவம், சுத்தசைவம்.

சோ

சொல் 4—பெயர், வினை, இடை, உரி,

த

தத்துவம் 96— ஆன்மதத்துவம்-24, நாடி-10, அவத்தை-5 மலம்-3, குணம்-3, மண்டலம்-3 பிணி-3, விகாரம்-8, ஆதாரம்-6, தாது-7, வாயு-10, கோசம்-5 வாயில்-9, இவற்றுள்ளான்ம தத்துவமாவன: பூதம்-5 புலன்-5. ஞானேந்திரியம்-5, கருமேந்திரியம் 5 கரணம்-4: இவை சனை தத்தம் வரியிற் காண்க.

தந்தையர் 5 பிறப்பித்தோன், கற்பித்தோன், மணம் முடிப்பித்தோன், அன்னந்தந்தோன், ஆபத்துக்குதவினோன்.

தமிழ் 3—இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்,

தமிழ்நாடு 13—செந்தமிழ் நாடொன்று. இதற்கெல்லை கருவூரின் கிழக்கு மருவூரின் மேற்கு வைகையாற்றின் தெற்கு நருமதையாற்றின் வடக்கு இதனைச் சூழ்ந்த கொடுந்தமிழ்நாடு- 12 தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, வடதலை, சீதம் மலாடு, புன்னுடு

தயாவிருத்தி 14—களாபடனம், வியதாகாரம், நிர்க்கத்தண்டனம், சந்தேகவாரணம், அன்னியகுணசகனம் பாதிருதாணயோகம்;பார்த்த தேவப்பிரார்த்திகம். அவையாவன: முறைபே கப்பி

பயிற்றல் துயர் தீர்த்தல், தண்டத்தினீக்கல், ஐய நந் தேற்றல், பிறர்குணத் தழுக் காறின்றிப் பொறுத்தல், பிற ரால் செய்யப்படுந் தீமை மறந்து நன்றி நினைத்தல், பிறர்க்குவேண்டி தெய்வம் வழிபடல் இவை யுயிர்க்கே ழுபகாரம் அன்றியும் சத்தாங் கோபகாரம் அன்னம், பா னம், அம்பரம்,மந்திரம், தாச பாலனம, காராமயத்திரிதவி மோசனம், சவச்சேமம் அவையே உணவு, பானம் உடை, இடம் அடிமை காத் தல், சிறை நோய் மூன்றுந் தீர்த்தல்பிணமடக்கல் இவை யுடற் கேழுபகாரம்.

தயாவிருத்தி 8—பிறர்க்கு பொருள்வரலை யுவத்தல், பிறர் செல்வம் பொறுத்தல் பிறர் கருமத்திற் குடன்படல் தீமைக்கஞ்சல், பிறர் கரும முடிக்கவிரைதல், பிறரையந் தீர்த்தல், நன்மை கடைப் பிடித்தல், பிறர் துயர்க்கிரங் கல்.

தரு 5—அரிசந்தனம், கற் பகம, சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

தருமநூல் 28—மநு, அத் திரி, ஔரிதம், விட்டுணு, யாஞ்சவற்கியம், உசனம, அங்கீரசம், இயமம், ஆபத் தம்பம, சமவர்த்தம், காத்தி யாயனம், பிரகற்பதி, பரா சரம், வியாசம், சங்கலிதம், தர்க்கம, கௌதமம், சாதான் மம, வசிட்டம், இவற்றுட் சங்கலிதம் பொது; இவற் றுள் கிரேதா யுகத்தில் மனு ஸ்மிருதியும், திரேதாயுகத் தில் கௌதமஸ்மிருதியும், துவாரபர யுகத்திற் சங்கலித ஸ்மிருதியும, கலியுகத்திற் பராசரஸ்மிருதியு முக்கியமா யிருக்கும்.

தா

தாது 7—இரதம், உதிரம், சுக்கிலம்,மூளை, தசை,எலும்பு தோல்.

தாய் 5—பாராட்டுந்தாய், ஊட்டுந்தாய், மூலைத்தாய், கைத்தாய், செவிலித்தாய், அன்றியு மரசன்றேவி, குரு வின்றேவி, அண்ணன்றேவி, தன்றேவியை யீன்ருள், தன்னையீன்ருள்.

தாரணை 9—நாமதாரணை, வச்சிரதாரணை, மாயாதா ரணை, சித்திர தாரணை, செய் யுட்டாரணை, நிறைவு குறை வாகிய வெண்பொருட்டா ரணை, சத்ததாரணை; வத்துத் தாரணை, சதுரங்கதாரணை.

தாளம் 5—சச்சற்புடம், சாமற்புடம், சட்பிதாபுத்திரி தம், சம்பத்து வேட்டம, உற் கடிதம். இவற்றுட் சச்சற்புட மாவது குரு 2, இலகு- 1, புலு தம்- 1, ஜி ஆகமாத்திரை-8, இஃதீசன் சத்தியோசாத முகத்திற்பிறந்தது; பிரமசாதி சாமற் புடமாவது குரு -1, இலகு- 1,குரு- 1, ஜி ஆகமாத் திரை 6-இஃதீசன வாமமுக த்திற்பிறந்தது; அரசசாதி சட் பிதா புத்திரிகமாவது புலு தம்- 1, இலகு- 1 குரு-2, இல கு- 1, புலுதம -1 ஜி ஜி ஆக மாத்திரை - 12, இஃதீசன்

கோரமுகத்திற் பிறந்தது; வைசியசாதி, சம்பத்து வேட்டமாவது புலுதம்-9. குரு-3 புலுதம்-1, குரு-3 புலுதம்-1,ஜிஜி ஆகமாத்திரை-12, இஃதீசன் தற்புருடமுகத்திற் பிறந்தது; சூத்திரசாதி,உற்கடிதமாவது குரு-3 ஆகமாத்திரை-6 இஃதீசான முகத்திற் பிறந்தது சங்கிரம சாதி.

தாளப்பகுதி-7 துருவம், மட்டியம், உருபகம், சம்பை திரிபுடை, அடதாளம், ஏகதாளம். இவற்றுள் துருவத்திற்கு இலகு-1, குரு-1, துரிதம்-1, இதற்குச் சுரம், சரிகம கரிகரி கரி சரிகம. மட்டியத்திற்கு இலகு-1 துரிதம்-1 இலகு-1 இதற்குச் சுரம் சரிகரிசரிகம. சம்பைக்கு இலகு-1 அநு துரிதம்-1 துரிதம்-1 இதற்குச் சுரம்-சரிகரி கரி கமா. திரிபுடைக்கு துரிதம்-3 அநுதுரிதம்-1 இதற்குச் சுரம் சரிக சரிகம. அடதாளத்திற்குஇலகு 1 துரிதம்2 இலகு-1இதற்குச்சுரம் சரிகா சாரிகா மா மா. ஏதாளத்திற்கு இலகு-1 இதற்குச் சுரம் சரிகம. சம்பைக்குப் பிரமசாதி தவிர நான்குசாதியுமுள. திரிபுடைக்கு மூன்று விராமமுமோ ரநு துரிதமுமாறு லொரே சாதி இலகு விருந்தாலைந்து சாதியுமுள. மற்றையைந்து தாளங்கட்கு மைந்துசாதியுமுள அவற்றை யவ்வவ் சாதி யேகதாளம் அக்கரங்களா லறியுமாறு பிரமசாதியிலகுவிற்கு நான் கக்கரகாலம் அரசசாதி யிலகுவிற்கு மூன்றக்கரக்காலம் ஆறக்கரக் காலமு மென்ப. வைசியசாதி யிலகுவிற் கேழக்கரகாலம் சூத்திரசாதி யிலகுவிற் கைந்தக்கரகாலம் சங்கிரமசாதி யிலகுவிற் கொன்பதக்கரகாலம். எச்சாதியிலு மநுதுரிதமோ ரக்கரகாலமுந் துரிதமிரண்டக்கர காலமுமாம்.

தாளம்-9 அரிதாளம், அருமதாளம், சமதாளம், சயதாளம், சித்திரதாளம், துருவதாளம், நிவிர்த்தாளம், படிமதாளம், விடதாளம், இவையே நவசந்திதாளம்.

தாளப்பிரமாணம்- 10-காலம் மார்க்கம் கிரியை அங்கம் கிரகம் சாதி களை இளையை யதிபிரததாரம் இவையே தாள தசப்பிராணமென்ப. இவற்றுட்காலப் பிரமாணம்-1 அவையாவன: கணம் இலவம் காட்டை நிமிடம் துடிதுரிதம் இலகு குரு புலுதம் காகபதமிவற்றுட் கணம் தாமரை யிதழ் நூறடுக்கி யதிலோரிதழிலூசி செலுத்துங்கால் கணமெட்டுக்கொண்ட திலவம் இலவமெட்டுக்கோண்டது காட்டை; காட்டை எட்டுகொண்டது நிமிடம். நிமிட மெட்டுக்கொண்டது துடி. துடியிரண்டு கொண்டது துரிதம். துரித மிரண்டு கொண்டது இலகு, இலகிரண்டு கொண்டது குரு, இலகு மூன்றுகொண்டது புதன்,

குரு விரண்டு கொண்டது காகபதம், மார்க்கம்-6 தக்கணம், வார்த்திகம், சித்திரதரம், அர்த்தசித்திரம், அதிசித்திரம். இவற்றுள் எட்டு மாத்திரை யோர்களையாக கொண்டது தக்கணம். நான்கு மாத்திரை யோர்களையாகக் கொண்டது வார்த்திகம். இரண்டு மாத்திரை யோர்களையாகக் கொண்டது சித்திரம். ஒரு மாத்திரை யோர்களையாகக் கொண்டது சித்திரதரம். அரைமாத்திரை யோர்களையாகக் கொண்டது சித்திரம். நொடியளவு மாத்திரை கிரியை ௨-மார்க்கம் தேசிகம் இவற்றுள் மார்க்கம்-8 இவற்றுள் நிசத்தம்-4 சசத்தம்-4 நிசத்தமாவது ஆவாபம் நிட்கிராமம் விட்சேபம் பிரவேசம். சசத்தமாவது துருவம் சம்மியம் தாளரி சந்நிபாதம். தேசீகம்-8 துருவகம் சர்ப்பிணி கிருடியை பதுமினி விகர்ச்சிதை விச்சிப்தம் பதாகை பதிதம் இவற்றி னிலக்கியங்களை நூலாலுணர்க. அங்கம் -6 அவையாவன: முறையே பிறை, மதி, களை, வில், பாம்பு, புள்ளடி. முறையே யிவற்றின் பெயர் அநுதுரிதம் துரிதம் இலகு குரு புலுதம் காகபதம். இவற்றிலுற்பத்திகளும் பரியாய நாமங்களும் வண்ணங்களும் காதைப் பிரமாணங்களும் நூலாலுணர்க. கிரகம்-4 அதீதம் அநாகதம் சமம் விடமம் இவற்றுட் குரல்முன்னுந் தாளம்பின்னும் வருவததீவம், தாளமுன்னுங் குரல்பின்னும் வருவதநாகதம். குரலுந் தாளமு முன்னும் பின்னும் கலந்து வருவது விடமம், சாதி-5 சதுரசிரம், திரிசிரம், மிசிரம், கண்டம், சங்கீரணம், இவை முறையே பிரம வரச வைசிய சூத்திர சங்கிரமம், இவற்றை முற்கூறிய விலகு அக்கரங்களாலறிவது. களை-3. ஏககளை துவிகளை சதுர்க்களை இவற்று ளக்கரகாலமாயுங் கிரியையோடும் வருவது ஏககளை, இதனை யிரட்டித்துக் கிரியையோடு வருவது துவிகளை, இதனை யிரட்டித்துக் கிரிகையோடு வருவது சதுர்க்களை. இலயம்-3 விளம்பம், மத்திமம், துரிதம். இவற்றுளக்கர காலமாய்க் கிரியையோடு வருவது விளம்பம். இதனை யிரட்டித்து கிரியையோடு வருவது மத்திமம். இதனை இரட்டித்துக் கிரிகையோடுவருவதுதுரிதம். யதி-6 சமம், விடமம், மிருதங்கம், வேதமத்தியம், கோபச்சம் சுரோதோவகம்; இவற்றுள் நெட்டங்கமாயினுங் குற்றங்கமாயினு மொரே விதமாய் வருவது சமயதி என்றும் எல்லாவங்கமும் கிரமமின்றிக் கலந்து வருவது விடயயதி. முதலிலுங் கடையிலும் குற்றங்கமு மிடையி னெட்டங்கமும் வருவது மிருதங்கயதி. முதலிலுங் கடையிலும் நெட்டங்கமு மிடையிற் குற்றங்கமும் வருவது வேதமத்தியதி. முதலிலே நெட்டங்கமு

மீற்றிலே குற்றங்கமுமாய் நேர்ந்து வருவது கோபுச்சயதி. முதலிலே குற்றங்கமு மீற்றிலே நெட்டங்கமுமாய் வருவது சுரோதோவகம் மற்றைய விவரம் விலக்கணத்தாற் கண்டுணர்க.

தானம் 3—தலைப்படுதானம், இடைப்படுதானம் கடைப்படுதானம். அவை யாவன: அறத்தா னீட்டிய பொருளை முக்குற்றமற்ற நற்றவத்தோரைக் கொள்கெனப் பணிந்து குறையிரந்து தம் முள்ள முவந்தீதல் தலைப் படுதானம். ஆதுலர் குருடர் மாதர் முதற் பிறர் சிறுமையைப் பற்றி மனமிரங்கி யீவதிடைப்படுதானம். புகழ்வார் வங்கைமாறச் சங்க ணேட்டங் காரணங் கடைப் பாடிவற்றைப் பற்றி யீவது கடைப்படுத்தானம்.

தானை-6-தேர். கரி, பரி, வாள், வில்,-வேல்.

தி

திக்கு-8—கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு, வடகிழக்கு; இவையே அட்டதிக்காம்.

திக்கு-10 மேற்சொன்னவையன்றி மேலுங் கீழுங் கூட்டி தச திசையென்ப. கிழக்குக் கருடதிசை, தென்கிழக்கு பூனை திசை, தெற்கு சிங்கத்திசை, தென்மேற்கு கழுகுதிசை, மேற்கு நாகத்திசை, வடமேற்கு எலித்திசை, வடகககு யானைத்திசை வடகிழக்கு முயற்றிசை, மேல் விசும்புத்திசை, கீழ் பாதாள திசை.

திக்குப்பாலகர் - 8—கிழக்காதி முறையே இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன், இவர்க்கு முறையே குறிகளாவன: கொடி, புகை, சிங்கம், நாய், இடபம், கழுதை, யானை, காகம்.

திக்கு யானைகள்-8—கிழக்காதி முறையே ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம், இவையே யட்டதிக்கயம். இவற்றிற்கு முறையே பிடியானைகளாவன: அப்பிரமை, கபிலை, பிங்களை, அநுபமை தாமிரபருணி, சுதந்தி, அஞ்சனை, அஞ்சனாவதி.

திணை-2—உயர்திணை அஃறிணை. இவற்றுள் உயர்திணை மக்களுந் தேவரும் நகராருமாம்: அஃறிணை மற்ற உயிருள்ளனவு மில்லனவுமாகிய யாவுமாம்.

திணை-5—குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம, நெய்தல்.

திணையிடங்கள்- 5—மலையும் மலைசார்ந்த விடமும் குறிஞ்சி; பாலைவனமும் வனத்தைச் சார்ந்த விடமும் பாலை; காடும் காட்டைச் சார்ந்தவிடமும் முல்லை; வயலும் வயற்சார்ந்த விடமும் மருதம்; கடலும் கடற்சார்ந்த விடமும் நெய்தல்.

திதி-15—பிரதமை, துவிதியை, திரிதியை, சதுர்த்தி,

பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி, சதுர்த்தசி, இவற்றில் சுக்கில பக்கத்தில் சுந்தமென்றும் கிருட்டின பக்கத்திற் பகுளவமென்றுங் கூட்டுக. பதினைந்தாந் திதியாவது சுக்கில பக்கத்திற்கு பௌர்ணமி. கிருட்டின பக்கத்திற்கு அமாவாசியை.

திராவிடம் 5—திராவிடம், ஆந்திரம் கன்னடம், மகாராட்டிரம், கூர்ச்சரம்.

திரவியம்மீ— மலைபடுதிரவியம், காடுபடுதிரவியம், நாடுபடுதிரவியம், நகர்படுதிரவியம், கடல்படுதிரவியம்; இவற்றுண் மலைபடுதிரவியம் மிளகு, கோட்டம், அகில் தக்கோலம், குங்குமம்; காடுபடுதிரவியம்- இருல் தேன், அரக்கு, மயிற்பீலி, நாவி; நாடுபடுதிரவியம் - செந்நெல், சிறுபயறு, கரும்பு, வாழை, செவ்விளநீர்; நகர்படுதிரவியம்-அரசன், பித்தன், மந்தி, யானை, கண்ணுடி; கடல்படு திரவியும்-உப்பு, முத்து, பவளம், சங்கு, ஒக்கோலை.

திருமாலவதாரம்-10— மச்சம், கூர்மம், வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலபத்திரன், கண்ணன், கற்கி. இவற்றிற்குக் காரணம்: வேதத்தைத் திருடிக் கடலிலொளித்த சோமுகாசூரனென்னு மிராக்கதனைக் கொல்ல மச்சாவதாரம்; கடலைக் கடையும்போது மந்தரமலையை தாங்கக் கூர்மாவதாரம்; பூமியைப் பாயாக இரணியாக்கதன் சுருட்டினதை விரிக்கவும் அவனைக் கொல்லவும் வராகாவதாரம்; இப்பழி வாங்க சருவதேவ வணக்கம் விலக்கின அவன் தம்பி இரணியகசிபனைக் கொல்ல நரசிங்காவதாரம்; இந் நான்கவதாரத்துக்குந் தந்தைதாயாரில்லை. மாவலியை யடக்கக் காசிபனுந் திதியுந் தந்தை தாயாக வாமனவதாரம்; அரசராற் றாழ்த்தப்பட்ட பார்ப்பார் நிமித்தமவ்வரசரைக் கொல்ல சமதக்கினியும் இரேணுகையுந் தந்தை தாயாகப் பரசுராமாவதாரம், இராவணன் முதலிய விராக்கதரைக் கொல்ல தசரதனுங் கௌசலையுந் தந்தைதாயாக இராமாவதாரம்; பிரலம்பன் முதற் பல இராக்கதரைக் கொல்ல வசுதேவனுந் தேவகியு முரோகணியுந் தந்தைதாயாக பலபத்திர ராமாவதாரம்; பாரதம் நடத்த வசுதேவனுந் தேவகியுந் தந்தைதாயாக கண்ணனவதாரம்; அறத்தை நிலைபெறச் செய்யகற்கியவதாரம்.

திருமாலவதாரம் 15—சனகன், சனந்தனன், சனுதனன், சனற்குமாரன், நரநாரணன், கபிலன், இடபன், நாரதன், அயக்ரீவன், தத்தாத்திரேயன், மோகினியாகபதி, விபரதன், தன்வந்தரி, பௌத்தன்.

திருமாலாயுதம் 5-சக்கரம், தனுசு, வாள் தண்டு சங்கம்.

தீ

தீ 3—உரியிலுள்ள தீ, உதிரத்துள்ள தீ, சினத்தி லெழுந் தீ; அன்றியும் வேதாக்கினி-3, காருகபத்தியம், தக்கணாக்கினியம், ஆகவனீயம்.

தீக்குணம்- 10—பொய் சொல்லல், கோட்சொல்லல், கோபித்துச் சொல்லல், பயனிலசொல்லல் இந்நான்கும் வாக்கின் தீக்குணம், களவாடப்போதல், வறிதே தொழில் செயல், கொலை செயல், இம் மூன்றுங் காயத் தீக்குணம். கொலை நினைக்கை, காமப் பற்று, ஆசை இம் மூன்றும் மனத் தீககுணம்.

தீவு-7-நாவல், இறலி, குசை,கிரவுஞ்சம், புட்கரம், தெங்கு, கமுகு இவ்வெழு வகைப் பொருளு மவ்வத் தீவின் மிக்கனவாகையால் இப்பெயர் பெற்றன.

து

துரககதி- 5—மல்லககதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி.

துவர்-10—நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், ஆல், அரசு,அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்தளிர்.

தே

தேயம்-56—அங்கம், அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், யவனம். ஒட்டியம், கருசம், கலிங்கம், கன்னடம், கர்ணுடம், காசம், காஸ்மீரம், காந்தாரம். காம், போசம், கிராடம், குருகு, குடகம், குந்தளம், குரு, குலிந்தம், கூர்ச்சரம், கேகயும், கேரளம், கொங்கணம், கொள்ளம், கோசலம், சகம், சவ்வீரம், சாலவம், சிங்களம் சிந்து, சீனம்,சூரசேனம்,சோழம், சோனகம், திராவிடம், நுளுவம், தெலுங்கணம். நிடதம், நேபாளம், பாஞ்சாலம், பப்பரம், பல்லவம், பாண்டி, புலிந்தம், போடம், மகதம், மச்சம், மராடம், மலையாளம், மாளவம், காந்தம், வங்கம், வங்காளம், விதர்ப்பம்.

தேவர் 5—பிரமா, விட்டுணு, உருத்திரன், மயேச்சுரன், சதாசிவன். இவர்கள் பஞ்சதேவதையும், பஞ்சகருத்தர்களு மென்ப.

தேவர்தொகை 33—ஆதித்தர்-12, அச்சுவினிகள்-2, உருத்திரர்-11, வசுக்கள்-8.

தொ

தொழில் 3—ஆக்கல், காத்தல், அழித்தல்.

தொழில், 6—உழவு, தொழில், வரைவு, வாணிபம், விச்சை, சிற்பம்.

தொழில் 6—அந்தண ரறுதொழில்-ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். அரசரறுதொழில்- ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், பொருதல், வைசிய ரறுதொழில்-ஓதல், வேட்டல், பொருளீட்டல்,

ஈதல், பசுக்காத்தல், ஏருழல், சூத்திர ரறுதொழில், முதன்மூவர்க்கேவல் செயல்-பொருளீட்டடல், உழுதல், பசுக்காத்தல் குயிலுவத் தொழில்களாவன - தோற்கருவிகளைக் கொட்டலுந் துளைக்கருவிகளை யூதலுமாம். காருக வினைகளாவன-பட்டு நூலையும் பருத்தி நூலையும் கொண் டாடையாக்கலுஞ் சுமத்தலு முழத்தலுமம்.

தோ

தோற்றம் 2—சரம் அசரம், இவற்றில் சரம் நடையுள்ளன. அசரம் நடையில்லன.

தோற்றம் 4-பை, முட்டை, நிலம், வியர்வை.

ந

நட்சத்திரம் 27—அசுவனி, பரணி, கார்த்திகை, உரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயிலியம், மகம், பூரம், உத்திரம், அத்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம் சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இவற்றுள் ஒவ்வொன்று முறையே மேட முதற் பன்னிரண்டு ராசிகளிற் பதின்மூன்று பாகமுமிருபது கலையுங் கொண்டவிடம்.

நதி 7—கங்கை, யமுனை, சரஸ்வதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவரி இவையே சத்த தீர்த்தமெனப்படும்.

நதி 11—மேற்சொல்லிய வேழின்மேல் சிந்து, தாமிரபரணி, துங்கபத்திரி, கிருஷ்ணையென்றுக் கூட்டுக.

நரகம் 7—அள்ளல், இரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி.

நரகவட்டம் 7—தமப்பிரபை, இமப்பிரமை, தூமப்பிரபை, வாலுகைப் பிரபை, துயிற்பிரபை, சோறிப்பிரபை, அழற்பிரபை. அவையாவன: இருள், குளிர், புகை, மணல், துயிலாமை, இரத்தம், தீ.

நரம்பு 7—இசை காண்க.

நற்குணம் 10—மெய்யுரை, நல்வார்த்தை, இனியவை கூறல், பயன்படுசொல் இந்நான்கும் வாக்கினற்குணம், கோயில் வலம்வரல், தவம் புரிதல், தானஞ் செயல், இம்மூன்றுங் காயநற்குணம். அருணினைவு, ஆசையறுந்தல், தவப்பற்று இம்மூன்றும் மனநற்குணம்.

நா

நாகம் 8—வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன். இவற்றைக் கடவுட் பாம்பென்ப. இவை முறையே கிழக்கு முதலெண்டிக்கிற் பூமியைத் தாங்குவதன்றியே, நடுவே

சேடனென்னு நாகம் பூமியைத் தாங்கா நிற்கும். இந் நவநாகமுங் காசிபப்பிரமாவுக்கும் அவன் மனைவிகள் பதின்மூவருட் கத்துருவைக்கும் பிறந்தன.

நாடி 10-சுழிமுனை, இடைகலை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகுவை, அலம்புடை, புருடன், குரு, சங்கினி. அவையாவன: சுழிமுனை ஆதாரமாறினு மூடுருவி நிற்பது; இடை பிங்கலையிரண்டுங் கத்திரிக்கோல் போர் பின்னி நிற்பன; காந்தாரி நாபியிற்றேன்றிச் சத்த மேழுக்கு மேழுநாடியாய்க் கண்டத்துறுவது; அத்தி சிகுவை யிரண்டும் பத்து நாடியுற்றுக் கண்ணினிற்பன; அலம்புடை புருடனிரண்டும் செவியினூற்றிருபது நரம்புற்றிருப்பன: குரு நாபியுறைந்து குய்யம்பற்றி நிற்பது; சங்கினி உபத்தத்தை பற்றி யிருப்பது.

நாட்டமைதி 6—செல்வம், விளைநிலம், செங்கோல் நோயின்மை, வளம், குறும்பின்மை.

நாட்டுக்குற்றம் 7—தொட்டியர், கள்வர், யானை, பன்றி, விட்டில், கிள்ளை, பெருமறை.

நாட்டுக் குற்றம் 8—விட்டில், தன்னரசு, வேற்றரசு, யானை, மிகுமழை, மிகுசாற்று கிள்ளை, நட்டம்.

நி

நிலம் 4—குறிஞ்சி, முல்லை மருதம், நெய்தல்.

நிலை 4—பைசாசம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம். இவை நான்கும் விற்றெருடுத் தம்பினை யெய்வார்க்குரிய நிலை; இவற்றுளொரு காலினின் றெருகான் முடக்கல் பைசாசநிலை, இருகாலும் பக்கல் வளைய மண்டலத் தலே மண்டலநிலை; வலக்கான் மண்டலித் திடக்கான் முந்துறலேயாலீட நிலை; வலக்கான் முந்துற்றிடக்கான் மண்டலித்தலே பிரத்தியாலீட நிலை.

நூ

நூல் 3—முதனூல், வழிநூல், சார்புநூல். இவற்றுளொருவன் முன் கண்டுரைத்ததே முதனூல்; முதனூல் வழியே விகற்பித்துரைத்த நூலே வழிநூல்; அவ் விருநூற்பொருட் கூட்டித் திரிபு வேறுடைய நூலே சார்புநூல்.

நூற்பயன் 4—அறம், பொருள், இன்பம், வீடு.

ப

பக்குவர் 3—கருமகாண்டி, ஞானகாண்டி, பத்திகாண்டி.

பஞ்சமூலம் 5—செவ்வியம், சித்திரமூலம், கண்டுபரங்கி, பேரரத்தை, சுக்கு.

படைவகுப்பு 4—அணி, உண்டை, ஒட்டு, யூகம்.

பட்சி 5—வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில், இவற்றிற்கு முறையே யெழுத்து அ, இ, உ, எ, ஒ.

உண்டி, நடை, அரசு, தூக்கம், சாவு. பிற்பக்கமாகில் உண்டி, சாவு, தூக்கம், அரசு, நடை. சாவு, தூக்கமில்லாத பொழுதறிந்து செய்யுண் முதலைய செய்தல் நன்மை.

பண்-4—பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி.

பதவி-4—சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்சியம், இவற்றுள் கடவுளுலகத்தில் வாழ்தலே சாலோகம். கடவுள் சமீபத்தில் வாழ்தலே சாமீபம். கடவு ளுருப்போன்று வாழ்தலே சாரூபம். கடவுளோ டொன்றி வாழ்தலே சாயுச்சியம்.

பரிச்சேதம்- 3—காலபரிச்சேதம், தேய பரிச்சேதம், வத்து பரிச்சேதம். அவை யாவன: ஒரு காலத்துண் டொரு காலத்தின் றென்பது காலப்பரிச்சேதம். ஒருதேயத்துண்டொரு தேயத்தின் றென்பது தேயபரிச்சேதம். ஒரு பொருளிதுவாகு மொரு பொரு ளிஃதன்றென்பது வத்து பரிச்சேதம்.

பருவகாலம்- 6—கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில், இவையே ஆவணி முதலாக இரண்டிரண்டு மாதம் ஒவ்வொன்றுகும்.

பருவம்-4—வாலை, தருணி, பிரவுடை, விருத்தை. இவை பெண்கட்குரிய பருவமாம்.

பருவம்-7—பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண். இவர்க்கு முறையே வயதெல்லை: ஐந்து முதலேழளவும் பேதை. எட்டு முதற் பதினொன்றளவும் பெதும்பை. பன்னிரண்டு முதற் பதின் மூன்றளவு மங்கை. பதினான்கு முதற் பத்தொன்பதளவு மடந்தை. இருபது முத லிருபத்தைந்தளவு அரிவை. இருபத்தாறு முதல் முப்பத்தொன்றளவும் தெரிவை. முப்பத்திரண்டு முதல் நாற்பதளவும் பேரிளம் பெண். ஆகையா லொவ்வொரு பருவங்கொண்ட வருடம் 3-4-2-6-6-6-9 இவை பெண்கட்குரிய பருவமாம்.

பலை-3—கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், இவையே திரிபலை யென்ப.

பா

பா-4—வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா வஞ்சிப்பா. மருட்பா வொன்றுங் கூட்டி ஐந்தென்பாரு முளர்.

பாடை-18—அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம் சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம, துளுவம், பப்பரம், மகதம், மராடம், வங்கம்.

பாதகம்5—கொலை, பொய், களவு, கள்ளருந்தல் குருநிந்தை. இவையே பஞ்சமாபாதகம்.

பாகம்-7—சித்த சமூன்னது, அருத்தலோபம், கா

மம், வைடம்மியம், அசனப் பிரியம், கோபம், அநுட்டா ணம். இவையே சத்தவிச னம். இவை முறையே அகங் காரம், உலோபம், காமம், பகை, போசனப் பிரியம், காய்தல், சோமபல். இவை யேழுந் தலைமையான பாதக மெனப்படும்.

பாலை-7 —இசையைக் காண்க.

பால்-5—ஒருவன், ஒருத்தி, பலர், ஒன்று, பல.

பால்-5-முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை, இவற்றுண் மயிரை யுச்சி யின் முடித்தலே முடி; பக் கன் முடித்தலே கொண் டை; பின்னே சொருகல் சுருள்; சுருட்டி முடித்தலே குழல்; பின்னி விடுத்தலே பனிச்சை.

பாவபுண்ணிய வழக்கம் 3- செய்தல், செய்வித்தல், உடன்படல்.

பாவினம்- 3— தாழிசை, துறை, விருத்தம்.

பி

பிணி 3— வாதம், பித்தம், சிலேத்துமம்.

பிரபந்தம்- 96—அவையா வன-சாதகம்: திதிநிலை, வார நிலை, நாண்மீனிலை, யோக நிலை, கரண நிலை, ஓரை நிலை, கிரகநிலை, இவ்வேழ் வகை யுறுப்புக்கள் நிலையையுஞ் சோதிட நூலார் நன்குணர் த்தவற்றை யமைத்தவற்ருற் றலைவற் குறுவகை கூறுவது; மற்றும் யுகாதியாண்டு முத லியவுங் கொள்க.

பிள்ளைக்கவி:— காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம் புலி, சிறுபறை, சிற்றில், சிறு தேர் இவற்றை முறையே அகவல் விருத்தத்தாற் பப் பத்தாகக் கூறுவ தாண்பாற் பிள்ளைக்கவி. இவ்வுறுப்பி னுட் கடை மூன்ருெழித்துக் கழங்கு, அம்மானை, ஊசல் என்பவற்றைக் கூட்டி மேற் சொல்லியவாறு கூறுவது பெண்பாற் பிள்ளைக் கவி யாம்.

பரணி-போர்முகத்தாயிரங் களிற்றி யானையைக் கொன்ற வீரனைத் தலைமகனுகக் கொ ண்டு கடவுள் வாழ்த்துங் கடைதிறப்பும் பாலை நிலமுங் காளி கோயிலும் பேய்க ளோடு காளியுங் காளியோ டுப் பேய்களுஞ் சொல்லத் தான் சொல்லக் கருதிய தலை வன் கீர்த்தி விளங்கலு மவன் வழியாகப் புறப்பொரு டோன்ற வெம்போர் வழங்க விரும்பலு மென்றிவை யெல் லா மிருசீரடி முச்சீரடி யொ ழித்தொழிந்த மற்றைய வடி யாக வீரடிப்பஃருழிசையாற் பாடுவது.

கலம்பகம்:— ஒரு போகும், வெண்பாவும், கலித்துறையு முதற் கலியுறுப்பாக முற் கூறிய புயவகுப்பு, மதங்கம், அம்மானை, காலம், சம்பிர தம், கார், தவம், குறம், மறம் பாணம், களி. சித்து, இரங்

கல், கைக்கிளை, தூது, வண்டு தழை, ஊசல் என்னு மிப்பதி னெட்டுறுப்புகளுமியைய மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சிவிருத்தம், வஞ்சித்துறை, வெண்டுறை என்னு மிவற்றால் இடையே வெண்பா, கலித்துறை, விவர அந்தாதித் தொடையான் முற்றுங் கூறுங்காற்றேவர்க்கு நூறும், அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்தும், அரசர்க்குத் தொண்ணூறும், வைசியர்க் கைம்பதும், சூத்திரற்கு முப்பதுமாக பாடுவது.

அகப்பொருட் கோவை—இருவகைப்பட்ட முதற் பொருளும், பதினான்கு வகைப் பட்டகருப்பொருளும். பத்து வகைப்பட்ட உரிப்பொருளும் பொருந்திக் கைக்கிளை முதலுற்றவன் புடைக்காமப் பகுதியவாங் களவொழுக்கத் திணையுங் கற்பொழுக்கத் திணையுங் கூறுதலே யெல்லை யாகக் கட்டளைக் கலித்துறை நானூற்றாறின முதலாகத் துறையீருகக் கூறப்பட்ட பன்னிரண்டாகப் பாட்டுறுப்பும் வழுவின்றித் தோன்றப் படுவது. இது வெண்பா அகவல், கலிவஞ்சி, வண்ணம் இவற்றானும் வழங்கப் படும்.

ஐந்திணைச் செய்யுள்—புணர்தன் முதலிய லைவந்துரிப் பொருளும் விளங்கக் குறிஞ்சி முதலியவைந்திணை யுங் கூறுவது.

வருக்கக்கோவை—அகர முதலாகிய வெழுத்து வருக்க மொழிக்கு முதலா யெழுத்து முறையே காரிகைத் துறைப் பாட்டாகப் பாடுவது.

மும்மணிக்கோவை —ஆசிரியப்பாவும் வெண்பாவும் நேரசையு நிரையசைவுங் கொண் டெழுத்தெண்ணிப் பாடும் கலித்துறையு முறையே தொகை முப்பது பெற வடுக்கி யந்தாதித் தொடையாற் பாடுவது.

அங்கமாலை — ஆண் மகனுக்கும் பெண் மகளுக்கும் மக்களைவெடுத்துக் கூறும் அவயவங்களை வெண்பாவா லாயினும் வெளிவிருத்தத் தாலாயினும் பாதாதிகேசங் கேசாதி பாதமுறை பிறழாது தொடர்வுறப் பாடுவது.

அட்டமங்கலம் — கடவுளைப்பாடி அக்கடவுள் காக்க வென ஆசிரியவிருத்த மெட்டிலந்தாதித்துக் கூறுவது.

அநுராகமாலை — தலைவன் கண்ட இன்னொருத்தியைக் கேட்டுண்டுயிர்த் தினியை யுறப் புணர்ந்ததைத் தன் னுயிர்ப் பாங்கற் குறைத்த தாக நேரிசைக் கலிவெண் பாவாற் கூறுவது.

இரட்டைமணி மாலை—முறையானே வெண்பாவுங் கலித்துறையு மிருபஃதந் தாதித் தொடையான் வருவது நேரிசை வெண்பா பதுமம் ஆசிரியவிருத்தம் பத்துமந்

தாதித்தொடையாற் பாடுவது.

இணைமணிமாலை —வெண்பாவு மகவலும் வெண்பாவுங் கலித்துறையுமாக விரண்டிரண்டாகவிணைத்து வெண்பா வகவலிணை மணிமாலை வெண்பா கலித்துறை யிணையணிமாலை என நூறுநூறு அந்தாதித்தொடை நான்காலும் பாடுவது.

நவமணிமாலை— வெண்பா முதலாக வேறுபட்ட பாவும் பாவினமுமாக வொன்பது செய்யுளந்தாதிப் பாடுவது.

நான்மணிமாலை — வெண்பாவுங் கலித்துறையும்,விருத்தமு மகவலுமந்தாதித் தொடையாக நாற்பது பாடுவது.

நாம மாலை—அகவலடியுங் கலியடியும் வந்து மயங்கிய வஞ்சிப்பாவா லாண்மகனைப் புகழ்ந்து பாடுவது.

பலசந்தமாலை— பப்பத்துச் செய்யு ளொவ்வோர் சந்தமாக நூறுசெய்யுட் கூறுவது.

பன்மணிமாலை— மேற் சொல்லியகலம்பகத்துள் வருமொரு போகுமம்மானையு மூசலுமின்றி யேனையுறுப்புகளெல்லாமையை வருமாறு கூறுவது, இதுவே கலம்பகம்,

மணிமாலை— எப்பொருண் மேலும் வெண்பா விருபதுங் கலித்துறை நாற்பதும் விரவி வருவது.

புகழ்ச்சிமாலை— அகவலடியுங் கலியடியும் வந்துமயங்கியு வஞ்சிப்பாவான் மாதர்களினது சீர்மையைக் கூறுவது.

பெருமகிழ்ச்சி மாலை— தலைவியினழகு குணமார்க்கஞ் சிறப்பினைக் கூறுவது.

வருக்கமாலை — மொழிக்கு முதலாய் வருக்க வெழுத்தினுக் கொவ்வோர் செய்யுட் கூறுவது.

மெய்கீர்த்திமாலை — சொற்சீரடி யென்னுங் கட்டுரைச் செய்யுளாற் குலமுறையிற் செய்த கீர்த்தியைக்கூறுவது.

காப்புமாலை — தெய்வங் காத்தலாக மூன்று செய்யுளானும், ஐந்து செய்யுளானும், ஏழு செய்யுளானும் பாடுவது.

வேனின்மாலை — வேனிலையு முதிர்வேனிலையுஞ் சிறப்பித்துப் பாடுவது.

வசந்தமாலை — தென்றலை வருணித்துப் பாடுவது.

தாரகைமாலை —அருந்ததிக் கற்பின் மகளிர்க்குள்ள வியற்கைக் குணங்களை வகுப்பாற் கூறுவது. தூசிப் படையினணியைப் புகழ்ந்த வகுப்பென்மாரு முளர்.

உற்பவமாலை — திருமால் பிறப்பத்தனையும் ஆசிரிய விருத்தத்தாற் கூறுவது.

தானமாலை— அகவ லோசையிற்பிறழா தாசிரியப்பாவான் முன்ன ரெடுத்துச் சொல்லுங் கொடிப்படையைக் கூறுவது.

மும்மணி மாலை— வெண்பாவுங் கலித்துறையு மகவலுமந்தாதித் தொடையான் முப்பது பாடுவது.

தண்டக மாலை— வெண்பாவின் முந்நூறு செய்யுட்

கூறுவது. இது வெண் புணர்ச்சிமாலை யெனவும் படும்.

வீரவெட்சிமாலை — சுத்த வீரன் மாற்றானூரிற் சென்று பசுநிரைகோடற்கு வெட்சிப் பூமாலைசூடி அவ்வண்ணம் போய் நிரை கவர்ந்துவரின் அவனுக்கு முன்பு தசாங்கம் வைத்துப் போய் வந்த வெற்றி பாடுவது.

வெற்றிக் கரந்தை— மஞ்சரி பகைவர்கொண்ட தந் நிரை மீட்போர் கரந்தைப் பூமாலை சூடிப்போய் மீட்பதைக் கூறுவது.

போர்க்கெழு வஞ்சி—மாற்றார்மேற் போர் குறித்துப் போகின்ற வயவேந்தர் வஞ்சிப்பூமாலை சூடி புறப்படும் படையெழுச்சிச் சிறப்பை யாசிரியப்பாவாற் கூறுவது.

வரலாற்று வஞ்சி—குல முறை பிறப்பு முதலிய மேம்பாட்டின் பல சிறப்பையுங் கீர்த்தியையும் வஞ்சிப்பாவாற் கூறுவது.

செருக்களவஞ்சி— போர்க்களத்திலே பட்ட மனிதருடலையும் மாண்ட குதிரையுடலையும் நாயும் பேயும் பிசாசமுங் கழுகும் பருந்துங் காகமுந் தின்றுக் களித் தாரவாரமாயிருக்கப் பூதமும் பேயும் பாடியாட விங்ஙன மிகுந்த சிறப்புப்பாடுவது இதையே பறந்தலைச் சிறப்புப்பாட்டு மென்ப.

காஞ்சிமாலை— மாற்றாரூர்ப் புறத்துக் காஞ்சிப் பூமாலை சூடி தன்றலைக் கூறுவது.

நொச்சிமாலை—புறத் தூன்றிய மாற்றார்க்கொடலன்றி நொச்சிப் பூமாலை சூடி தன் மனதில் காக்குந்திறங் கூறுவது.

உழிஞைமாலை — மாற்றார் ஊர்ப்புறஞ் சூழ வுழிஞைப் பூமாலை சூடிப் படைவலைப் பதைக் கூறுவது.

தும்பை மாலை—மாற்றாரோடு தும்பைப்பூமாலை சூடிப் பொருதுவதைக் கூறுவது.

வாகைமாலை— மாற்றாரை வென்று புகழ்படைத்து வாகைமாலை சூடுவதை யாசிரியப்பாவாற் கூறுவது.

வாதோரண மஞ்சரி— கொலைபுரி மதயானையை வயப்படுத்தி அடக்கினவர்கட்கும் எதிர்பொரு களிற்றை வெட்டி யடக்கினவர்கட்கும் பற்றிப் பிடித்துச் சேர்த்தவர் கட்கும் வீரப்பாட்டின் சிறப்பை வஞ்சிப்பாவாற் றொகுத்துப் பாடுவது.

எண் செய்யுள்— பாட்டுடைத் தலைவன் ஊரினையும் பெயரினையும் பத்து முதல் ஆயிரமளவும் பாடி எண்ணாற் பெயர் பெறுவது.

தொகைநிலைச் செய்யுள்— நெடிலடிச் செய்யுளாற் றொகுத்தது, நெடுந்தொகையும் குறுந்தொகையும் கலிப்பாவாற் றொகுத்தது கலித்தொகையும் போல்வன.

ஒலியலந்தாதி — பதினாறு கலை யோரடியாகவைத் திங்ஙன் நாலடிக் கறுபத்துநாலு கலை வகுத்து பல சந்தமாக

வண்ணமுங் கலை வைப்புந் தவருமலந்தாதி முப்பது செய்யுள் பாடுவது, சிறுபான்மை யெட்டுக்கலையானும் வரப்பெறும். அன்றியும் வெண்பா வகவல் கலித் துறையாகிய விம்மூன்றையும் பப்பத்தாக வந்தாதிப் பாடுவதுமாம்.

பதிற்றந்தாதி—பத்து வெண்பாக் கலித்துறைப் பொருட்டன்மை தோன்ற வந்தாதிப்பாடுவது.

நூற்றந்தாதி— நூறுவெண் பாவினாலேனும், நூறு கலித் துறையினாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது.

உலா—இளமைப் பருவ முற்ற தலைமகனைக் குலங் குடி பிறப்பு மங்கலம் பரம் பரை இவற்றானின்னானென் பது தோன்றத் தலைமையாய் மாதர் நெருங்கிய வீதியிடத் துமவன் பவனிவரப் பேதை முதலிய வேழு பருவப்பெண் களுங் கண்டு தொழுவதாக நேரிசைக் கலிவெண்பா வாற் கூறுவது.

உலாமடல்— கனவிலொரு பெண்ணைக்கண்டு கலவி யின்ப நுகர்ந்தோன் விழித்த பின் அவள் பொருட்டு மட லூர்வே னென்பதைக் கலி வெண்பாவான் முற்றுவிப் பது.

வளமடல்— அறம் பொரு ளின்பமாகிய அம் முக் கூறு பாட்டின் பயனையெள்ளி மங் கையர் திறத்துறுங் காமவின் பத்தினையே பயனெனக் கொண்டு பாட்டுடைத் தலை மக னியற்பெயர்க்குத் தக்க தை யெதுகையாக நாட்டி யுரைத்து அவ்வெதுகைபடத் தனிச்சொலின்றி இன்னி சைக்கலிவெண்பாவாற் றலை மகனிரந்து குறைபெறாது மடலேறுவதா யீரடியெது கை வரப் பாடுவது.

ஒருபா வொருபஃது—அக வலும் வெண்பாவுங் கலித் துறையுமாய விவற்றிலொன் றினாலந்தாதித் தொடையாற் பத்துப் பாடுவது.

இருபாவிருபஃது— பத்து வெண்பாவும் பத்தகவலு மந்தாதித் தொடையா னிரு பதினைந்து வருவது.

ஆற்றுப்படை— அகவற் பாவால் விறலி பாணர், கூத் தர், பொருநர் நால்வரு ளொ ருவர் பரிசிற்குப் போவா ரைப் பரிசுபெற்று வருவார் ஆற்றிடைக்கண்டு தலைவன் கீர்த்தியுங்கொடையுங்கொற் றமுஞ் சொல்வது.

கண்படைநிலை— அரசரு மரசரைப்போல்வாரு மவைக் கணெடிது வைகியவழி மரு த்துவரும் அமைச்சரு முத லினோரவர்க்கு கண்டுயில் கோடலைக் கருதிக் கூறுவது.

துயிலெடைநிலை— தன் வலியால் பாசறைக்கண் ணெருமனக் கவர்ச்சியின்றித் துயின்ற வரசற்கு நல்லபுக ழைக் கொடுத்தலைக் கருதிய சூதர் துயிலெழுப்புதலாகப் பாடுவது.

பெயரினிசை— பாட்டு டைத் தலைவன் பெயரினைச் சார இன்னிசை வெண்பா

வாற்றொண்ணூறேனும் எழுபதேனும் ஐம்பதேனும் பாடுவது.

ஊரின்னிசை—பாட்டுடைத்தலைவனூரினைச்சார வின்னிசைவெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

பெயர் நேரிசை—பாட்டுடைத் தலைவன் பெயரினைச் சார நேரிசை வெண்பாவால் தொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

ஊர்நேரிசை—பாட்டுடைத் தலைவனூரினைச்சார நேரிசை வெண்பாவாற் றொண்ணூறேனு மெழுபதேனு மைம்பதேனும் பாடுவது.

ஊர்வெண்பா—வெண்பாவால் ஊரைச் சிறப்பித்துப் பத்துச் செய்யுள் கூறுவது.

விளக்குநிலை— வேலும் வேற்றலையும் விளங்கா தோங்கிய வாறுபோலக் கோலொடு விளக்குமொன்று பட்டோங்குமா றோங்குவதாகக் கூறுவது.

புறநிலை— நீ வணங்குந் தெய்வ நின்னைப் பாதுகாப்ப நின்வழி மிகுவதாகவெனக் கூறுவது.

கடைநிலை— சான்றோர் சேணிடை வருவதலாற் பிறந்த வருந்தந் தீர வாயில் காக்கின்றவனுக் கென் வரவினைத் தலைவற் கிசையெனக் கடைக்கணின்று கூறுவது.

கையறுநிலை— கணவனோடு மனைவி கழிந்துழி யவர்கட்பட்ட வழிவுப் பொருளெல்லாம் பிறர்க்கறிவுறுத்தித் தாமிறந்து படாதொழிந்த வாயத்தாரும் பரிசில் பெறும் விறலியருந் தனிப்படருழந்த செயலுறு நிலையைக் கூறுவது.

தசாங்கப் பத்து—நேரிசை வெண்பாவா லரசன் படைத்த தசாங்கத்தினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

தசாங்கத்தியல்— அரசன் தசாங்கத்தினை யாசிரிய விருத்தம் பத்தினாற் பாடுவது.

அரசன் விருத்தம்—பத்துக் கலித்துறையு முப்பது விருத்தமும் கலித்தாழிசையுமாகிய வற்றால் மலை, கடல், நாட்டு வருணனையும், நிலவருணனையும், வாணமங்கலமுந் தோரண மங்கலமும் பாடி முடிப்பது; இது முடிபுனைந்த வேந்தற்காம்.

நயனப் பத்து — கண்ணினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

பயோதரப் பத்து— முலையினைப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

பாதாதிகேசம்—கலிவெண்பாவா லடிமுதன் முடியளவுங் கூறுவது.

கேசாதிப் பாதம்—கலிவெண்பாவான் முடிமுத லடியளவுங் கூறுவது.

அலங்காரபஞ்சகம்-வெண்பா, கலித்துறை, அகவல், ஆசிரியவிருத்தம், சந்த விருத்த மிவற்றையே மாறிமாறி நூறு செய்யுளாக வந்தாதிப் பாடுவது.

கைக்கிளை—ஒருதலைக் காமத்தினை யைந்து விருத்தத்தாற் கூறுவதாம்.

மங்களவள்ளை— உயர் குலத் துதித்த மடவரலை வெண்பா ஒன்பதாலும் வகுப்பொன்பதாலும் பாடுவது.

தூது—ஆண்பாலும்பெண்பாலும் அவரவர் காதல் பாணன் முதலிய வுயர்திணையோடுஞ் சொல்லித் தூது போய் வாவென கலிவெண்பாவாற் கூறுவது.

நாற்பது—காலமு மிடமும் பொருளுமாகிய விவற்றிலொன்றனை நாற்பது வெண்பாவாற் கூறுவது.

குழமகன் — கலிவெண்பாவான் மாதற்கடங்கையிற் கண்ட விளமைத் தன்மையுடைய குழமகனை புகழ்ந்து கூறுவது.

தாண்டகம்— இருப்பத்தேழெழுத்து முதலாக வுயர்ந்த வெழுத்தடியின் வாயெழுத்துங் குருவுமிலகுவு மொத்து வந்தன அளவியற்றுண்டகமெனவும் எழுந்து ஒவ்வாது வந்தன அளவருத்தாண்டகமெனவும்படும்.

பதிகம்—ஒரு பொருளைக் குறித்துப் பத்துச் செய்யுளாற் கூறுவது.

சதகம்—அகப் பொருளொன்றன்மேலாதல் புறப்பொருளொன்றன்மேலாதல் கற்பித்து நூறு செய்யுள் கூறுவது.

செவி யறிவுநிலை—பொங்குத லின்றிப் புகையோர் நாப்பண விறற்கடனென்றவை யடக்கியற் பொருளுறவெண்பா முதலு மாசிரியமிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

வாயுறை வாழ்த்து—வேம்புங் கடுவும் போல்வனவாகிய வெஞ்சொற்கண் முன்னர்த் தாங்கக் கூடாவாயினும், பின்னர்ப்பெரிதும் பயன்றருமென மெய்ப்பொருளுறவெண்பா முதலு மாசிரியமிறுதியுமான மருட்பாவாற் கூறுவது.

புறநிலை வாழ்த்து—வழிபடு தெய்வ நிற்புறங்காப்பப் பழிநீர் செல்வமோ டொருகாலைக் கொருகாற் சிறந்து பொலிவாயென வெண்பா முதலு மாசிரிய மிறுதியுமான மருட்பாவாற் பாடுவது.

பவனிக்காதல் — உலாக் காட்சியா லெய்திய காமமிகுதியாலவை பிறரொடுமுரைத்து வருந்துவது.

குறத்திப் பாட்டு—தலைவன் பவனிவரவு, மகளிர் காமுறுதல், மோகினி வரவு, உலாவப் போந்த தலைவனைக் கண்டு மயங்கல், திங்கள் தென்றல் முதலிய உபாலம்பனம் பாங்கியுற்ற தென்னென வினவல், தலைவி பாங்கியோடுற்றது கூறல், பாங்கி தலைவனைப் பழித்துக் கூறல். தலைவி தலைவனைப் புகழ்ந்து கூறல், தலைவி பாங்கியைத் தூதுவேண்டல், தலைவி பாங்கியோடு தலைவனடையாளங் கூறல், குறத்தி வரவு, தலைவி குறத்தியை மலைவள முதலிய வினவல், குறத்தி மலை

வள நாட்டுவள முதலிய கூறல், தலைவன் தலவளங் கிளைவள முதலிய கூறல். தலைவி குறிசொல்லி வந்த மை கூறல், தலைவி குறி வினவல், குறத்தி தெய்வம் பராவல், குறிதேர்ந்து நவி வரவு கூறல் தலைவி பரிசி லுதவி விடுத்தல், குறவன் வரவு, புள்வரவு கூறல், கண்ணி, குத்தல், புட்படுத் தல், குறத்தியைக் காமுற்றுத் தேடல், குறவன் பாங்க னொடு குறத்தி யடையாளங் கூறல், குறவன் குறத்தியைக் கண்ணுறல், குறவனணி முதலிய கீண்டையுற்று வின வலு மாண்டாண்டு குறத்தி விடை கூறலுமாகக் கூறல் பெரும்பான்மையு மிவ்வகை யுறுப்புகளால் அகவல், வெண்பா, தரவு, கொச்சகம், கலித்துறை, கழிநெடில், விருத்தம், கலிவிருத்தம், இச் செய்யு ளிடைக்கிடைக் கூறிச் சிந்து முதலிய நாட கத் தமிழாற பாடுவது.

உழத்திப் பாட்டு—கட வுள் வணக்க முறையே மூத்தபள்ளி இளையபள்ளி குடும்பன வரவோடவன் பெருமை கூறல், முறையே யவர் வரலாறு, நாட்டுவளம், குயிற்குரல் கேட்டல், மழை வேண்டிக் கடவுட் பரவல், மழைக்குறியோர்தல், ஆற் றின் வரவு, அதன் சிறப்புக் காண்டலிவற்றிற் கிடை யிடையகப்பொருட் டுறை யுங் கூறிப் பண்ணைத்தலை வன் வரவு, பள்ளிக ளிருவர் முறையீடு, இளையாளை யவ ரனுப்பல், பள்ளன் வெளிப் படல், பண்ணைச் செயல்வின வல், அவனதியல் கூறல், ஆவிலைர உருவித்தல் அவர் வரல், அவர் பெருமைக் கூறல் மூத்தபள்ளி முறையீடு, குடும்பன் கிடையிலிருந்தாற் போல் வரல், அவனைத் தொழுவின் மாட்டல், அவன் புலம்பல், மூத்த பள்ளி யடிசில் கொடுவரல், அவ னவனோடு கூறல், அவன வனை மன்னித்தல், கேட்க வேண்டல் அவள் மறுத்தல், அவள் சூளுறல், அவள வனை மீட்கவேண்டிப் பண் ணைத் தலைவனைப் பரவல், வித்தை முதலிய வளங் கூறல், உழவ ருழல்காளை பெருளல், அது பள்ளனைப் பாய்தல், பள்ளிகள், புலம் பல், அவனெழுந்திருத்தல், அதைப் பண்ணைத்தலைவர்க் கறிவுறுத்தல், நாற்று நடல், விளைந்தபின செப்பஞ் செய் தல், நெல்லளத்தல், மூத்த பள்ளிமுறையீடு, பள்ளிகளி லொருவர்க்கொருவ ரேச லெண விவ்வுறுப்புக்களுறப் பாட்டுடைத் தலைவன் பெரு மை ஆங்காங்கு தோன்றச் சிந்தும் விருத்தமும் விரவி வர விவற்றான் பாடுவது.

ஊசல்—ஆசிரிய விருத்தத் தானுதல், கலித்தாழிசையா னுதல், சுற்றத்தோடும் பொ லிவதாக ஆடீருசல் ஆடோ மோ ரூசலென்றிங் கூறுவது.

எழுகூற்றிருக்கை—ஏழ றையாக்கக் குறுமக்கண

முன்னின்றும் புக்கும் போந்தும் விளையாடும் பெற்றியால் வழுவாமையா லொன்று முதலாக வேழிறுதியாக முறையானே பாடுவது.

கடிகை வெண்பா—தேவரிடத்து மரசரிடத்து நிகழும் காரியம் கடிகையளவிற் றேன்றி நடப்பதாக முப்பத்திரண்டு நேரிசை வெண்பாவாற் கூறுவது.

சின்னப்பூ — நேரிசை வெண்பாவா லரசனது சின்னமாகிய தசாங்கத்தினைச் சிறப்பித்து விரித்து நூறு, தொண்ணூறு, எழுபது, ஐம்பது, முப்பது என்னுமெண் படக் கூறுவது.

விருத்தவிலக்கணம்—வில், வாள், வேல், செங்கோல், யானை, குதிரை, நாடு, ஊர், கொடை இவ் வொன்பதினையும் பப்பத்து விருத்தத்தா லொன்பது வகையாய் பாடுவது.

முதுகாஞ்சி— இளமை, கழிக் கோரிளமை, கழியாத வழியின் மாக்கட்டுக் கூறுவதாம்.

இன்மொழி வாழ்த்து—இக்குடிப்பிறந்தோர்க் கெல்லா மிக்குண மியல்பென்று மவற்றை நீயு மியல்பாக வுடையை யென்றுமின்னேர்போல் நீயு மியல்பாக வீயென்று முயர்ந்தோ ரவனை வாழ்த்துவதாகக் கூறுவது.

பெரு மங்கலம் — நாடோறும் தான் மேற்கொள்கின்ற சிறை செய்தன முதலிய செற்றங்களை கைவிட்டுச் சிறைவிடுதன் முதலிய சிறந்த தொழில்கள் பிறந்ததற்கு காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியைக் கூறுவது.

பெருங்காப்பியம் —தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும் இவற்றிற் கியைய வாழ்த்து முன்னுளதாய், அறம்பொருளின்பம் வீடென்னு நாற்பொருளும் பயக்கு நெறியுடைத்தாய் நிகரில்லா தலைவனை யுடைத்தாய், மலையுங் கடலு நாடு நகரும் பருவமு மிரு சுடர்த் தோற்றமுமென்றிவற்றின் வளங் கூறுதலும், மனமும் முடிகவித்தலும், பொழில் விளையாட்டும், நீர்விளையாட்டும் உண்டாட்டும், மகப்பேறும், புலவியுங் கலவியுமென் றிவற்றைப் புகழ்தலும், மந்திரமுந் தூதுஞ் செலவும் போரும் வென்றியுமென் றிவற்றைத் தொடர்ந்து கூறலுமாகிய விவை முறையே தொடர்வுறச் சருக்கமிலம்பகம் பரிச்சேதமென்னும் பகுதியையுடைத்தாய் வீர முதலிய சுவையு மற்கற்றை விளக்குங் கருத்து விளங்கவேருனியற்றப்படுவதாம்.

சிறுகாப்பியம் — அறம், பொருளின்பம் வீடென்னு நான்கனுள் ஒன்றும் பலவுங் குறைந்தனைய வுறுப்புக் கண்டு மேற் கூறியவாறியல்வது.

பிறப்பு-7—தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம். இவற்

றின் யோனி பேத மென் பத்துநான்கு நூருயிரம். அவையாவன: தேவர் பதி ளுன்கு நூருயிரம், மக்க ளொன்பது நூருயிரம், விலங்கு பத்து நூருயிரம், புள் பத்து நூருயிரம், ஊர்வன பதினெரு நூருயிரம், நீர் வாழ்வன பத்து நூருயிரம், தாவர மிருபது நூருயிரம். அன்றி தேவர் பதினுறு நூருயிரமெனவும், தாவரம் பதினெட்டு நூருயிரமென வுங் கூறுக.

பு

புண்ணியத்தோற்றம் 4— கவசம், ஒழுக்கம், கொடை, கல்வி.

புண்ணியம் 7 — நகங்கிருமி, தானம், விரதம், சினேகம் நயபோசனம், க்ஷமை, உற்சாகம்.

புண்ணியம் 9—எதிர்கொளல், பணிதல், ஆசனத் திருத்துதல், தாள்கழுவல், அருச்சித்தல், தூபங்கொடுத்தல், தீபங் காட்டல், புகழ்தல், அமுதமேந்தல், இவை துறந்தோர்க்குச் செய்வனவாம்.

புரம் 3—இருப்பு மதில், வெள்ளிமதில். பொன்மதில், இவையே முப்புரம்.

புராணம் 18—மச்சம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம், பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம், பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம். இவற்றில் சைவம், காந்தம், இலிங்கம், கூர்மம், வாமனம், வராகம், பௌடிகம், மச்சியம், மார்க்கண்டேயம், பிரமாண்டம். இவை பத்துஞ் சிவபுராணம். நாரதீயம், பாகவதம், காருடம், வைணவம் இவை நான்கும் விட்டுணுப் புராணம். பிரமம், பதுமம் இவையிரண்டும் பிரம புராணம். ஆக்கினேயம் - அக்கினி புராணம். பிரமகைவர்த்தம்- சூரிய புராணம் எனவும்: காந்தம், ஆக்கினேயம், சைவம், கூர்மம், மச்சியம், இலிங்கம் இவை தாமத புராணம்: பிரமாண்டம் பிரமகைவர்த்தம், மார்க்கண்டேயம், வாமனம், பிரமம், பௌடிகம், இராசத புராணம்; பாகவதம், பதுமம், வராகம், வைணவம், காருடம், நாரதீயம் சாத்துவீக புராணம் எனவுங் கூறுவர். அன்றியும் உப்புராணம்- 18 ஆதித்தியம், காந்தம், சோமம், சிகயிலம், கௌசிகம், சாம்பம், சிவதர்மம், தூருவாசம், நாரசிங்கம், நாரதீயம், பராசரீயம். பார்க்கவம், பிரமாண்டம், மாரீசம், மானவம், வாசிட்டம், வாயவியம், வருணம், இவை அவ்வவர் பெயரால் விளங்கும்.

புரி 7—அயோத்தி, மதுரை, மாயா, காசி, காஞ்சி, அவந்திகை, துவாரகை.

புலமையோர் 4—கவி, கமகன், வாதி, வாக்கி. இவருள் ஆசு, மதுரம், சித்திரம, வித்

தாரமென்னு நாற்கவிகளைப் பாடுவோன் கவி; அரும்பொருளைச் செம்பொருள் நடையாகக் காட்டி விவகரிப்போன் கமகன்; காரணமுமேற்கோளு மெடுத்துக்காட்டிப் பிறன்கோள் மறுத்து தன்மத நிறுத்துபவன் வாதி; அறம், பொருள், இன்பம், வீடென்னு நாற்பொருளைக் கூறுவோன் வாக்கி.

புலன் 5—சுவை,ஒளி,ஊறு ஓசை, நாற்றம்.

பூ

பூ 4—கொடிப்பூ, கோட்டுப்பூ,நீர்ப்பூ, புதற்பூ, நிலப்பூ என ஒன்றுகூடி ஐந்தென் பாருமுளர்.

பூதம் 5—நிலம், நீர், தீ, காற்று, விசும்பு.

பெ

பெண்வகை 4—பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி.

பெரியோரியல்பு 7—அறம பொருள், இன்பம, அன்பு, புகழ், மதிப்பு, பொறுமை.

பே

பேதம் 3—சுகதபேதம், சுசாதிபேதம், விசாதிபேதம், அவையாவன: மரத்துக்கு இலை, அரும்பு, பூ, காய் கனி முதலிய சுகதபேதம், மரத்துக்கு மறுமரஞ் சுசாதி பேதம், மரத்துக்குக் கல் விசாதிபேதம்.

பேறு 16—புகழ், கல்வி, வலி, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு,அழகு, பெருமை, இளமை, துணிவு, நோயின்மை, வாழ்நாள்.

பொ

பொருள் 2—கல்விப் பொருள், செல்வப்பொருள்.

பொருள் 4—அறம், பொருள்,இன்பம், வீடு.

பொழுது 6—மாலை, யாமம், வைகறை, விடியல், நண்பகல், ஏற்பாடு. இவையே அத்தமன காலமுதல் ஒவ்வொன்று பப்பத்து நாழிகையாக முறையே கொள்க. இவற்றைச் சிறுபொழுதென்பர்.

பொறி 3—மனம், வாக்கு, காயம்.

பொறி 5—மெய், வாய், கண், மூக்கு, செவி.

பொன் வகை 4—ஆடகம். கிளிச்சிறை, சாதரூபம, சாம்பூநதம்.

போ

போகபூமி 6—ஆதியரிவஞ்சம், நல்லரிவஞ்சம, ஏவதவஞ்சம், ஏமவஞ்சம் தேவகுருவம், உத்தரகுருவம்.

போகம்8—பெண், ஆடை, அணி, கலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி.

போதப்பிரகாரம் 3—உத்தேசம், இலக்கணம், பரிட்சை. அவையாவன: தான் விவகரிக்கும் பொருளைப் பெயர் மாத்திரம் கூறலுத்தேசம்; அப்பொருளின் சிறப்புத்தன்மை கூறல் இலக்கணம்; அப்பொருளி லிவ்

விலக்கண முண்டோ வின்ரேுவெனப் பார்த்தல் பரீட்சை.

ம

மகளிரான் மலர்மரம் 10— மகிழமரஞ் சுவைக்க, ஏழிலைப் பாலை மரம் நட்புற, பாதிரி மரம் நிந்திக்க, முல்லைக்கொடி நகைக்க, புன்னையாட, குராவணைக்க அசோகுதைக்க, குருக்கத்திப் பாட, மாமரம் பார்க்க, சண்பகம் நிழல்படத் தளிர்த்துப் பூப்பனவாம்.

மங்கலச்சொல் 22—திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பார், புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம். இவற்றின் பரியாயப் பெயரும் பிறவுமாம்.

மங்கலம் 8—சாமரம், நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல், இவையே அட்டசுபமெனவும் படும்.

மங்களாசனை 3—வாழ்த்து, வணக்கம், செயப்படுபொருள்.

மணம் 8—பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம். இவற்றுட் பிரமசாரிக்குக் கன்னியைத் தீ முன்னர் கொடுப்பது பிரமமணம்; தலைமகனினத்தார் வேண்டத் தலைமகளினத்தாரவனைத் தீமுன்னர் கொடுப்பது பிரசாபத்திய மணம்; ஒன்றிரண்டு பசுவு மெருதும் வாங்கிக்கொண்டு கன்னியைத் தீமுன்னர் கொடுப்பதாரிட மணம்; வேள்வியால் வந்த கன்னியைத் தீ முன்னர் கொடுப்பது தெய்வ மணம்; கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவருந் தனியிடத் தெதிர்பட்டுத் தாமே கூடுவது காந்தருவ மணம்; பெண்ணுக்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்குப் பொன் வேண்டுவன கொடுத்துக் கொள்வ தசுரமணம்; பெண்ணும் பெண்ணினத்தாருமுடன்படாமல் வலிதிற் கொள்வது இராக்கதமணம்; துயின்றவளைச் சென்று கூடுவது பைசாசமணம்.

மணி 9— கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.

மண்டலம் 3— அக்கினி மண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலம்.

மண்டலம் 7—வாயுமண்டலம், வருணமண்டலம், சந்திரமண்டலம், சூரியமண்டலம், நட்சத்திர மண்டலம், அக்கினிமண்டலம், திரிசங்கு மண்டலம்.

மரபு 2—தந்தைவழி, தாய்வழி.

மருத்துக்கள் 7—கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பலயோனியுயிர்.

மலம் 3—ஆணவம், மாயை, காமியம்.

மலை 7—கயிலை, இடபம், மந்தரம், விரதம், நிடதம், ஏமகூடம், நீலகிரி; அன்றித் கந்தமாதனங்கூட்டி யெட்டெனவும்படும்.

மன்மதன் கணை 5—வனசம், சூதம், அசோகு, முல்லை, நீலம். இவற்றின் பெயர் முறையே உன்மத்தம், மதனம், சம்மோகம், சந்தாபம், வசிகரணம்; இவை செய்யுமவத்தை— சுப்பிரயோகம், விப்பிரயோகம், சோகம், மோகம், மரணம் அவையாவன: சுப்பிரயோகம் சொல்லும் நினைவும், விப்பிரயோகம் வெய்துயிர்த் திரங்கல், சோகம் வெதுப்புந் துய்ப்பன தெவிட்டலும், மோகம் அழுங்கலு மொழி டல பிதற்றலும், மரணம் அயர்ப்பு மயக்கமும்.

மாதம்-12— சைத்திரியம், வைசாகம், சேட்டம், ஆசாடம், சிராவணம், பாத்திரபதம், ஆசுவீசம், கார்த்திகம், மார்க்கசிரம், புசியம், மாகம், பாற்குணம். இவை முறையே சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி, இவற்றிற்கு முறையே யுரிய நட்சத்திரம் சித்திரை, விசாகம், மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, அச்சுவினி, கார்த்திகை, மிருகசீரிடம், பூசம், மகம், உத்திரம்.

மாதர்கள்- 7—அபிராமி, மயேச்சுவரி, கௌமாரி, நாராயணி, வராகி, இந்திராணி காளி: இவற்கு முறையே வாகனம் அன்னம், இடபம், மயில், கருடம், சீயம், யானை பேய். முறையே ஆயுதம் மறை, பிளுகம், வேல், ஆழி, கலப்பை, வச்சிரம், சூலம்.

மாயை-3—தமம், மாயை, மோகம், அவித்தை, அநிர்தம். அவையாவன: சீவ சைதன்னியத்தை மறைக்கையாற்றமம், சகத்து ரூபமான வன்னிதாத் தோற்றத்துக்குக் காரண மாகையான் மாயை; விபரீத ஞானமுண்டாக்குகையான் மோகம்; உணர்வழிக்கையா லவித்தை; சத்துருபற்றுக் கன்னியாகையாலநிர்தம்.

மு

முகம் 14 - அஞ்சிதம், அதோமுகம், ஆகம்பிதம், பிரகம்பிதம், ஆலோலிதம், உலோலிதம், உத்துவாகிதம், சமம், சௌந்தரம், துதம், விதுதம், பராவிருத்தம், பரிவாகிதம். திரச்சீனம், இவற்றுள் வருத்தமாற்ரு திருதோண் மேற்றலைசாய்த்த லஞ்சிதமுகம், தலை குனிந்து பார்த்த லதோமுகம், சம்மதத்திற்கு மேல் கீழ் தலையாட்டலாகம்பித முகம் அதிசயத்தாற் சிறிது தலையாட்டல் பிரகம்பித முகம் தலை அசையான் மலர்ந்த முகமாயொருவனை யழைத்த லாலோலிதமுகம், சிந்தையால் ஒருதோண்மேற் றலைசாய்த்

தல் உலோலிதமுகம். தலை யண்ணாந்து பார்த்தலுத்து வாகித முகம். தியானிப்பது போலத் தலையசையா திருத் தலே சமமுகம், பூரித்த மகிழ்ச்சியான் மலர்ந்த முகங் காட்டல் சௌந்தரமுகம் வேண்டாததற் கிடம் வலம் தலையாட்டலே துதமுகம், உணவணி முதலிய வேண் டாமைக்குத் தலைநடுக்கலே விதுதமுகம், வேண்டாதற்கு மூகந்திருப்பலே பராவிருத்த முகம் மதத்தா லொருபுறஞ் சாய்ந்த தலையைச் சிறிதா கச் சுற்றியாட்டல் பரிதர கிதமுகம். நாணத்தாற் றலை யாட்டலே திரச்சீனமுகம்.

முத்திவிக்கினம்-3 — அறி யாமை, ஐயம், திரிபு.

முத்துச்சனிக்குமிடம் 20— மதி, மேகம், சங்கு, திப்பி, மீன், நந்து, முதலை, உடும்பு, தாமரை, வாழை, கமுகு, கரும்பு, செந்நெல், மூங்கில், யானைக் கொம்பு, பன்றிக் கொம்பு, பசுவின்பல், கொக்கு, கட்செவி.

மும்மை-3—உம்மை, இம் மை, மறுமை.

முனிவர்-7—அத்திரி, ஆங் கிரசர், கௌதமன், சமதக் கினி, பரத்வாசன், வசிட் டன், விசுவாமித்திரன், அன் றியும் அகத்தியன், அங்கீர சன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், விசிட்டன் என்பர்.

முனிவர்-31—அகத்தியன் அத்திரி, ஆங்கீரசன், இரணி யவன், மாமுனி, உரோமச முனி, ஏரண்டமாமுனி, கலைக் கோட்டுமுனி: காசிபன், கௌதமன், சத்தகூன்முனி, சச்சிதானந்தன், சமதக்கினி, சனகன், சனற்குமாரன், சுதன், ததிதமகாமுனி, துரு வாசன், நாரதன், பதஞ்சலி, பரத்துவாசன், பராசரன், பற்பமாமுனி, பிருகுமாமுனி, பினாகிமாமுனி, புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன், வான்மிகன், விசுவாமித்தி ரன், வியாக்கிரபரதன், வியா சன்.

முகூர்த்தம்-8-பூமி, நீர், தேயு, வாயு, ஆகாயம், சூரி யன், சந்திரன், ஆன்மா.

மூலம்-10—கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணைவேர். சிறுமல்லிவேர், பெருமல்லி வேர், நெருஞ்சிவேர். (இவ் வைந்தும் சிறுபஞ்சமூல மென்ப) வில்வவேர், பெருங் குமிழ்வேர், தழுதாழைவேர், பாதரிவேர், வாகைவேர் (இவ்வைந்தும் பெரும் பஞ்ச மூல மென்ப)

மெ

மெய்ப்பரிசம்-8—ஊன்றல், கட்டல், குத்தல், தடவல், தட்டல், தீண்டல், பற்றல், வெட்டல் இவை மெய்ப் பொரியாற் செய்யப்படுந் தொழில்.

மே

மேகம்-7— சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த் தம், சங்காநித்தம், துரோ ணம், காளமுகி, நீலவரு

ணம். இவை பொழிவன: முறையே மணி, நீர், பொன் பூ, மண், கல், தீ.

மொ

மொழி-3—மெய் கூறல், புகழ் கூறல், பழி கூறல்.

யா

யாகம்-5—பிரமம், தெய்வம், பூதம், பிதிர், மானுடம் இவற்றுள் வேத மோதல், பிரமயாகம்; ஓமம் வளர்த்தலே தெய்வயாகம்; பலியிடல் பூதயாகம்; தர்ப்பண முடித்தல் பிதிர்யாகம்; இரப்போர்க் குணவு முதலிய வீதலே மானுட யாகம்.

யாகம்-21—அக்கினிட்டோமம், அத்தியக்கினிட்டோமம், உத்தியம், சோடசீ, வாசபேயம், அதிராத்திரம், அந்தோரியாமம், அக்கினியாதேயம், அக்கினிகோத்திரம், தரிசபூரண மாசம், சாதுர்மாசியம், நிரூடபசுபந்தம், ஆக்கிரயணம், சௌத்திராமணி, அட்டிகை பார்வணம், சிரார்த்தம், சிராவணீ, ஆக்கிரகாயணீ, சைத்திரீ, ஆசுவயசி.

யாக்கைக்குறுகுற்றம் 18-பசி, நீர்வேட்டல், பயம் வெகுளி, உறவகை, வேண்டல், நினைப்பு, உறக்கம், நரை, நோய், மரணம், பிறப்பு, மதம், இன்பம், அதிசயம், வியர்த்தல், கேதம், கை யெரிவு.

யாழ்வகை- 4—பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்.

யு

யுகம் - 4—கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம்.

யோ

யோகம்-27—விஷ்கம்பம், ப்ரீதி, ஆயுஷ்மான், சௌபாக்கியம், சோபனம், அதிகண்டம், சுகர்மம், திருதி, சூலம், கண்டம், விருத்தி, துருவம், வியாகாதம், அரிஷ்ணம், வச்சிரம், சித்தி, விதிபாதம், வரியான், பரீகம், சிவம், சித்தம், சாத்தியம், சுபம், சுப்பிரம், பிரமம், ஐந்திரம், வைதிருதி. இவை முறையே கம்பம், பிரியம், வாழ்நாள், புண்ணியம், நலம், மாகண்டம், அறம், துணை, சூலம், கண்டகம், ஆக்கம், நிலை, அரவு, எக்களிப்பு, வேல், வல்லாமை, கொலை, காயம், தாழ்வு காட்சி, திறம், புகழ், காவல், தெளிவு, பிரம்மா, இந்திரன், பேய், இவற்றுள் கம்பம், கண்டம், அதிகண்டம், சூலம், வியாகாதம், வச்சிரம், விதிபாதம், பரீகம், வைதிருதி யென வொன்பதன்றி மற்றவை நல்லன. இவற்றுள்ளுங் கம்பத்தின் மூன்றும் சூலத்திலைந்தும் கண்டத்திலு மதி கண்டத்திலு மாறும் வியாகாதத்தி லொன்பதுவுங் கழித்து நின்ற நாழிகையுமாம்.

வ

வசுக்கள் - 8- அனலன், அனிலன், ஆபச்சைவலன், பிரத்யுசன், தரன், துருவன், பிரத்தியுசன், பிரபாசன்.

வணிகர்குலம் - 8-தனிமை யாற்றல், முனிவிலனுதல், இடனறிந்தொழுகல், பொழு தொடு புணர்தல், உறுவது தெரிதல், இறுவதஞ்சாமை, ஈட்டல் பகுத்தல்.

வண்ணம் -5- வெண்மை, கறுமை, செம்மை, பொன் மை, பசுமை.

வருடம்-60- பிரபவ, விப வ, சுக்கில, பிரமோதூத, பிர சோற்பத்தி, ஆங்கீரச, ஸ்ரீமுக பவ, யுவ, தாது, ஈச்சுர, வெகுதானிய, பிரமாதி, விக் கிரம, விசு, சித்திரபானு, சுபானு, தாரண, பார்த்தீப, விய (இவ்விருபது முத்தம வருடம்) சருவசித்து, சர்வ தாரி, விரோதி, விக்ருதி, கர நந்தன, விசய, சய, மன்மத, துன்முகி, ஏவிளம்பி, விளம்பி, விகாரி, சார்வரி, பிலவ, சுப கிருது, சோபகிருது, குரோதி, விசுவாவசு, பராபவ (இவ் விருபதும் மத்திம வருடம்). பிலவங்க, கீலக, சௌமிய, சாதாரண, விரோதிகிருது, பரிதாபி, பிரமாதீச, ஆனந்த, இராட்சச, நள, பிங்கள, காளயுக்தி, சித்தார்த்தி, இரௌத்தரி, துன்மதி, துந் துபி, உருத்திரோத்காரி, ரத் தாட்சி, குரோதன, அட்சய (இவ்விருபதும் அதமவரு டம்.)

வருணம் - 4—பிரம, க்ஷத் திரிய, வைசிய, சூத்திர இவற்றைச் சத்தி யென்றுங் கூறுப.

வள்ளல் - 21- வரையாது கொடுப்போன் வள்ள லென்ப. இவர் முதல் இடை கடையென மூவகைப்படு வர். அவருள் முதலெழு வள் ளல் குமுணன், சகரன், சகா ரன், செம்பியன், துந்துவாரி, நளன், நிருதி. இடையெழு வள்ளல் - அக்குரன், அந்தி மான், அரிச்சந்திரன், கன் னன், சந்திமான், சிசுபா லன், தந்தவக்கிரன். கடை யெழுவள்ளல்-எழினி, ஓரி. காரி, நள்ளி, பாரி, பேகன், மலையன்.

வா

வாசம்-5 — இலவங்கம் ஏலம், கருப்பூரம், சாதிக்காய், தக்கோலம்.

வாயில் - 9-கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம்.

வாயு- 10-பிராணன், அபா னன், சமானன், உதானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன் இவை யுடலி னிற்பன. அவையாவன: இதயத் தியங்குவது பிரா ணன், உற்சாகத் தலத் திடை நிற்பதபானன், சுந்த ரக் குழியிற் சந்திரை நிற்பது சமானன், நாபியி னிற்பது உதானன், சரீர முழுதும் வியாபித்திருப்பது வியா

னன், நீட்டலுமுடக்கலு நாகன், உரோமம், புளகித்திமைப்பது கூர்மன். முகத்திடைநின்று தும்பலுஞ் சினமும் வெம்மையும் விளைப்பது கிருகரன். ஓட்டமு மிளைப்பும் வியர்த்தலும் விளைப்பது தேவதத்தன். உயிர்போகினும் போகா துடலினை வீக்கித் தலைகிழித் தகல்வது தனஞ்செயன்.

வாரம்-7— ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

வானோர் கணம்-9—அக்கணத்தோராவர்: பத்திச்சுவாலகர் ஞானதிக்கர், பத்திராசனர், நாதகிருத்தியர், சத்துவகர், பலவந்தர், பிராதமிகர், அதிதூதர், தூதர், இவையே நவவிலாச சபையாம். அவையாவன: பத்திச்சுவாலகர் கடவுளைக் குறித்த பக்தியினலே சுவாலிக்கிரவர்; ஞானதிக்கர் கடவுளைக்குறித்த ஞானத்திலாதிக்கம் பெற்றவர். பத்திராசனர் கடவுலெழுந்தருளியிருக்கும் தேவசிங்காதனத்தைப்புகழ்ந்திருப்பவர். இவர் முதலாம் அர்ச்சியப் பிரபுத்துவ முடையோராம், நாதகிருத்தியர் நாதனுடைய கிருத்தியத்தை யவனருளாற் புரிபவர். சத்துவகர் கடவுளருளாற் பற்பல வற்புதங்களைச் செய்யுஞ் சத்துவம் பெற்றவர், சத்திகரென்றுமாம். பலவத்தர் கடவுட்டிருவுளப்படி எய்துங் கருமங்கட்கு வருமிடையூற்றை அவளருளாற்றடுக்கும் பலாத்காரம் பெற்றவர். இவரிரண்டாமர்ச்சியப் பிரபுத்துவ முடையோராம் பிராதமிகர் கடவுட்டிருவுளப்படியே இராச்சிய சம்பந்தமான சாதாரண நன்மைகளை நடத்துந் தலைமை பெற்றவர். அதிதூதர் அதிகப் பிரதான விசேடங்களை உலகத்தி லறிவிக்கத் தானுபதியாக வருபவர். தூதர் மனிதர் பிறந்த கண முதலாகத் தனித்தனியே அவரவரைப்பாதுகாத்து நன்னெறியினடத்தி மற்றும் பிரதானவிசேடங்கட் கனுப்பப்படுபவர்: இவர்மூன்றும்அர்ச்சியப் பிரபுத்துவ முடையோர்: அர்ச்சியப்பிரபுத்வத்திற்கு அதீச்சுர பதவி என்பாருமுளர். இவை போப்புமார்க்க கிறிஸ்தவர்களாற்படுவன.

வானோர்வரம்- 4— இலகு, சூக்குமம், அட்சயம், பிரகாசம் இவை கனமின்மை, கண்டிப்பின்மை, உண்மை, விளக்கம்.

வி

விகாரம்-6—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம், அன்றி இடும்பை, அசூசையோடு எட்டெனவுமாம்.

வித்தியா தத்துவம்-7—காலம், நியதி, கலை, வித்தை, இராகம், புருடன், மாயை.

வித்தைகள் 14-வேதம்-4, வேதாந்தம்-6, மீமாஞ்சை, தருக்கம், புராணம், தருமநூலாகிய வுபாங்கம்-4.

விரை-5 கோட்டம், துருக்கம், காரம், அகில, சந்தனம்.

வினு-5— அறிவான் வினுவல், அறிவொப்புக் காண்டல், ஐயமறுத்தல், அவனறிவுதான் கோடல், மெய்யவர்க்குக் காட்டல்.

வினை 2—நல்வினை, தீவினை.

வீ

வீடுபேறு - 1—முத்திப்பேறு.

வெ

வெற்றி - 8—பகை நிரை கவர்தல்; பகைவர் கவர்ந்த தன்னிரை மீட்டல்; பகைவர் மேற்செல்லல்; வரும் பகை முன்னெதிருன்றல்; தன்னரண் காத்தல்; பகை யரண் வளைத்தல்; பொருதல்; போர் வெல்லல். இவற்றிற்கு முறையே வெற்றி மாலையரவன: வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை.

வே

வேதம்-4—இருக்கு, எசுர், சாமம், அதர்வணம். அன்றியு முபவேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம்.

வேதாங்கம் - 6—மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம். நிருத்தம், சோதிடம்.

வேளாண்மை மாந்தரியல்பு- 10—ஆணைவழி நிற்றல், அழிந்தோரை நிறுத்தல், கைக்கடனுற்றல், சிசுவகத் துண்மை, ஒக்கல் போற்றல், ஓமாமுயற்சி, மன்னிறைதருதல், ஒற்றுமைக் கோடல், விருந்துபுறந்தருதல், திருந்திய வொழுக்கம்.

வை

வைசியர் 3— தனவசியர் பூவைசியர், கோவைசியர், இவர்க்கு முறையே தொழில் பொருளீட்டல், பயிர் செய்தல், ஆகாத்தல், இவர் வருணத்தா லொன்றுயினுந் தொழிலான் மூவராயினர்.

வைணவாகமம்-2— பாஞ்சராத்திரம், வைகாநசம்.

வைதிக மதம் - 3—மிசிர வைதிகமதம், வைதிகமதம், பரம வைதிகமதம்.

தொகையகராதி முற்றிற்று.

இலக்கத் தொகை முறை

1-ஒருமை, வீடு பேறு.

2-அச்சுவினி தேவர், அறம், ஆயுதவகை, ஆன்மா, இதிகாசம், இருமை, எச்சம், கந்தம், கூத்துவகை, சுடர், திணை, தோற்றம், பொருள், மரபு, வினை, வைணவாகமம்.

3-அரசர், இசை, இடம், ஈச்சுரன் பிரபுத்துவ சாமர்த்திய குணம், உலகம், கடுகம், காதலர், காலம், குணம், குற்றம், சத்தி; சாத்திரம், சீவதேகம், சீவாவத்தை, சுடர், சூரிய சந்திரர் முதலிய வீதி, தமிழ், தானம், தீ, தொழில், நூல், பகை, பக்குவர், பரிச்சேதம், பலை, பாவபுண்ணிய வழக்கம், பாவினம் பிணி, புரம், பேதம், பொறி, போதப்பிரகாரம், மங்களாசரணை, மண்டலம், மலம், முத்தி, விக்கினம், மும்மை, மொழி, வைசியர், வைதிகமதம்.

4-அங்கம், அரண், அளவு, அனுபந்தம், ஆச்சிரமம், இராகத்தகுதி, இருச்சொல், உண்டி, உபாயம், உரை, ஊறுபாடு, கணக்கு, வசை, கதி, கரணம், கவி, குணம், கேள்வி, சதுரங்கம், சாதி, சாந்திவகை, சிவபூசை இயல்பு, சொல், தானை, தோற்றம், நிலம், நிலை, நூற்பயன், படைவகுப்பு, பண் பதவி, பருவம், பாவபுண்ணியத் தோற்றம், புலமையோர், பூ, பெண்வகை, பொருள், பொன்வகை, யாழ்வகை யுகம், வருணம், வானோர் வரம், வேதம்

5-அகிற்கூட்டு, அக்கினி, அங்கம், அரசர்க்குழு, அரசர்க்குறுதிச் சுற்றம், அவத்தை, அந்வய விலக்கணம், இலக்கணம், இலிங்கம், ஈச்சுரன், முகம், உரையிலக்கணம், உலோகம். எழுத்துத்தானம், ஐம்புல நுகர்ச்சியினிறப்பன், கருமேந்திரியம், கன்னிகை, குறவர், குற்றம், கேள்வி, கைத்தொழில், கோசம், கௌடம், கௌவியம், சத்தம், சத்தி, சயனம், சிவதத்துவம், சூதகம், தந்தையர், தரு, தாயார், தாளம், திணை, திரவிடம், திரவியம், திருமாலாயுதம், துரகக்கதி, தேர், பஞ்சமூலம், பட்சி பாதகம், பால், புலன், பூதம், பொறி, மன்மதன்கணை, மாயை, யாகம், வண்ணம், வாசம், விரை, வினா.

6-அரசியல், ஆதாரம், ஈச்சுரன், முக்கிய குணம், உட்பகை, உவர்ப்பு, கரும பூமிக்குரிமை: கருவுளமைப்பு, காலம், சக்கிரவர்த்திகள், சமயம் சதாசிரம், சுப்பிரமணியர், தலம், சுவை: தானை, தொழில், நாட்டமைதி, பருவகாலம், பொழுது, போகபூமி, விவாரம், வேதாங்கம்.

7-இசை, உலோகம், கடல் கடைப்படுதானம், சிரஞ்சீவியர், சுரம், தாது, தாளம், தீவு, நதி, நரகம், நரக வட்டம், நரம்பு, நாட்டுக் குற்றம், பருவம், பாதகம், பாலை, பிறப்பு, புண்ணியம், புரி, பெரியோரியல்பு, மண்டலம், மருத்துக்கள், மலை, மாதர்கள், முனிவர், மேகம், வாரம், வித்தியாதத்துவம்.

8-அங்கயோகம், அரசர்க்குத் துணைவர், அளவை, அறத்துறுப்பு, ஈச்சுரன், குணம், ஊறு, எச்சம், ஐசுவரியம், கணம், கணிதம், குற்றம், சித்தி, சுபம், தயாவிருத்தி, திக்கு, திக்குப்பாலகர், திக்குயானைகள், நாகம், நாட்டுக்குற்றம், போகம், மங்கலம், மணம், மூர்த்தம், மெய்ப்பரிசம், வசுக்கள், வணிகர், குணம், வெற்றி.

9-இரதம், கண்டம், கிரகம், சித்தர், தாரணை, தாளம், புண்ணியம், மணி. வாயில், வானோர் கணம.

10-அங்கம், சிற்பத்தொழில், குறும்பு, சேனைத்தொகை, தசாங்கம், தாளப்பிரமாணம், திக்கு, திருமாலவதாரம், தீக்குணம், துவர், நாடி, மகளிரான் மலர்மரம் மூலம் வாயு, வேளாண், மை, மாந்தரியல்பு.

11- உருத்திரர், கரணம் நதி.

12-இராசி, உயிர்வேதனை, சூரியர், மாதம்

13-தமிழ்நாடு.

14-உலகம், தயாவிருத்தி, முகம், வித்தைகள்.

15-திதி.

16-உபசாரம், சைவம், பேறு.

18-கணம், தருமநூல், பாடை, புராணம், யாக்கைக் குறு குற்றம்.

20-முத்துசனிக்குமிடம்.

21-அரசசின்னம், யாக்கம் உள்ளம்.

22-மங்கலச் சொல்.

27-நட்சத்திரம், யோகம்

28-சிவாகமம்

31-முனிவர்.

32-அறம், இராகம், உபநிடதம், சிற்பநூல்.

33-தேவர்வகை

35-ஆடல்வகை, நீர்நிலவகை.

56-தேயம்.

60-வருடம்.

64-கலைஞானம்

96-தத்துவம், பிரபந்தம்.

100-அலங்காரம்.

இலக்கத்தொகை முறை முற்றிற்று.

திருமகள் விலாசம் அச்சகம், சென்னை-79, 1999

எங்களிடம் கிடைக்கக்கூடிய வைத்திய நூல்கள்

		ரூ.	காசு
பதார்த்த குண விளக்கம் (சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது) முதல் பாகம் (மூலவர்க்கம்)	...	160	00
ஷை இரண்டாம் பாகம் (தாது, ஜீவ வர்க்கம்) சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது	...	80	00
பரம்பரை வைத்தியம் (சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது)	...	75	00
சிகிச்சா ரத்ன தீபம் (சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது)		75	00
மேற்படி இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி	...	50	00
'ஆத்மரட்சாமிருதம்' என்னும் வைத்திய சாரசங்கிரகம்	...	100	00
மூலிகை மர்மம் 4-பாகங்கள் அடங்கியது (சிறுமணவூர் முனிசாமி முதலியார் இயற்றியது)	...	100	00
வைத்திய மூலிகை அகராதி	..	100	00
வைத்திய மலை அகராதி	..	15	00
18-சித்தர் நாடி சாஸ்திரம்	..	20	00
'பார்வதி பரணியம்' என்னும் விஷ வைத்திய சிந்தாமணி	..	15	00
மாட்டு வாகடம்	...	20	00
போகமுனிவர் வைத்தியம்-700	...	20	00
வைத்திய அரிச்சுவடி (2-பாகம் சேர்ந்தது)	...	10	00
மூலிகை ஜாலரத்தினம் (2-பாகம் சேர்ந்தது)	...	15	00
கைமுறை பாக்கெட் வைத்தியம்	...	20	00
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் மூலம்	...	12	00
நோயில்லா வாழ்வு	...	20	00
புலிப்பாணி வைத்தியம்-500	...	15	00
அகஸ்தியர் பரிபூரணம்-400	...	12	00

கிடைக்குமிடம் :

B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்,
26, வெங்கட்ராம தெரு, கொண்டித்தோப்பு,
மின்ட் போஸ்ட், சென்னை-79.

எங்களிடம் கிடைக்கக்கூடிய வைத்திய நூல்கள்

		ரூ	காசு.
யதார்த்த குண விளக்கம் (சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது) முதல் பாகம் (மூலவர்க்கம்)	...	160	00
ஷை இரண்டாம் பாகம் (தாது, ஜீவ வர்க்கம்) சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது	...	80	00
பரம்பரை வைத்தியம் (சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது)	...	75	00
சிகிச்சா ரத்ன தீபம் (சி. கண்ணுசாமிப் பிள்ளை இயற்றியது)		75	00
மேற்படி இரண்டாம் பாகமாகிய வைத்திய சிந்தாமணி	...	50	00
'ஆத்மரட்சாமிருதம்' என்னும் வைத்திய சாரசங்கிரகம்	...	100	00
மூலிகை மர்மம் 4-பாகங்கள் அடங்கியது (சிறு மணலூர் முனிசாமி முதலியார் இயற்றியது)	...	100	00
வைத்திய மூலிகை அகராதி	..	100	00
வைத்திய மலை அகராதி	..	15	00
18-சித்தர் நாடி சாஸ்திரம்	..	20	00
'பார்வதி பரணியம்' என்னும் விஷ வைத்திய சிந்தாமணி	..	30	00
மாட்டு வாகடம்	...	20	00
போகமுனிவர் வைத்தியம்-700	...	20	00
வைத்திய அரிச்சுவடி (2-பாகம் சேர்ந்தது)	...	10	00
மூலிகை ஜாலரத்தினம் (2-பாகம் சேர்ந்தது)	...	25	00
கைமுறை பாக்கெட் வைத்தியம்	...	20	00
அகஸ்தியர் வைத்திய ரத்தினச் சுருக்கம் மூலம்	...	12	00
நோயில்லா வாழ்வு	...	20	00
புலிப்பாணி வைத்தியம்-500	...	15	00
அகஸ்தியர் பரிபூரணம்-400	...	12	00

கிடைக்குமிடம் :

B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்,
26, வெங்கட்ராம தெரு, கொண்டித்தோப்பு,
மின்ட் போஸ்ட், சென்னை-79.